
விழுதல்
என்பது
எழுகையே

# விழுதல் என்பது எழுகையே
# (நாவல்)

விழுதல் என்பது எழுகையே(நாவல்)/ / முதற்பதிப்பு: மார்கழி 2020/ © / அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: / பக்கம்: 288/ விலை: / அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Viluthal enpathu elukaiyey(Novel) // First Edition: December 2020/ ©/ Cover Designed by K.Bharaneetharan/ Published by / Pages: /Price: / Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-65-8

# நன்றியுடன் உங்களோடு நாங்கள்

அன்பார்ந்த வாசகர்களுக்கு பணிவான வணக்கம்.

இப்பொழுது உங்களுடைய கைகள் “விழுதல் என்பது எழுகையே” என்ற இந்நாவலை ஏந்தி நிற்கின்றன.

2014 ஆண்டு தமிழர்கள் வாழுகின்ற நாடுகளான ஜேர்மனி, சுவிற்சலாந்து அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, டென்மார்க், கனடா, இலங்கை, நோர்வே, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து இருபத்தாறு (26) எழுத்தாளர்கள் இணைந்து எழுதிய இந்நாவலை ஓராண்டு காலமாக பண்ணாகம் இணையத்தளம்(ஜேர்மனி) அக்கினிக்குஞ்சு இணையத்தளம் (அவுஸ்திரேலியா), யாழ் இணையம், அலைகள் இணையத்தளம் (டென்மார்க்) கோட்டைக்கல்லாறு இணையத்தளம் (இலங்கை) வண்ணை இணையத்தளம் (பிரான்ஸ்) ஆகிய இணையத்தளங்களிலும் ,தமிழ் எழுத்தாளர் இணைய அகம் என்ற முகநூலிலும் வாரத்துக்கு ஒருமுறை ஒரு தொடராக எழுத்தாளர்களின் புகைப்படம், அவர்கள் பற்றிய விபரத்துடன்ஒரே நாளில் வெளியிட்டிருந்தோம்.

இந்த நாவலுக்கான முதல் விளம்பரமாக எழுத்தாளர்களின் பெயர்கள் அடங்கிய ஒரு காணொளியை திரு நோர்வே நக்கீரா அவர்கள் தயாரித்து வழங்கியிருந்தார். அவருக்கும் பணிவான நன்றிகள்.

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் எழுதிய ”நிழல்கள்”, ”மத்தாப்பு”, ”சிதைவுகளின் ஓர் உதிப்பு” என ஈழத்தமிழர்களின் கதைகள் தாயகத்தில் தனி நூலாகவும் பத்திரிகைளிலும் வெளிவந்தமையை பாராட்டி மகிழ்கிறோம். அதே வேளை புலம்பெயர் தேசத்தில் 26 எழுத்தாளர்கள் சேர்ந்து ஒரு தொடரை எழுதியது இதுவே முதன் முயற்சியும், புது முயற்சியுமாகும் என்பதையும் பணிவாகத் தெரிவிக்கிறோம்.

ஒரு ஒத்த செயலுக்கு ஊக்க சக்தியாக ஏதாவது ஒன்றிருக்கும். 1968 களில் சுதந்திரன் பத்திரிகையில், அப்பொழுது பேராதனைப் பல்கலைக்

கழகத்தில் படித்துக் கொண்டிருந்த திரு. இராஜகோபால் அவர்களும் (செம்பியன் செல்வன்) திரு.குணராஜா (செங்கையாழியான்) ஆகிய இருவரும் ஒரு கிழமைக்கு ஒருவராக பேராதனைப் பல்கலைக்கழக வாழ்க்கை, அங்கிருந்த குறிஞ்சிக் குமரன் ஆலயம் ஆகியவற்றை பின்னிப்பிணைத்து எழுதிய “நிழல்கள்” என்ற கதையை நான் (ஏலையா க.முருகதாசன்) தொடராக வாசித்த போது எழுத்துலகில் அது ஒரு புதிய முயற்சியாக இருப்பதைக் கண்டு வியந்தேன்.

இந்த வியப்பு எனது மனதில் அவஉகள் எழுதியது போல பலரை இணைத்து எழுத வேண்டும் என்ற எண்ணத்தை உறங்கவிடாமல் காத்து வந்தமையால் 2014 ஆம் ஆண்டு எனக்கான ஒரு முகநூல் கணக்கை ஆரம்பித்தவுடன் அதன் வழியாக எனது திட்டத்தை வெளிப்படுத்திய போது சுவிற்சலாந்திலிருக்கும் திரு.கல்லாறு சதீஸ் அவர்களும் ஜேர்மனியிலிருக்கும் பண்ணாகம் இணையத்தள ஆசிரியரான திரு.இ.க.கிருஸ்ணமூர்த்தி அவஉகளும் பூரண ஒத்துழைப்புத் தந்ததுடன் திரு.இ.க.கிருஸ்ணமூர்த்தி அவஉகளும் நானும் இத்திட்டத்தினை கையிலெடுத்து சமாந்தரமாகப் பயணிக்கத் தொடங்கினோம்.

நான் எழுத்தாளர்களைத் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து இந்நாவல் தொடர்ச்சிகளைப் பெற்று எழுத்துப் பிழை பார்த்து செப்பனிட்டு திரு.இ.க.கிருஸ்ணமூர்த்தி அவர்களுக்கு அனுப்ப அவர் அதனை பல சிரமங்களுக்கு மத்தியிலும் மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களுக்கு அனுப்பி வந்தார். இந்நாவல் திட்டத்திற்காக தமிழ் எழுத்தாளர் இணைய அகம் என்ற பெயரில் முகநூல் கணக்கொன்றை திரு.இ.க கிருஸ்ணமூர்த்தி அவர்கள் ஆரம்பித்ததுடன் அதற்கான சின்னத்தையும் வடிவமைத்து இவ்விணைய வழியாகவும் இரண்டாவது பந்தியில் குறிப்பிட்ட இணையத்தளங்கள் வழியாகவும் விழுதல் என்பது எழுகையே என்ற தொடர் பதிவிடப்பட்டது.

இத்திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு எழுத்தாளஉ பலரை அறிமுகம் செய்து வைத்த திரு. கல்லாறு சதீஸ் மற்றும் திருமதி சிறீரஞ்சனி விஜேந்திரா ஆகியோருக்கும் மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கத்தை யும் தெரிவிக்கிறோம்.

இணையத்தளங்களில் வெளிவந்த இந்த நாவலை நூலுருவில் கொண்டுவர வேண்டுமென்பதில் இதற்கான செலவான நிதிநிலைமையே எமக்கு தடங்கல்களை ஏற்படுத்தியது.

இந்நூலாக்கத்துக்கான செலவினைப் பகிஉந்துகொண்ட திரு.கல்லாறு சதீஸ், திருமதி.நிவேதா உதயராயன், திரு. ஏலையா முருகதாசன் மற்றும் திரு இ.க பண்ணாகம் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கும் இத்திட்டத்தில் பங்குபற்றிய

அனைவரின் சாஉபாகவும் மனப்பூர்மான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறோம். இந்நூலுக்கான அட்டைப்படத்தைச் சிறப்பாகவும் இலவச மாகவும் வடிவமைத்துத்தந்த மூனா அவர்களுக்கும் அனைவரின் சார்பாகவும் மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறோம்.

நூலுருவுக்கான முதல் நிலையான எழுத்துப்பிழை பார்த்தல் செப்பனிட்டு ஒழுங்கமைத்தல் என்பதனை பல நாட்களாக அயராது உழைத்து அதனை ஒப்பேற்றித் தந்த இந்நாவலின் சக எழுத்தாளரும், இத் தொடரின் நிறைவுப் பகுதியில் ஒன்றையும் எழுதித் தந்த ஜேர்மனிவாழ் பிரபல எழுத்தாளருமான திரு.காசி.வி.நாகலிங்கம் அவர்களுக்கு அனைவரின் சாஉபாகவும் பணிவன்பான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறோம்.

இந்நாவலை நூலுருவில் கொண்டு வரவேண்டுமென்பதில் பலவழிகளில் ஊக்கமெடுத்தது மட்டுமல்ல அச்சுநிலைக்கு கொண்டு செல்வதில் முயற்சி எடுத்து மீண்டும் எழுத்துப் பிழைகளை திருத்தியும் செப்பனிட்டவரும் இந்நாவலின் சக எழுத்தாளருமாகிய இலண்டனில் வசிக்கும் பிரபலமான எழுத் தாளரான திருமதி.நிவேதா உதயராயன் அவஉகளுக்கு அனைவரின் சார்பாகவும் பணிவன்பான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறோம்.

இந்நாவலின் இறுதிப் பகுதி எழுதி நிறைவு பெற்ற நிலையிலும்கூட,ஒரு புதிய முயற்சியாக அவரவர் பார்வையில் முடிவுப் பகுதியை எழுதித்தருமாறு இந்நாவலின் சக எழுத்தாளரும் தமிழகம் காரைக்குடியைச் சேஉந்த திருமதி.தேனம்மை லக்ஸ்மணன், இலண்டனைச் சேர்ந்த திருமதி.நிவேதா உதயராயன், திரு.சசிகரன் பசுபதி(பசுந்தரா சசி) திரு.நோர்வே நக்கீரா(திலீபன் திருச்செல்வம்) ஆகியோரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் நால் வரும் வித்தியாசமான நிறைவுப் பகுதிகளை எழுதித்தந்தமை எழுத்தாளர்கள் அனைவரின் எழுத்துப்பாணியாக இருந்தாலென்ன கற்பனைவசப்பட்ட சிந்தனையாக இருந்தாலென்ன அவை வேறு வேறானவை என்பதை உறுதிபட எழுத்துலகிற்கு நிலைநிறுத்திக் கூறமுடியும் என்பதை இந்நாவல் வெளிப்படுத்தி யுள்ளது.

இந்நாவல் முயற்சியானது ஈடேறியுள்ளதில் எமது வேண்டுகோளை ஏற்று இத்திட்டத்தில் பங்குகொண்டு எழுதிய இருபத்தாறு எழுத்தாளப் பெருந்தகைகளுக்கும் அனைவரின் சாஉபாகவும் மிகுந்த பணிவன்புடன் நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறோம்.

இத்திட்டம் ஒரு குழுநிலைத்திட்டம் என்பதே உண்மையாகும். எழுத்தாளர்கள் தொடர்பாளர்கள் இணையத்தளங்கள் எழுத்துப்பிழை பார்த்து ஒழுங்கமைத்து செப்பனிட்ட மேலே குறிப்பிட்ட சக எழுத்தாளர்கள் என

அனைவருக்கும் அனைவரின் சார்பாகவும் பணிவன்பான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரவிக்கிறோம். சுமார் ஐந்து வருடகால தாமதத்தில் இந்நாவல் வெளிவருவதைப் பொறுத்தருள்வீர் என நம்புகின்றோம்.

இந்நாவல் பலரால் படைக்கப்பட்ட நாவல் என்பதால் அத்தனை பெருமையிலும்அனைத்து எழுத்தாளஉகளுக்கும் பங்குண்டு.

நன்றியுடனும், வணக்கத்துடனும்

ஏலையா க.முருகதாசன்(ஜேர்மனி)

(இ.க.கிருஸ்ணமூர்த்தி),

பண்ணாகம் இணையத்தள பிரமத ஆசிரியர் (ஜேர்மனி)

# விழுதல் என்பது எழுகையே

*மலர்களின் வாசம் பிடிக்கவில்லை. குயில்களின் கீதம் பிடிக்க வில்லை. மயில்களின் நடனம் பிடிக்கவில்லை. இப்படி இன்னும் என்னென்ன பிடிக்கவில்லை. பைத்தியம் பிடிக்கவில்லை.*

*பைத்தியம் பிடிக்கக்கூடாது...*

*ஆன்மா தவிக்கின்றது. கணங்கள் ஒவ்வொன்றும் அனாதைப் பிணமாவேனோ எனும் அச்ச எண்ணம் என்னைத் திணறச் செய் கின்றது. முகம் வியர்க்கின்றது. அக்கம் பக்கம் பார்த்து மெதுவாகத் துடைத்துக் கொள்கிறேன்.*

*வந்து விட்டேன். விமான நிலையத்தின் இறுதி நிமிடங்கள் என்னை உந்தித் தள்ளுகிறது.*

*இறுதியாக இலங்கைத்தீவின் மடியிலிருந்து என் பாதங் களைத் தூக்கி வைத்து விமானத்தில் ஏறுகின்றேன்.*

*பிறந்தது முதல் வாழ்ந்துவந்த தேசத்தை விட்டு காற்றை உதைத்து விமானப்பறவை மேலே மேலே எழுந்து மேகங்களைக் கிழிக்கிறான். கண்ணாடியூடாக பூமிப் பந்தைப் பார்க்கிறேன். இது என் கிராமமாக இருக்குமோ? ஆவலில் உற்றுப் பார்க்கின்றேன்.*

*மீண்டும் என்று இத்தேசம் வருவேனோ...*

*என் தேசத்தைப் பிடித்த நோயின் கோரம் என்று தீர்ந்து போகுமோ! போகிறேன்! என் தேசம் விட்டு, என் கிராமம் விட்டு, என் உறவுகளை விட்டுப் போகிறேன்.*

*நான் மட்டும் போகவில்லை. எனக்கு மட்டும் இந்தச் சோகம் இல்லை. என் தேசம் விட்டுப் போக முடிந்த எல்லோரும் இலட்சம் இலட்சமாய்ப் போனார்கள்.*

*எனக்கு எங்கே போவதென்று தெரியாது. எப்படிப் போவ தென்றும் தெரியது.*

பலபேர் போகும் திசையில் நானும் போகிறேன். இது பெரும் பயணம். சட்ட ரீதியான பயணம் அல்ல. ஆபத்துக்கள் நிறைந்த பயணம். விமானத்திலிருந்து இன்னுமொரு தேசத்தைப் பார்க்கிறேன். அது அழகாக இருந்திருக்க வேண்டும்.

பச்சைப் புல்வெளிகளும், அழகிய கட்டிடங்களுமாய் மனதை கிளர்ச்சி கொள்ள வைத்திருக்க வேண்டும். ஆனால் எனக்கு அப்படி யேதும் நடக்கவில்லை. எத்தனை பேரிடம் இந்த பயணத்திற்காக பணம் வாங்கினேன். இறுதிப் பிரிவின் போது உறவுகளின் எத்தனை கேள்விகளை எதிர் கொண்டேன்.

இதயம் நொறுங்க விடை பெற்றேன். உயிரைக் காக்க எத்தனை வலிகள்...

இவ்வாழ்வில் எங்கேனும் ஒரு தேசத்தில் புகலிடம் தேட வேண்டும். சரியாகப் புகலிடம் பெற யார் சொல்லித் தருவார்கள். செய்முறை படித்து செயல் என்பதைவிட செயலூடாகச் செயல். செய் துதான் பார்ப்போமே.

புதிய தேசத்தில் தங்கும் விடுதியில் இன்னும் பலருடன் தங்க வைக்கப்படுகிறேன். ஐரோப்பிய தேசம் நோக்கிப் போக வேண்டும். மீண்டும் ஒரு சோகம் தாக்காத வாழ்வைத் தேட வேண்டும்.

எந்த இனம் எம்மை நாடோடியாக்கியதோ, அந்த இனத்தின் வருகைக்காக காத்திருந்தோம். அவர் வருகையில்தான் அது புரிந்தது. எங்களின் கடவுட்சீட்டுக்கள் வாங்கப்பட்டன. மீண்டும் பல நாட்கள் காத்திருப்பு தொடர்ந்தது.

காதலுக்காக காத்திருத்தல் சுகமாக இருக்கலாம். கடவுட் சீட்டுக்காக காத்திருத்தல் எத்தனை வலி என்பதை அனுபவித்து அறிந்தேன்.

எங்களிடமிருந்த பணங்கள் வாங்கப்பட்டன. எங்களில் பலர் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டோம். நாம் சென்ற பாதையை மௌனத்தின் ஒலியில்தான் பேச முடியும். இன்றும் அந்தக் கணங் களை இதயத்தில் ஏற்றி நினைத்துப் பார்க்கையில் உடல் ஒரு கணம் அதிர்ந்து துடிக்கும்.

நகரும் வீட்டில் நாங்கள் ஏற்றப்பட்டோம். ஏற்றியவர் ஒரு வெள்ளைக்காரர். நள்ளிரவில் அந்தப் பயணம் தொடங்கியது. அது ஒரு நாட்டின் எல்லையை அந்த நாட்டுப் படைக்கே தெரியாமல் கடந்து நுழைந்து கொள்ள வேண்டிய பயணம்.

அது எனக்குப் புரிந்து போனதால் தூக்கம் கெட்டுப் போனது. சிறு துவாரத்தினூடாக வீதியைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

இயற்கைக் கடன்களுக்குக்கூட நிறுத்தப்படாது ஓடிய வாகனம் திடீரென்று நிறுத்தப்பட்டது. அது வெறும் ஐந்து நிமிடங்கள்தான். மீண்டும் ஓடுகிறது. ஓடிக் கொண்டேயிருக்கிறது.

நேரம் அதிகாலை ஐந்து மணி. இப்போது எங்கள் அனைவரையும் இறங்குமாறு பணித்தார் அந்த வெள்ளைக்கார்.

என் பாதங்கள் தொட்ட அந்தப் பூமி சுவிற்சலாந்தின் சூரிச் மாநகரம்.

***

விடிந்தும் விடியாத காலைப் பொழுது. எங்களை இறக்கி விட்ட இடம் மூன்று தெருக்கள் சந்திக்கும் ஒரு சந்தியாகவிருந்தது. குளிர் வாட்டி எடுத்தது. ஆங்காங்கே குவியலாக வெள்ளை வெளேர் நிறத்தில் பனிக்குவியல்கள் குவிக்கப்பட்டிருந்தன.

அந்த நேரத்திலும் காரில் போவோர் வருவோர் எங்களை உற்றுப் பார்த்துக் கொண்டே சென்றனர். நடந்து போவோரும் எங்களைப் பார்த்து தங்கள் மொழியில் ஏதோ சொல்லிக் கொண்டு போனார்கள். அந்தத் தொனி எங்களை ஏசுவது போல் இருந்தது.

பேருந்துச் சாரதி ஆளுக்கு இருபது பிராங்குகளை தந்துவிட்டு பேருந்தை வேகமாக எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

எங்கள் பத்துப்பேரில் நான் மட்டுமே தமிழன். மற்றவர்கள் வேறுவேறு நாட்டுக்காரர்கள். குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தோம். சூடாக ஏதாவது குடித்தால் நன்றாக இருக்குமே என அங்கலாய்த்தது மனம். என்னோடு நின்ற பாகிஸ்தான் நாட்டுக்காரனுக்கு மட்டும் ஆங்கிலம் தெரிந்திருந்தது. கோப்பி குடித்தால் நன்றாக இருக்குமே என்று நான் ஆங்கிலத்தில் சொன்ன போது அவனும் தலையை ஆட்டினான். நாங்கள் இருவரும் ஆங்கிலத்தில் பேசியதை மற்றவர்கள் கவனித்தார்கள். என்ன பேசுகிறீர்கள் என்பது போல் எம்மை சைகையால் கேட்டார்கள்.

கோப்பி குடித்தால் குளிருக்கு நல்லது என்று பெருவிரலை வாய்க்கருகில் கொண்டு போய்க் காட்டினேன். அவர்களுக்கும் அது தேவைப்பட்டது. பனி மெல்ல மெல்ல பெய்யத் தொடங்கியது. பார்க்க அழகாகத்தான் இருந்தது. ஆனால் குளிரைத் தாங்க முடியவில்லை.

பேருந்து சாரதி ஒவ்வொருவருக்கும் குளிரைத் தாங்குவதற் காக கோற் கொடுத்திருந்தார். கோற்றை பின்பக்கமாக உயர்த்தி தலையை மூடிக் கொண்டேன். நாங்கள் நின்ற இடத்திற்கு எதிரே இருந்த சிறிய கடை திறக்கப்பட்டது. அது கோப்பிக்கடை. குளிரி லிருந்து தப்புவதற்கும் கோப்பி குடிப்பதற்குமாக வேகமாக கடைக் குள் போனோம். கடைக்காரர் எங்களை ஏறெடுத்துப் பார்த்தார். அவர் மொழியில் ஏதோ கேட்டார். அவர் என்ன கேட்கிறார் என்பது எங்களுக்குப் புரியவில்லை. நான் கொபி என ஆங்கிலத்தில் சொன்னேன்.

கோப்பிக்கடையின் வெக்கை இதமாக இருந்தது. கோப்பிக் கடைக்காரர் தனக்கு முன்னாலிருந்த தட்டில் ஒவ்வொரு கோப்பியாக வைக்க ஒவ்வொருவராக எங்களிடமிருந்த சுவிஸ் பணத்தைக் கொடுத்து கோப்பிக் கோப்பையை எடுத்தோம். மிகுதிப் பணத்தை கோப்பிக்கடைக்காரர் தந்தார். எண்ணிப் பார்க்காமல் அப்படியே கோற்றின் பைக்குள் போட்டேன்.

கோப்பியின் சூடு குளிருக்கு அமிர்தமாகவிருந்து. அப் பொழுது ஒருவர் கோப்பிக் கடைக்குள்ளே நுழைந்தார்.

அவர் எனது நிறத்திலிருந்தார். அவர் கோப்பிக்கடைக் காரரிடம் கோப்பி வாங்கிக் குடித்தபடியே என்னையும் பாகிஸ்தான் காரரைக் கண்டதும் மெதுவாக எனக்கருகில் வந்தார். என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் “இந்தியனா ஸ்ரீலங்காவா” எனக் கேட்டார். “ஸ்ரீலங்கா”என்றவுடன் அவர் முகத்தில் ஒரு ஆர்வம். நான் தமிழன் என்பதைப் புரிந்து கொண்ட அவர் “நானும் தமிழன்தான்” என்றார்.

எனக்குச் சந்தோசமாகவிருந்தது. அப்பொழுது கோப்பிக் கடைக்காரர் அவரிடம் ஏதோ கேட்டான். அதற்கு அவர் பதில் சொன்னார். என்ன கேட்டவர் என்றேன். “நீங்கள் எனக்குச் சொந்தமா? சந்திக்கவா வந்தீர்கள்? என்று கேட்கிறார். நான் இல்லையென்று சொல்லிவிட்டேன்” என்றார்.

கோப்பிக் கடைக்கார் மெதுவாக உள்ளே போவதைக் கவனித்தேன். உள்ளே அவர் யாருடனோ பேசுவது போல் கேட்டது. வந்தவருக்கு விளங்கிவிட்டது. அவர் மெதுவாகச் சொன்னார் “கோப்பிக்கடைக்காரன் காவல்துறையோடு தொலைபேசியில் பேசு கிறான். உங்கள் எல்லாரையும் பற்றிச் சொல்கிறான். என்னைப் பற்றி யும் சொல்கிறான். நான் கெதியிலை போறன். நான் இங்கை நின்றால்

என்னையும் அவர்கள் விசாரிப்பார்கள். பெரிய பிரச்சனையாகிவிடும் பயப்பட வேண்டாம்” எனச் சொல்லியவாறே அவர் வேகமாக கடையை விட்டுப் போய்விடுகிறார்.

காவல்துறையினர் என்றதும் பயம் பிடித்துக் கொண்டது. காவல்துறையினர் வரப்போகிறார்கள் என்பதை நான் மற்றவர்க ளுக்குச் சொல்லவில்லை. ஆனால் உள்ளுக்குள்ளை பயம் ஆட்டிப் படைத்தது. என்ன நடக்கப் போகுது எது நடக்கப் போகுது என்று தெரியவில்லை. எங்களை கைது செய்து உடனடியாகவே அவரவர் நாட்டுக்கே திருப்பி அனுப்பி விடுவார்களோ என மனம் பதை பதைத்து. அப்படி அனுப்பி விட்டார்களானால் அங்கு என்ன நடக்குமோ...

மெதுவாக கடையை விட்டு நான் வெளியேற எல்லோரும் வெளியே வந்தார்கள். சந்தியை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். கோப்பிக்கடைக்குள் வந்து என்னோடு பேசியவர் உங்கள் நாட்டுக் காரரா என மற்றவர்கள் கேட்டார்கள். நான் “இல்லையென்று” பொய் சொன்னேன்.

என்னோடு நிற்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை என்னால் அறிய முடியவில்லை. உண்மையைச் சொல்லப் போய் அதனால் பிரச்சினை ஏதாவது வந்துவிட்டால் என்ற பயம் என்னைப் பொய் சொல்ல வைத்தது.

மனதுக்குள் அழுதேன். “என்ன வாழ்க்கையடா இது? நாதி யற்று அனாதையா கையறு நிலையில் குளிரில் நடுச்சந்தியில் நிற்கிறேனே” என நினைத்த போது கண்களை கண்ணீர் அடைத்தது.

குளிரினால் மூக்கிலிருந்து சளியும் நீருமாக எனது மீசையில் வளிந்து உறைந்தது. எல்லோருக்குமே எனது நிலைதான். சிலர் தும்மத் தொடங்கினார்கள். காற்சட்டைப் பைக்குள்ளிருந்த கைக்குட்டையை எடுத்து மீசையில் உறைந்து நின்ற சளியையும் நீரையும் துடைத்தேன். துடைக்கத் துடைக்க அடிக்கடி மூக்கிலிருந்து நீர் வடிந்து கொண்டி ருந்தது. எங்கே போய் எங்களை அகதியாக பதிவதென்று தெரிய வில்லை.

யாரையாவது கேட்கலாம் என்றால் யாரைக் கேட்பது என்றும் தெரியவில்லை.

கோப்பிக் கடையில் சந்தித்தவரைக் கேட்டிருக்கலாம். ஆனால் அவர் கோப்பிக் கடைக்காரனுக்கு பயந்து வேகமாக போய்

விட்டார். ஒரு சுவிஸ் நாட்டுக்கார் எங்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அவரிடம் கேட்கலாம் என நினைத்து அவருக் கருகில் போனேன். அவர் என்னைக் கண்டதும் தனது கையை உதறிக் காட்டிவிட்டு வீதியின் மறுபக்கம் போய்விட்டார். நட்டநடுச் சந்தியின் ஓரத்தில் ஒரு பிச்சைக்காரர்களாக நாங்கள் நின்றோம்.

கையில் கட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்த்தேன் ஏழு மணி யாகிக் கொண்டிருந்தது. அங்குமிங்குமாக நடப்பதிலும் கால்களை உதறுவதுமாகவும் உள்ளங் கைகளை தேய்ப்பதுமாக இருக்கையில் நீல விளக்கு சுழன்று சுழன்று எரிய ஒருவித சத்தத்துடன் ஒரு கார் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்து. அதற்குப் பின்னால் ஒரு வானும் வந்து கொண்டிருந்தது.

எங்களுக்கருகில் வந்து நின்ற காரிலிருந்தும் வானிலிருந்தும் கடும்நீல நிற உடையில் நான்கு பேர் கம்பீரமாக தடதடவென இறங் கினார்கள். காரிலும் வானிலும் பொலிஸ் என எழுதப்பட்டிருந்தது.

வந்தவர்களில் ஒரு காவல்துறைப் பெண் கோப்பிக்கடையை நோக்கிப் போனாள். மற்றைய மூன்று பேரும் எம்மைச் சூழ நின்றபடி பாஸ்போர்ட் என்றனர். எங்களிடம் இருந்த கடவுட்சீட்டுக்களை அவர்களிடம் கொடுத்தோம். கொடுக்கும் போது கை நடுங்கியது.

கோப்பிக் கடைக்கு போன பெண் திரும்பி வந்து ஏதோ சொன்னாள். வானில் எல்லோரையும் ஏறச் சொன்னார்கள். கடவுச் சீட்டை கேட்ட விதமும் வானில் ஏறச் சொன்ன விதமும் கடுமையான தொனியாகவிருந்தது. வான் எங்களை ஏற்றியபடி ஓடிக் கொண்டி ருந்தது.

கடவுச்சீட்டை வாங்கிவிட்டார்கள் இனி நேரே விமான நிலையத்திற்குத்தான் கொண்டு போவார்கள் என்ற நினைப்பில் ஒடுங்கிப் போயிருந்தேன். பாகிஸ்தான்காரன் மெதுவாக அல்லா அல்லா என்று சொல்லிக் கொண்டிருந்தான். மற்றவர்களில் சிலர் வானின் மேல்பகுதியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் கண்களை மூடியபடி இருக்கையில் சரிந்திருந்தார்கள்.

ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் எங்களை ஏற்றிக் கொண்டு வந்த காவல்துறையினரின் வானும் காரும் ஒரு கட்டிடத்தின் முன் னால் நின்றன. வானின் கண்ணாடி யன்னலுக்கூடாகப் பார்த்தேன். அவர்களின் மொழியில் காவல்நிலையம் என எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டேன்.

எங்கள் எல்லோரையும் இறங்கச் சொல்லி எங்களுக்கு முன்னுக்கு இரண்டு காவல்துறையினரும் பின்னுக்கு இரண்டு காவல் துறையினருமாக எங்களை கட்டிடத்தின் உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள்.

அந்தக் கட்டிடத்திற்குள் அகலமான கண்ணாடிகள் பொருத்தப்பட்ட பல அறைகள் இருந்தன. அறைகளுக்குள் பல காவல் துறையினர் வேலை செய்து கொண்டிருந்தனர். சிலர் நடைபாதையில் காணப்பட்டனர்.

எங்களை கட்டிடத்தின் உள்ளேயுள்ள நடைபாதையில் அழைத்துக் கொண்டு போகும் போது அறைகளுக்குள்ளிருந்தவர்கள் எங்களைக் கண்களால் மற்றையவர்களுக்கு ஜாடைகாட்டி ஏதோ சொல்வது தெரிந்தது. எங்களை கேலி செய்வது போல் சிரித்தார்கள். ஆனால் சிரிப்பின் சத்தம் வெளியே வரவில்லை. சொந்த மண்ணை விட்டு வந்தால் மற்றவர்களின் கேலியையும் கிண்டலையும் சகித்துத் தான் ஆக வேண்டும். தன்மானம் சுயமரியாதை எல்லாம் எங்கள் நிலையினால் கருகிச் சாம்பலானது.

நான்கு காவல்துறையினரும் எங்களை மேல் மாடியிலுள்ள பெரிய அறையொன்றுக்குள் கொண்டு போய் அங்குள்ள நாற்காலி களில் உட்காருமாறு ஆங்கிலத்தில் சொன்னார்கள். நாங்களிருந்த அறையின் எல்லாப் பக்கங்களிலும் அகலக் கண்ணாடிகள் பொருத்தப் பட்ட அறைகள் இருந்தன.

சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தோம் அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. எதுவும் நடக்கலாம் என்று மனம் சொல்லிக் கொண்டிருந்தது. எனது இதயம் துடிக்கும் சத்தம் நெஞ்சுக்கூட்டையும் தாண்டி எனக்குக் கேட்டது.

நான்கு காவல்துறையினரில் ஒருவரின் கையில் எங்கள் கடவுச்சீட்டுக்கள் இருந்தன. நான்கு பேரும் பக்கத்து அறைக்குள் போனார்கள். கடவுச் சீட்டுக்களைக் கொண்டு போனவர் மேசையின் முன்னால் அமர்ந்திருந்த பெண் ஒருவரிடம் கொடுத்தார்.

அந்தப் பெண் ஒவ்வொரு கடவுச்சீட்டாக விரித்துப் பார்த்தார். பிறகு தொலைபேசியில் பேசினார். பெரிய கண்ணாடி யன்னலூடாக உள்ளே நடப்பதைப் பார்க்க முடிந்தது. உற்றுப் பார்ப்பது போல் பார்க்காது தற்செயலாகப் பார்ப்பது போல்

பார்த்துக் கொண்டிருந்தேன்.

கண்கள் எரிந்தன. இமைகளை விரல்களால் தடவிவிட்டேன். சில நிமிடங்கள் சென்றன. காவல்துறையினரின் சீருடையிலில்லாத ஒரு பெண் ஒரு சிறிய பெட்டியில் எதையோ கொண்டு வந்தார். எங்கள் ஒவ்வொருவரின் முன்னும் பெட்டியை நீட்டி அதற்குள் இருப் பதை ஆங்கிலத்தில் எடுக்கச் சொன்னாள்.

பெட்டிக்குள் புதிய பல்துலக்கும் பிறஸ்கள் இருந்தன. பிறஸ்ஸை எடுத்துக் கொண்டே நன்றி சொன்னேன். எல்லோருக்கும் பிறஸ்களைக் கொடுத்து முடித்ததும் மூடப்பட்டிருந்த ஒரு அறையின் கதவைத் திறந்து எங்கள் எல்லோருக்கும் கேட்கும்படியாக" இது கழிவிடமும் முகம் கழுவும் இடமுமாகும். முகம் கழுவும் இடத்தில் பற்பசையிருக்கின்றது. இங்கே பல்லைத் தீட்டி முகத்தை கழுவுங்கள். முக்கியமாக உங்கள் உள்ளங் கைகளை சவர்க்காரம் போட்டு நன்றாகக் கழுவுங்கள்" என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் போய்விட்டாள்.

பல்துலக்கி முகத்தைக் கழுவினோம். உள்ளங்கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவினோம். கைதுடைப்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கடுதாசியை எடுத்து முகத்தைத் துடைத்தோம். ஆனால் முகத்திலிருந்த ஈரத்தன்மை போகவில்லை.

எனது நாற்காலிக்கு வந்த நான் ஊரிலிருந்து கொண்டு வந்த சிறிய பையை மெதுவாகத் திறந்தேன். பையை மடியில் வைத்தபடியே பைக்குள்ளிருந்த சாரத்தின் ஒரு பகுதியை மேலே இழுத்து முகத்தை துடைத்தேன்.

அப்பொழுது நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று நடந்தது. சீருடையில் காவல்துறைப் பெண்ணும் சீருடை அணியாத ஒரு பெண்ணும் இரண்டு தட்டுகளில் ஒன்றில் சிறிய சிறிய பாண் துண்டுகளை ஒருவரும் இன்னொருவர் பிளாஸ்ரிக் குவளை களில் கோப்பியும் கொண்டு வந்து மேசையில் வைத்தார்கள்.

பாணைச் சாப்பிட்டுவிட்டு கோப்பியைக் குடிக்குமாறு சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். உண்மையில் நான் வியப்படைந்துவிட்டேன். வீதியில் நின்ற எங்களுடன் கடுமையாக நடந்து வானில் ஏற்றி வந்து பின்னர் கண்ணாடி யன்னலுக்கூடாக கேலி செய்தமைக்கும் எதிர்மாறாக நடைபெற்ற காவல்துறை யினரின் மனிதாபிமான செயலைப் பார்த்து என்னைக் கவலை உணர்வு ஆட்கொண்டது.

ஐரோப்பிய நாடுகளில் ஒரு மனிதன் நீரின்றியோ உண வின்றியோ இறக்கக்கூடாது என்ற அடிப்படைச் சட்டம் ஒன்று இருக் கிறது என்பதை ஊரிலிருந்த போது பத்திரிகைகளில் வந்த வெளி நாட்டுச் செய்திகள் மூலம் அறிந்திருக்கிறேன்.

அதை கண்கூடாகக் கண்டேன். எழுந்து போய் பாண் துண்டு களை எடுத்துச் சாப்பிட்டோம். இரண்டு பாண் துண்டுகளுக்கு இடை யில் ஜாமும் பட்டரும் பூசப்பட்டிருந்து. பாணைச் சாப்பிட்டபடியே கோப்பியைக் குடித்தோம். பாலைவனத்தில் தாகத்தினால் தவிக்கும் போது தண்ணீர் கிடைத்தது போல் இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் சில நிமிடங்கள் செல்ல ஒரு சீருடை அணியாத ஆண் ஒருவர் எங்கள் ஒவ்வொருவரின் பெயரையும் சொல்லி ஒவ்வொருவராக ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றார். எனது முறை வந்தது எனது பெயரைச் சொல்லி அழைக்க எழுந்து அவருடன் சென்றேன்.

அந்த அறையில் காவல்துறையின் சீருடையுடன் அதிகாரி போல் ஒருவரும் எனது நிறத்தில் ஒருவரும் ஒரு மேசைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தனர். அந்த அதிகாரி என்னை உட்காரச் சொன்னார். என்னை அறைக்குள் அழைத்து வந்தவரும் அதிகாரிக்கு எதிராக உட்கார்ந்தார்.

அது அகலமான மேசை. நான் எனது நிறத்திலுள்ளவருக்கு எதிராக உட்கார்ந்திருந்தேன். என்னை அழைத்து வந்தவருக்கு முன்னால் ஒரு ஒலிப்பதிவுக் கருவியிருந்தது. அவர் ஒலிப்பதிவுக் கருவி யிலிருந்த ஹெட்போனை தலையில் கொழுவினார். எல்லாமாக நான்கு சிறிய ஒலிவாங்கிகள் ஒவ்வொருவரின் முன்னாலும் மேசையில் பொருத்தப்பட்டிருந்தன.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது இனி என்ன நடக்கப் போகின்றது என்று மனம் பதைபதைத்தது. நான் ஒரு குற்றவாளி போல் கால்களை ஒடுக்கி வைத்து கைகளை முன்னால் கட்டியவாறு நுணிக்கதிரையில் உட்கார்ந்திருந்தேன். எங்கள் நால்வருக்கு முன்னா லும் கண்ணாடிக் குவளைகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு ஒரு சிறிய தட்டால் மூடி வைக்கப்பட்டிருந்தது.

என்னிறத்தில் உள்ளவரைக் காட்டி “இவர் பெயர் இராஜேஸ் வரன், இவர் சுவிற்சலாந்தின் அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர். இவர் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த தமிழர். உங்களை

விசாரிக்கப் போகிறோம். நீங்கள் உண்மையச் சொல்ல வேண்டும். நீங்கள் உண்மை சொல்லவில்லையென்று நாங்கள் அறிந்தால் உங்களை இருபத்திநாலு மணித்தியாலத்திற்குள் எங்கிருந்து வந்தீர்களோ அந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பி விடுவோம். இவர் நீங்கள் சொல்வதை மொழிபெயர்பார். நான் கேட்பதையும் நீங்கள் சொல்வதையும் அவர் சொல்வதையும் நாங்கள் ஒலிப்பதிவு செய்வோம்" எனச் சொல்லி நிறுத்தினார்.

எனது முகம் வியர்க்கத் தொடங்கியது. நெஞ்சில் வியர்வை அரும்பி வயிற்றுப் பகுதியில் வழிந்தது. முகத்தில் அரும்பிய வியர்வையை மெதுவாக துடைத்தவாறு "ஓம்" என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டினேன்.

அந்த அதிகாரி தனக்கு முன்னால் மேசையில் கிடந்த எனது கடவுச்சீட்டை எடுத்து விரித்துப் பார்த்தபடியே மொழிபெயர்ப்பாளரைப் பார்த்து அவரது மொழியில் ஏதோ சொன்னார்.

மொழிபெயர்ப்பாளர் என்னைப்பார்த்து கேட்கத் தொடங்கினார். அதிகாரி சொல்லச் சொல்ல மொழிபெயர்ப்பாளர் தமிழில் என்னிடம் கேட்டார்.

"உங்களுக்கு என்ன பெயர்?"

"தருமசீலன்"

"எத்தனை வயது?"

"பத்தொன்பது"

"உங்களின் அப்பா பெயர் என்ன?"

"மார்க்கண்டு"

"உங்களின் அம்மாவின் பெயர் என்ன?"

"கண்மணி"

"நீங்கள் வேலை செய்கிறவரா?"

"இல்லை படிக்கிறவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தவன்"

"இந்த நாட்டுக்கு எதற்காக வந்தனீங்கள்?"

"................................"

நான் மௌனமாயிருந்தேன். அதிகாரி மொழிபெயர்ப்பாளரை கூர்ந்து பார்த்தார். மொழிபெயர்ப்பாளர் "அவர் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இப்படி மௌனமாகவிருக்க முடியாது" என்றார்.

என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அந்த விநாடிப் பொழுதுகளில் எனக்குள் முரண்பாட்டுப் பதில்கள் கேள்விகள் வந்து போயின ஒரு முடிவிற்கு வந்தவனாக

"பயத்திலை" என்றேன்.

"உங்கள் நாட்டிலிருந்து எதில் வந்தனீங்கள்?"

"விமானத்தில்"

"விமானத்தின் பெயர்?"

"தெரியாது"

"உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?"

"ஓரளவு தெரியும்"

"எந்த நாட்டில் வந்து இறங்கினனீங்கள்?"

"..... ........ ... ஆஸ்த்திரியாவில்"

"அங்கிருந்து எங்கள் நாட்டிற்கு எப்படி வந்தனீங்கள்?"

"பேருந்தில்"

"பேருந்தின் பெயர் என்ன?"

"பார்க்கவில்லை... தெரியாது"

குரல் கரகரத்தது. தொண்டைக்குள் எச்சில் அடைத்தது. அதிகாரியின் முகத்தில் ஒரு அலட்சியப் புன்னகை வந்து போயிற்று. எனக்கு முன்னாலிருந்த தண்ணீர்க் கண்ணாடிக் குவளையைக் காட்டி குடிக்கச் சொன்னார். எடுத்துக் குடித்தேன். தொண்டையை செருமிக் கொண்டேன். தொடர்ந்தன கேள்விகள்.

"சாரதியின் பெயராவது தெரியுமா?"

"தெரியாது"

"நீங்கள் வந்த பேருந்தில் எத்தனை பேர் வந்தார்கள்?"

"பத்துப் பேரென்று நினைக்கிறன்"

"எல்லாரும் உங்கள் நாட்டுக்காரர்களா?"

"இல்லை நான் மட்டுந்தான் சிறீலங்காவைச் சேர்ந்தவன்"

"இன்று காலை கோப்பிக்கடையில் ஒரு தமிழரைச் சந்தித்தீர் களா, அவரைத் தெரியுமா, அவர் உங்கள் உறவினரா, அவர் உங்களை சந்திக்கத்தான் வந்தாரா?"

"இல்லை... இல்லை... அவர் எனது உறவினர் அல்ல. அவரை யாரென்று எனக்குத் தெரியாது"

"உங்கள் நாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வரும்வரை பணம் எப்படி கிடைத்தது?"

"ஊரில் பலரிடம் அம்மா கடன் வாங்கியும் தனது தாலிக் கொடியை விற்றும் காசு தந்தார்"

அதிகாரி தாலிக்கொடியென்றால் என்னவென்று அம்மொழி பெயர்ப்பாளரைக் கேட்பது போல் தெரிந்தது. தாலிக்கொடியை தலிக்கொடி என்று உச்சரித்ததிலிருந்து நான் விளங்கிக் கொண்டேன். மொழிபெயர்ப்பாளர் தனது விரலில் உள்ள மோதிரத்தைக் காட்டி ஏதோ சொன்னார். அதிகாரியின் முகம் சிறிது வாடியதைக் கவனித்தேன். என்னை அனுதாபத்துடன் உற்றுப் பார்த்தார். தொடர்ந்து அதிகாரி ஏதோ சொன்னார்.

இத்துடன் முதல் கட்ட விசாரணை முடிந்துவிட்டது. அடுத்தடுத்து விசாரணைகளுக்கு உங்களுக்கு அறிவிப்பார்கள். இனி அடுத்து உங்களை படம் எடுப்பார்கள். உங்கள் கைரேகைகளை பதிவு செய்வார்கள். உங்கள் கடவுச்சீட்டில் ஆறு மாதத்திற்கான தற்காலிக வதிவிட அனுமதி தருவார்கள். உங்களை ஒரு விடுதியில் கொண்டு போய் விடுவார்கள். அங்குதான் நீங்கள் இருக்க வேண்டும்" என்று மொழிபெயர்ப்பாளர் சொல்லி முடித்தார். விசாரணையை ஒலிப் பதிவு செய்தவர் ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்தினார்.

சில விநாடிகள் செல்ல பக்கத்திலிருந்த கண்ணாடி அறையி லிருந்து ஒரு பெண் சில தாள்களைக் கொண்டு வந்து அதிகாரியிடம் கொடுத்தாள். அது அச்சடிக்கப்பட்ட தாள்கள்.

அதிகாரி மொழிபெயர்ப்பாளரைப் பார்த்தார். மொழி பெயர்ப்பாளர் என்னைப் பார்த்து "அதிகாரி கேட்ட கேள்விகளும் நீங்கள் சொன்ன பதில்களும் இத்தாள்களில் அச்சடிக்கப்பட்டிருக் கின்றன. நான் சொன்ன பதில்கள் அத்தனையும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன் என்பதற்கு கீழ் கையொப்பமிட வேண்டும்" என்று கையொப்பமிட வேண்டிய இடத்தை மொழி பெயர்ப்பாளர் காட்டினார். மார்க்கண்டு தருமசீலன் என்ற பெயருக்கு மேல் கையொப்பமிட்டேன்.

நான் கையொப்பமிட்டதும் அதிகாரி மீண்டும் அந்தப் பெண்ணிடம் தாள்களைக் கொடுத்தார். எதிலுமே எனது மனம் இலயித்துக் கொள்ளாத போதும். வேகம் வேகமாக அங்கு வேலைகள் நடப்பதைப் பார்த்து விநாடிப் பொழுதுகளில் வியப்பு ஏற்பட்டது.

பக்கத்து அறையிலிருந்து காவல்துறை சீருடை அணிந்த ஆண் வந்து என்னை அழைத்துச் சென்றார். என்னை நிற்க வைத்தும்

தனியாக முகத்தையும் பல கோணங்களில் படம் எடுத்தார்.

அவர் ஆங்கிலத்தில் பேசினார். ஒரு மேசைக்கு முன்னால் இருந்த கதிரையில் உட்காரச் சொன்னார். மேசையிலிருந்த ஒரு தட்டையான கருவி மேல் வலது உள்ளங்கையை வைக்கச் சொன்னார். ஒரு வெளிச்சம் என் கையை தடவிச் சென்றது. இடது உள்ளங் கையையும் வைக்கச் சொன்னார்.

எனக்கு முன்னால் இரண்டு தாள்களைக் கொண்டு வந்து வைத்தார். அவை சாதாரண தாள்கள் போலிருக்கவில்லை. வித்தியாச மாகவிருந்தன. இரண்டு தாள்களிலும் மார்க்கண்டு தருமசீலன் என எனது பெயர் இருந்தது.

எனது இரண்டு உள்ளங்கைகளையும் தூரிகையொன்றினால் சுத்தம் செய்தார். இரண்டு பெருவிரல்களிலும் மையொன்றைப் பூசி தாளில் அழுத்துமாறு சொன்னார் தாளின் மேல் அழுத்தினேன். பிறகு இரண்டு உள்ளங்கை முழுவதிலும் மையைப்பூசி தாள்களில் அழுத்தச் சொன்னார். இதற்காகத்தான் எங்கள் உள்ளங்கைகளை அந்தப் பெண் கழுவச் சொல்லியிருக்கலாம் என நினைத்தேன்.

பக்கத்திலிருந்த சின்ன தண்ணீர்த் தொட்டியைக் காட்டி கையைக் கழுவச் சொன்னார். கைகளை கழுவியதன் பின் அவரைத் திரும்பிப் பார்த்தேன். அந்த அறையிலிருந்த இன்னொரு கதவைத் திறந்து விட்டார். நாங்கள் ஆரம்பித்தில் அமர்ந்திருந்த அறையில் போய் அமர்ந்தேன். என்னோடு வந்த சிலர் அங்கிருந்தனர். சிலரைக் காணவில்லை. பாகிஸ்தான்காரன் அங்கிருந்தான். எழுந்து என்னரு கில் வந்து உட்கார்ந்து ஆங்கிலத்தில் “என்ன கேட்டார்கள்” என்றான் நான் எதுவுமே பேசாதிருந்தேன்.

இப்பொழுது எல்லாரும் வந்துவிட்டார்கள். எல்லாருடைய கடவுச்சீட்டையும் என்னை விசாரித்த அதிகாரி கொண்டு வந்து அவரவர்க்கு கொடுத்தார். தயக்கத்துடன் கடவுச்சீட்டை விரித்தேன். உள்ளே நான்காக மடிக்கப்பட்ட தாளிருந்தது. அதையும் விரித்துப் பார்த்தேன். அந்த நாட்டு மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஆறு என்ற இலக்கம் அடைப்புக்குறிக்குள் இருந்ததைப் பார்த்து ஆறுமாத தற்காலிக வதிவிட அனுமதி இதுவாகத்தான் இருக்குமென என நினைத்தேன்.

காவல்நிலையத்திற்கு அழைத்து வந்த நான்கு காவல்துறை யினரும் எங்களை அழைத்துக் கொண்டு கீழே இறங்கினார்கள்.

மேல்மாடிக்கு வந்த அதே பாதையால்தான் திரும்பவும் அழைத்துச் சென்றார்கள். எங்களை கேலி செய்தவர்கள் இருந்த அதே கண்ணாடி அறையைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தோம்.

எதேச்சையாக அந்த அறையைத் திரும்பிப் பார்த்தேன். பல காவல்துறையினர் இருந்தார்கள். அதில் ஒருவர் ஏதோ குடித்துக் கொண்டிருந்தார். அவர் எங்களைப் பார்த்து இடது கையை விமானம் தரையிலிருந்து மேல்நோக்கி எழும்புவது போல் பாவனை செய்து சிரித்தார்.

நீங்கள் திரும்பிப் போகப் போகிறீர்கள் என்பதைத்தான் அவர் அப்படிச் செய்து காட்டியிருக்கிறார். எனது கடவுச் சீட்டிற் குள்ளிருந்த தாளில் ஆறுமாத தற்காலிக வதிவிட அனுமதியிருந்ததால் அவரின் பாவனை எனக்குள் எந்தப் பதட்டத்தையும் கொண்டு வரவில்லை. தலையைக் குனிந்தபடி நடந்து கொண்டிருந்தேன்.

முன்பு கொண்டு வந்து இறக்கிய அதே வானில் காவல்துறை யினர் எங்களை ஏறச் சொன்னார்கள். வான் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் துரும்பாக அகதிவாழ்வுச் சட்டத்திற்குள் அகப்பட்டு அதன் இழுவைக்குள் போய்க் கொண்டி ருந்தேன்.

வானின் கண்ணாடிக்கூடாக வெளியே பார்த்துக் கொண்டி ருந்தேன். உயர்ந்த கட்டிடங்கள், சுத்தமான வீதிகள், அழகழகான கடைகள் என பின்னோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அப்பாவின் முகம், அம்மாவின் முகம், தங்கச்சியின் முகம், ஊரிலுள்ளவர்களின் முகங்கள், படித்த பள்ளிக்கூடம், ஓடித்திரிந்த ஒழுங்கை, யாழ்ப் பாணப் பல்லலைக்கழக வளாகம் என நினைவுக்குள் வந்து கொண்டி ருந்தன. கூடவே பத்மகலாவின் முகமும் வந்து நின்றது.

என்னுடைய இன்றைய நிலையினாலும் ஊரின் நினைவினா லும் கண்கள் கசியத் தொடங்கியது. வானின் கண்ணாடியோடு சாய்ந்து கொண்டேன். அகதி முகாம் எப்படியிருக்கும், அங்கே தமிழர்கள் இருப்பார்களா அல்லது மற்றைய நாட்டுக்காரர்களும் இருப்பார்களா, எல்லாரையும் ஒரு பெரிய மண்டபம் போன்ற ஒன்றில் தங்க வைப்பார்களா அல்லது தனித்தனி அறைகளில் விடுவார்களா என யோசித்துக் கொண்டிருந்தேன்.

இருபது நிமிடங்கள் வரை ஓடிய வான் ஒரு அழகிய கட்டிடத்தின் முகப்புக் கேற்றைத் தாண்டிப் போய் நின்றது.

அது நான்கு மாடிக் கட்டிடம். எங்களை இறங்கும்படி காவல் துறையினர் சொன்னார்கள். கட்டிடத்தைப் பார்த்தபடியே இறங்கினேன். கீழே பல நாட்டுச் சிறுவர்கள் ஒடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் சில சிறுவர்கள் தமிழ்ப்பிள்ளைகள். ஒரு சிறுவன் “எல்லாரும் வாங்க இங்கை ஒரு புதுத்தமிழ் மாமா வருகிறார்” என்றான். என்னை நோக்கி ஓடிவந்த சிறுவர்கள் காவல்துறையினரைக் கண்டதும் தயங்கி நின்றனர்.

மேல் மாடிகளின் அறைச் சுவரில் கைகளை வைத்தபடி சிலர் நின்றிருந்தனர். எங்களையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிலர் எங்களை நோக்கி கையசைத்தனர். காவல்துறையினர் எங்களை அழைத்துக் கொண்டு அந்தக் கட்டிடத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர். அங்கே ஒரு வரவேற்பு அறையிருந்தது. எங்களைக் கண்டதும் ஒருவர் தனது அறையை விட்டு வெளியே வந்தார். காவல்துறையினர் அவருக்கு கைலாகு கொடுத்தனர். அவரிடம் சில தாள்களை கொடுத்துவிட்டு அவர்கள் விடை பெற்றுச் சென்றுவிட்டனர். காவல்துறையினருடன் பேசியவர் அந்த அகதி முகாமின் பொறுப்பாளராக இருக்க வேண்டும் என நினைத்தேன்.

எங்கள் ஒவ்வொருவரின் பெயரையும் சொல்லி ஒவ்வொருவராக அந்தப் பொறுப்பாளர் அழைத்தார். ஏற்கனவே அந்த கட்டிடத்தில் இருந்த பலர் எங்களைப் பார்க்க அங்கே குழுமிவிட்டனர். அவர்களில் தமிழர் பலர் இருந்தனர். ஆபிரிக்க நாட்டவரும் இருந்தனர். என்னை இன்னும் கூப்பிடவில்லை. நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். தமிழர் ஒருவர் கனிவாக பார்த்துக் கொண்டே வந்து என்னருகில் உட்கார்ந்தார். அவரைத் திரும்பிப் பார்த்தேன்.

***

அவர் என்னைப் பார்த்துச் சிரித்தபடியே என்ன? தம்பி யாழ்ப்பாணமோ? என்றார்.

அவரின் சிரிப்பும் இயல்பான பேச்சும் சீலனுக்கு அந்த நேரத்துக்கு தேவையாகவே இருந்தது. ஓமண்ணை என்று மனதில் சிறு தெம்பு எட்டிப் பார்க்கக் கூறினான். என்ன பேர் தம்பி என்றார் அவர் தொடர்ந்து. முழுப்பேர் தருமசீலன். நீங்கள் என்னைச் சீலன் எண்டு கூப்பிடுங்கோ என்றுவிட்டு உங்கள் பெயரைச் சொல்லவில்லையே

என்றான். நான் தவம் ஆறு மாதமா இங்க இருக்கிறன். இனி வெளியில விடுவாங்கள். வெளியில போய்த்தான் ஏதும் வேல வெட்டி பார்க்க வேணும். நீர் என்னத்தில வந்தனீர் என்று விடுப்புக் கேட்கத் தொடங்க நானும் ஆர்வத்தோடு நடந்தவற்றை விபரித்தேன்.

“இங்க ஒவ்வொரு கிழமையும் சாப்பாட்டுச் சாமான்கள் தருவாங்கள். உடுப்புகள் வாங்கவும் கொஞ்சப் பணம் தருவினம். கவனமா வாங்கி வச்சுச் சமைச்சுச் சாப்பிடவேணும். குசினியும் டொயிலட் பாத்ரூம் எல்லாம் எல்லாருக்கும் பொது...” தவத்தார் இடைவெளி விடாமல் சொல்லிக் கொண்டு போக சுவிஸ் மொழி இடைநிறுத்தியது அவரின் பேச்சை. அவன் கூறியது ஒண்டும் எனக்கு விளங்கேல்லை எண்டாலும் விளங்கின மாதிரிக் கண் வெட்டாமல் அவனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன் நான். அவன் கூறி முடித்ததும் தவத்தார் என்னைப் பார்த்து “இண்டைக்கு பெட்சீற்றும் தலாணியும் தருவினம். வாங்கிக் கொண்டுவந்து வச்சுபோடும். என்ர அறையில ஒரு கட்டில் இருக்கு. உம்மை அங்கை விடச் சொல்லி அவனிட்டைக் கேட்கிறன்” என்று சொல்லிவிட்டு என் சம்மதம் கேட்காமலேயே அவனுடன் சுவிஸ் பாசையில் எதோ கதைத்துவிட்டு “வாரும் தம்பி. உமக்கு உம்மட கட்டிலைக் காட்டிறன்” என்றபடி முன்னால் நடக்க சீலனும் பின்னால் நடந்தான்.

அவர் கதவைத் திறப்பால் திறந்துகொண்டு ஒரு அறைக்குள் நுழைய அவனும் கூடவே நுழைந்தான். அறை பெரிதாக இருந்தது. மேலும் கீழுமாக ஆறு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஒரு சுவர் பக்கமாக ஒரு மேசையும் இரண்டு கதிரைகளும் மட்டும் காணப்பட மேசையில் தண்ணீர்ப் போத்தல்கள் யூஸ் பெட்டிகள் பழங்கள் என அடுக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கத்தில் கட்டில்களுக்கு இடையே இரு மீற்றர் அகலமுள்ள இரு அலுமாரிகளும் வேறொரு மூலையில் இரு அலுமாரிகளும் இருந்தன.

அறைக்குள் ஒரு வித வீச்சத்துடன் காற்றோட்டம் இல்லாமல் இருந்ததும் சீலனுக்கு மூச்சடைப்பது போல் இருக்க சுற்றிவரப் பார்த்தான்.

மேசை இருந்த பக்கமாக இரு சாளரங்கள் திறக்கப்படாமல் பூட்டியே கிடந்தன.

ஏனண்ணை ஜன்னல் திறக்காமல் வச்சிருக்கிரியள் என்றபடி ஜன்னலைத் திறக்கப் போக தம்பி தம்பி அதைத் திறக்காதையும். ஒரே

புழுதியும் சத்தமும் கேட்கும். அந்தப்பக்கம் விரைவுப்பாதை. அது தான் பூட்டியே கிடக்கு என்றவர் இந்தாரும் இதுதான் உம்மட கட்டில் என்று வலதுபக்கக் கட்டிலைக் காட்டினர். கட்டிலுக்குப் பக்கத்தில் தனது பாக்கைக் கொண்டு போய் வைத்தவனுக்கு ஊரி லிருந்த வீடு மனக்கண் முன்னே வர நீண்டதொரு பெருமூச்சை விட்டான்.

அவன் என்னத்தைப் புரிந்து கொண்ட தவத்தாரும் என்ன தம்பி செய்யிறது. போர்ச் சூழலால அங்க வாழ்ந்துகொண்டிருந்த நல்ல வாழ்க்கையை விட்டுப்போட்டு இவங்களிட்டைப் பிச்சை எடுத்துக்கொண்டு இருக்கிறம் என்றபடி அவரும் பெருமூச்சை விட்டு விட்டு சரி வாரும் கீழே போய் சாமான்களை எடுத்துக்கொண்டு வருவம் என்று வெளியே செல்ல அவனும் அவருடன் சென்றான்.

புத்தம் புதிதாக படுக்கைக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் ஒரு பெரிய பொலித்தீன் பையுள் போட்டுக் கொடுக்க அதைக் கையில் வாங்கியவன் விபரிக்க முடியாத ஒரு உணர்வுக் கொந்தளிப்புக்கு ஆளானான். இது நாள்வரை அன்னியர் யாரிடமும் கையேந்தாமல் நிம்மதியாய் போய்க்கொண்டிருந்த வாழ்வு இப்போது கையேந்தியபடியே நகர்கிறது. உலகில் நாம் எண்ணியபடி எதுவும் நடப்பதே இல்லை என்ற உண்மை அவன் மனதை பிசைய நூலறுந்த பட்டமாய் அவன் மனம் எதையும் எண்ணும் மனநிலையிலிருந்து விடுபட்டது.

அண்ணை ஒருக்கா ஊருக்கு டெலிபோன் அடிச்சு நான் வந்து சேர்ந்த விஷயத்தை அம்மாக்குச் சொல்லவேணும் என்றான். உங் களின்ர வீட்டில டெலிபோன் இருக்கே என்று அவர் வியப்பானார். என்ர வீட்டுக்குப் பக்கத்தில விதானையாரின் வீடு. அவையிட்டைச் சொன்னால் அம்மாவைக் கூப்பிடுவினம் என்றான். இப்ப அவசரமே? பின்னேரம் நாலு மணிபோல போனால் காணும்தானே என்றவர் இவனின் பதிலை எதிர்பாராது படிகளில் ஏறத் தொடங்கினார். அவனும் வேறுவழியின்றி அவரைத் தொடர்ந்தான்.

அவன் அறையுள் வந்ததும் அறையைச் சாத்தியவர் தம்பி தேத்தண்ணி ஒண்டு போடட்டே என்றார். அவனுக்கும் அது தேவையாக இருந்தது. கட்டிலில் கொண்டுவந்த பொருட்களை வைத்துவிட்டு வாரும் குசினியைக் காட்டிறன் என்று சொல்லியபடி செல்லும் அவரைப் பின் தொடர்ந்தான்.

குசினி பெரிதாக இருந்தது. மூன்று செட் அடுப்புக்களும் இரு

மரப் பெட்டகங்களும் மூன்று துவைக்கும் இயந்திரங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர் மரப் பெட்டகத்தின் பூட்டைத் தன்னிட முள்ள சாவியால் திறந்து அதற்குள் உள்ள பாத்திரம் ஒன்றை எடுத்து இருவருக்கும் அளவாக நீரை நிரப்பி மின்னடுப்பில் வைத்துவிட்டு இரு தேநீர் குவளைகளை வெளியே எடுத்து வைத்தார். அவன் தன கண்களால் அறியத் துளாவினான்.

அடுப்பு சூடேற ஆரம்பித்ததும் பின் பக்கமிருந்து சில கருப்பு நிறப் பூச்சிகள் வெளியே வந்து தகர மூடிகளில் ஊரத் தொடங்கின. அவற்றைப் பார்த்ததும் அவனுக்கு ஒருவித அருவருப்பு ஏற்பட, அண்ண உங்க பூச்சிகள் என்று கத்தினான். தம்பி பயப்பிடாதை என்று சொல்லிக்கொண்டே அவனைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு இந்தக் குசினியை எல்லா நாட்டவரும் பாவிக்கிறது.

உவங்கள் எங்கடை ஆட்கள் மாதிரி இல்லை. சரியான குப்பை. நாங்கள் தான் கொஞ்சம் கழுவித் துடைச்சு விடுறது. கோப்பை சட்டி எல்லாம் அப்பிடியே வச்சிட்டுப் போவிடுவாங்கள். நாங்கள் வந்து பார்த்தா எங்கட பொருட்கள் ஒண்டும் கிடவாது. அதுக்குப் பிறகு தான் பூட்டுப் போட்டு எங்கட சாமான்களை கவனமா வச்சிருக்கிறம் என்றார்.

அவன் வந்த அன்றே என்னத்தைச் சொல்வது என்று தெரியா மல் தலையை ஆட்டியபடி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந் தான். என்ன இவர் கொஞ்சம் கூட இடைவெளி விடாமல் தொடர்ந்து கதைத்தபடியே இருக்கிறார். இவருடனே தானே நான் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணியபடி மணிக்கூட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தான். இன்னும் ஒன்றரை மணித்தியாலம் இருக்கு நாலு மணிக்கு. எதுக்கும் இன்னொருதரம் போன் செய்வது பற்றிக் கேட்டுப் பார்ப்போமா என்று எண்ணியபடி அண்ணை உங்களுக்கு இப்ப ஏதும் அலுவல் இருக்கோ என்றான்.

“நான் சாப்பிட்டுட்டு கொஞ்ச நேரம் படுத்துப் பழகிட்டன். நித்திரை கண்ணைச் சுத்துது. ஒரு மணித்தியாலம் ஆவது படுக்க வேணும். நீரும் முகத்தைக் கழுவிக் கொண்டு கொஞ்சம் உம்மட சாமான்களை அந்த மூலைக் கபேட்டில் அடுக்கிக் கட்டிலையும் விரிச்சு உறைகளையும் போடும். ஒரு மணித்தியாலத்தில எழும்பிடு வன்” என்றபடி அவர் போய் படுத்துவிட்டார்.

***

சீலன் அவர் குறிப்பிட்ட அலுமாரியில் தன் பொருட்களை ஐந்து நிமிடத்தில் அடுக்கிவிட்டான். அவன் விடுமுறையைக் கழிக்கவா வந்தவன்? இரண்டு காற்சட்டைகளும் இரண்டு சேர்ட்டுகளுடன் இரண்டு உள்ளாடைகள், போட்டிருப்பதைவிட ஒரு சோடி சொக்ஸ், ஒரு சவர்க்காரம், சீப்பு, இரண்டு சாரங்கள், இரண்டு துவாய்கள் என இவற்றை அடுக்க மணிக்கணக்கு தேவை இல்லைத்தானே.

சப்பாத்தைக் கழற்றும் போது வியர்வை நாற்றம் அவனையே முகம் சுளிக்க வைக்க சாரத்தையும் துவாயையும் சவர்க்காரத்தையும் எடுத்துக் கொண்டு முகம் கழுவும் இடம் தேடிப் போனான்.

கதவைத் திறந்ததும் ஒரு அடைசல் மணம் மூக்கைத் தாக்க உள்ளே காலை வைக்கவே அருவருப்பாக இருந்தது. பாட்டாச் செருப்பைக் கொண்டு வந்திருக்கலாம் என மனதில் எண்ணியபடியே ஒருவாறு முகம் கைகால்களைக் கழுவி முடித்து சாரத்துடன் வந்து தன் கட்டிலில் இருந்தவன் தன்னை அறியாமலே அதில் சாய்ந்தான்.

இரும்பாலான கட்டில் படுத்தவுடன் கிரீச் என்று ஒரு சத்தம் எழுப்பியது. தவத்தார் பத்து நிமிடங்களிலேயே நல்ல நித்திரைக்குள் போயிருந்தது மெலிதாகக் கேட்ட அவரின் குறட்டைச் சத்தத்திலேயே தெரிந்தது.

கண்களை மூடிய அவனுக்கு மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்டாலும் தன்னை அனுப்ப தாய் பட்ட கஸ்டங்கள் மனக்கண்ணில் ஓட கடைக்கண்ணில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. பாவம் அம்மா என் உயிரைக் காப்பாற்ற எத்தனை பேரிடம் கெஞ்சி மன்றாடி தன்னுடைய தாலிக்கொடி நகை நட்டெல்லாம் விற்று என் உயிருக்கு உத்தரவாதம் தந்திருக்கிறா.

என்னை உவங்கள் திருப்பி அனுப்பாவிட்டால் எப்பாடு பட்டாவது அம்மாவின்ர கடன்களை அடைச்சுப் போடுவன். இனி என்னை என்ன செய்வாங்கள் என்று தவம் அண்ணையைக் கேட்க வேணும் என்று எண்ணியபடியே தன்னை அறியாது தூங்கி விட்டான்.

யாரோ தோளைத் தொட்டு உலுப்புவதை உணர்ந்து திடுக்கிடலோடு எழுந்தவனைப் பார்த்துச் சிரித்தபடியே தவத்தார் நின்றார். "என்ன சீலன் பதகளிச்சபடி எழும்புறீர்" என்று சிரித்தவரை "எத்தனை நாட்களுக்குப் பிறகு நிம்மதியோட இருக்கிறன் அண்ணை. என்னைப் போல இளம் ஆட்கள் எல்லாம் நிம்மதியாக தூங்கி

எத்தனை வருசமாச்சு” என்று பெருமூச்சு விட்டவன் தன் உடைகளை மாற்றிக் கொண்டான். ஏற்கனவே தவத்தாரும் வெளிக்கிட்டு நின்ற படியால் அவனைக் கூட்டிக் கொண்டு போன் செய்வதற்காக வெளியே கிளம்பினார்.

அவனிடம் இருந்தது அமெரிக்கன் டொலர்தான். அவன் “அண்ணை இதை மாத்த வேணும் எங்க மாத்தலாம்” என்றபடி காசை அவரிடம் நீட்டினான். “இப்ப நான் தாறன். பாங் இப்ப பூட்டி யிருக்கும் நாளைக்கு மாத்தி தாருமன்” அருகிலிருந்த கடை ஒன்றுக்குள் சென்று தன்னிடமிருந்த தாள்காசை சில்லறையாக மாற்றிக் கொண்டு டெலிபோன் பூத்தொன்றிற்குள் நுழைந்தாடூ.

இரண்டு பிராங் குற்றிகளை அதற்குள் போட்டுவிட்டு அவனிடம் இலக்கத்தை வாங்கி டயல் செய்து காதில் வைத்தால் சிங்களத்திலும் தமிழிலும் இப்பொழுது நீங்கள் தொடர்பு கொண்ட இலக்கத்துடன் பேச முடியாது என்ற அறிவித்தல் வந்தது. “தம்பி நீங்கள் தந்த போன் நம்பர் பிசியாக இருக்கு” என்று சொல்லி முடிய முதல் அவர் போட்ட பணம் உள்ளே இழுக்கப்பட்டு தொடஉபு துண்டிக்கப்பட்டது. “போட்ட காசை மிசின் விழுங்கிப் போட்டுது என்றவண்ணம் இன்னொருக்கா அடிச்சுப் பாப்பம்” என்றவாறு மீண்டும் இரண்டு பிராங் குற்றிகளை போட்டுவிட்டு இலக்கங்களை அழுத்தினார். மீண்டும் அதே நிலை.

“சா... வீணா நாலு பிராங் போட்டுது என்று சலித்தபடி “வாரும் அங்கால ஒரு கடை இருக்கு. கதைச்சு முடியக் காசு கட்டலாம்” என்று கூறியபடி நடக்கத் தொடங்கினார். அவன் எதுவும் கதைக்காமல் சேர்ந்து நடந்தான்.

கடையை அண்மித்ததும் “இதுதான் கடை. நல்ல காலம் சனம் இல்லை. வாரும்” என்றபடி உள்ளே நுழைந்து சுவிஸ் மொழியில் ஏதோ கூற அங்கிருந்தவன் ஒரு அடைப்புடன் இருந்த அறை போன்ற ஒன்றைக் காட்டினான். அதற்குள் இருவரும் சென்று இலக்கங்களை அழுத்த தொடர்பு கிடைத்தது. இவனுக்கு படபடப்புடன் யார் தொலைபேசியில் வருகிறார்கள் என ஆவல் உந்த கலோ கலோ என்றான். ஏழாவது தரம் மணி அடிக்கும் சத்தத்தைத் தொடர்ந்து போன் எடுக்கப்பட்டு விதானையார் “கலோ” என்றார். அவன் “நான் சீலன் கதைக்கிறன். நான் வந்து சேர்ந்திட்டன் சுவிசுக்கு... அதுதான் அம்மாட்டை ஒருக்கா கதைக்க” என்று இழுத்தான்.

“சரி அஞ்சு நிமிசத்தில திருப்பி அடியும். நான் அம்மாவைக் கூப்பிடுறன்” என்று கூறியபடி விதானையார் போனை வைத்து விட்டார். அவனுக்கு மனம் முழுவதும் ஒரு மகிழ்வு பரவியது. இப்ப இரவு எட்டு மணிதானே அங்க. அம்மா என்ன எல்லாம் யோசிச்சுக் கொண்டு இருக்கிறாவோ என்று எண்ணியபடி மணிக்கூட்டைப் பார்த்தான்.

“இன்னும் ஒரு மூண்டு நிமிசம் முடிய அடிப்பம், தற்செயலா உம்மட அம்மா வராட்டி வீண் காசுதானே” என்று அவர் கூறுவதும் சரியெனப்பட பொறுமையாக மனதுள் எதை எதையோ எண்ணிய படி காத்திருந்தான்.

அவன் காத்திருப்பு கரைய “சரி அடிப்பம்” என்றபடி மீண்டும் அவரே இலக்கங்களை அழுத்தி ரிங் போக அவனிடம் போனை நீட்டினார். தாயின் குரல் அழுகையுடன் “தம்பி சுகமாய்ப் போய்ச் சேர்ந்தியளோ” என்று ஒலித்தது. அவனுக்கும் அழுகை வந்தாலும் அடக்கியபடி “பிரச்சனை இல்லை அம்மா. காம்ப் ஒண்டில்தான் இப்ப விட்டிருக்கிறாங்கள். இனிப் போகப் போகத்தான் தெரியும். இங்க எனக்கு தவம் அண்ணை எண்டு ஒருத்தர் உதவி செய்யிறார். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதைங்கோ. பிறகு ஆறதலா எடுக்கிறன்” என்று ஏக்கங்களை மனதில் நிரப்பியபடியே போனை வைத்தான்.

***

வெளிநாடு செல்வதற்காக வீட்டைவிட்டுப் புறப்பட்டு இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டது. கடைசியாக கண்ணீருடன் விடைகொடுத்த தாயின் முகம் இன்னமும் அவன் கண்களுக்குள் நிழலாடிக்கொண்டிருக்கின்றது. தாயின் கண்ணீருக்குப்பின் இருந்த கண்களில் இருந்த ஏக்கம்! அது மகனைப் பிரிவதை எண்ணிய துயரமும் பிரிந்தாலும் எங்காவது உயிருடன் வாழட்டும் என்ற பரிதவிப்பும் ஒன்றாகச் சேர்ந்து வந்ததுதான் அந்தக் கண்ணீர்!

இருபது நாட்களுக்குப் பின்னர் இன்று இரண்டு நிமிடங்கள தான் தாயுடன் பேசியுள்ளான். இனி எப்பொழுது பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்போகின்றதோ? கடிதங்களில்த்தான் அதிகம் பேசவேண்டியிருக்கும். தாயின் நினைவுகளை அவன் மறக்க முயன் றான் இப்பொழுது கலாவின் நினைவுகள் துளிர்க்க ஆரம்பித்தன. பத்மகாலாவை அவன் கலா என்றுதான் அழைப்பான்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சீலன் மருத்துவபீட

மாணவன். கலாவும் அவனுடன் படிக்கும் சக மாணவி. அழகானவள்! வசதியானவள்! அடக்கமானவள்! அனேகமான பணக்காரப் பெண் கள் எப்பொழுதும் தங்களைச் சுற்றி நான்கைந்து பேர்களை வைத்துக் கொண்டு தாங்களே அதிகம் கதைத்துக்கொண்டிருப்பார்கள். அதை அருகிலிருப்பவர்கள் ஆமாம் போட்டு கேட்கவேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கும். ஆனால் கலா அதற்கு எதிர் மாறானவள்! தேவையில்லாமல் யாருடனும் அரட்டையடிக்க மாட்டாள். அதற்காக பேசாமூஞ்சி என்றும் சொல்லிவிட முடியாது. அளவோடு பேசினாலும் அந்தப் பேச்சில் ஒரு கவர்ச்சி இருக்கும். அர்த்தம் இருக்கும். ஒருமுறை அவளுடன் பேசினால் இன்னொரு முறை பேசவேண்டும் என்னும் ஆவலைத் தானாகவே தூண்டும்.

சீலனுடைய குணாபாவங்களும் அப்படித்தான். இதனால் தானோ என்னவோ கலா சீலனை தனது நண்பனாக்கிக் கொண்டாள். ஆரம்பத்தில் இவன் அந்த நட்பை கொஞ்சம் தூரமாகத்தான் வைத்திருந்தான். காரணம் அவனுடைய குடும்பநிலை அப்படி! தகப்பன் இல்லாத தன்னை தனக்குக் கிடைக்கும் பென்சன் பணத்தில் குடும்பச் செலவையும் பார்த்துக்கொண்டு தன் சக்திக்கு மீறி தனது படிப்புச் செலவையும் பார்த்துக்கொள்ளும் தன் தாயாரின் கனவை நிறைவேற்றி தான் ஒரு மருத்துவனாக வேண்டும் என்பது மட்டும்தான் அவனின் இலட்சியம். அதற்கு இடையில் காதல் கத்தரிக்காய் என எதிலும் மாட்டிக்கொள்ளக்கூடாது என்பதற்காகவே பெண்களை நண்பராக்கிக்கொள்ள அவன் விரும்பவில்லை

குழந்தைப் பருவத்தில் இனிப்பின்மீது ஆசை வருவதும், வாலி பப் பருவத்தில் காதலில் வசப்படுவதும் தவிர்க்க முடியாதவையே! சீலனும் அதற்குத் தப்பவில்லை. சாதாரண நட்பு பின்னர் நெருக்க மான நட்பாகி அதுவே காதலாகிவிட்டது.

கலாவின் காதலுக்காக எத்தனையோ சக மாணவர்கள் அலையாய் அலைந்திருக்கின்றார்கள்! அதேபோல் சீலனின் காதலைப் பெறுவதற்காகவும் பல பெண்கள் முயற்சி செய்திருக்கின்றார்கள்! ஆனால் காலமோகாதலையே விரும்பாத இருவரையும் காதலர் களாக்கிவிட்டது.

இந்த நினைவுகளுடனேயே இருந்த சீலனை தவத்தாவ ஏதாவது கேட்டு அவனுடைய எண்ணங்களை குழப்பியபடியே இருந்தார். தவத்தாருக்கு இப்பொழுது பெரும் சந்தோஷம்! தனக்கு

கதைத்துக்கொண்டிருப்பதற்கு நல்லதொரு துணை கிடைத்து விட்டதென்பதால். ஆனால் இயற்கையாகவே தனிமையை விரும்பும் சீலனுக்கு இப்பொழுது அந்த தனிமை இன்னும் அவசியாக தேவைப் பட்டது.

"அண்ணை பக்கதிலை பூங்கா ஒண்டும் இல்லையோ?" தவத்தாரின் கவனத்தை வேறுபக்கம் திருப்பி தனது தனிமைக்கான இடத்தை அவரிடம் கேட்டான் சீலன். "ஏனில்லை கொஞ்சத் தூரம் தான். ஒரு சின்ன பார்க் இருக்கு நாளைக்கு கூட்டிக்கொண்டுபோய் காட்டுறன்" சாதாரணமாகப் பதில் சொன்னார் தவத்தார்.

பொதுவாகவே சீலனிடம் உள்ள நல்ல குணங்களில் ஒன்று நாளை என்று எதையும் ஒத்திவைப்பதில்லை. இது பொழுதைக் கழிப்பதற்கானதற்காகவே இருந்தாலும் அது இப்பொழுதோ அந்த தனிமை அவனுக்கு தேவையாக இருந்தது.

"இல்லை அண்ணை நீங்கள் எப்பிடிப் போகவேணும் எண்டு குறிப்பைச் சொல்லுங்கோ நான் போயிற்று வாறன்"

"தம்பி உமக்கு இந்த இடங்கள் இன்னும் பழக்கப்படேல்லை லேசிலை புடிக்கமாட்டீர்"

"அண்ணை முன்பின் வழி தெரிஞ்சே சுவிஸிற்கு வந்தனான்? பத்தாயிரம் கிலோமீற்றர் தூரத்தைத் தாண்டி வந்திட்டனாம். பக்கத்திலை இருக்கிற பார்க்கை கண்டுபிடிக்கமாட்டேனோ? நீங்கள் சொல்லுங்கோ அண்ணை நான் போயிற்று வாறன்".

சீலனின் வார்த்தைகளில் இருந்த தன்னம்பிக்கை தவத்தாரை வியக்கவைத்தது! அவர் சொன்ன விபரங்களை மனதிற்குள் குறித்துக் கொண்டு சீலன் தனிமையைத் தேடி அறையை விட்டு வெளியேறி வீதியில் நடக்கத் தொடங்கினான்.

சிறிய பூங்காதான் ஆனால் அழகாக இருந்தது! அந்தப் பூங்காவைப் பொறுத்தவரை ஆட்கள் கொஞ்சம் அதிகம்தான். ஆனாலும் அமைதியாக இருந்தது! காகம் குருவிகளின் கீச்சல் சத்தங் களின்றி பூங்காவிற்கருகில் சலசலத்தோடும் நீரோடையும், தூரத்தே தெரியும் ஓங்கி நிமிர்ந்த மலை முகடுகளும், பூங்காவின் நடுவே அமைக்கப்பட்டிருந்த பந்தல்களில் பூத்துக் குலுங்கிக்கொண்டி ருக்கும் அழகுமிகு செடிகளும், மென்மையாக வருடிக்கொடுத்த இதமான குளிர் காற்றும் அவனுக்கு ஆறதலாக இருந்தது.

அழகு படைத்த அந்தப் பூங்காவில் போடப்பட்டிருந்த

நாற்காலிகளில் எல்லாவற்றிலும் பல சோடிகள் அமர்ந்திருந்தார்கள். சிலர் திருமணத்தை எதிர்நோக்கிக் காதலிப்பவர்கள்! வேறு சிலர் திருமணமாகி காதலித்துக் கொண்டிருப்பவர்கள். இன்னும் சிலரோ இரண்டுமே இல்லாமல் பொழுது போக்குக்காக காதலிப்பவர்கள்! அந்தக் காதலர் கூட்டத்திலே சீலன் மட்டும்தான் தனியொருவனாக அர்ந்திருந்தான்.

இந்தக் காட்சிகளெல்லாம் சீலனுக்கு புதுமையான அனுபவங் கள்! ஊரில் பல்கலைக்கழக வளாகத்தினுள் மட்டும்தான் அவன் கலாவுடன் அருகருகே நின்று சுதந்திரமாக கதைத்திருக்கின்றான். வீதியில் நடக்கும்போதுகூட இருவருக்கும் இடையில் இரண்டடி இடைவெளி இருக்கும்! இங்கோ அருகில் இருப்பவர்களைப்பற்றி எந்தவிதமான அக்கறையுமின்றி ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் கொண்டிருப்பதெல்லாம் சீலனுக்கு புதுமையான அனுபவங்கள்...!

அங்கிருந்த எல்லோரும் ஆண் பெண் சோடிகளாக காதலித் துக் கொண்டிருந்தார்கள். சீலன் மட்டும் தப்பித்தவறி தண்ணீருக்குள் விழுந்த வண்டு தத்தளிப்பதைப்போல ஊர் நினைவுகளை இரை மீட்டிக் கொண்டிருந்தான்.

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தடுக்கும் நோக்குடன் அரசாங்கம் போடுகின்ற முட்டுக்கட்டைகள்! அதை எதிர்த்து மாணவர்கள் நடாத்துகின்ற போராட்டங்கள்! இதனையே காரணமாக வைத்து அடிக்கடி இராணுவம் விசாரணை என்ற போர்வையில் மாணவர்களை கைது செய்வதும், எச்சரிக்கை செய்து விடுவிப்பதும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் தொடர் கதை யாகவே இருந்தது. மாணவர்களின் போராட்டங்களும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது!

அப்படித்தான் அடுத்து நடக்கவிருந்த இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக முதல் நாள் இரவு ஒன்றுகூடிய மாணவர்கள் பல்கலைக் கழக வழாகம் முழுக்க கறுப்புக் கொடிகளாக தொங்கவிட்டிருந்தார்கள். மறுநாள் வளாகத் தில் மாணவர்களைவிட இரண்டு மடங்கு இராணுவத்தினர் குவிக்கப் பட்டிருந்தனர்.

விடுதியில் தேடுதல்கள்! விசாரணைகள் என்று ஒரே அமர்க் களம்! இராணுவத்தினர் எல்லா மாணவர்களையும் விளையாட்டு

மைதானத்துக்கு வரவழைத்தார்கள். மனித நடமாட்டத்தைக் கண்ட வுடன் புற்றுக்குள் ஒடுங்கிக்கொள்ளும் பாம்பைப்போல சீலன் மாணவர்களின் பின்வரிசையில் தன்னை மறைத்துகொள்ள முயற்சித் தான். அதுதான் இராணுவத்தினருக்கு அவன்மேல் அதிக சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்போல... பின்வரிசையில் நின்றவர்களை யும் பயந்து பயந்து நின்றவர்களை முன்வரிசைக்கு அழைத்தார்கள்... முடிவில் சந்தேகத்தின் பேரில் பத்தொன்பது மாணவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள்! விசாரணையின் பின்னர் பத்துப்பேர் எச்சரித்து விடுவிக்கப்பட்டார்கள்! ஒன்பது பேர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டு! அதில் சீலனும் ஒருவன்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒரு மாதம்... பின்பு புரமோசன் கொடுக்கப்பட்டு ஒன்பதுபேரும் பூசா முகாமுக்கு மாற்றப் பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் வாரத்தில் ஒரு தடவை சீலனின் தாயார் வந்து பார்த்துச் செல்வார். பூசா முகாம் சென்ற பின்னர் நான்கு மாதத்திற்குப் பின் ஒருநாள் வழக்கறிஞர் ஒருவரின் துணையுடன் தாயார் வந்திருந்தார்! முன்பு பார்த்ததில் இருந்து பாதியாக தேய்ந்துவிட்டார்!

வெட்டாத தலைமுடி! முகத்தினில் தாடியோடு சீலன்! எதிர்காலத்தில் டாக்டராகப் பார்க்கவேண்டியவனை சிறைக்குள்ளே ஒரு பரதேசியைப்போல் பார்த்தவுடன் அந்தத்தாய் பதறிவிட்டாள்! பத்து நிமிடங்களை இருவரும் அழுதே கழித்துவிட்டார்கள்! அதன்பின் சில சம்பிருதாயமான நல விசாரிப்புக்கள்! அதன்பின் வழக்கறிஞர் ஆறதலான ஒரு செய்தியைச் சொன்னார். அது "விரைவில் வெளியில் வந்துவிடுவீர்கள்" என்பதுதான்.

ஆறுதலான செய்திதான் ஆனாலும் சீலன் அதை முழுமையாக நம்பிவிடவில்லை! நடக்கிறது நடக்கட்டும் என்று விரக்தியாகச் சிரித்துக் கொண்டான்! பார்வையிடுவதற்காக கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட நேரம் முடிவடைந்ததால் அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

அன்று இரவு முழுக்க சீலன் தூங்கவே இல்லை. தாயின் நினைவு மட்டுமல்ல? கலாவைப்பற்றிய நினைவுகளும் அவனை தூங்க விடவில்லை!

தாயார் வந்து பார்த்துச் சென்ற இரண்டு வாரங்களிலேயே சீலனும் அவனோடு கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுதலை

செய்யப்பட்டாடிகள்!

அறு மாதங்கள் சீலனின் படிப்பு பாழாகிவிட்டது! இனி அடுத்த ஆண்டில் இருந்து புதிதாக ஆரம்பிக்கவேண்டும்! ஆனால் மருத்துவர் கனவையெல்லாம் சீலனின் தாயார் மறந்துவிட்டார்! மகன் மருத்துவராக வாழ்வதைவிட அவன் உயிரோடு வாழவேண்டும் என்பதே அந்தத் தாயின் இப்போதைய சிந்தனை! அதற்காக மகனை வெளிநாடொன்றிற்கு அனுப்பிவைப்பதற்காக உறவுகளிடம் எல்லாம் உதவி கேட்டாள். எதிர்பார்த்தவர்கள் எல்லாம் ஏமாற்றம் அளித்து விட்டார்கள்.

கிடைத்த சொற்ப பணத்துடன் இருந்த நகைகளையும் தாயின் தாலிக் கொடியை விற்றும் போதவில்லை. முடிவில் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டுக்காணியையும் ஈடு வைத்து எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் ஒரு வழியாக பாசத்தை தனது மனச்சிறையில் பூட்டி வைத்துவிட்டு சீலனை இலங்கையைவிட்டு நாடு கடத்தி விட்டார் அந்த அப்பாவித்தாயார்.

இனிக்காத இரவும், சிரிக்காத பகலுமாக யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் சீலன் இருண்டு தடவைகள் கலாவை சந்தித்து பேசியிருக்கின்றான். முதல் சந்திப்பில் சிறை அனுபவங்களைப்பற்றிப் பேசியே நேரம் கரைந்துவிட்டது. இரண்டாவது சந்திப்பில் தன்னுடைய மருத்துவர் கனவுதான் இல்லாமல் ஆகிவிட்டது ஆனால் நான் மீண்டும் இலங்கைக்கு வரும்போது மருத்துவர் பத்மகலாவைத் தான் பார்க்க வேண்டும் என்று சொல்ல அவள் கண்ணீரால் விடை கொடுத்திருந்தாள். அந்தக் கண்ணீர்த் துளிகள் இன்னமும் சீலனின் கண்ணுக்குள்ளேயே நிற்கின்றது.

***

காதலில் விதைபட்டான்
கண்ணீரில் அடைபட்டான்
சாதலின் காதல்தனில்
சந்தோசமாய் பிடிபட்டான்
கண்ணினிலே கண்குத்திக் கண்மணிகள் கரைகையிலே
கண்ணீரே காதல் சொல்லும் காரிகைமனம் என்னவென்று
பெண்ணோடு பிறந்த விந்தப் பேதமைகள் மறைகையிலே
மனதோடு காதல் வந்து மார்பினிலே சாய்ந்து கொள்ளும்.

காதல் கொள் மனத்தால் கண்கள் கண்ணீர் சுமந்தன. கண்ணீர்

வென்னீராகி நெஞ்சில் விழுந்து நனைத்து பின் நெகிழந்து எரிந்தது மனம். காதலின் சூடு சுமகானதுதான். பிரிவின் துயர் இதமாகுமா? வெற்றிபெற்றுக் குடும்பமாகி காதலில் தோல்வியடைந்த காதலை விட காதல்பிரிவினால் உணர்வுகளில் வாழும் காதலின் சுகத்தை, இன்பத்தை, இனிமையை அவன் அனுபவிக்கத் தொடங்கிவிட்டான்.

ஓம்...தொடுகையற்ற தமிழ்காதல் உணர்வுகளில் தொடுகை யால் உயிர்க்கும், உள்ளமதில் தளிர்க்கும், மனமதில் தவிக்கும், உயிரையே எடுக்கும். சுடும் நினைவுகள் சுகம் தந்தன. உடலால் ஒன்றிணைந்து உறவுகாணும் காதல் சோடிகளிடையே தனிமையில் தன்னவளின் நினைவுகளுடன் இனிமையாக சுகந்தமாக சுகம் கண்டான் சீலன். கற்பனையில் காணும் காதலின் சுகம் கண்ணெதிரே கிடைப்பதில்லை. தன் காதலி கலாவை உள்ளத்தால் உண்டு கொண்டி ருந்தான். மனமெனும் மாளிகையின் உப்பரிகையில் முகர்ந்து கொண்டிருந்தான். நிமிடங்கள் நீறாயின. கணங்கள் கரைந்தோடின.

தொடர்ந்தும் கலாவின் நினைவுகள் அவனைக் கலைத்துக் கொண்டே இருந்தது. கடைசிநாள்... கலாவைக் கடைசியாகக் கண்ணுற்ற நாள்... காதல் கண்ணீராய் கசிந்தொழுகிய அந்நாள் அவனை வதைத்துக் கொண்டே இருக்கிறது. கண்ணீரால் அவள் விடைதந்த காட்சி பசுமரத்தாணியாய், பாறைகளில் சிற்பமாய், உணர்வின் உயிராய் நின்று அவனை உருக்கிக் கொண்டிருந்தது.

உதிரமூட்டி வளர்த்த அந்த உன்னதத்தாயின் உணர்வுகளும் அலைமோதின. உலக வரைபடத்தில் எல்லைக் கோடுகள் வரையப் பட்ட தாயின் முகம் சுருக்கம் அவள் வாழ்வையே சுருக்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியது. சிறைக்குள் பிடிபட்ட சிட்டுக்குருவி யான தன்மகனுக்காய் தீய்ந்துபோன காய்ந்த உடல் வேகுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது. குளிவிழுந்த கண்களில் பழிவிழுந்த வாழ்வு. மகனுக்காகவே உயிர் சுமக்கும் உடல்கூடு. அவ்வெலும்புக் கூடுகளுக்குள் என்னை விட்டுவிடு விட்டுவிடு என லப் டப் லப் டப் என்று தட்டிக் கொண்டிருக்கும் இதயம். அங்கே ஒற்றையரசனாய் வீற்றிருப்பான் மகன். இதுவே அவன்தாய்.

விமானத்தில் அவன் வானமேறும்போது கண்கள் கண்ணீரை மட்டுமல்ல காட்சிகளையும் சுமந்து அவன் இதயத்துள் எங்கே ஒரு மூலையில் பதுக்கி வைத்துக்கொண்டது. உணர்வுகளை மீட்டு அசை போட்டுக் கொள்கிறான்.

விமானம் வானில் உயர உயர அவனை அறியாமலே மனதில் ஒரு ஏக்கம் இனம்புரியாத தாக்கம். அது என்ன என்பதை அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ ஒன்றை இழப்பது போன்ற உணவு. காலன் ஓய்வின்றி ஓவட்டைம் செய்யும் தேசத்தில் இவன் இழப்பதற்கு என்ன இருக்கிறது? தன்தாயையும் காதலி கலாவையும் தன்நெஞ்சுக் கூட்டில் பூட்டியபடி பயணம் செய்யும் இவனுக்கு இன்னுமொரு இனந்தெரியா ஏக்கம் அவனை ஆட்டிகொண்டுதான் இருந்தது. மண்... மண்...மண்.

உண்டு கழித்த மண். தவழ்ந்து, உருண்டு புரண்ட மண்ணைப் பிரிகிறோம் என்ற உணவும் அவனை வாட்டத்தொடங்கியது. அவனை வாழவைக்காத மண்ணை எண்ணி எண்ணங்களில் வாழத் தொடங்குகிறான். குனிந்து பார்த்தான் தன்தாய்திருநாட்டை. அழகாக கடலில் ஒற்றைக் கண்ணாக பச்சைப்பசேல் என்று அலை கடல் தாலாட்ட படுத்துக் கிடக்கிறாள். அமைதியாக நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் ஈழத்தாய். கொதிக்கும் எரிமலைகளையும், கொப்பளிக்கும் பூகம்பங்களையும், கொந்தளிக்கும் சுனாமிகளையும் தன்னில் அடக்கிக் கொண்டு எப்படி அவளால் அமைதிக, நிம்மதி யாய்த் தூங்க முடிகிறது. தன்னையறியாலே தன்கைகளை அசைத்து விடைபெற்றுக்கொள்கிறான். விமானம் முகில்களுக்குள் மூழ்கி முக்கிக் கொள்கிறது.

மீண்டும் தான் அமடந்திருந்த பூங்காவுக்கே நினைவுகள் நகர்ந்து வந்தன. வெள்ளைக்காரப் பழக்கவளக்கத்தில் கொள்ளை போன ஒரு இளம் தமிழ்பெண்ணும் அப்பூங்காவில் தன் காதலனுடன் வாயினுள் வாய்வைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டிருந்தனர். அவன் அருகில் இருக்கிறான் என்பதைப்பற்றி அவள் அலட்டிக்கொள்ளவேயில்லை.

அலைபாயும் எண்ணங்கள் அவனுள் ஆர்ப்பரித்தன. இத்தமிழ் பெண்ணைப்பார்த்த கணம் அவனுக்கு தன்னுடன் ஒஸ்றியாவில் தங்கியிருந்த உடன்பிறவா ஒரு சகோதரியின் நினைவுகள் அவனை ஆட்கொண்டது. கவலைகளின் ரேகைகள் முகத்தில் கோடிட்டன. எண்ணங்கள் நெஞ்சில் பீறிட்டன.

ஒஸ்றியாவில் வந்து இறங்கிய சீலனை முகவடீ ஒருதனிப் பட்ட வீட்டில் ஒருபெரிய அறைக்குள் பலருடன் இருக்க விட்டாடீ. ஏற்கனவே பலநாட்டவடீகள் இருந்தபோதும் அவன் கண்ணில்

பட்டது ஒரு தமிழ்பெண்பிள்ளை மட்டும்தான். பேச்சுக்குக் கூட ஒரு தமிழன் கிடையாது. அந்த அறைக்குள் நுழையும் போது அவளது கண்கள் அவனை விழுங்கிக் கொண்டது. பேசுவதற்கு ஒரு துணை அவசியம் இவர்களுக்குத் தேவைப்பட்டது. புன்னகைத்தபடி அவளருகில் சென்றான். வெட்கத்துடன் மௌனமாய் கடைக்கண்ணால் அவனைப் பார்த்துச் சிரித்தாள். ஏனிந்த நாணம்? ஏனிந்த வெட்கம்? ஆண்களுடன் பழக்கம் இல்லாதவள் போலும்.

ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடின்றி படுக்கைகளை தாறுமாறாகக் கிடந்தன. ஆடு மாடுகளை பட்டி கட்டி விட்டதுபோல் ஒரு அறை. குதிரைத் தொழுவம்போல் வியர்வை நாற்றம். மனித வாடைகள் இத்தனையையும் உள்வாங்கியும் அசையாது இயங்கிக் கொண்டிருக்கும் சுவாசப்பைகள். உடைமாற்றக் கூட இடமில்லை. இருக்கை, உடுக்கை, படுக்கை எல்லாமே அங்குதான். அவள் அருகில் இருந்த கதிரையில் சென்று அமர்ந்தபடி

"நீங்கள் தமிழா?"

"ஓம் நீங்கள்"

"நானும் தமிழ்தான். நீங்கள் எப்போ எங்கிருந்து வந்தீர்கள்"

"என்னை ஏயென்சீ இரஸ்சியாவில் இறக்கி பின் இன்னுமொரு நாட்டுக்கு காரில் கொண்டுவந்து மீண்டும் விமானம் எடுத்து இங்கே கொண்டு வந்து விட்டார்கள். ஒரு கிழமையாக நான் இங்குதான் இருக்கிறேன்."

"உங்களுடன் வேறுயாரும் வரவில்லையா"

"வந்தார்களே. சிலரை அங்கேயே இரஸ்சியாவிலும் மற்ற நாட்டில் சிலரையும் விட்டு விட்டு என்னை மட்டும் இங்கு கூட்டி வந்தார்கள்"

"நீங்கள் தனியத் துணிந்து வந்துவிட்டீர்களே!"

"என்ன செய்வது வேறுவழியில்லையே"

"ஏன்"... ஆவலுடன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"இல்லை என்னை வந்து இந்தியாவில் திருமணம் எழுதியவர் நோர்வேயில் இருக்கிறார். அவருக்கு இன்னமும் நிரந்தர வதிவிட வசதி கிட்டாததால் என்னைக் கள்ளமாக ஏயென்சி மூலம் காசுகட்டிக் கூப்பிடுகிறார்"

"அப்ப நீங்கள் திருமணம் செய்வதற்காக நோர்வே போகிறீர்கள்"

“ஆமண்ணா... நீங்கள்...?” பதிலுக்காகக் காத்திருந்தாள்.

“எனக்கென்றொரு நாடில்லை. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியே வந்திருக்கிறேன் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணதோடு”

“அப்ப நீங்கள்... போராளியா”

“போராளிதான் போராடாத போராளி”

“அது எப்படி அண்ணா”

அவன் தன்கதையை விபரமாக விளக்கிக் கூறினான்.

மௌனம் அவர்களை விழுங்கிக் கொள்கிறது. வேதனைகளை ஜீரணித்துக் கொள்ள மௌனம் தேவைப்பட்டது. மெல்ல மௌனத்தைக் கலைத்தான் சீலன்.

“உங்களின் பெயர்”

“சாந்தி”

“எப்போ உங்களை இங்கிருந்து அழைத்துப் போவார்கள்? அல்லது உங்களின் அவர் இங்கே வந்து அழைத்துப்போவாரா?”

“இல்லை ஏயென்சிதான் முழுக்கச் செய்வார்கள். எல்லாம் அவர ஒழுங்கு செய்திருக்கிறார்”

“நீங்கள் காதல் திருமணமா அல்லது பேசிச்செய்ததா”

“இரண்டுந்தான் அண்ணா...(மௌனம்)...முதலிலை காதலித்தோம். பின் பெற்றோரின் சம்மதத்துடன்தான் பதிவுத்திருமணம் செய்தோம்”

“அப்ப சீதனம் இல்லாமல் சரிக்கட்டிப்போட்டியள் என்று நினைக்கிறன்”

“என்ன பகிடியா விடுகிறியள். சுளையாய் இருபதுலட்சம் கொடுத்தனாங்கள். அதோடை வீடு வளவு நகை எண்டு... என்னை பெத்தவர்கள் சும்மா அனுப்பேல்லை” முகத்தில் சிறுகடுப்பு.

காதலித்துச் செய்தாலும் சீதனம். அகதிக்குக் கூடச்சீதனம். எந்த நாட்டில் அகதி என்பதைப் பொறுத்து சீதனம் ஏறும் இறங்கும். அதிலும் பி ஆர் (நிந்தரவதிவிடம்) பெற்றவர்களுக்கு பத்துமடங்கு கூட. கொடுப்பதற்கு நீ நான் என்று போட்டிகளும் வேறு. பறந்த பறந்து படித்துப் பட்டம் பெற்றாலும் பட்டம் விடுவது அகதிகள் தான். அகதிக்குத் தானே சீதன அந்தஸ்து அதிகமாக இருக்கிறது.

இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன்தான் தனது ஏயென்ட் என்பதை சாந்தி

சுட்டிக்காட்டினாள். அவன் சீலனை அழைத்துவந்த முகவன் அல்ல. இவர்கள் ஒரு குழுக்களாகச் செயற்படுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

"உங்களுக்கு அவனைத் தெரியுமா? எந்த நாட்டவன்?"

"அவர் இலங்கையைச் சேர்ந்தவர். பெயர் கனீபா. இவர்கள் தமிழ் சிங்களப் பக்கங்களின் தொடர்புகளைக் கொண்டவர்கள். நன்றாக சிங்களம் தமிழ் இரண்டும் பேசுவான். என்னை எனக்குப் பக்கத்தில் இருந்து இடித்து இடித்துப் பேசிக் கொண்டு வந்தான்"

"இதை உங்களின் அவரிடம் சொன்னீர்களா?"

"இல்லை எனது மொபில் பாஸ்போட் எல்லாத்தையும் வாங்கி வைத்திருக்கிறான்."

"இதைப் பார்க்கப்போனால் பலர் கூட்டாகச் சேர்ந்துதான் கடத்தல்களை நடத்துகிறார்கள். என்னை அழைத்து வந்தவர்கள் இருவர். ஒருவர் பெயர் சந்திரன் மற்றவர் பெயர் என்னை அப்புகாமி என்று ஒரு சிங்களப் பெயரில்தான் அழைத்து வந்தார்கள். அது உண்மையில் அப்புகாமி என்பவரின் பாஸ்போட்டுத்தான் அதில் எனது படம் ஒட்டப்பட்டிருந்தது."

இவர்கள் பேசிப் கொண்டிருப்பது சாந்தியின் ஏயென்ட்டுக் குப் பிடிக்கவில்லையோ என்னவோ அவர்களை நோக்கி வந்தான்.

"சாந்தி உனது சாமான்களை ஆயத்தம் செய். நாளை நாங்கள் புறப்படவேண்டும். இப்ப உடன் எனது அறைக்கு வா. பாஸ்போட் பற்றிக் கதைக்கவேணும்"

"தன் காதலனை, எதிர்காலக் கணவனை, கனவுகளை அடையப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் புள்ளிமான் போல் துள்ளி ஓடினாள் சாந்தி. அவளைப் பார்த்து இரசித்தவண்ணமே விறைத்துப் போய் நின்றான் சீலன்.

காதலின் வலுவையும் சக்தியையும் அறிந்தவன் அவன். அழைத்துச் செல்லப்பட்ட சாந்தி ஒரு அறையில் அமரவைக்கப் பட்டாள்.

"சாந்தி கோப்பி, ரீ, சோடா என்ன வேண்டும்"

"எனக்கு ஒன்றும் வேண்டாம் என்னை அவருடன் சேர்ப்பித்து விடுங்கள் அது போதும்"

"நாங்கள் என்ன மாட்டம் என்றா சொல்லுறம். அதுக்குக் கால நேரம் எல்லாம் கூடித்தானே வரவேணும். அதோடை உன்ரை அவர்

முழுக்காசும் கட்டேல்லை” இப்படியே கதைத்தபடி சென்று கதவைத் உள்ளே பூட்டித் துறப்பை சட்டைப்பைக்குள் வைத்துக் கொள் கிறான்.

“ஏனண்ணா கதவைப் பூட்டுகிறியள். இவர் சொன்னவர் தானே நான் நோர்வேக்கு வந்து சேர்ந்தவுடன் மீதி அரைவாசிக் காசையும் தருவதாக”

“அதிலை எனக்கு நம்பிக்கை இல்லை டியர்” என்றபடி அவளின் கைகளை விரல்களால் வருடினான்.

“என்னடா பண்ணுறாய் பன்றி. நான் கல்யாணம் கட்டப் போகிறவள். நீ என்னை பாஸ்போட் பற்றிக் கதைக்க என்றே கூட்டி வந்தாய். நீ என்னை அந்த மாதிரிப் பெண் என்று எண்ணிவிடாதே. நான் நெருப்பு எட்ட நில்லடா”

“நீ நெருப்பாயிரு, கொதி, கூத்தாடு இங்கே யாரும் வரப்போற தில்லை. இது எனது சாம்ராட்சியம். நான் உன்னை கொன்று போட்டாலும் கேட்பதற்கு நாதியில்லை”

“தயவுசெய்து என்னை விட்டிவிடு. நீ பெண் சகோதரங் களுடன் பிறக்க வில்லையா?”

“பாவம் பார்த்தால் நாம் எதையும் சாப்பிட ஏலாது பிள்ளை. கத்தரிக்காய் வெண்டிக்காயுடன் வயிறு கழுவவேண்டியதுதான். நீ பெரிதாக ஒன்றுமே செய்யவேண்டாம் முரண்டு பிடிக்காமல் இருந்தால் சரி”

“டேய் நான் பூசைக்காக எடுத்து வரப்பட்ட புஷ்பமடா என்னை விட்டுவிடு”

“நான் இல்லை என்று சொல்லவில்லையே. பூசையை இங்கேயே முடி என்றுதான் சொல்கிறேன். இங்கே நடந்தது யாருக்கும் தெரியாது உன்னையும் என்னையும் தவிர. கணவனுடன் போய் “கம்” என்று சத்தம் சந்தடி இல்லாமல் யாலியாக வாழ். யார் வேண்டாம் என்றார்?”

“நான் என்னவருக்காக எத்தனை காலமாகத் குண்டு மழைக்குள் தவம் கிடந்தேன் தெரியுமா?”

“மயிலே மயிலே என்றால் இறகு போடாது. அதைப் பிடுங்கித் தான் எடுக்க வேணும் என்றால் எடுத்துத்தான் ஆகணும்”

எட்டி அவள் கையைப் பிடித்தான். சாந்தி அறையைச்சுற்றி ஓடத் தொடங்கினாள். மான்வேட்டை ஆரம்பமாகிவிட்டது.

ஆண்டவன் கொடுத்து ஆயுதங்களான பல் நகங்களை பயன் படுத்தினாள். பீதி, அச்சம், புதிய இடம், மொழி தெரியாத தேசம், உதவியற்ற கையறுநிலை. இருப்பினும் இறுதிவரை போராடினாள். இறுதியில் மயங்கிப்போனாள்.

பலமணி நேரமாகியும் போனவளைக் காணவில்லை. சாந்திக்கு என்ன நடந்திருக்கும் என்ற ஏக்கத்துடன் காத்திருந்தான் சீலன். மனம் கொள்ளவில்லை எழுந்து சென்று அவள் உள்நுழைந்த அறையைத் தட்டினான். நிசப்தம் ... நிசப்தம். எங்கு போயிருப்பாள் என்ற எண்ணத்துடன் மீண்டும் வரமுயலும் போது கிளாஸ் ஒன்று விழுந்து நொருங்கிய சத்தம் கேட்டு நின்று நிதானித்தான்.

"ஓ" யாரோ உள்ளே இருக்கிறார்கள்" அமைதியாக நின்று நிதானித்து மீண்டும் கதவைத் தட்டினான். அங்கே மீண்டும் அமைதி.

அமைதி இழந்தவனாக தன் இருக்கைக்கு வந்தான். அப்போது பிற்பகல் மூன்று மணி. கதவு திறபடும் சத்தம் அவனைத் திரும்பச் செய்தது. கலைந்த கூந்தலும் கண்ணீர் வடித்த முகமும் கசங்கிய உடை யுடன் உடலிலே சக்தி இல்லாதவளாக தள்ளாடியபடி பொதுவறை யில் சீலன் இருந்த அறையினுள் நுழைகிறாள். அங்கிருந்த அனைவரும் அவளையே உற்று நோக்கினர். சீலனைக் கண்டதும்

"அண்ணா அண்ணா என்னைக் கெடுத்துப்போட்டான் அண்ணா" என்றபடி ஓடிவந்தவள் அவனின் தோளில் சாய்ந்ததும் மயங்கிப்போனாள். அனைவரும் அவனையே பார்த்தபடி தமக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கேள்விகளை கணைகளாக எறிந்தனர். அங்கிருந்த வேறுநாட்டுப் பெண்கள் மட்டும் நிலமையைப் புரிந்து கொண்டார்கள். எழுந்து வந்து உதவ முயன்றும் மொழி அவர்களை விலக்கி வைத்தது.

சீலன் சமையலறைக்குள் சென்று தண்ணீர் எடுத்துவந்து முகத்தில் தெளித்து குடிக்கவும் கொடுத்தான். அவள் மேற்கொண்ட எதுவுமே பேசவில்லை. அதற்கு அவளிடம் சக்தியில்லை. மெதுவாக அவளை வாங்கொன்றில் படுக்கவைத்துவிட்டு விசிறிக் கொண்டிருந் தான் சீலன். உணவு வந்தது ஊட்டிவிட்டான். தெம்பு பெற்றவள் நடந்ததை விபரித்தாள்.

"இனி நான் வாழ்ந்து பிரயோசனமில்லை. யாருக்காக, எவருக்காக, எதற்காக புதிய புஷ்பமாக இத்தனை தவங்களின் பின்பு இங்கே வந்தேனோ அது பறிக்கப்பட்ட பின் வாழ்ந்து என்ன

பிரயோசனம் அண்ணா”

“அப்படிச் சொல்லாதை அம்மா. இவ்வளவு பணத்தைக் கட்டிவிட்டு உனக்காகக் காத்திருக்கும் உன்னவரை நீ போய் அடையத்தான் வேண்டும். இது நீ விரும்பித் தெரிந்து செய்த தவறில்லை. விபத்து... ஒரு விபத்து. இதை ஒரு கனவாக மறந்து நோர்வேக்குப் போ. உன்னை அனுப்பிவிட்டு மடியிலை நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பார்கள் உன் பெற்றோர். தயவு செய்து இப்படிப் பேசாதே.”

“இந்த நிலையில் அவருடன் போய் வாழச் சொல்கிறீர்களா? இது பாவம் இல்லையா? நான் செய்யும் துரோகமில்லையா?”

குற்றம் செய்தது யாரோ; தண்டனை அனுபவிப்பது இவளா? அனுபவித்தது யாரோ; அழுவது, அவலப்படுவது இவளா? படைப் பில் கூட இத்தனை முரண்பாடுகளா? தண்டிக்கப்படவேண்டியவன் பிரமனே. நீதியற்ற சமநிலையற்ற படைப்பு இதைப் போலவே சமூகமும். பெண்களுக்கு உலகில் எங்கே விடுதலை உண்டு? இயற்கை கூடப் பெண்ணுக்குத் தண்டனை கொடுக்கிறதே தவிர எங்கே விடுதலை கொடுத்தது. வெறுத்துப்போகிறான் சீலன்.

“அண்ணா! மனச்சாட்சியைக் கொன்று விட்டு வாழச் சொல்கிறீர்களா? ஒவ்வொரு முறையும் அவர் என்னருகில் வரும் போது இந்தக் காடையனின் நினைவுதானே வரும். நான் அப்பவும் சொன்னனான் நான் வேறு யாரோடையும் வெளிநாடு வரமாட்டன் எண்டு. கேட்டாரோ... இல்லையே அண்ணா”

சீலனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பற்களை நறுநறு என்று கடித்துக் கொண்டான். வேகமாக எழுந்தான்

“தமிழ்பேசும் ஒருநாய் பன்றி இப்படி நடந்து கொண்டானே. பொறுக்கி உன்னை விடமாட்டேனடா” என்றபடி சமையல் அறையில் கிடந்த பொல்லென்றை தூக்க ஓடினான். சாந்தி அவனை இழுத்து மறித்தாள்.

“அண்ணா எனக்காக நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். நீங்கள் ஊரில் பட்ட அவலம் போதும். பெரும்பணத்தைப் புரட்டி கடன் வாங்கித் தந்த காத்துக் கொண்டிருப்பார் உங்கள் அம்மா. எனது பிரச்சனையை நான் பார்த்துக் கொள்கிறேன். இவன் தமிழனே இல்லை. இவனைவிட சிங்களவர்கள் எவ்வளவோ மேல். கூடவிருந்து குழிபறிக்கும் கொச்சைக் கூட்டம் இருக்கும் வரை எமக்கு; மனித

இனத்துக்கே விடுதலை கிடையாது அண்ணா"

தான் பாவிக்கப்பட்ட பொருள் போல் தன்னை உணர்ந்தாள், வெட்கப்பட்டாள், வேதனைப்பட்டாள், ஆத்திரப்பட்டாள், பெண் பேதை என்னதான் செய்வாள்.

அவள் கூறியதில் நியாயம் இருந்தது. இருப்பினும் மனச் சாட்சி, இனவுணர்வு, மனிதநேயம் சீலனுள் எழுந்து சம்காரம் செய்தது. கடமை அவனை முடமையாக்கியது. பாசம் உணர்வுக்குப் பாடைகட்டியது. காதல் அவனைக் கட்டிப்போட்டது

"தங்கைச்சி நீ வேறு எந்தத் தப்பான முடிவுக்கும் வர மாட்டாயே"

"இல்லையண்ணா. ஆனாலும் அவனை என்னால் மன்னிக்க முடியாது. ஏதாவது அவனுக்குச் செய்யவேணும். நான் தமிழிச்சி என்பதை காட்டவேண்டும். ஓர் மயிர் நீர்த்தாலும் உயிர் வாழாது இக்கவரிமான்"

"தங்கைச்சி இப்பதான் சொன்னாய் ஒன்று செய்யமாட்டேன் என்று உயிர் நீர்ப்பதைப் பற்றிப் பேசுகிறாய் பயமாக இருக்கிறது சகோதரி"

"அண்ணை ஒன்றுக்கும் பயப்படாதையுங்கோ. பயந்தால் வெளிநாடு வெளிக்கிடக் கூடாது. வெளிக்கிட்டா எல்லாத்துக்கும் தயாராக இருக்கு வேணும். நான் ரெடி அண்ணை"

வாய்க்கு வாய் அண்ணை அண்ணை என்றவள் அழுகையை நிறுத்திக் கொண்டு எதற்கோ எதற்கும் தயாராகிவிட்டாள். அவளின் துணிவில் அவள் தற்கொலை செய்யமாட்டாள் என்பது மட்டும் உறுதியாகி விட்டது.

"தங்கைச்சி! இதையெல்லாம் பெரிசு படுத்தாது ஒரு கனவு போல் மறந்து எதிர்காலத்தை கணவனுடன் களிப்பாக மகிழ்ச்சியா நடத்து. இதை உன் கணவர் கூட அறியமாட்டார். நீ சொல்லாதவரை"

"பெண்ணாக இருந்தால் தான் என் நிலைபற்றிப் புரியமுடியும். அண்ணை என்னைத் துரோகம் செய்யச் சொல்கிறீர்களா? எனக்கும் மனச்சாட்சி இருக்கண்ணை. நான் கற்பிழந்தவள். நான் கற்பிழந்தவள். பறிக்கப்பட்டவள் பயன்படுத்தப்பட்டவள்"

"நீ கற்பிழந்தவள் இல்லை பறிக்கப்பட்டவள். கற்பு என்பது உடலுக்குரியது அல்ல. உள்ளத்துக்குரியது. மனதளவில் நீ உன் கணவனுக்காக கற்புடன்தான் இப்பவும் இருக்கிறாய். இதில்

சந்தேகமே இல்லை. கற்பெனப்படுவது சொற்திறப்பாமை என்று இலக்கியங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். நீ உன்கணவருக்குக் கொடுத்த வாக்குப்படியே நடக்கப்பார். கண்டபடி மனதை அலை பாய விடாது நோர்வேக்கு போகும் வழியைப் பார்த்துக்கொள்"

"நீங்கள் படித்தவர். வரைவிலக்கணம் எல்லாம் அழகாகச் சொல்கிறீர்கள். எனக்கு என் நெஞ்சுக்கு வஞ்சகமா நடக்க முடியாது. என்னைக் கெடுத்தவனையும் சும்மா விட இயலாது"

"அப்போ என்ன செய்யப்போகிறாய்?"

"என்னால் என்ன செய்யமுடியும்? பெண்ணாகப்பிறந்து விட்டேனே. இந்த எழியவனை நம்பி வந்துவிட்டேனே. என் தலைவிதி... என்தலைவிதி யாரைத்தான் நோவது" மீண்டும் அழத் தொடங்கினாள். சீலன் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான். சாந்தியை இழந்த சாந்திக்காக சீலனின் இதயம் கீலம் கீலம் ஆனது. இருந்தும் மனதில் ஒரு பயம் இவள் ஏதாவது செய்து விடுவாளோ என்ற எண்ணம் மனதில் ஓடிமறைந்து கொண்டிருந்தது.

இரவுணவு வந்தது. சாந்தி சாப்பிட மறுத்தாள்.

"சாப்பிடாமல் இருந்து சாகவா போகிறாய்? சாப்பிடம்மா. தென்பாக இருந்தால்தான் நாளைக்கு நோர்வே போறதுக்கான ஆயத்தங்களைச் செய்யலாம். பிடி சாப்பிடம்மா" சீலன் ஊட்டி விட்டான்.

"எனக்கொரு அண்ணை இருந்தால் உங்களை மாதிரித்தான் இருந்திருப்பான். அண்ணா உங்களை விட்டுப்பிரிய மனமில்லை அண்ணா. நாளைக்கு என்னை நோர்வேக்கு அழைத்துப் போவதாகத் தான் கூறினான். கள்ளவிசா சரிக்கட்டியிருந்ததையும் காட்டினான். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அண்ணா" வீறிட்டு அழுதாள். அனைவரும் திரும்பிப்பார்த்தனர்.

அவளைத் தேற்றிக் கொண்டிருந்த சீலன் "நீ எப்பாடு பட்டாவது இந்த ஏயென்டுடன் நோர்வே போய் சேர். இதுவே உனக்கு உசிதமானது. அதன்பின் இதை நீ உன் கணவனுக்கு சொல்ல ஏதாவது செய்ய இயலுமா என்று பார். சொல்லாமலே விட்டாலும் யாருக்கும் தெரியப்போவதில்லை"

"யாருக்குத் தெரிவது தெரியாதது இல்லையண்ணா பிரச்சனை. என்னுணர்வுக்கு, என்னிதயத்துக்கு, என்மனச்சாட்சிக்கு நான் பதில் சொல்ல வேணுமண்ணா. ஒரு ஆணுக்கு இது இலகுவாக

இருக்கலாம். இது என்னுடல் சம்பந்தமானது. உணவு சம்பந்த மானது. சரியண்ணா! எனக்கு நித்திரை வருகிறது. தூக்கம் தூக்கமாக வருகிறது”

போராடிய களைப்பு, மனதில் ஏற்பட்ட இளைப்பு, பெண்மையின் பொறுப்பு, பயன்படுத்தப் பட்டோம் எனும் வெறுப்பு, உடலில் உள்ள வேதனைகள், அவமானம், மானபங்கள் என அவளினுள் ஒரு குருசோத்திரமே நடந்து கொண்டிருந்தது.

“சரி நாளைக்குக் கதைப்பம்” ஓம் என்று தலையாட்டிவிட்டு சீலனின் அருகே இருந்த கட்டிலில் சாய்ந்து கொண்டாள். தூக்கம் கண்களைத் தழுவிக் கொண்டது. எப்படி இவளால் இத்தனைக்குப் பின்னும் தூங்க முடிகிறது? இப்பதான் வல்லுறவுக்கு உள்ளானவள் எப்படித் தூங்குகிறாள்?

மனதின்காயம், அதிர்ச்சி, அனைத்தும் அவளின் உணர்வு களுக்கு தடைவிதித்திருக்குமோ? அனைத்தையும் மறப்பதற்கு இயற்கை கொடுத்த மருந்தா தூக்கம்? உண்மையில் தூங்குகிறாளா என்பதை மெல்லிய வெளிச்சத்தில் பார்க்கிறான். இருந்தாலும் அவனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. உழன்று கொண்டான். மாறிமாறிப் புரண்டு படுத்தான். தூக்கம் அவனைத் தூக்கவில்லை. இருந்தாற்போல் சீலன் தன்னையறியாமலே தூங்கிவிட்டான்

இரவு 11மணி. தூங்குவது போல் நடித்தவள் சமையல் அறைக்குச் சென்று நீர் குடித்துவிட்டு அங்கிருந்த ஒரு கத்தியையும் எடுத்து வந்து தன் தலையணை அடியில் சொருகிக் கொண்டாள். அவன் மீண்டும் வருவான் என்று உள்மனம் உரைத்திருக்க வேண்டும். ருசிகண்ட பூனை சும்மாவா இருக்கும்? அவளை நோர்வே அனுப்பு வதற்கு முன் அவளைத் தின்று, உணர்வுகளைக் கொன்று விட வேண்டும் என்று எண்ணியவன் சும்மாய் இருப்பானா? அவள் எதிர்பார்த்தது போல் ஏயென்சிக்காரன் இரவு 11:30 மணிபோல் மெல்ல மெல்ல மம்மல் இருளில் வருவது அவளுக்குத் தெரிந்தது. எதிர்பார்த்திருந்தவள் தயாரானாள். சீலன் உலகையும் தன்னையும் மறந்து தூக்கிக் கொண்டிருந்தான்.

அவளருகில் வந்த ஏயென்சிக்காரன்

“சாந்தி... சாந்தி... சாந்தி கோலுக்கு வெளியே வா. நான் ஒன்றும் செய்யமாட்டேன். உன்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். மனச்சாட்சி குத்துகிறது, நாளை எட்டுமணிக்கு நோர்வேக்கு

வெளிக்கிடவேணும்” என்று மெல்லிய தாழ்ந்த குரலில் பேசினான். சாந்தியும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஆரளவம் கேட்காதவாறு நகர்ந்து அவனுடன் இணங்குவதுபோல் சென்றாள். அவன் அவளை 7ம் மாடியில் இருந்து 8ம் மாடிக்கு அழைத்துச் சென்றான். அது அவனின் படுக்கையறை. பழைய குருடி கதவைத்திறவடி என்பது போலனது. இந்தமுறை அவன் கதவை தாழிட்டபோது சாந்தி சங்கடப்படவே இல்லை.

“ஏன் என்னை இங்கே அழைத்து வந்தாய்? நீ என்னை ஒரு தடவை கெடுத்தது போதாதா? நாங்களும் மனிதப்பிறப்புகளடா கேவலம் கெட்ட பிண்டமே”

“ஒருதடவை கெட்டால் என்ன ஒன்பது தடவை கெட்டால் என்ன ஒன்றுதானே. முடிந்தது முடிந்துபோச்சு இன்னும் ஒரு தடவை... ஒரே ஒரு தடவை உன் சம்மத்துடன்...முரண்டு பிடிக்காதை சாந்தி. இஞ்சை பார் பாஸ்போட்டை உன்படத்துடன்... விசா... அதுவும் செங்கன் விசா குத்தி வைத்திருக்கிறன். போனாலும் போனாய் என்னை ஒருதரம் சந்தோசப்படுத்திவிட்டு போவேன். மாதக் கணக்கில் வெளிநாடுகளில் நிற்காமல் உன்னை அனுப்புவதற்கு எவ்வளவு சிரமப்பட்டு காசுகளை விட்டெறிந்து விசா எடுத்தனான் தெரியுமோ”

விசாவுக்காக விபச்சாரம் செய்யக் கேட்கிறானா? என்று எண்ணிக் கொண்டவள் அனைத்தையும் அவதானமாகக் கேட்டுக் கொண்டு பேசாது நின்றாள். சாந்தி சாந்தமாகவே நின்றாள். அவளை நெருங்கி அணைக்க வந்தவனை இடுப்பில் சொருகி வைத்திருந்த கத்தியால் குத்து குத்து எனக் குத்திக் குதறினாள். சத்தம் வராதவாறு குரல்வளையை அறுத்தாள். தன் ஆத்திரம் தீரும்வரை தன்னை நாசம் செய்தவனுக்கு நாராசமானாள். எதை தன்னாயுதமாகப் பாவித் தானோ அதைத் துண்டாடினாள். மெல்ல எழுந்து இரத்தத்தை அங்கிருந்த துடைதாளினால் துடைத்துவிட்டு மெல்ல நிதானமாக நடந்தாள் அந்த அறையை விட்டு... மிக நிதானமாக அமைதியாக எந்தப்பதட்டமும் இன்றி ஆளரவம் கேட்காது 7 ம் மாடியிலுள்ள தன் கோலுக்கு வந்தாள். சீலன் தன்னையறியாமலே தூங்கிக் கொண்டிருந் தான்.

கறைபடிந்தவளாகத் தன்னை உணர்ந்தவள் இரத்தக்கறை படிந்த கரங்களுடன் புனிதமானாள். மெதுவாக வந்தவள் சீலனின்

கால்களை தொட்டுக் கும்பிட்டு விட்டு தன்னுள்

“அண்ணா... அண்ணா... அண்ணா... என்னை மன்னித்து விடுங்கள். சீலன் அண்ணா நான் தூயமலராக புத்தம் புதுப்புஷ்ப மாகவே என்னைச் சமர்ப்பிக்க வந்தேன். இக்கறையை வைத்துக் கொண்டு என்னால் காலம் பூராகக் களங்கப்பட்டவளாக, செத்துச் செத்து வாழ இயலாது. என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணா. எங்கிருந்தாலும் என் ஆத்மா உங்களை வாழ்த்திக் கொண்டே இருக்கும். உங்கள் ஆசீர்வாதத்துடன் நான் போகிறேன் அண்ணா. விடைதாருங்கள்”

அவளின் கண்ணீர் சீலனின் பாதத்தை நனைத்தது. திடுக்கிட்டு எழுந்தவன் கண்களைக் கசக்கி விழிப்பதற்கு முன் எட்டி ஒரு கால் வைத்து கண்ணாடியை உடைத்துக் கொண்டு 7ம் மாடியில் இருந்து சாந்தி பாய்ந்து விட்டாள். பாயும் போது கூட “சீலண்ணா சீலண்ணா என்னை மன்னித்து விடுங்கள்”

அகிலம் அடங்கியது ஆத்மா அலறி அதிர்ந்து போனது. அவளின் அலறல் சுவர்களில் முட்டிமோதி எங்கும் வியாபித்திருந்தது. சூனியம் அங்கு சூழ்ந்து கொண்டது. உயிர்போகும் போது கூட அண்ணனாய் வரிந்து கொண்டவனை எண்ணிக்கொண்டல்லவா உயிரை விடத்துணிந்துள்ளாள். உண்மையண்ணனாய், அன்பு அண்ணனாய்; சீலனை சிந்தையில் ஏற்று சாகும் வேளை கூட அண்ணனின் நினைவுடன் தானே பாய்ந்திருக்கிறாள்.

அனைவரும் எழுந்து விட்டார்கள். என்ன நடந்தது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவரை ஒருவர் விசாரித்துப் பரபரப்படையும் வேளை சீலனின் மனதில் சூனியம்... சூனியம். சாந்தி பாய்ந்த கண்ணாடி யன்னலூடாக கீழே எட்டிப் பார்த்தான். கைகள், கால்கள் உடல் உதறியடங்க நீட்டி நிமிர்ந்தபடி கிடந்த அவள் உடலில் இருந்து ஆத்மா அடங்கிக் கொண்டிருந்தது.

பூசைக்கு பூத்தமலர் பூசிக்காது போனது - மிருகத்தின்
ஆசைக்கு அகப்பட்டும் அடிபணியாது சாய்ந்தது.
வழிமேல் விழிவைத்துக் காதலன் காத்திருக்க
பழிமேல் விதிசமைத்து வானுலகம் வென்றாளே.

***

நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்ட சீலன் நேரம் போனது தெரியாமல் வானத்தை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். இருட்டி

விட்டதால் பூங்காவில் இருந்தவர்கள் மெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன தம்பி... பத்மகலாவைப் பார்க்கிலை தேடுகிறீரோ?" என்றபடியே தோளில் கை பதித்தார் தவம். இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்ட தவம், சீலனின் கண்கள் கலங்கியிருந்ததைக் கண்டு கொண்டார். சாந்தியின் தற்கொலையை தவம் அறிந்திருக்க வாய்ப் பில்லைத்தான். சாந்தியைப் பற்றி சீலன் வாய் திறக்கவில்லை. சில சம்பவங்களை எப்பவும் மூடித்தான் வைக்கவேண்டும். உலையிலே மூடி கொதித்துக் கூத்தாடும்போது, மூடியைத் திறந்து ஆவியை வெளியேற்றிவிட்டு மீண்டும் மூடித்தானே வைக்கின்றோம்.

சீலனின் நினைவுகளைத் திசைதிருப்ப நினைத்தார் தவம்.

"அது ஏன் தமிழன்கள் தங்கட பெயரை இரண்டு இரண்டா வைச்சிருக்கிறான்கள்?" சீலனைப் பார்த்துக் கேட்டார் தவம். தவம் சொன்னது தன்னையும் பத்மகலாவையும்தான் என்பதை சீலன் புரிந்து கொண்டான். வலிந்து சிரிப்பை வரவழைத்துக் கொண்டே "உங்கடை முழுப்பேர் என்ன?" என்றான். "சொல்லமாட்டேனே!" என்றார் தவராசா என்ற தவம்.

இருவரும் இருளிற்குள் அகதிமுகாம் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். தவம் வந்திருக்காவிடில் தான் முகாமிற்குப் போவதற்கு கஸ்டப்பட்டிருப்பான் என்பதை சீலன் உணர்ந்து கொண்டான்.

தவம் இரவு உணவை சீலனுக்கும் சேர்த்து ஏற்கனவே செய்திருந்தார். நேரம் தாமதித்தால் குசினிக்குள் கூத்தாட வேண்டும் என்பதை அவர் அறிவார். அறைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த ஏனைய நண்பர்கள் சீலனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு சீலனை அறிமுகம் செய்து வைத்தார் தவம். மேசை மீது இருந்த ஒரு விறுமாண்டி எதையுமே சட்டை செய்யாது ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

"இன்றைக்கு சீலன் அமைதியாக உறங்கட்டும். பிறகு எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றோம்" சொல்லிக் கொண்ட அவர்கள் தங்களின் அன்றாட காரியங்களைப் பார்க்கத் தொடங்கினார்கள். ஒரு மனிதனின் கவலையைக் கூட்டுவதற்கு அதன் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் விரும்புவதில்லை.

விறுமாண்டிக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் இருந்து

காவல்நிலையத்தில் சொன்ன எல்லாவற்றையும் மறக்காமல் ஒரு பேப்பரில் குறித்து வைத்துக் கொண்டான் சீலன். சில ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு அம்மாவுக்கும் தங்கைக்கும் கடிதம் எழுதிக் கொண்டான்.

சீலனின் கட்டில் தவத்திற்கும் விறுமாண்டிக்கும் இடையில் இருந்தது. விறுமாண்டிக்கும் சீலனுக்கும் இடையே இரண்டு அலுமாரிகள் இருந்தன. இரவு நெடுநேரம் சீலனும் தவமும் கட்டிலில் படுத்தபடியே கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உரை யாடல் நாட்டுப்பிரச்சினை, குடும்பம், ஊர், இளமைப்பராயம், பள்ளி வாழ்க்கை, காதல் என்று போய்க் கொண்டிருந்தது.

“அண்ணை உங்களுக்கும் ஒரு தங்கைச்சி எனக்கும் ஒரு தங்கை. இரண்டு பேருக்கும் அப்பா இல்லை. உங்களுக்கும் ஒரு காதலி இருக் கின்றாள். என்ன ஒரு ஒற்றுமை!” சொல்லிக்கொண்டே கட்டிலின் மறுபுறம் திரும்பினான் சீலன். அங்கே விறுமாண்டி சீலனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“காதலி... காதலி” என்று சொல்லிக் கொண்டே சீலனின் கட்டிலுக்கு அருகில் வந்து சம்மாணமிட்டு அமர்ந்தான் அந்த ஆப்பிரிக்கன். இவர்களின் கட்டில்களுக்கு மேலே இருந்த மூவரும் கொல் என்று சிரித்தார்கள். “காதலி” என்ற தமிழ்ச்சொல்லை அவன் அறுத்துறுத்துச் சொல்லியதில் இருந்து தவத்தின் காதல் பற்றிய பிரசித்தம் தெரிந்தது. தவம் தன் இருகண்களையும் இறுக மூடிக் கொண்டார். விறுமாண்டி எரித்திரியா நாட்டைச் சேர்ந்தவன். ஐசாக் என்பது அவன் பெயர். அவன் தன் கதையைச் சொல்லத் தொடங்கினான். அவனுக்கும் ஒரு காதலி...

அதன் பிறகு விரைவுப் பாதை வழியே ஓடிக்கொண்டிருந்த வாகனங்களின் சத்தம் மாத்திரம் தொடர்ந்து அங்கு கேட்டது. அந்த வாகனங்களின் வேகத்திற்கு ஈடாக மூன்று பேர்களின் மனதினுள்ளும் “காதல் வாகனம்” ஓடிக் கொண்டிருந்தது.

வாழ்க்கை என்றுமே சீராக ஓடிக் கொண்டிருப்பதில்லை. சீரழிந்த வாழ்க்கையிலும் மேடு பள்ளங்கள் உண்டு. அடுத்து வந்த இரண்டு வாரங்களில் நடந்த சம்பவங்கள் சீலனின் மனநிலையை மேலும் புரட்டிப் போட்டன.

விடுமுறைக்காக மட்டக்களைப்பிற்குச் சென்ற கலா மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திரும்பவில்லை.

தவம் வதிவிட அனுமதியைப் பெற்றுக் கொண்டு அகதி முகாமை விட்டு வெளியேறியமை.

ஒன்று பேரிடி. மற்றது தவத்தைப் பொறுத்தவரை நன்மை தான் என்றாலும் சீலனுக்கு ஒரு கை ஒடிந்தது போல.

இனி வேலை தேட வேண்டும். பிறகு அம்மாவையும் தங்கையையும் கூப்பிட வேண்டும். அதன் பின்புதான் திருமணம் என்பது தவத்தின் திட்டம்.

"சீலன் நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை. நீ இந்த வாழ்க்கையைப் படிக்கும் வரை என்னாலான உதவிகளை வந்து செய்து தருவன்" அகதி முகாமை விட்டு வெளியேறும்போது தவம் சீலனுக்கு உறுதியளித் தார். என்னதான் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினாலும் எல்லா நேரங்களிலும் எல்லா உதவிகளையும் தவத்தினால் செய்ய முடிய வில்லை. அப்பொழுதுதான் ஐசாக் கை கொடுத்தான். அவனும் சீலனைப் போல ஆங்கிலம் கதைப்பான். அங்கிருந்த நான்கு ஆபிரிக்கர் களில் ஐசாக்தான் நல்லவன் என்பதைப் போகப் போக தெரிந்து கொண்டான் சீலன்.

தவத்தின் இடம் தொடர்ந்தும் வெற்றிடமாக இருந்தது. அதற்கு தமிழ் கதைக்கக்கூடிய ஒருவன் வந்தால் நன்றாக இருக்கும் என்று சீலன் எண்ணிக் கொண்டான். அகதிகளுக்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "டொச்" மொழி வகுப்பிற்கு தினமும் போய் வந்து கொண்டிருந்தான். அவனுடன் சூடானியர்கள், எரித்திரியர்கள், சேர்பியர்கள் என்று மேலும் பலர் அங்கே இருந்தார்கள். குளிர் இன்னமும் வாட்டி வதைத்தது. போகப் போக எல்லாம் பழக்கத்திற்கு வந்துவிடும்.

கலா யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த முகவரிக்கு இரண்டு கடிதங்கள் எழுதிக் கொண்டான். மட்டக்களப்பு முகவரி அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. கடிதங்களைப் போடுவதற்காக அதிகாலை தெருவில் இறங்கி தபால் கந்தோர் நோக்கி நடந்தான். முதன் முதலாக தனியே புறப்பட்டிருந்தான். கடும் குளிர். பனிப்புகாரினுள் அவனை எதிர்த்தால்போல் பள்ளிக்குச் செல்லும் சுவிஸ் நாட்டுப்பிள்ளைகள் வந்து கொண்டிருந்தார்கள். சீலனைக் கடக்கும்போது ஏதோ ஒரு குரலில் கேலி செய்து கத்திவிட்டுச் சென்றார்கள். அவர்களின் அந்தச் செய்கை சீலனுக்குச் சங்கடத்தை உண்டாக்கியது. தபால் கந்தோரில் முத்திரை கேட்டு வாங்குவதற்குள் போதும் என்று ஆகிவிட்டது.

தவம் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

அன்று சீலனுக்கொரு கடிதம் அகதிகள் திணைக்களத்தி லிருந்து வந்திருந்தது. அகதி அந்தஸ்து வழங்கும் அதிகாரியைச் சந்திப்பதற்கான கடிதம் அது. இரண்டாம்கட்ட விசாரணை. ஆனால் சீலன் அதற்கு இன்னமும் தயாரில்லை. மருத்துவம் படித்தது, பல்கலைக்கழகத்தில் வைத்து அவனை இராணுவம் பிடித்தது, யாழ்ப்பாணம், பூசா சிறைகளில் இருந்ததற்கான ஆதாரங்களை நாட்டு நிலமைகள் காரணமாக எடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆதாரங்கள் எல்லாம் அகதி அந்தஸ்து கிடைக்க போது மானவை தானா? சந்தேகம் மனதில் எழ, சீலன் பல குழப்பமான சிந்தனைகளுக்கு ஆட்பட்டான்.

தவம் அகதி முகாமை விட்டுபோய் மூன்றாம் நாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் வந்திருந்தார். சீலனை தான் இருக்கும் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். போகும் வழியில் மீண்டும் அம்மா வுடன் சீலன் கதைத்தான். அடுத்தமுறை ரெலிபோன் கதைக்க வரும் போது தங்கைச்சியையும் கூட்டி வரும்படி சொன்னான். கலாவின் மீதான காதல் தங்கைச்சிக்குத் தெரிந்தே இருந்தது. அம்மாவிற்குத் தெரிந்திருந்தால் எப்போதே கொன்று போட்டிருப்பார்.

தவம் இருக்கும் வீடு ஐந்து நிமிட பஸ் ஓட்டத்தில் இருந்தது. பஸ்சில் போய் வருவதற்கான வழிமுறைகளை தவம் சீலனுக்குக் கற்றுக் கொடுத்தார். கலாவைப்பற்றி சீலனிடம் எதுவும் பேசவில்லை. ஏதாவது தெரிந்தால் அவனாகவே சொல்லுவான் என்பது தவத்திற்குத் தெரியும்.

“எப்ப பாத்தாலும் ஒரே கேள்வி ஒரே பதில். சொல்லிச் சொல்லியே வாழ்க்கை சலிச்சுப் போச்சு. காம்ப் வாழ்க்கை கழிஞ்சதே பெரிய கண்டம் கழிஞ்சமாதிரி. இப்பதான் சுவிஸ் நீரோட்டத்திலை கலந்திருக்கிறன். றெஸ்ற்ரோறண்ட் ஒண்டிலை வேலை கிடைச் சிருக்கு. கொஞ்சம் தூரம்தான். தூரத்தைப் பாத்தா ஒண்டும் செய்யே லாது. பத்து மணித்தியால வேலை” சொல்லிக் கொண்டே விசுக்கு விசுக்கென்று நடந்தார் தவம். பச்சைப் புல்வெளியையும் இயற்கைக் காட்சிகளையும் ரசித்தபடியே அவரின் பின்னால் விரைந்தான் சீலன்.

“வேலைக்குப் போன இடத்திலைதான் உன்னைப் போல ஒரு நண்பன் கிடைச்சான். சின்னப் பெடியன்தான். இப்ப அவன்ரை வீட்டிலைதான் இருக்கிறன். அவன்ரை அப்பாவும் தங்கைச்சியும்

அங்கை கூட இருக்கினம்”

வீட்டிற்குச் சென்று சப்பாத்துக்களைக் கழற்றிக் கொண்டிருக்கும்போது வீட்டோடு சேர்ந்திருந்த டெக் ஒன்றினுள் இருந்த மனிதர் ஒருவர் கை தட்டி அங்கே வரும்படி கூப்பிட்டார்.

“அங்கிள்... அங்கிள்... வரச்சொல்லிக் கூப்பிடுகிறார். என்ரை ஃபிறண்டின்ரை அப்பா...” தவம் சொல்லிக் கொண்டே மேலுக்கு ஏறத் தொடங்கினார்.

“தவம்... சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வாரும். தம்பிக்கும் எடுத்துக்கொண்டு வாரும். தம்பி... நீர் இஞ்சை வாரும். தவம் எல்லாம் உம்மைப்பற்றிச் சொல்லிப் போட்டான். என்ரை பெயர் ராமலிங்கம். உம்முடைய பெயர் சீலன்” தொடக்கமே சீலனுக்கு கலகலப்பாக இருந்தது.

தவத்திற்கு ஏற்ற ஆள்தான் அவர் என்று முடிவெடுத்தான் சீலன். வயது அறுபது மட்டிடலாம். அவருக்குப் பக்கத்தில் சாப்பாட்டுக் கோப்பை, பாதி காலியான; சுவாஸ் ரீகல்; போத்தல், ஒரு றேடியோப்பெட்டி. சீலன் அங்கிருந்த இருக்கையில் அமரும் முன்னே கதையைத் தொடங்கிவிட்டார் அவர். அரசியல், இனக்கலவரம், போர், இயக்கம், வதைகள், கொலைகள்...

“அப்பா... இப்பதான் அவர் வந்திருக்கிறார். அதுக்கிடையிலை அவரைப் போட்டு அறுக்காதையுங்கோ!” கதவைத் திறந்து எட்டிப் பார்த்துச் சொன்னாள் ஒரு சின்னப்பெண்.

“உவள் என்ரை கடைசிப்பிள்ளை நிரோஜா. வேலை செய்து கொண்டு இப்ப கொம்பியூட்டரும் படிக்கிறாள். கெதியிலை கலியாணம் நடக்கப் போகுது. மாப்பிள்ளை ஒரு டொக்ரர் பொடியன். மகன் உதிலை பிள்ளையின்ரை கலியாண அலுவலாத்தான் போயிருக்கிறான். வந்திடுவான். எனக்குக் கொஞ்சம் மறதிக்குணம். இப்பவே சொல்லிப்போட்டன். தவத்தோடை நீரும் கலியாணவீட்டுக்கு வாறீர், என்யொய் பண்ணிறீர்” சொல்லிக் கொண்டிருக்கும் போதே தவம் இரண்டு பிளேற்றுகளில் சாப்பாட்டைப் போட்டு எடுத்து வந்து கொண்டிருந்தார். மகள் தண்ணீர் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனாள்.

“சரி... நான் இனிக் குழப்பேல்லை. இரண்டுபேரும் வடிவாச் சாப்பிடுங்கோ” சொல்லிக் கொண்டே ரேடியோவை முறுக்கினார ராமலிங்கம். அதிலிருந்து இரைச்சல்தான் வந்தது. அதைத் தலை

கீழாகத் தூக்கிப் பிடித்தார். சரித்துப் பிடித்தார். பின்னர் மேசையிலை தொப்பெண்டு போட்டார். சீலன் சாப்பாட்டின் ஒரு கவளத்தை எடுத்து வாயிற்குள் வைத்திருக்கமாட்டான்.

"உது எல்லாத்துக்கும் காரணம் அந்தக் கிழவன் தான். கிழவனாலை வந்த வினை" என்றார் இராமலிங்கம். தவத்திற்கு புரைக்கடித்தது. சீலனுக்கு சாப்பாடு மேலுக்கும் போகாமல் கீழுக்கும் போகாமல் நடுவில் தொண்டைக்குழிக்குள் நின்றது. "இந்தச் சொல்லை நான் ஐம்பது தரத்துக்கு மேலை கேட்டிட்டன்" ராம லிங்கத்திற்குக் கேட்காதவாறு, சீலனின் காதிற்குள் குனிந்து தவம் சொன்னார்.

"தவம் அண்ணை... உவரின்ரை கூத்தைப் பாருங்கோ.... குடியிலை நேற்று அம்மாவின்ரை துவசத்தை மறந்து போட்டார்" மீண்டும் மகள் எட்டிப் பார்த்து சொல்லிவிட்டு கதவுடன் ஒட்டி நின்றாள்.

"நான் ஒண்டும் மறந்து போகேல்லை. சைவச்சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சு தம்பி" அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே "சுவாஸ் ரீகல்" மணம் காற்றில் தவழ்ந்து வந்தது. மகள் உள்ளே போனதும் தவம் அவருக்கு அருகே போய் அம்ந்தார்.

"ஏன் அங்கிள் அப்பிடிச் செய்தனியள்?"

"தம்பி... நான் ஆவிகளை அதிகம் என்ரரெயின்ற் பண்ணு றேல்லை" அவரின் பதிலில் சீலன் உதட்டை விரித்துச் சிரித்தான். சாப்பாடு வெளியே சிந்தியது. சீலன் சுவிற்சலாந்து வந்து மகிழ்ச்சியாக இருந்தது இன்றுதான். ராமலிங்கத்தின் மகன் சற்று நேரத்தில் வந்துவிட்டான்.

"என்ன மணவறை சரிவந்திட்டுதோ?"

"ஓம்...ஓம்... இஞ்சை நான் படுகிற கஸ்டம் உங்களுக்கு எங்கை தெரியப்போகுது. ஜென்ரில்மன் மாதிரி உதிலை இருங்கோ" தகப்பனின் கேள்விக்கு மகன் சலித்தான்.

"நான் ஜென்ரில்மன் தான். பின்னை உங்களைப்போல அகதி யாவே வந்தனான். அதிதியா நேர்வழியிலை பயப்பிடாமல் வந்தனான்."

"இஞ்சை பாருங்கோ தவம் அண்ணை. நான் அகதியா வந்து எவ்வளவு கஸ்டப்பட்டு உவரையும் தங்கைச்சியையும் கூப்பிட்ட னான். உவரோடை கதைச்சுப் பிரயோசனமில்லை" மகன்

அவ்விடத்தைவிட்டு எழுந்து போய்விட்டான்.

மூன்று மணியளவில் திரும்பவும் சீலனை அகதி முகாமிற்குக் கொண்டுவந்து விட்டுச் சென்றார் தவம்.

சீலன் தினம்தோறும் அம்மாவின் கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆறுமாதத்திற்கான தற்காலிக வதிவிட அனுமதி கரைந்து கொண்டிருந்தது. அகதிமுகாமில் மேலும் சில தமிழர்களைச் சந்தித்துக் கொண்டான். மொழியைப் படிப்பதில் தீவிரமாக இருந் தான். படிப்பதில் சிரமம் இருக்கவில்லை. ஒன்றரை மாதங்களில் சிறிய கட்டுரை எழுதுமளவிற்குத் தேர்ச்சி பெற்றுவிட்டான். அவனது கட்டுரை ஒன்று புகைப்படத்துடன் உள்ளூர் பத்திரிகை ஒன்றில் வெளி வந்திருந்தது.

ராமலிங்கம் வீட்டுக் கலியாணவீட்டு ஆராவாரத்தினால் தவம் சீலனிடம் வருவது குறைந்திருந்தது. இடையில் இரண்டொரு தடவைகள் தான் இருக்கும் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். அப்பொழுது மாப்பிள்ளை இலங்கையிலிருந்து வந்துவிட்டதாகச் சொன்னார்.

மாலை வகுப்பு முடிவடைந்து ஷொப்பிங் செய்துவிட்டு இருப்பிடம் நோக்கி வந்து கொண்டிருந்தான் சீலன். முகாமின் கேற்றின் முன்பாக சிறுவர்கள் ஒரு பந்துக்காக அடிபட்டுக்கொண்டு நின்றார்கள். ஒரு தமிழ்ச்சிறுவனும் இன்னொரு சிறுமியும் கட்டிப் புரண்டு பந்துடன் மல்லுக்கட்டினார்கள். அவர்களிற்குக் கிட்டவாக நின்ற சுவிஷ் பிரஜைகள் சிலர் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

“கேற்றுக்கு உள்ளுக்கை போய் நிண்டு விளையாடுங்கோ. வெளியிலை வரப்படாது” சிறுவர்களைக் கலைத்தான் சீலன். உள்ளே ஓடியவர்கள் பனிக்குவியல்களை அள்ளி எறிந்து விளையாடத் தொடங்கினார்கள். அந்தச் சிறுமி பந்தை நெஞ்சோடு இறுக அணைத்தபடி கேற்றுக்கு உட்புறமாக ஒளிந்து நின்று “இல்லை... இல்லை... என்ரை என்ரை” என்று தமிழில் கத்தினாள். அப்போது தான் சீலன் அந்தச் சிறுமியைக் கவனித்தான். அவள் தமிழ்ச் சிறுமியே அல்ல! ஒரு பொஸ்னியப் பெண்ணாகவோ அல்லது சேர்பியப் பெண்ணாகவோ இருக்க வேண்டும். அந்தச் சம்பவம் சீலனை நெகிழ வைத்தது. சிந்தனையைத் தூண்டியது. சீலனின் வாழ்க்கை அவனுடை யதும் பலருடையதுமான சம்பவங்களாக விரிந்து செல்கின்றது.

இராமலிங்கம் வீட்டுக் கலியாணவீட்டிற்குப் போயிருந்தான் சீலன். சிறிய ஹோல். நூறுபேர் வரையில் இருந்தார்கள். தவம் ஓடி யாடி வேலை செய்து கொண்டிருந்தார். தாலி கட்டியாயிற்று. மண மக்களுக்கு அட்சதை போடுவதற்காக பலர் வரிசையில் நின்றாடிகள். அவர்களை வாழ்த்துவதற்காக தவம் சீலனைத் தன்னுடன் வரும்படி கூப்பிட்டார். மணமகனுக்கு சீலன் கை குடுத்தான். அவன் சிரித்தான்.

"என்னடாப்பா... இஞ்சை நீ நிக்கிறாய்?"

அவனை சீலனால் அடையாளம் காணமுடியவில்லை.

"என்னை உனக்குத் தெரியாதுதான். நான் அப்ப கடைசி வருஷத்திலை இருந்தேன். நீ முதல் வருஷம். பூசா கீசா எண்டெல்லாம் கலக்கிய தேசத்தொண்டன் அல்லவா நீ. எப்படி இருக்கிறீர்? அது சரி... என்னமாதிரி... பத்மகலா கனடா போய்ச் சேர்ந்திட்டாவோ?" சீலன் அடியும் நுனியும் புரியாமல் மலங்க முழித்தான்.

"உனக்கு ஒண்டுமே தெரியாது போல. கொழும்பிலை நான் நிக்கேக்கை ஒருநாள் பத்மகலாவை வெள்ளவத்தையிலை சந்திச்ச னான். அப்பதான் தான் கனடா போகப் போறதாகச் சொன்னா"

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே மணப்பெண் தலை குனிந்து நின்றாள்.

"சீலன் லைன்லை கனபேர் நிக்கினம். உனக்குக் கலா கிடைச்சிட்டாள்தானே! பிறகு மாப்பிள்ளையோடை கதைப்பம். அவர் ஒண்டும் ஓடிப் போகமாட்டார்தானே" என்று சொன்ன தவத்தை நிமிர்ந்து பார்த்தாள் மணப்பெண். தவம் அவளுக்குக் கையைக் காட்டிக் கண் சிமிட்டினார்.

சீலனுக்குக் அந்தக் கட்டடமே சுழல்வதுபோல இருந்தது. மறைவாக இருந்த ஒரு கதிரையில் இருந்துகொண்டான். சாப்பாடு "ரெடி" என்று சத்தமிட்டார்கள். வேண்டா வெறுப்பாக ஒரு பிளேற்றில் சிறிதளவைப் போட்டுக்கொண்டு ஓரமாக ஒதுங்கினான்.

மாலை நேரம். சீலன் தவத்துடன் ஹோலில் இருந்து ராம லிங்கம் வீட்டிற்கு வந்திருந்தான். மணமகனின் உறவினர்கள், உணவு விடுதிகளில் வேலை செய்பவர்கள் என வீடு மகிழ்ச்சியில் கரை புரண்டது. அந்த மகிழ்ச்சியில் ஒன்றினைய முடியாமல் சீலன் தவித் தான். வீட்டின் மத்தியில் கம்பளம் விரிக்கப்பட்ட செற்றியில் மண மக்கள் நடுநாயகமாக வீற்றிருந்தார்கள். அவர்கள் கதைத்ததையோ சிரித்துக் கழித்ததையோ காண முடியவில்லை. மீண்டும் ஒருதடவை

கலாவைப்பற்றி மாப்பிள்ளையிடம் விசாரித்தான். அவன் சொன்னதையே மீண்டும் சொன்னான். வேறு எந்த விபரமும் தனக்குத் தெரியாது என்று கையை விரித்தான். மாப்பிள்ளையுடன் கதைத்துக் கொண்டிருக்கும்போது மணமகள் கைத்தொலைபேசியில் யாருக்கோ செய்தி அனுப்பிக் கொண்டிருந்தாள். திருமண விருந்துபசாரத்திற்கு வந்தவர்கள் மெல்லக் கலைந்து போய்க்கொண்டிருக்கும் தருணத்தில் அவள் எழுந்து தனது றூமுக்குள் நுழைந்தாள். மாப்பிள்ளை சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவளைத் தொடர்ந்து உள்ளே போய் கதவைச் சாத்தினார்.

சற்று நேரத்தில் உள்ளே ஏதோ சத்தம் கேட்டது. மணப்பெண் டெக் பக்கம் இருந்த கதவினூடாக வெளியே பாய்ந்தாள். தன் குதியுயர்ந்த செருப்புகள் இரண்டையும் கழற்றிப் புல்வெளிக்குள் எறிந்தாள். டெக்கினுள் காட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தவர்களும், அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமலிங்கமும் திகைத்து விடுபடமுன் வீட்டு வாசலை நோக்கி ஓடினாள். சடுதியாக ஒரு கார் கிரீச்சிட்டு வாசலில் வந்து நின்றது. ஒரு ஆபிரிக்கன் காருக்குள் இருந்து இறங்கி அவளின் கையைக் கோர்த்தான். இருவரும் பாய்ந்து காருக்குள் ஏறினார்கள். வாசலை நோக்கி ஓடிவந்தவர்களுக்கு, இருவரும் கையைக் காட்டியபடியே பறந்தோடினார்கள்.

“என்ன தம்பி... என்ன நடந்தது?” மாப்பிள்ளையைப் பார்த்துக் கேட்டார் ராமலிங்கம்.

“நான் ஒண்டும் செய்யேல்லை மாமா! கத்தி ஒண்டை நீட்டின படி - கிட்ட வராதை, தொடாதை, குத்துவன் எண்டாள். பிறகு கதவைத் திறந்து ஓடீட்டாள்” திகைப்பில் இருந்து நீங்காதவராக மாப்பிள்ளை நின்றார்.

“சீலன் நீ இனியும் இஞ்சை இருப்பது நல்லதல்ல. வா போவம்” என்றார் தவம்.

“அண்ணை... இந்த நேரத்திலை நீங்கள் இஞ்சை இருக்க வேணும். எனக்கு இப்ப தனியப் போகத் தெரியும்” வீட்டைவிட்டு வெளியேறினான் சீலன். வீட்டு வளவிற்குள் போன தவம், திரும்ப ஏதோ நினைத்தவராக சீலனைக் கூப்பிட்டபடி பின்னால் ஓடி வந்தார்.

“சீலன் ஒண்டுக்கும் ஜோசியாதை. மின்னாமல் முழங்காமல் எண்டு சொல்லிறது இதைத்தான்” சொல்லிவிட்டு திரும்பி நடந்தார் தவம். தவம் சொன்னது மணப் பெண்ணைத்தான் என்றாலும் அது

கலாவுக்கும் பொருந்தி வருவதாகவே சீலன் உணர்ந்தான்.

பேருந்து நிலையத்தை நோக்கி எட்டி நடை வைத்தான். நேரத்திற்குப் போகாவிட்டால் முகாம் பொறுப்பாளரின் கோபத்திற்கு ஆளாகலாம். ஆனால் எங்கும் ஒரே இருளாக இருந்தது. இராமலிங்கத்தின் மகள் நிரோஜா தந்தைக்குச் செய்தது பெரிய துரோகம். தான் ஒரு ஆபிரிக்கனை காதலிப்பதை எப்படியாவது தந்தைக்குத் தெரிவித்து அதை முதலில் தந்தை மறுத்தாலும் அவரைச் சம்மதிக்க வைத்திருக்க வேண்டும். தனக்கு திருமணம் பேசும் போதே வேண்டாம் என்று சொல்லியிருக்க வேண்டும். கொழும்பிலிருந்து வந்த வரை பலபேருக்கு முன்னால் தலைகுனிய வைக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. படித்தவள் அதுவும் இளந்தலைமுறையினரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களைக் கொண்ட நாட்டில் வாழ்பவள். ச்சே இப்படி நடந்து கொண்டு விட்டாளே...

திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டு தாலி கட்டிய பிறகு நிரோஜா இப்படிச் செய்திருக்கவே கூடாது. எனக்கோ தவமணிக்கோ முதலில் தெரிந்திருந்தால் இராமலிங்கத்தை சமாதானப்படுத்தி கொழும்பிலிருந்து வந்த மாப்பிள்ளைக்கு நிலைமையை விளங்கப்படுத்தி அந்த மணவறையிலேயே ஆபிரிக்க காதலனுக்கு திருமணத்தை செய்து வைத்திருக்கலாம். நிரோஜா எல்லோரையும் அவமானப்படுத்தியிருக்கக்கூடாது. என்று எண்ணியவாறே நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு கார் அவனருகில் வந்து நின்றது. கார் கதவு திறக்கப்பட்டது.

அதிலிருந்து ஆபிரிக்கக் காதலனான நிக்சனுடன் நிரோஜாவும் காரில் இருந்து இறங்குவதைக் கண்ட சீலன் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

கார்க் கதவை அப்படியே விட்டு விட்டு அவசர அவசரமா இறங்கிய நிரோஜா சீலனை நோக்கி ஓடிவந்தாள். அவளின் பின்னால் நிக்சனும் வந்தான். அண்ணா அண்ணா எங்கள் வீட்டிலிருந்தா வருகிறீர்கள்? என்று கேட்ட நிரோஜா சீலனை பேசவிடாது தொடர்ந்தாள்.

அப்பா எப்படி இருக்கார்? அண்ணா என்ன சொன்னார்? முரளி பாவம் அவரை நான் ஏமாற்றிப் போட்டேன் எல்லாம் பயத்தினால் தான் அப்பா அண்ணாவிடம் முதலில் நிக்சனை காதலிப்பதாக

சொல்ல வில்லை என மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

சீலன் என்ன சொல்வது என நினைக்கும் போது "கலோ பிறதர்" என நிக்சன் சீலனுடன் கதைப்பதற்கு வந்தான்.

சீலன் தன்னை சுதாகரித்துக்கொண்டு கலோ என்றான். நானும் நிரோஜாவும் ஒரே இடத்தில் வேலை செய்கின்றோம் நான் எஞ்சினியராக இருக்கிறேன். எனது அப்பா சுவீஸ்காரர். அம்மா ஆபிரிக்கா. இங்கு தான் இருக்கிறார்கள். நாங்கள் 2 வருடமாக காதலிக்கின்றோம். தற்போது அவளுக்கு திருமணம் என்றதும் என்னசெய்வதென்று தெரியாமல் தான் வீட்டைவிட்டு கூட்டிப்போக நினைச்சேன்" என ஆங்கிலத்தில் கூறினான்.

சீலனுக்கு அவன் பேச்சு அவன் நல்ல பண்பானவன் என்ற எண்ணம் வந்தது. அதனால் எமது தமிழ் கலாசாரத்தை எமது பண்பாட்டை நிக்சனுக்கு எடுத்துக் கூறினான். "நிக்சன்! இப்ப அவள் ஒருவருடைய மனைவியாகிவிட்டவள். திருமணமாக முதல் இதுபற்றி கதைத்திருந்தால் வேறு முடிவெடுத்திருக்கலாம். இப்ப நீங்கள் எடுத்த முடிவு அவசரத்தில் எடுத்த முடிவு. இதனால் அந்த குடும்பத்தில் எல்லோரது சந்தோசத்தையும் அழித்து விட்டீர்கள்"

"இதற்கு என்ன செய்யலாம் சீலன் நீங்கள் தான் நல்ல ஒரு வழி சொல்லுங்கள். என்னால் நிரோசாவை விட்டு பிரியமுடியாது" என்றான் நிக்சன்.

"நீங்கள் இருவரும் முதலில் நிரோசா வீட்டுக்கு போய் அங்கு அவர்களுடன் பேசி அவர்களை அவர்களின் சம்மதத்துடனும் இதற்கு நல்ல முடிவெடுக்கலாம். நான் தவத்துடன் கதைக்கிறேன். உனது தொலைபேசியை தா" என வாங்கி தவத்தாருடன் நடந்தவற்றைக் கதைத்து இவர்கள் இருவரும் வீடு செல்ல இராமலிங்கத்தின் சம்மதத்தைப் பெற்று அவர்களை வீட்டிற்கு அனுப்பிவைத்தான் சீலன்.

அவர்கள் காரில் ஏறிச் செல்வதைப்பார்த்த சீலனுக்கு தான் ஏதோ சாதித்துவிட்டேன் என்ற பெருமிதத்துடன் பஸ்சுக்கு காத்திராமல் சந்தோசமாக முகாமை நோக்கி நடக்கலானான்.

முகாம் சென்றவுடன் தவத்தாருடன் அங்குள்ள பொதுத் தொலைபேசில் தொடர்பு கொண்டு இராமலிங்கம் வீட்டு நிலவரம் பற்றிக் கேட்டான்.

தவம் பெருமிதத்துடன் "நன்றி சீலன்" என்றார்.

"என்னத்திற்கு நன்றி தவம் அண்ணை" என்ற சீலனிடம்,

“உன்னைமாதிரி தான் மாப்பிளை முரளியும் இங்கு இவர்களை பெரும் சிரப்பட்டு சம்மதிக்க வைத்தார்” என்றார் தவம்.

உண்மையில் காதலின் மகத்துவம் தெரிந்தவர் முரளி, தனக்கு அவமானம் என எண்ணாது நிரோஜாவுக்காக கதைத்து அவளது அண்ணனையும் சம்மதிக்கவைத்து விட்டார்.

இனி என்ன அவர்கள் சேந்து வாழலாம் என மாப்பிளை முரளியும் ஒதுங்கிவிட்டார்.

ஒரு பெரிய பிரச்சினையை தடுத்து நல்லகாரியம் செய்த திருப்தியோடு சீலன் படுக்கையில் சாய்ந்தான். அப்படியே தூங்கி விட்டான்.

***

காலை 6.00 மணியாகியது சீலன் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

“சிறிலங்கா சிறிலங்கா” என கூவிக்கொண்டு விறுமாண்டி என அழைக்கும் ஆபிரிக்கன் ஜக்சன் ஓடிவந்து சீலனை உலுக்கி எழுப்பினான்.

சீலன் என்னவென்று தெரியாது எழுந்து திருதிரு என விழித்தான்.

விறுமாண்டி தனது காதில் கைவிரல்களை வைத்து தொலை பேசி என கூறினான்.

முகாமில் ஒரு பொது தொலைபேசி உள்ளது அதில் சீலனுக்கு சிறிலங்காவில் இருந்து ஒரு அழைப்பு வந்திருக்கிறது.

அவசர அவசரமாக கீழே இறங்கி ஓடிச்சென்று தொலை பேசியை தூக்கி

“நான் சீலன் கதைக்கிறன்” என்றான்.

மறுமுனையில் இருந்து ஐயோ! ஐயோ! கடவுளே! என சீலனின் சித்தி பார்வதி பதட்டத்துடன் கத்தி அழுவது கேட்டது.

சீலன் என்ன ஏது என தெரியாது குழம்பியபோதும் மறு முனையில் கதைப்பது தனது சித்தி பார்வதி என உறுதிப்படுத்திய போது பதட்டம் மேலும் அதிகரித்தது. பலகாலம் தம்மை எதிரிகள் போல் பொறாமையில் கதைக்காமல் திரிந்தவர் இன்று தொலைபேசி எடுத்து கதைப்பது...

யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் யாருக்கும் ஏதும் என பயந்து எண்ண...

பார்வதி தொடர்ந்து பேசினாள் “சீலன் உனது மச்சான் குணா பிரான்சில் இறந்தவிட்டாராம்.”

“ஐயோ ஐயோ எனது மகளின் வாழ்க்கை போய்விட்டுதே” என தொலைபேசியில் சீலனை பேசவிடாமல் புலம்பிக் கொண்டிருந் தாள் சித்தி பார்வதி

“சித்தி... சித்தி... எப்ப நடந்ததாம்? யார்? உங்களுக்கு சொன்னது” என வினாவினான்.

“பிரான்சில் இருந்து சின்னத்தம்பியின் மகன் தான் கூறினான். உனது நண்பன் குமரனுக்கு தெரியாதா அவன் உன்னுடன் கதைத்தவனா”

“அவர்களுக்கு எனது இந்த நம்பர் தெரியாது”

“அவர்கள் நம்பர் உன்னிடம் இருக்கா? இல்லாவிட்டால் நான் தாறன் எழுது”

“நம்பர் இல்லை. அதனால் தான் கதைக்கேல்லை. தாருங்கோ” என்று சொன்ன சீலன், அருகில் நின்ற விறுமாண்டியிடம் சைகை மூலம் எழுதுவதற்கு ஏதாவது தரும்படி காட்ட அவனும் தன்னிட மிருந்த பேனையையும் கைதுடைக்கும் பேப்பர் ஒன்றையும் கொடுத்தான்.

சொல்லுங்கோ சித்தி என நம்பரை எழுதினான்.

“எப்படி என்ன எண்டாலும் பிரான்சில் உன் அக்கா கமலா வுடன் தொடர்பு கொள். அவளுக்கு ஆறுதலாக இரு” என்றார்.

“ஓம் சித்தி நீங்கள் கவலைப்படாதேங்கோ நான் பார்க்கிறன்” என்றான்.

“சரி உன்னை நம்பித்தான் நிம்மதியாக இருக்கிறன் “என்று தொலைபேசி தொடர்பை துண்டித்தார் பார்வதி.

சித்தி வீட்டாரால் தனக்கு ஏற்பட்ட இழப்பு, ஏமாற்றங்கள் எல்லாவற்றையும் மறந்து பிரான்சில் மச்சான் இறந்ததை எண்ணி கவலைப்பட்டவனாக தமக்கைக்கு ஆறுதலாக இருக்கவேண்டும் என அவன் மனம் ஏங்கியவாறு தன் நிலைமைக் கவலைகளை மறந்தான். பிரான்சுக்கு எப்படி தொடர்பு கொள்ளலாம் என யோசித்தவாறு தனது அறைக்கு திரும்பினான்.

நேரம் காலை 8 மணியானது அந்த நேரம் தவத்தாரும் இராமலிங்கமும் சீலன் அறைக்குள் நுழைந்தார்கள்.

“வாருங்கோ அண்ணை” என சீலன் அவர்களை வரவேற்றான்.

என்ன செய்கிறீர் தம்பி என இராமலிங்கம் விசாரித்தபடி தம்பிக்கு நன்றி செல்லுவம் எண்டு இதாலை கடைக்கு போகேக்கை வந்தனாங்கள் என்றார்.

இதற்கு என்ன நன்றி அண்ணை

தம்பி மகளின்ர இந்த விடயம் மற்றவர்களுக்கு தெரியாமல் உடனடியாக ஒரு முடிவுக்கு வர உங்கட செயல்தான் எனக்கு பெரிசா தெரியுது.

சீலன் இன்று என்ன செய்யபோகிறாய் என தவத்தார் கேட்டார்.

அண்ணை பிரான்சில் எனது மச்சான் ஒருவர் இறந்ததாக காலை சித்தி கூறிய கதையை சீலன் சொன்னான்.

தம்பி உதுக்கேன் யோசிக்கிறாய் இந்தாரும் போன் என தனது கைத் தொலைபேசியை நீட்டினார்.

வேண்டாம் அண்ணை இதுக்கு காசு கூடவாக இருக்கும் என்று மறுக்க, "தம்பி காசு ஒன்டும் வேண்டாம். முதலில் நீர் கதைத்து அந்த அலுவலைப்பாரும். இதென்ன பெரியகாசு. உன்ர நல்ல மனசுக்கு முன்னால்" என்றார் இரமலிங்கம். தவத்தாரும் சைகையில் வாங்கு எனக் காட்டினார்.

சீலன் தயக்கமாக போனை வாங்கி தனது நண்பன் குமரன் நம்பரை அழுத்தியவன் மனம் நண்பனைப்பற்றி சிந்தனையில் தள்ளப்பட்டது.

குமரன் சீலனின் பாலிய நண்பன். அவனது கவலை, சந்தோசம் எல்லாவற்றிலும் பங்கெடுத்த உயிர் நண்பன் என்று கூறலாம். அவன் பிரான்சுக்கு தனது குடும்பத்தாருடன் வந்து 10 வருடங்களுக்கு மேலாகி விட்டது.

சீலனுடன் படித்த காலத்தில் படிப்பை இடைநிறுத்தித்தான் குமரன் பிரான்சுக்கு வந்தான். குமரன் வருவதற்கு 8 வருடங்கள் முன்பே மச்சான் குணா பிரான்சில் வந்து சேர்ந்தார்.

அவர் வந்து சேர்ந்த சில வருடங்களில் குடிக்கு அடிமையாகி யவர் ஊரில் உள்ளவர்களுடன் தொடர்பை துண்டித்தார். சித்தியும் மனைவி கமலாவும் பல கடிதங்கள் எழுதியும் குணா எந்தவித பதிலும் போடுவதில்லை அவவ இருக்கிறாரா? இல்லையா? எனக் கூட தெரியாத நிலையில் தான் கமலா சீலனிடம் தனக்கு நண்பன் குமரனிடம் உதவி செய்யும்படி சீலனை கேட்கும்படி கேட்டாள்.

என்ன நிலையில் இருக்கிறார் என அறிய நண்பன் குமரனிடம் சீலன் உதவி கேட்டான். நண்பன் கேட்டதற்காக குமரன் பலசிரமங் களுக்கு மத்தியில் பலநாள் தேடலின் பின் ஒரு தமிழர் விழாவில் கண்டு பிடிக்க முடிந்தது. அங்கு அவர் தனது கூட்டாளிகளுடன் குடிபோதையில்தான் இருப்பதை அறிந்த குமரன் தனது நண்பன் மூலம் அடையாளம் கண்டுபிடித்தான்.

மிகுந்த சிரமப்பட்டு அவரை தன்னுடன் அழைத்து அவரை மெல்ல மெல்ல குடிப்பழக்கத்தில் இருந்து மீட்ட பின்புதான் கமலா வும் பிரான்ஸ் வர முடிந்தது. இதற்கெல்லாம் குமரனுக்கு சீலன் பல முறை நன்றி சொல்லியிப்பான். ஆனால் பிரானஸ் சென்ற கமலா சீலனை முற்றாக மறந்து எதுவித தொடர்புமற்று பல வருடங்களாகி விட்டது.

தற்போது மீண்டும் ஒரு உதவிக்காகவே சித்தி சீலனை அணுகி யிருப்பதும், அதனால் மீண்டும் குமரனிடம் உதவி கேட்பது சீலனுக்கு வெட்கமாக இருந்தது. இருந்தாலும் அவனை விட்டால் அவனுக்கு தெரிந்தவர்கள் சிலர் இருந்தாலும் உதவி செய்பவனாக குமரன்தான் இருக்கிறான்.

“என்ன சீலன் யோசனை கதையும்” என தவத்தார் சீலனின் சிந்தனையை கலைத்தார்.

“ஓம் அண்ணை கதைக்கிறன்” என்றபடி தொடர்பு எண்ணை அழுத்தி குமரனுடன் கதைத்தான்.

குமரனிடம் தனது மச்சான் குணா இறந்தையும் கமலாவிற்கு உதவி செய்யும்படியும் கேட்டான்.

குமரன் என்ன குணா இறந்துவிட்டாரா? என ஆச்சரியப் பட்டான். பல வருடம் தொடர்பு இல்லாததால் கமலாவின் புதிய முகவரி பெற்று உதவிக்கு விரைந்தான்.

சீலன் கமலாவிற்கும் தொலைபேசியில் கதைத்து ஆறுதல் கூறி குமரன் உதவிக்கு வருவதாக கூறினான். அப்போது தான் கமலா தனது எல்லை மீறிய கவலையை சீலனிடம் கூறி ஓவென அழுதாள்.

குடிக்கு அடிமையாகிய எமது உறவுகள் பலர் உயிர் பாது காப்பு தேடிவந்து இடத்தில் உயிரை வெகு விரைவில் இழந்து விடுகிறார்களே என தனக்குள் நொந்து கொண்டான் சீலன்.

தம்பி நாங்கள் போட்டு வாறம் என இராமலிங்கமும் தவத்தாரும் சென்றார்கள்.

நாட்கள் கிழமைகளாக, மாதங்களாக ஓடியது.

ஒரு நாள் சீலனுக்கு ஒரு கடிதம் வந்ததாக முகாம் பொறுப் பாளர் கொடுத்தார்.

சீலன் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்றாலும் வயதில் குறைந்தவன் என்பதாலும் அவனது சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டதாலும் அவனை அகதியாக ஏற்று அனுமதி வழங்கிய கடிதம் வந்திருந்தது. அதை அவனே வாசித்து விளங்கி கொள்ளும் அளவுக்கு டொச் மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தான்.

தனது வாழ்வில் ஒரு திருப்பம் வந்ததாக சீலன் உணர்ந்தான். தன்னைச் சுற்றியிருந்த பல தடைகள் உடைபட்ட உணர்வுபெற்றான்.

உடனடியாக தனது தாயார் தங்கைக்கு தொலைபேசியில் அந்த செய்தியை சொல்லி இனிக் கவலையில்லையம்மா. இங்கே ஒரு நல்ல வேலை வாய்ப்பும் பெறலாம் என்ற நல்லொரு செய்தியும் கேட்டு அந்த தாயின் மனம் குளிரச் செய்தது.

பல நாட்களுக்கு பின் இந்த செய்தியை சொல்லவென தவத்தார் வீட்டிற்கு சென்றான் சீலன். அங்கு தவத்தார் இருக்க வில்லை. என்ன செய்வது என யோசித்தவேளை தம்பி சீலன் என இராமலிங்கம் கூப்பிட்டுக் கொண்டு சீலன் அருகில் வந்து“யாரைத் தேடுகிறீர்? தவத்தையோ?”

“ஓம் அண்ணை”

“அவர் இப்ப இஞ்சை இல்லத் தம்பி. முரளியுடன் வேறு வீட்டில் இருக்கிறார்” என்றார்.

“அப்படியா? எனக்கு தெரியாது”

“இப்ப மூன்று கிழமைதான் தம்பி”

“சரியண்ணை அவர்கள் விலாசம் இருக்கோ”

இராமலிங்கம் முகவரி சொல்ல சீலன் மிக ஆர்வமாக தவம் வீடு நோக்கி சென்றான். வீட்டை ஒருவாறு கண்டு பிடித்து அழைப்பு மணியை அடித்தான்.

முரளி புன்னகையுடன் கலோ சீலன்! என்ன இந்தப்பக்கம்? வாரும், உள்ளளே வாரும் என வரவேற்றான்.

“எப்பிடி முகாம் வாழ்க்கை போகுது அங்கு நல்ல வசதியோ?”

“இல்லை முரளி. ஏதோ வந்துவிட்டம், சமாளிக்கதானே வேண்டும். அது சரி தவத்தார் எங்கே போய்விட்டார்?”

“ஏன் எங்களுடன் கதைக்கமாட்டியளோ”

“அப்படி இல்லை முரளி”

“அவர் ஒரு சின்ன வேலை ஒன்று செய்கிறார். இப்ப வருவார்” என்றான் முரளி.

“அது சரி முரளி இனி என்ன செய்வதாக ஐடியா?”

“கனடா போவம் என்று யோசிக்கிறன். அங்கு எனது தம்பி ஒருவன் இருக்கிறான். அங்கு வரும்படி கேட்கிறான். நானும் அது நல்லது என நினைக்கிறன்.

“அது நல்லதுதான். இங்கே இருந்தால் அந்த திருமண நினைவு உங்களை டிஸ்ரொப் செய்யும் தானே. அங்கு சென்றால் காலப் போக்கில் மறந்துவிடலாம்.

“சீலன் என்னுடைய தம்பி சொன்னான்” உன்னுடைய பத்மகலா இப்ப கனடாவில்தான் இருக்கிறதாக. என்னைப் பற்றி விசாரித்து தம்பியிடம் கேட்டு எனது நம்பர் பெற்று என்னுடன் சென்ற கிழமை கதைத்தவ. அப்பொழுது உங்களை பற்றி நான் சொன்னேன். ஒரு நிமிடம் அப்படியே கதைக்காமல் நின்றவா”

“..................................“

“என்ன நான் கதைக்கிறன். எந்தவித றீஅக்சனும் இல்லாமல் இருக்கிறீங்கள்”

“நான் என்ன சொல்ல... விழுதல் என்பது... மனித இயல்பு”

“கலா கனடா எப்படி வந்தவ என தெரியாது தானே?”

சீலன் எதவும் பேச விரும்பாதவனாக மௌனமாக இருந்தான். அது ஒரு பெரிய கதையாம்.

“தவம் அண்ணை இப்ப வருவாரோ” கதையை திசை திருப்பினான் சீலன்.

“இப்ப முகாம் நம்பரில் உங்களுடன் கதைக்கலாம் தானே?”

“அதே நம்பர்தான் ஆனால் சிலவேளை மிகச் சினமாக இருக்கும் மற்றைய நாட்டுக்காரர் எப்பவும் போன் தான் பிறீயா விடாதுகள்.”

“அம்மா பலதடவை போன் எடுத்து என்னுடன் கதைக்க முடியவில்லையாம். ஆதனால் நான் எடுத்துதான் கதைக்கிறனான் என்றான்.

அப்போது தவம் சில கடைச் சாமான்களுடன் உள்ளே நுழைந்தார்.

“தம்பி சீலன் எப்படி வந்தாய் இங்கு நான் உனக்கு வீடு

மாறியதை சொல்லலாம் என்னால் இந்த வேலையால் முடியவில்லை. மன்னித்துக் கொள்" என்றார்.

"அதெல்லாம் என்ன மன்னிப்பு கேட்கிறது. அங்கே போய் இராமலிங்கம் சொல்லி இங்க வந்தனான்"

"என்னவிசயம்"

"அண்ணை எனக்கு அக்சப்பண்ணிட்டாங்கள். நேற்று கடிதம் வந்தது"

"ஓ...! இது பெரிய விசயம் தம்பி. உம்மட நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என சீலனுக்கு வாழ்த்துக் கூறினார்.

"அப்ப இன்டைக்கு இங்கு புட்டவித்து பாட்டி கொண்டாடு வம்" என்று முரளி கூறினான்.

"என்ன பார்ட்டியோ?"

"அதுதான் தம்பி ரீ பார்ட்டி. நான் புட்டவித்து ஒரு கோழிக் குழம்பு வைக்கிறன். சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேனும்" என்றார் தவத்தார்.

"சரியண்ணை உங்கள் விருப்பம்" என்றான் சீலன்.

என்ன ஒரு நல்ல மனசு என் சந்தேசத்தை தங்கள் சந்தோசமாக நினைக்கிறார்கள் என மனதுக்குள் பெருமைப்பட்டான் சீலன்.

மாலை 5 மணி. முகாம் முன்பகுதியில் சீலன் தான் இன்று தமிழ்கடையில் வாங்கிவந்த குமுதம் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் தங்கள் தங்கள் மொழியில் சத்தமாகக் கதைத்தக்கொண்டிருந்தார்கள்.

முகாம் பொதுத் தொலைபேசி அலறியது. ஆனால் சீலன் காதில் அது ஒரு நல்ல இசை போன்று கேட்டது. திரும்பிப்பார்த் தான்.

விளையாடிக் கொண்டிருந்த ஒரு அரேபிய சிறுமி தொலை பேசியை எடுத்து கலோ என்றாள். அவளுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதால் மறுமுனையில் கதைத்தது விளங்கியது. உடனே சீலன் பக்கம் திரும்பி கலோ சிறீலங்கா! கலோ சிறீலங்கா! என்றாள்.

அங்கு சீலனைத்தவிர சிறீலங்கவை சேர்ந்த யாரும் இல்லாத தால் தனக்குத்தான் என சீலன் எழுந்து சென்று போனைப் பெற்று காதில் வைத்து கலோ என்றான்.

மறுமுனையில் "மிஸ்டர் சீலன் பிளீஸ்" ஒரு பெண்குரல்.

யாராக இருக்கும் என சீலன் மனம் ஏங்க,

“நான் சீலன் தான் நீங்கள்”

மௌனம் ஆனால் பெருமூச்சு கேட்டது. “கலோ யாரது நீங்கள்?”

மீண்டும் மௌனம்...

“கலோ யாரது சொல்லுங்க இல்லை... நான் வைக்கட்டுமா”

“இல்லை இல்லை”

“நான்... நான்... உங்கள் பத்மகலா. கனடாவில் இருந்து கதைக்கிறன்”

ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்து போனான் சீலன்.

சற்றும் எதிர்பார்க்காத ஆனந்த அதிர்ச்சியைத் தந்தது மறுபக்கம் கேட்ட அந்த இனிய குரல்.

“நான்... நான்... உங்கள் பத்மகலா. கனடாவில் இருந்து கதைக்கிறன்” அவனால் நம்பமுடியாமல் இருந்தது.

கலாவா! எப்படி இவ்வளவு இன்னல்களையும் தாங்கிக் கொண்டு அவள் கனடாவிற்கு வந்தாள் என்பதைக் கூட சிந்திக்காமல் “உங்கள் பத்மகலா” என்ற அவளது வார்த்தைகள்தான் அவனைக் குளிர வைத்தது. அந்த இரண்டு வார்த்தைகள் மட்டும் செவிகளில் விழுந்து அவனது உயிரை வருடிச் சென்று உச்சியைக் குளிரவைத்தது. இவ்வளவு காலமும் அவள் எங்கிருக்கிறாள் என்று அறிய முடியாத துடிப்பு அந்தக் குரலைக் கேட்டதும் பேசமுடியாது வாயை அடைத்துக் கொண்டது. இப்படி ஒரு வார்த்தைக்காகத்தானே இத்தனை காலமும் அவன் ஏங்கிக் கொண்டிருந்தான். கற்பனையில் பறந்து கொண்டிருந்த இவனது மௌனம் மறுபக்கத்தில் அவளை அமைதி இழக்க வைத்தது.

“சீலன் நீங்கள் தானே, ஏன் மௌனமாக இருக்கிறீங்க, கதையுங்களேன்”

“ஓம்... ஓம்... கலா நான் தான். என்னால நம்பமுடியவில்லை. நீ எப்படி இருக்கிறாய்?” தன்னைத் தானே சுதாரித்துக் கொண்டு உரிமையோடு அழைப்பது போல் ஒருமையில் அழைத்தான்.

“நல்லாய் இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீங்கள்?”

“நலம் நலமறிய ஆவல்.”

“கேட்கவில்லை. என்ன சொன்னீங்க?” வேண்டுமென்றே கேட்டாள்.

“நீ இங்கு சுகமே... நான் அங்கு சுகமா...?” அவன் வாய்க்குள்

மெல்ல அந்தப் பாடலை முணுமுணுத்த போது இருவரும் தங்களை அறியாமல் சிரித்து விட்டு சிறிது நேரம் பழைய நினைவுகளில் மூழ்கிப் போயிருந்தனர்.

பத்மகலாவைப் போலவே சீலனும் நன்றாகப் பாடக் கூடியவன். மருத்துவக்கல்லூரி நிகழ்ச்சி ஒன்றுக்காக இருவரும் முதன் முதலாக மேடையில் பாடிய பாட்டு அதுதான் என்பதால் அவர்களால் அந்தப் பாடலை மறக்க முடியாமல் இருந்தது. எப்பொழுதுமே முதற்பார்வை, முதல் சந்திப்பு, முதற்தொடுகை என்று எல்லாமே காதலர்களுக்கு இனிமையானதுதான். ஏனென்றால் காதலர்கள் காதலர்களாய் இருக்கும்வரை எப்பொழுதும் நல்ல பக்கத்தையே பார்த்துப் பழகுவதுண்டு. மறுபக்கம் பார்ப்பதில்லை. அதனால்தான் காலாகாலமாய்த் தொடரும் காதலைப்பற்றி "காதலுக்குக் கண்ணில்லை" என்று நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தைக் கொண்டு சொல்லியிருக்கலாம்.

"எப்போ கனடா வந்தாய்? அங்கே யாருடன் தங்கியிருக்கின்றாய் கலா...?" படபடவென்று கேள்விகளை அடுக்கினான் சீலன்.

"அக்கா குடும்பத்தோடுதான் தங்கியிருக்கின்றேன். அக்கா, அத்தான், பிள்ளைகள் எல்லோருமே ரொம்ப பாசமாய் இருக்கிறாங்கள்" என்றாள் கலா.

"அப்படியா? படிப்பெல்லாம் எப்படிப் போகிறது கலா? முடிஞ்சுதா? டாக்டர் ஆகிவிட்டாயா?" என்றான் சீலன்.

கலாவிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. மௌனம் சற்று நீடித்தது.

"கலா என்ன மௌனமாகிவிட்டாய்... ஏன் என்னாச்சு?" ஆவலுடன் கேட்டான்.

"இல்லை சீலன். நாட்டு நிலமை தெரிந்ததுதானே! மேற்கொண்டு அங்கே என்னால் படிக்க முடியவில்லை. டாக்டர் ஆக வேண்டும் என்ற என்னுடைய கனவுகளை எல்லாம் அவங்கதான் கலைச்சிட்டாங்களே."

சீலனிடம் இருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

"உண்மைதான் கலா. உன்னுடைய கனவுகள் மட்டுமல்ல ஒவ்வொருவரின் கனவுகளையும் திட்டமிட்டே கலைத்து விட்டார்கள். சுருங்கச் சொன்னால் சொந்த பந்தத்தை மட்டுமல்ல நாங்கள் வாழ்க்கையையும் தொலைத்து விட்டு திக்குத்திக்காய் இன்று

அகதிகளாய் நிற்கின்றோம்” உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான் சீலன்.

“ஓம் சீலன். இங்கேயும் அதே நிலைதான். என்ன இருந்தாலும் தஞ்சம் தந்த புகுந்த நாட்டை மறக்க முடியாதல்லவா? அவர்களுக்கு ஏற்றமாதிரி நாங்களும் அனுசரித்துப் போவது நல்லதல்லவா?”

“நிச்சயமாக, கடைசிவரை இவர்களுக்கு நாங்கள் நன்றி உள்ளவர்களாக இருப்போம். உலகமெல்லாம் இன்று தமிழர்கள் பரந்து வாழ்வதற்குக் காரணம் இந்த உள்நாட்டுப் போர்தான். தீமைகள் இருந்தாலும் அதில் சில நன்மைகளும் உண்டு. சரி கலா.., இனிமேல் என்ன செய்வதாக யோசனை?”

“பாதியில் விட்ட படிப்பைத்தான் இனித் தொடர வேண்டும். இங்கே மருத்துவக்கல்லூரயில் இடம் எடுப்பது என்பது மிகவும் கஸ்டம். ஆனால் மேற்கிந்திய தீவுகளில் உள்ள அமெரிக்க வைத்திய கல்லூரியில் தொடர்ந்து மிகுதியைப் படித்து முடிக்கலாம் என்று சொன்னார்கள். விண்ணப்பித்திருக்கின்றேன். செலவுதான் கொஞ்சம் அதிகமாகுமாம். அதுதான் யோசனையாக இருக்கின்றது”அவள் குரலில் எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை தெரிந்தது.

“கலா இந்த நிலையில் உனக்கு உதவி செய்ய முடிய வில்லையே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கின்றது” வேலை யற்ற நிலையில் அவளது லட்சியத்தை நிறைவேற்றத் தன்னால் முடியவில்லையே என்ற ஆதங்கம் அவனுக்கிருந்தது.

“நான் இப்ப உங்களை உதவி செய்யுங்க என்று கேட்டேனா?”

“இல்லை கலா, உதவிகூடச் செய்ய முடியாத நிலைக்குப் போயிட்டேனே என்று நினைக்கத்தான் மனசுக்கு வேதனையாக இருக்கிறது”

“இல்லை சீலன் மனதைத் தளரவிடாதையுங்கோ. எனக்குத் தெரியும் உங்களால எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இன்றைக்கு இல்லாவிட்டாலும் உங்கடை நல்ல மனசுக்கு ஒரு நாள் நீங்க நல்லா இருப்பீங்க. புகுந்த மண்ணில் அதற் கான எல்லா வழிகளும் திறந்தே இருக்கிறது. உங்களால் முடியும் சீலன்.!”

அவள் கொடுத்த நம்பிக்கை அவனுக்குள் உற்சாக ஊற்றை வரவழைத்தது. இந்த வயதில் பிடித்தமான ஒரு பெண்ணின் வார்த்தைகள் எப்பொழுதும் ஒருவனுக்கு உயிரூட்டுவதாகவே இருக்கும். அதுவே சில சமயங்களில் அவனது எதிர் காலத்தை

நிர்ணயிப்பதாகவும் இருக்கலாம்.

"நான் காத்திருப்பேன் சீலன்."

"உண்மையாகத்தான் சொல்கிறாயா கலா...?" மீண்டும் வார்த்தைகளால் அவனது மனதைத் தொட்டாள் பத்மகலா. சீலன் அப்படியே உருகிப்போனான். ஒரு காதலியின் வார்த்தைகளுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதைக் காலாகாலமாய் சரித்திரம் சொல்லிக் கொண்டுதானே இருக்கிறது. சீலனும் அதற்கு விதிவில கல்லவே..!

"நீங்கதானே அடிக்கடி சொல்லுவீங்க, விழுகிறது ஒன்றும் தப்பில்லை. விழுந்தவங்க எழும்பாமல் இருக்கிறதுதான் பெரிய தப்பு என்று. அது உங்களுக்கும் பொருந்தும் தானே?"

"நிச்சயமாய் நான் விழுந்து கிடக்கமாட்டேன். சீக்கிரம் எழுந்து காட்டுவேன் கலா..!" வார்த்தைகளில் உறுதி தெரிந்தது. அடுத்த வாரம் மீண்டும் தொலைபேசியில் அழைப்பதாகச் சொல்லிப் பத்மகலா விடை பெற்றாள். யாரிடமிருந்து தனது தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டாள் என்பதைக் கேட்க மறந்து விட்டதைப் பின்புதான் சீலன் நினைத்துப் பார்த்தான்.

முதலில் வேலை ஒன்று தேடவேண்டும். அப்புறம் கொஞ்சமாவது பணம் சேகரித்து பத்மகலாவிற்கு அவளது படிப்புச் செலவிற்காவது அனுப்ப வேண்டும். ஊருக்குப் பணம் அனுப்பி காணியை மீட்டெடுக்க வேண்டும். தங்கையின் திருமணம் பெரிய பொறுப்புத்தான். ஆனால் திட்மிட்டு ஒவ்வொன்றாகச் செய்து முடிக்க வேண்டும். அந்த நிமிடமே தனது எதிர்காலம் பற்றி அவன் தனக்குள் முடிவெடுத்துக் கொண்டான்.

***

முரளியின் மாமனார் குடும்பத்தினர் கனடாவில் இருந்தார்கள். பத்மகலாவின் அக்காவின் குடும்பமும் அவர்களின் குடும்பமும் ஏற்கனவே ஒருவரை ஒருவர் அறிந்திருந்தனர். முரளியின் திருமணம் ஏமாற்றத்தில் முடிந்ததை இவர்கள் அறிந்திருந்தனர். அன்று வெள்ளிக்கிழமை றிச்மன்கில் விநாயகர் ஆலயத்திற்கு கலா வின் அத்தான் குமார் சென்ற போது அங்கே மாமாவின் குடும்பத்தை சந்தித்துக் கொண்டார். வாராவாரம் சந்திப்பதற்கு ஏற்ற பொது இடமாகக் கோயில்தான் இருந்தது. பூசை முடிந்து பிரசாதம் எடுப்ப தற்காக நிலவறைக்குச் சென்றபோது மாமா குடும்பத்தவர்களும்

அங்கே நின்றிருந்தார்கள். என்னதான் தொலை பேசியில் மணித்தியாலக் கணக்காகக் கதைத்தாலும் நேரேபார்த்துக் கதைப்பதுபோல வராதல்லவா? எனவே வசதியான நேரம் பார்த்து வீட்டிற்கு வரும்படி மாமா குடும்பத்தினருக்கு குமார் அழைப்பு விடுத்திருந்தார்.

அவர்கள் சொன்ன நேரத்தில் இருந்து சற்றுத் தாமதமாகவே மாமா குடும்பத்தினர் வந்திருந்தனர்.

"சொறி, 401 நெடுஞ்சாலையில் ஒரு விபத்து. அதுதான் கொஞ்சம் தாமதமாய்போச்சு" தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டனர்.

"401 எப்பவுமே இப்படித்தான். அதை நம்பித் திட்டம் போட்டு எதையுமே செய்ய முடியாது."

"407 இல வந்திருக்கலாம். ஆனால் அது காசைத் திண்டிடும்"

போக்குவரத்து பற்றிய கதை சுகதுக்கம் விசாரிப்பதில் முடிந்தது. பத்மநிலா என்று கலாவின் அக்கா தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டாள். கலாவைப் போலவே அவளும் அழகாக இருந்தாள்.

"வீட்டிலே அப்படித்தான் கூப்பிடுவாங்களா?" முரளியின் மாமியார் கேட்டார்.

"இல்லை, நீங்கள் நிலா என்றே என்னைக் கூப்பிடலாம்" என்று தனது பெயரைச் சுருக்கிச் சொல்லிக் கொண்டாள்.

மருமகன் முரளி வைத்திய கலாநிதிக்குப் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பதாகவும் தற்சமயம் சுவிஸில் நிற்பதாகவும் விரைவில் கனடாவிற்கு வரவிருப்பதாகவும் சொன்னார்கள்.

சொன்னது போலவே பத்மகலா அடுத்தவாரம் தொலைபேசியில் அழைத்திருந்தாள். சீலன் அவளிடம் கேட்க நினைத்ததை உடனேயே கேட்டுவிட்டான்.

"அதுசரி, உனக்கு எப்படி என்னுடைய போன் நம்பர் கிடைச்சுது?" ஆவலுடன் கேட்டான் சீலன்.

"அதுவா? எங்களுடைய சீனியர் முரளியை ஞாபகம் இருக்கா? அவர் அங்கேதானே இருக்கிறார். அவர்தான் கொடுத்தார்." என்றாள் கலா.

"முரளியா?" சீலனின் மனதில் காரணமில்லாமல் இனம் தெரியாத பயம் பிடித்துக் கொண்டது.

"முரளியின் மாமா குடும்பத்தினர் இங்கே கனடாவில்தான் இருக்கிறார்கள். அவற்ரை தம்பியும் அவையோடதான் இருக்கி

றாராம். எங்கட அத்தான் குமாருக்கு அவர்களை ஏற்கனவே தெரியும். இப்போ எங்க குடும்ப நண்பராகி விட்டார்கள். போன கிழமை எங்க வீட்டிற்கு வந்திருந்தார்கள். முரளியின் கலியாணம் நின்று போனதைப் பற்றி எல்லாம் கதைத்தார்கள்."

"அப்படியா? வேறை என்ன கதைச்சினம்?

வேண்டாம் சீலன். அவை கதைத்ததை நான் கணக்கில் எடுக்க வில்லை. விட்டிடுங்கோ"

"நீ எதையோ சொல்லத் தயங்குகிறாய் கலா. என்ன என்று சொல்லேன் பிளீஸ்..!"

மறுபக்கத்தில் கலா தயங்கினாள்.

சொன்னால் சீலனின் மனம் நோகும். சொல்லாவிட்டால் எதையோ நான் மறைப்பதாக அவன் தப்பாக நினைக்கலாம். என்ன செய்வது என்பதில்தான் அவளது தயக்கம் இருந்தது.

"நான் தப்பாய் நினைக்க மாட்டேன். சொல்லு கலா."

"முரளிக்குக் கனடாவில்தான் பெண் பார்க்கிறாங்களாம். அதுவும் டாக்டருக்கு ஒரு டாக்டர் பெண் என்றால் நல்லதென்றும் அக்காவிடம் சொன்னாங்கள்." தயக்கத்தோடு சொன்னாள் கலா.

"அப்படி என்றால்?"

"மறைமுகமாக எதையோ கேட்கத்தான் இங்கே வந்திருந் தாங்கள் போல எனக்குத் தெரிஞ்சுது."

சீலனுக்குச் சில விசயங்கள் புரிய ஆரம்பமாச்சு. "டாக்டருக்கு டாக்டர்தான் மாச்சாகுமாம்" என்ற திருமணத்திற்கான புதிய அடை மொழி சீலனைச் சிந்திக்க வைத்தது.

இந்த முரளி நல்லவன் இல்லை என்பதை மருத்துவக் கல்லூரி யில் படிக்கும் போதே சீலன் அறிந்து கொண்டான். சீலனுக்கு முரளியைத் தெரியாது என்று முரளி நினைத்தாலும் சீலன் அவனை நன்கு அறிந்தே வைத்திருந்தான். சிலபேரை சிறிது நேரம் பழகிய உடனேயே அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைச் சிலரால் புரிந்து கொள்ள முடியும். சரியோ பிழையோ ஒருவரின் குணத்தைப் பற்றி ஓரளவு ஊகித்து வைக்கும் அந்தத் திறமை சீலனிடம் இருந்தது. வெளியிலே நண்பன் போலச் சிரித்துச் சிரித்து கதைத்து சந்தர்ப்பம் பார்த்து முதுகிலே குத்தக் கூடியவன் முரளி என்பதைச் சீலன் பல தடவைகளில் அவதானித்து இருக்கின்றான். முரளி ஏன் அவசிய மில்லாமல் பத்மகலாவின் வாழ்க்கைக்குள் மூக்கை நுழைக்கின்றான்

என்பதுதான் சீலனுக்கப் புரியாமல் இருந்தது.

கடைசியாக பத்மகலாவைச் சந்தித்த நிகழ்வு மனக் கண் முன்னால் நிழலாடியது. அவனது படிப்பு பாதியில் கலைந்து விட்டாலும் பத்மகலாவின் லட்சியமாவது நிறைவேற வேண்டும் என்று அப்போது வேண்டிக் கொண்டான். அடுத்த முறை உன்னைச் சந்திக்கும் போது "உன்னை ஒரு டாக்டராகவே பார்க்க வேண்டும்" என்று அவன் தனது விருப்பத்தை அவளிடம் அப்போது தெரிவித்திருந்தான். விருப்பங்கள் எதுவுமே நிறைவேறாதபடி யார் போட்ட சாபமோ எல்லாமே நிலை குலைந்து போயிருந்தது. திக்குத் திக்காய் உறவுகளைச் சொந்த பந்தங்களைப் பிரித்துப் போட்டு விட்டு விதி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அகதி என்ற பெயர் சுமந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நாடுநாடாய் ஓட வேண்டிய அவலநிலை ஈழத்தமிழனுக்கு வந்தது. அந்த அவலத்திலும் சில நன்மைகள் கிடைத்தன. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதற் காகச் சிலர் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டனர்.

மருத்துவக்கல்லூரி இறுதியாண்டு மாணவனான முரளிக்கு முதலாம் ஆண்டு மாணவியான பத்மகலாவில் ஒரு கண் இருந்தது. அவளது அழகும் அடக்கமும் அவனையும் கவர்ந்ததில் வியப்பில்லை. முதலாம் ஆண்டு மாணவர்களான சீலனும் பத்மகலாவும் அடிக்கடி ஒன்றாகத் திரிவதை முரளி அவதானித்துக் கொண்டே இருந்தான். அவர்களுடன் நட்போடு பழகுது போல நடித்தாலும் சீலனை அவளிடம் இருந்து தனிமைப்படுத்தவே சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்தான். எத்தனையோ வழிகளில் அவன் முயன்றாலும் அது பலன் தரவில்லை. சீலனோ மாணவர் தலைவனாக இருந்ததால் எல்லா மாணவர்களுடனும் அன்பாகப் பழகினான். சீலன் மீது இனம்புரியாத ஏதோ ஒருவித வெறுப்பு முரளிக்கு இருந்தது.

ஒரே பெண்ணையோ அல்லது ஆணையோ இருவரு விரும்பும்போது அவர்களுக்குள் இத்தகைய பொறாமை ஏற்படுவது சகஜம்தான். சிலர் அடிதடிக்குப் போவார்கள். சிலர் மௌனமாக இருந்து சாதிப்பார்கள். முரளியோ இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவன். அதனால் சீலனை எப்படியாவது ஓரம் கட்டவேண்டும் என்று முரளி நினைத்தான். எப்படியாவது சீலனை மாட்டி விடுவதற்கு ஏதாவது காரணம் கிடைக்குமா என்று எதிர் பார்த்திருந்த போதுதான்

அவனுக்கு எதிர்பாராத ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அது எவ்வளவு தவறான முடிவு என்று அவனது மனச்சாட்சி சொன்னாலும் பத்மகலா மீது வைத்திருந்த அவனது ஒருதலைக் காதல் அந்தத் தவற்றைச் செய்ய அவனைத் தூண்டியது. "சொல்லாத காதல் ஒருபோதும் கனிவ தில்லை" என்பார்கள். உண்மைதான். பத்மகலா மீது கொண்ட ஒருதலைக் காதலால் முரளி தனது மனச்சாட்சியின் கண்களை இறுக மூடிக்கொண்டு செயலாற்றினான்.

இலங்கையில் இயக்கச் சண்டைகள் காரணமாக ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்த காலமது. பல்கலைக் கழகத்திலும் அது ஒரு தொற்று நோய் போல பரவிக் கொண்டது. பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டவர்கள் எப்பொழுதும் எங்கேயும் இருப்பார்கள் என்பதைப் பல தடவைகள் கண்முன்னால் நிரூபித்த நிகழ்ச்சிகள் பல அங்கே அரங்கேறின. அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் சீலன் பொலிசாரிடம் மாட்டிக் கொண்டான். சீலன் அப்படி இயக்கம் ஒன்றிலும் பெரிதாக ஈடுபாடு கொள்ளாவிட்டாலும் மாணவத் தலைவனாக இருந்ததால் வலிய மாட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. சீலன் வலிய மாட்டிக் கொண்டான் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அப்படி மாட்டிக் கொள்வ தற்குத் தகவல் கொடுத்தது வேறுயாருமல்ல முரளிதான் என்பது எவருக்குமே தெரியவில்லை.

தகவலைப் புலன் விசாரனை அதிகாரிகளிடம் கொடுத்து விட்டு எதுவுமே தெரியாதது போல முரளி நடந்து கொண்டான். வழமைபோல எல்லோரிடமும் அவன் கலகலப்பாகப் பேசி நடித்ததால் யாருமே அவன் மீது சந்தேகம் கொள்ளவில்லை. சீலன் இல்லாத காலத்தில் நட்போடு பழகுவது போலப் பழகிப் பத்ம கலாவை அடைய முரளி எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தான். எதுவுமே பலன் தரவில்லை. பத்மகலாவோ எட்டாத கனியாகவே அவனுக்கு இருந்தாள். அதனால் மனசுக்குள் வெகுண்டெழுந்தவன் தனக்குக் கிடைக்காவிட்டாலும் பத்மகலா சீலனுக்குக் கிடைக்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

சீலன் சிறைக்குச் சென்றதால் பத்மகலாவிடம் இருந்து பிரிய வேண்டிய சூழ்நிலை வந்தது. சாதாரண பிரிவல்ல பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சீலன் கைது செய்யப்பட்டதால் அவனுடன் தொடர்பு கொள்ள எல்லோரும் தயங்கினார்கள். சீலனை எங்கே

வைத்திருக்கிறார்கள் என்பதைக் கூட அறிந்து கொள்வது கடினமாக இருந்தது. உண்மையான காதல் என்றால் பிரிவு என்பது காதலர்களை மேலும் மேலும் ஒன்றாகச் சேர வைத்திருக்கும் அனால் வெறும் போலியான காதல் என்றால் பிரிவு அவர்களைப் பிரித்து விடும். காதல் என்று அடம் பிடித்த எத்தனையோ காதலர்களைப் பெற்றோர்கள் இப்படித்தான் பிரித்து வைத்து நிரந்தரமாகவே அந்தக் காதலுக்குச் சமாதி கட்டிய கதைகள் பல உண்டு. உண்மையைச் சொன்னால் அது காதலே அல்ல. ஒருவரின் உடல் மீது கொண்ட வெறும் மோகம் அதாவது இன்பாக்சுவேஷன் என்று தான் அதைச் சொல்லவேண்டும்.

சீலன் சென்ற இடமெல்லாம் முரளி தொடர்ந்து கொண்டேயிருந்தான். உத்தியோகம் புருஷலட்சணம் என்பது போலப் படிப்பும் பதவியும் இருந்தால்தான் இந்த உலகம் மதிக்கும் என்ற நவீன தத்துவத்தை எதிர்கொள்ளச் சீலன் தயாரானான். "இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே" என்பதைப் புரிந்து கொண்டு கடின உழைப்பிற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான் சீலன். ஆனால் காலம் அவனுக்காகக் காத்திருக்கத் தயாராக இல்லை. சற்றும் எதிர்பாராத அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று அவனுக்காகப் பத்மகலாவிடம் இருந்தது.

கனடாவுக்கு தொலைபேசியில் கதைத்த பின்பு எதிலுமே பிடிப்பில்லாமல் நடந்து கொண்டிருந்தான் சீலன்.

அவன் முன் சொர்க்கத்தின் பிம்பமாக சுவிற்சலாந்து...

வாழ்க்கைப் பாரம் தோள்களை அழுத்தியதால் அந்த மூட்டையை சுமக்க மனமின்றி இயற்கையை அவதானித்தன கண்கள்... நீர் சுனைகளில் இருந்து விசுறும் தண்ணீர்... ஆகாயத்தை நோக்கி பொழியும் மழையல்லவா...

நீரைக்கிழித்தோடும் வண்ண வண்ணமான இயந்திரப்படகுகள், பாற்குடம் பொங்கியது போல பொங்கிச் சிரிக்கும் குளிர் நாட்டில் பிறந்த குமரிகள்... நல்ல மனம்போல பூத்து காற்றில் கன்னத்தோடு கன்னம் உரசும் மலர்க் கொத்துக்கள்... பூமிப்பந்தில் கோடை வரைந்த ஓவியமாய் சுவிஸ் நாடே பூப்படைந்திருந்தது..

தூரத்தே தெரியும் அழகான அல்ப்ஸ் மலையின் கூரிய சிகரங்கள்தான் அந்த இயற்கை மகளின் மார்பகங்களோ... அவனுக்காக பருவமெய்தி நிற்கும் அந்த அழகியைப் பார்க்காது அன்றாடப் பிரச்சனை என்னும் சின்னச்சின்னப் பிணங்களை மனதில் சுமந்து

குருடனாகிவிட்டான் சீலன்..

சுவிஸ் மண்ணில் கால்வைத்த பின் இப்படியொரு கற்பனை வராவிட்டால் அவன் மனித ஜடம்.. என்று நோர்வேஜிய கவிஞன் ஒருவன் சொன்னது நினைவில் வந்தது..

திருக்கை வாலினால் யாரோ அவன் முதுகில் குறியிழுப்பது போன்ற வலியொன்று குருவி வானமாய் ஓடி மறைந்தது..

ஒரு யாழ்ப்பாணத்து கிடுகு வேலிக்குள் செருகிவைத்த கொக்கச் சத்தகம்போல அவன் மனதும் வளைந்து கிடப்பது அந்த இயற்கையின் வெளிச்சத்தில் தெரியாமல் தெரிந்தது.

இதுதான் சுவிஸ் மண்ணில் கால் வைத்த பின் அவனுக்குத் தெரிந்த முதல் வெளிச்சம்..

பத்மகலா, வில்லனான முரளி, காதல், பறிபோன செல்லாக் காசு டாக்டர் படிப்பு, பல்கலைக்கழகம், காட்டிக்கொடுப்பு, சிறை, போராட்டம், புலப் பெயர்வு என்று இதுவரை சுழன்றுவிட்ட தனது வாழ்வை ஒரு தடவை ஒரே அச்சாணியில் கோர்த்து கடகடவெனச் சுழலவிட்டான்..

செக்குமாடொன்று சுத்தோ சுத்தென்று சுற்றுவது தெரிந்தது.. இப்படியே விட்டால் இந்த மாடு திரும்பத்திரும்ப இதே வழியில்தான் சுற்றும்...

புலம் பெயர்ந்தும் தோள்களை அழுத்தும் செக்கிலிருந்து வாழ்வை விடுவிப்பதே சரியென்று மனதில் கேட்டது ஓர் ஒலி...

வெறுமையாகக்கிடந்த ஒரு வீதியோர வாங்கில் அமர்ந்து தன்னை மறந்துவிட்டான்..

எல்லாம் நின்றுவிட்டது போன்ற பிரமை.. ஒன்றுமே இல்லாத வெற்றிடத்தில் நின்று மனது வாழ்வைப் பார்த்தது...

சாப்பாட்டு மேசையில் விரித்திருக்கும் கறி கொட்டிய கடாதாசியை சுருட்டிக் குப்பையில் வீசியதைப்போல மனது இது வரை நடந்த அனைத்தையும் சுருட்டிக் குப்பையில் வீசிவிட்டு.. ஒரே நொடியில் புத்தம்புதுப் பளிங்கு மேசை போல பளபளத்தபடி சரேலெனச் சுழன்றது...

எல்லாம் தொலைந்தது.. பாரமில்லாத தேகம் பஞ்சு போல இருந்தது.. இனி வீடு போகலாமா..?

பனம்பழம் விழப்போகும் நேரம் பார்த்து பறந்துவரும் காகம்போல அவன் வீட்டுக்குப் போக நினைக்கவும் பேருந்து வண்டி

ஒன்று ஏன் அவன் முன்னால் நின்றது..?

வரவேண்டிய வண்டி வந்துவிட்டது.. பாய்ந்து ஏறி.. உள்ளே நடந்தான்..

ஆங்காங்கு வெள்ளை நிற மனிதர்கள், கிழவிகள்... கிழவர்கள்... நடுத்தர வயது... இளம் பெண்கள் சிலர்..

தனியாக இருக்க விரும்பினான்... ஆசனங்கள் எதுவும் இல்லை...

யாரோ ஒருவரின் பக்கத்தில் அமரத்தான் வேண்டும்... அவனை ஒரு இளம் பெண் கடைக்கண்ணால் பார்த்தாள்..

அவள் விழிகள் கண்டிப்பாக அவன் தனக்கு அருகில்தான் இருக்கப்போகிறான் என்று கணக்குப்போட்டிருக்க வேண்டும்...

அவளுக்கு அடுத்த ஆசனத்தில் தலையில் தொப்பி குறுந்தாடியுடன் அவனைப்போலவே ஒருவர்.. தமிழராக இருக்கலாம்... ஆவலை அடக்கி அவளை ஓர் எட்டுத்தாண்டி அவருக்குப் பக்கத்தில் இருந்தான்...

எதிரே வந்த பச்சை விளக்கில் வண்டி வலது பக்கமாகத் திரும்பியது...

அப்போதுதான் அந்த மனிதரைத் திரும்பிப் பார்க்க வசதியாக இருந்தது..

இப்படி எத்தனை திருப்பங்கள் வாழ்வில்...

எங்கோ பார்த்த போலவும்... பார்க்காதது போலவும் இருந்தது... நினைவுக்கதிர்களால் உருவத்தைப் பற்ற முடியவில்லை... உருகிய பனிக்கட்டியாய் வழுகியது.

இப்போது பேருந்து மறுபக்கமாகத் திரும்பியது...

இது அந்த மனிதர் அவனைப் பார்க்க வேண்டிய திருப்பம்... பார்த்தார்... அவரின் நினைவுக்கதிர்களும் ஒரு படி முன்னே நகர்ந்தது... பிடிக்க முடியவில்லை..

இப்படிப் பல திருப்பங்கள் இங்கும் அங்குமாக... இருவருக்குமே தெரிகிறது ஆனால் பற்றிக்கொள்ள இயலவில்லை.

தீர்க்கமான கண்கள்... காலத்தைத் துழாவி ஓடும் திறப்பண அலகுகள் போன்ற முன்னேறும் பார்வை... கட்டையும், நெட்டையுமில்லா உருவம்... திராவிட நாசி... இந்த மனிதரை எங்கோ பார்த்திருக்கிறேனே..

அவர் முந்திக்கொண்டார்... நீ சீலன்தானே... ஜப்னா

யூனிவர்சிட்டி மெடிக்கல் பக்கல்டி..

அதற்குமேல் தாமதிக்க வேண்டியதில்லை அவருடைய குரலை வைத்து பிடித்துவிட்டான்... சேர் நீங்கள் புரொபெசர் குமாரவேல்தானே...

இதே சீன் யாழ்ப்பாணத்து 751 இலக்க பஸ்சில நடந்திருந்தா ஆளையாள் அடையாளம் கண்டிருப்பம்... மனிதர்கள் ஒன்று பேருந்துகள் வேறு... கொய்யாப்பழம் மாமரத்தில தொங்கினா அடையாளம் காண சிரமாத்தான் இருக்கும்.

நீங்கள்...

சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தில ஒரு வாரம் அதிதி பேராசிரியரா பணியாற்றிவிட்டு போனவாரம் சுவிற்சலாந்து வந்தனான்.. நாளைக்கு சுவிஸ் அல்ப்ஸ் மலை... அடுத்த நாள் கனடா பயணம்...

அப்ப நீங்கள் தங்கியிருக்கிறது...

ஹோட்டல் அல்ப்ஸ்.. நான் எப்ப யூரோப் வந்தாலும் இந்த அழகான நாட்டை ஒரு தடவை பார்க்காமல் போறதில்லை..

பாற்கடலிலை இருக்கிற மீனுக்கு தான் சாகா வரம் தரும் பாலுக்குள்ள இருக்கிற ரகசியம் தெரியாது... அருகில இருக்கிற பாசியைக் கடிச்சு ஒரு நாள் செத்து மிதக்கும்... அதுபோலதான் சுவிசிலை இருந்தும் அதன் அழகோடு சேர்ந்து வாழத்தெரியாத ஒரு ஜென்மம் நான்... சீலன் வரட்சியாகச் சிரித்தான்.

ஆனாலும் அன்றொருநாள் அவர் சொன்ன சித்தாந்தக் கருத்தையே மறந்துவிடாமல் இன்றைக்கு சீலன் உதாரணமாக சொன்னது அவருக்கு திருப்தியாக இருந்தது..

உதாரணம் நல்லாயிருக்கு...இருந்தாலும் இண்டைக்குத்தான் இந்த நாட்டின் அழகு என்னுடைய கண்களுக்குத் தெரிந்து.. மனதினில் ஒரு விடுதலை கிடைத்தது... அந்த நேரம் பார்த்து நீங்கள் வந்திருக்கிறியள்...

பனம்பழம் கனிந்து விழப்போக... அந்த நேரம் பார்த்து அதிலிருக்க காகம் பறந்துவரும் அது இயற்கை... சேர் தற்செயலா உங்களைப் பார்த்த உடனே அதையும் நான் நினைத்தனான்...

இதுதான் விழுதல் என்பது... இதைப்பற்றிப் பேசப்புறப் பட்டால் ஒரு நாள் போதாது... நாளைக்கு அல்பஸ் மலையைப் பார்க்கப்போறன்... எப்பிடி உனக்கு நேரம்..

உங்களைப் பார்த்தாப்பிறகு ஏது நேரம்..? இந்த நொடியில இருந்து இந்த நாட்டைவிட்டு நீங்கள் புறப்படும்வரை உங்களோடை தான்..

எவ்வளவோ கதைக்க வேண்டியிருந்தது..

தன் வாழ்வில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை சொல்லி அவரிடம் யோசனை கேட்கவேண்டும் போல மனது துடித்தது சீலனுக்கு.

அடுத்தநாள் காலையில் அல்ப்ஸ் மலையின் உச்சி நோக்கி போவதற்காக தொங்கும் காரில் ஏறிப்புறப்பட்டபோதுதான் அவனுள் கிடந்த முட்டு மெல்ல மெல்ல அவிழ ஆரம்பித்தது..

இதுவரை அவனுடைய வாழ்க்கையென்ற ஆகாயத்தை மறைத்துக்கிடந்த முகில்களை விலக்கிக் கொண்டு வானமாம் மாமலையைக் கண்கள் பரவசத்துடன் பார்த்தன..

மறுபடியும் கீழே பார்த்தான் மலையடிவாரம் பாதளம்போல பயம் காட்டியது... சுவிஸ் அல்ப்சின் உச்சிப்பகுதிக்கு வந்து சிறிது மூச்சு விட்டபோது சிகரட் குடித்தது போல வாயில் இருந்து மெல்லிய புகை..

யாருமே இல்லாத முகடு... அங்கே தனியாக இருவர்...

சீலன் இப்ப நான் உன்னைத் தள்ளிவிட்டால் என்ன செய்வாய்...?

மௌனம்...

இல்லை நீ என்னைத் தள்ளிவிட்டால்...?

சீலன் அதற்கும் பதில் சொல்லவில்லை...

இந்த மௌனம்தான் நம்பிக்கை.. உன்னை நானும் என்னை நீயும் தள்ளிவிடமாட்டம் என்ற நம்பிக்கையிலதான் இந்தளவு உயரத்திற்கு வந்திருக்கிறம்..

உனது காதலி பத்மகலா.. இந்த நாட்டு அகதி வாழ்வு.. தாயகம் என்று ஆங்கங்கு சிதறிக்கிடக்கும் சிக்கல்களை வெற்றிகொள்ள உனக்கும் இப்படியொரு நம்பிக்கைதான் அவசியம்..

வா கொஞ்சம் நடப்பம்... இந்த உச்சிப்பகுதியைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமோ..?

இல்லை..

அருகில் இருந்த குன்றில் இருந்து கொண்டு.. நெடு நேரம் ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். சீலன் றிச்சாட் பெய்ன்

மானை ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறியா..?

தெரியாது..

உன்னைப்போலத்தான் அவனும் ஒரு புலம் பெயர்ந்த மனிதன்... அமெரிக்க யூதன்... உலகப்புகழ் பெற்ற வேதியல் விஞ்ஞானி... பல கண்டுபிடிப்புக்களுக்கு சொந்தக்காரன்... நோபல் பரிசு பெற்றவன்.. இப்பிடி அவன் புகழை அடுக்கிக்கொண்டே போகலாம்...

சேர் நான் மெடிக்கல் பக்கல்டி... பயோ சயன்ஸ்.. உங்களுக்கும் தெரியும்தானே...

அதுதான் என்னுடைய கவலை... நீ என் டாக்டருக்கு படிக்க வேணும்.. டாக்டராகவேணுமெண்டு விருப்பமா..?

இல்லை... பெற்றோருக்காக... சமூகத்துக்காக...

ஏன் குடும்பத்துக்கு ஒரு பெருமை தேட என்று உண்மையைச் சொல்ல மறுக்கிறாய்...?

நல்லவேளை ஆரோ ஒருதன் உன்னைக் காட்டிக்கொடுத்து பூஸா முகாமுக்கு அனுப்பினது... இல்லாவிட்டால்.. போலிக் கௌரவத்திற்கான ஒரு தப்பான டாக்டர் இந்த சமுதாயத்திற்கு வந்திருப்பான்... ஒப்புக் கொள்கிறாயா...?

ஓம்...

உண்மை... மகிழ்ச்சி தருது... தாங்ஸ்... நீ டாக்டரா வாறதை விட வேறு ஏதோவா வரப்போகிறாய்... காலம் அதுக்குத்தான் வழி காட்டுது... சிறையில் இருந்தபோதாவது சிந்தித்துப் பார்த்தியா..?

சீலன் அமைதியாக இருந்தான்..

ஓ...கே... இந்தப் புலம் பெயர் வாழ்வு பற்றி நீ என்ன நினைக்கிறாய்...?

எல்லாரும் சொல்கிறார்கள்... இது அவலமான வாழ்வென்று.. அடிமை வாழ்வென்று... எங்களுடைய அழகான தேசத்தை இழந்து விட்டோம்.. அங்கை இருந்தா நாம் எவ்வளவு சந்தோஷமா இருந் திருப்பம்... இதுதான் இதுவரை நான் கேட்ட புலம் பெயர் ஒலி...

எல்லோரும் சொல்வதாலை ஒரு கருத்து உண்மையாகி விடாது... உன்னுடைய கருத்தென்ன..

மௌனம்...

இதை அவலமாக பார்க்கிறதைவிட இந்த வாழ்வை வெற்றி யாக மாத்த வேண்டுமென்று யாராவது சிந்திக்கிறார்களா..?

நான் சந்திக்கவில்லை...

அப்பிடி ஒருதனை நான் சந்திக்க ஆசைப்படுறன்... ஏன் அவன் நீயாக இருக்கக்கூடாது..

சேர் பத்மகலா..

புண்ணாக்கு.. முதல்ல முதுகில இருக்கிற பழைய மூட்டை களை உருட்டிவிடு..

இந்த வாழ்வை நம்பிக்கையுள்ள வாழ்வாக மாற்றலாம் என்ற இரகசியத்தை கண்டு பிடித்து ஒரு புது விளக்கை ஏற்றும் மானிடன் தேவை.. அவனுக்கான வெற்றிடம் காலியாக இருக்குது.. ஏன் நீ அவனாக இருக்கக்கூடாது..?

சீலன் திடுக்கிட்டான்... தொங்கும் வண்டியொன்று புதிதாக வந்து நிற்க யாரோ இரண்டுபேர் இறங்கினார்கள்... அவர்கள் தமிழர்கள் அல்ல..

வா... இன்னம் கொஞ்சம் நடப்பம்..

சேர் றிச்சாட் பெயின்மானைபற்றி ஏதோ சொல்ல வந்தியள்.. சொல்ல இல்லை..

உனக்கு ஆர்வம் இருந்தால் கேட்பாய்... அதுதான் வெயிட் பண்ணி நடந்தனான்... உனக்கு ஏதோ ஒரு பிரகாசமான வாழ்விருக்கு அதுதான் அதை அறிய ஏதோ ஆவல் வந்திருக்கு.. பலபேருக்கு வாற தில்லை..

சீலன் ஒரு சுவீங்கத்தை வாயில் போட்டுக்கொண்டான்... அல்ப்ஸ் காற்றோடு சுவீங்கத்தை குழைத்து சப்ப இனம்புரியாத புதிய சுகமாக இருந்தது.. கதை கேட்க தயாரானான்.

அமெரிக்காவின் சலஞ்சர் ராக்கட்டுக்கள் பல தடவைகள் ஆகாயத்தில் வெடித்துச் சிதறியதைக் பேப்பரிலை படிச்சிருப்பாய்..

ஓம்...

அந்த ராக்கட்டுக்கள் புவியீர்ப்பை தாண்டும்போது ஏன் வெடிக்கின்றன என்ற காரணத்தை கண்டு பிடித்துத் தரவேண்டுமென றிச்சாட் பெய்மனிடம் கையேந்தி நின்றார் அமெரிக்க முன்னாள் அதிபர் றொனாட் றேகன்... அது தெரியுமோ...

இல்லை...

ஒரு நாட்டு அதிபரே தன் வீடு தேடிவந்து உதவி கேட்கு மளவுக்கு புலம் பெயர் வாழ்வை சிகரங்களுக்குக் கொண்டுபோக முடியுமெண்டு காட்டியது அவன்தான்..

இவையெல்லாம் தெரியாது அருகில் இருக்கும் மனிதர் களுடன் சேர்ந்து கண்ணீர்க்கடலில் பாய்ந்து நீச்சலடித்ததை நினைக்க சீலனுக்கு சிறிது நாணமாக இருந்தது.

இதையேன் சொல்லுறன் தெரியுமோ.. புலம் பெயர் வாழ்வால் சிகரங்களைத் தொடலாம்..

குமாரவேல் கதையைத் தொடர்ந்தார்...

அப்போது றிச்சாட் பெயின்மான் றொனால்ட் றேகனைப் பார்த்து சிரித்தான்..

ஏன்...?

அவன் இறப்பதற்கான நாட்கள் குறிக்கப்பட்டுவிட்டன.. புற்றுநோய் அவன் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க மேலும் சில தினங்களே இருந்தன... இது றேகனுக்குத் தெரியாது... அதுதான் சிரித்தான்..

நான் இறக்கப்போகிறேன்... மனைவி பிள்ளைகளுடன் இறுதி நாட்களை கழிக்கப் போகிறேன்... பிளீஸ் வேறு யாரையாவது பாருங்கள் என்று அவன் சொன்னானா... இல்லை... கண்டு பிடித் தான்... அதுதான் றிச்சாட் பெயின்மான்..

சேர் ராக்கட் ஏன் வெடித்தது...?

ராக்கட்டுக்களின் எரிபொருள் தாங்கி சதுரவடிவில் அமைக் கப்பட்டிருந்தது.. ராக்கட் இரட்டிப்பு வேகம் எடுக்க விளிம்புப்பகுதி களில் ஏற்படும் உராய்வு காரணமாக வெப்பம் அதிகரித்து பெற்றோல் ராங் வெடித்துச் சிதறுகிறது.. ராங்கின் வடிவத்தை மாற்றியமைக்க வேண்டும்... இதுவே அவனுடைய கண்டு பிடிப்பு...

மனிதன் ஆபத்தின்றி ஆகாயத்தைக் கடக்க உதவியதே அவன் வாழ்வில் எஞ்சியிருந்த ஒரு சில நாட்கள்தான்.

சீலனின் தேகம் புல்லரிப்பது போன்ற உணர்வு...

கண்டு பிடித்ததும் அவன் இதே மலை உச்சிக்குத்தான் மனைவி பிள்ளைகளுடன் வந்தான்... இந்த ஆகாயத்தைப் பார்த்துச் சிரித்தான்.. தான் ஒரு சில நாட்களில் இறக்கப்போகும் இரகசியத்தை இந்த மலை உச்சியில் வைத்துத்தான் அவர்களிடம் முதல் தடவை யாகச் சொன்னான்..

சேர் அவன் தப்பியிட்டான்தானே..? சீலனில் சிறிய பதட்டம்..

நோ.. இது உபகதை இல்லை.. உண்மைக்கதை.. சொன்ன படியே அவன் சில தினங்களில் இறந்து போனான்..

*சில நொடிகள் நிசப்தம்...*

*அவனுடைய சிரிப்பும் நம்பிக்கையும் இந்த மலை உச்சியிலை தான் கலந்திருக்கு. அதுதான் உன்னை இந்த இடத்துக்கு கொண்டு வந்து இந்தக் கதையைச் சொன்னனான்..*

*இந்தக் காற்றைச் சுவாசி.. அப்பதான் உன்னுடைய விடிவை இன்னொருவனின் கையில் கொடுத்துவிட்டு வெளிநாட்டில் நின்று அழும் உனக்கும் ஒரு புது நம்பிக்கை பிறக்கும்..*

*அல்ப்ஸ் மலையில் முட்டி மோதிய அந்த விஞ்ஞானியின் குரல் எங்கோ எதிரொலிப்பது போன்ற பிரமை..*

*சீலன் வாழ்க்கை முடியப்போற கடைசி நிமிடத்தில கூட அவன் இந்த வாழ்க்கையைப்பற்றி கண்ணீர விட்டானா..?*

*இல்லை...*

*ஏன்...?*

*இருக்கிற நாளை சரியாகப் பயன்படுத்தத்தான் இந்த வாழ்க்கை நாட்கள் தரப்பட்டிருக்கு... மற்றவர் உயிர் கொடுத்து தேடும் விடிவு என்றோ வரும் என்ற காத்திருத்தலுக்காக இல்லை..*

*வெளிநாடு வந்தும் அதே செக்குமாட்டு வாழ்வை வாழ்ந்து அதே பழைய கண்ணீரைத்தான் விட வேண்டுமென்றால் உன் வாழ்க்கைக்கு அர்த்தமென்ன.. அந்தமான் தீவில நின்று நீ அழுதிருக் கலாமே..?*

*வருமானம்...?*

*நல்ல வருமானமும் வேணும்... இடைக்கிடை அழவும் வேணும்... தாய்நாட்டுக்கு விடிவும் வேணும்.. இப்ப விளங்குதோ பிழை எங்கை இருக்கெண்டு...?*

*தெரியுது... நல்லவேளை உங்களைச் சந்தித்திருக்காவிட்டால் கண்டுபிடித்திருப்பனோ தெரியாது..*

*சரி பத்மகலாவை என்ன செய்யப்போறாய்...? அவளைக் காப்பாற்றத்தான் நீ பிறந்திருக்கிறாயா... இப்படி உலகம் முழுதும் எத்தனை பத்மகலாக்கள்.. இவர்களை காப்பாற்றியவர்கள் இறுதியில் எட்டித்தொட்ட இலக்குகள் என்ன...? அவர்கள் எல்லாம் இப்போது எங்கே...?*

*சீலனுக்கு சிறிது வெட்கமாக இருந்தது சமாளித்துக் கொண் டான்... எல்லோராலையும் சாதிக்க முடியாது... பத்மகலாக்களும் சீலன்களுமாக நிறைந்து கிடப்பதுதானே இந்த வாழ்க்கை...?*

*சபாஷ்... நீ அப்படிப்பட்ட ஒரு சாதாரண சீலனா... இல்லை அதிலிருந்து வேறுபட்ட ஒருவனா... முதலில் அந்தக் கேள்விக்கு விடை தேடு... தற்ஸ்சோல்... புறப்படலாமா...?*

*மலை உச்சிக்கு வந்த ரயில் பெட்டி ஒன்று கீழே இறங்கத் தயாரானது... இருவரும் ஏறிக்கொண்டனர்...*

*சீலனைப்பிடித்திருந்த எல்லாச் சுமைகளும் அல்ப்ஸ் மலை யில் இருந்து ஒவ்வொன்றாகக் கீழே விழுந்து கொண்டிருந்தன..*

*மலையடிவாரத்தைத் தொட முன்னரே சீலன் முற்றாகவே மாறிப்போயிருந்தான்...*

*சேர்...*

*சொல்லு...*

*நான் செக்கு மாடில்லை வித்தியாசமானவன்...*

*நீங்க அடுத்த முறை சுவிஸ் வரும்போது என்னில அந்த மாற்றம் தெரியும்..*

*ஆயிரத்தில் ஒருவனால்தான் இயல்பு வாழ்வில் இருந்து புதுமை வாழ்வை முன்னெடுக்க முடியும்... உனக்குள் அந்த வரம் மறைந்திருக்கிறது... கண்டுபிடி...*

*நன்றி சேர்...*

*சீலன் நான் இரவு கனடாவுக்கு பிளைட் எடுக்கிறன்... பத்ம கலாவுக்கு ஏதாவது எழுத்தித்தாறதெண்டால் தா... அவளையும் உனக்காக ஒரு தடவை சந்தித்துப் பேசுறன்...*

*சீலனின் கண்களில் ஒரு சொட்டு நீர்...*

*கண்ணீரைத்துடை... நீ கடிதத்தை எழுது... நான் குளித்து பிளைட்டுக்கு ரெடியாகிறன்...*

*விமான நிலையம்... பிரியும் நேரம்...*

*சீலன் காதல் என்றால் உன்னுடைய கரத்தை அவள் பிடிக்க வேணும்... அவளுடைய கரத்தை நீ பிடிக்க வேணும்...*

*அவள் சமுதாயத்திற்கும் குடும்பத்துக்கும் பயந்து கோழையா இருக்க நீ மட்டும் படாதபாடுபட்டு அவளுடைய கரத்தைப் பற்றி னால் அது காதல் இல்லை... பத்மகலாவுக்கு முகவரியிட்ட கடிதத்தை வாங்கிக் கொண்டார்.*

*காதலை வெல்வதல்ல வாழ்க்கை... வாழ்க்கையை வெல்வ தால் காதலுக்கு மகுடம் சூடுவதே வாழ்க்கை... குட் பாய்..*

*நேரமிருந்தால் முருகன் ஓர் உழவன் என்ற நாவலிலை*

நிலாவொளியும் தத்துவ விசாரணையும் என்றொரு அத்தியம் இருக்கு படிச்சுப்பார்...

குமாரவேல் அவனை அன்போடு கட்டித்தழுவினார்.. திருவருள் குரு வடிவில் அவனை அணைத்துவிட்டது போன்ற பிரமை...

விழுதல் ஆரம்பித்ததோ என்னவோ சூரியன் பொத்தென விழுந்தது..

நாளைய காலை ஒரு புதிய சீலனைப் பார்க்கப்போகிறேன் என்ற அவசரத்தில்தான் அப்படி விழுந்ததோ..?

***

பேராசிரியர் குமாரவேலை வழியனுப்பிவிட்டு விமான நிலையத்தைவிட்டு வெளியே வந்தான் சீலன். விமான நிலைய கட்டிடத்தை திரும்பிப்பார்த்தான். அதன் பிரமாண்டத்தின் முன்னால் தான் ஒரு சிறிய புள்ளிதானே என நினைத்தான்.

விமானங்கள் பயணிக்க ஓடுபாதையில் அவை நகரும் பொழுதும் தரையிறங்கும்பொழுதும் பாதுகாப்பு பணிகளில் தயா ராக நிற்கும் ஊழியர்கள், விமானங்களை செலுத்தும் விமானிகள், முகம்சுழிக்காமல் இன்முகத்துடன் இயங்கும் விமானப்பணிப் பெண்கள், பயணங்களுக்கு தயாராகும் பயணிகள், தரையில் இறங்கும் பயணிகள், அங்கு அமைந்துள்ள உணவுச்சாலைகள், கோப்பி பார்கள் மற்றும் கடைகளில் வேலைசெய்பவர்கள்...

எல்லோருக்கும் உழைக்கும் திறனும் சிந்திக்கும் ஆற்றலும் இருக்கும். விமானங்களும் விமான நிலைய கட்டிடமும் ஓடுபாதை களும் அப்படியல்ல. மக்களால் இயங்குபவை. இயக்கப்படுபவை.

இலட்சக்கணக்கில் இந்த விமான நிலையத்தின் ஊடாக வெளியே வந்தவர்கள் உட்புகுந்து பறந்து சென்றவர்கள் அனை வரும் சில கணங்கள் நின்று மனித உழைப்பு பற்றி யோசித்திருப்பார்களா?

விமானத்தில் ஏறும் - இறங்கும் அவசரம்தானே அனைவரது மனங்களிலும் வியாபித்திருக்கும்.

இன்று மட்டும் நான் ஏன் இப்படி யோசிக்கின்றேன்? சீலன் தனக்குள் கேட்டுக்கொண்ட கேள்விக்கு பதிலாக அன்று சந்தித்த பேராசிரியர் குமரவேலின் முகம்தான் வந்து நின்றது.

சில மணிநேரங்களுக்குள் அவர் சீலனின் மனதில் எத்தனை எண்ணக்கருக்களை விதைத்துவிட்டார்?

மரணிக்கும் வேளை நெருங்கியபொழுதும் அதற்காக அலட்டிக்கொள்ளாமல் இயங்கிய விஞ்ஞானி ரிச்சார்ட் கூட ஒரு யூத இனத்து அகதிதான். யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல்வாதிகளும் விடுதலைவேண்டி களம் இறங்கிய இயக்கங்களின் தலைவர்களும் தமிழ்த்தேசியம் பேசிய பல்கலைக்கழக மாணவர்களும் அடிக்கடி உச்சரித்த சொல் யூதர்கள்.

யேசுவும் கார்ல் மார்க்ஸூம் யூத இனத்திலிருந்து வந்தவர்கள் தான். மருத்துவபீடத்தில் மாணவர் தலைவனாக வந்தபின்னர் தெரிந்துகொண்ட அரசியல் பத்மகலா மீதான காதலுக்குப்பின்னர் தன்னைப்பாதிக்கவில்லையே என்று சீலன் ஆழ்ந்து யோசித்தான்.

சுவிஸ் வந்த பின்னர் அடுத்தடுத்து தனது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை மனதில் அசைபோட்டவாறே பஸ்தரிப்பிடத்திற்கு வந்தான் சீலன்.

தன்னைக்காட்டிக்கொடுத்த முரளி, கனடாவுக்கு சென்று விட்ட காதலி பத்மகலா, எதிர்பாராமல் சந்தித்து விடைபெற்ற பேராசிரியர் குமாரவேல், தஞ்சமடைந்த அறையில் சந்தித்த தவம் அண்ணர், தவத்தின் நண்பர்கள் வட்டம், எதிர்பாராமல் திடீரென்று கிடைத்துவிட்ட புகலிடத்திற்கான அனுமதிக்கடிதம்...

வாழ்க்கை எத்தனை மனிதர்களை எத்தனை அனுபவங்களை தருகின்றது. அனுபவங்களைத்தானே அந்த விஞ்ஞானியும் தனது புத்திக்கொள்முதலாக்கியிருக்கவேண்டும். அந்தச் சிந்தனையைத் தானே குமாரவேல் சேரும் மனதில் விதைத்துவிட்டு விடைபெற்றார்.

உனக்கும் கீழே வாழ்பவர் கோடி நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு என்ற எழுதிவிட்டுச்சென்ற கவியரசர் கண்ணதாசனும் தனது வாழ்வில் எத்தனை அனுபவங்ளை சந்தித்திருப்பார். அவரும் அகதி யாக நடோடியாக தன்னைப்போன்று அலைந்திருப்பின் யேசு காவியம் மாத்திரமல்ல அகதிகளின் காவியமும் பாடியிருப்பார்.

சீலன் பஸ்ஸில் ஏறி தவத்தாரைப் பார்க்கச்சென்றான். தவ மண்ணையிடம் மனம்விட்டுப்பேசுவதற்கு அவனிடம் பல விடயங் கள் இருந்தன. பத்மகலா கனடாவிலிருந்து பேசியது, பேராசிரியர் குமாரவேலரின் சந்திப்பு, அவர் குறிப்பிட்ட விஞ்ஞானி ரிச்சர்ட், பத்ம கலாவை அடையத்துடிக்கும் முரளி... இப்படிப் பல. தவத்தாரைச் சந்தித்தவுடன் எதிலிருந்து தொடங்குவது எதில் வந்து முடிப்பது என்று தனது மனதிற்குள்ளே ஒத்திகை நடத்தியவாறு பஸ்ஸிலிருந்து

தெருவைப்பார்த்தான். நகரம் ரம்மியமாக காட்சியளிக்கிறது. பச்சைக் கம்பளம் விரித்ததுபோன்ற புற்தரைகளும் ஆங்காங்கே மரங்களும் செடிகளும் புதர்களும் நீரோடைகளும் பூத்துக்குலுங்கும் மலர்களும் வாகனங்களின் ஹோர்ண் சப்தமேயற்ற நிசப்தமும் சீலனின் மனதிற்கு ஒத்தடமாகவிருந்தன.

குமாரவேல் சேர் போன்று பல அறிவுஜீவிகள் புகலிடத்தில் தஞ்சமடைந்திருப்பவர்களை சந்தித்தால் அவர்களின் வாழ்வில் அர்த்தமுள்ள அதிசயங்கள் நிகழுவதற்கு வாய்ப்புகள் இருக்கும். அவர் கனடா சென்று பத்மகலாவை சந்திக்கவேண்டும் என்று சீலனின் மனம் பிரார்த்தனை செய்தது.

சுவிஸ் புறப்படுவதற்காக அம்மா ஊரில் பட்ட கடனை அடைக்க வேண்டும். தங்கச்சிக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவேண்டும். அதற்குப்பிறகுதான் காதல்.

பத்மகலா எனக்கு கிடைப்பாள் என்பது விதியானால் கிடைப்பாள். இல்லையென்றால்....?

சீலனுக்கு யோசிப்பதற்கு சங்கடமாகவிருந்தது.

தவத்தார் இடம்மாறி தங்கியிருந்த வீட்டுக்கு வந்தவுடன் சீலன் நேரத்தைப்பார்த்தான். மாலை 5 மணி கடந்திருந்தது.

“சீலன்... இப்பத்தான் வேலையால் வந்தனான். இரும். தோய்ஞ்சிட்டு வாரன்” அவர் தொலைக்காட்சியை முடுக்கிவிட்டு குளியலறைக்குள் சென்று விட்டார்.

தொலைக்காட்சியில் செய்திகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. சீலனுக்கு சுவிஸ் மொழியை கருத்தூன்றி கற்கவேண்டும் என்ற உணர்வை தூண்டியதும் தொலைக்காட்சிதான்.

தனக்கு முன்னால் விரிந்து நீண்டு பரந்திருக்கும் பொறுப்புகளை யோசித்து மலைத்துப்போனான். சுவிஸ் மொழி படிக்க வேண்டும். வருமானத்திற்கு ஒரு தொழில் தேட வேண்டும். உழைக்க வேண்டும். கிடைக்கும் வேலை இரவிலா, பகலிலா, நடுச்சாமத்திலா?

படிக்க ஒரு நேரம், உழைக்க ஒரு நேரம், உறங்க ஒரு நேரம், உணவு சமைக்க ஒரு நேரம், வீட்டுச்சாமான் சமையல் சாமான் வங்க கடைத்தொகுதிகளுக்குச்செல்ல ஒரு நேரம். அதற்கெல்லாம் நேரம் ஒதுக்கிவிட்டால் கார் ஓட்டப்பழக ஒரு நேரம், அம்மாவுடனும் தங்கச்சியுடனும் தொலைபேசியில் பேசுவதற்கு ஒரு நேரம், இவ்வளவுக்கும் மத்தியில் கனடாவிலிருக்கும் காதலி பத்மகலாவுடன்

பேசுவதற்கு பொருத்தமான நேரமும் தேட வேண்டும்.

இதற்குத்தானா புலம்பெயர்ந்தவர்கள் எல்லோரும் நேரத்துடன் போராடுகிறார்கள் என்பது பேசுபொருளாகியிருக்கிறது.

தவமண்ணர் தோய்ந்துவிட்டு வந்து, "சீலன் என்ன குடிக்கிறீர்? கஃபேயா? ரீயா? நான் எனக்கு கஃபே தயாரிக்கப்போகிறேன்" என்றார்.

சுவிஸில் கோப்பி பானத்தை கஃபே என்றுதான் அழைக்கிறார்கள். "அண்ணை எனக்கும் கஃபே தாருங்கள். மெத்த வேண்டாம். சின்ன கப்பில் போதும்""என்றான் சீலன்.

"எத்தனை கிண்ணத்தில் இட்டாலும் அவை அத்தனையின் சுவை ஒன்றாகும்" என்று கண்ணதாசன் படியிருக்கிறார் தெரியுமா? என்று கண்ணைச்சிமிட்டிக்கொண்டு சொன்னார் தவமண்ணன்.

"அண்ணை உங்கட கண் சிமிட்டலுக்கும் அர்த்தம் இருக்கண்ணை. கவிஞர்ட பாடலுக்கும் அர்த்தம் இருக்கண்ணை" என்று சொல்லிச்சிரித்தான் சீலன்.

தவமண்ணன் சீலனின் முகத்தை உற்றுக்கவனித்தார். அவனது முகத்தில் மாற்றம் தோன்றியிருப்பதை அவதானித்தார்.

"சீலன் உம்மட முகம் இன்றைக்கு கொஞ்சம் பிரகாசமாக இருக்குது தம்பி. பத்மகலா இன்றைக்கு தொடர்புகொண்டாவா? காதலிகள் பேசினால் உவப்பாகவும் இருக்கும் உபத்திரவமாகவும் இருக்கும்"

"அண்ணை உங்கட முன் அனுபவம் பேசுகிறதா? என்னில் ஏதும் மாற்றம் உங்கட கண்ணுக்குத்தெரிந்தால் அதற்குக்காரணம் இன்றைக்கு நான் சந்தித்த ஒரு பேராசிரியரும் அவர் எனக்குச்சொன்ன கதையும்தான்" என்றான் சீலன்.

தவமண்ணன் இரண்டு கப்பில் கோப்பி தயாரித்துக்கொண்டு வந்து சீலனிடம் ஒன்றைக்கொடுத்துவிட்டு அவன் முன்னால் அமர்ந்தார்.

சீலன் பேராசிரியர் குமாரவேலையும் அவர் குறிப்பிட்ட விஞ்ஞானி ரிச்சட்டையும் பற்றி தவமண்ணனிடம் விபரித்தான். ஆவி பொங்கும் கோப்பியை இருவரும் ரசித்து ருசித்தனர்.

அதில் இனிமைகலந்த கசப்பு. வாழ்க்கையின் தத்துவத்தை இந்த சாதாரண கோப்பியும் உணர்த்துவதாக சீலனின் மனதிற்கு பட்டது.

"அண்ணை இந்தக்கோப்பியை பற்றி என்ன நினைக்

கிறீங்கள்?" சீலன் கேட்டான்.

"என்ன... கோப்பி... அவ்வளவுதான். இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது?"

"ஆம். சாதாரணமான கோப்பிதான். அதற்குப்பின்னால் மிக நீண்ட கதை இருக்கிறது என்பதை நாங்கள் மறந்துபோறம் அண்ணை."

"சீலன் நீர் என்ன சொல்லுறீர்? எனக்குப்புரியவில்லை"

"அண்ணை... கோப்பி தயாரிக்க கேத்தலில் தண்ணீரை சுடவைத்தீர்கள். தண்ணீருக்காக பைப்பைத் திறந்தீர்கள். மின்சாரம், தண்ணீர், கோப்பி, சீனி, பால், கப், கரண்டி... இப்படி எத்தனையோ இணைந்துதானே இப்பொழுது நாங்கள் இரண்டுபேரும் இந்த சுவை யான கோப்பியை பருகிக்கொண்டிருக்கிறோம். சில நிமிடங்களில் கோப்பியை அருந்திவிட்டு அடுத்த வேலையை கவனிப்போம். ஆனால் இந்த பால்கோப்பியின் பின்னால் இருந்த மனித உழைப்பை, விஞ்ஞான கண்டுபிடிப்பைப்பற்றி துளியளவேணும் யோசித்திருக் கிறோமா?"

தவமண்ணன் சீலனின் முகத்தை உற்றுப்பார்த்தார். சில கணங்கள் அவர் ஏதும் பேசவில்லை.

"என்ன அண்ணன்? ஏதாவது சொல்லுங்களேன்?"

"இன்றைக்கு நீர் யாரையோ சந்திச்சிருக்கிறீர்... அல்லது ஏதோ ஒரு புத்தகம் படிச்சிருக்கிறீர்... என்பது மாத்திரம்தான் எனக்குப் புரியுது. நான் அன்றைக்குப் பார்த்த சீலன் இன்றைக்கு இல்லை. ஏதோ ஒரு ரஸவாதம் உம்மிடம் நிகழ்ந்திருக்கு. அதற்கான ரிஷி மூலம்...நதி மூலம் என்ன தம்பி.?"

"எங்கேயண்ண படிக்க நேரம்? நான் வரும்பொழுது புத்தகங் கள் கொண்டுவரவில்லை. வந்த இடத்திலும் புத்தகங்கள் கிடைக்க வில்லை. ஆனால் இன்றைக்கு விமான நிலையத்தில் ஒரு மனிதரை வழியனுப்பியபொழுது அவர் எனது மனதில் விதைத்துவிட்ட சிந்தனைதான் உங்களிடம் இந்தக்கோப்பியின் புதிர் பற்றி பேச வைத்தது"

தவமண்ணன் காலியாகவிருந்த இருவரும் அருந்திய கோப்பி கப்புகளை எடுத்துச்சென்று கழுவிவைத்துவிட்டு திரும்பிவந்தார்.

"நீர் கோப்பி பற்றி சொன்ன பிறகுதான் எனக்குள்ளும் பல யோசனைகள் பிறக்குது தம்பி. பல விடயங்களுக்குள்ளதான் நாங்கள்

எங்களை தேடிப்பார்க்கிறோம். அது சரி... நீர் சந்தித்தவர்... ஆள் சுவிஸ்காரனோ?"

"இல்லை... இல்லை... அவர் எங்கட ஊர் பேராசிரியர். உப்சலா பல்கலைக்கழகத்துக்கு வந்துவிட்டு திரும்புகையில் எதிர் பாராமல் சந்தித்தவர். பெயர் குமாரவேல்" என்றான் சீலன்.

"எங்கேயோ கேள்விப்பட்ட பெயராகத்தான் இருக்கிறது. சரி சொல்லும் அவர் அப்படி என்னதான் உமக்குச்சொல்லிவிட்டார்?" - தவமண்ணன் தோளில் கிடந்த டவலை குளியலறையில் விரித்து வைத்துவிட்டு திரும்பினார்.

சீலனும் எழுந்து நடந்தவாறே குமாரவேல் குறிப்பிட்ட விஞ்ஞானி ரிச்சர்ட் பற்றியும் அவரின் மரணம் பற்றியும் விபரித்தான்.

அமைதியாகக்கேட்டுக்கொண்டிருந்துவிட்டு தவமண்ணன் நீண்ட பெருமூச்சை விட்டார்.

"தம்பி... அந்த குமாரவேலர் தன்னை அந்த விஞ்ஞானி ரிச்சரட்டிடம் தேடியிருக்கிறார். நீர் உம்மை அந்த குமாரவேலரிடம் தேடியிருக்கிறீர். இப்பொழுது நான் உம்மிடத்தில் என்னைத்தேடிக் கொண்டிருக்கிறன். இது மரதன் ஓட்டம் தம்பி. நிற்காது. தேடல்தான் வாழ்க்கை. சில நாட்களாகத்தான் நான் அந்த வேலைக்குப் போய் வந்து கொண்டிருக்கிறன். அங்கே நீண்ட காலமாக வேலை செய்யிற எங்கட யாழ்ப்பாணத்து ஆட்கள் சிலருடன் நட்பாகியிருக்கிறன். அவர்களின் கதைகளையும் கேட்டிருக்கிறன். அவையள் இங்கே நிரந்தர வதிவிட அனுமதியும் நிரந்தர வேலையும் ஓடித்திரிவதற்கு கார்களும் வாங்கியிருப்பவை. அவர்களும் கனவுகளோடதான் காலத்தை கடத்துகினம். சிலருக்கு சுவிஸ் வாழ்க்கை பிடிக்கவில்லை. அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குப் போயிருக்கலாம். லண்டனுக்குப் போயிருக்கலாம். என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே தங்கட பிள்ளைகள் ஆங்கிலம் படித்திருக்கலாமாம். கெதியா வீடு வாங்கியிருக்கலாமாம்? இன்னும் சிலருடைய கனவுகள் வேறு மாதிரி... முடிந்தவரையில் உழைத்து சேமித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிவிடவேணுமாம்.

தொடர்ந்து இங்கே இருந்தால் ஊரில் இருக்கும் சொந்த பந்தங்கள் அவரை எடுத்துவிடு...இவரை எடுத்துவிடு... என்ற ஓயாத தொலைபேசி நச்சரிப்பாம். இதில பாரும்... ஒருவர் சொன்ன கதை வெகு சுவாரஸ்யம். அவர்ட பெயர் குணரத்தினம். அவரின்ட

அண்ணர் அவுஸ்திரேலியாவில் எண்பத்தி மூன்று அடியோடு குடும்பத்துடன் போனவராம். இக்கரைக்கு அக்கரை பச்சை என்று தானாம் தன்னோடு ரெலிபோண்ல புலம்பிக்கொண்டிருக்கிறாராம். ஒரு நாள் சொன்னாராம். வெளிநாட்டுக்கு வந்த பலர் ஏதேதோ பத்திரிகைகளில் எழுதிப்போட்டு புலம்பெயர்ந்தோர் இலக்கியம் படைப்பதாக பேசுகினமாம். தான் சிலதை படிச்சும் பார்த்தவராம். அது எல்லாம் புலம்பல் இலக்கியமாம். அதனால் உந்த எழுத்தாளர் களுக்குப் பின்னால அலையிறதை விட்டுப்போட்டு முடிஞ்சவரைக் கும் உழைச்சுக்கொண்டு ஊருக்குத்திரும்புற வழியைப்பார் எண்டும் சொன்னவராம். அந்த அவுஸ்திரேலியா அண்ணர்... எப்படி இருக்குது சீலன்...?" தவமண்ணன் சொல்லிவிட்டு உரத்துச்சிரித்தார்.

"அண்ணை நீங்கள் சொல்லும் குணரத்தினமும் எழுத் தாளரா?" எனக் கேட்டான் சீலன்.

"இருக்கவேண்டும். சாப்பாட்டு நேரத்தில் அந்தப் பெடி யனின் கையில் ஏதாவது ஒரு புத்தகம் இருப்பதையும் பார்த்திருக் கிறன். நானும் அங்கே வேலைக்குச்சேர்ந்து சில நாட்கள்தானே? ஏன் கேட்டீர்?"

"இங்கே வந்ததுமுதல் கடந்த கால யோசனைகளில்தான் மூழ்கியிருக்கிறன். பலரையும் சந்தித்து பழகவேண்டும். தனிமை பொல்லாத நோய். அதிலிருந்து விடுபடவேண்டும். அதற்கு புதிய தொடர்புகள் தேவை அண்ணை."

"புதிய தொடர்புகள் சிக்கலையும் தரும் தம்பி. வெளிநாட்டில் அவதானம் தேவை. முதலில் வேலையொன்றைத்தேடிக்கொள்ளும். ஏதும் கோர்ஸ் படியும். ஊரில் உம்மட அம்மா பட்ட கடனை அடை யும். அதற்கு முன்பு அவசரப்பட்டு நண்பர்களைத் தேடிக்கொள்ள வேண்டாம். எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்கும் என்று தெரியாது? கவனம்." என்றார் தவமண்ணன்.

"சரி அண்ணன். இருட்டுப்படுது... நானும் இறங்கிறன். உங்கட இடத்தில் எனக்கு ஏதும் வேலை இருந்தால் சொல்லுங்கோ... அப்ப நான் வாரன் அண்ணன்" சீலன் தவமண்ணன் கைபற்றி குலுக்கிவிட்டு அங்கிருந்து விடைபெற்றான்.

அன்று பேராசிரியர் குமாரவேலை சந்தித்தபொழுது ஒரு உலகத்தையும் பின்னர் தவமண்ணரை சந்தித்தபொழுது வேறு ஒரு உலகத்தையும் அவர் வேலை செய்யும் இடத்தில் பணியிலிருக்கும்

குணரத்தினம் ஊடாக அவுஸ்திரேலியாவிலிருக்கும் அவனது அண்ணனின் உலகத்தையும் சீலன் கற்பனை செய்து பார்த்தான்.

புகலிட நாடுகளில் எல்லாவற்றையும் எல்லா சௌகரியங் களையும் சுகங்களையும் தேடிவிட்டு மகிழ்ச்சியை தொலைத்துக் கொண்டிருப்பவர்களின் பட்டியலில் தானும் இணைந்து விடு வேனோ என்ற பயம் சீலனை வருத்தியது.

குளிர்காற்று அவனைத்தழுவிச்சென்றது. வீதிகளில் மின் விளக்குகள் பிரகாசத்தை சிந்திக்கொண்டிருந்தன. கார்கள் மற்றும் வாகனங்கள் எதிரும் புதிருமாக ஓடிக்கொண்டிருந்தன.

என்றாவது ஒரு நாள் கார் செலுத்தப்பழகி சொந்தமாக கார் ஒன்றும் வாங்கவேண்டும். அப்பொழுது பத்மகலா அருகிலிருந்து தனது கேசங்களை வருடிவிடவேண்டும். மெக்டொனால்ட்ஸ் ட்றை விங்துருவில் காரிலிருந்து இறங்காமலேயே அவளுக்கு உருளைக் கிழங்கு சிப்ஸூம் பேகரும் ஐஸ்கிறீமும் வாங்கிக்கொடுக்கவேண்டும். அவள் அவற்றை சுவைத்து தனக்கும் ஊட்ட வேண்டும். ஒரு ஐஸ்கிறீமை மாறி மாறி இருவரும் சுவைக்கவேண்டும்.

சீலன் கற்பனைச்சிறகை கட்டிக்கொண்டு பறந்தான். அதனால் ஒரு பஸ்தரிப்பையும் கடந்து வந்துகொண்டிருந்த பஸ்ஸையும் தவறவிட்டு சற்று தொலைவிற்கு வந்து அடுத்த பஸ்ஸிற்காக காத்து நின்றான்.

ஒரு பஸ் போனால் மற்றுமொரு பஸ். காத்திருப்பதில் சுகமும் சோகமும் இணைந்திருப்பதை அந்தக்கணம் உணர்ந்தான்.

***

என் கண்களில் ஒளியானவளே
என் இதயத்தின் துடிப்பானவளே
என் உயிருக்குள் உயிராக
ஒளிந்து கொண்ட என் கலாவே

காத்திருக்கிறேன் எனக்காக என்று இறுதியாக பத்மகலா சொன்ன வார்த்தை பஸ்சிற்காக காத்திருக்கும் அந்த வேளையிலும் சீலனின் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

அந்நேரத்தில் சீலன் நின்ற பஸ் தரிப்பை தாண்டிச் சென்ற ஓர் காரொன்று சற்றுத் தூரம் சென்றதும் நின்று பின் பக்கமாக சீலன் நிற்கும் இடத்தை நோக்கி வந்து அவனருகே நின்றது. காருக்குள் இருந்தவர் காரின் கண்ணாடியைத் திறந்து “எங்கே போகிறீர்” என்று

ஆங்கிலத்தில் கேட்டார்.

நான் போகுமிடத்தை அவரிடம் கூறினேன்.

முன் கதவை எட்டி திறந்தவர் தன்னருகே முன்னிருக்கையில் அமரும்படி கண்களால் சைகை செய்தார். அறுபது வயதிற்குள் மதிக்கத் தக்க அவருடைய பெருந்தன்மைக்கு தலைசாய்த்து காருக் குள் ஏறி அமர்ந்தேன். மெல்லியதாக தமிழ்ப்பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. எனவே அவர் தமிழர் என்பதால் அவரைப் பார்த்து “அங்கிள் நீங்கள் சூரிச்சிலா இருக்கிறீங்கள்?”

“இல்லை தம்பி நான் ஜெனிவாவில் இருக்கிறேன். இங்கே கன்ரொன் அர்ரோவில் வசிக்கின்ற எனது சகோதரியின் வீட்டிற்கு ஒரு கிழமை விடுமுறையில் எனது மனைவி பிள்ளைகளுடன் வந்து தங்கி நிற்கிறேன்”

அவருடைய பேச்சு, தோரணை எல்லாமே நல்ல குணவியல்பு களுடன் வசதியாக வாழ்பவராகத் தெரிந்தது. அவர் என்னைப்பற்றி விசாரித்தபோது! சிறிதும் தயக்கமில்லாமல், தற்போது நான் வாழும் வாழ்கையைப் பற்றியும், எனது கடந்த கால வாழ்கையைப்பற்றியும் விபரமாக கூறி முடியும் நேரம் நான் தங்கியிருந்த முகாமின் வாசலுக்கு வந்து விட்டதால் வாகனத்தை நிற்பாட்டினார்.

நன்றியைக் கூறி இறங்குவதற்கு எத்தனித்தபோது ஓர் சிறிய தாளில் தற்போது தான் தங்கியிருக்கும் சகோதரியின் விலாசத்தை எழுதித் தந்தவர், “சீலன் நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் தங்கச்சி வீட்டில் இருப்பேன். முடிந்தால் என்னை நாளைக்கு வந்து சந்தியும் எனக் கூறி விலாசத்தைத் தந்தவர் “றெயினில் வரக்கூடிய வசயிருக்கா?” எனக் கேட்டவர் ஐம்பது சுவிஸ் பிராங்கை எடுத்து என்னிடம் தர முற்பட்டார்.

“இல்லை அங்கிள் நீங்கள் காட்டும் இவ்வளவு அன்பே போதும், நாளைக்கு காலை பத்து மணிக்கு உங்களிடம் வருவேன்” என்று கூறிக்கொண்டே நன்றியுடன் அந்தக் கனிவான முகத்தை பார்த்தபடியே விடைபெற்றேன்.

எதிர்பாராத ஒரு நல்ல உள்ளத்தை சந்தித்த சந்தோசத்தில் என்னால் அவருடைய பெயரை தெரிந்து கொள்ள முடியவில்லையே என்ற கவலையுடன் அவர் தந்த விலாசத்தை பார்த்தபோது விலாசத்தின் கீழே டேவிட் என்று எழுதியிருந்ததை கவனித்தேன்.

கிறிஸ்தவராக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்

முகாமில் எனது அறைக்குச் சென்று காலையில் நேரத்திற்கு எழும்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் படுக்கையில் விழுந்தேன்.

அப்போது நேரம் அதிகாலை நாலு மணிதான். பொது வாகவே மனிதன் ஆழ்ந்து தூங்கும் நேரம். அந்த மாதிரி தூக்கத்திற்கு சீலன் விடைகொடுத்து பல மாதங்களாகின்றன. நேற்றைய இரவு சந்தித்த டேவிட் அங்கிளின் பரிவுக்குள் மூழ்கிக்கிடந்த சீலனுக்கு அவனுடைய கைக்கடிகாரம் ஆறுமணி என்பதை அறிவித்தது.

நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அறையை விட்டு வெளியே வந்தவன் இரு கைகளையும் மேலே உயர்த்தி சோம்பலை முறித்துவிட்டு பல் தேய்த்து முகம் கழுவி, தேனிரை தயாரித்து பருகியதும், டேவிட் அங்கிளிடம் போவதற்கு தயாரானான்.

இப்போது தனக்கு தெரிந்த டொச் மொழியின் உதவியுடன் விசாரித்து போகமுடியும் என்ற நம்பிக்கையில் சூரிச் தொடருந்து நிலையத்தில் "அர்ரோ"விற்கான தொடருந்தில் ஏறி "அர்ரோ" தொடருந்து நிலையத்தை அடைந்தான். முன்பக்கமாக வீதிக்கு வந்தவன் டேவிட் அங்கிள் நேற்று இரவு கூறியது போல் நேராக சென்று மூன்றாவது சந்தியில் இடப்பக்கமாகத் திரும்பி சிறிது தூரம் சென்றதும் விலாசத்திற்குரிய வீட்டின் முன்னால் நின்றான்.

சுற்றிவர நிலப்பரப்புள்ள வீடாக இருந்தது. வெளிக்கதவைத் திறந்து உள்ளே போவதற்கு எத்தனித்தபோது! அவனுக்காக காத்திருந்தவர் போல் கதவைத் திறந்து "உள்ளே வாரும் தம்பி" என்ற குரல் வந்த பக்கம் திரும்பி பார்த்தபோது கார் கராச்சில் இருந்து வெளியே வந்த டேவிட் சீலனை வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

இருக்கையில் அமரும்படி கூறியவர் தனது மனைவி, பிள்ளை கள் சகோதரி, சகோதரியின் கணவர், அவர்களின் பிள்ளைகளோடு அனைவரையும் அறிமுகம் செய்தபோது அனைவரும் சிரித்தமுகத் தோடு கைகொடுத்து என்னை வரவேற்றார்கள்.

முன் ஹோலில் மாதாவின் சிலையை வண்ண விளக்குகளால் அழகுபடுத்தி வைத்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் உள்ளே சென்றபின்இ என்னைப்பார்த்து "சீலன் கூல்ரிங்ஸ் அல்லது? கபே குடிப்பீரா" என்றபோது இல்லை அங்கிள் "கூல்ரிங்சே போதும்" என்றவாறு இருக்கையில் அமர்ந்தேன்.

அதற்குள் மகள் தகப்பனுக்கும் சேர்த்து ஆளுக்கோர் அழகான

கண்ணாடி தம்ளஉகளில் பழச்சாறை எடுத்து வரவே ஒன்றை எடுத்து என்னிடம் தந்துவிட்டு அடுத்ததை தானும் எடுத்து பருகியபடி" தம்பி சீலன் இன்றைக்கு மத்தியானம் எங்களுடன் தான் லஞ்ச் எடுக்க வேணும்" என்றார்.

அப்படி அவர் கேட்டதை என்னால் மறுக்க முடியாமல் தலையசைத்துவிட்டு மௌனமாக இருந்தேன்.

"என்ன தம்பி ஒன்றுமே கதைக்காமல் இருக்கிறீர்? கவலைகள் மனசுக்குள் இருந்தால் அதைக் கொஞ்சம் தூக்கிப் போடும். உம்மைப் போல் தான் நானும். தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டு எழுபத்து நான்காம் ஆண்டே பிரான்ஸ்சிற்கு வந்து ஆறுமாதம் தங்கியிருந்த பின் ஜெனிவாவிற்கு வந்து சேர்ந்தேன்"

அன்றைய காலகட்டத்தில் இங்கு தமிழர் குறைவு. அப்போ தெல்லாம் இப்போ இருப்பது போல் முகாம் ஒன்றுமில்லை. ஹோட்டல் அறையும் செலவுக்கு பணமும் ஜெனிவாவிற்குள் மட்டுமே சென்றுவர பஸ்சிற்கு மாத ரிக்கற்றும் தருவார்கள்.

அப்போ வேலையில்லாமல் கஸ்ரப்பட்டது மட்டுமல்ல உதவி செய்வதற்கு எவருமே இல்லாது தவித்து திரிஞ்சனான். அந்த நேரத்தில் தான் எதிர்பாராத விதமாக "ஹஸ்லர்" என்ற பிரான்ஸ் காரரை சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் ஜெனிவாவில் றெஸ்ரோறன்ற் ஒன்றின் உரிமையாளர் என்பதால் எனது பரிதாப நிலையை கேட்டறிந்து தன்னுடைய றெஸ்ரோறன்ரில் வேலை தந்தது மட்டுமல்ல எனக்கு பிரஞ்ச் மொழியை கற்பதற்கு ஒழுங்குகளும், தங்குவதற்கு தனியாக அறை வசதிகளும் செய்து தந்தார்.

ஏழு வருசம் கஸ்ரப்பட்டு வேலை செய்தபடி கிடைத்த மிகுதி நேரத்தில் பாசையைப் படித்தேன். அதன் பின் ஹஸ்லர் தனது றெஸ் ரோறன்ரை விற்றுவிட்டு பிரான்ஸ்சிற்கு செல்வதற்கு முடிவெடுத்தார். அந்த நேரத்திலும் அவர்தான் எனக்கு "ரவல் ஏஜன்சிக்கு" படிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். "ஹஸ்லர்" என்னை விட்டு பிரியும் நேரத்தில் எனக்கு டிப்ளோமும் கிடைத்ததால் சிறிய இடத்தில் "லின்ரா ரவல் ஏஜன்சி" என்ற பெயரோடு ஸ்தாபனத்தை ஆரம்பித் தேன். மனைவியுட்பட மூன்று ஜெனிவாவில் வசிக்கும் சுவிஸ் நபர் களும் பணிபுரிகிறார்கள். எனது பிள்ளைகள் இருவரும் தற்போது ஜெனிவா பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்! என்னை இவ்வளவு உயரத்திற்கு முன்னேற்றிய ஹஸ்லர்

இப்போது உயிரோடு இல்லை".

டேவிட் அங்கிள் அதைச் சொன்னபோது அவரது கண்கள் நெகிழ்ந்து போயிருந்தன. இதயத்தின் ஆழத்திலிருந்து அதைச் சொல்கிறார் என்பதை அவரது குரல் காட்டித் தந்தது.

சிறிது நேரத்தில் என்னைப் பார்த்து புன்னகைத்தவர். நேற்று இரவு என்னோடு காரில் வரும்போது கூறிய சோகம் நிரம்பிய கதை எனக்கு மிகுந்த கவலையைத் தந்தது மட்டுமல்ல, இன்று நீர் இருக்கும் நிலையில் அன்று நான் இருந்தனான் என்பதால் எனது கதையை கூறவேண்டியதாகி விட்டது.

"சரி உம்முடைய விசயத்திற்கு வருவம். நீர் அடுத்ததாக என்ன செய்யப்போகிறீர்? நீரோ இருப்பது சுவிஸ்சிலை. பத்மகலா இருப்பதோ கனடாவிலை. உம்முடைய உத்தேசம் தான் என்ன?"

"அங்கிள் எனக்கு இப்போ தான் "அக்சப்ற்" பண்ணியிருக் கிறாங்கள் என்று நேற்று வரும்போது சொன்னனான் தானே! எங்கை யென்றாலும் முதலில் ஒரு வேலையை தேடி எனக்கிருக்கின்ற கடன் பிரச்சினையை தீர்க்கவேண்டும். பத்மகலா எப்படியும் படிச்சு முடிக்க இரண்டு வருசமெண்டாலும் வேணும். முதலிலை என்ரை கடன் முடியட்டும் அதன் பிறகு யோசிப்பம்."

"அப்ப முரளி என்ற உம்முடைய "வில்லங்க" மானவருக்கு கனடாவில் பெண் பார்ப்பதாகவும் பத்மகலாவைத்தான் செய்ய முரளியின் மாமாவின் குடும்பத்தினர் முயற்சிக்கிறார்கள் என்று சொன்னீரல்லவா?"

"அங்கிள் அப்படி ஏதாவதென்றால் அதை பத்மகலாதான் தீர்மானிக்கவேண்டும். எனக்காக காத்திருப்பேன் என்று சொன்னவள் அவள். எனக்காக காத்திருப்பாள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது."

"சந்தோசம் தம்பி உமது நம்பிக்கையை நான் பாராட்டுறன். அது மட்டுமல்ல நான் இப்ப சொல்லப் போவதைக்கேட்டு அதிர்ச்சி யடையாதையும். நீர் இங்கு வருவதற்கு முன்பே உமக்கு சூரிச்சில் ஒரு வேலையை ஒழுங்கு பண்ணியிருக்கிறன்."

சந்தோசம் மிகுந்த ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன்.

ஓர் சிறிய புன்முறுவலுடன் "என்னுடைய சித்தப்பாவின் மகன் டானியல் சூரிச் "நைசப் ஸ்ரார்சா" வுக்கு சிறிது தூரத்திலுள்ள "மக்டொனால்சில்" வேலையாக இருக்கிறார். வேலைக்கு ஆட்கள் எடுப்பது, சம்பளப் பட்டியல் தயாரிப்பது, வேலை செய்பவர்

களுடைய நேர அட்டவணை தயாரிப்பது போன்ற அலுவலக விடயங்களுக்கு பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கிறார். இன்று காலையில் கதைத்தபோது தற்போது தாங்கள் வேலைக்கு ஆட்கள் எடுப்பதாகவும் முடிந்தால் நாளை காலை உம்மை கூட்டிக்கொண்டு வரும்படியும் வரும்போது உமது போட்டோவும், வதிவிடவுரிமைப் பத்திரத்தையும் கொண்டுவரும்படி கூறினார்.

அவர் அப்படி கூறியதும் சந்தோசம் தாங்க முடியாமல் அந்தக் கனிவு முகத்தை இன்னொரு முறை தரிசனம் செய்தபடி ஹோலின் மூலையில் இருந்த மாதாவை மனசுக்குள் வேண்டிக் கொண்டேன்.

“அப்பா சாப்பாடு ரெடி. தம்பியையும் கூட்டிக்கொண்டு வாங்கோ” என்று மனைவி குசுனிக்குள் இருந்து குரல் கொடுத்தார். “சீலன் எழும்பும் சாப்பிடுவோம்” என்று கூறி என்னை டைனிங் ஹோலுக்கு அழைத்துச் சென்றார். அனைவரும் ஒன்றாக இருக்கக் கூடிய பெரிய மேசையில் அமர்ந்தோம்.

அன்றைய தினத்தை சந்தோசமாக்கிய ஆண்டவனுக்கு பிரார்த்தனை செய்தபோது! எனக்குமாக சேர்த்து பிரார்த்தனை செய்து முடிந்ததும் சாப்பிடும்படி கூறினார்கள். நீண்ட நாட்களுக்குப் பின் அன்பான பரிமாறலுடன் என் வாழ்கையை திசை திருப்பப் போகின்ற டேவிட் அங்கிளின் குடும்பத்தினருடன் இணைந்து சாப்பிட்டது மனசுக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது.

டைனிங் ஹோலை விட்டு ஹோலுக்கு வந்து இருக்கையில் அமர்ந்தேன்.

சிறிது நேரத்தில் புன்னகையோடு வந்த டேவிட் அங்கிள், “சீலன் உமக்கு வேறை வேலையொன்றும் இல்லைத்தானே?”

“இல்லை அங்கிள் ஏன்? கேக்கிறீங்கள்?”

“இல்லை! என்னுடைய பிள்ளைகள், தங்கச்சி எல்லோரும் “குறுஸ்லிங்கன்” என்ற இடத்திலுள்ள டொல்பின் மீன்களின் கண் காட்சியை பார்க்கப் விரும்புகிறார்கள். அந்த இடம் சூரிச்சிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த “ஹொணிலாண்ட்” என்ற பொழுதுபோக்கு வதற்கான இடம். உம்மையும் கூட்டிக்கொண்டு போகலாம் என்று விரும்புறோம். எங்களோடு வரவிருப்பமா? திரும்பி வரும்போது றெஸ்ரோறன்ரில் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வரும் வழியில் உம்மை முகாமில் இறக்கி விடுகிறோம்.”

அவஉகளுடைய விருப்பத்தை என்னால் தட்ட முடிய

வில்லை.

"ஹொணிலாண்ட்" சென்ற சிறிது நேரத்தில் டேவிட் அங்கிளுடைய மனைவி ரோசி அன்ரி, பிள்ளைகள் லின்ரா யஸ்மின், சகோதரி மெற்றில்டா அன்ரி, கணவர் அன்ரன், அவர்கள் பிள்ளைகள் றொபின், ஜெரால்ட் அனைவரும் என்னுடன் பழகிய விதத்தால் தங்களுடைய குடும்பத்தில் ஒருவனாக்கி விட்டார்கள்.

இருந்தாலும் ஒரேயொரு கவலை என் மனதை வாட்டியது. அன்ரன் அங்கிள் ஒற்றை கையில் ஊன்று தடியுடன் நடப்பதற்கு சிறிது கஸ்ரப்பட்டப்படியே நடந்தார். போகும்போது டேவிட் அங்கிளி டம் அதைப்பற்றி கேட்போம் என்ற எண்ணத்துடன் பொழுது போவதே தெரியாமல் அவர்களோடு சந்தோசமாக கழித்தேன்.

அங்கிருந்து புறப்பட்டு றெஸ்ரோறன்ரில் இரவு உணவை உண்டபின் காரில் வரும்போது அன்ரன் அங்கிளைப்பற்றி டேவிட் அங்கிளிடம் கேட்டேன்.

அன்ரன் ஒரு "ஸ்ரீல் பக்ரறி" யில் மெசினிஸ்ராக வேலை செய்கிறார். ஒன்பது மாதத்திற்கு முதல் மெசின் பழுதடைந்து ஸ்ரீல் பார் ஒன்று உடைந்து இடுப்பில் பலமாக அடித்ததால் இடுப்பில் தசை நசிந்து விட்டது என்று டாக்ரர்கள் சொல்கிறார்கள். மாதத்தில் நான்கு முறை தெரப்பிக்கு போய்வருவார். அவரால் தொடர்ந்து அதிகநேரம் நடக்க முடியாது. அதிகநேரம் நின்றும் வேலை செய்ய முடியாது. அவருடைய இன்சூரன்ஸ் தான் எல்லாமே செய்கிறார்கள்.

வருகிற பாடசாலை விடுமுறையில் மெற்றில்டா அவரைக் கூட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்கு போய் இரண்டு மாதம் கோவை யில் அல்லது கேரளாவில் ஆயுர்வேத வைத்தியம் செய்து பாப்பம் என்று தீர்மானிச்சிருக்கிறார். அல்ட்ரா சவுன்ட் ஸ்கேன் இருக்கும் இந்த நவீன மருத்துவ காலத்திலும் அவருடைய தசை நசிவுக்கு சரியான மருத்துவம் செய்ய முடியவில்லை. ஆயுர்வேதத்தையாவது செய்து பார்ப்பம் என்ற மெற்றில்டாவின் நம்பிக்கை அது. அதுவும் ஓரளவில் சாத்தியப்படலாம். அந்தக் காலத்தில் 23 மி. மீற்றர் கருப்பையையும் அந்தக் கருப்பையில் ஐந்தாம் மாதம் காது, மூக்கு, உதடும் ஏழாம் மாதம் தலைமுடியும் வளரும் என ஒவ்வொரு நாளும் கருப்பையின் வளர்ச்சியை கணக்கிட்டு வைத்தவர்கள் சித்தர்கள்.

1700ம் ஆண்டில் கால்நடையாகவும் குதிரையிலும் உலகின் பல பாகங்களுக்கு சென்று ஏராளமான தாவரங்களை பதிவு செய்த

சுவீடன் நாட்டு நவீன தாவரவியல் தந்தை "கார்ல் லின்னேயஸ்" என்பவருக்கு வரலாற்றில் தந்திருக்கும் மரியாதை, எங்கள் தமிழ் சித்தர்களுக்கில்லையே! அன்று அவர்கள் எழுதி வைத்த ஏடுகளில் அனேகமானவையை ஐரோப்பிய நாடுகள் கவர்ந்து வந்து இன்றும் ஜேர்மனியில் அதை பாதுகாப்பாக பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை சில வருடங்ளுக்கு முன் பத்திரிகையில் படித்த ஞாபகம். இறைவனின் அருளிருந்தால் மெற்றில்டாவின் விருப்பம் நிறைவேறும் என்று கூறி முடிக்கையில் எனது முகாமிற்கு முன்னால் கார் நின்றது.

"நாளை காலை எட்டு மணிக்கு வருவேன் தயாராயிரும் சீலன்" என்று கூறி விடைபெற்றபோது! எல்லோருமே அன்போடு கைகளை அசைத்து விடைபெற்றார்கள். அவர்கள் என் கண்களில் இருந்து மறைந்ததும் முகாமிற்குள்ளே போவதற்கு திரும்பியபோது உள்ளே நின்ற விறுமாண்டி என்னைப் பார்த்து உனக்கு இவ்வளவு பெரிய குடும்ப உறவா? இரண்டு காரில் வந்த அனைவரும் இங்கு எங்கே? இருக்கிறார்கள் என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

எதிர்பாராமல் கிடைத்த அன்புள்ளங்களை உறவில்லையென சொல்லமனமின்றி ஆமென்று தலையாட்டிவிட்டு எனதறைக்குள் சென்றேன். எனக்குள் சந்தோசம் துள்ளி விளையாடியது. விழுதல் என்பது எழுதலுக்காகத் தான் என்பதை ஆண்டவன் டேவிட் அங்கிள் ரூபத்தில் உதவி புரிகிறார் என்ற எண்ணத்தோடு படுக்கையில் விழுந்தேன்.

எட்டு மணிக்கு என்னை அழைத்துச் செல்வதற்கு டேவிட் அங்கிள் வருவார் என்பதால் நித்திரைக்கு விடைகொடுத்து குளித்து விட்டு முகாம் வாசலில் அவருக்காக காத்து நின்றேன்.

சரியாக எட்டு மணிக்கு வந்த டேவிட் அங்கிள் சூரிச் மக்டொ னால்சிற்கு அழைத்துச் சென்று டானியலிடம் என்னை அறிமுகம் செய்தவர், சற்றுத் தூரத்திலுள்ள றெஸ்ரோறன்ரில் இருப்பதாகவும் அங்கே வரும்படியும் கூறிவிட்டு சென்றார்.

டானியல் மக்டொனால்சிற்கு மேலே உள்ள அலுவலக அறைக்கு அழைத்துச் சென்று என்னிடம் டொச் மொழியில் விபரங் களை கேட்டுத் தெரிந்து விண்ப்பப்படிவத்தை நிரப்பி என்னிடம் போட்டோவை பெற்றுக்கொண்டதும் விண்ணப்பப்படிவத்தில் கையெழுத்திடும்படி கூறினார். கையெழுத்திட்டதும் தற்போது உமக்கு எண்பது வீதம்தான் வேலைக்கு பதிந்திருக்கு. மூன்று நாட்

களுக்கு தினமும் இரண்டு மணித்தியாலம் வேலை பழக்குவார்கள். மூன்று மாதம் முடிந்ததும் நூறு வீதமாக்குவோம். அதன் பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கும்போது உமக்கு உதவி மனேஜருக்கான வேலை உயர்வு தர முயற்ச்சிப்போம். வேலை செய்து கொண்டு மொழியை படிக்க முயற்சித்தால் இங்கு உமக்கு நல்ல எதிர்காலம் உண்டு. ஆறு மாதங்களின் பின்னர் உமக்கு பதின் மூன்றாவது மாதச்சம்பளம் ஐம்பது வீதம் கிடைக்கும். ஒரு வருடத்தின் பின்னர் பதின்மூன்றாது மாதச்சம்பளம் நூறு வீதமாகும். ஆறு மாதத்தின் பின்னர் உமது முயற்ச்சியைப் பார்த்து உரிமையாளரிடம் பேசி மொழியை படிக்கும் செலவை நாமே பொறுப்பேற்போம் என்ற விபரங்களையும் கூறினார்.

பின்னர் என்னை கீழே அழைத்து வந்து றெஸ்ரோறன் மனேஜருக்கும் அங்குவேலை செய்பவர்களுக்கும் அறிமுகப்படுத்தியபின் சாப்பாட்டறை, உடைமாற்றும் அறையென எல்லாவற்றையும் காட்டியதும் நான் அணியவேண்டிய உடைகள் இரண்டு சோடியை தந்து, மறுநாள் காலை பத்து மணிக்கு வரும்படி கூறியவர் எனது கரத்துடன் கரமிணைத்து விடைபெற்றார்.

விடைபெற்று வெளியே வந்தபின் டேவிட் அங்கிள் காத்திருந்த றெஸ்ரோறன்றுக்குள் சென்றபோது, மேசையில் இருந்தபடியே அருகே இருந்த இருக்கையில் அமரும்படி எனக்கு டை காட்டி இருவருக்கும் கபே ஓடர் பண்ணிவிட்டு நடந்தவற்றை விபரமாக கேட்டு தெரிந்து கொண்டவர் என்னைப் பார்த்து, "சீலன் இன்றைக்குதான் உம்முடைய முகத்தில் சந்தோசத்தை காணுறன்".

"அங்கிள் உங்களை சந்திக்கிறதுக்கு முதல் எனக்கு வேலை கிடைக்கவேணும், எனது கடன் பிரச்சினைகளை தீர்க்கவேணும், என்றாவது ஒருநாள் பத்மகலாவோடு மக்டொனால்சில் இருந்து சாப்பிடவேணுமென்று மனக்கனவு கண்டனான். எனக்கு மக்டொனால்சிலேயே வேலை கிடைச்சிருப்பதை என்பதை நினைச்சு பார்க்கவே முடியவில்லை. உங்களை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்".

"என்னவோ தெரியவில்லை சீலன் முதல் நாள் என்னுடைய காரில் வரும்போது நீர் கவலையோடு சொன்ன உமது கடன் பிரச்சினை, உமது பல்கலைக்கழக படிப்பை தொடரமுடியாதது மட்டுமல்ல உமது காதலி பத்மகலாவைப் பற்றி சொன்னதும் என் மனதிற்கு மனவேதனை ஏற்பட்டதால் உமக்கு உதவி செய்ய என் மனம்

எண்ணியது".

சீலன்! கவலை இல்லாத மனிதர்களே இவ்வுலகில் இல்லை. ஆனால் அதை எதிர்கொள்வதில் தான் ஒவ்வொருவரின் வெற்றி, தோல்வி, துயரம், நிம்மதி எல்லாமே இருக்கிறது. அதைத் தாமே எதிர்த்து முன்னின்று போராடுபவர்கள் ஒரு சிலர் தான்.

எதிர்காற்றில் மிதிக்கும் மிதிவண்டி போலவே மனிதனின் வாழ்கை ஒரு போராட்டமாகும். இனிமேல் உம்முடைய முயற்சியில் தான் எல்லாமே தங்கியிருக்கு. முகாமில் இருந்து ஒவ்வொருநாளும் சூரிச் வந்து போவதென்றால் கொஞ்சம் கஸ்ரமாகத் தான் இருக்கும்.

உமக்கு வேலை கிடைத்த பின்னர் முகாமில் தங்கியிருக்க முடியாது என்பதால் தற்காலிகமாக தவராசாவுடன் தங்கியிருந்து கொண்டு வசதியாக ஒரு சின்ன அறை எடுத்த பின்னர் எல்லாம் நன்மையாக அமையும்.

இனிமேல் தான் சீலன் நீர் தனியே எடுத்து வைக்கும் காலடி ஒவ்வொன்றும் கவனத்துடன் எடுத்து வைக்க வேண்டும். மனிதர்களுள் பொல்லாக் குணமுடைய மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களை இனம் கண்டு உமது பாதையில் நீர் பயணிக்கவேணும். முப்பது வருடங்களுக்கு மேல் ஐரோப்பாவில் தமிழர் இங்குள்ள சூழலுக்கேற்றவாறு வாழப்பழகிக் கொண்டார்கள். வெள்ளைக்காரன் கை குலுக்கும் போது சாதி பார்ப்பதில்லை. இங்குள்ள தமிழர்கள் வெள்ளைக்காரரோடு பழகியும் பணிபுரிந்து கொண்டும் இன்னும் சாதிக்கு கொள்ளி வைக்கிறார்களில்லை. இங்கு வளரும் தலைமுறையினருக்கும் எண்ணை ஊற்றிக்கொண்டே இருக்கிறார்கள்.

அடுத்தது உமது வருமானம். உமக்கு கையில் பணம் வைத்து செலவு செய்து பழக்கமில்லை. இனி கிடைக்கப்போகும் சம்பளம் மிகப்பெரிய தொகையாக உமக்கு தோன்றக்கூடும் கண்டதையும் வாங்கி கணக்கின்றி செலவு செய்யாமல் அளவோடு செலவு செய்து கொள்ளும். உம்முடைய உணவு, உறைவிடம், தேவையான உடை போக மிகுதியை சேமித்து உமது கடனைத் தீர்க்கப் பாரும்.

துணிவும் தன்நம்பிக்கையுமே உமது வாழ்கைக்கு வழிகாட்டியாக இருக்கும். பொறுமை, அடக்கம் உம்மிடம் உண்டு. இதையே தொடர்ந்து நீர் கடைப்பிடித்தால் அறிவியல் என்னும் வானத்தை ஆளும் சுகம் உமக்கு கிடைக்கும். உண்மை, நேர்மை உமது உள்ளத்தில் எப்போதும் நிறைந்திருக்க வேண்டும். இவை தான் சீலன்

உமக்கு என்னால் கூறக்கூடிய புத்திமதிகள் என்றவர், மேசையில் கபேக்குரிய பணத்தை வைத்துவிட்டு என்னை அழைத்துக்கொண்டு வெளியேறி காரில் ஏற்றிக்கொண்டு முகாம் நோக்கி புறப்பட்டார்.

நேற்றுடன் எனது விடுமுறை முடிவுற்றது. உமக்காகத்தான் இன்று நின்றேன். பின்னேரம் எனது குடும்பத்துடன் ஜெனிவாவுக்கு போயிடுவன். திரும்ப எனக்கு சூரிச் வர சந்தர்ப்பம் கிடைச்சால் உம்மிடம் வருவேன். அப்போது உம்மை நல்ல நிலையில் பார்க்க வேணும் என்று என்று கூறியவாறு வந்தவர் முகாம் வாசலில் காரை நிறுத்தினார்.

காருக்குள் இருந்தவாறு கைகுலுக்கி சிறிய என்பலப் ஒன்றை எனது சேட்டுப் பையில் திணித்து "இது எனது சிறிய அன்பளிப்பு" என்றவர் காரை இயங்க வைத்து என்னிடமிருந்து விடைபெறும் போது, அங்கிள்! அன்ரி, மெற்றில்டா அன்ரி எல்லோரையும் கேட்ட தாகச் சொல்லுங்கோ".

"கட்டாயம் சொல்லுவேன்" என்றபடி காரை நகர்த்தினார்.

இருளில் மூழ்கியிருந்த எனக்கு பரிவு பாசத்துடன் ஒளியேற்றி யவர் என்னை விட்டு பிரிவதை பார்த்துக் கொண்டு நின்ற என் கண் களில் நீர் பெருக்கெடுத்தது. அவர் என்னிடம் தந்த "என்பலப்பை" பிரித்துப் பார்த்தபோது அதற்குள் ஆயிரம் சுவிஸ் பிராங்குகளும் சிறிய கடிதமும் அத்துடன் "விசிற்றிங் காட்டும்" இருந்தது.

கடிதத்தை பிரித்தபோது "சீலன் இந்தப் பணத்தை கையில் தந்திருந்தால் நீர் ஏற்றிருக்கமாட்டீர். தந்ததன் காரணம் நீர் முகாமை விட்டு வெளியேறினால் உமக்கு தொலைபேசி வசதியிருக்காது. இந்தப் பணத்தில் சிறிய கைத்தொலைபேசியை வாங்கவும். மிகுதியை சம்பளம் கிடைக்கும்வரை உமது வேலைக்கு சென்றுவருவதற்கான செலவுக்கு வைத்திரும். தொலைபேசி வேண்டியதும் பத்மகலாவுடன் உடனடியாக தொடர்பு கொண்டு உமக்கு வேலை கிடைத்ததைப் பற்றி தெரிவியும். முடிந்தால் என்னுடைய தொலைபேசி இலக்கத் திற்கு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொண்டு உமது சுகத்தை தெரிவிக்கவும்".

அன்புடன்
டேவிட் அங்கிள்

கடிதத்தை மடித்து வைத்துவிட்டு அவருடைய பெருந் தன்மையை நினைத்து மிக மிக சந்தோசத்துடன் எனக்கு வேலை

கிடைத்ததை தவமண்ணைக்கு சொல்ல வேண்டுமென்ற ஆவலுடன் முகாமுக்குள் சென்றேன்.

***

காலை எழுந்து பாணை உண்டபின், தான் வேலை செய்யப் போகும் மக்டொனால்சுக்கு போய் பார்ப்போம் என எண்ணியபடி அங்கு போனான். மக்டொனால்ஸ் அமைந்திருந்த இடம் அவனுக்கு பிடித்திருந்தது. விரைவுப்பாதைக்குப் போகும் கிளைப் பாதையில் அந்த மக்டொனால்ஸ் அமைந்திருந்தது. அழகாக கட்டப்பட்டிருந்த அந்த உணவகத்தைச் சுற்றி கண்ணாடியாலான வேலியும் உள்ளே பூச்சாடிகளில் பூச்செடிகள் வைக்கப்பட்டிருந்தன.

விற்பனைப் பகுதிக்குச் சென்ற சீலன் ஒரு கோப்பியை வாங்கிக் கொண்டு வந்து நாற்காலியில் அமர்ந்து மெதுவாக கோப்பியை குடித்தவாறு கண்ணாடி வேலிக்கூடாக விரைவுப் பாதைக்கு போகும் கார்களை பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அப்பொழுது அவனைக் கடந்து ஒரு தமிழர் தோளில் ஒரு பையைப் போட்டவாறு விற்பனைப் பகுதியை நோக்கிப் போகும் போதே அங்கு வேலை செய்து கொண்டிருந்த பெண் "கலோ மகேந்தி விடுமுறை முடிந்துவிட்டதா" என ஜேர்மன் மொழியில் கேட்டதை சீலன் புரிந்து கொள்கிறான்.

மகேந்தி என்ற அவர் மக்டொனால்ஸ்ஸில் வேலை செய்பவர் என்பதும் அவர் விடுமுறை முடித்து மீண்டும் இன்று வேலைக்கு வருகிறார் என்பதை சீலன் விளங்கிக் கொள்கிறான்.

மக்டொனால்சிக்குள் போன மகேந்தி வேலைக்கான உடையைப் போட்டுக் கொண்டு கையில் ஒரு கோப்பிக் கோப்பையுடன் வெளியே வந்ததும் கோப்பி குடித்துக் கொண்டு சீலன் இருப்பதைக் கண்டதும் அவனை நோக்கி வந்து அவன் முன்னால் இருந்த நாற்காலியில் உட்காருகிறான்.

ஒருவருக்கொருவர் வணக்கம் சொன்னதன் பின்னர் மகேந்தி சீலனைப் பற்றி முதலில் விசாரிக்கிறார். சீலன் தான் சுவிஸ்சுக்கு வந்து கிட்டத்தட்ட ஆறு மாதமாகிறது எனச் சொல்ல மகேந்தி தான் வந்து ஐந்து வருடங்களாகிறது என்கிறான்.

சுவிஸ்சுக்கு எப்படி வந்தனீங்கள் என சீலனைக் கேட்க, தான் கொழும்பிலிருந்து ஆஸ்திரியா வந்து அங்கிருந்து சூரிச்சுக்கு வந்ததைச் சொல்லிவிட்டு மகேந்தியிடம் "நீங்கள் எப்படி வந்தனீங்கள்"

*என்று கேட்கிறான்.*

*தன்னுடைய பெயர் மகேந்திரன். தன்னை எல்லோரும் மகேந்தி என்றுதான் கூப்பிடுவார்கள் எனச் சொன்ன மகேந்தி கைக்கடினாரத்தைப் பார்க்கிறான். வேலைக்கு இன்னும் முப்புது நிமிடங்களிருக்கவே தான் எப்படி வந்தேன் என்பதைச் சொல்லத் தொடங்குகிறான்.*

*மகேந்தி நகைச்சுவை உணர்வு உள்ளவன் என்பதை அவன் தனது அகதிப் பயணத்தைச் சொல்லத் தொடங்கும் போதே சீலன் புரிந்து கொள்கிறான். மகேந்தி கொழும்பிலிருந்து தாய்லாந்து வந்து தாய்லாந்திலிருந்து தனது கதையைச் சொல்லத் தொடங்குகிறான்.*

*ஐரோப்பிய நாடொன்றுக்கு தனி ஆளாக போவதைவிட கணவன் மனைவியாக போவதே சுலபமானது என ஏஜன்சி தாய் லாந்தில் வாழும் ஒரு பெண்ணை ஒழுங்கு செய்ய அவளுடன் மகேந்தி தாய்லாந்து விமான நிலையத்தில் வந்து நிற்கிறான்.*

*"நீ அது... தானே? இண்டைக்கு என்னோட வாறியா எண்டு கேகிறாங்க. கறுமம் கறுமம். நிக்கிறது தான் நிக்கிறான் கொஞ்சம் நெருங்கி நிக்கிறானா..? தெருப்பொறுக்கியள் வலிய வந்து இப்பிடி எல்லாம் பேச விட்டிட்டு கண்டும் காணாம நிக்கிறான். கட்டிய கணவனையே அருகில் கட்டினவன் மாதிரி ஒட்டி நில்லுங்கோ எண்டு கேக்க வேண்டிய நிலை எனக்கு. இது என்ன மனுசப்பிறப்பா இல்லை வேற ஏதுமா? என குறும்போடு குறுகுறுத்தாள் மகேந்திரனின் மனைவி கனிதா. அவளின் முணு முணுப்பு உதடுகளுக்கு வெளியே உறுண்டு சென்று மகேந்திரனின் காதுகளிலும் விழுந்தது .*

*மகேந்திரன் இவ்வளவும் கேட்டும் சும்மா இருப்பானா "கலோ நீர் ஒன்றும் தாலி கட்டின பொண்டாட்டி இல்லை. தப்பான முறை யில் ஒட்டிக்கொண்டவள். அதையே சாட்டாக வைத்து - பிளாக் மெயில்பண்ணி சொந்த புருசனாக மாற்ற கனவு காணாதையும். என்னை விட உமக்கு ஐந்து வயது அதிகம் என்பதையும் உங்கட அப்பா கட்டாயப்படுத்தினதால தான் இந்த விளையாட்டுக்கே நான் சம்மதிச்சனான் எண்டதையும் மறந்து போடாதையும்" என்றான். மலை விழுங்கி போல விறைத்தபடி மண் விழுங்கிய குழந்தை போல மூக்கை சுழித்து அருவருத்தபடி மகேந்திரன்.*

*"எல்லாம் என் தலை எழுத்து" என்பதாய் சுடிதாரை சீர் செய்து கொண்டு நெற்றியில் வளிந்த குறுமுடியை ஒதுக்கினாள் கனிதா.*

இருந்தாலும் சற்று முன் நடந்தவற்றை நினைக்க மகேந்திர னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“பொடாய்... பொடாய் ...” என்று கனிதா தாய்லாந்து பாசை யில் நாயை எதிர்க்கும் பூனை போல ஒரு தாய்லாந்து காரனை பார்த்து சீறி வார்த்தைகளை விட்டெறிந்ததை தான் ஏதுமறியாது அருகில் அணிலேற விட்ட நாய் போல மேலேறும் விமானங்களை பாடித்து ஏங்கி நின்றதும். அவள் கடுப்பு தாங்க முடியாமல் “மகேந்திரன் அவங்க என்ன கேக்கிறாங்க எண்டு தெரியுமா..?” என கேட்க. அவன் “அவங்க தாய்லாந்து பாசையிலயா பேசினாங்க? “என பதில் சொல்ல, “பேசின மொழி என்ன என்றே தெரியாதவனுக்கு என்ன பேசினாங்க என்றா தெரியப்போகிறது” என அவள் முணுமுணுத்ததை எல்லாம் மீட்டிப்பார்த்து சிரித்தான். இதனால் மகேந்திரன் ஒன்றும் சேமணப்பயல் இல்லை. கூர்ந்த சிந்தனையாளன்.

தாய்லாந்தில் யாரோ ஒருத்தியை மனைவியாக நடிக்க வைத்த காலத்தை எண்ணியபடியே கலங்கி நின்றான் மகேந்திரன்.

மாமா சாதி குறைஞ்ச இடத்தில கலியாணம் செய்தது எண்டு தமையனின் செத்த வீட்டுக்கும் பக்கத்தில இருந்தும் போகாத மனிசி இந்த அம்மா மனிசி. கேட்டால் “அந்த காலத்தில யாழ்ப்பாணத்தில இருந்து வன்னிக்கு குடி தண்ணியோட விதான வேலைக்கு போய் வந்த கந்தவனத்தாரின் அடித்தோன்றல் நான்” எண்டு அடிக்கடி சொல்லும் அம்மாவை சாந்தப்படுத்தி, இவை எல்லாவற்றையும் சாத்தியப்படுத்த வேண்டும். அம்மாவும் பாவம் என்னை பெற்றதை தவிர இந்த பிறப்பில எந்த சுகத்தையும் கண்டதில்லை. மனிசியின்ர கழுத்தில காதில கிடந்ததையும் வித்துப்போட்டு வந்து அரை வழியில ஆற்றையோ கால்ல விழுந்துகொண்டு நிக்கிறன் நான். தங்கச்சிக்கு வேற வயதாகுது இந்த ஏஜென்சிகள் ஏத்திறன் ஏத்திறன் எண்டு நாளைத்தான் ஏத்திறாங்கள் ஆளை ஏத்தக்காணம் எனச் சினந்தான்.

திரைகடல் ஓடி திரவியம் தேடு என்பார்கள். நாமோ திரவியம் கொடுத்து திரைகடல் ஓடிக்கொண்டு இருக்கிறோம். எல்லாவற்றுக் கும் அந்த ஒன்றேதான் காரணம்.

கனிதா முனிதான் என்பது போல அவனையே முறைத்துக் கொண்டு அருகில் நின்றாள். அவளுக்கு இந்த எயர்போட்டால இவனை பிடிபடாம கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற பட படப்பு. இப்படி ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளானதில் அவளுக்கும்

விருப்பம் இருக்காது தான்.

அவ்வளவுக்கு அவள் ஒன்றும் பணமோ அழகோ அறிவோ இல்லாதவள் இல்லை. அவளின் தாய் தாய்லாந்து பெண்மணி. தந்தை தான் தாய்லாந்துக்குப் பிழைக்க வந்த இந்தியத்தமிழர். இப்படி பஞ்சத்திற்கும் தாய்லாந்து வர்ணத்திற்கும் பிறந்த பஞ்சவர்ண கிளி அவள். பார்ப்பதற்கு மொட்டு விரியாத காளான் போல வெள்ளையும் மென்மையுமாய் இருப்பாள். தலை முடி மட்டும் சோளன் பொத்தி தும்பு போல செம்பட்டை நிறத்தில் ஏதோ அடித்து வைத்திருந்தாள்.

பாவம் எங்கும் போக முடியாமல் இடைவழியில் முழித்துக் கொண்டு திரும்பி ஊருக்கு போனாலும் உயிர்பயம் என்று இருந்த மகேந்திரனுக்கு உதவி செய்ய ஓம் என்று வாக்கு கொடுத்து பணமும் வேண்டி விட்ட அப்பாவின் சொல்லுக்கு கட்டுப்பட்டு மனைவி வேசம் போட்டு ஐரோப்பா கொண்டு போய் விட ஒப்புக்கொண்டதன் விளைவே இன்று கட்டிய மனைவியாய் இல்லாமல் கடவுச்சீட்டில் படம் ஒட்டியதால் மனைவியாக வர வேண்டி வந்து கண்றாவியாக நிக்கிறாள்.

முன் பின் செத்திருந்தா தானே சுடலை தெரியும் என்பது போல இவன் முன் பின் கட்டி இருந்தால் தானே கணவன் மாதிரி நடக்கத்தெரியும் என கதை விட முடியாது. கட்டினது கட்டாத மாதிரியும் கட்டாதது கட்டினா என்ன செய்ய வேணும் என்றும் பயிற்சி எடுக்கிற காலமிது. கனிதாவும் கட்டாதவள் தான். ஆனால் நாகரீக உலகில் வாழ்வதால் ஏதோ கொஞ்சம் தரிந்து வைத்திருக் கிறாள்.

“மகேந்திரன் நெருங்கி என்னோட கிட்ட நில்லும் பாப்பம்” என்றாள் மண்டக் கட்டெறும்பின் கொடுக்கு போல கண்ணை அகல விரித்தபடி. அவன் “டீசண்டான கணவன் மனைவிகளும் பயணம் போவ துண்டு” என்றான். முட்டினால் தான் முடிச்சது இல்லை என்றால் முடிச்சவித்தது என்று அர்த்தம் இல்லை என்ற தொனியில். கனிதாவின் கோவம் கண்ணில் மின்னி உதட்டில் வெடித்தது. “இங்கு யாரும் யாருக்கும் உறவு முறை நிரூபிக்க வேண்டியதில்லை. உண்மை யான உறவு முறையாய் இருந்தால் இப்படி கள்ளமாக கடவுச்சீட்டில மட்டும் உறவு வைத்துக் கொண்டு இருப்பவர்கள். ஊழியர்களை நம்ப வைக்க அதை இதை செய்து தான் ஆக வேண்டும்.

அப்பா சொல்லும் போது மட்டும் ஓம் ஓம் எண்டு ஒணான்

மாதிரி தலையை ஆட்டினீர். இங்க வந்து குதர்க்கம் பேசுறீர். வெளிநாடு போக வேணும் எண்டால் நான் சொல்லுறபடி என்னோட ஒட்டிக்கொண்டு வாரும். இல்ல நான் தாய்லாந்து ஜெயில்ல இரும்பு சங்கிலி கிலோ கணக்கில தூக்கத்தான் போறன் எண்டு ஆசைப்பட்டா அதுக்குப்பிறகு உம்மிட விருப்பம். செய்யிறது எல்லாம் பிழையான வேலை அதுக்குள்ள கதை மட்டும் வெள்ள வேட்டிக்காறன் மாதிரி என்று" எரி வெள்ளியாய் எரிந்து தள்ளி விட்டு முடிவில் சிறு புன்னகையும் உதிர்த்தாள். கனிதா. கனி என்ற பேரோட கச்சல் காயாய் இருக்கிறாள் என்று எண்ணியபடி சற்று நெருக்கமாகவே நின்றான் மகேந்திரன். என்ன நினைத்தாளோ தெரியாது திடீரென வெடி அரசன் போல திமிர்ந்து வேண்டா வெறுப்பாக விலகி நின்றாள். மகேந்திரன் புரியாமல் விழித்தான்.

மகேந்தி தனது அனுபவத்தைச் சொல்லச் சொல்ல சீலன் ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்தான். மகேந்தி தனது அகதிப் பயணத்தை நகைச்சுவையுடன் விபரித்த போது சீலன் பலமுறை வாய்விட்டுச் சிரித்தான்.

மகேந்தி தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தான்.

அவனின் முழியே எல்லாவற்றையும் காட்டி கொடுத்து விடும் போல இருந்தது. "மகேந்தி கோம்ப திருடினவன் மாதிரி முழிக்காம சுவிங்கத்தை எடுத்து வாயில போடும் நாலாவது கவுண்டரில ஒரு நாதாரி என்னையே பாத்துக்கொண்டு இருக்கு. நானும் அதை கண்டு கொண்டதாக காட்டிக்கொடுத்திட்டன். அவர் என்னை பார்த்து நெளியிறத பார்த்தா எங்கட பருப்பை அவருட்ட அவிக்கலாம் போல கிடக்கு. பார்ட்டி கொஞ்சம் பசலை (பொண்ணு ) வியாதிக்காறன் போல தெரியிறான். அனேகமா தன்னிட்ட தான் நான் வருவன் எண்டு நினைக்கிறான். பாஸ் போட்டை என்னிட்ட தா நான் உன்னை ஒதுக்கிற மாதிரி நடிப்பன்" . என்று மகேந்தியின் காதில் தரையை பார்த்து தாவணியை ஒதுக்கியபடி ஓதினாள்.

அவர்களின் முன்னும் பின்னும் உண்மையான கணவன் மனைவி மற்றும் உல்லாச பயணகாரர்கள் வரிசையில் நின்றாகள். தாய்லாந்து விமான நிலையம் மாதுளம்பழச் சுளை போல அழகாகவும் ஈரமாகவும் இருந்தது. ஆனால் மகேந்திக்கோ வேடித்து கொட்டாத குறைதான். இது எதையும் ரசிக்கும் மனநிலையில் அவன் இல்லை. இதற்காக இன்னமொரு முறைதான் வந்து போக வேண்டும்

என்று எண்ணிக்கொண்டான்.

ஏதோ மூக்கை பொத்திக்கொண்டு பேசுவது போல ஒரு பெண் ஒலிபெருக்கியில் பேசினாள். கனிதா நெஞ்சில் கையை வைத்து பெருமூச்சு விட்டபடி தலையை முகட்டை நோக்கி உயடத்தினாள். மகேந்திக்கும் ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டது என்று மட்டும் தோன்றியது. ஆனால் என்ன என்று புரியவில்லை.

அவள் நெற்றியில் கையை வைத்தபடியே படியே "எங்கட விமானம் வேற இடத்தில நிக்குதாம். ஏதோ இயந்திர கோளாறாம். குறித்த நேரத்திற்கு வெளிக்கிடாதாம் எண்டு சொல்லுறாங்கள். சரியான நேரத்திற்கு போகாட்டி மொஸ்கோவில இருந்து உக்கிரையின் போற ஏற்பாடுகள் எல்லாம் பிழைச்சுப்போகும். இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல. இரு வாறன் அப்பாவுக்கு போன் பண்ணி கேப்பம் என்று அவ்விடத்தை விட்டுப் போனாள். சற்று நேரத்திலேயே திரும்பி வந்தாள். முகத்தில் சலிப்பு தெரிந்தது.

"அப்பா திரும்பி வரட்டாம். பிறகு யோசிப்பம் எண்டு சொல்லுறார். ரிக்கற் காசும் திரும்பி எடுக்க முடியாது அவ்வளவுதான்" என்றாள். எப்படியாவது போய் சேர வேண்டும் என்று மகேந்தியும் இப்படி இப்படியான பாதையில் இப்படி இப்படியான வேளையில் தான் போக வேண்டும் என்பதாய் அவன் முகவர்களும் செயற்பட்டார்கள். இதனால் அவன் அவர்கள் சொல்லும் மகுடிக்கு ஆடவேண்டியவனாய் கனிதா பின்னால் குனிந்தபடி நடந்தான்.

"இனி தாய்லாந்தில் இருக்க முடியாது. விசா முடிந்து விட்டது. அருகில் இருக்கும் கம்போடியாவுக்கோ வியட்னாமுக்கோ போய் விட்டு மீண்டும் வரலாம். அல்லது அங்கிருந்து முயற்சிக்கலாம்" என அப்பா சொன்னதாக கனிதா மகேந்திக்கு சொன்னாள்.

அங்கு இருந்த மேலும் சில பயணிகளையும் மகேந்தியையும் அன்று இரவே பெரு நதி ஒன்றை கடந்து வேறு ஒரு நாட்டிற்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். அது எந்த நாடு என்று தெரியவில்லை. தெரிந்தும் செய்வதற்கு ஒன்றும் இல்லை. பயணம் முடியும் இடத்தில் படுத்தெழும்ப வேண்டியதை தவிர வேறு எதுவும் அவர்கள் கையில் இல்லை. ஆங்காங்கே பல இலங்கையர்கள் பல முகவர்களால் ஓட்டம் தடைப்பட்டு விட்ட காரணத்தால் தொழுவத்தில் கட்டிய குதிரைகள் போல கட்டி வைத்து சாப்பாடு போட்டுக்கொண்டு இருந்தார்கள். கலியாணத்திற்கு வந்த சிலர் இடையில் தாலிகட்டிக்கொண்டார்கள்.

கட்டிய தாலியையும் சிலர் கழற்றினார்கள். இது பாதாள உலகம் பாவ புண்ணியம் எல்லாம் அகலம் என்பது போல அநாகரிகம் நடந்தேறியது.

பூமியில் இருக்கிறோம் என்று மட்டும் தெரியும். எந்த நாடு என்று தெரியாமலே இரண்டு நாட்கள் கழிந்தன. கூட்டிக்கொண்டு வந்தவர்கள் மூச்சு பேச்சு காட்டாமல் இருங்கோ வெளிய திரிய வேண்டாம். எல்லா சாமான்களும் இருக்கு. சமைத்து சாப்பிடுங்கோ என கூறிவிட்டு போய்விட்டார்கள். பார்ப்பதற்கு இந்த நாட்டு மக்களும் தாய்லாந்தக்காரரின் தங்கையின் பிள்ளைகள் போலவே இருந்தார்கள். ஆண் பெண் இருவரும் இரு வேறு முறையிலேயே வணக்கம் சொன்னார்கள். அதாவது தாய்லாந்து கலாச்சாரத்தில் ஆண்கள் “சபாடிகாப்” என்றும் பெண்கள் “ச..பா..டி..கா.......” என்று அரை மைலுக்கு இழுத்தும் வணக்கம் சொல்வார்கள். இது வியட்னாம் இல்லை என்று மட்டும் தெரிந்தது. தாய் எழுத்து போலவே எழுத்து இருந்தது. வியட்னாம் எழுத்து ஆங்கில வடிவ எழுத்து என யாரோ எப்போதோ சொன்னது நினைவில் வந்தது. மூன்றாவது நாள்தான் பிரஞ்சு கொலனியாக இருந்த லாவோஸ் என்னும் புகையிரதம் இல்லாத ஆனால் இலங்கையை விட மூன்று மடங்கு பெரிய நாடு என தெரிய வந்தது. தலைநகரம் வியன்ரியன். இங்குதான் தாங்கள் இருக்கிறார்கள் என்றும் கண்டு கொண்டார்கள். குட்டி நாடுகாண் பணயம் முடிவுக்கு வந்தது.

பிலாக்கொட்டை குருவியை தவிர எல்லா எல்லாவற்றையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டும் பசி தாளாத நாடு. பாம்புப் பயம் இல்லை. தின்றே அழித்து விட்டார்கள். இப்போது நாய்க்கறிக்கு நல்ல மவுசு. யானை மட்டுமே புண்ணியம் செய்த பிறவி. அதுவும் எத்தனை நாளுக்க என்பது சந்தேகமே.

அரிசியை நீத்துப்பெட்டியில் வைத்து அவிச்சு அதை கவிச்சு என்று அழைத்து மூங்கில் குருத்து அவிச்ச தண்ணீரில் நனைச்சு நனைச்சு சாப்பிட்டார்கள். மழை இல்லாத காஞ்ச பிரதேசத்தில் தான் பஞ்சம் வரும் என்று நினைத்தவனுக்கு இங்கே வந்ததும் தான் வறுமைக்கு காரணம் அறிவைப் பயன்படுத்தாத நிலைதான் என்று புரிந்தது.

சிலு சிலு என ஆண்டு முழுக்க மழை. சுடு வெய்யிலோ சுவிஸ் குளிரோ இல்லாத இடைநிலை வெப்பம் இதனாலேயே அவர்கள்

தேசிப்பழம் போல மஞ்சள் நிறத்தில் தகதக என்று இருந்தார்கள். ஆனாலும் என்ன முயற்சி இல்லாமையால் வறுமை. பாடுபடு பவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா என்ற பாட்டுதான் நினைவில் வந்தது.

இன்னுமோர் சுவாரசியம். இயற்கை பிறப்பு சம நிலையில் சிறு கோளாறு. பெண்கள் பெற்ற பிள்ளைகள் பெரும்பாலும் பெண் களாகவே இருந்தார்கள். இதனால் ஆண்களுக்கு அல்ல பெண் களுக்கே அதிக மவுசு. மஜோறிட்டி யாரோ அவர்கள் தான் எல்லாம் என்பதற்கு இன்னுமோர் உதாரணம். பெண்களே அதிக தொழில் துறையில் அதிதியாக இருந்தார்கள். பொருளாதாரம் அவர் களாலேயே வளர்ந்து வந்ததால் ஆண்களிலும் பெண்களே அதிகம் விரும்பப்பட்டார்கள்.

ஒரு ஆண் ஒன்றேகால் பெண்ணக்கு இணையாக இருந்தமை யால் ( இது கணித கணக்கு எனக்கு தெரிந்தது தமிழ் கதைதான்) அவனில் நம்பிக்கை குன்றி விட்டிருந்தது. கட்டாக் காலியாக உணரப் பட்டான். இதனால் அவன் பொறுப்பின்றிய சோம்போறியாகினான்.

முயற்சி குன்ற முடிவு பஞ்சம் என்றாகியது. விசித்திரமான அனுபவம். ஆனால் பயங்கரமான அனுபவங்களை கடந்து வந்தமை யால் மகேந்திக்கு இது எருமை மாட்டில் பெய்த மழை போல இருந்தது. இங்கு எத்தனை நாட்களோ என மனம் விட்டுப்போனது. மூத்த பத்திரிகையாளர் கோமல் “திரும்பிவராட்டி கூட பறவாய் இல்லை என்று நினைச்சா எங்கேயும் பயமின்றி போகலாம்” என்று சொன்னது போல.

சொந்த நாட்டுக்கு போகாம எங்க போனாலும் பரவாய் இல்லை என்று தோன்றியதால் பொறுமையாக இருந்தான். ஆனாலும் யார் கண்டார். எந்த பாதையும் இறுதியில் சொந்த நாட்டிலும் போய் முடிவடையலாம் என்று நினைக்கும் போதுதான் வேதனை நெஞ்சை வாட்டியது.

வலியே மனிதன் எவ்வளவு தனிமையானவன் என உணர்த்தி யது தாயின் நிணலை பிரிந்த இந்த நாட்களில் பழுத்து விழுந்த இலை போல பச்சையமான பாச வார்த்தைகளுக்கு ஏங்கினான்.

பசிக்கும் போதும் பார்க்காமல் நிமிர்ந்து தலையில் இடிக்கும் போதும் ஏன் நித்திரை இன்றி முழிக்கும் போதும் தாய் நினைவு வந்து வாட்டியது. அன்னையின் சுற்று வட்டம் போல் அழகான சுகம்

எங்கும் இல்லை என்பதை முதல் முதலாய் உணர்ந்தான்.

ஏது எங்கே இருக்கிறது என்று தெரியாமல் இருட்டில் தேடித் திரிவது போல மனம் சலித்தது. சமாதானமாக வாழ உகந்த புத்த மத நாடான லாவோசில் இருந்து மீண்டும் பயணம் என்று கூறப்பட்டது ஆனால் எங்கு எப்போது என்று மட்டும் தெரியாது. பயணம் என்றதும் பயமும் வந்து ஒட்டிக்கொண்டது. விமானம் மட்டுமல்ல விமான நிலையமும் அந்தரத்தில் பறப்பது போல உணர்ந்தான்.

வீடு வரா விட்டாலும் அதற்குள் இருந்து வெளியே வந்தால் போதும் என இருந்தது. அழகாக ஆனந்தமாக இருக்க வேண்டிய பறப்பு அனுபவம் முச்சந்தியில் முனிக்கு கழித்த இனிப்பு பணியாரம் போல கிட்ட போகவே பயமாக இருந்தது. என்ன ஆச்சரியம் மீண்டும் அதே கனிதாவோடு கணவன் வேசம் போட்டு கழுத்தில் மாலை போடாத குறையாய் அறுக்கக்கொண்டு போன ஆடு போல தாய்லாந்து விமான நிலையத்தினுள் தள்ளி விட்டார்கள்.

அவனது படத்தை அவனாலே நம்ப முடியவில்லை கோட்டு சேட்டு ரை சப்பாத்து எண்டு காவல் கொட்டில் வெருளியின் நினைவு தான் ஞாபகம் வந்தது. இதை இங்குள்ளவர்கள் வேற நம்ப வேண்டும் என்று தேசிக்காய் குத்தின வேம்படி வைரவர் வரை பூசைகள் வேற செய்து முடிக்கப்பட்டு இருந்தது.

இவனின் எள்ளலை கண்ட ஏஜென்சி அடிக்கடி "தம்பிக்கு கஸ்டம் தெரியேல்ல" என்று கடிந்து கொண்டு இருந்தார். கனிதா இம்முறை முன்பை விட ஆடைக்குறைப்பு செய்திருந்தாள். எல்லாம் இராஜ தந்திரம் நல்ல பொண்ணுதான் நாதாரித்தனமான மூளை. போடிங் காட் பார்த்து விடுகிற நேரம் வந்தது. ஏற்கனவே பணம் உள்ளே பாய்ந்து விட்டது என அலுவலர் சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரி அங்கும் இங்கும் ஓடி திரியும் போதே தெரிந்தது. அப்பிரிவில் வேலை செய்த பதினாறு பேருக்கும் பணம் பட்டுவாடா செய்திருந்த தால் குந்தி இருந்து குடும்பம் நடத்தினாலும் யாரும் கண்டு கொள்ள மாட்டாடீகள் எனத் தோன்றியது.

"இம்முறை எல்லாம் இறங்கும்" என்று ஏஜென்சியும் சொல்லி விட்டார். அவரை முக்காவாசிப்பேர் அரைவாசிக்கடவுளாக நம்பி னார்கள். தோட்டக்காரனோட தோடங்காய் ஆய வந்த கள்ளனுக்கு என்ன பயம். பணியாளரை மட்டுமா விலை கொடுத்து வாங்கினார். பாதி கடவுள் பயணிகளையும் விலை கொடுத்து வாங்கி விட்டாரோ

என்பது போல பதினேழு கறுத்த தலை சோடிகளுடனும் தனியே தலையை சொறிந்தபடியும் ரியூப் லைற் வெளிச்சத்திற்கு வந்த பூச்சி மாதிரி எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாமல் வந்து கூடி விட்டார்கள். சும்மா சொல்லக்கூடாது பார்க்க பெருமையாய் தான் இருக்கு. ஆனால் பாவி ஏஜென்சி பேராசையில கன பேரை ஒண்டா போட்டு எல்லாத்தையும் கெடுக்கப் போறானே என சுயநலமாக மனம் பதைத்தது.

சும்மா பார்க்கவே எல்லோரும் களவுக்கு போய் கண்முளிச்ச ஆக்கள் போல தினுசு தினுசா தங்களுக்கும் பயணத்திற்கும் தொடர்பு இல்லாதது போல பாவனை செய்து கொண்டு நிற்பதே இவர்கள் எல்லோரும் ஒரு பட்டி என்று காட்டிக்கொடுத்தது.

பொறுப்பதிகாரி பரம ரகசிய அசைவுகளை சைகை மூலம் பதிவு செய்ய அதை வார்த்தைகளாய் கனிதா படித்தாள். கனிதா மட்டுமே தான் சைகை உணர் கொம்பு அன்ரனா அங்கே அவள் அதை உள்வாங்கி எதிர்வினை ஆற்றினாள்.

என்ன ஆச்சரியம். அட வைச்ச முட்டை எல்லாம் பொரிச் சுட்டது போல பதினேழு பேரும் விமானத்தில் ஏறி விட்டார்கள். இப்போது குஞ்சு எல்லாம் ஆகாயத்தில. கோழி மிதிச்சு குஞ்சு சாகாம இருந்தா போதும் என்று இருந்தது. ஆனாலும் விமானத்தில் இருந் தால் மேல்லோகம் கிட்ட என்பது அப்போது எவருக்கும் தெரிந் திருக்கவில்லை .

திட்டமிடட்ட படி எந்த அசம்பாவிதமும் இன்றி விமானம் உக்கிரையின் வந்து சேர்ந்து விட்டது.

அப்பிள் பழமும் அவிச்ச இறச்சி உருண்டையும் காலை உணவாக தங்கி இருந்த விடுதியில் பரிமாறினார்கள். அந்த ஊர் போலவே உணவும் விசித்திரமாக இருந்தது. போகும் பக்கத்தால் வருவதும் திறக்கும் பக்கத்தால் மூடுவதும் என எல்லாம் தலை கீழாக நடைமுறையில் இருந்தது.

எல்லாம் பழக்கம் தான் காரணம் என்றும் மனிதனால் உருவாக்கப்பட்டதே எல்லாம் என்றும் எண்ண எண்ண கடவுளும் கரைய முற்பட்டார். சம உடைமைப் பொருளாதாரம் கொண்ட றஸ்ய நாட்டின் சாயல் எல்லாவற்றிலும் தெரிந்தது.

ஏனோ மகேந்தி வர வர குறுகி கறுத்துக்கொண்டு வந்தான். ஊரில் இவன் நல்ல சிவலை. இங்கும் அவன் அவ்வாறுதான்

இருந்தான். ஆனால் இங்குள்ளவர்கள் இவனை விட வெள்ளையாகி இவனை கறுப்பனாக்கி விட்டார்கள். உயரமும் அவ்வாறுதான். அழகான பெண்களே கண்ணில் தட்டுப்பட்டு போனார்கள். குளிர் பார்க்க அழகாகவும் பட்டால் ஊசிபோல குத்துவதாகவும் இருந்தது. ஆனால் இவர்கள் தான் நாகரீக கோமாளிகள் போன்ற விமான பயணிகள் ஆச்சே. குளிராவது குத்திறதாவது.

இரண்டு நாள் கழித்து விடுதிக்கு ஒருவர் வந்து உயிரை உறைய வைக்கும் செய்தியை சொல்லிவிட்டுப் போனார். “இனி நடை தான். போடர் கடக்க வேண்டும” என்றார். அட இவ்வளவு லச்சத்தை கொடுத்து நடந்தா போக வேண்டும். இதை எல்லாம் அம்மாவிடம் சொல்லி பேச்சு வேண்டி கொடுக்க ஏலாது. அழுது சாதித்த காலம் எல்லாம் அம்மா மடியுடன் போய் விட்டது.

நடப்பதற்கான நாள் வந்தது. சந்திர மண்டலத்திற்கு போகிற வர்கள் போல எல்லோருக்கும் கனமான உடுப்புகள் கொடுக்கப் பட்டது. குளிருக்கு விறைக்காதாம். உண்மைதான் வேர்த்துக் கொட்டியது.

கம்பு குச்சி பாவைபிள்ளைக்கு கடுதாசி சட்டை போட்டது மாதிரி கூட வந்த சில பெண் புரசுகளுக்கும் உடை போட்டு முடி வெட்டப்பட்டது. ஒரு பெண் கல்யாணப் பெண். புருசனிடம் போன சீதையே இப்படி கஸ்டப்பட்டு இராமனை அடைந்திருக்க மாட் டாள். அவ்வளவு கடினமான பயணம். இவை தெரிந்திருந்தும் மனைவியை துன்புறுத்துவதும் துரோகம் செய்வதும் ஆங்காங்கே நடக்கத்தான் செய்கிறது.

விழுதல் என்பது எழுகையே என்பதற்கிணங்க எல்லோரும் தயாராகினார்கள். கனிதா இனிதே விடை பெற்றுப் போனாள். ஆனால் மகேந்தி உட்பட பலர் நினைவில் நிலவாய் நின்றாள். நடை பயணம் இரவு ஆரம்பமாகியது. பதினேழு பேரில் ஒன்பது பேர் வேறு எற்பாடு செய்து இருப்பதாக கூறி விடுதியிலேயே தங்கி விட்டார்கள்.

மீதி எட்டுப் பேரில் இருவர் பாக்கிஸ்தானியர்கள். இரு பெண்கள் மகேந்தி மற்றும் சிலோவாக்கியாவில் பல காலம் பயணத் திற்காக காத்திருந்த ரூபன், புருசோத் மற்றும் ஆனந்தன் ஆகிய இளைஞர்களுடன் ஒரு வழிகாட்டி கூட வந்தார். வரும் போது இந்த பயண விபரம் தெரிந்த சிலோவாக்கியாவில் இருந்து உதவிக்காக வந்த

வயதான வெள்ளைக்கார ஐயா ஒருவர் " கடுமையான பனி. கவனமாப் போங்கோ" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார்.

கடுமையான இரவாகையால் கண்கள் வெளிச்சத்தையே அதிகம் தேடியது. குளிரை மறந்து விட்டிருந்தது. உடுப்பு வேற கூட்டுப்புழு போல இருந்ததால் குளிர் தெரியவில்லை. பாதைகள் ஒன்றும் அங்கே இல்லை. இவர்கள் போவதே பாதையாகியது.

சர்வாதிகாரி கிட்லர் சொன்னதுதான் ஞாபகம் வந்தது. "பாதை இல்லை என்று நிற்காதே. நீ நடந்தால் அதுவே பாதையாகும்" எப்படி அவரின் பாதை அழிவுக்கு இட்டுச் சென்றதோ அவ்வாறே இங்கும் ஆபத்து இருக்குமோ என ஏக்கம் தொற்றிக்கொண்டது.

நடடா ராசா நட என்று நடந்து ஒரு ஆற்றினை அண்டிய பகுதியை வந்து சேர்ந்தோம். குளிர் குடிச்சுட்டு வந்த அப்பாவை கூட்டிவந்த அங்கிள் போல உரிமையோடு சுவாசம் வளியே உட்சென்று கொண்டு இருந்தது. அந்த வயதானவர் சொல்லி விட்டிருந்தார். "குளிருது எண்டு ஒருபோதும் குந்தி இருக்காதேங்கோ அது தான் ஆபத்தானது. எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் உடல் வெப்பமாக இருக்கும" என்று.

வெள்ளைகாரன் இவ்வளவு வளர்ந்ததற்கு காரணமும் இந்த குளிர் போலவே பட்டது. எப்போதும் எதையாவது செய்து கொண்டே இருந்தான். நாமோ நல்லா மூக்கு முட்ட இறுக்கி போட்டு குந்தி குந்தி எழும்பினதால தான் இங்கு இருந்து வந்து எங்கள் நாடுகளை பிடித்து ஆட்சி செய்திருக்கிறார்கள்.

பனிப்பொழிவு பலமாக இருந்தது. மணலில் நடந்தது போல கால்கள் நோவெடுக்க ஆரம்பித்தது. ஆண்களுக்கே இந்த நிலை என்றால் பாவம் பெண் பிள்ளைகளை சொல்லத் தேவை இல்லை. விழுந்து எழும்பி நடந்து வந்தார்கள். காதுமடல் மூக்கு துவாரங்கள் இருக்கா இல்லை இடையிலே அறுந்து விழுந்து விட்டதா என்றெண்ணும்படி விறைத்து விட்டிருந்தது.

ஊரில் களைத்தால் தண்ணி விடாய்க்கும் இங்கும். களைத்தது ஆனால் தண்ணி மட்டும் விடாய்க்கவில்லை. உணவும் தேவை இன்றியே இருந்தது தேவை எல்லாம் சிறு சூரிய ஒளி வெப்பம். விரல் கள் கண் முளிக்காத எலிக்குஞ்சு போல சிவந்து சுருங்கி நடுங்கியபடி இருந்தது. விடிந்து விட்டிருந்தது ஆனாலும் வெய்யிலை காண வில்லை. குளிர் காற்று வீச ஆரம்பித்தது. சற்று நேரத்தின பின்

துருவிய தேங்காயத் துருவல் போல பனி கொட்ட ஆரம்பித்தது.

ஆற்றைக் கடக்க வேண்டும். ஆனால் இப்போது இல்லை. மறு கரையில் வேறு ஒரு பகுதியினர் வரும் வரை ஒளித்துக் காத்திருக்க வேண்டும். நெருப்பு மூட்டலாம் என்றால் எங்கே மூட்டுவது. சாமி ஆடும் சாத்திரியார் மாதிரி வாயிலையோ கையிலயோ தான் தீ மூட்ட வேண்டும். தரை என்று ஒன்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை இல்லை. பனியே மூடி கொட்டி இருந்தது.

ஒரு இரவும் ஒரு பகலும் கழிந்தது. யாரையும் காணவில்லை. உணவு முடியும் தறுவாயில் இருந்தது. மலசலத்திற்காக உடைகளை வேறு கழற்றவேண்டி வந்ததால் குளிர் உட்சென்று இருந்தது. குளிப்பு முழுக்கு மட்டுமல்ல கை கழுவவும் நீரில்லை. பனிக்கட்டியில் நீர் மட்டுமல்ல குளிரும் கலந்திருந்தது. கையை கை உறையில் இருந்து எடுக்கவே கொல்லக் கொண்டு போவது போல இருந்தது. கை விரல் அசைக்க முடிந்ததே தவிர தண்ணிப்போத்தல் மூடியை தானும் திறக்க முடியவில்லை.

குளிர் மெல்ல மெல்ல அனைவரினதும் உடலை சந்திர கிரகணம் போல கவ்விக்கொண்டு வந்தது. கால்கள் விறைத்து வீங்க ஆரம்பித்தது. விரல்களை ஆட்ட முடியாமல் விறைத்தது.

மூன்றாம் நாளும் பனியில் கிடந்ததால் அவிச்ச வத்தாளங் கிழங்கு போல உடுப்பு உரஞ்சியே உடலின் தோல் உரிய ஆரம்பித்தது. கூட்டிவந்தவர் மிகவும் இளைத்து விட்டார் அவருக்கும் உடம்பு என்று ஒன்று இருக்கல்லவா! கூட வந்த பெண் பிள்ளைகள் இனி எம்மால் தாங்க முடியாது திரும்பி போவோம் என்று அடம் பிடித்தார் கள். இதுதான் தாயம் என்று வழிகாட்டியும் பிள்ளைகளுக்கு வழி தெரியாது என்று அவரும் அவர்களுடன் திரும்பி போய் விட்டார்.

இறுதியில் இரு பாக்கிஸ்தானியர்களுடன் மகேந்தி ரூபன் புருசோத் அனந்தன் ஆகியோரே மிச்சம். எவ்வளவு பணத்தை கட்டி இவ்வளவு கடினத்தின் மத்தியில் இது வரை வந்து விட்டோம். இன்னும் கொஞ்சம் பல்லை கடித்து இருந்து விட்டால் எல்லாம் சரி வந்தவிடும் என நாங்கள் திரும்பி வரவில்லை என்று நின்று விட்டோம். வழிகாட்டியாய் வந்தவர் போகுமுன் “ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ. இண்டைக்கு விடிய கட்டாயம் அவை வருவினம். இப்படி பனிக்குள்ள நாங்கள் கிடக்கிறம் எண்டு அவைக்கு நல்லா தெரியும். உங்களை ஆற்றைக் கடக்க வைச்சு கொண்டு போய்

பஸ்சில ஏத்தி விடுவினம். உடுப்புகளை மட்டும் கழற்றிப்போடா தேங்கோ" என்று சொல்லிவிட்டுப் போனார்.

எங்காவது நெருப்பு மூட்டுவோம் என்று தேடினால் இறுதி யில் ஒரு ஆற்றோர பாறை ஒன்றில் ஒதுக்கியிருந்த சருகுகளை எடுத்து குவித்து பச்சை குழைகளையும் முறிச்சு சேர்த்து ஆயத்தம் செய்தான் மகேந்தி.

இரவு படுக்கையும் இல்லை இன்று இரவும் இங்கே தான் களைப்பு, குளிர், நித்திரை என வாழ்க்கை போதும் என்று ஆகி விட்டது. நேரம் மதியமாகிக்கொண்டு இருந்தது. பனி கொட்டுவது கொஞ்சம் விட்டிருந்தது. ஆனால் அருகில் நின்ற பற்றை மரம் என எல்லாவற்றையும் மூடி பனி படிந்திருந்தது.

தண்ணி விடாய்த்தால் பனியை அள்ளி வாயில் போட வேண்டியதுதான். ஆனால் குளிரையும் தாங்கிக்கொள்ள வேண்டும். சுள்ளிகளை சேர்த்து வைத்துவிட்டு லையிற்றரை தேடினான். சறுட்டு போல முதுகுப் பையில் தட்டுப்பட்டது. லையிற்றரை எடுத்து அவனால் அதனை பற்ற வைக்க முடியவில்லை. விரல்கள் பிஞ்சுவிடும் போல இருந்தது. மற்றவர்கள் நனைந்த கோழி போல ஒட்டி நடுங்கிக்கொண்டு இருந்தார்கள். அவர்களை ஏதும் கேட்காமல் தானே விரலை ஊதி இரு கையையும் உரசி உணர்ச்சி வர வைத்தான். கை விறைத்து விட்டது கையுறையால் வெளியே எடுத்தால் விரல் மேலும் நோ எடுத்தது அவனுக்கு.

முடியாமல் அருகில் இருந்தவர்களிடம் கொடுத்து கொழுத்தச் சொன்னான். அவர்களும் முயன்று பார்த்தார்கள். முடியவில்லை இறுதியில் பாக்கிஸ்தானியன் பற்ற வைத்தான். ஒரு மாதிரி நெருப்பு புகைந்து எரிய ஆரம்பித்தது. மெல்லச் சூடு வெளிவர ஆரம்பித்ததும் கை உறை கால் சப்பாத்துக்களை கழற்றி விட்டு புகையில் கை காலைகளை சூடு காட்டினார்கள்.

ஓரளவு கை கால் விரல்கள் உயிர் பெற பிரளயம் ஒன்று வந்து தலையில் விழுந்தது. நெருப்பு சூட்டில் மரத்தில் மேலே படிந்திருந்த பனி உருகி உருகி கீழ் கிளையில் படிய, கீழ் கிளை பாரம் தாங்க முடியமல் முறிந்து பனிகட்டியோடு அவர்கள் மேல் விழுந்தது.

மகேந்தியின் கால் மரத்தினுள் அகப்பட்டது. மற்றவஉகளை பனி மூடிவிட்டிருந்தது . நெருப்பு உயிரை விட்டு விட்டது. கொண்டு வந்த உடுப்புகள் பைகள் எல்லாம் பனியால் மூடி மரக்கிளையின் கீழ்

கிடந்தது. பதறிக்கொண்டு எழுந்து உதறினோம். சிறு உராய்வும் தோலை கிழித்து இரத்தம் கசிந்தது. ஒருவாறு உடுப்புகளையும் வெளியே எடுத்து விட்டோம். பொழுது படத்தொடங்கியது. எல்லோர் முகங்களிலும் ஒரு வித பீதி குடி கொண்டது.

வயதானவர் சொல்லியிருந்தார் “வெட்டையிலதான் நெருப்பு மூட்ட வேணும்” என்று. சிறு தவறும் இப்படி உயிருக்கு உலை வைக்கும் அளவு மோசமான விளைவை தரும் என்று. அதனை முதல் முதலாய் உணர்ந்தான் மகேந்தி.

ஒட்டிக் காட்டிய ஆறு என்று ஒன்று இருந்தது. ஆனால் அங்கே தண்ணி ஒன்றும் ஓடவில்லை இதனால் இலகுவில் கடந்து விடலாம் என்று நினைககக்கூடாது. அங்கு தான் ஆபத்து காத்திருந்தது. ஆறு எது கரை எது என்று தெரியாமல் பனி மூடி நிறைந்திருந்தது இதனால் அதன் அருகில் போகவும் பயமாக இருந்தது. எவ்வளவு ஆழமோ தெரியாது உள்ளே உறை நிலை சீதோசணத்தில் நீஉ ஓடிக் கொண்டு இருக்கும். பனிக்கட்டி உடைந்து கால் உள்ளே போனால் அவரே தான் வெளியே வர வேண்டும். உதவிக்கு யாரும் அருகில் போனால் போறவரும் சேர்ந்தே உள்ள போக வேண்டி வரும்.

பனி பட்டால் தட்டி துடைத்து விடலாம். குளிர் நீரில் நனைந்தால் விறைத்து ஆளே முடிந்து விடும். கம்பளி உடுப்புகள் குளிருக்கு நல்லது என்றாலும் அவற்றில் ஈரம் பட்டாலோ இலகுவில் காயாது. இவர்கள் ஆளுக்கு மூன்று சோடி உடுப்பு வீதம் போட்டிருக்கிறார்கள். ஈரமானால் இன்னுமொருவரை சுமக்கும் சுமை ஏறி விடும். மனம் மரணத்தை நோக்கி பயணிப்பதாக கண்கள் நடுங்கின.

பொழுது பட்டு வானம் குளிரால் மூடி இருந்தது. பையில் இருக்கும் சிறு அளவு உணவை எடுத்து சாப்பிடநினைக்கும் போதும் குளிர் பயமாக இருந்தது. சொண்டுகள் வெடித்து விட்டிருந்தது. தொட்டுப்பார்க்கும் போது யாரோ ஒருவரின் சொண்டு போல தொடு உணர்வின்றி மரத்து இருந்தது. நெஞ்சுக்கூடு இதயத்தை இறுக்கிக் கொண்டு வருவது போல தோன்றியது. திரும்பிபோகவும் பாதை தெரியாது. எங்கள் கண்களில் ஏக்கமும் மரணபீதியும் தொற்றிக் கொண்டது.

இதற்குள் புருசோத் “மச்சான் இனி பிடிபட்டா கொடுக்க பேரும் இல்லை என்றான்” அவன். இதற்கு முன் மூன்று முறை பிடி பட்டு விடுவிக்கப்பட்டவன். இரண்டு முறை அண்ணா தம்பி

போன்றவர்களின் பெயரை கொடுத்து தப்பி விட்டான். மூன்றாம் முறை பேர் இல்லாமல் அக்காவின் பெயர் பிறந்த திகதியை கொடுத்து புரட்சி செய்தவன். இனி பிடிபட்டால் என்ன செய்வது என்ற யோசனை அவனுக்கு. இதில் சுவாரசியம் என்ன என்றால் மூன்று முறையும் ஒரே சிறையில் தான் இப்படி பெயரை மாற்றி கொடுத்தான். பெயவு கேட்ட அதிகாரி அழுவாரைபோல் பொருமி வெடித்தாலும் ஒன்றும் செய்ய முடியாது முறைத்து முறைத்து பார்த்து அவனின் மொழியில் திட்டியிருக்கிறான்.

எப்போது அவர்கள் வருவார்கள். எப்போது மறு கரைக்கு போகலாம் என்பதை விட எப்போது வெப்பத்தை அணுகலாம் என்றே மனம் ஏங்கியது. பார்ப்பதற்கு இறந்த தாயை தேடும் இறக்கை முளைக்காத குருவி குஞ்சுகள் போல காத்திருந்தோம். நன்றாக இருட்டி விட்டது. பூமி மேகக்கூட்டம் போல வெள்ளையாகவும் மேகம் இருட்டாகவும் இருந்தது. தொலைவில் சிறு வெளிச்சம் மின்னி மின்னி மறைந்தது. எல்லை பாதுகாப்பு படையினர் இரவு வேளை களில் ரோந்து வருவார்கள். கவனமாக இருக்க வேண்டும். பிடி பட்டால் பாம்பும் ஏணியும் விளையாட்டில் பாம்பின் வாயில் அகப் பட்டது போல மீண்டும் இலங்கைக்கே அனுப்பி விடுவார்கள் என்ற பயம் பற்றிப் பிடித்துக் கொண்டது.

அந்த வெளிச்சம் அண்மித்துக்கொண்டிருந்தது. பாக்கிஸ் தான் நாட்டுகாரரர்கள் இருவரும் சற்று உரமாக இருந்தார்கள். மகேந்தியுடன் ஒட்டிக்கொண்டு இருந்த ஆனந்தன் குளிர் தாங்க முடியாமல் நடுங்கியபடி அனுங்கிக்கொண்டு இருந்தான். அவனை சத்தம் வெளிய வராமல் சற்றுநேரம் இருக்குமாறு கண்ணீரால் கெஞ்சினான் மகேந்தி.

அது அவனின் காதில் விழுந்ததா என்றும் தெரியவில்லை. அனுங்கலில் எந்த மாற்றமும் இல்லை. இப்போது அந்த வெளிச்சத்தை காணவில்லை அணைத்து விட்டு வருகிறார்களா? இல்லை திரும்பி போய்விட்டார்களா என்று ஊகிக்க முடியாமல் இருந்தது. முறிந்த மரக் கொப்பின் பின் ஐவரும் பதுங்கிக் கொண்டார்கள்.

நேரம் கடந்துகொண்டு இருந்தது. எவ்வளவு நேரம் தான் பனி யில் தலையை புதைத்துக் கிடப்பது என்று மெல்ல தலையை உயர்த்தி பார்த்த விட்டு எழுந்து அமர்ந்தார்கள். தொலைவில் பேசுவது கேட்டது. மீண்டும் ஒருமிக்க தரையில் படுத்துக் கொண்டார்கள்.

அப்பேச்சு நெருங்கி வந்துகொண்டிருந்தது. மகேந்தி அனுங்கிய ஆனந்தனை இறுக அணைத்தபடி அவன் வாயை பொத்தி நெஞ்சை தடவி விட்டு அனுக்கத்தை குறைக்க முயன்றான். எந்த பலனும் இல்லை. அவன் சுயநினைவு இழந்தவன் போலவே அனுங்கினான். பேச்சு மிக அருகில் கேட்டது. எல்லாம் சரி. இனி நாடுதான் என நினைத்து கண்களை மூடிக்கொணடோம். எங்கள் காதுகளை எங்களாலேயே நம்ப முடியவில்லை பேச்சு தமிழில் கேட்டது. குதித்தெழுந்து“அண்ணா.. அண்ணா நாங்க இங்க இருக்கிறோம்” என்று கத்தினான்.

“ஓம் ஓம். நான் ஒரு கயிற எறியிறன். அதை இறுக்கி பிடிச்சுக் கொண்டு ஆத்தில இறங்குங்கோ என்று கூறி கயிற்றை எறிந்தார் ஒருவர். எல்லோரும் கயிற்றை பிடித்துக்கொண்டு மெல்ல ஆற்றில் இறங்கினார்கள்.

திடீரென ஆற்று பனிப்படை உடைந்தது. மறுகரையில் நின்றவர்கள் கொற கொற என இழுத்து இக்கரைக்கு இழுத்து போட்டு விட்டு “விடிய வேற ஆக்கள் வந்து பஸ்சில ஏத்தி விடுவினம்” என்று மட்டும் மொட்டையாக சொல்லிவிட்டு சென்று விட்டார்கள்.

நனைந்து நடுங்கிக்கொண்டு இருந்தோம். பற்கள் கடு கடுத்தது. ஏறக்குறைய எல்லோரும் அனுங்க ஆரம்பித்தார்கள். இருவரைத்தவிர முன்னர் அனுங்கிய ஆனந்தன் இப்போது அமைதியாக இருந்தான்.

புருசோத் இன்னும் ஆற்றை கடக்கவில்லை. அல்லது இந்த ஜென்மத்தையே கடந்திருக்க வேண்டும். கயிற்றை இறுக்கி பிடிக் காமல் இடையில் விட்டு விட்டான். ஆற்றில் பனி உடைந்து உள்ளே விழுந்து விட்டான். பனி பாறை மீண்டும் மிதந்து ஆற்றை மூடிக் கொண்டது. அவன் உள்ளே அடங்கிப்போனான்.

இதை நாங்கள் அறியமுன் இழுத்தவர்கள் தெரிந்து கொண்ட தால் தான் நிற்காமல் உடனே இடத்தை காலி செய்து விட்டார்கள். பொழுது விடிந்ததும் தான் இவர்களுக்கு தெரியவந்தது. ஆனாலும் அனுக்கமின்றி கிடந்த ஆனந்தனும் இறந்த புருசோத்துடன் இணைந்தமை இனி தான் இவர்களுக்கு தெரியவரப்போகிறது.

சொன்னது போல் சிலர் வந்து விட்டார்கள். இறந்த இருவரையும் நினைத்து ஒருவனின் உடலின் முன் சுற்றி அழுது கொண்டிருந்தவர்களை அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

இறந்தவனின் உடல் அங்கேயே தோண்டி புதைக்கப்பட்டது.

மகேந்தி கதையைச் சொல்லி முடித்ததும் நீண்ட பெருமூச்சு விட்டான். சில விநாடிகள் மௌனமானான். மகேந்தி என்ற மக்டொனால் மகேந்திரன் தான் அனுபவித்த துன்பத்தையும் தன்னோடு வந்த இருவர் இறந்து போனதையும் சொன்ன போது என்னை அறியாமலே என் கண்கள் குளமாகின. மகேந்திரன் சொல்லி முடித்த அகதிப் பயணக் கதையைக் கேட்டபோது அகதிப் பயணத்தில் நான் அனுபவித்த துன்பம் மிக மிகச் சாரதாணமாகத் தோன்றியது.

மகேந்திரனும் கண்களைத் துடைத்துக் கொண்டான். தனது கண் முன்னால் பனிக்கட்டி உடைந்து ஆற்றில் சமாதியாகிய புரு சோத்தமனையும் தனது அருகிலேயே உயிர்பிரிந்த ஆனந்தனையும் அவனால் மறக்க முடியவில்லை.

“எனக்கு திருமணமாகி ஒரு பெண்குழந்தையிருக்கின்றது. சந்தோசமாகவிருக்கிறேன். ஆனால் அவர்கள் இருவரையும் என்னால் மறக்க முடியவில்லை” என்றான்.

இதுவரையும் தனது அகதிப் பயணத்தை நகைச்சுவையுடனும் உவமான உவமயத்துடனும் வட்டார வழக்குத் தமிழிலும் சொல்லிக் கொண்டிருந்த மகேந்திரனின் முகத்தில் பழைய நகைச்சுவை கலந்து சிரிப்பு இல்லை.

முகம் இறுகிப் போயிருந்தது. அவனின் மனநிலையை முகம் காட்டியதால். சுவிற்சலாந்துக்கு பிறகு எப்படி வந்தனீங்கள் என்பதை அவனிடம் கேட்க மனம் வரவில்லை. அவன் வேலையை ஆரம்பிக்கும் நேரம் வந்துவிட்டதால் என்னிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டான். நானும் மக்டொனால்ஸை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தேன்.

***

மக்டொனால்ஸ் வேலை இப்ப சீலனுக்கு நன்றாகப் பழகிப் போய்விட்டது. ஆரம்பத்தில் இருந்த பதட்டமோ, குறித்த நேரத்தில் குறிப்பிட்டளவு வேலையைச் செய்ய வேண்டுமே என்ற ரென்சனோ அவனுக்கு இப்ப இல்லை. மனதை வேறு எங்காவது வைத்துக் கொண்டு ஒடர் எடுத்தாலும் கூட எந்தப் பிழையுமில்லாமல் எல்லாவற்றையும் செய்யும் அளவுக்கு அவனுக்கு வேலை இலேசாகி விட்டது.

“சரி. நாளைக்குச் சந்திப்பம்” என டொச்சில் மனேஜருக்குச்

சொல்லிப்போட்டு சீலன் திரும்பிய போது அவன் முன்னே சிரித்த முகத்துடன் நின்றாள் பானு.

"ஓ பானு! நான் உங்களைச் சந்திப்பன் எண்டு எதிர் பார்க்கவேயில்லை. என்ன நீங்க இண்டைக்கு வெள்ளனத் தொடங்கி றியளா?"

பானுவைச் சந்தித்த மகிழ்ச்சி சீலனின் முகத்தில் பளிச்சிட்டது

"இல்லை சீலன். இவற்றை இன்சூரன்ஸ் விசயமாக் கதைக்க லோயரிட்டைப் போக வேண்டியிருந்தது. அப்படியே அங்கை யிருந்து நேரை இங்கை வாறன்."

"ஓ... அப்ப வேலைக்கு இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கு. சாப்பிட்டிருக்க மாட்டியள். வாங்கோவன் பக்கத்திலை இருக்கிற பீசாக் கடைக்குப் போவம்.... என்ரை ரீற்"

"ஏன் சீலன் வீண் காசுச் செலவு? அதோடை நான் சாப்பாடு கொண்டு வந்தனான்."

"சரி அதை பிரிஷ்லை வைச்சியள் எண்டால் நாளைக்குச் சாப்பிடலாம். இப்ப என்னோடை சாப்பிடலாம் வாங்கோ. நெடுகக் காசு காசு எண்டு யோசித்தம் எண்டால் ஒண்டையும் நாங்கள் அனுபவிக்கேலாது." என உரிமையுடன் அவளை அழைத்தான்.

சீலனுக்கு பானுவில் ஒரு தனி மரியாதையும் பிடிப்பும் உண்டு. பக்ரறியிலை வேலை செய்யும்போது ஓடிக்கொண்டிருந்த மெசினுக் குள் கை சிக்கியதால் ஆறு மாதத்துக்கு முன்பாக தனது வலது கையின் இரண்டு விரல்களை இழந்து போனான் அவளின் கணவன். காலம் அவனின் உடல் காயத்தை ஒருவாறாகத் தேற்றி விட்டிருந்தாலும் கூட அவனின் மனக் காயம் நாள் ஆக ஆக இன்னும் கூடிக் கொண்டுபோற மாதிரித்தானிருக்கிறது. விபத்தின் விளைவுகளால் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டு அதற்கான கவுன்சலிங கும்மருந்துகளுமாக வாழ் கின்றான் அவன். அந்தச் சுமை பானுவையும் வெகுவாகத் தாக்குகிறது என்பதைச் சீலன் நன்கறிவான்.

வாழ்க்கைதான் எவ்வளவு விசித்திரமானது. ஊரில் இருந்த பிரச்சினைகளாலை பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கே கவுன்சிலிங் செய்து ஆறுதல் கொடுத்த பானு இப்ப இங்கே தான் படித்ததை தனக்குப் பாவிக்க முடியாமல் திண்டாடுவது கொடுமையிலும் பெரிய கொடுமைதான்.

இரண்டு சின்னப் பிள்ளைகள், மனநோயுள்ள கணவன்,

மிகத்துரிதமாகத் தொழிற்பட வேண்டிய மக்டொனால்ஸ் வேலை, கணவனின் இன்சூரன்ஸ் பிரச்சினை, அத்தனைக்கும் மேலாக அவன் அவளுக்குக் கொடுக்கும் மனக் கஷ்டங்கள் என அவள் படும் பாட்டை பாடக்கும் போது தன்னுடைய பிரச்சினை பெரிய பிரச்சினை இல்லை எனக் கூட பல சமயங்களில் சீலனுக்குத் தோன்றுவதுண்டு.

பானுவைப் பார்க்கும் எவரும் அவளுக்கு இத்தனை பிரச்சினை இருக்கின்றது எனச் சொன்னால் கூட நம்ப மாட்டார்கள். அந்தளவுக்கு அந்த முகத்தில் ஒரு அமைதியும் சிரிப்பும் எந்த நேரமும் குடிகொண்டிருக்கும்.

அவள் தான் அவனுக்கு மக்டொனால்ஸ்சில் வேலை பழக்கினாள். அப்படி ஆரம்பித்த அறிமுகம்தான் இப்ப இப்படி நல்லதொரு நட்பாக அவர்களிடையே மலர்ந்துள்ளது.

ஊரிலே பெண்களுடன் கதைப்பது என்பது ஏதோ சந்திர மண்டலுத்துக்குப் போவது மாதிரி அத்தனை சவால், பரபரப்பு நிறைந்ததாக இருக்கும். அதனால் தான் போலும் அங்கே கண்டவுடனே காதல் வாறதாக்கும் என நினைத்த போது சீலனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் இங்கே எந்தப் பேதமும் இன்றி ஆணும் பெண்ணும் மிக நல்ல நண்பர்களாக இருக்க முடிகிறது. ஆம்! அவனும் அவளும் ஆளுக்கு ஆள் தங்களது பிரச்சினைகளைச் சொல்லி ஆறுதல் அடையக் கூடிய அளவுக்கு நல்ல நண்பர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் இப்ப வேலை நேரங்கள் மாற்றப்பட்டாதால் ஒரு மாதமாக அவளை அவன் காணவில்லை.

“என்ன மௌனம் சீலன். எல்லாம் ஓகேயா?” பீசாக் கடையை நோக்கி நடந்தபோது அவர்களுக்குள் இருந்த அந்த மௌனத்தைப் பானுதான் உடைத்தாள்.

“வாழ்க்கையின் வினோதங்களை நினைச்சுப் பாத்தன் பானு. இந்தப் புகலிட வாழ்வில்தான் எத்தனை வித்தியாசமான அனுபவங்கள் எங்களுக்கு... போதாதற்கு பெயரே கேள்விப்பட்டிராத பாசைகளைக்கூட எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்கிறம். எங்கடை நாட்டிலை இருந்தது ஆக இரண்டே இரண்டு மொழிகள் தான். இருந்தும் மற்ற மொழியிலை இரண்டு சொல்லுக்கூட சொல்ல எங்களில் பலருக்குத் தெரியாது. நாங்கள் இரண்டு மொழிக்காரரும் ஒருத்தரின்ரை மொழியை ஒருத்தர் படிச்சிருந்தால் இனப் பிரச்சினை இப்படி உச்சத்துக்குப் போய் இவ்வளவு அழிவு நிகழாமல் இருந்

திருக்குமோ என்றெல்லாம் இப்ப என்ரை மனம் தத்துவ விசாரணை செய்கிறது, பானு” என்றான்.

“ஒன்றும் படிக்கக்கூட வேண்டாம். ஒருத்தரை ஒருவர் விளங்கி, ஆளுக்கு ஆள் மதிப்புக் கொடுத்து நடந்தால் போதாதே? இப்ப பஸ்சிலை வரேக்கை மனுஷபுத்திரனின்ரை ஒரு கவிதை படிச்சன் கேளுங்கோ…”

ஒருமை - பன்மை
எந்தக் கணத்தில்
என்னை அழைப்பதில்
பன்மையிலிருந்து
ஒருமைக்கு மாறினாய்?

பன்மையிலிருந்து
ஒருமைக்கு மாறும்போது
ஆட்டத்தின் ஒரு விதி மாற்றப்படுகிறது
சீட்டுக்கட்டில் ஒரு சீட்டு
ரகசியமாக இடம் மாறுகிறது
ஓசையில்லாமல் ஒரு பூனை
அறைக்குள் நுழைகிறது
கிணற்றுத் தண்ணீரின் சுவை
திடீரென மாற்றமடைகிறது
ஒரு அனுமதிச் சீட்டின்
ஓரத்தில் கிழிக்கப்படுகிறது

“ஓம். கவிதை சொல்ற மாதிரி உறவு ஒன்று நெருக்கமாகும் போது எவ்வளவு சந்தோசப்படுறம். மரியாதையை, உரிமையை விட்டுக் கொடுக்கிறதிலை கூட ஒரு மகிழ்ச்சியை அனுபவிக்கிறம் … ஆனால் பிறகு அதைச் சகபாடி துஸ்பிரயோகம் செய்யேக்கைதானே பிரச்சினையே ஆரம்பமாகுது.”

“அதைத்தான் நானும் சொல்ல வாறன் சீலன். இன்னொரு வரை, இன்னொரு இனத்தை நசுக்கி மற்றவரோ அல்லது மற்ற இனமோ நன்மை அடைய முயற்சிக்கும் போது எல்லாமே பிரச்சினை தான்” என்றாள் பானு விரக்தியாக.

பீசா ஓடர் பண்ணிச் சாப்பிட்டு முடிக்கும் வரை பொது

வாகவும் குறிப்பாகவும் அவளுடன் கதைத்தது சீலனின் மனசுக்கு கொஞ்சம் இதமாக இருந்தது. அவள் சொன்ன அந்தக் கவிதைக்குள் தான் எத்தனை பொருள் இருக்கிறது என அதிசயித்தான் அவன்.

போகிற வழியில் வீட்டுக்குக் காசு அனுப்பிப் போட்டு தவத்தாரையும் சந்திக்க வேண்டும் என நினைத்த சீலன், பானுவுடன் சேர்ந்து மீண்டும் மக்டொனால்ஸ்க்குப் போய் தவத்தாருக்காக இரண்டு கம்பெக்கரை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான்.

சில நாட்களாக பனி கொட்டாமல் வெப்பம் சிறிதும் குளிர் அதிகமாகவும் இருந்தது. மீண்டும் பனி கொட்டத் தொடங்கியது.

வெண்பனி பூத் தூவி அவனை வரவேற்றது. பனி கொட்டும் அழகைப் பாத்ததும் சின்னக் குழந்தை மாதிரி அவன் மனசு குதூகலித்தது. முதல் முதல் அவன் அனுபவிக்கும் பனிக் குளியல் அது. மழையில் மட்டுமே நனைந்து பழகியவனுக்கு பனிக் குளியல் மிகவும் வினோதமான அனுபவத்தைக் கொடுத்தது. மெதுவாக நாக்கை நீட்டி விழும் பனியைச் சுவைத்துப் பார்த்தான்.

அந்த இனிமையுடன் பானுவுடன் கதைத்தவை அவன் மனசுக்குள் மீளவும் மீளவும் ஓடிகொண்டிருந்தன.

"சீலன், இனி வேலையோடை எதையாவது நீங்கள் படிக்கத் தொடங்கிறது நல்லம். அதைப் பற்றி ஏதாவது யோசித்துப் பாத்தனீங்களோ?"

"ஓம். படிக்கத்தான் வேணும். பாப்பம், முதலிலை கடன் முடியட்டும்"

"கடன் முடியும்வரை பாப்பம் எண்டு பாத்தீங்கள் எண்டால் பிறகு தங்கைச்சியின்ரை கலியாணம் அது இது எண்டு நெடுக ஏதாவது ஒரு காரணம் வந்து கொண்டேயிருக்கும். அதோடை கலா டொக்டரானால் நீங்களும் அது மாதிரி ஒரு தகுதியைத் தேடிக் கொள்ளுறதுதான் உங்கள் இரண்டு பேருக்கும் நல்லது. அல்லது நீங்கள் என்ன தான் சொன்னாலும் ஒரு தாழ்வு மனப்பான்மை உங்களை வாட்டிக்கொண்டேயிருக்கும்."

"இதைத் தான் தவத்தாரும் அண்டைக்கு இன்னொரு விதத்திலை சொன்னவர். பெண்சாதிமாரைக் கூப்பிட்டு அவையைப் படிக்கவிட்டிட்டு பிறகு அவை ஒவிஸ் வேலை பாக்க ஆம்பிளைகள் பக்ரறியிலை முறிஞ்சு போட்டு வீட்டை வந்து தாழ்வுச்சிக்கலிலை அவையளைப் படுத்தாத பாடு படுத்தியினமாம்."

*"மனிசன்மாரால்தானே தாங்கள் அப்படி ஒரு நிலைக்கு வந்தவை எண்டு சில பொம்பிளையளும் யோசிக்கிறதுமில்லை, மதிக்கிறதுமில்லைத்தான். எல்லாப் பக்கமாயும் தான் பிரச்சினை இருக்குது.*

*"போன கிழமை கலா சொன்ன செய்தி இன்னும்தான் என்ரை மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்குது. அங்கை ஒரு தாய் தன்ரை இரண்டு பிள்ளையளையும் கொன்று போட்டு தானும் தற்கொலை செய்திட்டாவாம்."*

*"அங்கை இருந்து உயிரைப் பிடிச்சுக்கொண்டு இங்கை ஓடி வாறம்... பிறகு இங்கை இப்படிப் போகுது. ஆம்பிளையள் கடன் அடைக்க, உழைக்க எண்டு இரண்டு வேலையிலை ஓடித்திரிய... வீட்டுக்கை பொம்பிளையள் பிள்ளையளோடை தனிய இருக்கிறது ... அது ஒரு பெரிய பிரச்சினை. ஊரிலை இருந்த மாதிரி இங்கை ஒத்தாசைக்கு யார் இருக்கினம்? " எனப் பானு சொன்ன போது அவள் தன்னைப் பற்றியும் சொல்வது மாதிரித் தெரிந்தது சீலனுக்கு.*

*தன்னுடைய வீட்டுக்கு முன்னால் இருந்த பனியை அள்ளிக் கொண்டிருந்த தவத்தார் சீலனைக் கண்டதும் "சீலன், வாரும் வாரும். கொஞ்ச நாளா பனி கொட்டாமலிருந்து இன்று கொட்டத் தொடங்கி விட்டுது. கொட்டக் கொண்ட அள்ளினால் கொஞ்சம் சுகம் எண்டு போட்டு இப்பத்தான் வெளியிலை வந்தனான். கவனம் வழுக்கிக் கிழுக்கி விழுந்து போகாதேயும். பிறகு எலும்புநோ வைத்தியத்துக்கு அலையத்தான் காசும் காலமும் சரியாயிருக்கும்"என்ற படி அவனுக்கு வழிவிட்டார்.*

*"தேவலோகம் மாதிரியிருக்குது. இல்லையே!" என்றான் மிகுந்த குதூகலத்துடன் சீலன்.*

*"ஓம் ஓம் இப்ப உமக்கு தேவலோகம் மாதிரித்தானிருக்கும். உமக்கென்று ஒரு வீடெடுத்து பனி வழிக்க வெளிக்கிட்டால் தான் தெரியும் என்ன லோகம் இது என்று." எனச் சலித்தபடி தானும் வீட்டுக்குள் வந்தார் தவம்.*

*கம்பெக்கரை எடுத்து தவத்திடம் கொடுத்தான் சீலன்.*

*"ஒரு பியர் எடுக்கிறீரோ? குளிருக்கு நல்லா இருக்கும்" என்ற படி பியருடன் வந்தமர்ந்த தவம் "அம்மா என்னவாம்? கதைச் சனீரோ?" என்றார்.*

*"ஓம். இப்ப அவ தங்கைச்சியைப் பற்றிக் கவலைப்படுறா.*

அங்கை இருந்தால் போராட்டத்துக்கு சேடிக்கப்படுவாளோ இல்லை ஆமியின்ரை ஆக்கினைக்கு உட்படுவாளோ எனப் பயப்பிடுறா. அதாலை நான் வந்த கடன் அடைச்சு ... பிறகு அவளுக்குக் கலியாணம் எண்டு காத்திராமல் எங்கையாவது மாத்துச் சம்பந்தம் செய்யலாம் என யோசிக்கிறா" எனப் பெருமூச்சு விட்டான் சீலன்.

"அப்ப அம்மாவுக்கு உம்மடை கலாவின்ரை கதை தெரியாது போலை... சீலன் கவனமாயிரும். இங்கை பொம்பிளையளைக் கூப்பிட்டுப் போட்டு பிடிக்கேல்லை எண்டு கலியாணம் கட்ட மாட்டன் என்கிறவை ஒரு புறம். இன்னும் சிலருக்கு ஏற்கனவே இங்கை பொம்பிளை இருக்கும். தாய்மாருக்கு சொல்லாயினம். பொம்பிளை வந்தாப் போலைதான் எல்லாம் சந்திக்கு வரும்."

"ஓம், அது தான் எனக்கும் பயமாயிருக்கு. போதாதுக்கு விறுமாண்டியின்ரை கதை போல வந்தால் என்ன செய்யிறது".

"விறுமாண்டியின்ரை குடும்பம் மாதிரி எங்கடை ஆக்களும் ஒரு ஆள் "சே" எண்டால் ஒத்துக் கொள்ளாயினம். அதாலை அவங்களும் சொல்லத் துணிய மாட்டான்கள். பிறகு பொம்பிளை வந்தாப் போலைதான் பிரச்சினை வெடிக்கும்."

"எங்கடை பிரச்சினைக்கெல்லாம் எந்த முடிவுமில்லை. உயிரைக் காப்பாற்றியிருக்கிறம். பயமில்லாமல் நித்திரை கொள்றம் அவ்வளவுதான். பிரச்சினைகளின் சுமை இப்போதைக்கு குறைகிற மாதிரியில்லை எண்டு ஒரு நேரம் விரக்தியாயிருக்கு. பிறகு பேராசிரியர் குமாரவேல் சொன்னதை நினைச்சால் நம்பிக்கை தானே வாழ்க்கை. வாழும் வரை வாழ்வதை ஒழுங்காக அனுபவித்து வாழ் வோம் எண்டிருக்கு... ம்... சரிஇ நான் வரப்போறன். கலா இரவைக்கு கோல் பன்னுறதாய்ச் சொன்னவ" என்றபடி சீலன் வெளியேறினான்.

வெளியே பனி பெருங் குவியலாகக் குவிந்திருந்தது. தான் விழுந்து போகாமல் இருப்பதற்காக ஒவ்வொரு அடியாக எடுத்துக் கவனமாக வைத்தான் சீலன்.

***

பனிதூவும் போது அதிகம்குளிராத கால நிலை. இருப்பினும் சூடேற்றியை இதமான வெப்பத்தில் நிறுத்திவிட்டு படுக்கையில் சாய்ந்தான் சீலன்...!

கலா தொலைபேசி எடுக்க இன்னும் ஐந்து மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். எப்படி இந்த நேரத்தைக் கடத்துவது..!

சுவிசுக்கும் கனடாவூக்கும் 5 மணித்தியாலங்கள் நேர வித்தியாசம்

என்ன விந்த உலகின்; ஒருபக்கம் விடிய மற்றொரு ஒருபக்கம் உறங்கும்!

புதிய நாடு புதிய வாழ்க்கை எல்லாமே புதிதாய்...

நித்திரை வந்தாலும் நினைவுகள் விட்டிடுமா ? தூக்கத்தை கலைப்பதற்கே நினைவுகள் துரத்தும் புலம்பெயர்வாழ்வு...!

எல்லா வற்றையூம் அனுபவித்துத் தானே ஆகவேண்டும்...!

காக்கைக் கூட்டில் குயில் வாாழ்க்கை! ஒரு மனிதன் தூங்கி விழிப்பதற்குள் 243 தடவைகள் புரண்டு புரண்டு படுப்பானாம் ஆய்வாரள்கள் கூற்று.

சீலன் அரைவாசியைத் தாண்டிவிட்டிருந்தான்.

கலாவுடன் ஊரில் பழகிய நாட்கள் பேசிப் பிரிந்த பொழுது கள் சின்னச்சின்ன கோபங்கள் தவிப்புக்கள் எல்லாம்...!

சிந்தனைத் திரையில் தோன்றி மறைந்து கண்ணாம்பூச்சி விளையாட்டாய் ...

இன்று கலாவுடன் நீண்டநாட்களுக்குப்பின் பேச சந்தர்ப்பம் கிடைப்பதே... இருவர் மனங்களும் பேசிக்கொள்வதால் இருக்குமோ!

இரவு 10 மணியை கடிகாரம் நெருங்கிக் கெண்டிருந்தது. குளிரும் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக்கொண்டிருந்தது.

இன்னும் 2 மணித்தியாலங்கள்...! காத்திருப்புக்கு மட்டும் ஏன் இந்த நேரம் விரைவாகப்போவதில்லை...! வேலை நேரத்தில் மட்டும் நத்தைவேகம் ...!

மீண்டும் நினைவுகளின் ஊர்வலம்...! கலாவுடன் முதன் முதலாக பூங்காவில் உலாவிய நாட்கள்...!

ஊர்க்கண்ணுக்கு தண்ணிகாட்டிக் கடந்த பல நாட்களும்... எதிர்பாராமல்...பக்கத்து வீட்டு பையன் கண்டுவிட்ட அதிர்ச்சி யும்...! இன்று வரை அவன் வாய் திறக்காத நட்பும்.....! எத்தனை எத்தனை! காதலை விட காதலர்கள் சந்திக்கும் இன்ப இடையூறுகள் தான் காதற்செடிக்கு நீர்பாய்ச்சும் ஊற்றுக்கள்...! இல்லையா ...?

வாழ்க்கையில் தான் எத்தனை எத்தனை போராட்டங்கள்... இன்பமாக சில துன்பமாக...சில...

ட்றிங்...ட்றிங்...

தொலைபேசி அடித்ததோ இல்லை அலறியதோ... நித்திரைத்

தூக்கத்தில் மெதுவாக சீலனை எழுப்பியது...

என்ன இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கே கலா அழைப்பதற்கு ... இதற்கிடையில் யாராயிருக்கும்...?

“கலோ...!”

“யாரது...சீலனோ...?”

ஆகா அம்மாதான்.... “நான் சீலன்தான் பேசிறன் அம்மா, சொல்லுங்கோ...! சுகமாயிருக்கிறியளோ...!”

“ஓம் தம்பி! பார்வதிமாமி அலுவலா கொழும்புக்கு வந்தவா... நானும் அவகூட வந்தனான்...தம்பி....!”

பார்வதி மாமி கிட்டிய சொந்தமென்றாலும் ...எங்களைவிட பணம் படைத்தவை யாராயிருந்தாலும் ஏதோ முறைசொல்லி சொந்தம் கொண்டாடும் நவநாகரீகப் பெண்மணி....! ஏன்ன அம்மாவைச் சேர்த்திட்டா !

ஓகோ நானும் வெளிநாட்டில என்ன...! சுற்று முற்றும் ஒருதடைவை பார்த்துக்கொண்டான்...!

“சுந்தர வதனி சுகுண மனோகரி... என்று பொடியள் ஏன் நானும் உட்படத்தான்... பகிடி பண்ண சிட்டாய் பறந்து திரிந்த மனோகரியின் தாயார்...சும்மா சொல்லக்கூடாது அப்படியொரு அழகு...மனோகரி...!

“தங்கச்சி வரவில்லையோ...!”

“இல்லைத்தம்பி! அவளுக்கு சோதின வருகுது... படிக்கிறா.”

“சரியம்மா சொல்லுங்கோ”

“சீலன்.... நீ அனுப்பிய இரண்டு லட்சம் கிடைச்சுது தம்பி...”

“பாலன் மாமாவிட்ட பட்ட கடனைக் கொடுத்திட்டன்....!

நன்றி என்று சொன்னார்”

எத்தனையோ பேர் வெளிநாடுபோய் அனுப்புறம் என்று சொல்லி வாங்கியவை. 5 வருசமாகியூம் தொடர்பே இல்லை. சீலன் போய் குறுகிய காலத்துக்குள்ள கடனை திருப்பிவிட்டியள்! எல்லோரும்; சீலனாக முடியூமோ...? என்று வேற சொன்னார் தம்பி.!

மக்டொனால்சில கிறில்ல கைபட்டு கொப்பளித்த கையை ஒருதடைவை பார்த்துக்கொண்டான் சீலன்...!

“நல்லது அம்மா....! வேற சொல்லுங்கோ...!.”

கலாவுக்கும் சீலனுக்கும் இன்னும் ஒருமணிநேர இடைவெளி யிருப்பதை கடிகாரம் ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தது..!

*"இல்லத்தம்பி... சீலன்... இனி அடிக்கடி கொழும்புக்கு வர வேண்டியிருக்கும்...! தங்கச்சியும்...கொழும்பில நல்ல பள்ளிக் கூடத்தில படித்தால் ரஞ்சினியைப்போல லண்டனில வேலை கிடைக்கும் என்று சொல்லுறா..."*

*"அதுதான் பார்வதி மாமியும் தனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் வாறமாதம் லண்டன் போயினமாம்...வெள்ளவத்தையில வீடு. நானும் தங்கச்சியும்...வந்து இருக்கலாம் என்டு நினைக்கிறம். எதுவும் தம்பி உம்முடைய சம்மதத்தோடதான்...சீலன்...!"*

*ஒரே மூச்சில் அம்மா சொல்லி முடிக்க... ஒரே மூச்சில உயிரே போய்விடும்போல... சீலனுக்கு! குரல்கேர மேசையில இருந்த தண்ணீரை எடுத்து இரண்டு மிடறு குடித்தான்...!*

*...ம்...*

*"சொல்லுங்கோ...அம்மா...."*

*"வீட்டுக்கு அட்வான்சைக் கொடுக்கட்டோ தம்பி...! இதை விட்டா வேற நல்ல இடம் கிடைக்காது அப்பு...!"*

*"ம்.... சரியம்மா... எவ்வளவு கேட்கீனம்...?"*

*"75 ஆயிரம்...! பாலன் மாமாவுக்குப்போக மிச்சக்காசு இருக்கு.....சீலன்..."!*

*"சரியம்மா கொடுங்கோ...! சரி மாத வாடகை எவ்வளவு... சொன்னவை அம்மா?"*

*"35 ஆயிரமாம் தம்பி..."!*

*சீலனின் மூளை சுவிஸ் பிராங்குக்குள் புகுந்து ரூபாவூக்குள் மூழ்கியது...! அட மாதம்..350 பிராங்தானே... பரவாயில்லை... ! மலிவுதான் என கணப்பொழுதில் முடிவுக்குவந்தது.*

*இங்கு பாடசாலை நாட்களில் வாய்ப்பாடு பாடமாக்கிறத விட ஆங்காங்கே நாணயமாற்றங்களை நம்மவர்கள் நொடியில்... பெருக்கிப் பிரித்து மேய்வார்கள்.*

*"சரியம்மா...! வேறு என்ன? வாறமாதம் தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு வாங்கோவன்...!"*

*"இன்னும் ஒரு விடயம் தம்பி...! ஐ...போன் ஒன்று கேட்டவள்... சோனியோ இல்லாட்டி கலக்சி என்று சொன்னவள். இப்ப இது தான் எல்லாரும் வைச்சிருக்கினமாம்... அது தான்... யோசிக்கிறன்...!"*

*"அப்படியா அம்மா...சரி நீங்க எப்ப ஊருக்குப்போறீங்க...!"*

*“இரண்டு நாட்கள் செல்லும்...சீலன்...!”*

*“நாளைக்கு காசு அனுப்புகிறன் அம்மா... தங்கச்சி கேட்டதை வாங்கிக் கொடுங்கோ...!”*

*“சரி தம்பி ... வைக்கிறன். நாளைக்கு எடுக்கிறன்...!”*

*“சரியம்மா...”*

*கலாவின் தொலைபேசி...க்கு ...நேரம் சரியாக இன்னும்... சில நிமிடங்களே கடிகாரம்... சரியாகச் சொன்னது ...!*

*தான் நாட்டில் இருந்தபோது அம்மா தங்கச்சிக்கு கேட்டதை வாங்கிக் கொடுக்க உழைப்பிருக்கவில்லை... இப்போ வெளி நாட்டில... அவர்கள் அனுபவிக்கட்டுமே...! எல்லோரையூம் போல அவனும்...!*

*அண்ணன் ஒரு கோவில் என்றால் தங்கையொரு தீபம் அன்றோ ...!*

*பெருமூச்சொன்று அவனின் அனுமதியில்லாமலே வெளிப் பட்டது...!*

*நீண்டநாட்களுக்குப் பின் அம்மாவுடன் பேசியதும் தங்கை யின் விருப்பத்தை நிறைவேற்றியதும்... பெரிய பேறாக கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்...!*

*எதிர்காலத்தில் தன்னைப்போல... பாசவலையில் சிக்குண்ட புலம்பெயர் உறவுகள் கேட்க கேட்க பணம் அனுப்பி ...அங்க இளசுகள் சீரழிஞ்சு போறதாகப் பலர் கதைத்தாலும் செய்திகளாக வந்தாலும் இரத்த சொந்தங்கள் அனுபவிக்கட்டுமே என்ற ஆவலில் சீலனும் சிக்கிவிட்டதை கடவுளே நேரில் வந்த சொன்னாலும் அதை நம்ப சீலன் மட்டுமல்ல தாமே நேரில் அவஸ்தைப்படும் வரை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்! வெளிநாடு வராதே இங்கு வாழ்க்கை சுலபமல்ல என்பதை நம்ப மறுக்கும் தாயக உறவுகள்போல...!*

*சூடாகக்க கோப்பி கலந்து குடித்தபடி கலாவின் தொலை பேசி அழைப்புக்காக காத்திருந்தான் சீலன்....! கட்டிலில் தலையைச் சாய்த்தபடி ...!*

*இரவு 12.00 மணியை தாண்டி முட்கள் நகர்ந்து கொண்டி ருந்தது. கனடாவில் இப்போ 6.00 மணி. இன்னும் பத்து பதினைந்து நிமிடங்களில்... அழைப்பு வரலாம்...!*

*தாயும்... தாரமும்...பாச வயலில் விளையும் பயிர்கள் தானே...! ஒவ்வொரு பருவத்தையும் இணைக்கும் உன்னத உறவூகள்*

தானே ...!இரண்டு உறவுகளையும் இணைப்பதிலும் பிரிப்பதிலும் காலம் தன் வேலையைச் செய்துகொண்டே இருக்கும்....!

"ட்றிங்...ட்றிங்..."

"ஹலோ..." ஆயிரம் மின்னல் தெறித்து செவிவழி புகுந்து நெஞ்சை நிறைத்த அந்தக் குரல்

நிச்சயமாய் கலாதான்...!

"வணக்கம்.... கலா ...உன் சீலுதான்...."

"வணக்கம்... இப்ப புலம்பெயர்ந்த நாடுகள்ல வணக்கத் தோடு தான்... ஆரம்பம் எப்படி இருக்கிறீங்க சீலன் ...?"

"நல்லா இருக்கிறன் கலா..."

இருவர் குரலும் தழுதழுக்க நிச்சயமாய் சீலன் கண்கள் இரு துளிகளை விட்டது போல் கலாவும் கண்களும் நிச்சயமாய்...! ஆயிரம் வார்த்தைகள் ஆயிரம் அர்த்தங்கள்... அத்தனையூம் அந்தத் துளிகளில் சங்கமமாகி நின்றன...!

எத்தனை மாதங்கள்... எத்தனை சோதனைகள் ...!

சிறிது நேரம் மௌனம்... விம்மல்...! சொல்லும்... கலா எப்படிப் படிப்புகள்...! வில்லங்கமாய் திசைதிருப்பிப் பேச முயன்றான்... சீலன்..!

"நல்லாப் போகுது இன்னும் 2 வருடங்கள் செல்லும்...என நினைக்கிறேன்..! பதிலுக்காய் காத்து நின்றாள் ஏக்கத்தோடு... கலா.."

"உங்கள் படிப்பு வேலையெல்லாம் ...."

"இப்பதான் நல்ல வேலை கிடைத்து செய்து கொண்டிருக் கிறன் கலா...இரவு நேர பாடசாலைக்கு விண்ணப்பித்திருக்கிறன்.... விரைவில் கிடைக்கும்..."

"அம்மா போன் பண்ணினவா... உமக்குமுதல் அம்மாவுடன் தான் பேசிக்கொண்டிருந்தனான்.

எப்படி எல்லோரும் நலம்தானே..."

"ஓமோம்"

நடந்த உரையாடலை சுருக்கமாகக் கூறி முடித்தான் சீலன்...!

சீலனின் குடும்பத்தாரை கலாவுக்குத் தெரியும். அன்பான குடும்பம். எதிர்கால மாமியார் குறித்து கலாவின் மனதில் ஒரு மகிழ்ச்சி....! கலா மட்டக்களப்பைச் சேர்ந்தவள் என்றாலும் யாழ்ப்பாணத்திலிருந்த சீலனின் வீட்டுக்கு இரண்டு மூன்றுமுறை சீலனுடன் போயிருக்கிறாள்.

சீலன் "சொல்லும்....கலா" என்கிறான்

"எவ்வளவோ கதைக்கவேண்டும் என நினைத்திருந்தன் .... ஒன்றும் ஞாபகமில்லை."

கலா நிறுத்தி..... சீலனுக்கு விடையளிக்க விட்டாள்....!

கலா நானும் டொய்ச்சும் ஆங்கிலமும் படிக்க விண்ணப்பித் திருக்கிறன்..! எப்படியாவது படித்து டாக்டராகவேணும்...!என்ற இறுமாப்போடு இருக்கிறன்.!

"நாமிருவரும் என்றோ ஒருநாள் தாயகம் சென்று நமது உறவுகளுக்கு எமது பணிகளைச் செய்ய வேண்டும்."

"இது தான் எனது... இல்லை நமது லட்சியம் தானே கலா..."

"ஓம் டாக்டர் ஐயா... கல கல என சிரித்தாள் கலா..."

இந்த சிரிப்பை அவன் கேட்டு பல காலமாகி யிருந்தது..

குறும்பும் கலகலப்புமாய் நேரம் போனதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தனர்.

நாளை இருவருக்கும் விடுமுறை என்ற ஆறுதலில் நேரம் போவதை அவர்கள் கணக்கிலெடுக்கவில்லை...!

"சீலன் நீங்கள் கனடா வந்து என்னோடு இணைந்து படிக்க லாம் தானே...? நாம் பிறருக்காக வாழ நினைக்கும் அதே வேளை நமது வாழ்க்கையை யும் பலமானதாக்க வேண்டாமா? அப்போது நமது பணி இன்னும் இரட்டிப்பாகும் அல்லவா..? நினைத்தவுடன் ஒரு நாட்டுக்குள் வரவும் பிறிதொரு நாட்டுக்குள் செல்லவும் புலம்பெயர் அகதித் தமிழனுக்கு முடிவுமா...?

"சீலன் ... நான் ஒரு முயற்சி செய்து பார்க்கப்போகிறேன்...! நீங்கள் ஒத்துழைத்தால்...வெற்றி கிடைக்கும் என நினைக்கிறேன்..."

"அது இப்போதுள்ள நிலையில் தெய்வசித்தம் கலா...! தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும் அல்லவா...சீலன்..."

"நிச்சயமாக உமது முயற்சி வெற்றியடைய வாழ்த்துக்கள்..."

"சீலன்... உங்களுக்கு நித்திரை வந்துவிட்டது என நினைக் கிறேன்... நாளை எனக்கும் விடுமுறை ... நிறையப் பேச வேண்டும்... பேசுவோம்..."

கலா ஒரு பறக்கும் முத்தத்தோடு போனை வைத்தாள்.

தாயுடனும் காதலி கலாவுடனும் கதைத்த பின் அதிகாலை மூன்று மணிபோல் தூக்கத்திற்கு சென்ற சீலனை தூக்கம் அணைக்க

மறுத்தது. படுக்கையில் சிந்தனை ஓட்டங்களை "தெறித்திட்ட முத்துக்களைப்போல சிதறவிட்டு" புரண்டு புரண்டு படுத்து தூக்கத்திற்கு முயன்றான்.

ஆனால் அவனால் தூங்க முடியவில்லை. அவனது மனமோ வேதனையில் துடிக்க பஞ்சணையும் நொந்தது அவனுக்கு.

தாய் தன்னை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக பட்ட கடன் குடியிருக்கும் வீட்டு காணியின் அடகை வட்டி முதலுமாக செலுத்தி மீட்க வேணும் சகோதரியின் படிப்பு செலவு கொழும்பு வெள்ளவத்தையில் வாடகைக்கு பெறவிருக்கும் வீட்டின் மாதாந்த வாடகை அத்தோடு அதற்கு செலுத்த வேண்டிய முற்பணம் இவற்றோடு தான் கற்கவுள்ள ஜேர்மன் ஆங்கில கோசுக்கான செலவு வேறு.

இயற்றை எல்லாம் சமாளிக்க ஒரு தொகைப்பணம் ஒவ்வொரு மாதமும் கையில் புரளவேணுமே.அதற்குரிய பணத்தை எந்த வழிமுறையை கையாண்டு சமாளிப்பது என ஏங்கினான். தவித்தான்.

உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் "சுவிஸில் வாழ்க்கை! தரம்மிக்கது. ஆனால் வாழ்க்கை செலவோ அதிகமானது". இப்படிப் பட்ட ஒரு நாட்டில் இரு வேலை பாராது எமக்குள்ள அகபுற செலவு களை இலகுவில் சமாளித்து விட முடியாது.

தான் தற்போது பார்த்திடும் மக்டொனல்ஸ் வேலையில் பெறும் ஊதியம் ஒருபக்க செலவுக்கே போதக்கூடியது.ஒரு நாணயத் திற்கு இரு பக்கங்கள் எப்படி முக்கியமோ அதுபோல இரண்டாவது தொழில் முக்கியமாக இருந்தது சீலனுக்கு.

இரண்டாவது வேலை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கு மானால் தற்போதைய வேலை நேரம் பொருந்தி வராதே என்ற மறு பிரச்சனை தொக்கி நின்றது. "நின்ற வெள்ளத்தை வந்த வெள்ளம் அள்ளி சென்றது போல" ஆகிவிடாமல் பார்க்க வேண்டிய இக்கட்டான நிலையும் சீலனுக்கு.

இருந்த போதும் அப்துல் கலாம் சொன்னது போன்று "நல்லது நடக்க கனவு காணுங்கள் அது நிறைவுறும்" கண்ணதாசன் சொன்னது போல "நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் அது தெய்வமாக காட்சி தரும்" இவற்றை விட அவனது யாழ் பல்கலைக் கழக விரிவுரை ஆசான் குமாரவேலு சொன்னது போல "முயற்சி திருவினையாக்கும்" போன்ற வேத வாக்குகளை மனதில் நிறுத்தி, மனம் தளராது முயற்சி செய்வோம் என்ற முடிவுக்கு வந்தான்.

மறுநாள் சீலன் மக்டொனால்ஸ் வேலைக்கு செல்வதற்காக தனது வாசல் கதவை திறந்து வெளியில் வந்த போது! வானம் இருட்டி தமக்குள் குழம்பியபடி முகில்கள் மெல்ல மெல்ல நடை போட்டு அசைந்தன. பனிமலைகளுக்கு விடைகூறி அங்கிருந்து புறப்பட்ட இளம் காற்று சீலன் அணிந்திருந்த அழகு மிக்க ரீ சேட்டை ஊடறுத்து அவனுக்கு குளிரை உணர்த்தி நின்றன.

அவன் மேல்நோக்கி அண்ணார்ந்து வானத்தை ஒரு தரம் நோக்கினான். மழை பெய்வதற்கான அறிகுறிகளை அவனது கண்கள் கண்டு கொண்டன.

தனது வீட்டிலிருந்து சிறிது தூரம் நடந்து சென்றால் அவன் போய் சேர வேண்டிய இடத்துக்கான பேரூந்து நிலையத்தை அடைந்து விடலாம் இதே நேரம் வானம் சிறு சிறு துளிகளாக தனது கண்ணீரை தூறல் வடிவில் சிந்த தொடங்கியது. அவனோ தனது கால் பாதங்களின் இடைவெளியை மேலும் அகட்டி நடையின் வேகத்தை அதிகரித்தான். அவனிடம் குடை வேறு இல்லை.

சுவிஸில் சொல்லாமல் கொள்ளாமல் காற்று வீசிடும். மழை பெய்திடும். இவற்றை நாம் புரிந்து கொள்வது கடினமாகவே இன்னும் தோன்றுகிறது.

சீலனின் நடையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க வானத்தின் தூறல் வேகமும் அதிகரித்து. ஈற்றில் அவனது நடை வேகத்தை தூறல் வேகம் வென்று மழையாக நிலத்தை முத்தமிட்டது.

சிறிது நனைந்தபடி பஸ் தரிப்பிடத்தினுள் நுழைந்து தன் கைக்குட்டையால் நெற்றியிலிருந்து நாடி வரை துடைத்துவிட்டு தனது தலையை துவட்டும் வேளை! அவன் செல்ல வேண்டிய பஸ்சும் வந்து நின்றது.

பஸ்ஸினுள் கூட்டம் அதிகமாக இருந்தது. பஸ்ஸின் இருக்கை கம்பி வளையத்தை தான் விழுந்து விடாதபடி ஆதாரமாக பிடித்த வாறு தான் இறங்க வேண்டிய இடத்தை நோக்கினான்.

ஆனால் மழையோ தனது நீரால் பஸ்ஸின் சாரளத்தை ஆக்கிரமித்து வெளியிடங்களை பஸ்ஸினுள் இருந்து பார்க்க முடியாத வாறு யாழ் ஏலோல சிங்கன் போல தடைபோட்டு நின்றது.

பஸ் எங்கு செல்கிறது எந்த தரிப்பிடத்தில் நிற்கிறது என்பதனை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருந்த போதும் பஸ்ஸினுள் உள்ள திரை பஸ் செல்லும் இடத்தையும்

தரிப்பிடத்தையும் பறைசாற்றியபடி இருந்தது.

சில வேளை இயற்கையை கூட மனிதன் தனது மூளை சக்தியால் வெல்லுகிறான். ஆனால் பலமுறை இயற்கையிடம் மனிதன் தோற்று விடுகிறான்.

பஸ்ஸால் இறங்கி மக்டொனால்ஸ் உடுப்பு மாற்றும் அறைக்கு சென்று தனது வேலைக்கான உடுப்பை மாற்றியபின் இன்னும் வேலை ஆரம்பிக்க 20 நிமிடங்கள் இருந்த படியால் ஒரு கோப்பியை அடித்து எடுத்து வந்து ஊழியர் இளைப்பாறும் அறையில் மேசைமீது வைத்து விட்டு கலக்கமான முகத்துடன் கோப்பியை அருந்தாது இருந்தான்.

அதேவேளை தனது இளைப்பாறும் 30 நிமிட நேரத்தில் பானுவும் ஒரு கோப்பியுடன் அங்கு வந்தாள். சீலன் சோகமே உருவாக கண்கள் கலங்கியபடி இருப்பதை கண்டு அவனருகில் உட்கார்ந்தாள்.

சிறிது நேரம் அவனை கவனித்தவள், "என்ன சீலன் கண்கள் கலங்கியிருக்கு முகத்தில் எவ்வித களையும் இல்லாமல் சோகத்துடன் இருப்பது போல் தெரிகிறது."

என்ன நடந்தது கலாவுக்கு கனடாவில் முரளியை முடிவு செய்து விட்டார்களா? அல்லது அம்மாவுக்கு உடம்பு சரி யில்லையா?" என தனது சகோதரனை கேட்பதுபோல உரிமையுடன் கேட்டாள்.

அவனோ பதில் எதுவும் கூறாது அமைதியாக இருந்தான். மீண்டும் பானு கேட்டாள்.அவனை நேசிக்கும் இரு உள்ளங்களில் பானுவும் ஒருத்தி. அவளிடம் தனது பிரச்சனைகளை சொன்னால் மனதுக்காவது சிறு ஆறுதல் கிடைக்கும் என எண்ணியவாறு...

தனது மவுனத்தை கலைத்து "அக்கா!... எனக்கு... என இழுத்தான்." எதுவாக இருந்தாலும் தயங்காது சொல்லுங்கள் என்றாள்" பானு.

"தங்கச்சிக்கு கொழும்பில் வெளிவாரி பட்டப்படிப்புக்கு இடம் கிடைத்துள்ளது. அடுத்த மாதம் படிப்பு தொடங்குகிறது. குமர்ப்பிள்ளை. தனிமையில் இருக்க விட முடியாது. இருவருக்கும் கொழும்பு புதிய இடம். அங்கு எவரையும் தெரியாது. யாரையும் அங்கு நம்பவும் முடியாதல்லவா?அதனால் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கவேணும். அம்மா ஏற்கனவே வெள்ளவத்தையில் வீடு ஒன்று பார்த்துள்ளா. அவ்வீட்டிற்கு வாடகை முற்பணம் வேறு செலுத்த வேணும். மாதா மாதம் தங்கச்சியின் கல்விச் செலவு நான் இங்கு

வருவதற்காக பட்ட கடன். எனது முடிக்கப்படாத டாக்டர் படிப்பை தொடர இங்கு ஆங்கிலமும் டொச்சும் பயில விண்ணப்பித்துள்ளேன். இன்னும் இரு மாதமளவில் என் படிப்பை தொடங்கலாம் என எண்ணுகிறேன். நீங்களும் மொழி தெரிந்தால் நல்ல வேலை எடுக்க முடியும் எனக் கூறினீர்கள்" என்றான் சீலன்.

"முதல் நீங்கள் கவலையை விடுங்கள். மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். சகலதும் மெல்ல மெல்ல ஒழுங்காக நிறைவேறும். நீங்கள் விரும்பினால் சொல்லுங்கள். நான் வேலை செய்யும் கம்பனி யில் உங்களுக்கு அதிகாலையில் பேப்பர் போடும் வேலை பெற்று தருகிறேன். நீங்கள் பேப்பர் போட்டு விட்டு இங்கு பத்து மணி வேலைக்கு அல்லது ஒருமணி வேலைக்கு வர முடியும். இரவு வேலையை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது. நீங்கள் நித்திரை கொண்டுவிட்டு அதிகாலை பேப்பர் போட வசதியாக இருக்கும். அத்தோடு உங்களுடைய உடம்பையும் பாதுகாத்திட முடியும்" என்றாள்.

"ஓம் அக்கா நல்ல யோசனைதான். ஆனால் இங்கு எனது வேலை நேரம் ஒத்து வராதே. இரவு ஒரு மணிக்கு வேலை முடித்து எப்படியக்கா அதிகாலை நாலு மணிக்கு தூக்கத்தை விட்டெழுந்து பேப்பர் போடச் செல்ல முடியும்?"

"நீங்கள் அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். இங்கு படிப் பதற்கும் இராணுவ பயிற்சிக்கும் முதலாளிகள் நிறுவனங்கள் ஊழியர்கள் கேட்கும் நேரங்களை ஒதுக்கி கொடுக்கவேண்டியது கட்டாயம். அது சட்டத்திலே கூட உண்டு. எமது மனேஜர் பீல்மான் நல்லவர் என்பது உங்களுக்கு தெரியும் தானே".

"ஓம் அக்கா நீங்களும் பேசிப்பாருங்கள். நானும் எனது படிப்பு பற்றி மனேஜருக்கு சொல்லுகிறேன். அப்படி இரவு வேலையை தவிர்த்தால் என் எதிர்கால கல்வியை கற்பதற்கும் இரண்டாவது வேலை செய்வதற்கும் பெரும் வசதியாக அமையும்".

"சீலன்! இப்ப அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் வீடு எடுக்க எவ்வளவு பணம் தேவை"?

"அது...அது...வந்து...வந்து...அக்கா..." என இழுத்தான் சீலன்.

"சங்கடப்படாது சொல்லுங்கள் என்றாள்" பானு.

"இலங்கைப்பணம் எப்படியும் மூன்று இலட்சம் தேவை"

என்றான். அவள் சிறிது யோசனையின் பின் “அப்பணத்தை நான் தருகிறேன். நீங்கள் உடனே அம்மாவுக்கு அனுப்பிவிடுங்கள்” என்று சொன்னதை சீலன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. “அக்கா என்ன சொல்லுகிறீர்கள்?” என அவளை பார்த்தான்.

அவன் பார்வையின் அர்த்தத்தை புரிந்திட்ட பானு புன்சிரிப்புடன் உண்மையாகத்தான் சொல்லுகிறன் சீலன் நான் பணம் தருகிறேன் என்றவள் தொடர்ந்து,

எனக்கு நீங்கள் உடனே திருப்பிதரவேண்டும் என்ற அவசரம் இல்லை. உனது பதின்மூன்றாவது சம்பளத்தில் திரும்ப தந்தால் போதும் எனச் சொன்ன போது அவனையறியாது உணர்ச்சி பெருக் கத்தில் அவளது வலது கரத்தை பற்றி நன்றி கலந்த கண்களுடன் அவளை பார்த்தான். பதிலுக்கு அவளும் தன் பரவாயில்லை என்னும் சைகையை வெளிப்படுத்தினாள்.

இரு கிழமைகளின் பின்னர் பானு மனேஜருடன் பேசி சீலனுக்கு இரவு வேலையை தவிர்த்து பகல் வேலைக்கான அனுமதியை பெற்று கொடுத்தாள். ஆனால் சனிகிழமை மட்டும் இரவு வேலை சீலன் செய்தே ஆக வேண்டும். அது கூட அவனுக்கு வசதியாகவே இருந்தது. மறுநாள் பேப்பர் போடும் வேலை இல்லை. விண்ணப்பித்த படிப்பு தொடங்கினால் அதற்கும் ஞாயிறு விடுமுறை நாள். நன்றாக தூங்கி உடலலுப்பை போக்க முடியும் என தனக்குள் நினைத்துக் கொண்டான்.

அன்று மாலை வேலை முடிந்து வீட்டிற்கு மிக உற்சாகத்துடன் வந்து அன்றைய வீட்டு காரியங்களை முடித்து தொலைக் காட்சி பார்க்க விரும்பாது முன்னர் அறிமுகமற்ற நல்ல உள்ளம் படைத்த பானு அக்கா நான் எதிர்பாராத உதவிகளை எனக்கு செய்கிறா என வியந்து இப்பெரும் உதவிகளுக்கு நான் எப்படி நன்றிக்கடன் செலுத்தப் போகிறேன் என்ற பரிதவிப்புடனும் மறுநாள் காலை தாய்க்கும் காதலி கலாவுக்கும் வீடு எடுப்பதற்கான பணமும் இரண்டாவது வேலை யும் கிடைக்க இருக்கும் செய்தியை கூற வேண்டும் என்ற ஆவலில் விழுதல் என்பது மறுபடியும் வீழ்ந்து விடா திருப்பதற்கான முன் எச்சரிக்கையும் வாழ்வின் முன்னேற்றத்திற்கு முயல வைக்கும் முதல் படியுமே ஆகும் என்ற எண்ணக்கருவுடன் இனிது தூங்கி விட்டான்.

***

கிளிக்... கிளிக் என்று ஒரு சத்தம். பக்கத்திலிருந்த பெண்

கைத்தொலைபேசியால் பஞ்சுப் பொதியாய்க் குவிந்திருக்கும் மேகங்களை விமானத்தின் கண்ணாடி வழியாக சுட்டுக் கொண்டிருந்தாள்.

லேசாக கண்ணயர்ந்த மங்கையற்கரசிக்கு இந்தச் சத்தம் விழிப்பைக் கொடுக்கவே திரும்பிப் பார்த்தார். அவள் திரும்பிப் புன்னகைத்து முகநூலில் பதிவேற்றம் செய்வதற்கு புகைப்படம் பிடிப்பதாகக் கூறினாள். வாழ்க்கை வாழ்வதற்கே என்று எண்ணும் இளைய தலைமுறையினரில் இவளும் ஒருத்தி. அவளைப் பார்த்து மங்கையற்கரசியும் நட்போடு புன்னகைத்தாள்.

மங்கையற்கரசி மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியை. ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களின் அழைப்பின் பேரில் அங்கே உரையாற்றச் செல்வதற்காக இந்தப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

முதல்நாள் கனடாவில் சந்தித்துவிட்டு வந்த பத்மகலாவின் சாயல் தனக்கருகில் இருந்த இவளிடம் லேசாக இருந்தது. பத்ம கலாவை முதன்முதலாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு சிறப்பு அழைப்பாளராக உரையாற்றச் சென்ற போது சந்தித்தது நினைவுக்கு வந்தது.

“தமிழரும் மூலிகை மருத்துவமும்” என்ற தலைப்பில் உரை யாற்றச் சென்ற அவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேராசிரி யர் சரவணபவன் அவரை அழைத்துச் செல்வதற்காக கொழும்பு விமான நிலையத்திற்கு வந்திருந்த போது அவருடன் பத்மகலாவும் சீலனும் வந்திருந்தனர்.

பேராசியர் சரவணபவான் ஏற்கனவே பேராசிரியை மங்கை யற்கரசிக்கு அறிமுகமானவர். மதுரைப் பல்கலைக்கழகத் திற்கு பேராசிரியர் சரவணபவானும் சென்று வந்திருக்கிறார். விமான நிலையத்தில் வைத்து பத்மகலாவையும் சீலனையும் பேராசிரியர் மங்கையற்கரசிக்கு அறிமுகம் செய்து வைத்த அவர் “இவர்களிரு வருமே நீங்கள் மதுரைக்கு செல்லும் வரை உங்களுக்கான உணவு தங்குமிட வசதி போன்றவற்றை மேற்கொள்வார்கள்” எனச் சொன்னார்.

ஈழத்தில் தங்கியிருந்த ஒரு வாரத்திற்கும் பத்மகலாவும் சீலனும் அன்போடும் மிகுந்த அக்கறையுடனும் பேராசிரியைக் கவனித்துக் கொண்டனர். பத்மகலா மீன்பாடும் தேன்நாடான மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு படிக்க வந்து பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் தனது தோழியர்களுடன்

சேர்ந்து ஒரு வீடு எடுத்து தங்கியிருந்தார்.

பேராசிரியை அவர்களுடன் தங்குவதற்கு விருப்புக் கொண்ட தால் தங்குவதற்கு விடுதி வேண்டாம் என்று சொல்லி அந்த ஒரு வாரத்திற்கும் பத்மகலாவுடனேயே தங்கியிருந்தார். பத்மகலா மட்டக்களப்பிலிருந்து ஒருவகையான அரிசி கொண்டு வந்திருந்தார். அதன் சுவையே தனிரகமானது.

சீலனும் தனது தாயாரைக் கொண்டும் ஆப்பம், பிட்டு, பொரித்த மிளகாயில் தேங்காய்ச் சம்பல்,ரொட்டியுடன் உருளைக் கிழங்கு மசியல், இடியப்பம் பால்சொதி சக்கரைப் பொங்கல், குழம்பு என்பவற்றைச் சமைப்பித்துக் கொண்டு வந்து பத்மகலாவிடம் கொடுத்தும் பத்மகலாவும் சீலனும் விதம் விதமாக உணவு தந்து அவரைத் திக்குமுக்காட வைத்தனர்.

அவர்களுக்குள் தோழமையைத் தாண்டிய ஒரு ஈர்ப்பு அவர் களுக்குள் இருப்பதை பேராசிரியையால் கவனிக்க முடிந்தது. சீலனும் பத்மகலாவும் ஒவ்வொரு வேளையும் அவரைக் கவனித்துக் கொண்ட தோடு மட்டமல்ல அவர் ஆசைப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு கூட்டிச் சென்று காண்பித்தனர். அப்போது அவர் பேசுவதை எல்லாம் கேட்பதில் அவர்களுக்கு அலாதிப் பிரியம்.

எப்பேர்ப்பட்ட நூலகம். இன்றைக்கெல்லாம் கிடைக்குமா அப்பேர்ப்பட்ட ஓலைச்சுவடிகள். அவர் கல்லூரிக்காலத்தில் படிக்கும் போது அங்கிருந்த நூல்கள் எரியூட்டப்பட்ட செய்தி கேட்டறிந்து பரிதவித்தது பற்றி ஆதங்கத்துடன் பகிர்ந்து கொண்டார்.

ஒருவர் மொழியைப் புத்தகங்களை எரிப்பதன் மூலம் அவர்களை வேரோடு அழித்துவிட முடியும் என்று எண்ணுவது எவ்வளவு கொடுங்கனவு. பேராயர் ஜெபநேசனும், நூலகர் செல்வ ராஜாவும்,வி.எஸ்.துரைராஜாவும் எழுதி இருந்ததைப் படிக்கும் போது தன் ரத்தம் எவ்வாறு கொதித்தது என்று அவர் சொல்லும் போது முகம் எல்லாம் சிவந்து விட்டிருந்தது. உணர்ச்சிப்பெருக்கில் அதனைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தார்.

இன்றைக்கு திரும்ப நெடிதுயர்ந்து நின்றாலும் சில மூலிகை மருத்துவக் குறிப்புகள் கொண்ட ஓலைச்சுவடிகளும் எரியூட்டப் பட்டிருக்கலாம் என்பது அவர் அனுமானம். வெளியே வந்த அவர்கள் சில மீற்றர் தூரத்திலிருந்த சுப்பிரமணியம் பூங்காவில் அமர்ந்து கொண்டனர்.

இன்றைய ஆங்கில மருத்துவம் நோய்வந்தபின் மருந்து கொடுத்துக் குணமாக்குவது. நோய் மூலத்தை ஆராய்வதல்ல. தமிழர் சித்தமருத்துவம் நோய்நாடி நோய் முதல் நாடி மருத்துவம் அளிப்பது. ஆங்கில மருந்துகள் விற்பனைக்காக நோயை உருவாக்கிப் பின் அதற்கான மருந்தை விற்பனைக்கு கொண்டு வருபவை.

நம் முன்னோர்களின் மூலிகை குறிப்புகளில் எய்ட்ஸிலிருந்து எல்லா வியாதிக்கும் மருந்து இருக்கிறது. சிலவற்றின் வேர், சிலவற்றின் பட்டை, சிலவற்றின் இலைகள் இப்படி.அவற்றை எல்லாம் உரிமையம் அடிப்படையில் வாங்கி வைத்துக் கொண்டு ஒவ்வொரு நாட்டினரையும் நவீன முறையில் அடிமைப்படுத்தல் நடக்கிறது. நில வேம்பின் பட்டையைக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் மட்டுப்படும். இதைக்கூட தங்கள் நாட்டுமரம் என்ற உரிமையத்தை வாங்கி வைத்துக் கொள்ள முயற்சி நடக்கிறது. அதன் பின் நம்முடைய வேரை யும் மூலிகைகளையும் பயன்படுத்துவதற்கு நாங்கள் அவர்களுக்கு கப்பம் கட்ட வேண்டிவரும். பேராசிரியை மங்கையற்கரசி சொல்வதைக் கேட்டு சீலனும் பத்மகலாவும் “ஓம் அது உண்மைதான் புரொபஸர்” என ஆமோதித்தனர்.

பத்மகலாவினதும் தருமசீலனினதும் முகத்தைப் பார்த்தார் பேராசிரியை. இருவருமே பருவ வயதை உடையவர்கள். கண்களில் ஆவலும் பருவ வயதிற்கான காதலும் துளிர்விடுவதை உணர்ந்தார். தன் வயதினர் போல் அவர்களிடம் பேசாமல் சற்று வேறு ஏதும் பேசலாம் என்று பேச்சை மாற்ற எண்ணினார்.

பி.எச்.அப்துல் கமீத், கே.எஸ்.ராஜா, இராஜேஸ்வரி சண்முகம் இவர்களது பாணியில் வானொலி நிகழ்ச்சிகளைத் தொகுப்பது போல் பேசிக் காட்டினார். “மேலூர் தான் எங்கள் ஊர். பள்ளி விட்டு வந்ததும் ஐந்து முப்பதிலிருந்து ஆறு மணி வரைக்கும் எங்கள் அம்மா பாட்டுக் கேட்பார்கள். நாடாக்கட்டிலில் அமர்ந்தும் விளையாடிய படியும் அந்தப் பாடல்களைக் கேட்போம். அந்த வளமைமிக்க சொற்கள் தமிழ்நாட்டில் கூடக் கேட்கக் கிடைக்காது. நாங்கள் எல்லோரும் சிலோன் வானொலிப் பைத்தியங்கள்.

தொலைக்காட்சி வருவதற்கு முன் அதில் சில கதைகளை அந்தப் பாத்திரங்கள் போலப் பேசி நடிப்பார்கள். அதன் பின்னணி யில் இசையும் ஒலிக்கும். அதற்குப் பெயர் இசையும் கதையும். எத்தனை இன்பம் நிரம்பிய காலகட்டம் அது. நான் கல்லூரி

வருவதற்குள் எல்லாம் திசைமாறி எங்களுக்கு பித்துப் பிடித்தது போலாயிற்று. 71 களிலேயே மணல்தேரியில் காத்துக்கிடந்து கிடைத்த படகில் வந்ததாகச் சொன்ன நீலாக்கா எங்கள் வீட்டில் பலவருடம் வேலை பார்த்தார். 83 ஆவணி 3 ஞாபகம் இருக்கு. கல்லூரியில் இருந்து விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த நாங்கள் 20 நாட்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை.

கலவரம் பற்றிக் கேள்விப்பட்ட நீலாக்கா வந்தபோது, தன்னைப் படகில் ஏற்றிவிட்டு இடம் இல்லாமல் அங்கேயே தங்கி விட்ட அப்பாவின் ஞாபகம் வந்து கதறி அழுதார்" என்றார். அவர் கண்கள் லேசாகக் கசிந்திருந்தன.

பேராசிரியை யதார்த்தமானவர், நகைச்சுவை உணர்வு மிக்கவர். மீண்டும் அவர்கள் முகம் தீவிரமாவதைக் கண்டு போர்த்துக்கேயர் விட்டுச் சென்ற பைலாப் பாடல் மெட்டில் "சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே பள்ளிக்குச் சென்றாளோ படிக்கச் சென்றாளோ" எனப் பாடவும் புன்னகை புரிந்தார்கள்.

"கள்ளுக்கடைப் பக்கம் போகாதே உன் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன்" என்று அவர் சிலோன் பொப்பிசைப் பாடலை அபிநயம் பிடித்துப் பாடவும் குபுக்கென்று சிரித்தார்கள்.

"அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே கேள்வி ஒன்று கேட்கலாமா உனைத்தானே, இருமனம் ஒரு மனம் ஆகும் திரு மணம் அப்போது ஆகும், செலவிற்கு வழி யாது என்கிறாய் கேள்வி அதுதானே" என்று சேமிப்புப் பற்றிப் பாடும் பாடலைச் சொல்லும் போது அவர்கள் இருவரும் நாணத்தோடும் சங்கோசமாகவும் சிரித்த முகத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதை உணர்ந்தார்.

இந்தக் காதல்தான் மனிதர்களை எப்படி ஆட்டிப் படைக் கிறது. ஒருவர் ஒருவர் கண்ணாலேயே விழுங்கச் செய்கிறது. ஒருவருக்காக ஒருவரை துடிக்கச் செய்கிறது. மாயக்காரன் கோல் போல் உலகில் எங்கிருந்தாலும் தொட்டுவிட்டு வருகிறது. உணர்வு களால் ஒன்றியவர்களை கண்டங்கள் பிரிக்க ஏலுமா. காதல் போயின் காதல் போயின் சாதல் என்று எழுதி வைத்தானே முண்டாசுக் கவிஞன்.

காதல் மனிதரைத் தோல் போலாக்குமா... ஆக்கி இருந்ததே அந்த பிரிவுத் துயர். பசலை படிந்த தோற்றத்தில் பத்மகலா. அவருக்கே நம்ப முடியவில்லை. மூன்று வருடங்களுக்கு முன்

பார்த்தவளா இவள்... இங்கே எப்படி...

நேற்று கனடாவில் தமிழ்ச்சங்கத்தின் பேரில் சென்றிருந்த அவர் "தமிழ்ச் சித்தர்களும் மூலிகை மருத்துவமும்" என்ற தலைப்பில் அகத்தியரின் செங்கடுக்காய் கற்பம், கருவூரானின் நாறுகிரந்தைக் கற்பம் ஆகியவற்றை விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார். கனடாவில் பிறந்த வில்லியம் ஆஸ்லே என்ற ஆங்கில மருத்துவர்கூட நம் தமிழ்ச் சித்த வைத்தியப் பாணியில் நோய் நாடி நோய் முதல் நாடி என்பது போல எப்படிப்பட்ட வியாதியை நாம் குணப்படுத்துகிறோம் என்பதைவிட நோயாளிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை முடிவு செய்து மருந்து கொடுப்பதே சாலச் சிறந்தது என்று கூறியதையும் மேற்கோளாகக் கூறினார். அப்போது ஆவலூறும் இரு விழிகள் அவரை மொய்த்துக் கொண்டிருந்தன. சில நிமிட நினைவு மீட்டலுக்குப் பின் அவருக்கு ஞாபகம் வந்தது.

தன்னையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த அவள்...அவள்... அவள்

யாழ் பல்கலைக் கழகத்தில் பார்த்த துடிப்பான பெண்... நிகழ்வு முடிந்ததும் ஓடி வந்து கைகொடுத்த சிரித்தாள்.

"இங்கே எப்பொழுது வந்தாய்... இங்கே படிக்கிறாயா..."

"புரொபஸர்... புரொபஸர்" என அழைத்து மரியாதையுடன் பார்த்தாள்... எதிர்பாராமல் பேராசிரியைச் சந்தித்த ஆச்சரியம் பத்மகலாவிற்கு... எதிர்பாராத சந்திப்பு தடுமாறினாள்...

"அங்கை எங்களால தொடர்ந்து படிக்க முடியவில்லை. சூழ்நிலை எங்களைத் துரத்திக் கொண்டேயிருக்குது. பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவத்தில் எதிலுமே ஈடுபடாத சீலனைக் கைது செய்தார்கள். எனக்கு பாதி உயிர் அங்கேயே போய்விட்டது. நாங்கள் இருவரும் வேறு வேறு நாடுகளில் அகதிகளாக இருக்கிறம். நான் இப்ப இங்கை அக்கா வீட்டிலை இருக்கிறன். இருவரும் உயிரோடிருக் கிறம். ஊரிலை விட்ட மருத்துவப் படிப்பை இங்கை தொடருகிறன். அவர் சுவிஸில் மக்டொனசில் வேலை செய்கிறார். வீட்டிலை முரளி என்பவரைத் திருமணம் செய்யச் சொல்லி அக்கா வற்புறுத்துகிறார். என்ன செய்வதென்று புரியல..."என்றாள்.

கொழுகொம்பில் இல்லாத கொடி துவண்டு நிற்பதைப் பார்த்தது போல பேராசியை மங்கையற்கரசிக்கு வருத்தமாக இருந்தது.

"சீட் பெல்ட்களை அணிந்து கொள்ளுங்கள்" விமானத்தில்

அறிவிப்பு வந்ததும் சிந்தனைகளில் இருந்து வெளிவந்த மங்கையற் கரசி பக்கத்திலிருந்த பெண்ணைப் பார்த்து முறுவலித்தார். விமானம் தரை இறங்கியது. அவள் குடும்பத்தாரைச் சந்திக்கப் போகும் பரபரப்பில் இருந்தாள்.

பேராசிரியை மங்கையற்கரசிக்கு தருமசீலனை சந்திக்கும் ஆவல் ஏற்பட்டது. பத்மகலாவிடம் தொலைபேசி எண்ணை வாங்கி தருமசீலனிடம் தொடர்பு கொண்டு பேசி மறுநாள் சந்திப்பதாகச் சொல்லி இருந்தார். பேராசிரியை மங்கையற்கரசி சுவிசுக்கு வந்திருக் கிறார் என்பதை சீலனால் நம்பமுடியவில்லை. ஆச்சரியத்துடன் “எங்கை தங்கியிருக்கிறீர்கள் நான் வந்து சந்திக்கிறன்” என்ற சீலன் பேராசிரியை மங்கையற்கரசியிடமிருந்து அவர் தங்கியிருந்த விடுதியின் பெயரையும் வீதியின் பெயரையும் கேட்டு அறிந்து கொள்ளுகிறான்.

வேலையை முடித்துக் கொண்டு வந்து பேராசிரியை மங்கையற்கரசியை அவர் தங்கியிருந்த விடுக்கு வந்த சந்தித்தான் சீலன். மக்டொனாசிலிருந்து வந்திருந்ததனால் முகம் களைத்து எண்ணைத் தன்மையாகவிருந்து.

பேராசிரியை மங்கையற்கரசி விடுதியின் வரவேற்புக் கூடத்தில் சீலனின் வருகைக்காகக் காத்திருந்தார். சீலன் நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு உறவினரைப் பார்க்க வருவது போல் பேராசிரியை மங்கையற்கரசி அமர்ந்திருந்த இடத்தை நோக்கி வருவது வரவேற்புக் கூடத்தின் பெரிய கண்ணாடிச் சுவருக்கூடாகத் தெரியவே பேராசிரியை மங்கையற்கரசியும் தனது இருக்கையை விட்டு எழுந்து வாசலுக்கு விரைந்தார்.

பேராசிரியை மங்கையற்கரசி சீலனைத் தனது பிள்ளையைப் போல கட்டியணைத்து மகிழ்கிறார். இருவர் கண்ணிலும் கண்ணீர் கசிகிறது. சீ லன் மெலிந்திருப்பதாக பேராசிரியை உணர்கிறார்.

“புரொபஸர் உங்களை நான் சந்திப்பன் என்று எதிர்பார்க் கேலை. நீங்கள் பத்மகலாவைப் பார்த்தது சந்தோசம்”. ஆர்வத்துடன் தன்னைப் பார்த்து பேசியதைப் பார்த்த போது தனது கண்ணுக்குள் பத்மகலாவைத் தேடியது போல் இருந்தது.

மருத்துவராக வர வேண்டிய இளைஞன் மக்டொனால்ஸில் வேலை செய்கிறானே என மனம் வாடினார் பேராசிரியை மங்கையற்கரசி. ஆனால் மக்டொனால்சில் தான் வேலை செய்வதைப்

பற்றி அவன் கலைப்படவில்லை. பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் பகுதி நேர வேலை செய்வது ஐரோப்பாவில் சகஜம். இங்கு தெருக்கூட்டுவதைக்கூட யாருமே கௌரவக் குறைஞ்சலாக நினைப்பதில்லை என சீலன் சொன்னதை பேராசிரியை மங்கையற் கரசி "உண்மைதான்" என ஏற்றுக் கொண்டார்.

இருவரும் திறமைசாலிகள். உயிரையும் மானத்தையும் காப் பாற்றிக் கொள்ள கண்டம் கண்டமாக ஓடும் ஓட்டத்தில் எத்தனை விசயங்கள் முக்கியமானதாக இல்லாமல் போகின்றன. முதலில் வெட்டு விழுவது கல்வியின் மேல்தான். திருமணம் செய்தால் தொல்லை போச்சு. சீரழிவில் இருந்து காப்பாற்றினாற் போல் ஆச்சு என்று திருமணம் செய்து அனுப்பி விடுகிறார்கள். ஆணுக்கு மட்டும் அல்ல பெண்ணுக்கும் படிப்பு முக்கியம். சொந்தக் காலில் நிற்பதும் சுயமான சிந்தனை என்பதும் சுய விடுதலை என்பதும் இரு பாலாருக்கும் கல்வியும் பதவியுந்தான் தரும்.

"சீலன் அவளை நான் பார்த்தேன். பாதியாக இருக்கிறாள். இங்கே நீ மறுபாதியாக இருக்கிறாய். காதல் ஒரு நோய்தான். ஒருவரை மட்டுமல்ல இருவரை ஒரே நேரத்தில் எப்படிப் பீடித்து வாட்டுகிறது. இந்தக் காதல் நிறைவேற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது"

"சொல்லுங்கோ புரொபஸர். என்ன வழியுண்டு. எதானாலும் உடன்படுகி றோம்" ஆவல் ஒளிவிட்டது சீலனின் கண்களில். தங்களை ரட்சிக்க வந்த தேவதை போல பேராசிரியை மங்கையற்கரசியைப் பார்த்தான்.

"பத்மகலா கனடாவில் படிக்கத் தொடங்கிவிட்டாள். நானும் அவளிடம் முதலில் படிப்பை முடிக்கச் சொன்னேன். தற்போது இங்கே வேலை செய்யுங்கள். நான் திறமையான வெளிநாட்டு மாண வருக்கான கோட்டாவில் உதவித் தொகையுடன் கூடிய மருத்துவப் படிப்பிற்கு என்னுடைய பேராசிரியைக் கோட்டாவில் தமிழகத்தில் இருக்கும் மருத்துவக் கல்லூரிகளில் முயற்சி செய்கிறேன்.

படிப்புத்தான் உண்மையான சுதந்திரத்தைக் கொடுக்கும். அதன் பின் கிடைக்கும் உத்தியோகம் பதவிதான் முடிவெடுக்கும் தைரியத்தைக் கொடுக்கும். உங்கள் படிப்பில் இருவரும் முதலில் கவனம் செலுத்துங்கள். பத்மகலாவின் அக்காவிடமும் திருமணம் செய்வதை சில ஆண்டுகள் ஒத்திப்போடும்படியும் அவளை மருத்துவ ராக்குவது குடும்பத்துக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே செய்யும்

நன்மை என்றும் கூறியுள்ளேன். எனவே அவளை நினைத்து இருவரின் காதலும் நிறைவேறுமா நிறைவேறாதா என மனம் பதைபதைப்படையாமல் நீங்களும் படிக்கலாம். இன்னும் மனித குலத்திற்கு நீங்களிருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய தொண்டு இருக்கிறது. மருத்துவர்களை மட்டுந்தான் எந்தத் தேசமும் வேண்டாம் என்று சொல்வதில்லை. இருகரமும் கூப்பி வரவேற்கும்.

இனி எந்த அசம்பாவிதமும் உங்கள் வாழ்வில் தொடராது. இந்த விழுதல் இனி எப்படி மீண்டு எழப்போகிறோம் என்பதை எதிர்நோக்கி இருக்கிறது. நம்பிக்கையுடன் இருங்கள். நான் தமிழகம் சென்றதும் தொடர்பு கொள்கிறேன் என்றார்.

சீலனின் கண்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கல்வியும் கிடைக்கப் போகின்றது, காதலியும் கிடைக்கப் போகின்றாள். மகத்துவம் வாய்ந்த விசயங்கள் பேராசிரியையின் வரவால் நிகழப் போகின்றன. அவன் ஒன்பதாம் மேகத்தில் மிதப்பவன் போல உணர்ந்தான். காதல் மாயக்காரன் தூரிகை போல இருவெறு தேசத்திலிருக்கும் இதயங்களையும் பாசத்தின் வண்ணங்களால் குழைத்துக் குழைத்து இழைத்துக் கொண்டிருந்தது.

பேராசிரியை மங்கையற்கரசியிடம் சீலன் விடைபெறும் நேரம் வந்தது "புரொபஸர்...எனத் தயங்கினான் சீலன். உங்களுடைய உதவிக்கு நன்றி புரொபஸர்... ஆனால் எனக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்றில் அல்லது கனடாவில் படிக்கத்தான் விருப்பம். இப்ப நான் ஜேர்மன் மொழி படித்துக் கொண்டிருக்கிறன்... எனச் சொல்லி முடிப்பதற்குள் "நல்லது நானும் தமிழ்நாட்டில் படிக்க முயற்சி செய்கிறேன்... நீங்களும் முயற்சி செய்யுங்கள்...எது வசதியோ அதைச் செய்ங்யுகள்" எனச் சொல்ல சீலன் விடைபெற்றுச் செல்லுகிறான்.

சீலன் எப்பொழுதும் கெட்டிக்காரன் என்று பேராசிரியர் மங்கையற்கரசி நினைத்துக்கொண்டார். அவருக்கு உதவி செய்யும் மனம். பொழுது போய் விட்டது. வெளியில் பனி லேசாக தூறிக் கொண்டிருந்தது. இறங்கி நடந்தான். எப்படித்தான் இந்த வெள்ளைக் காரனுக்கு பனியில் பழக முடிந்ததோ. மனதுக்குள் சிரித்துக் கொண்டான். சில நேரங்களில் பனி வேண்டும் போல இருக்கும். சில நேரங்களில் வேண்டாம் போல இருக்கும். வாழ்க்கையும் அப்படித் தான்.

பேராசிரியர் சொன்னதை மனம் அசைபோட்டபடியே

நடந்து கொண்டிருந்தான். எல்லாம் அவஉ சொன்னபடி நடந்தால் நல்லாயிருக்கும். பஸ் தரிப்பிடத்திற்கு வந்து விட்டான். பஸ் தரிப் பிடத்தில் காதல் சோடி ஒன்று கருத்தொருமித்து கட்டிப்பிடித்தபடி இருந்தது. குளிருக்கு அது இதமாக இருந்தது. கலாவை நினைத்துக் கொண்டான் மனதில் பூ பூத்தது. அவள் இங்கை இருந்தால் எப்பிடி இருக்கும். கற்பனையில் கலாவின் உதட்டில் ஒரு முத்தம் வைத்தான். எல்லாம் தூரத்து நினைவுகள் மட்டும்தான். உதட்டோரம் லேசான புன்னகையும் முத்த சுவையும் வந்து போயின.

என்னதான் இருந்தாலும் தமழரின் அகதி வாழ்க்கை ஒரு அந்தரமான வாழ்க்கைதான். ஐரோப்பாவின் வாழ்க்கையை ஊரில் இருந்து பார்க்கும் போது பெரும் செல்வந்த வாழ்க்கையாகத்தான் தெரியும். ரஸ்யா நாட்டுக்குள்ளால் உக்ரெயின் எல்லையில் பனி ஆற்றில் எத்தனை தமிழர்கள் அடையாளம் தெரியாமல் செத்துப் போனார்கள். எத்தனை கனவுகளோடு வந்தவர்கள் அவர்கள். அவர் களை நினைத்தால் அவனுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வரும்.

உயிரை கையில் பிடித்துக்கொண்டு இங்கு வந்ததன் பின்பும் எத்தனை பிரச்சனைகள் எத்தனை சிக்கல்கள்.

இலங்கையில் இருந்து தப்பி வந்து சீலனின் நண்பன் தியாகு இந்தியாவில் இருக்கிறான். இந்தியாவில் இருந்து லண்டன் வருவதற்கு பல வழி முறைகளை முயற்சி செய்து பார்த்தான். முடியாமல் இருக்கிறது.

இதற்கிடையில் கனடாவில் இருந்த தியாகுவின் காதலி அடம் பிடித்து தமிழகம் போய் அவனை கலியாணம் செய்து கொண்டாள். சரி வாழ்க்கைதானே வாழ்ந்து பார்ப்போமே என்றுதான் நினைத்தான் தியாகு.

அவளும் கெட்டிக்காரி அவள் கனடாவில் அவன் தமிழகத் தில் புருசன் அந்தரத்தில் இருக்கிறான். ஆனால் எத்தனை காலத்துக் கென்று இப்படி வாழ்வது என்று முடிவெடுத்து விட்டாள். அவளின் முடிவு சரிதான்.

அவர்களுக்கு ஒரு பெடியன் பிறந்தான். அவன் அம்மாமாதிரி வெள்ளையாக இருந்தான். அவனுக்கு மூன்று வயதில் தமிழகம் போய் அப்பாவை அவன் பார்த்தபோது "அப்பா நீ ஊத்தை" என்று சொல்கிறான்.

தியாகு நல்ல பகடிக்காரன். “நீ வெள்ளையாய் அம்மா மாதிரி பிறந்திட்டாய் அதுக்கு நான் என்னடா செய்யிறது”.

“உனக்கு நெஞ்சிலை முடி இருக்கு. நான் எப்பிடி உன்ரை மேலிலை படுக்கிறது” என்று சொன்ன மகன் ஓடிப்போய் துவாய் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து தகப்பனின் நெஞ்சில் போட்டுக் கொண்டு அவன் மீது ஏறிப்படுத்துக்கொண்டான்.

தியாகு ஒருநாள் தொலைபேசியில் கதைக்கும் போது இதனை சீலனிடம் சொன்னான். இது சொல்லிச் சிரித்தாலும் இதற்குள் எத்தனை வாழ்வுச் சிக்கல்கள் இருக்கின்றன. எத்தனை சமூக முரண் பாடுகள் இருக்கின்றன. எமது தலைமுறையோடு எமது மண்ணின் மணம் இல்லாமல் போய் விடுமோ என்ற பயம் சீலனை பல முறை ஆட்கொள்ளும்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் வெளிநாட்டில் பிறந்த எமது தமிழ் பிள்ளைகள் படும் அந்தரத்தை பார்த்தால் தெரியும். நல்லூர் கோவில் திருவிழா நேரம் மட்டும் காஃப் சாறியை ஆசையாக கட்டுவார்கள் பெண் பிள்ளைகள். திருவிழா முடிந்த கையோடு வெளி நாட்டு உடுப்புக்கு மாறி விடுவார்கள்.

ஊரில் உள்ள பேரன் பேத்திகளின் வியர்வை மணம் இவர் களுக்கு பிடிக்காது. வாம்மா அல்லது வா அய்யா என்று கொஞ்சக் கூப்பிட்டால் கிட்டவே போக மறுக்கிறார்கள். வயதான ஊரில் உள்ள பேரன் பேத்திக்கு இவர்களின் வெளிநாட்டு பேர்ஃபியூம் வாசனை ஒத்து வருகுது இல்லை. இவர்களுக்கு அவர்களின் வியர்வை வாசம் ஒத்து வருகுதில்லை.

நாங்கள் அம்மம்மா சந்தைக்கு போய்விட்டு வந்தபோது அவவின் சீலை மடிக்குள் கட்டிவந்த இலந்தைப்பழத்தை பங்கு போட்டு சாப்பிட்டோம். அம்மம்மாவின் சீலை வாசம் இன்னும் மனதுக்குள் ஒட்டியே கிடக்கிறது. அது அன்பு... சீலனுக்கு பெரு மூச்சு ஒன்று இரைந்து வெளியானது...

பஸ்ஸில் சனம் இல்லை. ஆசனத்தில் சிக்காராக அமர்ந்து கொண்டான். ஊரில் வாழ்ந்த வாழ்க்கை எப்படி இருந்தது. மனம் சஞ்சலப்பட்டது. ஊரை நினைத்தால் அவனுக்கு எப்பொழுதும் மனதுக்குள் பல நினைவுகள் வாட்டும்.

தனது அம்மாவின் ஐயாவை நினைத்தான். அம்மய்யா வாழ்வின் மறக்க முடியாத ஒரு மனிதர். பெரும் உழைப்பாளி.

பேராசை இல்லாத மனிதர். யாருடனும் எந்த வம்பு தும்புக்கும் போகாத மனிதர். அவர் இப்பொழுது உயிருடன் இருந்திருந்தால் அவரை தாங்கு தாங்கென்று தாங்கியிருப்பான். அம்மய்யா படிப் பறிவு இல்லாத மனிதர் தான். ஆனால் உலக அறிவு அரசியல் அறிவு நிரம்பப் பெற்றவர். தந்தை செல்வாவில் அன்பு அதிகம். ஆனால் அவர் எந்தக்கட்சியை சார்ந்தும் இருந்தவரில்லை.

அவரால்தான் சீலனுக்கு இவ்வளவு தமிழ் அறிவு வந்தது. அரசியலில் நாட்டம் வந்தது. காலையில் போய் கடையில் பேப்பர் வாங்கி வந்து வைத்திருப்பார். அவன் பாடசாலை விட்டு வந்து அந்த தினபதி பேப்பர் முழுவதுமாக அவருக்கு உரத்து வாசித்துக்காட்ட வேண்டும். அதனால் தான் அவன் இலங்கையில் இருக்கும் பொழுது இலங்கை வானொலியில் மாணவர் நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராக இருக்க முடிந்தது. அவனின் கனவே அதுதான் இலங்கை வானொலி யில் அறிவிப்பாளராக வர வேண்டும் என்பது. ஆனால் எல்லாம் கனவாகவே போய் விட்டது.

இங்கை வந்து நாங்கள் மூன்று வேளை சாப்பாட்டை பிரச்சனை இல்லாமல் சாப்பிடுகிறம். ஆனால் எங்கடை சனம் யுத்தம் முடிந்து ஆறு வருடமாகியும் இன்னும் கால் வயிறு கஞ்சியோடுதான் கழிக்கிறார்கள் என்றால் அது பெருங்கொடுமை. மனதில் அலுத்துக் கொண்டான்.

எல்லாவற்றிலும் அரசியல் அரசியல் மனித வாழ்வை சிதைத்துப்போடுகிறது. அவன் அரசியல் பிரக்ஞை உள்ளவன். இங்கு பல அரசியல் சந்திப்பு மேடைகளுக்கு போயிருக்கிறான். ஆனால் ஆத்திரம் தான் மிஞ்சும். ஊரில் அந்த மனிதர்களின் வாழ்வை சிதைத்து விட்டு இங்கு அரசியல் பேசும் மனிதர்களை அவன் அறவே வெறுத்தான்.

தன் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப் பான். நீண்ட நாட்களாக அவன் தன் கிராம மக்களுக்கு செய்யும் திட்டம் ஒன்றை வைத்திருக்கிறான்.அது சரி வந்தால் அவன் கிராமம் இலங்கையிலேயே செழிப்பு மிக்கதாக ஆகி விடும். அது அவனது மக்களுக்கு செய்யும் நன்றிக்கடன். அவனது கிராம மக்கள் எல் லோருமே அவனோடு எவ்வளவு பாசம். யுத்தத்தில் செத்துப்போன தன் கிராம மக்களை நினைத்து இன்னும் மனம் வெதும்புவான்.

தான் சம்பாரிக்கும் தொகை தன் குடும்பத்துக்கே போதாமல்

இருக்கிறது. அம்மா தங்கச்சி என்று அவன் தன் ரத்த சொந்தங்களோடு போராடிக்கொண்டிருக்கிறான். ஆனால் அது கூட அவனுக்கு சுகம் தான்.

போன் அடித்தது. அட அம்மா எடுக்கிறா.

"ஹலோ அம்மா".

மறு முனையில் அம்மா

"தம்பி சீலன்".

அம்மா அழுது கொண்டிருந்தா....

"என்னம்மா ஏன் அழுறீங்கள். அழாம விசயத்தை சொல்லுங்கோ"

"தம்பி... தம்பி..." என்று அம்மா விம்மிக்கொண்டிருந்தா.

அம்மாவை தேற்றினான்.

"என்னவெண்டாலும் சொல்லுங்கோ நானிருக்கிறேன்.

அம்மா எப்பொழுதும் அப்படித்தான் உடனே அழுது விடுவா.

"தங்கச்சி இண்டைக்கு காலையிலை கிணத்துப்படியில் இருந்து தடக்கி விழுந்திட்டாள். கால் முறிஞ்சு போச்சுது தம்பி... அம்மா தொடர்ந்து அழத்தொடங்கினாள்.

சீலன் எப்பவும் திடகாத்திரமானவன். பதட்டப்பட மாட்டான் முடிகவுளை சரியாக எடுப்பான்.

"அவளுக்கு சின்ன வயதுதானே அம்மா கால் முறிஞ்சாலும் கவலைப்படத்தேவையில்லை. நல்ல ஒரு வைத்தியராப் பார்த்து சரி யாக்கிடலாம். நீங்கள் தைரியமாக இருங்கோ. நாளைக்கு உங்களுக்கு காசு அனுப்பி வைக்கிறேன்".

"அங்கை பெரியாஸ்பத்திரியில் என்ரை நண்பன் ஒருவன் முறிவு வைத்தியராக இருக்கிறான் அவனிட்டை இப்பவே கதைக் கிறன். அவன் நாளைக்கு வீட்டுக்கு வருவான். போனை ஒருக்கால் தங்கச்சியிட்டை குடுங்கோ.

அவளுக்கு அண்ணா என்றால் உயிர். அவனைத்தவிர அவளுக்கு இந்த உலகத்தில் வேறு ஒருவர் மீதும் அவ்வளவு பாசம் இல்லை. அண்ணா என்ன சொல்றானோ அதுதான் வேதம்.

அம்மாதான் ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள்.

அவளுக்கு கால் வலிதான். ஆனால் அவள் அண்ணாவின் தங்கையல்லவா. அவள் தைரியமானவள். அது சீலனுக்கும் தெரியும்.

"என்னடி காலை உடைச்சுப்போட்டியா?"

“நான் என்ன வேணுமெண்டா என்ரை அழகான கால்களை உடைச்சனான்”.

“மடைச்சி பாத்து காலை வைக்கிறதில்லையா? மடச்சி மடச்சி”... ஏசினான்.

அவளுக்கு தெரியும் அண்ணா தன்மேலை உயிரையே வைத் திருக்கிறான். தனக்கு ஒன்று என்றால் தாங்க மாட்டான். அவர்கள் இருவரும் அண்ணன் தங்கச்சி மாதிரி இல்லை. நண்பர்கள் மாதிரி. அவன் அடிக்கடி சொல்லுவான் நீ எனக்கு தங்கச்சியாக கிடைத்தது நான் பெற்ற தவமடி. அப்படி சொல்ல அவள் அண்ணாவை முத்தமிடு வாள். தங்கச்சி எப்பொழுதும் அண்ணாவை விட்டுக்கொடுக்க மாட்டாள்.

காலையிலை எழும்ப முதல் அவனுக்கு கோப்பி ஊத்திக் கொண்டு வந்து தலைமாட்டில் இருந்து விடுவாள். அண்ணாவின் முகத்தில்தான் அவள் முதலில் விளிக்கவேண்டுமாம்.

ஊராட்களுக்கே தெரியும் இவர்களின் பாசம். பக்கத்து வீட்டுக்காரர்கள் இவர்களை சின்ன வயதில் இருந்தே பார்த்து வருகிறார்கள்.

இரண்டு பேருக்கும் நான்கு வயது வித்தியாசம் சின்னனிலை தங்கச்சியை கொஞ்சிக்கொஞ்சி இடுப்பிலையே தூக்கி வைத்து வளர்த்தவன் சீலன். அப்பொழுதே ஊராட்கள் வியந்து போவார்கள். உவன்கள் இரண்டு பேரும் என்ன பாசம். என்று சொல்லாத ஆட்களே இல்லை.

“அண்ணாச்சி நீ இப்ப எனக்கு வேணும் போல இருக்கு. உன்ரை மடியிலை படுத்துக்கிடந்தால் இந்த வலி காத்தாய் போய் விடும். நீ இல்லாதது வெறுமையாய் கிடக்கெடா”.

“எனக்கு மட்டும் எப்பிடி இருக்கும் எண்டு உனக்கு தெரியாததா? நீ காலுடைஞ்சு கிடக்க நான் இங்கை எப்பிடி நிம்மதியா இருப்பன். உன்ரை வலி என்ரை வலியல்லவா”

இரண்டு பேரும் விம்மி விம்மி அழுது விட்டார்கள்.

“எல்லாம் உனக்காகவும் அம்மாவுக்காகவும். மற்றது அங்கை நான் இருக்கேலாது என்ன செய்யிறது? புடிச்சுக்கொண்டு போய் விடுவான்கள். இதுதானடி எங்கடை சனத்துக்கு வந்த துன்பம். பாப்பம் எல்லாம் சரி வரும். இங்கை எனக்கு அகதி அந்தஸ்த்து கிடைச்சுதெண்டால் முதல் வேலை உன்னையும் அம்மாவையும்

இங்கை கூப்பிடுறதுதானே".

இருவரையும் சோகம் பிய்த்துக்கொண்டது.

சோகத்தை திருப்பினான் சீலன்

"அடி நாளைக்கு என்ரை பிரண்ட் ஒருத்தன் வருவான் முறிவு டொக்டர். அவனை சைட் அடிச்சு துலைச்சிடாதை. அவனுக்கு எற்கனவே கேர்ள் பிரண்ட் இருக்கு. கடைசியிலை அவள் பாடு அவ்வளவு தான்".

"ம்ம்ம்ம்... இந்த அழகை கண்டிட்டு உன்ரை டொக்டர் என்னிலை விழுந்திட்டால் நான் ஒண்டும் பண்ண முடியாது சீலா! அதுவும் இந்த வாளிப்பான காலைப் பார்க்க வாறார்.

தங்கச்சியும் அண்ணனும் போடுற கூத்தை பாத்தா அம்மா வுக்கு பத்திக்கொண்டு வந்தது.

"அடியேய்... நீ கால் முறிஞ்சு கிடக்கிறாய். குமர்ப்பிள்ளை நான் நெருப்பை கட்டிக்கொண்டு இருக்கிறன்"... அம்மா கத்தினாள்.

"அம்மா எப்பவும் அப்படித்தான். ஓகே நீ சாப்பிட்டியா? பின்னேரம் என்ன சாப்பிட்டனீ குளிருக்கு நல்ல உடுப்பு போடு".

"அது சரி கல்ல்ல்லா... என்ன கதை றொமான்ஸ் ஓடுதோ... டெலிபோன் கதைச்சே காசைக் கரியாக்காதை".

"அடி இப்ப கனடாவுக்கும் சுவிஸுக்கும் ஃப்றீ கோல் வந்திட்டுது. முந்தின மாதிரி இல்லை. தெரியுமோ?

"அப்ப கல்ல்ல்லா... வை நினைச்சு டெலிபோனைக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு கிடக்கிறியோ சீலா!

தங்கச்சி சீலா! என்று சொல்வதை அவன் ரசிப்பான். அதில் எவ்வளவு பாசம் இருக்கிறது என்று அவர்கள் இருவருக்கும் மட்டும் தான் தெரியும்.

முதல் வேலை அவளின் காலைக் குணமாக்க வேண்டும். என்ரை அழகு தேவதையை எழும்பி நடக்க பண்ண வேணும்...

"ஓகேயடி நான் டொக்டருக்கு பேசீட்டு உனக்கு நாளைக்கு எடுக்கிறன். யோசிக்காதை நான் இருக்கிறன்".

"உன்ரை டொக்டர் நாளைக்கு...சரி." ...சிரி சிரி என்று சிரித்தாள் அவள். அவளின் அந்த சிரிப்பே போதும் அவனுக்கு...

"ஒக்கே சீலா"

வீட்டுக்கு வந்து குளிர் உடுப்பை கழட்டினான் சீலன். வீட்டுக்குள் ஏதோ மாற்றம் இருந்ததை உணர்ந்தான். கள்ளர் யாரும்

வந்தாவ கனோ? மனம் சும்மா நினைத்தது.

நினைத்தது சரி பின் கதவை போய் திறந்த பார்த்தான். அது தொட்டவுடன் திறந்து கொண்டது. சுவிஸில் கள்வர்கள் வர மாட்டார்களே. இது தெரிந்த கள்ளராகத்தான் இருக்கவேண்டும். தமிழ் கள்வர்களா?

அதையும் அவன் சுவாரசியமாகத்தான் பார்த்தான். மனதுக் குள் சிரித்துக்கொண்டான்.

திருடன் என்றவுடன் சீலனுக்கு இப்பொழுதெல்லாம் நினைவுக்கு வருபவர் திருடன் மணியம்பிள்ளைதான்.

64 வயதான மணியன்பிள்ளை ஒரு காலத்தில் கேரள போலீஸாரின் கண்ணில் விரல் விட்டு ஆட்டிய பெரிய திருடர். வாழ்க்கையின் பெரும் பகுதி ஓட்டத்தில் கழிந்தாலும் தன் மனைவி யின் இறப்புக்குப் பின்பு மணியன்பிள்ளை திருந்தி வாழ ஆரம்பித்தார். பிறருக்கு ஒரு பாடமாக அமையட்டும் என்ற யோசனையில் ஒரு கட்டத்தில் சுயசரிதை எழுதத் தீர்மானித்தார்.

அவர் இவ்வாறு எழுதுகிறார்

“திருடனைப் போன்ற துயரம் நிரம்பிய வாழ்க்கை வேறு யாருக்குமே கிடையாது. திருட்டை நிறுத்தினாலும் பெயர் மாறாது. உறவினர்கள் வீட்டுக்கோ தெரிந்தவர்கள் வீட்டுக்கோ போக முடி யாது. கண்கள் நம்மையறியாமல் எங்காவது தட்டுப்பட்டுவிட்டால் வீட்டுக்காரர்களுக்கு நோட்டமிடுகிறானோ என்ற சந்தேகம் வந்துவிடும். வாழ்க்கை முழுவதுமே குனிந்த தலைதான்.

இப்போதெல்லாம் நான் திருடுவதில்லை என்றால் யாருமே நம்ப மாட்டார்கள். திருடனுடைய பச்சாதாபத்தில் யாருக்குமே நம்பிக்கை வராது. பீடி வாங்கவும்கூட இரவு நேரங்களில் திருடன் வெளியே வர பயப்படுவான். போலீஸ் வேன் பக்கத்தில் வந்து பிரேக் போட்டு நிறுத்தப்படலாம்.

அந்தப்புத்தகத்தை படித்ததில் இருந்து திருடர்கள் மீது ஒரு பற்று இருந்து கொண்டே இருந்தது சீலனுக்கு.

எல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தது. மேலே அறையில் போய் பார்த்தான் லப்டொப்பை காணவில்லை.

அதைத்தான் கொண்டு போய் விட்டார் திருடன். பொலிஸில் சொன்னால் அது இருக்கும் இடத்தை கண்டு பிடித்து விடுவார்கள். அதன் சீரியல் நம்பரை பொலிஸில் பதிந்து வைத்திருந்தான். ஆனால்

மணியம்பிள்ளையை நினைத்துக்கொண்டான். பொலிஸுக்கு போவதை தவிர்த்து விட்டான் பிழைச்சு போகட்டும்.

படுக்கையில் விழுந்தான். மனம் முழுக்க தங்கச்சியின் முறிந்த காலின் நினைவாகவே இருந்தது. இன்று கலாவுடனும் கதைக்க வில்லை. நாளைக்கு அம்மாவுக்கு காசு அனுப்ப வேண்டும். நினைத்த படியே தூங்கிப் போய் விட்டான்.

***

ஆர்ப்பாட்டமில்லாத மார்கழிமாதக் காலைப் பொழு தொன்று ஐரோப்பாவுக்கே உரிய மிடுக்கோடு விடிந்திருந்தது. பட்சி களின் ரீங்காரமில்லை... தென்றலின் சங்கீதமில்லை... கதிரவனின் ஆர்ப்பரிப்பில்லை ...

காலை 8 மணி ...

இலைகளையெல்லாம் உதிர்த்து விட்டு வெறிச்சோடிப் போயிருந்த... மரங்களை பாரத்தபடி.... ஐன்னல் கம்பியை பிடித்த படி "மாரிமுத்து" அவனது மனமும் வெறிச்சோடிப் போயிருந்தது.!

"சன் கோலம் அகதிமுகாம்"

டென்மார்க்கிற்கு அகதித்தஞ்சம் கோரி வருகின்ற வெளி நாட்டவர்கள் அனைவரும் முதற்கட்ட விசாரணை முடியும்வரை... தடுத்து வைக்குமிடம்! பாதுகாப்பு அதிகாரிகள், அரச அலுவலர்கள், கிறிமினல் மொழிபெயப்பாளர்களைத் தவிர... யாரும் உள்ளே போக முடியாது."

அவனும் அவனுடனிருந்த சிலரும் காவலதிகாரி அழைத்த பக்கமாக இன்னொரு மண்டபத்துக்கு அழைத்து செல்லப்பட்ட போது... கம்பி வேலிக்கு வெளியே நின்ற பலரும்... தத்தமது உறவினர்களை பார்பதற்காக... நின்றுகொண்டிருந்தனர்.!

ஆனால் தமிழர்கள் ஒன்றிரண்டு பேர் மட்டும்... நிற்பதை மாரிமுத்து கடைக்கண்ணால் அவதானிக்க தவறவில்லை. அவனோடு தஞ்சமடைந்திருந்த ஒரு தமிழ் பெண்ணின் உறவினர்களாக இருக்கலா மென்று... தனக்குள்ளே எண்ணிக்கொண்டான். தன்னைத் தேடி இஞ்சே யாரும் வந்திருக்கமாட்டார்கள் என்பது அவனது நம்பிக்கை.

"பல நாட்களாக சேவெடுக்காமல் தாடி வளர்த்த முகம், முடி வெட்டாத தலை கசங்கிய உடை... பார்க்கப் பரதேசிக் கோலத்தில் தான் அவனிருந்தான்.

சில்லென்ற குளிர்காற்றுடன் அமைதியான சூழல் வெண்ணிற

ஆடை பூண்டு பவுடர் பூசி... வெளிக்கிடுத்தி விட்ட பொம்மை போல... வானமாய் கதிர்களை ஆங்காங்கே... தெறிக்க வைக்கும் சூரியன்... இந்த அழகான ரம்மியக் காட்சிகளைக் கூட ரசிக்க முடியாத மனதுடன் அவனிருந்தான்.

"அண்ணா நீங்களும் தமிழரா? எங்க இருந்து வாறியள்? கலியாணம் கட்டியிட்டீங்களா.? கட்டாட்டியும் கட்டியாச்சுது என்று சொல்லுங்கோ இஞ்சை கூப்பிட்டு தருவாங்கள். கம்பி வேலிக்கு அங்கால நின்ற ஒரு பெண் இலவச ஆலோசனைகளை எறிஞ்சு கொண்டு நின்றாள். எதையும் காதில் வாங்கிக்கொள்கின்ற நிலையில் அவனில்லை.

அவன் பாகிஸ்தானோ இல்லை எந்த நாடோ... உனக்கேன் தேவையில்லாத வேலை... ஒரு ஆணின் குரலும் பின்னால் தொடர்ந்தது... பல நாட்டவர்களோடு இவனும் வரவேற்பு கூடத்தில் அமரவைக்கப்பட்டான். ஒவ்வொருவராக ஒவ்வொரு அதிகாரிகள் வந்து அவர்களது பெயர்களை கூப்பிட்டதும் அவர்கள் கூப்பிடுகின்ற அறைகளுக்கு அவர்களின் பின்னால் சென்றுகொண்டிருந்தனர்.

"விழுதல் என்பது எழுவதுக்கு தானென்றால் இறைவா என்னை மட்டுமேன் தொடர்ந்து வீழ்த்திக்கொண்டிருக்கிறாய்? பழுதில்லாத வாழ்வை கேட்டதற்காக இன்னும் எத்தனை நாட்டில் தான். என்னை விழுத்தப் போகிறாய்? "

"மா..ரி..மு..த்..து சி..வ..க்..கொ..ழு..ந்...து." என்று தடக்கி தடக்கி அதிகாரி பெயரை வாசித்ததும் இவனெழுந்து போகாததால், அதிகாரி கிட்ட வந்து இவனை தட்டி மீண்டும் "மா..ரி..மு..த் ..து சி..வ..க்..கொ..ழு..ந்...து." என்ற போதுதான் சுய நினைவு வந்தவனாய் எழும்பி அவன் பின்னால் சென்றான். அறையின் உள்ளே இன்னுமொரு அதிகாரி... இவனையொத்த நிறத்தில் இன்னுமொருவர் மொழிபெயர்ப்பாளர் ... இருந்தார்.

டேனிசில் வணக்கம் சொல்லி... அதிகாரி வரவேற்க.. அதை தமிழில் மொழி பெயர்த்து மொழிபெயர்ப்பாளர் சொல்ல... தொடர்ந்த விசாரணையில் முதற்கட்ட விசாரணை முடிந்து முகாமுக்கு கொண்டு வந்து விடும் வரையில் மொழிபெயப்பாளரும் கூட நின்றார்.

"மொழிபெயர்ப்பாளர் மாரிமுத்துவையே தொடஉந்து பார்த்துக்கொண்டே இருந்தாலும் மாரிமுத்து யாரையும் நேரே

பார்க்கின்ற மனநிலையில் இல்லாமல் இருந்தான். ஏற்கனவே விசாரணையில் இவனை உளவியல் ஆலோசகரிடம் காட்ட வேண்டு மென்றும் முடிவெடுக்கப்பட்டு இருந்ததால் மீண்டும் நாளை சந்திப்ப தாக கூறி அதிகாரியுடன் மொழிபெயப்பாளரும் விடை பெற்றுக் கொள்கின்றார். இவனுக்கு கொடுக்கப்பட்ட அறையில் நாலு கட்டில்கள் இருந்தாலும் தற்போது வேறு யாருமில்லாதது கொஞ்சம் நின்மதியாக இருந்தது.

நேரம் மாலை ஆறு மணியாகிவிட்டதால் சாப்பாடு... ரீ ஏதாவது எடுப்பதாக இருந்தால் ஆறு மணியிலிருந்து ஏழு மணிவரை தான் கன்ரின் திறந்திருக்கும். பின்பு நாளை காலை ஆறு மணிக்குத் தான் திறக்குமென்று அதிகாரிகள் சொல்லிவிட்டிருந்ததால் அவனுக்கு பசியில்லாமல் இருந்தாலும் எடுத்துக்கொண்டு வந்து வைப்பம் என்று அவனுக்கு கொடுத்த கோப்பையையும் கப்பையும் எடுத்துக்கொண்டு கதவைத்திறந்து....கன்ரின் நோக்கி விரைந்தான்.

“சீலன்” என்று சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பி பார்த்தவன் மீண்டும் தன்னை சுதாரித்துககோண்டு நடக்கத்தொடங்கினான் ...

மீண்டும் மீண்டும் சீலன்...டேய் சீலன் ... என்று தன்னை ஒருவன் துரத்தி வர நிற்காமல் நடந்தவனை ஓடிவந்து மறித்தவுடனே நிமிர்ந்து பார்த்தபோதுதான் காலை தனக்கு வந்த மொழி பெயர்ப் பாளர் நின்றுகொண்டிருந்ததை கண்டு திடுக்கிட்டுப்போனான்.

“ஆரயோவெண்டு நினைச்சு என்னைக் கூப்பிட்டிட்டியள் போல” என்று முடிக்க முன்னம்” டேய் உண்மையை சொல்லு என்னை தெரியேல்லையா? உன்ர பத்மகலா எங்கயடா இருக்கிறாள்? கலி யாணம் கட்டிட்டியேடா..? நான் சாந்தனடா... உன்னோட ஒன்றா... ஒரே மேசையில... அருகருகாய் இருந்த சாந்தனடா. இன்னும் என்னை நம்பேல்லையடா ...? ”

அப்பவே நான் உன்னை அடையாளம் பிடிச்சிட்டன். அங்க நான் மொழிபெயப்பாளராக... இருந்தபடியால் என்னையே கட்டுப் படுத்திகொண்டிருந்தன்... அதாலதான் வேலை முடிஞ்சும் வீட்டை போகாமல் உனக்காக காத்துக்கொண்டிருந்தனான்!

“இப்ப அதிகாரிகள் எல்லாரும் போய்விட்டினம்... நாளைக்கும் அதிகாரிகளோடதான் வரவேணும் உன்னோட தனியக் கதைக்க முடியாது என்று தான் இஞ்ச நின்டனான”.

அதுக்குப் பிறகுதான் சீலன் விக்கிவிக்கி அழத்தொடங்கி

விட்டான்.

“அழாத சீலன் அழாத... ஊரில நீ பட்ட கஸ்ரத்தை விட இஞ்சை ஒன்றும் உயிர் போறளவுக்கு பிரச்சனையில்லை”

“என்ன கோலமடாப்பா! என்ன சிமாட்டான ஆள் நீ! நானே உன்னைப்பார்த்து பொறாமைப்பட்டனான். அவ்வளவு அழகானவன் ஏனிப்படி அலங்கோலமா”..... ?

“நான்தான் நாட்டுப்பிரச்சனையென்று அப்பவே பாதியில் படிப்பை விட்டிட்டு வந்திட்டன். நீயும் பத்மகலாவும் இப்ப டொக்டராக இருப்பியள் என்று நினைச்சுக்கொண்டிருக்க....”

“என்னடா நடந்தது உனக்கு?”

“நான் சுவிசுக்கு வந்து அங்கே அக்சற்ப்பும் கிடைச்சு ஒரு மக்டோனாசில வேலையும் கிடைச்சது...” சொல்லத் தொடங்கினான் சீலன்.

தன் வாழ்வின் கடந்தகால நினைவுகள் மனத்திரையில் ஒன்றன்பின் ஒன்றாக படமாக வந்து விழ மனசு அசை போடத் தொடங்கியது. பட்ட கஸ்ரங்கள், அவமானங்கள், நம்பிக்கைத் துரோகங்கள், நன்றி மறப்புக்கள்... அதனால் அவன் எதிர்கொண்ட போராட்டங்கள்.

“சொந்தம், பந்தம், பாசம், காதல் பின்னர் இவையெல்லாம் தாண்டி கண்டம் தாண்டிய பிரிவு. இப்ப... தனிமை, ஏக்கம் என ஒன்றன் பின் ஒன்றாக நடந்தவற்றையெல்லாம் சொல்லத் தொடங்கினான்.

முகாமில் இருக்கும் போதே வேலை கிடைச்சதில் சந்தோசம்.

வழமைபோல அன்றும் வேளையோடு படுக்கைக்கு போனாலும் பாதியில் நித்திரை குழம்பிவிட்டது. நினைவலைகளில் முழ்கினான்... வந்த கடன் தங்கச்சியின்ர கலியாணம் எல்லாம் மிச்சம் பிடிச்சு வேளைக்கு செய்து வைக்க வேணும். அதற்குப்பிறகுதான் தன்ர வாழ்க்கை என்று ஒன்றன்பின் ஒன்றாக... நினைவலைகளில்... இருக்க, மணிக்கூடின் மணிச் சத்தம் கேட்டு வேலை நேரத்தை ஞாபகப்படுத்துவும் சரியாக இருந்தது.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தேத்தண்ணியும் போட்டு எடுத்துக் கொண்டு வந்து சோபாவில் இருக்க முன்னம் மணிக்கூட்டை பார்த்ததும் தாமதம் தேத்தண்ணியையும் குடிக்காமல் படிகளில் இறங்கி ஓடினான்.

ஐந்து நிமிடம் நடைதூரம் "பஸ்தரிப்பிடம்" இப்பவே நடக்க வெளிக்கிட்டால் தான் "பஸ்" வருவதற்கு முன்னம் பஸ்தரிப் பிடத்தைச் சென்றடைய முடியும். அவசரமாக இறங்கி வாசல் கதவை திறந்து கொண்டு முகாமைவிட்டு வெளியேற, முகாம் ஒப்பிசில் கடமையிலிருந்த அதிகாரி இவனை கூப்பிடுவதை கேட்டு திரும்பி பார்க்க, அதிகாரியே கதவைத்திறந்து வந்துகொண்ருப்பதை கண்டவுடன் அதிகாரியை நோக்கி வணக்கம் சொல்லிக்கொண்டு கை கொடுத்தான்.

"எங்கே அதிகாலையில் போகின்றாய்? வேலைக்கா? என்று அவனே விடையையும் சொல்ல, "ஆம்" என்று தலையாட்டி விட்டு அமைதியாக நின்றான்.

எவ்வளவுதான் நல்லாப்பழகினாலும் வெள்ளைக்காறஉகளின் சுபாவம் வெட்டொன்று துண்டொன்று என்று பட்டென்று முடிவு களை சொல்லி விடுவார்கள். இப்ப அதிகாரி சொல்லப் பொகிற முடிவும் இவனுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கப்போகிறது. ஆமாம்! நீ வேலை செய்ய தொடங்கிவிட்டபடியால் இனிமேல் இங்கே தங்க முடியாது. தனியாக வீடு எடுத்துக்கொண்டு போகும்படி அதிகாரி சொன்னதுடன் அகதி முகாமைவிட்டுப் போவதற்கு ஒரு கிழமை அவகாசம் கொடுத்தார். உலகமே இருண்டது போன்ற சூனியமாக இருந்தது அவனுக்கு!

எதுவுமே பேசாமல் தலையாட்டிவிட்டு, பஸ்ராண்டை நோக்கி நடக்க தொடங்கினாலும் அவனால் வேகமாக நடக்க முடிய வில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் அதில் ஒன்று பஸ் போயிருக்கும்! இரண்டாவது அவனது மனமும் சோர்ந்து விட்டது.

அப்போது தான் அம்மாவின் அருமை தெரிஞ்சது." சுடச்சுட ஆவி பறக்க ... அம்மா தரும் தேத்தண்ணி சர்க்கரையுடன் நக்கி நக்கி குடிச்சாலும் இப்பவும் நெஞ்சுக்குள்ள இனிக்குது. அந்த நினைப்புத் தான் இப்பவும் தெம்பாக நடக்க உதவுகிறது.

அடுத்த பஸ் வர இன்னும் அரை மணித்தியாலம் காத்திருக்க வேண்டும் என்ற சலிப்பு ஒரு புறமும் வேலைக்கு அரை மணித்தியாலம் பிந்தப்போகிறேனே... என்ற படபடப்பு மறுபுறமுமாய்... பஸ் ராண்டில் இருந்த சீலனுக்கு "வீடெடுக்கிற பிரச்சனை பெரும் தலையிடியாய் இருந்தது. கேட்கமுன்னம்; தவத்தார், தன்னோடு வந்திருக்க சொல்லுவார்தான் ஆனாலும்... முரளி அங்கே இருப்ப

தினால் இவனுக்கு அங்கே இருப்பது விருப்பமில்லை.!

"லப்டப்" துலைந்ததினால் ஒரு வாரமாக கலாவுடனும் கதைக்கவில்லை. என்ற கவலை ஒருபுறம், தங்கையின் கால் முறிவு மறுபுறம் ஒன்றன் பின் ஒன்றாக ... சிந்தித்துக்கொண்டிருந்ததில் அரை மணித்தியாலம் போனதே தெரியவில்லை.

பஸ் வந்துவிட்டது! ஓடிச்சென்று பஸ்சில் ஏறியமர்ந்து கொண்டு யாருமில்லாத பின் சீட்டில் உக்கார்ந்து கண்களை இறுக்க மூடிக்கொண்டு பட்டாம் பூச்சியைப்போல மூளை ஓரிடத்தில் நிக்காமல் அங்குமிங்கும் சிறகடித்து பறக்கிறது.

அடுத்த பஸ் தரிப்பிடத்தில் பஸ் நிக்க, தமிழில் யாரோ கதைப்பது கேட்டு விழித்து கொள்ள ரெலிபோன் கதைத்தபடி ஒருவர் ஏறி உள்ளே வந்துகொண்டிருந்தார் வாட்ட சாட்டமான ஒரு இளைஞன்

வைத்த கண் வாங்காமல் "இவன்" அவனையே பார்த்துக் கொண்டிருக்க, அவனும் ஏறியவுடன் பின்னிருக்கையை நோக்கியே வந்து இவனருகில் இருந்து கொண்டாலும், வேற்றினத்தவடகள் இருக்கின்றார்களே... என்ற கவலை சிறிது கூட இல்லாமல் சத்தமாக தமிழில் கதைத்துக்கொண்டே இருந்தான்.

"வடிவா யோசிச்சு முடிவெடுங்கோ!"

ஓ... ஓ... எனக்கு இன்டைக்குள்ள முடிவு தெரிஞ்சால்தான் நல்லது. நாளைக்கு சீட்டு தொடங்குது!

காசைப்பற்றி நீங்களேன் யோசிக்கிறீங்கள்! இந்த மாதம் தரத்தேவையில்லையென்றுதானே சொல்லுறன். என்ர தாச்சி காசு தானே. அதை ஆறுதலாக தாங்கோ ஒரு பிரச்சனையுமில்லை.

பேந்தும் பார்...இதுக்கெல்லாம் நான் வட்டி வாங்கினால் நான் என்ன உழைச்சு சந்திரமண்டலத்திலயா வீடு வாங்கப்போறன்!

நீங்கள் கனநாளா என்னையும் சேருங்கோவென்டு கேட்ட தாலதான் உங்களுக்கு ஒரு துண்டு வைச்சிருந்தனான். வாறீங்களோ இல்லையோ என்கிறதை இன்டைக்கே எனக்கு சொல்லிப் போடுங்கோ?

உங்கை நாலைஞ்சு பேர் இப்பவும் கலைக்கினம். கண்டவை யையும் போட எனக்கு விருப்பமில்லை பதினைஞ்சு துண்டில இன்னும் இரண்டு தான் இருக்குது. என்ர சீட்டில எந்த சீட்டு கழிவு போகாத சீட்டு ... சொல்லுங்கோ பார்ப்பம்? சீட்டுக்கு வராமலேயே

யெனிவாவில இருந்து கூடப் போடுகினம். பரமசிவத்தின்ர சீட்டென்றால் பரம விரோதி கூட பயப்படுவாங்கள்...

ஓ .... நான் வேலையால வீட்டை போய்க்கொண்டிருக்கிறன். நீங்கள் வேலையால வரேக்க நல்ல முடிவோட வாங்கோ... இஞ்ச பஸ்சுக்குள்ள இருந்து கதைக்கிறன். சனங்கள் என்னையே... பார்த்துக் கொண்டிருக்கினம் வைக்கிறன்!"

ரெலிபோனை வைச்சது தான் தாமதம் பக்கத்தில இருந்த சீலனைப் பார்த்து நீங்களும் தமிழரா?! என கேக்க முன்னம் சீலனும் தனக்கே இயல்பான புன்னகையுடன் "ஆமண்ணா" என்று சொல்ல "அண்ணா என்று சொல்லாதேங்கோ. என்ர உடம்பு தான் அப்படி. எனக்கு வயசு குறைவு இப்பதான் 22. என்ர பெயர் பரமசிவம் சிவமென்று தான் எல்லாரும் கூப்பிடுவினம்."

"உங்கள ஒருநாளும் காணேல்லையே இந்தப்பக்கம் நீங்களும் இஞ்சதான் எங்கயோ இருக்கிறீங்களா? அல்லது வேற இடத்தில எங்கயாவது இருந்து வாறிங்களா?"

"இல்லை நானும் இஞ்சதான் இருக்கிறனென்று தொடங்கி ... இப்ப வேலைக்கு பஸ்சை விட்டு... வீடுமில்லாமல் இருக்கிற வரையில் சொல்லி முடித்தான் சீலன்".

ஒன்றுக்கும் யோசியாதைங்கோ!

"நானும் யாழ்ப்பாணம்தான்.! வந்தாரை வரவேற்று வாழ் வளித்த யாழ்ப்பாணத்தாருக்கு இப்ப உலகமெல்லாம் வீடு. இனி என்ர வீடும் உங்கட வீடுதான் சீலண்ணா!

அவன் என்ன சொல்லுகிறானென்று புரியாமல் எல்லாம் சிலேடையாக இருந்தது.

"பகிடிக்கில்லை சீலன் அண்ணா! என்ர வீட்டில நீங்கள் தங்கலாம். நானும் இன்னும் கலியாணம் கட்டேல்லைத்தான். இஞ்சை எனக்கு சொந்தமா வீடு இருக்குது! என்னோட சேர்த்து ஐந்து பேர் இருக்கிறம். எல்லாரும் பொடியள் தான்! வீட்டு வாடகையை ஐந்தாப் பிறிச்சு கட்டுறம். சமறியும் அப்படித்தான்! சமையலும் ஐந்து பேரும் ரேன் போட்டு சமைப்பம். நீங்களும் ஆறாக எங்களோட சேர்கிறதில எனக்கு சந்தோசம். உங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லையென்றால். யோசிச்சுப்போட்டு சொல்லுங்கோ?

"இதில ஒன்றும் யோசிக்கிறத்துக்கு ஒன்றுமில்லை. உங்களப் போல உதவி செய்கிறவர்கள் இருக்கிறதினாலதான் எங்களைப்

போலவர்களும் வாழக் கூடியதாக இருக்குது. ஆனால் உங்களோட இருக்கிற மற்றைய ஆட்களும் இதுக்கு சம்மதிக்க வேணுமெல்லோ?"

"நீங்கள் அதைப்பற்றி எதுவும் யோசிக்கத் தேவையில்லை. அது என்ர வீடு நான்தான் முடிவெடுக்கிறது"

"இந்தாங்கோ என்ர விசிற்றிங் காட். அடுத்த ஸ்ரொப்பில நான் இறங்கப்போறன். நீங்கள் வீட்டை வாங்கோ கதைப்பம்" என்று சொல்லியபடி . . . சிவம் பஸ்சில் இருந்து இறங்கிவிட்டான்.!

சீலனின் மனதில் ஒருவித ஆனந்தம். ஒரு கதவை அடைக்க கடவுள் இன்னொரு கதவை திறக்கிறார்.

தவத்தார் எப்பவோ சொன்ன வார்த்தை மனதில் முட்டி மோதிப் போனது. "இஞ்சை தமிழர்கள் ஒருதரும் ஒற்றுமையில்லை. கண்டாலும் காணாமல்தான் போவார்கள். நீ ஆரைக்கண்டாலும் கதையாதே". ஆனால் இண்டைக்கு திக்கற்று நின்றவனுக்கு தெய்வம் காட்சி கொடுத்தது போல சீலன் மனதுக்குள் சிவம் தெய்வமாக தெரிந்தான்!.

வேலை முடிந்ததும் சீலன் நேராக சிவத்தின் வீட்டுக்கே போக திட்டமிட்டான்.

இப்ப அவசரப்பட்டு தவத்தாருக்கு ஒன்றும் சொல்லாமல் பின்னர் சொல்லுவம். முரளி அங்க அவரோட இருக்கிறதால என்று சொன்னால் அவரொண்டும் கோவிக்க மாட்டார். சிவம் வீட்டு வாசலுக்கு போய்விட்டான் சீலன். உள்ளுக்குள் பெலத்த சத்தமாக கவியரசர் கண்ணதாசனின் தத்துவப் பாடலொன்று ஒலித்துக் கொண்டிருந்தது.

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது!

அந்த சத்தம் அதிகமாக இருந்ததினால் இவன் அடித்த "பெல்" சத்தத்துக்கு யாருமே செவி சாய்த்ததாக தெரியவில்லை. கொஞ்ச நேரமாக அப்படியே நின்றபோது பின்னால் வந்த ஒருவன் முதுகில் தட்டி நீங்கள் தான் சீலனா என்றான். ஆமென்ற முதல் "தனது கையை கொடுத்து நானும் இஞ்சதான் இருக்கிறேன். சிறிராமச்சந்திரன் என்ர அப்பா வைச்ச பெயர். இஞ்சை இவங்கள் எல்லாரும் என்னை "அனுமான்" என்று தான் கூப்பிடுவாங்கள்.

"வாங்க உள்ளுக்குள்ள" என்று திறப்பு போடாமலே கதவை திறந்து கொண்டு முன்னுக்கு அனுமான் போக பின்னுக்கு இவனும் போனான். சீலன் மனதில் அனுமான் இடம்பிடித்துக் கொண்டான் "வஞ்சகமில்லாத பேர்வழி" "இந்த வீடு எப்பவும் பூட்டுவதில்லை... யாரும் பெல்லடிச்சு வாறதுமில்லை"....

"அப்ப கள்ளர் யாரும் வந்தால்? வஞ்சமில்லாமல் கேட்டான் சீலன் !"

"கெக்...கெக்..." கென்று ... சிரித்தான் அனுமான்!

"இஞ்சையாவது கள்ளர் வாறதாவது. நாங்களே கள்ளர்! என்று அனுமான் சொன்ன வார்த்தை கேட்டு திக்கென்றது சீலனுக்கு" டே அனுமான் சீலண்ணாவை பயப்படுத்திப் போடாதே !

"நீங்கள் வாங்கோ!" என்று வரவேற்பறைக்கு அழைத்து சென்றான் சிவம்!

"வரவேற்பறையில் அமர்ந்து எல்லாவற்றையும் வியப்பாக பார்த்துக் கொண்டிருந்தான்" அகதிமுகாமில் இருந்த இவனுக்கு அவர்களுடைய வீட்டைப்பார்த்தபோது இது ஆண்கள் மட்டும் இருக்கின்ற வீடா... நம்ப முடியாமல் இருந்தது. வரவேற்பறையே அவ்வளவு அழகானதாக அழகுபடுத்தப்பட்டிருந்தது. வடிவேலைக் கூட அவ்வளவு வடிவாக காட்டிக்கொண்டிருந்த 50 இஞ்சியளவு ரிவியை கண் வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தவனை அனு மானின் குரல் திசை திருப்பியது. "என்ன அப்படிப்பாக்கிறீங்கள் ரீவியை?" இனி இதுகும் உங்கடதான்! ஆறாப்பிறிச்சு ஒன்றுதான். என்று சொல்லியவாறு கூல்றிங்சை அவன் முன்னால வைத்துவிட்டு சென்றான்.

"என்னடா எதுக்கெடுத்தாலும் ஆறாப்பிரிக்கிறது என்கிறாங் கள். திரௌவுபதையின்ர நிலைமைதானோ பத்மகலாவுக்கும்... தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டு கூல்றிங்சை எடுத்து குடித்தான்.

அங்கே இருந்த ஐந்து பேரும் ஐந்து கோணங்களிலே பிசியாக இருந்தார்கள்.

ஒருவர் கண்ணதாசன் பாடலிலேயே காதை கொடுத்து ரசித்துக்கொண்டிருந்தான். இன்னுமொருவன் அதை விட சத்தமாக ரெலிபோன் கதைச்சுக்கொண்டிருந்தான். அனுமான் தான் கிச்சினுக்குள் கோழியுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தான்.

அவன்ர சமையல் ரேனாயிருக்குமென்று இவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

இன்னுமொருவன் கையில் பியர் போத்திலுடன் அறைக் கதவை திறந்துவிட்டபடி "சிகரற்" பத்துவதும் பியர் குடிப்பதுமாக இருந்தவரைப் பார்த்து... "உங்களுக்கு எத்தின தரமண்ண சொல்லி யிட்டன் உந்தக்கோதாரியை வீட்டுக்கை நின்று பத்தாதையுங்கோ வென்று. உங்களை விட எங்களுக்குத்தான் உதால வருத்தம் வரப் போகுது".

சிகறற்றை வெளியே வீசி எறிஞ்சுவிட்டு கிச்சினுக்குள் போய் அனுமானோட ஏதோ புறுபுறுத்துக்கொண்டு நின்றவன்ர சத்தத்தை பின்னர் காணவில்லை. மேலே தன்னுடைய றூமுக்குள் போட்டான் போல...

கொஞ்சம் இருங்கோண்ண வாறனென்டு ஏதோ கணக்கு பார்த்தபடி இருந்தான் சிவம்.

அவனுக்கும் மாறிமாறி ரெலிபோன் வந்துகொண்டிருந்தது. சிலர் வந்து காசுகளும் கொடுத்துவிட்டு போய்க் கொண்டிருந்தார் கள். அந்த காசுகளை எண்ணுவதும் கொப்பியில் எழுதுவதமாக இருந்த சிவம் நீங்களும் சீட்டுப் பிடிக்கிறனிங்களா? என்று கேட்ட வுடன் "இல்லையண்ணா இப்பதானே வேலை தொடங்கினனான். எனக்கு உதில பெருசா அனுபவமுமில்லை" என்று சீலன் முடிக்க முன்னம் கிச்சினுக்குள்ள நின்ற அனுமான் ஓடிவந்து என்னண்ணை அனுபவம். எனக்கும் சீட்டைப்பற்றி ஒன்றும் தெரியாது. மூன்று சீட்டு போட்டு எடுத்துத்தான் ஊரில மருதனார்மடச் சந்தியில நிரைச்சுக்கு இருக்கிற கடை என்ரதான்.

"தோட்டக்காணியை வாங்கி கடை கட்டி விட்டன். அத்தனை கடையும் வருமானத்தை அள்ளிக் கொட்டுது.! எல்லாம் சிவமண்ணாதான்"

சீட்டில ஒன்றும் பெரிய அனுபவம் தேவையில்லை சீலண்ணா!

ஒரு துண்டு ஆயிரம் பிராங் என்றால் பதினைஞ்சு துண்டு 15000 பிராங் முதல் சீட்டு எனக்கு தாச்சி. அதுக்கு கழிவு இருக்காது. அதுக்கு பிறகு ஒரு குறிப்பிட்ட கட்டாயக்கழிவு ஆனால் அதுக்கும் மேலால கழிவு போகும்.

உங்களுக்கொரு அவசர தேவையென்றவுடன் யாரிட்டையும்

*பல்லைக் காட்டத் தேவையில்லை. உடன கழிச்சு எடுக்கலாம். மேசையில காசு. உங்களுக்கு அவசரமில்லையென்றால் நீங்கள் கடசியில எடுத்தால் முழுக்காசும் கழிவில்லாமல் எடுக்கலாம். அப்படி எடுக்கேக்க நீங்கள் கட்டிய தொகை கூட சில வேளை **10.000** பிராங் தானிருக்கும் உங்களுக்கு அப்படியே சுளையாக காசு வரும் "சீலனுக்கும் ஒரு நம்பாசை பிறந்தது. தங்கச்சிக்கு கலியாணம் செய்ய இப்படி சேர்த்து வைத்தால் உதவும்தானே. ஆனால் இப்ப என்னட்டை ஒரு காசுமில்லாமல் எப்படி... இனி வீட்டு வாடகை... அற்வானஸ்... எல்லாத்தையும் யோசித்துக் கொண்டிருக்க..."*

*என்ன யோசிக்கிறீங்கள் "சீட்டு கட்ட விரும்பினா கட்டுங்கோ. இந்த மாதம் காசுப் பிரச்சனையென்றால் நான் பார்க்கிறன். வாற மாதத்தில இருந்து என்ர காசையும் சேர்த்து தாங்கோ" என்றான் சிவம்!*

*"சீலனும் அதுக்கு சம்மதம் தெரிவித்து விட்டு முகாமுக்கு போக வெளிக்கிட்டான்."*

*"காம்பில என்ர சாமானுகள் கொஞ்சம் கிடக்குது எடுத்துக் கொண்டு ஆறுதலாக துப்பரவாக்கி கொடுத்திட்டு நாளைக்கு வாறன்" என்று புறப்பட்டு விட்டான்.*

***

*வருடங்கள் உருண்டோடி... சீலனும் சீட்டுப் பிடிக்க தொடங்கிய படியால் ஒன்றுக்கு இரண்டு மூன்று வேலை செய்யத் தொடங்கி ஓட்டமும் நடையுமாய் அவனது வாழ்வு உருண்டு கொண்டிருந்தது.*

*ஒரு சீட்டும் எடுக்காமல் பிரமிப்பாய் "தன் சொத்து" என்று அடிக்கடி நூறால் பெருக்கிப் பார்த்து கொள்வான். சிவத்தின் மீது அதிக நம்பிக்கையானபடியால் சீட்டு கூறும் நேரம் கூட இவன் வீட்டில் நிற்பதில்லை. அவன் சொல்லும் காசை கொடுத்துவிட்டு தானுண்டு தன் வேலையுண்டு என இருந்து விடுவான்.*

*"தங்கச்சிக்கும் ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக்கு மோனே, **20** இலச்சம் காசு கேக்கிறாங்கள்... நான் உன்னோட கதைச்சிட்டு முடிவு சொல்லுறன் என்று புறோக்கறிட்டை சொல்லியிட்டன். நல்ல பொருத்தமாம். மாப்பிள்ளை கனடாவாம். தையில இஞ்ச வர இருக்கிறாறாம்" என்று அம்மா ஒருநாள் ரெலிபோனில் கதைக்கும் போது சொன்னவுடன்..." பொருத்தமென்றால் ஓமென்று*

சொல்லுங்கோ ! நல்ல இடமென்றால் செய்துவைப்பம் காசைப்பற்றி நீங்கள் ஒன்றும் யோசிக்க தேவையில்லை. அதெல்லாம் நான் ஒழுங்கு பண்ணுறன்" என்று அம்மாவிடம் முடிவாக சொல்லிவிட்டான்.

"இந்தமுறை எப்படியும் சீட்டு எடுக்க வேணும்...என்று அன்றைய தினம் வேலைக்கும் இரண்டு மணித்தியாலம் லீவு எடுத்துக்கொண்டு சீட்டு தொடங்கும் நேரத்துக்கு கணக்கா வீட்டை வந்துவிட்டான். சீட்டை சீலன் கேக்கத்தொடங்கியவுடன்... அங்கே இருந்தவர்கள் எல்லாரும் சீலனைப் பார்த்து சிரித்தார்கள். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

ஒருவர் சொன்னார் "சீலன் உம்முடைய சீட்டை எத்தினை தடவைகள் நீர் எடுப்பீர்?"

உமக்கு தெரியாதா ஏற்கனவே உம்முடைய சீட்டு எடுக்கப் பட்டுவிட்டது.

"ஒன்றும் புரியாமல் விழிக்க நீர் பேசாமல் இரும். நான் பிறகு கதைக்கிறன் உம்மோட" சிவம் சொன்னவுடன் எதுவுமே கதைக்காமல் எழுந்து வெளியே போய்விட்டான் சீலன்

சீட்டு முடிந்து எல்லாரும் போன பின்னர் தன்னுடைய அறைக்கு வந்து "கோவித்துக் கொள்ளாதேங்கோ சீலண்ணா! உங்கட சீட்டுகளை நான் அவசரத்துக்கு எடுத்துப் போட்டன். நாலஞ்சு மாசத்துக்குள்ள நான் தருவன்" என்று சொன்னவுடனே சீலனுக்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.

அவனிடம் வைத்த நம்பிக்கை இன்னுமிருந்ததினால் "எனக்கு அவசரமாய் காசு தேவையாக இருக்குது. வட்டிக்கெண்டாலும் தாங்கோ" என்று சீலன் கேக்க என்னட்டை காசு இருந்தால் நானேன் உங்கட சீட்டை எடுக்கிறன். எதுக்கும் வேற ஆக்களிட்டை கேட்டுப் பார்ப்பம். எழும்புங்கோ? பேத்தே பாட்டீக்கெல்ல போகவேணும் நேரமாகுது" என்று சிவம் எழுப்ப, இல்லை சிவம் நான் வரேல்ல. எனக்கு கொஞ்சம் அமைதியாக இருக்கவேணும் போல கிடக்குது என்று இவன் மறுக்க... வலுக்கட்டாயப்படுத்தி... அங்க பிறன்ஸ் எல்லாரும் வருவாங்கள். அவங்களோட கதைச்சு காசும் ஒழுங்கு பண்ணலாம். வாங்கோ என்று சீலனையும் அழைச்சுக்கொண்டு பேத்டே பாட்டி வீட்டுக்கு கிளம்பிவிட்டார்கள்.

அங்கே பேர்த்டே பாட்டியென்றால் பெரிய மண்டபம் எடுத்து கேக் எல்லாம் வெட்டி நடக்கின்ற பேர்த்டே பார்ட்டியென்று

மில்லாமல் சும்மா எல்லாரும் சேர்ந்து தண்ணியடிக்கும் பார்ட்டியாக மட்டும் தானிருந்தது.

இதிலே சீலன் மட்டும் தான் தண்ணியடிக்கவில்லை. மற்றவர்கள் எல்லாம் அங்கே மப்பும் மந்தாரமாக இருந்தார்கள். சீலனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கொக்கோ கோலாவை சுவைத்தபடி ஒரு மூலையில் இருக்க, ஒருவன் வந்து "உந்தக் கொக்கோ கொலாவை விட இது பரவாயில்லை. உது உடம்புக்கு கேடு" என ஒரு பிரசங்கமே நடத்தி முடித்தான்.

திடீரென்று பார்த்தால் தண்ணியடிச்சுக் கொண்டிருந்த பெடியளுக்கு இடையில் வாய்த்தர்க்கம் மாறி மாறி இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சிவத்துக்கும் இன்னொருவனுக்குமிடையில் வாய்த்தர்க்கம் கைகலப்பாக உருவெடுத்தது. சிவத்துக்கு இரண்டு மூன்றடி விழுந்துவிட்டது. இதை கண்ட சீலன் ஓடிப்போய் விலக்குதீர்க்க... சிவத்துக்கு அடித்தவனை எட்டிப் பிடிக்க

"உனக்கு வந்தாத்தான் தெரியும். கொஞ்சநஞ்ச காசா.... வாயைக் கட்டி வயித்தை கட்டி சீட்டுப்போட்டா என்ரை சீட்டை எடுத்துப்போட்டு பேக்காட்டிக்கொண்டு திரிகிறான்.! இவங்களை யெல்லாம் சும்மா விடக்கூடாது. வீடுமய்சே... என்று சீலனின் பிடி யிலிருந்து திமிறி... சிவத்துக்கு திரும்பவும் அடிப்பதற்கு முன்னம் எங்கயோ மறைச்சு வைத்திருந்த கத்தியை எடுத்து அவனின் வயித்தில் ஒரு குத்து. குத்திவிட்டான் சிவம். இடையில் நின்ற சீலனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் குத்து வேண்டியவனை காப்பாற்றும் நோக்கோடு கத்தியை பிடித்து வெளியே இழுக்க கலவரமாகி போக... நின்றவர்களெல்லாரும் இதுதான் தருணமென்று ஆளுக்காள் ஓடிவிட்டார்கள். சிவமும் உட்பட யாரையும் காணவில்லை.

அந்த பேர்த்டே பாட்டியை ஏற்பாடு செய்தவன் குழம்பி போய் அம்புலன்சுக்கு அடிச்சுப்போட்டான்.

என்ன தம்பி நீர் தேவையிலாமல் உதுக்குள்ள மாட்டுப்பட்டு போனீர்? உம்மட கை அடையாளம் தான் பதிஞ்சு போயிருக்கப் போகுது. போகிற போக்கில ஆள் தப்பாது போல. அம்பிட்டீரென் றால் ஏழு வருசம் உள்ளுக்குள்ள உம்மை பார்க்க பாவமா கிடக்குது. நீரெங்கயாவது ஓடித்தப்பும்" என்று அங்க நின்ற ஒரு முதியவர் சொல்ல ...

"எங்கயண்ண போவன்? என்னட்டை ஐந்து சதம் கூட கையில

காசு இல்லை...என்று சீலன் சொல்லிக்கொண்டு நிக்க... "இஞ்ச வாரும் என்னோட" என்று அவனை அழைச்சுக்கொண்டு வந்து தன்னோட தலைமறைவாய் வைச்சிருந்து புகையிரத நிலையத்தில் வைச்சு "கொப்பனேகனுக்கு" ரிக்கெற்றும் எடுத்துக்கொடுத்து மாரிமுத்து என்ற பெயரில் ஒரு பேர்த்சேட்டிபிக்கற்றும் செய்து கொடுத்து... அங்கே... போனவுடன உந்தப்பாஸ்போட்டை கிளித்தெறிஞ்சு போட்டு மாரிமுத்து என்ற பெயரில் பதியும்".

"பாரும் உம்மட பிறன்ஸ் என்று நீர் நினைச்சவர்களெல்லாம் எங்கயெண்டு பார்த்தீரே? உம்மைப்பற்றி தெரியும் என்றதாலதான் இவ்வளவு உதவியையும் செய்கிறன். நான்தான் இவ்வளவும் செய்தனான் என்பதை ஆருக்கும் சொல்லிப்போடாதேயும்" என்று கூறி ரெயிலேற்றி விட்ட சோகக் கதையை சொல்லி முடித்தான் சீலன்.

நான் யார்? எனக்கு ஏன் இந்த நிலை? மாரிமுத்தா அல்லது சீலனா... கடவுளே எனக்கேன் இந்தச்சோதனை? என்ன செய்வ தென்று தெரியாமல் குழம்பி நின்றான் சீலன்.

கால்முறிந்த நிலையில் தங்கை. கொழும்பில் வீடு எடுக்க ஆயத்தமாகும் அம்மா. பட்டப்படிப்பு படிக்க ஆசைப்படும் தங்கை. கனடாவில் காதலித்த பெண். காதலுக்குக் குறுக்கே வில்லனாய் முளைத்த முரளி. வேலையும் போய்... கொலையிலும் தேவை யில்லாமல் மாட்டுப்பட்ட நிலை. இடமும் மாறி பேரும் மாறி இக்கட்டாக வந்து விட்ட நிலைமை.

சீலனுக்கு என்ன முடிவு எடுப்பது? எங்குபோய் இது முடியப் போகிறது... என்பதையெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாமல் இருந்தது. எல்லாக் கடவுளையும் மனதில் பிரார்த்தித்துக் கொண்டான். விழுதல் என்பது எழுதலுக்கே என்றாலும் எனது நடை முறை வாழ்க்கையிலே தொடர்ந்து விழுதலாகவே இருக்கிறதே என்று சீலன் மனத்துக்குள் வேதனைப் பட்டுக்கொண்டான்.

டேவிட்டைக் கண்டதும் அவரால் மக்டொனால்டில் வேலை கிடைத்ததும் தனது கஷ்டத்தை சொன்னதும்... பானு தான் காசு தருகிறேன் என்று சொன்னது யாவும் சீலனின் மனதில் படமாக ஓடியது. ஒரு சிறிது மகிழ்ச்சியோ அல்லது நிம்மதியோ நிரந்தரமாக நிற்குது இல்லையே ..என எண்ணிய பொழுது சீலனிடம் வெளிப் பட்ட அழுகையை கட்டுப்படுத்தவே முடியாமற் போய்விட்டது. தன்னையும் மீறி சீலன் ஓவென்று அழுதே விட்டான்.

சீலனுக்கு ஒதுக்கப்பட்ட அறையில் சீலன் மாரிமுத்து என்ற பெயருடன் தங்கவிடப்பட்டான். அடுத்த நாள் காலை மீண்டும் அதிகாரிகள் வரத்தொடங்கினார்கள். தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்றன. சீலனின் நண்பன் சாந்தனின் சாதுர்யமான மொழி பெயர்ப்பால் மாரிமுத்து என மாறிய சீலனை வெளியில் செல்லலாம் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

சாந்தன் வெளியில் வந்து சீலனை தான் தங்கியிருந்த அறைக்குக் கூட்டிச் சென்றான். சீலனுக்கு இப்போது பெயர் ஒரு பிரச்சினையாகப் படவில்லை. இனிமேல் என்ன செய்வது என்பதே பெரும் கேள்விக்குறியாகி நின்றது. சீலன் என்றாலும் மாரிமுத்து என்றாலும் அகதி அகதி தானே என்ற எண்ணமே அவனுள் ஏற்பட்டது.

தங்கையின் கல்யாணத்துக்கு இருபதுலட்சம் தாய் கேட்ட தும் அப்போது இருந்த நிலையில் சீலன் தலையாட்டி சம்பந்தத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமென்று தாய்க்கு உறுதியும் கொடுத்தான். வெள்ளவத்தையில் வீடு எடுக்க, தங்கை படிக்க எல்லாவற்றும் காசுபற்றிக் கவலைப்படவேண்டாமென்று தைரியமும் கொடுத்தான். ஆனால் இப்போது சீலனோ தைரியம் இழந்து தடுமாறி நிற்கும் நிலைக்கு வந்துவிட்டான். தான் தாய்க்குச் சொன்னதையெல்லாம் நினைத்துப்பார்க்கிறான். அழுவதைத் தவிர அவனால் ஒன்றுமே செய்யமுடியாத நிலை.

சீலனின் மனதில் பழைய ஞாபகங்கள் எல்லாம் வருகின்றன. ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன். அப்பா இடையில் இறந்துவிட அம்மாதான் குடும்பப் பாரமனைத்தையும் சுமக்கும் நிலை. என்றாலும் எப்படியும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்னும் பேரவாவை மட்டும் தாய் விட்டுவிடவில்லை.

மகன் சீலனை எப்படியும் ஒரு மருத்துவராக்கிப் பார்க்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக அவர் இருந்தார். ஏழைக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் மருத்துவம் ஏழைகளுக்கு நல்ல முறையில் கிடைக்கவில்லை என்பது சீலனின் மனதில் பதிந்திருந்தது. எனவே படிக்கும் காலத்திலேயே சீலனின் கனவு தான் ஒரு மருத்துவ ராகி தன்னைப் போல் இருகின்ற எத்தனையோ ஏழைகளுக்கு மருத்துவம் செய்ய வேண்டும் என்பதேயாகும். அதேவேளை இலவச மருத்துவ மனை ஒன்று நிறுவி ஆதரவற்றவர்கள் அனைவருக்கும்

மருத்துவத்தை வழங்கவேண்டும் எனக் கனவும் வைத்திருந்தான்.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு தனது மகன் தெரிவாகி விட்டான் என்பதைக் கேட்டதும் சீலனின் தாய் மகனைக் கட்டி யணைத்து தேம்பித் தேம்பி அழுதே விட்டார். அதுவும் மருத்துவத் துறைக்கு என்றதும் சீலனின் தாயாருக்கு... தான் பிறந்ததின் அடைத்தம் புரிந்தது போலாகிவிட்டது. சீலனின் கிராமமே விழாக் கோலம் பூண்டது. சீலனுக்கும் அவனது குடும்பத்துக்கும் ஏகப்பட்ட மரி யாதை. சீலனின் குடும்பத்தை ஏறெடுத்துப் பார்க்காதவர்கள் எல்லாம் பெரும் மரியாதை கொடுத்து நின்றனர். ஆனால் சீலன் மட்டும் என்றும் போல அமைதியாக ஆர்ப்பாட்டம் இல்லாமல் தனது அன்றாட அலுவல்களைப் பார்த்தபடியே இருந்தான்.

யாழ் பல்கலைக்கழகத்தில் படிக்கச் சென்ற வேளையில் இவனது தனிப்பட்ட ஆற்றலாலும் இயல்பான நற்குணத்தாலும் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டான். இதனால் மருத்துவ பீட மாணவர் தலவனாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டான். பல்கலைக் கழகம் முழுவதும் சீலனைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

பல்கலைக் கழக நடவடிக்கைகள் அத்தனையிலும் மிகவும் நன்றாகவே ஈடு பட்டான். சீலனினுடன் கூடப்படித்த பத்மகலா என்பவளுக்கு சீலன் மீது ஒரு விருப்பு ஏற்பட்டது. அதனால் சீலனுடன் நெருங்கிப்பழக ஆசைப்பட்டாள். ஆனால் சீலனோ காதல் எதையும் காதில் போட்டதாகத் தெரியவில்லை. அவனது லட்சியம் படிப்பாகவே இருந்தது. மற்றயது தனது தாயும் தாய்பட்ட கஷ்டங்களும் அவன் மனத்தில் ஊன்றிப்போய் இருந்தன.

கலாவோ எப்படியும் சீலனை தன்வசப் படுத்திவிடுவதில் நோக்கமாகவே இருந்தாள். நாளாவட்டத்தில் சீலனும் கலாபற்றி உணரத்தலைப் பட்டான். இருவருக்கும் இடையில் ஒரு காதல் பாலம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் இருவரும் படிப்பில் அக்கறை கொண்ட படியால் வரம்புடன் காதலில் ஈடுபட்டார்கள்.

படிப்பிலே இருவரது கவனமும் இருந்தாலும் இருவரும் தனிமையில் சந்தித்தித்து சிரித்து மகிழ்வதையும் விட்டுவிடவில்லை. சீலனின் காதல் பற்றி தாய்க்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் சீலனின் தங்கைக்கு மட்டும் ஓரளவு தெரியும். என்றாலும் அவளும் தாயிடம் இது பற்றிச் சொல்லாமல் இருந்தது சீலனுக்கு நிம்மதியாக இருந்தது.

காதல் இப்பவே வந்துவிட்டால் படிப்பு என்னாவது... லட்சியம் என்னாவது... என்று தாய் கவலைப் பட்டுவிடுவார். அதனால் இந்தக் காதல் தாய்க்குத் தெரியவரக் கூடாது என்பதில் சீலன் மிகவும் அவதானமாகவே இருந்தான். இதனால் கலாவை வெளியில் கூட்டிப் போவதோ அல்லது படத்துக்குக் கூட்டிப்போவது... எதையும் சீலன் செய்தது கிடையாது. தனிமையில் எங்காவது கதைப்பதும் சிரிப்பதுமே அவனது காதலாக இருந்தது. அதனால் தாய்க்குக் கடைசிவரையும் தனது காதலைக் காட்டிக் கொள்ளாமலே தப்பி விட்டான் சீலன்.

தேவையில்லாமல் பிடிபட்டதும் சிறைக்குச் சென்றதும் மருத்துவப்படிப்பு கனவாகிப் போனதும் தாய்பட்ட பாடுகளும் வெளிநாடுவந்தால் விடிவு கிடைக்கும் என்று கனவில் மிதந்ததும்... யாவும் இப்பொழுது சீலனின் மூளைக்குள் ஓடிக்கொண்டிருந்தது. கதிரையில் இருந்தவன் எந்தவித சலனங்களும் இல்லாமல் வெறித்துப் பார்த்தபடி இருந்தான்.

“என்ன சீலா! இப்ப என்ன நடந்துவிட்டது என்று பேயறைஞ்சது மாதிரி இருக்கிறாய்! உனக்கு என்ன தூக்குத் தண்டனையா தந்திருக்கிறாங்கள்? இது எல்லாம் இங்கு வெரி சிம்பிள்! தேவையில்லாமல் கவலைப்படாதே. நான் உன்னைக் கண்டதே கூட உனக்குக் கொஞ்சமேனும் அதிர்ஷ்டம் இருக்கிற படியால என்று எண்ணு! நானில்லாமல் வேறுயாராவது உனக்கு மொழி பெயர்க்க வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று ஒருக்கால் யோசித்துப்பாரு. எல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளு.

சாந்தனது வார்த்தைகள் எதுவுமே சீலனின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவனுக்கு... தான் இனி என்ன செய்யப் போகிறேன் என்பதே மனதில் எழுந்து நின்ற பெரும் பிரச்சினையாக காணப்பட்டது. சீலனின் மன ஓட்டத்தை ஓரளவு உணர்ந்து கொண்ட படியால் சாந்தன் அவனைச் சமாதானப் படுத்தி எப்படியும் பழைய நிலைக்குக் கொண்டுவரப் பெரும் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தான்.

திடீரெனக் கதிரையை விட்டு எழும்பிய சீலன்... மச்சான் எனக்கு ஒருக்கா போன் கதைக்க உதவி செய்வியா என்று பதட்டத்துடன் கேட்டான். சீலன் மௌனம் கலைந்து பேசியதே சாந்தனுக்கு ஒருவித திருப்பம் வந்தது போலக் காணப்பட்டது. ஆருக்குக் கதைக்கப் போறாய். உனக்கிட்ட நம்பர் எல்லாம் இருக்கோ என்று

சாந்தன் கேட்டான். அப்பொழுதுதான் சீலன் தனது பொக்கற்றைப் பார்க்கிறான். அதற்குள் நிறையப் பேப்பர்கள் இருந்தன. நிலத்தில எல்லாத்தையும் கொட்டி ஒவ்வொன்றாக பார்த்தபடி நின்றான்.

கொஞ்சநேரம் ஒன்றுமே பேசாமல் மீண்டும் வெறுத்துப் பார்த்தபடி நின்றான். என்னடா.. நம்பர் கிடைக்க வில்லையா? ஏனடா பழையபடி ஆகிவிட்டாய்? என்று சாந்தன் கேட்டதுதான்... சீலன் நிலத்தில் விழுந்து புரண்டு அழத்தொடங்கிவிட்டான். சாந்தனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சாந்தன் சீலனை தடவி... மச்சான் என்னடா சின்னப் பிள்ளை மாதிரி அழுகிறாய். அழுதா எல்லாம் நடந்திடுமாடா? என்னடா பிரச்சினை சொல்லுடா? என்று சாந்தன் மிகவும் ஆதரவுடன் சீலனை ஆசுவாசப் படுத்தினான். மச்சான் அம்மாவின் ரெலிபோன் நம்பரைத் தொலைத்து விட்டேனடா! அங்க அவ என்ற பதிலுக்குக் எந்தநேரமும் காத்துக் கொண்டிருப்பா வடா. அங்கயோ எல்லாரும் என்ர பதிலில தான் தங்கி இருக்கினம். இங்கே நானோ சிக்கலில....என்னடா மச்சான் செய்யிறது ?

சீலன்! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. உன்னட்ட வேறு யாருடை நம்பர் இப்ப இருக்கு என்று பார். மற்றதைப் பிறகு பாப்பம். மச்சான் முதல் அழுகிறதை நிப்பாட்டிடா. அழுது ஒன்றும் ஆகப்போவதில்லை. நீ முதலில உன்னைத்தேற்றிக் கொள்ளடா. என்னால் முடிஞ்சளவுக்கு உனக்கு எல்லாத்தையும் செய்து தருவன்.

சாந்தனின் வார்த்தைகள் ஓரளவு சீலனை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. மீண்டும் சீலன் கீழே கிடந்த பேப்பர்களை கிளறினான். மச்சான் ஒரு நம்பர் கிடக்குது. ஆருடைய நம்பர் என்று சாந்தன் கேட்டான். மச்சான் என்னைக் கைதூக்கிவிட்டவரின் நம்பர் தாண்டா அது என்று சொல்லி அந்த நம்பரை சாந்தனிடம் சீலன் கொடுத்தான்.

ஆருடா இது? டேவிட் என்று இருக்கு. உன்னோட படிச்ச வரா? அல்லாட்டி உன்ர ரீச்சரா? என்று சாந்தன் கேள்விமேல் கேள்வி யாய் கேட்டான். அவர்தாண்டா நான் இங்க வாறதுக்கு முன்பு நல்ல நிலையில் இருக்கவும் எனக்குள் ஒரு நம்பிக்கை வரவும் பண்ணிய நல்ல மனிசனடா என்று சீலன் சொல்லி..டேவிட்பற்றி பலவிஷயங்களை சாந்தனிடம் பகிர்ந்து கொண்டான்.

டேவிட் என்றதும் சீலனின் முகத்தில் ஒருவித பிரகாசம் தென் பட்டதை சாந்தன் உடனே கவனித்துக் கொண்டான். டேவிட் எப்படி

யும் நல்ல மனிசனாக இருக்கத்தான் வேண்டும் என்று சாந்தனும் மனத்திற்குள் எண்ணிக்கொண்டான்.

மச்சான் ஒருகதவு மூடப்பட்டால் இன்னொரு கதவு எப்படியும் திறக்கப் படும் என்பது உனக்குப் பொருந்தி இருக்கிறது. கடவுள் உனக்கு அப்பப்போ கஷ்டங்களைத் தந்தாலும் டேவிட் போன்ற நல்ல மனிதர்களையும் காட்டியிருக்கிறார் என்றே நினக்கிறேன். ஆனபடியால் மச்சான் உனக்கு இனி எல்லாம் நல்லபடி நடக்குமடா. கவலைப் படாதே. நான் இப்பவே நீ தந்த டேவிட்டின் நம்பருக்குப் போன் பண்ணுறன். அதற்குப் பிறகு நடப்பதைப் பார்ப்போம் என்று சொல்லி சாந்தன் டேவிட்டுக்குப் போன்செய்தான்.

சீலன் கடவுளைப் பிரார்த்தித்தபடியே நின்றான். மச்சான்... போன் அடிக்குதடா என்று சாந்தன் சொல்லியபடி சீலனிடம் போனைக்கொடுத்தான்.

வீழ்ந்துவிட்டோம் என்று நீ நினைக்காதே
வெட்டினாலும் வாழை முளைக்கும் மறக்காதே
தாழ்ந்துவிட்டோம் என்று நீ கலங்காதே
நம்பிக்கைதான் வாழ்க்கை அது மறக்காதே

சீலனின் மனம் அங்கலாய்த்தது.

தொலைபேசி அழைப்பு மணி அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். ஒரு தரம், இரண்டு தரம் இல்லை மணி அடிக்கிறது யாரும் எடுக்கவில்லை.

என்ன வாழ்க்கையடா சாமி.

வாழ்க்கையென்றால் சில சோதனைகள் வேதனைகள் இருக்கத்தான் செய்யும். சோதனையே வாழ்க்கை என்றால்? சீலனின் மனம் பிதற்றிக் கொண்டேயிருந்தது. கலா, அம்மா, தங்கை, தவம், டேவிட் அங்கிள், பானு, விறுமாண்டி, சிவம் எல்லோரும் தட்டா மாலையாக மனதில் சுழன்று கொண்டிருந்தார்கள்.

சாந்தன் தொலைபேசியில் மீண்டும் மீண்டும் முயன்று கொண்டிருந்தான். பலனில்லை என்பது தெரிந்தது.

அம்மா என்ன செய்கிறாளோ தெரியவில்லை.

தொலைபேசி பணம் உடுப்புகள் எல்லாம் இழந்து சொந்தப் பேரிழந்து இப்போது மாரிமுத்து என்ற பேருடன்,

"சீலன் என்ரை குஞ்சு" அம்மா கூப்பிடுவது காதில் ஒலித்தது.

"சீல்" என்றுதான் கலாவும் ஆசை வந்தால் அழைப்பாள்.

நாங்கள் ஊரிழந்தவர்கள், உறவிழந்தவர்கள், நாடிழந்தவர்கள், நாதியிழந்தவர்கள், இப்போது பேரிழந்தவர்கள்.

"இந்தாடா மச்சான் டேவிட் அங்கிளிடம் எல்லா விசயமும் சொல்லிப்போட்டன். அவரோடை கதை" சாந்தன் தொலைபேசியை தருகிறான்.

"அங்கிள்" குரல் தளுதளுக்கிறது. கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. வாய் புலம்புகின்றது.

மறுமுனையில் அங்கிள் "எடேயப்பா சீலன். ஒண்டுக்கும் கவலைப்படாதை நான் சாந்தனிடம் எல்லாம் சொல்லிப்போட்டன். இப்ப மணிகிராமில் இரண்டாயிரம் அனுப்பிவிடுகிறன். போனொன்டும் வாங்கி உடுப்புகள் சாமான்களும் வாங்குடா தம்பி. நடந்ததை நினைச்சு கலங்காதை. இனி உனக்கு புது வாழக்கை பழைய எல்லாம் போகட்டும். சாந்தனிடம் கதைத்திருக்கிறன். அவன் மூலமா ஒரு வேலைக்கும் தங்கிற இடம் ஒன்றுக்கும் ஏற்பாடு பண்ணிறன். நீ வேலை செய் மக்னொடால்ஸசுக்கு போறன். உன்ரை அரியர்ஸ் சம்பளங்களை வேண்டி அனுப்பிறன்.

"அங்கிள் அம்மா..."

"கவலைப்படாதை தம்பி. வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிசன் மனேஜர் என்ரை வேண்டப்பட்டவர்தான். அவரிட்டை தொடர்பு கொண்டு உன்ரை அம்மாவின் போன் நம்பர் வேண்டி தாறன். எல்லாம் சாந்தனிட்டை கதைச்சிருக்கிறன். இரண்டு நாளிலை நான் உம்மை வந்து சந்திக்கிறன். போன் வாங்கின உடனை போன் பண்ணும் என்ன தேவை எண்டாலும் என்னட்டை சொல்லும்.

"........................"

"என்ன சீலன் என்ன சொல்லும்"

"அங்கிள் என்ரை பேர் இப்ப மாரிமுத்து இப்ப... நான்... பேரிழந்தவன்"...

"எடேய் சீலன் இங்கை யார்தான் சொந்தப் பேரிலை நிற்கினம். உதெல்லாம் ஒரு விசயமே இல்லை. கவலைப்படாதை தம்பி நாங்கள் இருக்கிறம் முதல் உன்ரை சாமான்களை நீயிருந்த சிவத்தின் வீட்டை போய் எடுக்க முடியுமோ என்று பாடீக்கிறன். அவன் சிவம் ஊரறிஞ்ச கள்ளன். அவனிட்டை சீட்டு கட்டிறன் எண்டு சொல்லியிருந்தா நான் கட்ட விட்டிருக்கமாட்டன்.

சரி தம்பி உன்னை நான் குழப்ப விரும்பவில்லை. இப்ப

சாந்தனிடம் காசை வாங்கு. சாந்தன் சொல்லிற இடத்திலை தற்காலிக மாக தங்கியிரு. உன்ரை வேலைக்கும் அவனிட்டை சொல்லியிருக்கு. அவன் பாத்துக்கொள்வான் பிறகு போன் பண்ணு தம்பி வைக்கிறன். வைத்து விட்டார்

அதன் பின் சாந்தன் தன் பணமும் சேர்த்து 3000 பிராங்காக கொடுத்ததும் அதன்பின் தற்காலிக ரூம் ஒன்று எடுத்து சாந்தன் மூலமாக அதில் தங்கவைக்கப்பட்டதும் புதிய ஆடைகள் போன் என்பன வாங்கியது விரைவாக நடந்தேறியது.

சாந்தன் ஆறுதல் கூறிவிட்டு போய்விட்டான். புது போன் சிம் அக்டிவேட் ஆக 3 மணி நேரம் செல்லும் என்பதால் யாருடனும் தொடர்பு கொள்ள முடியாது. அறையில் பேசாமல் படுக்கும்படியும் வெளியில் வீணாக திரிய வேண்டாம் என்றும் சாந்தன் அறிவுறுத் தலுக்கேற்ப கட்டிலில் சரிகிறான் மாரிமுத்து என்கிற சீலன்.

அம்மா இப்ப என்ன செய்வா...? எனது போன் நம்பருக்கு முயன்று அது வேலை செய்யாமல் போக சிவம் வீட்டு பொது தொலைபேசிக்கு முயன்று நடந்ததை அறிந்திருப்பாவோ? அல்லது சிவம் வீடு பொலிசாரின் கட்டுப்பாட்டில்தான் இருக்குமோ.

ஒரு வேளை சிவம் செத்திருந்தால்

சுவிசிற்கு வந்து கொலைக் குற்றம் வேறா. ஏசியிலும் பொல பொல என்று வேர்த்தது. மனம் அழுதது.

இரண்டு மூன்று வேலை செய்து வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி சிவத்திடம் சீட்டுக்காசு இருபதாயிரம் பிராங்குகளுக்கு மேல் கட்டியிருப்பான்.

எல்லாம் கனிந்து வரும்போல இருக்கும் போது பேரிடி போல எல்லாமே முடிந்துவிட்டது.

தவம் அண்ணை கூறியது ஞாபகம் வந்தது.

“இங்கை யாரையும் நம்பாதையும் சீலன்”.

முக்கியமா இலங்கைத் தமிழரை நம்பாதையும். பெரிய கள்ளர் உவங்கள்தான்.

சிவத்திற்கும் முற்பிறப்புக் கடனோ என மனம் அங்கலாய்த் தது. தூக்கம் பாதி துக்கம் பாதி ஏக்கம் மீதியாக சீலன் என்கிற மாரி முத்துவிற்கு மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது. தூக்கம் வர வில்லை. புரண்டு புரண்டு படுக்கிறான். அழுதழுது கண்ணீரும் வற்றி விட்டது.

“அம்மா வெள்ளவத்தை பெனான்டோ வீதியில் பிச்சை எடுக்கிறாள்”

“தவம் அங்கிள் சிவத்தை குத்திக் கொல்கிறார்”

“முரளி கலாவின் கழுத்தில் தாலி கட்டுகிறான்”

திடுக்கிட்டு விழிக்கிறான் சீலன். எல்லாம் கனவு

நடந்தது யாவுமே ஒரு கனவாக இருக்கக்கூடாதா? யாழ்ப்பாண பல்கலைக்கழகம், மருத்துவபீடம் பேராசிரியர் குமாரவேல், கலா, சாந்தன் கோப்பாய் இராணுவ புலனாய்வாளர்களால் இலக்கத் தகடற்ற வாகனத்தில் கடத்தப்பட்டது, இராணுவத்தினரின் சித்திர வதைகள், கோபமடைந்த அதிகாரியின் கையால் அடிபட்டு உடைந்த கையெலும்பு, பொலிஸ் விசாரணைகள்... தலைகீழா கட்டித் தொங்க விட்டது

மனித உரிமைக்குழுவினர் வந்து பார்வையிட்டமை

செஞ்சிலுவைச்சங்கம் உணவுப் பொதிகள் தந்தமை

பூசா பனாகொடை வெலிக்கடையென்று மாறி மாறி அடைக்கப் பட்டமை

நோ டேற் என்னும் கொடுமையான விளக்கமறியலில் கழிந்த 3 வருடங்கள்.

இறுதியாக சாட்சிகள் போதவில்லை நிதாஸ் என்று கூறி தீர்ப்பெழுதிய நீதிபதி

இனி இந்த நாட்டிலிருக்க முடியாதென்று எல்லா சொத்துக் களையும் ஈடு வைத்து ஏஜன்சியிடம் பணம்கட்டிய அந்த நாள்.

கொழும்பில் லொட்ஜில் ஆடு மாடுகள் போல் அடைபட்டு கிடந்த அந்த ஆறேழு மாதங்கள்

இறுதியாக கனவு நாடாகிய சுவிஸ் நோக்கிய பயணம் புறப்பட்ட அந்த அதிகாலை

தாய்நாட்டைவிட்டு மேலெழுந்த விமானம்.

அதன் பின் இங்கு வந்து பட்ட அவலங்கள்

சீலன் மாரிமுத்தாகிய உச்சக்கட்ட அவலம்

இதெல்லாம் கனவாயிருக்காதா

கண் விழித்து பார்க்கையில் மருத்துவபீடத்தில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் உயிர் இரசாயனவியல் பாடம் எடுத்துக் கொண்டிருக்கும் காட்சி விரியாதா? மனம் அங்கலாய்த்தது. பின் அழுதது.

இறுக்கி கிள்ளிப்பார்த்தான். வலித்தது.

இது நிஜந்தான். இதை தாங்கித்தான் ஆகவேண்டும். தாண்டித் தான் ஆகவேண்டும்.

எங்கோ யாழ்ப்பாணத்தில் இராமசாமிப் பரியாரியின் பீட்ட னாயும். பிரக்கராசி கந்தவடிவேலரின் பேரனாயும் போலிஸ்கார புத்மநாதனின் மகனாயும் பிறந்த தட மசீலனின் வாழ்க்கை இது.

எனக்கு விதிக்கப்பட்டது. இது எனது விதி.

சில நல்ல கிரகங்களும் சில பாவக்கிரகங்களும் என்னை இந்ம நிலைக்கு ஆளாக்கியுள்ளன.

கோப்பாய் பொலிஸ் அதிகாரிரி சமிந்தவாஸ் - பத்தில் வியாழன்.

நோ டேற் அடித்த நீதவான் இராகு.

நிதாஸ் தந்தவர் - கேது.

சிவம் ஏழரைச்சனியன்.

டேவிட் அங்கிள் எம்மைக்காக்கும் புதன்.

தவம் அண்ணை, பானு எல்லாம் நல்ல கிரகங்கள்.

சீலன் என்கிற மாரிமுத்து தலையை உதறிக் கொள்கிறான்.

இனி அவனது கண்கள் அழமாட்டாது.

இராமசாமிப்பரியாரியின் பூட்டனாயும்...

பிரக்கராசி கந்தவடிவேலரின் பேரனாயும்...

போலிஸ்கார பத்மநாதனின் மகனாயும் பிறந்த தர்மசீலனின் வாழ்க்கையை அவன்தான் வாழ்ந்தாக வேண்டும். வீழ்ந்தான் என்பது சிறுமையல்ல.

வீழ்ந்தவன் ஒவ்வொரு விழுகையின் அடுத்த கணமே எழுந்தான் என்பதே பெருமை. சீலனாக வீழ்ந்தவன் மாரிமுத்தாக எழுந்தான்.

போன் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

டேவிட் அங்கிளின் நம்பரை டயல் செய்தான். சீலனிடம் இப்போது பயம் இல்லை. கவலை இல்லை. பாசம் இல்லை. எழவேண்டும் என்ற வெறி மட்டுமே எஞ்சியிருந்தது.

போன் மணி அடிக்கத் தொடங்கியது.

தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு அவசரமாக தொலை பேசியை எடுத்தான் சீலன்.

“சீலன் நான் டேவிட் கதைக்கிறன்” என்று டேவிட் அங்கிளின்

குரல் மறுமுனையில் ஒலித்தது.

“என்ன அங்கிள் இப்பத்தானே போன் பண்ணிணீங்க. என்ன விசயம் சொல்லுங்கள்?” எனறு சீலன் கேட்க, “சீலன் இப்பத்தான் போன் பண்ணினான்...” என்று சொல்லிய டேவிட் அங்கிள் “சீலன்...” என்று அவரின் குரல் மெல்ல தளர்ந்தது.

“என்ன விசயம் அங்கிள். எதுவென்றாலும் பரவாயில்லை. சொல்லுங்கள்”என்றான் சீலன்.

“சீலன் என்னைக் குறை நினைக்காதை. நான் அனுப்பிறன் என்று சொன்ன இரண்டாயிரம் பிராங்கை என்னால் அனுப்ப முடியாமலிருக்கிறது... குறை நினைக்காதை சீலன்” என்று டேவிட் கவலையுடன் சொல்லுகிறார்.

பணம் கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த சீலனுக்கு இது ஏமாற்றந்தான். இருந்தாலும் டேவிட் அங்கிள் சுவிஸ்ஸில் நிறைய உதவி செய்திருக்கிறார். இப்பொழுது உதவி செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என நினைத்துக் கொண்ட சீலன் ஏன்? எதற்காக? என்று கேட்காமல் “பரவாயில்லை அங்கிள். நான் பார்க்கிறேன்” என்று சொல்லிவிட்டுத் தொலைபேசியை வைக் கிறான். என் கையே எனக்கு உதவி என்ற பழமொழியை தனக்காகப் புதுபித்து நெஞ்சில் பதித்தான்.

எங்கே போவது? யாரைப் பார்ப்பது? என்ற வினா மட்டும் சீலனின் மூளையில் ஓடிக் கொண்டிருந்தது. என்னடா இந்த வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டு வீதியில் நடந்து கொண்டிருந் தான். உடல் மட்டுந்தான் வீதியில் நடந்து கொண்டிருந்தது. உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. யாரிடம் போவது? என்ன செய்வது? என்று எதையும் சிந்திக்க முடியாது திக்கித் தவித்தான்.

இங்கேதானே நிறைய தமிழ்க்கடைகள் இருக்கு. அவர்களிடம் ஏதாவது வேலை கேட்டுப் பார்ப்போம் என்று யோசித்தவன் வேலை கேட்டு எல்லாக் கடைகளுக்கும் ஏறி இறங்கினான்.

“இப்ப ஆள் இருக்கு பிறகு பார்ப்போம்” என்ற ஒரே பதிலே எல்லோர் வாயிலும் இருந்து வந்தது. சீலன் ஏறி இறங்கிய கடைகளில் ஒரு கடையில் பணிபுரிந்த ஒருவர் “உங்களுக்கு வேலைதானே வேணும்” என்று சீலனிடம் கேட்க சீலனும் “ஓம் ஓம்” என்று கொஞ்சம் புன்னகை பூத்த முகத்துடன் தலை அசைத்தான்.

“தம்பி என்னுடைய பெயர் காந்தன்” என்று அவர் சீலனுக்கு

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். சீலனும் "எனது பெயர் சீலன்" என்று தன்னை அறிமுகப்படுத்தினான்.

"தம்பி எனக்குத் தெரிந்து ஒரு முதலாளி இருக்கிறார். தமிழ் ஆள்தான். அவர் நல்ல மனுசன். நான் உங்களை அவரிடம் அறிமுகப் படுத்துகிறன். அவர் உங்களுக்கு நிச்சயம் வேலை தருவார்" என்று சீலனிடம் காந்தன் கூறி அவரிடம் சீலனை அழைத்துச் சென்றான்."

"வணக்கம் அண்ணை" என்று காந்தன் வணக்கம் சொன்னான்.

"வணக்கம் தம்பி, பார்த்து கனநாள் ஆச்சுது. இந்தப் பக்கம் இப்ப வாறதே இல்லை. தொலைபேசி எடுக்கிறதும் இல்லை" என்று அந்த முதலாளி காந்தனிடம் கேட்கிறார்.

உடனே காந்தன் "எங்கையண்ணை நேரம் கிடைக்குது. தொலைபேசி எடுக்கவே நேரம் இல்லை. வேலை முடிஞ்சா நேர வீடு அப்படி வாழ்க்கை ஓடுது" என்று காந்தன் பதில் அளித்தான்.

அவர்களின் தனிப்பட்ட உரையாடல் முடிவுக்கு வந்தது. முதலாளி காந்தனிடம் "யார் இந்தத் தம்பி"என்று சீலனை பற்றி விசாரித்தார்.

"எனக்கு தெரிந்தவர்தான். பெயர் சீலன். இப்பதான் இவட இங்கை வந்தவர்.. இவருக்கு விசாவும் இல்லை. வேலையும் இல்லை. இவருக்கு தயவு செய்து வேலை கொடுங்களேன்" என்று காந்தன் முதலாளியிடம் கேட்டான். கொஞ்ச நேரம் முதலாளி சீலனை பாஉத்தபடி யோசித்தார். பிறகு "சரி நான் வேலை கொடுக்கிறன். என்ன வேலை என்றால் என் கடையில் சாமான்கள் அடுக்கும் வேலை. ஒவ்வொரு நாளும் காலை ஒன்பது மணியிலிருந்து இரவு பத்து மணிவரையும் வேலை. ஞாயிற்றுக்கிழமை மட்டுந்தான் லீவு. சம்பளம் அறுநூறு குரோன்கள். ஓகே என்றால் இன்றைக்கே வேலையில் சேருங்கள்" என்று முதலாளி சீலனிடம் கூறினார்.

சீலன் உடனே கடவுள் இப்பொழுதுதான் கண்ணைத் திறந்திருக்கிறார் என மனதில் நினைத்தபடி "சரி அண்ணை" என்று கூறிவிட்டு வேலையில் சேர்ந்தான். சீலன் வேலை செய்து கொண்டி ருக்கும் போதே "தம்பி நீங்கள் இப்ப எங்கை இருக்கிறீர்கள்" எனக் கேட்டார். "இப்போதைக்கு நிரந்தரமான ஒரு இடமும் கிடைக்க வில்லை. இனித்தான் இடம் பார்க்க வேணும்" எனப் பதில் அளித்தான் சீலன். சீலனின் நிலையை முதலாளி புரிந்து கொண்டார்.

"தம்பி இந்தக் கடைக்கு மேலே ஒரு அறை இருக்குது. அதில்

தங்குகிறீர்களா” என முதலாளி கேட்க சீலன் அதற்கச் சம்மதித்தான். “அங்கை ஒரு சின்ன அடுப்பு வைத்துச் சமைக்கலாம்” என்று சொல்லியவாறே கடையின் ஒரு மூலையிலிருந்த அலுமாரிக் குள்ளிருந்து அடுப்பு, பானை, சட்டி எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்தார்.

அவர் தொடர்ந்து “நான் கல்யாணம் செய்ய முதல் இந்த அறையிலைதான் இருந்தனான். இந்தச் சட்டி, பானை, அடுப்பு எல்லாம் நான் பாவித்தவை பரவாயில்லைத்தானே” என முதலாளி சீலனைக் கேட்க “ஒரு பிரச்சினையும் இல்லை. நன்றி அண்ணை” என்று வாங்கிக் கொண்டான்.

“சமையல் சாமான்கள் வாங்க காசு இருக்கா” எனக் கேட்க மௌனமாக நின்றான். அவன் நிலையைப் புரிந்து கொண்ட முதலாளி ஐம்பது குரோன்களை அவனிடம் கொடுத்து கடையள் பூட்ட முந்தி கெதியிலை போய் சமையல் சாமான்களை வாங்கிவரச் சொல்லு கிறார்.

முதல் நாள் வேலை என்றபடியால் சீலனிடம் “சாமான்களை வாங்கிக் கொண்டு போய் அறையில் சமையுங்கள். வேலைக்கு வர வேண்டாம். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. ஓய்வெடுங்கள். நாளண்டைக்கு தொடக்கம் வேலைக்கு வாருங்கள்” எனச் சொல்லி சீலனை சமையல் சாமான்களை வாங்க கடைக்கு அனுப்பி வைக்கிறார்.

சீலனும் விறுவிறுவென்று கடைக்குச் சென்று தனக்குத் தேவையான உணவு பொருட்களை வாங்கி வந்து சமைத்துவிட்டு சிறிது நேரம் கட்டிலில் படுத்து ஓங்வெடுத்தான்.

காந்தனுடன் கடை முதலாளியைச் சந்தித்த போது நேரம் மாலை நான்கு மணியிருக்கும். கட்டிலில் படுத்திருந்து சீலன் தன்னிலையை யோசிக்கத் தொடங்கினான். ஊரிலிருந்த தன்னை காலம் எங்கேயோ தூக்கி எறிந்ததை நினைத்து கவலைப்பட்டாலும் தனக்குள் சிரித்துக் கொண்டான். தான் இப்பொழுது டென்மாடீக் நாட்டில் ஏதூஒரு இடத்தில் ஒரு கடைக்கு மேலே உள்ள ஒரு சிறு அறையில் கட்டிலில் படுத்திருக்கிறான்.

உடலின் களைப்பு அவனைத் தூங்க வைத்துவிட்டது. அப்பொழுது கதவு தட்டும் சத்தம் கேட்டது. நித்திரைக் கலக்கத்தில் தான் எங்கேயிருப்பதென்று தெரியாத சீலன் தட்டுத்தடுமாறி எழுந்து

லைட்டைப் போட்டு கதவைத் திறந்தான். எதிரே கடை முதலாளி நின்றிருந்தார். கையில் இரண்டு பார்சல்கள் வைத்திருந்தார்.

"இந்தாருங்கள் சீலன். இந்தப் பார்சலில் இடியப்பமும் சம்பலும் இருக்கு. வீட்டுக்கு போன எனக்கு மனம் வரவில்லை. நீங்கள் சமைச்சியளோ சாப்பிட்டியளோ தெரியாது. அதுதான் இடியப்பம் கொண்டு வந்தனான்" என்று சொல்லிக் கொண்டு இடியப்பத்தை சீலனின் கையில் கொடுத்தார்.

"நன்றி" என்று கூறிவிட்டு வாங்கிய சீலன் தானும் சமைத்து விட்டதாகச் சொல்லுகிறான். "பரவாயில்லை அதை நாளைக்குச் சாப்பிடலாம். இப்ப இடியப்பத்தைச் சாப்பிடுங்கள்" என்று சொன்ன கடை முதலாளி இன்னொரு தட்டையான பெட்டியை சீலனின் கொடுத்தார்.

சீலன் அதை பிரித்துப் பார்த்த போது அதற்குள் ஒரு சுவர் கடிகாரம் இருந்தது. கடைக்கார முதலாளி சீலனிடமிருந்து கடி காரத்தை வாங்கி அதில் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்து நேரத்தை சரி செய்து கொடுத்தார்.

சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான். அப்பொழுது நேரம் இரவு பத்து மணி. கடை முதலாளி விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையாக விடிந்தது. அலைக்கழி விலிருந்தும் மன உளைச்சலிலிருந்தும் ஒரு ஆறுதல் கிடைத்தது போலிருந்தது. ஞாயிற்றுக்கிழமை ஓய்வு.

அம்ம, தங்கச்சி, பத்மகலா, சுவிசில் சந்தித்த தவத்தார், இராம லிங்கம், அவரின் மகள், ஆபிரிக்க இளைஞன், டேவிட் அங்கிள், பானு, தமிழகப் பேராசிரியை, யாழ்ப்பாண பேராசிரியர் என எல்லோருடைய நினைப்பும் அவனைச் சூழ்ந்து நின்றது.

எனது படிப்பு?. ஏக்கம் அவன் இதயத்தை ஓங்கி அறைந்தது. எங்கும் போகாமல் அறைக்குள்ளேயே இருந்தான். ஞாயிற்றுக்கிழமை யும் இரவைச் சந்தித்து விடிந்தது. விடிந்ததும் மீண்டும் சீலன் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு கடைக்குச் சென்றான். வேலை செய்யத் தொடங்கினான்.

கடை முதலாளி "வெளிநாட்டிலை போன் இல்லாமலே வாழ முடியாது. இதிலை பத்து குரோன்கள் இருக்குது. அவசரத் தேவைக்கு மட்டும் பாவியுங்கள்" எனக் கூறியபடியே சீலனிடம் ஒரு கைப்பேசி யையும் அதற்குரிய சிம் கார்டையும் கொடுத்தார்.

எதிலுமே பிடிப்பு இல்லாமலிருந்த சீலனுக்கு கடை முதலாளியின் உதவி பெரும் அறுதலாய் இருந்தது. குழம்பி இருந்த சீலனின் மனம் தெளிவடையத் தொடங்கியது.

இனி என்ன? என் வாழ்வில் வசந்தம் வருமா?. பலவாக அவன் மனம் எண்ணத் தொடங்கியது. குழம்பிய அவன் மனதில் வேலை கிடைத்தமையால் மனதுக்கு ஒரு ஆறுதல் கிடைத்தது.

அம்மாவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைக்க வேண்டும் என்ற ஆவலுடன் தாயாரின் தொலைபேசி இலக்கத்தைத் தேடினான். கிடைக்கவில்லை இலக்கம் தொலைந்துவிட்டது. கவலையுடன் படுக்கையில் கண்களை மூடியபடி யோசித்தான். தாயாரின் தொலைபேசி இலக்கம் அவன் மூடிய கண்களின் படலத் தில் தெரிந்தது.

கடை முதலாளி தந்த கைத்தொலைபேசியை எடுத்து தாயாருக்கு போன் பண்ணினான். மணிச்சத்தம் போய்க் கொண்டி ருந்தது யாருமே எடுக்கவில்லை. சில விநாடிகளின் தாமதம்கூட தாயாருடன் கதைக்க முடியாமல் போய்விடுமோ என்ற பரிதவிப்பை அவனுள் ஏற்படுத்தியது. மீண்டும் இலக்கங்களை அழுத்தினான்.

“கலோ” மறுமுனையில் தாயாரின் குரல். பாசத்துடன் தாலாட்டுப் பாடுவது போல் அவனுக்குக் கேட்டது. பல நாட்களின் பின் தாயாரின் குரலைக் கேட்டதால் சில விநாடிகள் எதுவுமே பேசாது உறைந்து நின்றான்.

“அம்மா நான் சீலன்தான் கதைக்கிறன்” மகனின் குரலைக் கேட்ட தாய் “சீலன்” தாயின் குரல் கரகரத்து.

தாய் தன்னை பாசத்துடன் பார்ப்பது போல அவன் உணர்ந் தான். கண்கள் கசிந்தன. “நீ எப்படி அப்பு இருக்கிறாய், எல்லாம் எங்கடை விதி, உன்னை அனுப்பிப் போட்டு நாங்கள் நிம்மதியில்லாம லிருக்கிறம்” என்று தாய் கவலைப்படத் தொடங்கினார்.

“அம்மா நீங்கள் கவலைப்படாதையுங்கோ நான் ஒரு குறையுமில்லாமல் இருக்கிறன். சந்தோசமாய் இருக்கிறன்” என சீலன் தாயாருக்கு பதில் அளிக்கிறான். தனக்கு இருக்கும் வேதனையைச் சொல்லித் தாயாரை நோகடிக்க சீலன் விரும்பவில்லை.

“அம்மா எப்படியம்மா இருக்கிறியள்? தங்கச்சி எப்படி இருக் கிறாள்?” என சீலன் கேட்கிறான்.

“நாங்கள் நல்ல சுகமாய் இருக்கிறம். எங்களுக்கென்ன நீ

அங்கை என்ன பாடுபடுகிறாயோ என்ற யோசனைதான் எப்பொழு தும் எங்களுக்கு. உனக்கு ஒரு பிரச்சினையும் இல்லைத்தானே? கனநாளாய் ரெலிபோன் நீ எடுக்கேல்லை. பயந்திட்டம். "இப்ப நீ எங்க யாரோட இருக்கிறாய்" என தாய் வாஞ்சையுடன் கேட்கிறாள்.

சுவிஸ்ஸிலிருந்து டென்மாவுக்கிற்கு வந்த விபரத்தை கவலையுடன் தட்டுத்தடுமாறிச் சொல்லிய சீலன், இப்பொழுது ஒரு தமிழருடைய கடையிலை வேலை கிடைத்திருப்பதையும் கடைக்கு மேலேயே கடை முதலாளி அறை தந்ததாகவும் சொல்லுகிறான்.

"எங்கை அப்பு சாப்பிடுகிறாய்" தாய் கேட்கிறாள்.

"அம்மா நான் சமைத்துத்தான் சாப்பிடுகிறன். நீங்கள் ஒன்றுக்கும் யோசியாதையுங்கோ. எனக்கு ஒரு குறையுமில்லை அம்மா. எனக்கு வேலைக்கு நேரமாகுது. பிறகு போன் பண்ணுறன்" என்று சொல்லிவிட்டு சீலன் கைத்தொலைபேசித் தொடஉபைத் துண்டிக்கிறான். தாயுடன் கதைத்ததால் சீலனின் மனதில் இருந்து பாரம் குறைந்தது போல் இருந்தது.

கடையும் அறையுமாக இருந்த சீலனுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வந்தது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. சீலன் கடைகளைச் சுற்றிப் பார்ப்பதற்காக வெளியே சென்றான். கடைகளைச் சற்றிப் பார்த்துத் தனக்குத் தேவையான சில பொருட்களையும் வாங்கினான்.

கடைகளைச் சுற்றிப் பார்த்ததனால் அவனுக்கு களைப்பு ஏற்பட்டது. கோப்பிக் கடையொன்றுக்குள் சென்ற அவன் கோப்பி யொன்றையும் கேக் துண்டொன்றையும் வாங்கி கண்ணாடி யன்ன லோடு இருந்த நாற்காலியில் உட்கார்ந்து யன்னலுக்கூடாக போவோர் வருவோரைப் பார்த்தபடி கோப்பியைக் குடித்துக் கொண்டும் கேக்கை கரண்டியால் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டு மிருந்தான்.

தமிழர்கள் சிலர் வீதியால் போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் சீலனை திரும்பிப் பார்த்தனர். பக்கத்தில் நடந்து கொண்டிருப்பவர்களுக்கு ஏதோ சொல்ல அவர்களும் திரும்பிப் பார்த்தனர். அவர்களை நோக்கிச் சீலன் கையசைக்க அவர்களும் அசைத்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தனர்.

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடுமென்பார்களே அது போல் சக தமிழனுக்கும் தசை ஆடுமென்பது போல் கையசைத்துச் சென்றனர். நேரம் கிட்டதட்ட இரவு 7.30 மணி. வாங்கிய

பொருட்களுடன் சீலன் கோப்பிக் கடையைவிட்டு வெளியே வந்து தனது அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

வீதியின் ஒரு திருப்பம் அதில் தெருவிளக்கின் வெளிச்சம் வீதியில் விழவில்லை. சீலனுக்கு எதிரே இருவர் வந்து கொண்டிருந் தனர். வந்த இருவரில் ஒருவன் சீலனைப் பிடித்துக் கொள்ள மற்றவன் சீலனின் சட்டைப்பையிலிருந்த பணத்தையும் கையில் இருந்த பொருட்களையும் பறித்தெடுத்தனர். அவர்களை சிறிதளவுதான் சீலன் தடுத்தான். ஆனால் அவனின் சூழ்நிலை அதற்குமேல் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

கவலையுடன் அறைக்குத் திரும்பினான் சீலன். சோஉந்து போய் பொத்தென்ற கட்டிலில் உட்கார்ந்தான். இரண்டு கைகளை யும் கட்டிலில் ஊன்றியபடியே மேலே பார்த்துக் கொண்டிருந்தான். கண்களைத் துடைத்தது கை. சீலனின் வாழ்க்கை இருண்டது போலிருந்தது. கேள்விக் குறியாகியது. வாழ்க்கையில் சின்னச் சின்னத் தடங்கல் கூட சூழ்நிலை காரணமாக சூனியமாகத் தோன்றும். அந்த நிலைதான் இப்பொழுது சீலனுக்கும்.

தன்னிடம் இருந்து போனையுமமல்லவா பறித்துவிட்டார் கள். இருந்த கொஞ்சப் பணத்தையும் பறித்து விட்டார்களே. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. சாப்பிட மனமில்லாமல் உடை மாற்ற மனமில்லாமல் போட்ட உடுப்புடனேயே படுத்து விட்டான்.

அடுத்த நாள் திங்கட்கிழமை.வழமை போல் வேலைக்கச் சென்றான். சீலனின் முகம் வழமை போல் இல்லை. சீலனைப் பார்த்த முதலாளி அதை உணர்ந்து கொண்டார். சீலனை அருகில் அழைத்து "என்ன உங்கள் முகம் வாடியிருக்குது. என்ன நடந்தது" எனக் கேட்க "நீங்கள் எனக்குத் தந்த போனையும் அம்மாவுக்கு அனுப்பவென்று வைத்திருந்த காசையும் வழிப்பறியர்கள் பறித்துவிட்டார்கள்" எனக் கவலையுடன் சொன்னதைக் கேட்டதும் முதலாளிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சீலனைச் சமாதானப்படுத்துவதற் காக "பரவாயில்லைச் சீலன். நடந்தது நடந்து போச்சுது. இனி என்ன செய்வது? கவலைப்படாமல் இருங்கள்" என அவனின் முதுகைத் தடவி சமாதானப்படுத்தினார்.

சீலனின் கைகள் வேலைகளைச் செய்தாலும் மனம் பலவற்றை யும் யோசிக்கத் தொடங்கியது. எனது அகதி விண்ணப்பத்தை

அங்கீகரிப்பார்களா நிராகரிப்பார்களா? நிரந்தர வதிவிட விசா கிடைக்குமா இல்லையா? எனது பெயரும் மாரிமுத்துவாகிவிட்டது. பாஸ்போர்ட்டும் இல்லை. சீலன் என்பதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை… எந்த ஒரு முடிவையும் காண இயலாதவாறு குழம்பிக் கொண்டிருந்தான் சீலன்.

பத்மகலாவைப் பற்றி நினைக்கத் தொடங்கினான். இப் பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள். கனடாவிலை இப் பொழுது என்ன நேரமாக இருக்கும். என சீலனின் அங்குமிங்குமாக அலைபாயத் தொடங்கியது.எனது கையறு நிலையை முதலாளிக்குச் சொல்லிப் பார்ப்போம். அவர் ஏதாவது உதவி செய்வார் என்று சீலன் நினைத்தான். வேலையில் சிறு இடைவேளை கிடைத்தது.

"அண்ணை எனக்கு ஒரு உதவி செய்வீர்களா" எனது தயங்கித் தயங்கி கேட்க" தயங்காமல் கேளுங்கள் சீலன். நான் என்ன செய்ய வேண்டும்" என கடை முதலாளி சீலனைக் கேட்டார்.

தான் வெளிநாட்டுக்கு வந்ததிலிருந்து இன்றுவரை தான் பட்ட கஸ்டங்களையும் தனது பெயர் மாற்றப்பட்டதையும் தான்தான் சீலன் என்பதற்கான எவ்விதமான ஆதாரமும் இல்லையென்று சொல்லிக் கவலப்பட்டவன் விசா எடுத்தால்தானே இங்கு இருக்க முடியும் எனச் சொல்லிக் கவலைப்பட்டான்.

"சீலன் கவலைப்படாதை. நானும் உன்னைப் போல எத்தனையோ பிரச்சினைகளையும் கஸ்டங்களையும் தாங்கித்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறன். கஸ்டங்களை எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் வாழ முடியாது. எதற்கும் தீர்வு உண்டு. இது ஒரு பெரிய விசயமும் இல்லை. விசா எடுத்துத் தாறது எனது பொறுப்பு" என்று சொன்ன கடை முதலாளி "எனக்குச் சொன்ன மாதிரி வேறு எவருக்குமே சொல்லாதை கண்டபடி வெளியிலை திரியாதை. காவல்துறை கண்ணிலை பட்டால் பெரிய பிரச்சினை யாகிவிடும் கவனம்" என சீலனுக்கு புத்தமதிகள் சொன்னார் கடை முதலாளி.

"சரி அண்ணை நான் கவனமாக இருக்கிறன்" என்று சொன்ன சீலனிடம் "சீலன் முதலிலை நீ உன் வீட்டுக்கு ரெலிபோன் செய்து பிறப்புச் சான்றிதழையும் அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியையும் நான் சொல்லும் முகவரிக்கு அனுப்பச் சொல்லு" என்று சொல்லிய கடை முதலாளி ஒரு முகவரியை எழுதிக் கொடுத்து கடை

ரெலிபோனிலேயே ரெலிபொன் செய்யச் சொல்ல சீலனும் உடனடியாகவே தாயாருக்கு ரெலிபோன் செய்கிறான்.

சில நாட்கள் சென்றன. வேலைக்குப் போன காலை நேரத்திலேயே "சீலன் ஒரு நல்ல செய்தி. பிறப்புச் சான்றிதழும், அடையாள அட்டை, புகைப்படப் பிரதியும் நான் சொன்ன முகவரிக்கு வந்துவிட்டது" என்று சொல்லியபடி ஒரு தபால் உறையக் கொடுக்கிறார். கடை முதலாளி செய்து கொண்டிருக்கும் உதவியை நினைத்து சீலன்" நன்றி அண்ணை" என நெகிழ்கிறான்.

"சீலன் இன்றைக்கு கடை பூட்டியதும் நானும் நீங்களும் ஒருவரைப் பார்க்கப் போக வேணும். இரவுச் சாப்பாட்டை எங்கடை வீட்டிலை சாப்பிடலாம்" என்கிறார்.

கடையைப் பூட்டியதும் கடை முதலாளி சீலனை ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறார். வீட்டு வாசலடிக்குப் போகும் போதே "இந்த வீட்லிருப்பவரின் பெயர் வேல்முருகன். இவர்தான் உனது கேஸை எழுதப் போகிறவர்" எனச் சொல்லியவாறு வீட்டு மணியை அழுத்துகிறார்.

கதவைத் திறந்த வேல்முருகன் இருவரையம் வரவேற்று உட்கார வைக்கிறார். கடை முதலாளி சீலனை வேல்முருகனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

***

டென்மார்க்கில் சீலனுக்குக் கடைமுதலாளி ஆனந்தர் பெரும் உதவியாக இருந்தார். அவர் கடையின் மேல்மாடியிலிருந்த சின்னஞ் சிறிய அறையே அவன் வசந்தமாளிகை. கடையில் வைக்க இட மில்லாத பல சாமான்கள் அந்த அறையில் அங்குமிங்கும் போடப் பட்டு இருந்தன. அதற்குட்தான் சீலனுடைய சமையல், படுக்கை யுடன் கூடிய வாழ்க்கை தொடர்ந்தது.

வீசா இல்லாததால் துணிந்து வெளியே நடமாடமுடிய வில்லை. இடையிடையே தலை கிண்கிண் என்று இடிக்கும். முதலாளியிடம் டிஸ்பிரின் வாங்கிப் போட்டுக்கொள்வான். யோசிப் பதாலோ அல்லது வீட்டுக்குள்ளே அடைபட்டுக்கிடப்பதாலோ இருக்கலாம் என்று நினைத்தான். கள்ளன் போல் பயந்து பயந்து திரிவதும் குட்டியறைக்குள் பெட்டிப்பாம்பாகக் கட்டுப்பட்டுக் கிடப்பதுமாக சீலனின் பயனுள்ள வாழ்நாட்கள் குரங்கு பிடுங்கி எறியும் பூந்தளிர்கள் போல் வீணாகி மடிந்தன.

முதலாளி ஆனந்தர் தரும் சிறுதொகை சம்பளப் பணத்தை சீலன் மிகச்சிக்கனமாகப் பயன்படுத்தினான். கடையில் தூக்கிற, பறிக்கிற, கூட்டுற, கழுவுற வேலைகளைத் தானே இழுத்துப்போட்டுச் செய்தான். டாக்டராக வரப்போகின்றேன் என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருங்கனவுகளுடன் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவர் களில் முதல்மாணவனாக விளங்கிய தர்மசீலன் இன்று படிப்பைப் பாதியிலே குழப்பி சிறுவயதிலேயே கடைவேலையே தஞ்சம் புகுந்த வன் போல் தொட்டாட்டு வேலைகளைச் செய்துகொண்டு நின்றான்.

இதுதானா என் வாழ்க்கை? இதற்கு மேல் என்னால் முன்னேற முடியாதா? சாண் ஏற முழம் சறுக்கிதே! என்று அவன் மனதில் எண்ணங்கள் விட்டு விட்டு அடிக்கும் மின்னல்கள் போல் வந்து ஒளிப்பதும் ஒடுங்குவதுமாக இருந்தன.

அகதிப் பதிவுக்கு வேண்டிய பத்திரங்கள் சீலன் கேட்டுக் கொண்டபடி தாயும் தங்கையும் அலுவலகர்களுக்கு அவசியமான போது காசைக் கொடுத்து உடனே வாங்கி அனுப்பியிருந்ததால் எல்லாம் வந்து கிடைத்துவிட்டன.

ஆனந்தர் தனக்குத் தெரிந்த நண்பர் மூலம் சீலனின் புதிய அகதி விண்ணப்பத்தைக் கொடுக்க ஒழுங்கு செய்திருந்தார். இன்று மாலை அவரிடம் சென்று கதைத்து எழுத்து வேலைகளை முடித்தால் நாளை வெளிநாட்டு அலுவலகத்துக்குச் சென்று அகதி விண்ணப் பத்தைக் கொடுக்கலாம். இது பற்றி சீலன் டேவிட் அங்கிளிடம் தொலைபேசியில் குறிப்பிட்டிருந்தான். ஆனால் அவர் அதைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

அவர் தருவதாகக் கூறிய பணத்தைத் தந்து உதவ முடிய வில்லையே என்ற கவலையாக இருக்கலாம் என்று அவன் நினைத் தான்.

பத்மகலாவுக்கு பல தடவை ரெலிபோன் எடுத்தும் அவளைச் சந்திக்க முடியவில்லை.

இன்று இறுதியாக ஒருக்கா எடுத்துப் பார்ப்போம் என்று நம்பர்களை அழுத்தினான். மறுமுனையில் தொலைபேசி ஒலிக்க சீலனின் மனதில் ஒரு புது இன்ப ஆரவாரத்தின் அதிர்வு இடித்தது.

கலாவின் வார்த்தைகள் வேண்டாவெறுப்பாக வந்தன. சீலன் பொறுமையாக அன்போடு கதைத்தான். அவன் சொல்வது எதையும் கலா கேட்கத் தயாராக இல்லாதவளாய் "சீலன்! உங்களை நீங்களே

காப்பாற்றத் தெரியாமல் நிற்கிறீங்கள்! பத்தாததுக்கு யாரோ ஒருவன் பெண்சாதியாம் பானு என்றவளோடை கூத்தடிச்சுத் திரிகிறீங்களாம்! நீங்கள் நீங்களாக இல்லை. வெளிநாடு வந்ததும் தலைகீழாக மாறி விட்டீங்கள். எங்கள் பழைய காதல் இனிச்சரிவரும் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் ஆதாளபாதாளத்துக்குள் விழுந்து விட்டீங்கள். நீங்களாவது இனி எழுந்திருப்பதாவது! தங்கச்சி, அம்மா என்று தலைக்கு மேலை பொறுப்புகளைச் சுமந்து கொண்டு நிக்கிறீங்கள். எனக்கு இணையான டாக்டராக வர இந்த ஜென்மத்தில் உங்களாலை முடியாது. தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ!"

சீலனின் பதிலை எதிர்பார்க்காமலே தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள் பத்மகலா.

அவன் ஒரு கணம் ஆடிப்போனான்.

ரெலிபோன் எடுக்கும் போது இருந்த இன்ப ஆரவாரம் இப்போ ஆழிப்பேரலையாகி அவன் நெஞ்சில் பேயாட்டம் ஆடியது. சீலனின் வாழ்க்கையை நிர்ணயிக்க இவள் யார்?

எப்பிடி... எப்படி ஆதாளபாதாளத்துக்குள் அவன் விழுந்து விட்டானாம்... இனி அவனுக்கு அஸ்தமனமாம்... இந்த ஜென்மத்தில் எழுந்திருக்கவே முடியாதாம்!

ஆருயிர்க் காதலியாக நித்தம் நித்தம் நெஞ்சில் உலா வந்த பத்மகலா சொல்கிறாள்.

சீலன் ஒரு கணம் ஆடிப்போனது உண்மைதான். ஆனால் மறுகணம் அவன் முதுகில் சுளீர் என்று ஒரு சாட்டையடி விழுந்தது போல சிலிர்த்து எழுந்தான்." விழாதே! எழுந்து நில்!" என்று வீடு அதிரக் கத்தினான்.

"சீலா! தர்மசீலா! எழுந்து நில்லடா!" என்று தனக்குத் தானே அறைகூவல் விடுத்தான்.

நெஞ்சுக்குள் ஆழிப்பேரலையாக அடித்த பத்மகலாவின் வாசகங்கள் புஸ்வாணங்களாக அடங்கி ஒழிந்திட ஒரு அமைதித்திரை இடையே விழுந்தது.

"ஒன்றும் இல்லாதவனா நான்?"

"அம்மா!" என்று உதடுகள் துடிக்க விம்மினான்.

பெற்றதாயைத் தலைக்குச் சுமை என்று சொல்கிறாளே! இவள் எல்லாம் படித்தவளா? தாய்ப்பாசம் என்றால் என்ன என்று அறியாத

முட்டாள். அற்ப வசதிகளைக் கண்டு மதிகலங்கிப்போய் நிற்கும் பைத்தியக்காரி.

அம்மாவும் தங்கச்சியும் எனக்குப் பொறுப்பாம்... உயிரடி! உயிருக்கு உயிர் தந்த உறவடி! பாசம் என்றால் என்ன என்று தெரியாத மடைச் சாம்பிராணியடி நீ!

சோகமும் கோபமும் அவனைச் சில நிமிடங்கள் எரிமலையாக்கி வேடிக்கை பார்த்தன. அகதியாகப் பதிஞ்சதாலை நான் அகதியா?பரந்துபட்ட உலகமெல்லாம் சமுத்திரம்போல் விரிந்து கிடக்கடி என் உறவுகள்.விழுந்தவனை மாடேறி உழக்குவது போல வார்த்தைகளால் என்னை மிதிக்கிறியா?

கேளடி பத்மகலா!

"என்றைக்கோ ஒரு நாள் உனக்கு முன் வந்து நெடுமால் போல நிமிர்ந்து நிற்பேன். இது என் சபதமடி பத்மகலா!"

சீலனின் மனம் ஆவேசம் தாங்க முடியாமல் தனக்குள்ளே பொங்கிக் கொதித்தது.

ஒன்றும் இல்லாதவனா நான்?

தாயே கலைவாணி! வித்தகியே! நீ எங்கே போய்விட்டாய்?

படித்த படிப்பெல்லாம் பாழாகிப் போய்விட்டதா?

ஆதாளபாதாளத்துக்குள் நான் விழுந்து விட்டேனாம். அவள் சொல்கிறாள்.

வாணி சரஸ்வதி தாயே! நீ என்ன சொல்லுகிறாய் அம்மா?

ஒரு வழியும் அறியாமல் நட்டாற்றில் நிற்பவன் போல் கதியற்று நிற்கின்றேன்.

வழிகாட்டு! நான் ஜெயிக்க வேண்டும். என் கடமைகளைச் செய்ய வேண்டும். என்னைத் தூக்கிவிடு! என்று கண்களில் நீர் பாய பராசக்தியை மன்றாடிக் கொண்டிருந்தவன், மனச்சோர்வும் பசிக் களைப்பும் கண்களை மொய்க்க தன்னையறியாமலே தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

"சீலன்! சீலன்!" என்றபடி கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த முதலாளி ஆனந்தர், அவன் அயர்ந்து தூங்குவது கண்டு "எழும்பு சீலன்! போகவெல்லே வேணும் எழும்பு!" என்று அவனைத் தட்டி எழுப்பினார்.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த சீலன் திடுக்கிட்டுப் பதறித் துடித்து விழித்தவன், ஆனந்தரைக் கண்டதும் அவசரமாக எழுந்தான்.

“கோவிக்காதேங்கோ முதலாளி! அவள் சொன்னதை என்னாலை தாங்க முடியவில்லை.” என்றான் கண்கலங்கியபடி.

“யார் சொன்னது என்ன சொன்னது?” என்று ஏதும் விளங்காமல் ஆனந்தர் அவனைப் பார்த்தார்.

சீலன், தொலைபேசி உரையாடலின் போது பத்மகலா போட்டுடைத்ததை விபரித்தான். அவன் நா சோகத்தில் வறண்டு போயிருந்தது. ஆனந்தர் அவனைத் தடவி ஆறுதல் வார்த்தைகள் பல கூறினார்.

“சீலா! மனிதர்கள் பறந்து கொண்டிருக்கிறார்கள். மனிதாபி மானத்தை மறந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்காங்கே நல்ல மனிதர்கள், உண்மை உறவுகள், உயிர் நண்பர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நீ தழம்பாதே! சூரியனுக்கு அஸ்தமனம் வந்தால் மறுநாள் காலை உதயமாகி இளங்கதிர்கள் வீசி எழுந்திருக்கப் போகிறான் என்பதுதான் உண்மை. இது போலத்தான் இன்று உனக்கு அப்பிடியும் இப்பிடியுமாகக் குழப்பங்கள் வந்து கொண்டிருக்கு. இது ஓடி மறைந்து விடியும் நாள் விரைவில் வரும்! முகத்தைக் கழுவிப் போட்டு வெளிக்கிட்டுக் கீழே வா! நான் கடைக்குள் நிக்கிறன்” என்று வெளியேற முனைந்தார்.

அப்போ சீலனின் கைத்தொலைபேசி ஒலித்தது.

மறுமுனையில் டேவிட் அங்கிள். சீலனுடன் டேவிட் அகதி விண்ணப்பம் பற்றிக் கதைத்தார். அவன் ஆனந்தரை நிற்கும்படி கைகாட்டிச் சைகை செய்தபடி “நீங்களே முதலாளியுடன் கதை யுங்கோ!” என்று தொலைபேசியை ஆனந்தரிடம் நீட்டினான். ஆனந்தர் தொலைபேசியை வாங்கிக் கதைத்தார்.

“நீங்கள் சொல்வது எனக்கும் சரி எனப்படுகிறது. சீலனுக்குச் சம்மதம் என்றால் ஓகே. படித்தபிள்ளை அவன் என்ரை கடையிலை தொட்டாட்டு வேலை செய்து வாழ்நாளைப் பாழடிக்கக் கூடாது. வேறு வழியில்லாமல் இவளவு நாளும் அவன் தங்கியிருக்க என்னால் முடிந்த உதவியைச் செய்தேன். இனி தன் முன்னேற்றத்துக்கு ஒரு வழி பிறக்க வேண்டும் என்றால் முயற்சி செய்து பார்க்கட்டுமே டேவிட்!”

“திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்று சொல்வார்கள். நீங்களும் தெய்வம் போல் சீலனுக்கு உதவி புரிகிறீங்கள்” என்று டேவிட் கூற சீச்... சீ அப்படி ஒன்றும் நான் பெரிதாகச் செய்யவில்லை. நீங்கள் தான் சுவீஸிலை மைக்டொனல்ஸ் வேலை எடுத்துக்

கொடுத்ததிலிருந்து தொடர்ந்து அவனுக்குக் கைகொடுத்து உதவி வருகிறீங்கள்!" என்று கூறி தொலைபேசியைத் திரும்பச் சீலனிடம் கொடுத்தார்.

"நன்றி அங்கிள்! இவளவு உதவி செய்கிறீங்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நீங்கள் அனுப்பும் நண்பருடன் நான் ஜேர்மனிக்குப் போகிறேன். அங்கு போன பிறகு உங்களுடன் கதைக்கிறேன்." என்று தொலைபேசி உரையாடலை முடித்து முதலாளி ஆனந்தரைப் பார்த்தான்.

அவர் சீலனின் அருகே வந்து அவனை ஆதரவோடு தடவிய படி,

"சீலா! நீ நல்லா இருப்பாய்! நான் எத்தனையோ மனிதர் களைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் உன்னை மாதிரி ஒருவனை நான் உன்னிடம் தான் பார்க்கிறேன். உன்னுடைய உயர்ந்த மனசு உன் கண்களுக்குள் தெரிகிறது. பெரிய ஆலமரமாய் நிமிர்ந்து நிழல் கொடுத்து நிற்பாய்! எதையும் உன்னால் எதிர்கொள்ள முடியும். விழுந்தாலும் மறுபொழுது வீராப்புடன் எழுந்து நிற்க உன்னால் முடியும்!

ஜேர்மனிக்குப் போ! அங்கே அகதியாகப் பதி!

அது ஒரு பெரிய தேசம். எங்கள் பிள்ளைகளெல்லாம் அங்கே படித்து நல்ல நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். நீ அங்கே போய்ப் பார்!

வந்த சில நாட்களிலே என் மனதில் இடம் பிடித்துவிட்டாய். டேவிட் உன்னிடம் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். சுவீஸ் தவம், அந்த பானு இவை எல்லாம் உன்மீது மிகுந்த அன்பு வைத்திருக் கிறார்கள். மக்னெற் மாதிரி பழகிற எல்லாரையும் உன்னிடம் ஈர்த்து நண்பர்களாக்கிக் கொள்கிறாய்!

சீலா! காதலி கை விரித்தாலும் நண்பர்கள் உனக்கு நிறையவே இருக்கின்றார்கள். உயிர் கொடுப்பார்கள். துணிந்து செல்!" என்று முதலாளி அவனுக்குத் தைரியமூட்டினார். கொடுக்கவேண்டிய சம்பளத்துடன் மேலும் ஐந்நூறை "ஆரம்பச் செலவுக்குத் தேவைப் படும் வைத்துக்கொள்!" என்று சீலனின் கைக்குள் வைத்தார் ஆனந்தர்.

டேவிட் கூறிய நேரத்துக்கு ஆனந்தரின் கடை வாசலில் கார் ஒன்று வந்து அமைதியாக நின்றது. காரிலிருந்து இறங்கிய விவேக் அவர் மனைவி வவா இருவரும் ஆனந்தருக்கு வணக்கம் சொல்ல

அவரும் பதிலுக்கு வணக்கம் வாங்கோ! என்று வரவேற்றார்.

சூறாவளியில் சிக்கி அடிபட்ட மாங்கன்று போல் வாடி வதங்கி நின்ற சீலனை இருவரும் கட்டியணைத்து தங்கள் அன்பை வெளிப்படுத்திய போது அவன் நெஞ்சுக்குள் கோடி நட்சத்திரங்கள் ஒன்றாகி ஒளிர்ந்ததை உணரமுடிந்தது. அவன் கண்களிலிருந்து கண்ணீர் அவனையறியாமலே வழிந்தது.

"யார் இவர்கள்? டேவிட் அங்கிளுக்கு வேண்டப் பட்டவர்கள். ஆனால் என்னை இவர்கள் முன்பின் அறியாதவர்கள். இப்படி ஒரு ஆதரவான அணைப்பு... அதுவும் இந்த வவா அன்ரி... அன்பொழுக அணைத்த விதம்... என் தாயோ இப்படி ஒரு உரு வத்தில்... அல்லது கலைவாணி அம்மையோ இவ்வேடத்தில்?" என்று அக்கணம் திகைத்துப்போய் நின்றான்.

சிறிய பை ஒன்றை முதலாளி ஆனந்தர் கொடுக்க, அதற்குள் தன் உடுப்புகளையும் சேட்டிபிக்கற்களையும் வைத்துக்கொண்டான். கை எடுத்து அவரை நன்றியுடன் கும்பிட்டான். அவன் கண்களில் கண்ணீர் படர்ந்தது.

ஆனந்தர் அவன் கையைப் பிடித்து "சுகமாகப் போட்டு வா! எல்லாம் வெற்றியாக அமையும்" என்று விடை கொடுத்தார். சீலனின் புதிய பயணம் ஆரம்பமாகியது.

"என்னிடம் பாஸ்போட் வீசா ஒன்றும் இல்லை. போடர் பொலிஸ் கேட்டால் என்ன செய்யிறது?"

தன் மனதுக்குள் இடித்துக் குத்திக் கொண்டிருந்த பயத்தை வெளியிட்டான்.

"பயப்படாதையும். அப்படி ஒரு பிரச்சனையும் வராது!

முப்பத்தைந்து வருடத்துக்கு முன் நான் இந்த போடரைக் கடந்த போது மறித்து பாஸ்போட்டில் ஜேர்மன் நாட்டுக்கு வருவது நிராகரிக்கப்பட்டு. அதாவது றிஜெக்ற் என்று சீல் அடித்து திரும்பிப் போ! என்று விரட்டிவிட்டார்கள்.

என்றாலும் எப்படியோ அங்கையிங்கை நுழைந்து ஜேர்மனிக் குள் அடிபதித்து இன்றைக்கு எப்படி இருக்கிறம் பார்!

எல்லாம் முயற்சி! பயத்தை வென்று, சோம்பலை விரட்டி, அயராது முயன்றால் வாழ்க்கையில் நினைத்ததைச் சாதிக்கமுடியும்" என்று விவேக் அங்கிள் சீலனுக்கு துணிவூட்டினார்.

மகன் சுந்தரன் காரை ஓட்ட பக்கத்தில் மகள் சிந்துஜா, பின்

சீற்றில் சீலன் நடுவில், இருபக்கமும் விவேக், வவா இருவரும் இருக்கக் கார் வேகமாக விரைந்தது.

கார் றேடியோ ஜேர்மன் பாடல்கள் இசைக்க, அண்ணனும் தங்கையும் ஜேர்மன் மொழியும் தமிழும் கலந்து ஏதோ கதைக்க, பின்னால் இருந்த மூவரும் இனி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்றது பற்றிய ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

என்ன இருந்தாலும் போடஉ பயம் சீலனின் உணர்வுகளைக் குழப்பிக் கொண்டே இருந்தது. போலீஸ் என்றாலே ஊரில் அவன் வாங்கிய அடியும் உதையும் பூசாக் காம்பில் அனுபவித்த சித்திரவதை களும் அவன் கண்முன்னே வந்து மிரட்டிக் குடல் நடுங்கச் செய்யும். இது போதாது என்று தலையிடியும் கிண்கிண் என்று மண்டைக்குள் குதிரை ஓட்டியது. இதனால் சீலன் ஒருசில வார்த்தைகளுக்கு மேல் பேசாது அமைதியுடன் இருந்தான்.

அவன் நிலையைப் புரிந்துகொண்ட விவேக் தானும் சோம்பலில் இருப்பது போன்று கண்ணை மூடுவதும் முழிப்பதுமாக இருந்தார். வவா இடையிடையே "காரின் வேகத்தைக் கொஞ்சம் குறை! மழை தூறிக்கொண்டிருக்கு, றோட்டு வழுக்கினாலும் வழுக்க லாம். கவனம்!" என்று எச்சரிப்பதும் தூங்குவதுமாக இருந்தார்.

மாரிக்குளிர் இன்னமும் ஐரோப்பா மண்ணை விட்டுப் போவதாக இல்லை என்பதைக் காலநிலை வெளிக்காட்டிக் கொண்டே இருந்தது. மகனுக்கு நித்திரைத்தூக்கம் வந்துவிடக் கூடாது என்று தகப்பன் இடையிடையே கதைகொடுத்துக் கொண்டி ருந்தார். மற்றவர்கள் சீலன்கூட கண்ணயர்ந்து தூங்கிவிட்டனர்.

கார்ப் பயணங்களில் நித்திரை தானாக வந்து தொத்திக் கொள்ளும். அலுப்புப் பஞ்சிபாராமல் வண்டி ஓட்டுவோரின் கவலை யீனங்களினால் தினந்தினம் எண்ணற்ற வீதிவிபத்துக்கள், மரணங்கள் ஏற்படுவதை மனதிற் கொண்டு விவேக் காரில் பயணம் செல்லும் போது தூக்கத்துக்கு இடங்கொடுப்பதில்லை. இன்றும் அப்படியே மகனோடு ஏதேதோ மனதிற்பட்டதைக் கதைத்துக் கொண்டிருந்தார்.

டென்மார்க் ஜேர்மன் எல்லையில் போலீஸ் வாடையே இருக்கவில்லை. ஐரோப்பா என்று கூட்டு ஒப்பந்தங்கள் வந்த பின் போடர்கள் திறந்திருப்பது எவ்வளவு நன்மையாகிவிட்டது என்று மனதில் நினைத்துக் கொண்டார் விவேக். மெதுவாகச் செல்ல வேண்டிய இடங்களில் மெதுவாகச் சென்று மீண்டும் வழக்கமான

வேகத்தில் காரைச் செலுத்தினான் சுந்தரன். பிரயாணம் தொடர்ந்தது.

ஜேர்மன் நாட்டுக்குள் வந்து ஓரளவு தூரம் ஓடியபின் விரைவு நெடுஞ்சாலையில் இருந்த எல்லா வசதிகளுடனும் கூடிய அதாவது இருக்கலாம், கழுவலாம், குளிக்கலாம், குடிக்கலாம், சாப்பிடலாம் என்று பலதும் உள்ள பெற்றோல் நிலையத்தில் கார் வந்து நின்றது.

"குட்டி! டீசல் அடிக்க வேணுமா?" என்று சோம்பல் முறித்துக்கொண்டே அம்மா மகனைச் செல்லம் பொழியக் கேட்டா.

"தேவையில்லை அம்மா. முன் கண்ணாடி ஊத்தையாக் கிடக்கு கழுவப்போறன். புறொஸ் சுற்ஸ்(தண்ணீரை உறையவிடாமற் தடுக்கும் திரவம்) கலந்து தண்ணி விடவேணும் வாங்கிக்கொண்டு வாறன். பாத்றும், கன்ரீன் போறவை போட்டு வாங்கோ."

"நீ வரேல்லையோ? சூடாக் கோப்பியும் குடிச்சு ஏதாவது கடிப்பம்"

"நீங்க போங்கோ! நான் இந்த வேலைகளை முடிச்சுக்கொண்டு வாறன்" என்று கூறி சுந்தரன் பெற்றோல்செற் கடைக்குச் சென்றான்.

பாத்றூம் அந்த நேரத்திலும் சுத்தம் குன்றாது பளபளவென்று நல் வாசனைகள் வீசிக்கொண்டிருந்தது. காசு போடத்தான் வேணும். சும்மா போய் இருக்கேலாது. என்றாலும் இப்படி ஒன்று இடை யிடையே இல்லாட்டி எவ்வளவு கஸ்ரம்? வெள்ளைக்காரன் எல்லாப் பக்கத்திலும் சிந்திக்கப் பழகியிருக்கிறான். நாங்கள் திருக்குறளைப் படிச்சிட்டு பக்குவமா மூடிவைத்திடுவோம். இவன் திருவள்ளுவரிடம் றெயினிங் எடுத்துவிட்டு அதை வாழ்க்கையிலும் பயன்படுத்தத் தெரிந்து கொண்டான் போலக் கிடக்கு. வீட்டை வீடாக, றோட்டை றோட்டாக, காட்டைக் காடாக பேணிப் பாதுகாக்கும் விந்தை ஜேர்மன் நாட்டில் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பளிச்சென்று தெரிய, இவற்றை எங்கள் நாட்டிலும் நடைமுறைப்படுத்தினால் வாழ்க்கை எவ்வளவு இலகுவாயும் மகிழ்ச்சி ஊட்டுவதாயும் அமையும் என்று நினைத்துக் கொண்டான் சீலன்.

பாத்றூம் அலுவல்கள் முடித்து, கோப்பிக்கடைக்குச் சென்று, நாவறட்சியைப் போக்கிக் கொண்டு, வாய்க்கும் கொறிக்க அதை இதை வாங்கிச் சுவைத்துக் கொண்டிருக்க, சுந்தரம் கார் அலுவல் களை முடித்துக் கொண்டு உள்ளே வந்தான். அவனும் தனக்குப், பிடித்ததை வாங்கிக் கொண்டான்.

சீலனுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. போடர் தாண்டும்

போது தான் நித்திரையாக இருந்ததை அவனால் நம்பவே முடிய வில்லை. இருந்த தலையிடியும் காணாமற் போய் விட, “எப்படி என்னால் அமைதியாகத் தூங்க முடிந்தது?” அவனுக்கே அது பெரும் அதிசயமாக இருந்தது.

அந்தச் சாப்பாட்டுக்கடைக்குள் இருந்தபடி அவன் கண்கள் விவேக் குடும்பத்தை சுற்றி வந்தன. “இவர்கள் யார்? கடவுள் வடிவில் என்னை இந்த ஜேர்மன் நாட்டில் கொண்டு வந்து சேர்த்திருக் கிறார்கள்!” என்று நெஞ்சமெல்லாம் நன்றி மழை பெருக்கெடுத்து ஓட, உணர்ச்சிகளை அடக்கமுடியாது ஆனந்தக்கண்ணீர் பொங்க நின்றான்.

மீண்டும் பயணம் தொடர்ந்தது.

“அலுப்பாக இருக்கு. படுக்கப் போகிறேன் நீ ஓடுறியா?” என்று தங்கை சிந்துஜாவை சுந்தரன் கேட்க அவள் சம்மதித்து காரை இயக்கினாள். விவேக் முன்னால் ஏறிக்கொண்டார். சுந்தரன் படுக்க வசதியாகப் பின் சீற்றிற்கு மாறி உட்கார்ந்தான்.

கார் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

அப்பா முன்போலவே ஏதோ கதைத்துக் கொண்டிருக்க வேணும் என்பதற்காக “ஆனந்தம்” என்ற திரைப்படத்தில் அவர் இரசித்து அனுபவித்த சகோதர பாசத்தின் உருக்கமான காட்சிகளைப் பற்றி விபரித்துக் கொண்டிருந்தார். ஜேர்மனில் பிள்கைகள் இருவரும் பிறந்து வளர்ந்தாலும் தாய்மொழி தமிழை ஒழுங்காகப் படித்திருக் கிறார்கள் என்பது சீலனுக்குப் புரிந்தது. சுந்தரனும் சிந்துஜாவும் எந்தத் தடங்கலும் இல்லாது தமிழ் மொழியில் உரையாடுவது கண்டு அவன் நெஞ்சம் குளிர்ந்தது.

அகண்ட நீண்ட அந்தப் பெருந்தெருவில் கார் நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது. எத்தனை விதமான கார்கள், லாறிகள் இந்த நேரத்தில் கூட எங்கெங்கோ விரைந்தோடிக்கொண்டிருந்தன. வீதிகள் அமைக்கப்பட்டமுறை ஒன்றை வைத்துக்கொண்டே ஜேர்மன் நாட்டைப் பற்றி தான் படித்தது, கேள்விப்பட்டது எல்லாமே வியந்து பாராட்டத்தக்க உண்மைகளாக அவன் மனதுக்குப்பட்டன.

வவா அன்ரி சீலனுக்கு அவன் முன்னேற்றத்துக்குரிய வழிகளை யும் ஜேர்மன் நாட்டு நடப்புகளையும் சொல்லிக் கொண்டிருந்தா. தடங்கல் ஏதும் ஏற்படாததால் டென்மார்க்கிலிருந்து புறப்பட்டுச் சுமார் ஏழு மணி நேரங்களில் வீட்டு வாசலில் வந்து கார் நின்றது.

இரவு இரண்டு மணி.

அவர்கள் வீட்டை நோக்கி வர, தானியங்கி விளக்குகள் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சின. அழகிய புதிய வீடு. படிகளில் ஏறிக் கதவைத்திறக்க உள் விறாந்தையின் கூரை விளக்குகள் நட்சத்திரங்கள் போல் ஒளி உமிழ்ந்தன.

இலங்கைத் தமிழர்களான இவர்கள் ஜேர்மனில் இப்படி ஒரு அழகு மாளிகையில் வாழ்வது சீலனுக்கு அந்தப் பொழுதில் எண்ணிப்பார்க்க முடியாத அதிசயமாக இருந்தது.

அது ஒன்றும் அதிசயமில்லை. மிகக் கஸ்ரப்பட்டு உழைத்த பணத்திலும் மிகுதி வங்கியில் கடனெடுத்தும் கட்டப்பட்டிருக்கிறது என்பதைப் போகப்போக சீலனும் புரிந்து கொள்வான். வீடு என்றால் எல்லாருக்கும் ஆசையாகத்தான் இருக்கும். ஜேர்மனில் பல கிராமங் களில் பழைய பெரிய வீடுகள் மலிவாக வாங்கக்கூடியதாகவும் இருக்கின்றது. அவரவர் வசதியைப் பொறுத்து புது வீடோ பழைய வீடோ வாங்கி வசதியாக இருப்பதற்கு வங்கிகள் கடன்கொடுத்து உதவவும் முன்வருகின்றன. பிறகென்ன! ஆனால் ஒழுங்கான வேலை ஒன்று இருக்க வேண்டும். இதெல்லம் சீலனுக்கு நாங்கள் சொல்லத் தேவையில்லை. சில நாட்கள் கழிய எல்லாவற்றையும் அவனே அறிந்து கொள்வான். ஆனாலும் அவனுக்கு இப்ப வேண்டியது வீடல்ல. முதலில் இந்தநாட்டு விசா, தங்க ஒரு இடம், கடன்அடைக்க ஒரு வேலை. வேறொரு எண்ணமும் இப்போ சீலனின் மனதில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

வீட்டுக்கு வந்து முக்கிய வேலைகளை மட்டும் முடித்துவிட்டு பிரயாண அசதி தலைதூக்க எல்லாரும் படுக்கைக்குச் செல்லத் தயாரானார்கள்.

விவேக்கும் வவாவும் சீலன் தங்குவதற்கு விருந்தினர் அறையைத் தயாராக்கி வசதிகள் செய்து கொடுத்தனர். “வெட்கப் படாமல் என்ன வேணும் என்றாலும் கேளும். நாளைக்கு விசாவுக் குரிய அலுவல்களைப் பார்ப்பம். ஒண்டுக்கும் யோசிக்காதையும். நல்லாப் படுத்துத் தூங்கும்.” என்று மனம் நிறைந்த வார்த்தைகளால் அவனை அன்போடு உபசரித்துவிட்டு அவர்கள் தங்கள் அறைக்குச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் வீட்டில் அமைதி குடிகொண்டது. சீலனுக்கு பஞ்சி அலுப்பு இருந்த போதும் நித்திரை வராமல் வெகுநேரம்

உழன்றுகொண்டிருந்தான். அவன் நெஞ்சில் நினைவு ஈட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து குத்திச் சென்றன.

சுவிஸில் செய்வதறியாது நின்ற தனக்கு, ஆறுதல் வார்த்தைகள் கூறி வஞ்சகமின்றப் பழகிய மக்டோனல்ஸ் பானுவையும் தன்னையும் இணைத்து தவறான தொடர்பு இருக்கென்று பத்மகலா ரெலிபோனில் கூறிய விசம் கலந்த வார்த்தைகள் முதலில் அவன் மனதைத் தாக்கிக் குத்திச் சென்றன.

தொடர்ந்து அவனுக்குத் தாயின் நினைவு வந்தது. "அம்மா என்னை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கின்றா. கொழும்பில் தங்கி நிற்கும் அவர்களுக்கு வீட்டு வாடகைக்கும் செலவுக்கும் பணம் அனுப்புவதாச் சொன்னனான். இரண்டு மாதங்களாகிவிட்டன. இன்னும் ஒருகாசும் அனுப்பவில்லை. என்ன கஸ்ரப்படுகிறாவோ தெரியவில்லை" என்ற எண்ணம் வந்து அவனைப் பெரும் சங்கடத்துக்குள்ளாக்கியது.

தொடர்ந்து தங்கையின் முறிந்தகால் இப்ப எப்படி இருக்கோ? என்ற யோசனை எழுந்தது. அவனைச் சமாதானப்படுத்த சிரித்துச் சிரித்து அவள் ரெலிபோனில் சுகமாக இருக்கிறன் என்றவள்... உண்மையாக எப்படி இருக்கோ? பாவம் தங்கச்சி!" என்ற எண்ணமும் வந்து நெஞ்சில் பாசத்தின் வலியை ஏற்படுத்தியது.

அடுத்து வந்த நினைவு அவன் நித்திரையையே சின்னாபின்னமாகச் சிதற வைத்து விட்டது. சுவீஸ் பேத்டேப் பாட்டியில் நடந்த கத்திக்குத்து... "அவன் செத்திருப்பானா? செத்தால் குத்திய சிவம் பிடிபட்டிருப்பானா?... இல்லாட்டி என்னையும் அதற்குள் சேர்த்து கொலை வழக்கில் தேடுவார்களா?" என்று அடுத்தடுத்து இடி மாதிரி நெஞ்சுக்குள் எழுந்த கேள்விகள் அவனைப் படுக்கவிடாமல் எழுந்திருந்து மண்டையைச் சொறிய வைத்தன. இனி எப்படியெல்லாம் பிரச்சனைகள் வளரப்போகின்றனவோ என்ற குழப்பத்துடன் கட்டிலில் சாய்ந்தபடி கண்ணை மூடி, கடவுளே இது என்ன சோதனை? என்று மனம் தவிக்க யோசித்துக் கொண்டிருந்தவன் தன்னைச் சுத்திச் சூனியமாக விரிந்து கிடக்கும் இருளைப் போக்க சிறு கைவிளக்குக் கிடைக்காதா? என்று ஏங்கினான். எப்போ துங்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை. அவன் யோசனைகளை இடித்து வீழ்த்திவிட்டு அவனைத் தன் சிறைக்குள் மூடிக்கொண்டது தூக்கம்...

***

மறுநாள் விடிந்தது. ஆனால் வெளியே சூரியனின் ஆதிக்கம் இருக்கவில்லை. நீலவானம் பளிச்சென்று இருக்க, வெண்முகில்கள் ஆங்காங்கே நீந்திக் கொண்டிருந்தன. பகலவன் வரப்போகின்றான் என்ற மழையற்ற காலநிலை தெரிந்தது.

காலநிலை என்பது ஒரு முக்கிய அம்சம் வகிக்கின்றது. செய்தி அறிக்கையுடன் காலநிலை பற்றியும் அறிவிக்கப்படும். இதனைப் பலரும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்வார்கள். பனிகாலங்களில் சறுக்கும் அபாயங்கள். வீதி விபத்துக்களும் அதிகமாக இருக்கும். கார்க் கடைகளுக்கும் கறாஜ் வைத்துக் கார் திருத்துபவர்களுக்கும் வருமானம் பெருகும். நடக்கும்போதுகூட பாதையில் உறைந் திருக்கும் பனி விழப்போகிறோம் என்று நாம் உணர முன்பே எம்மை வழுக்கி வீழ்த்திவிடும். இதனால் எலும்பு முறிவுதறிவு டாக்டர்களிடம் கூட்டம்கூடும். இன்னமும் பனிகாலம் என்பதால் திடீர் வசதி வந்த மனிதர்கள் சிலர் திடீர்திடீர் என்று மனதை மாற்றிக்கொள்வது போல ஐரோப்பாக் காலநிலை தலைகிழாக மாறலாம். சரி இது கிடக்கட்டும். நாங்கள் விவேக் வீட்டில் சீலன் படுத்தானா? விடிய எழுந்தானா? அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

இன்று விவேக்கும் வவாவும் சீலனுக்குரிய முக்கிய வேலை களைக் கவனிப்பதற்காக நேரத்தை ஒதுக்கியிருந்தார்கள்.

காலைச்சாப்பாடு அந்த மாதிரி. புறோச்சின் என்ற ஜேர்மன் பேக்கரிகளில் காலை நேரத்தில் குவிந்து கிடக்கும் பணிஸ் உடன் பொரித்த முட்டையும் சாப்பிட்டு பால்ரீயும் குடித்த போது சீலனுக்கிருந்த மனக்கவலைகள் தற்காலிமாக மறைந்து போக வயிறு மகிழ்ச்சியில் ஊஞ்சலாடியது. தலை மட்டும் கொஞ்சம் இடித்துக் கொண்டிருந்தது. இதனை வவா அன்ரியிடம் சொன்னான். நித்திரை குறைவு என்றாதாலை தலைஇடிக்குது போலை என்று வீட்டில் இருந்த தலையிடிக்குளிசை ஒன்றையும் விழுங்கத் தண்ணீரும் கொடுத்தா வவா.

டேவிட்க்கு விவேக் ரெலிபோன் எடுத்து சீலனை ஜேர்மனிக் குக் கூட்டி வந்த விடயத்தை விபரித்துக் கொண்டே ரீயையும் குடித் தார். இவர்களுக்குள் எப்படி அறிமுகம் என்று நீங்கள் அறிந்திருப்பீர் களோ தெரியாது. பள்ளிக்கூடங்களில் ஒன்றாகப் படித்திருக்கலாம். ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடத்துக்கு வாறதுக்குப் போட்டி போட்டவர்களாக இருக்கலாம் அல்லது ஒரு இடத்திலை வேலை

பார்த்திருக்கலாம். எப்பிடியோ சந்தித்து நல்ல நம்பிக்கையான நண்பர்களாக நீண்டகாலமாகத் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை.

நண்பர்கள் என்னும் போது அதுவும் வெளிநாடுகளில் சந்தர்ப்ப வசமாகப் பழகிய நட்புக்களில் எந்த அளவுக்கு அன்பு பாசம் இணைந்து இருக்கிறது என்பது சரியாகச் சொல்ல முடியாது. இருக்கிற மாதிரியும் இருக்கும் இல்லாத மாதிரியும் இருக்கும்.

ஒருவனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கைக்குரிய ஒரு நண்பனாவது (உயிர் கொடுக்க வேண்டாம்) கண்ணீர் துடைக்க இருந்தால் போதும் வாழ்க்கை வாழ்ந்ததாக இருக்கும். விவேக் ரெலிபோன் கதைத்து முடித்து அதைச் சீலனிடம் கொடுத்தார். அவன் மகிழ்ச்சியும் நன்றியும் பொங்க டேவிட்டுடன் கதைத்தான்.

“சீலன் நீ வந்திருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலங்கொடுத்து தாங்கி வைத்திருக்கும் சொர்க்கபூமி. சட்டமும் ஒழுங்கும் கட்டப்பாடும் நிறைந்த தேசம். எங்கள் பிள்ளைகள் படித்து முன்னேற பாரபட்சமின்றிக் கைகொடுத்து உதவுகிறது. பரந்த மனம் படைத்த வசதிகள் வாய்ப்புக்கள் கொண்ட நாடு. இனி உன் ஆட்டத்தை நீ ஆடு! கொடி கட்டிப் பறப்பாய் தர்மசீலா! உனக்கு மற்றவர்கள் விட்ட சவால்கள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று பறந்தோடும்!... சரியா?... விவேக் உனக்கு வேண்டிய உதவி எல்லாம் செய்து தருவார் ஒன்றுக்கும் யோசிக்காதே! பிறகு கதைப்போம்.”

ரெலிபோன் உரையாடலின் பின் சீலனின் உள்ளம் உற்சாகத்தால் நிறைந்தது. முதலில் சீலனுக்கு வீட்டுப்பதிவு செய்ய வேண்டும். ஜேர்மன் நாட்டுக்கு யார் வந்தாலும் அவர் எங்கு தங்கி இருக்கின்றார் என்ற பதிவு (அன்மெல்டுங்) செய்ய வேண்டும்.

வவாவும் விவேக்கும் தங்களுக்கு நீண்டகாலப் பழக்கமான ஜேர்மனியர்கள் வீட்டின் மேல் மாடியில் சீலன் வாடைக்கு இருக்க ஒழுங்கு செய்து அதற்கான பதிவுப்பத்திரங்கள் அரசஅலுவலகத்தில் எடுத்து வீட்டுப் பதிவு செய்தாகிவிட்டது.

அடுத்து மிக முக்கிய விடயம் அகதி விண்ணப்பம் வெளிநாட்டு அலுவலகத்தில் கொடுக்கவேண்டும். பெரிய புதிய கட்டிடத்தில் அந்த அலுவலகம் இருந்தது. அந்தக்காலத்தில் 1979 களில் அந்த அலுவலகத்தை நினைத்தாலே நடுநடுங்கும். தகுந்த வீசா

இல்லாமல் இருந்தவடகளை படுத்திருந்த உடுப்போடு அள்ளிக் கொண்டு சென்று... பிறகு தகுந்த உடுப்பு அணிவித்து... விமானத் தில் ஏற்றி அவரவர் சொந்தநாட்டுக்குத் திருப்பி அனுப்பிவிடும் அதிகாரம் அவர்களுக்கு இருந்தது. இப்படி நிகழ்ந்த சம்பவங்களைக் கண்கூடாகக் கண்டவர்களுக்குப் பயம் வரத்தானே செய்யும்!

இப்போ காலம் மாறி நம்மவர்களில் அதிகமானோர் பிரஜா உரிமை எடுத்துவிட்டார்கள். வெளிநாட்டலுவலகம் ஊரிலிருந்து உறவினர்களை ஸ்பொன்சரில் அழைப்பது போன்ற அலுவல்களுக்கு மட்டுமே என்ற அளவில் இருந்தது.

டொல்மேச்சர் நடா விவேக்கின் நெருங்கிய நண்பர். அவரிடம் சீலனின் நிலைமையைக் கூறி ஆலோசித்தபோது தான் வெளிநாட்டலுவலகத்துக்குச் சீலனை கூட்டிச் சென்று அகதி விண்ணப்பம் செய்ய முன்வந்தார். சீலனிடம் கைவசம் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டு வரும்படியும் சொன்னார். அவர் இத்தகைய விடயங்களை ஆரம்பத்திலே இருந்து செய்து வருவதால் நல்ல அனுபவசாலியாகவும் அத்துடன் உதவிசெய்யும் தாராள மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார்.

அன்றே விவேக் வீட்டுக்கு வந்து சீலனைச் சந்தித்துப் பேசினார். டாக்டராக வரமுடியும் என்ற நம்பிக்கையுடன் பல்கலைக் கழகம் சென்றவன் விதியின் சதியால் நட்டாற்றில் கப்பல் கவிண்டு ஆதரவற்று தவிப்பவன் போல் மருத்துவப்படிப்புக் குழம்பி காதல் வாழ்க்கையும் கேள்விக்குறியாய் நிற்கும் சீலனின் கதையைக் கேட்க டொல்மெச்சர் நடாவுக்கும் கண்கள் கலங்கியன.

இப்படி எத்தனை இலட்சம் இளைஞர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கித் துன்பச்சேற்றுக்குள் புதைத்துச் சென்றிருக் கின்றது. போர் என்னும் பயங்கரச்சூறாவளி என்று வேதனைப்படு வதைத் தவிர நாம் வேறு என்ன செய்யமுடியும்? அன்பையும் சமாதானத்தையும் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளுக்குப் போதிப்பதன் மூலம் போர்கள் உருவாவதை ஓரளவு குறைக்க முடியுமே தவிர போர்களைத் தடுக்க முழுதான வழிகள் கிடைக்குமா?

வெளிநாட்டுஅலுவலகத்தில் சீலன் நடாவுடன் சென்று அகதிக்குரிய விண்ணப்பம் செய்துவிட்டான். அவன் எதிர்பார்த்துப் பயந்தது போல் ஏதும் நடக்கவில்லை. தமிழ்மக்களுக்கு இலங்கையில் பிரச்சனை என்றது பல்வேறு வடிவங்களில் அந்த அலுவலகத்தில்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பதியப்பட்டிருக்கு. பிறகென்ன... சீலனுக்குத் தற்காலிக வீசாக் கொடுத்து ஜேர்மன் என்ற பெரிய தேசம் அவன் இம்மண்ணில் வாழ இடந்தந்தது.

இந்த மகிழ்ச்சியான செய்தியை கொழும்பில் தங்கியிருந்த அம்மாவுக்கும் தங்கை ரேணுகாவுக்கும் தெரிவித்துவிட்டான். டேவிட் டென்மார்க் ஆனந்தர், சுவீஸ் தவம், பானு ஆகியோருக்கும் சொல்லிவிட்டான். சீலனுக்கு விசா கிடைத்தது எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் தவம் சொன்ன பத்மகலா பற்றிய அந்தத் தகவல் அவனைக் கொஞ்சம் நோகடிக்கத்தான் செய்தது. என்ன செய்வது காதல் என்றால் இன்பம் பொங்கும் அழகான தாமரைக்குளம் என்று இளைஞர்கள் நினைக்கலாம். அதற்குள் இறங்கியவர்களுக்குத்தான் தெரியும் அது பலருக்கு உயிர் கொல்லும் ஆழங்காண முடியாத ஆழியாகவும் மாறிவிடலாம் என்று.

இனிமேல் இந்தச் சிந்தனை வேண்டாம் என்று ஏற்கனவே சீலன் பத்மகலாவின் காதலை இதயத்தின் ஒரு மூலைக்குள் தள்ளி மூடி வைத்துவிட்டான். இனி இதற்குக் காலமே பதில் சொல்லும் என்று தன் கடமைகளைச் செய்வதில் கவனத்தைத் திருப்பினான்.

சீலனின் மனம் ஓரளவு பயம் குறைந்து மீண்டும் தன் சுய நிலைக்குத் திரும்பியிருந்தது. மனத்துணிவும் அறிவும் சீலனிடம் இருந்தபோதும் அன்னிய நாட்டில் மொழிதெரியாமல் வீசா தங்க வீடு ஏதும் இல்லாததால் அவன் மனம் பெரும் தவிப்பில் துடித்துக் கொண்டிருந்து. விசா கிடைத்ததும் அவன் வேலை தேடத்தொடங் கினான்.

பனிகாலம் விடைபெற்றுச் செல்ல கோடைகாலத்தின் ஆரம்பம் பூ மொட்டுக்களாக தலைகாட்டின. வவா அன்ரி தான் வேலை செய்யும் மனநோயளாஉ பராமரிப்பு இல்லத்தில் தோட்ட வேலைக்கு ஆள்தேவை என்று எழுதிப்போட்டிருக்கினம் என்று கூறி சீலனை அந்த வேலைக்கு எழுதிப்போட வைத்தா. அணைவு இல்லா மல் வேலை எடுப்பது கடினம் என்பதை அவர்கள் அனுபவத்தில் கண்டிருக்கின்றார்கள். இதனால் இது பற்றி சீலனை அவன் தங்கி யிருந்த வீட்டுக்காரருடன் கதைக்கும்படி விவேக்கும் வவாவும் அவனுக்கு ஆலோசனை கூறினர்.

சீலன் இதுபற்றி அவன் வாடைக்கிருந்த வீட்டுக்காரருக்கு எடுத்துரைத்தான். அவன் மீது இரக்கம் கொண்டிருந்த அவஉகள்

அந்த இல்லத்தின் நிர்வாகத்துக்கு ரெலிபோன் எடுத்து சீலனுக்கு அந்த வேலையைக் கொடுத்துதவும்படி கேட்டனர். அவர்களும் அதற்குச் சம்மதித்தனர்.

தோட்ட வேலை என்பதால் பாசைக்குப் பெரிய முக்கியத் துவம் கொடுக்கவில்லை. இதனால் சீலனுக்கு அந்த வேலை எளிதில் கிடைத்துவிட்டது. அவனைப் போன்று இன்னும் பலர் அந்த வேலையை தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களில் செய்து கொண்டிருந்தனர். சீலன் வேறொரு அனுபவம் மிக்க வயதான ஒருவருடன் சேர்ந்து வேலைசெய்ய நியமிக்கப்பட்டிருந்தான்.

எட்டுமணித்தியாலங்கள் தோட்ட வேலை செய்வது என்றால் சாமனியமானதா? பழக்கமில்லாத வேலை என்பதால் ஆரம்பத்தில் கை, கால், முதுகு எல்லாம் பெரும் உளைவைக் கொடுத்தது. உள்ளங்கை கண்டி, புண்ணாகி வேதனையாக இருந்தது. கடினமான வேலை சம்பளம் அதிகம் இல்லை என்றாலும் இப்போதைக்கு இந்த வேலை கிடைத்தது பெரும் நிம்மதியைக் கொடுத்தது. காலை நேர வேலை. என்றதால் பின்னேரம் அவனுக்கு நிறைய நேரம் இருந்தது. இனி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று சீலன் யோசிக்கத் தொடங்கினான்.

“அம்மாவும் தங்கச்சியும் மீண்டும் ஊருக்குப் போய் சொந்த வீட்டில் இருக்கலாம் அல்லவா? கொழும்பில் தகுந்த துணையும் இல்லாமல் உதவிகளுக்கு அடுத்தவர்களிடம் எதிர்பார்த்துக் கடமைப்படுவதை விட திரும்பிப் போனால் சொந்த வீட்டில் நிம்மதி யாய் இருக்கலாம். அயலவர்கள், சொந்தக்காரர்கள், ஊரவர்கள் கோயில் குளம் என்று அம்மாவுக்கும் மனதுக்கு நிம்மதியாக இருக்கும். தங்ச்சியும் முதற் படித்த பள்ளிக்கூடத்தில் படிப்பைத் தொடரலாம். யாழ்ப்பாணத்தில் இல்லாத படிப்பா!” என்று நினைத்த வன் இதுபற்றிக் கதைக்க கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தான்.

தங்கச்சி ரெலிபோனை எடுத்து “கலோ அண்ணை!” என்றாள். அந்தக் குரலின் உயிர்த்துடிப்பு சீலனின் நெஞ்சில் பாசமழையை அள்ளி இறைத்தது.

இந்தப் பாசம்... வெளிநாட்டில் பணவசதி வந்ததனால்... திருமணம் செய்து கொண்டதனால்... உறவுகள் வெடித்து, இடை வெளி கண்டு, விம்மிக்கொண்டு இருக்கிறவர்களையும் நிறையவே காணக்கூடியதாக இருக்கின்றது.

*சீலன் தங்கையிடம் சுகம் விசாரித்தபின் தன் மனக்கருத்தை வெளிப்படுத்த நினைத்தான். கொழும்பில் எல்லா வசதிகளுடனும் இருக்கும் அம்மாவையும் தங்கையையும் திரும்பி ஊருக்குப் போங்கோ என்று சொல்ல அவன் மனம் சங்கடப்பட்டது. அதற்குள் தங்கை ரேணுகா முந்திக்கொண்டாள்.*

*"அம்மா உன்னோடை கதைக்கவேணும் என்று சொன்னவ. ஊருக்குப் போனால் நல்லது என்று நினைக்கிறம் அண்ணை! இங்கை வசதிகள் இருந்தாலும் எங்களுக்கு சொந்தஊர் மாதிரி வருமா அண்ணை."*

*"உன்ரை படிப்பு?"*

*"என்னண்ணை கேக்கிறாய்? நீ அங்கை படிச்சு மெடிசின் என்ரர் பண்ணேல்லையே? அங்கையில்லாத படிப்பே அண்ணை. நான் அங்கை போய்ப் படிப்பன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை யண்ணை... அதோடை அம்மா என்னைப் படிக்க விடாமல் கலி யாணம் செய்துவைக்கத்தான் யோசிக்கிறா. எனக்குப் படிக்கத்தான் விருப்பம். இப்ப எனக்கு கல்யாணத்துக்கு ஒரு அவசரமும் இல்லை யண்ணை... அம்மாவுக்கு நீ சொல்லு." என்றாள் சீலனின் தங்கை ரேணுகா.*

*"உனக்குப் படிக்க விருப்பமில்லை என்றெல்லோடி நான் நினைச்சன்."*

*"இல்லையண்ணை. அம்மாதான் படிக்கிறதெண்டால் காசுச் செலவாகும்... நீயும் வெளிநாடுபோய்க் கஸ்ரப்படுகின்றாய்... அதோடை மேலை மேலை படிச்சால் பிறகு படித்த மாப்பிள்ளை தேடவேண்டும். நிறையப் பணமும் தேவைப்படும். எங்களிட்டை எங்கையண்ணை கிடக்கு."*

*"எடி தங்கச்சி! அண்ணை இருக்கிறனடி! நீ தாரளமாய்ப் படி! நான் ஜேர்மனில் இருக்க விசாவும் கிடைத்துவிட்டது. அதோடை எனக்கு வேலையும் கிடைத்து விட்டது."*

*"காசெல்லாம் பெரிய விடயம் இல்லையண்ணை! நீ தங்க இடமில்லாமல் தகுந்த சாப்பாடில்லாமல் கஸ்ரப்படுறதுதான் எங்களுக்குக் கவலையாக இருக்கு!"*

*"நீ கவலைப்படதை! ஜேர்மனிக்கு வந்த பிறகு கடவுளரு ளாலை எல்லாம் கிடைச்சிருக்கு. எனக்கு இங்கை எந்தக் கஸ்ரமும் இல்லை." என்று தங்கைக்கு தன் முன்னேற்ற நிலையை எடுத்துரைத்*

தான். அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த ரேணுகா "இதை அம்மா கேட்டால் மிகவும் சந்தோசப்படுவா. குடுக்கிறன் கதையண்ணை!" என்று தாயிடம் ரெலிபோனைக் கொடுத்தாள்.

"அப்பு! என்ரை குஞ்சு! எப்படியடி இருக்கின்றாய்?" என்ற சீலனின் தாய், மகனின் குரல் கேட்ட சந்தோசமும் கண்காணாத தேசத்தில் அவன் பிரிந்திருக்க வேண்டிவந்துவிட்டதே என்ற சோக மும் ஒருங்கே அவள் நெஞ்சைத்தொட தொண்டை அடைத்துக் கொண்டது.

"அம்மா! ஏன் அழுகிறீங்க? நான் நல்லா இருக்கிறன். அழாமல் கதையுங்கோ! வேலையும் கிடைச்சிட்டுது. எனக்கு இங்கை எந்தக் கஸ்ரமும் இல்லை." என்று சீலன் பலமுறை உறுதியாகக் கூறிய பின்தான் தாயின் மனது சற்று சமாதானமடைந்து பேசும் நிலைக்கு மீண்டது.

"என்ரை பிள்ளை நீ நல்லா இருக்க வேணும் என்று நான் கும்பிடாத கடவுள் இல்லை. ஏதோ கூடாத காலம் எங்களைப் போட்டு உலைக்குது."

"அது கிடக்கட்டும் அம்மா. யாழ்ப்பாணம் திரும்பிப்போக யோசிக்கிறீங்கள் என்று தங்கச்சி சொன்னாள் உண்மையோ?"

"ஓமடா குஞ்சு. அங்கை எல்லாம் நல்லத்தானே இருக்கு. சொந்த பந்தங்களோடை இருந்தா மனதுக்கு நிம்மதியாய் இருக்கும். அங்கை போய் உன்ரை தங்கச்சிக்கும் ஒரு கல்யாண ஒழுங்கையும் செய்ய வசதியாக இருக்கும்."

"இல்லை அம்மா அவளைப் படிக்க விடுங்கோ! அவள் படிக்கட்டும்."

"அவள் படிச்சு என்னத்தை சாதிக்கப் போறாள்? நேர காலத் துக்கு கலியாணங் கட்டிக்கொடுத்தால் குடும்பம் பிள்ளைகுட்டி என்று சந்தோசமாக இருப்பாள் எண்டு நினைச்சன்."

"அம்மா! படிப்பிலை ஆண்பிள்ளை பெண்பிள்ளை வேறு பாடு பார்க்கக் கூடாது. இந்தப் பெரிய ஜேர்மன் தேசத்தை அங்கேலா மார்க்கல் என்ற அம்மா தான் ஆள்கிறா. எவளவு திறமையாக இந்த வல்லரசு நாட்டை ஆளுகிறா. எத்தனை நாட்டு அரசியல் தலைவர் களுடன் சரிசமமாக இருந்து வாதிட்டு நாட்டுக்கும் உலகத்துக்கும் நன்மை ஏற்படுத்துவதுக்காகப் பாடுபடுகின்றா! அதுதான் தங்கச்சி விருப்பப்படி விடுங்கோ! படிக்கட்டும்."

“அவள் பிள்ளை படிக்கிறதெண்டால் படிக்கட்டும் நான் தடுக்கேல்லை. ஊருக்குப் போனாலும் முன்பு படித்த பள்ளிலேயே படிக்கலாம் தானே!”

“ஓம் அம்மா படிக்கலாம். என் படிப்பு இனி எப்படி என்று சொல்ல முடியாது. அதுவும் நான் டாக்டருக்கு படிக்கப்போறது இல்லை.”

“ஏன் குஞ்சு இப்பிடிச் சொல்லுறாய்! உன்னுடைய கனவு அது தானே?”

“இல்லை அம்மா. இப்போ இல்லை. டாக்டர் படிப்பு நல்லது தான் என்றாலும் அதுக்கும் ஈடான வேறு படிப்புகளும் இந்த நாட்டிலை இருக்கு என்று அறிகிறேன். காலம் வரும்போது நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். இப்ப தங்கச்சி படிக்கட்டும்! அவளை டாக்டராக்கி நான் காட்டுறன்.”

“சரி! நீ சொல்லுறபடி செய்யிறன். நீ எங்களை நினைத்துக் கவலைப்படாதை! ரேணுகாவின் கால் காயமும் மாறிவிட்டது. அவள் முன் போல வடிவா நடக்கிறாள். நாங்கள் வாறகிழமை ஊருக்குப் போகலாம் என்று இருக்கிறம்.”

“காசு எவளவு அனுப்பிறது? கடன் இன்னும் இருக்கோ?”

“நீ கடைசியா அனுப்பினதிலை கடன் எல்லாம் கொடுத் திட்டன். வசதிப்பட்டால் இருபதினாயிரம் அனுப்பு”

“உண்டியல்லை குடுத்து நாளைக்கே கிடைக்க ஒழுங்கு செய்யிறன்” என்று சீலன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கைத் தொலைபேசி காசு முடியப்போகிறது என்று அறிவித்தது.

“அம்மா! போன் காசு முடியுது. நான் பிறகு கதைக்கிறன் என்று சொல்ல தொடர்பும் தானாகவே நின்றது.

அம்மாவுடனும் தங்கையுடனும் கதைத்தது சீலனுக்குப் பெரும் பாரம் குறைந்தது போல இருந்தது. அவர்கள் ஊருக்குத் திரும்பிப்போவது, தங்கை படிக்கும் ஆவலுடன் இருப்பது என்ற செய்திகள் அவன் மனதுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தன.

மனநோயாளர் பராமரிப்பு இல்லத்தில் சீலன் வேலைசெய்த நேரங்களில் அவன் காணும் அந்தக் காட்சிகள் மனதை நெகிழ வைத்தன. கடவுளே! உன் படைப்பில் ஏன் இப்படி ஒரு அவலக் கோலம்? பாவம் இந்த மனிதர்கள்! என்று சீலன் கவலைப்பெருமுச்சு விட்டான். நரம்புக் கோளாறு காரணமாக அவர்கள் சுயபுத்தி இழந்து,

தாங்கள் என்ன செய்கின்றோம் என்று தெரியாது சின்னஞ்சிறு குழந்தைகள் போல் சுத்துவதும் கத்துவதும் கூவுவதும் குளறுவதும் அடிப்பதும் உடைப்பதும் என்று செயற்பட்ட விதங்களைக் கண்ட போது மனித வாழ்க்கையே ஓர் அற்பமாகத் தோன்றியது. இந்தப் பைத்தியக்கார நிலை என் போன்ற சாதாரணமானவர்க்கு வர எவ்வளவு நேரமாகும்? இதற்குள் காதல், கத்தரிக்காய், நீ பெரிது, நான் பெரிது என்று யாரிபிடித்து யுத்தம் புரியும் மமதை! ஆணவம், அதிகாரம் என்று துள்ளிக் குதிக்கும் மனிதர்களைச் சிறைபிடித்து வந்து சில காலம் இவர்களுடன் அடைத்து வைத்தாற் போதும் அவர்கள் மனிதர்கள் ஆகிவிடுவார்கள் என்று நினைத்தான்.

புத்தருக்கு ஞானம் பிறந்தது போல் சீலனுக்கும் அவனையறி யாமல் பீடித்திருந்த அறியாமை விலகியது. இனி தான் என்ன செய்ய வேண்டும் என்ற முடிக்கு அவன் வந்தான்.

உழைக்க வேணும், படிக்க வேணும், உதவ வேணும். மனிதருக்கு உதவக்கூடிய ஒரு படிப்பு நான் படிக்க வேணும். இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் நான் படிப்பேன். படித்து உதவி புரிந்து கொண்டே வாழ்வேன்! வாழ்ந்து கொண்டே சாவேன்! செத்த பிறகும் வாழ்வேன்! என்று சீலன் தன் மனதுக்குள் ஓர் உறுதி எடுத்துக் கொண்டான்.

சீலன் அகதி விண்ணப்பம் செய்து சில மாதங்களின் பின் அவனை நேரடி விசாரணைக்கு அழைத்திருந்தார்கள். அதற்குப் போய் வந்தபின் என்ன பதில் வருமோ என்று அவன் பயந்து கொண்டிருந் தான்.

சீலனின் நல்லகாலமோ வணங்கிய கடவுளின் பேரருளோ அவனது அகதி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிரந்தர விசா கிடைத்துவிட்டது.

சீலன் வேலையை மனம் வைத்துச் செய்தான். மண் வெட்டுவது, மரம் நடுவது, நீர் ஊற்றுவது, நிலம் கூட்டுவது என்று கடினமான வேலைகள் செய்யும் போது வியர்வையுடன் கண்ணீரும் சொட்டும். படிக்கும் போது அவன் எண்ணியும் பார்த்திராத வேலையை அவன் நாரி முறியச் செய்து கொண்டிருந்தான். அவனுடன் வேலை செய்த ஜோசேப் என்ற ஜேர்மன்காரரும் அவனும் எட்டு மணிநேரமும் என்ன மொழியில் கதைத்திருப்பார்கள்?... ஊமைப் பாசையில் முதல் நாள் தொடங்கியது. நாட்கள் செல்ல

ஜோசேப் அவன் நெருங்கிய நண்பர் ஆகிவிட்டார். வவா லட்டு செய்தால் இதில் நாலு சீலனுக்கு என்றால் இரண்டு ஜோசேப்புக்கு ஆகும். பயிற்றம் பணியாரம், உறைப்புக் குறைந்த றோல்ஸ்... போகப் போக புட்டும் கறியும் கூட சாப்பிடத் தொடங்கிவிட்டார் ஜோசேப் அண்ணை. அதோடை எங்கடை சீலன் தம்பி ஜேர்மன் கதைக்கத் தொடங்கிவிட்டார்.

மண்வெட்டிக்கு டொச்சில் என்ன என்று சொல்லிக் கொடுத்து பிறகு மண்ணுக்கு, மரத்துக்கு என்று கண்ணில் பட்டவைக்கு டொச் என்று டொச் கதைக்கப் பழகியிருந்தான்.

சீலன் டொக்ரரிடம் போயிருந்தான். மொழிபெயர்ப்பாளர் இன்றியே டொக்ரருடன் ஆங்கிலத்தில் கதைத்தான். அவன் படித்த மருத்தவப் படிப்பு அவருடன் கதைப்பற்கு இலகுவான சந்தர்ப்பத்தை வழங்கியது. போனது தலையிடிக்குத்தான் என்றாலும் டொக்ரர் அவனிடம் நிறையக் கதைத்தார். அவனது பழைய வருத்தங்கள் குடும்பத்திலே இருக்கும் வருத்தங்கள் மற்றும் அவனது வாழ்க்கை முறை என்று நிறையவே கலந்தாலோசித்தார்.

ஐரோப்பிய வைத்தியர்கள் இலேசில் நாங்கள் எதிர்பார்க்கும் மருந்துகளை தந்துவிடமாட்டார்கள். நிறையக் கதைப்பார்கள். வருத்தம் தானாகவே மாறட்டும் என்ற நிலையைத்தான் கூடுதலாகத் தேர்ந்தெடுப்பார்கள். இவையெல்லாம் நிறையப்பேர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறான் சீலன். மருத்துவப் படிப்பை தொடர்ந்த சீலனுக்கு மருத்துவ ரீதியாக இங்குள்ள வைத்தியர்களின் நடைமுறை சரியானதுதான் என்றும் தெரிந்திருந்தது. ஆனாலும் சிலசந்தர்ப்பங் களில் அம்முறை பிழைத்துப்போயும் இருக்கிறது என்று அறிந்திருக் கின்றான்.

“உந்த டொக்ரர்மார் வருத்தம் வந்து சாகப்போற கட்டத்தில தான் எல்லாத்தையும் கண்டுபிடிப்பாங்கள். உவங்களை நம்பக் கூடாது” என்று சிலர் சொல்லவும் கேட்டிருக்கின்றான். அதனால்தான் சீலனும் தனது ஞாபகத்தில் இருந்த தான் சம்மந்தப்பட்ட மருத்துவ ரீதியான பிரச்சினைகளை வைத்தியரிடம் சொன்னான். தலையிடி திடீரென்று வந்திருக்கிறது ஏதும் மூளையில் கட்டியாக இருக்குமோ என்றும் கவலைப்பட்டான்.

“இதுவரை காலமும் இப்படியானதொரு தலையிடி வந்த தில்லை என்று சொல்கிறீங்கள். குடும்பத்திலும் யாருக்கும் இல்லை.

திடீரென்று வந்திருக்கிறது. நீங்கள் நிறைய யோசிக்கின்றீட கள் போல இருக்கிறது. உங்கள் நாட்டில நிறையப் பிரச்சினை. அங்கிருந்து வந்த பல பேருக்கு இப்பிடி தலையிடி சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் இருக்குது. உங்களது முகத்தைப் பார்த்தே என்னால கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கிறது நீங்கள் நிறையப் பிரச்சினைகளை தலையில் வைத்திருக்கிறீர்கள் என்று. இது தலையிடி வகைகளில் முதலாவது வகையான டென்சன்-ரைப் தலையிடியாகத்தான் இருக்கும்போலத் தெரிகிறது."

கொஞ்சம் ஆறுதலாக இருந்தது சீலனுக்கு. தான் இப்போது இருக்கும் நிலைக்கு உலகத்துத் தலையிடிகள் எல்லாம் வந்துதானே போகும் என்று அவனுக்குத் தெரியும். என்றாலும் ப்ரைன்-ரியூமர் வகைத் தலையிடி பற்றி தேவையில்லாமல் யோசித்து கவலைப் பட்டுக்கொண்டிருந்தான்.

"டொக்ரர் இந்தத் தலையிடி என்னால தாங்கேலாமல் இருக்கு. வந்தால் வேற வேலைகளே செய்யேலாமல் இருக்கு."

வைத்தியர் சிரித்துக்கொண்டே... "உங்களுக்கு முதலில் தலையிடிகள் பெரிதாக வந்ததில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே இது சாதாரண தலையிடி என்றாலும் பெரிதாகத்தான் தெரியும். அத்துடன் தலையிடியென்றால் தாங்கேலாமத்தான் இருக்கும். தலையிடி வெறும் தலையிடியாகவும் இருக்கலாம் அல்லது வேறு வருத்தங்களுக்கான அறிகுறியாகவும் இருக்கலாம். நீங்கள் இப்ப இருக்கும் நிலையில் நிறைய யோசிக்கின்றீர்களா?"

சீலனுக்கு தான்பட்ட வேதனைகளையும் இப்போது இருக்கும் சிக்கலான நிலையையும் அவருக்கு சொல்லவேண்டும் போல இருந்தது. ஆனால் அதுவே பிறகு தனது இருப்புக்கு சிக்க லேதையும் கொடுத்துவிடுமோ என்று கொஞ்சம் அடங்கிப் பேசினான்.

"ஓம், இப்ப இருக்கிற நிலை ஒன்றும் யோசிக்காதிருப்பதற் கான நிலையல்ல. நிறைப் பிரச்சினைகள் இருக்கின்றன." என்று சாடைமாடையாக பிரச்சினைகளைச் சொன்னான்.

"சரி! ஆரம்பத்திலேயே நான் உங்களுக்கு தலையை ஸ்கான் செய்யவேண்டி பிரேரிக்கமாட்டேன். வழமையான சில மருந்துகள் எழுதித் தருகின்றேன். கொஞ்சநாள் போகட்டும் ஸ்கான் எடுப்பது பற்றி யோசிப்போம். குறிப்பாக பிரச்சினைகளை தலையில் போட்டுக்

குழப்புவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. மாறாக அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சக்திகூட எங்களிலிருந்து இல்லாது போய்விடும்" வைத்தியர் குட்டிப் பிரசங்கமொன்றை நடத்தியிருந்தார்.

"நன்றி டொக்ரர்" என்று அவர் எழுதித் தந்ததை வாங்கிக் கொண்டு எழுந்தான்.

"முதலில் உங்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளை நீங்களே சொல்வது நல்லது என்றுதான் ஆங்கிலத்தில் கதைத்தேன். இனி விரைவில் நீங்கள் டொச் மொழியில கதைப்பதற்குரிய தகைமையைப பெறவேண்டும்" என்று கடைசியாகக் கூறியிருந்தார் வைத்தியர்.

வெளியில் வந்த சீலன் வைத்தியரின் நாட்டுப் பற்றைச் சிலாகித்துக்கொண்டு யோசித்தான். "நான் நிறைய யோசிக்கிறன் போலத்தான் கிடக்குது. இவ்வளவு பிரச்சினைகளையும் சந்திச்சாப் பிறகு யோசிக்காம இருக்க நானென்ன ரோபோவா... நிறையப் பிரச்சினைகள் இருந்தாலும் உவள் பத்மகலா அதுக்கெல்லாம் மருந்தாக இருந்தவள். இப்ப அவளே பிரச்சினை ஆகிட்டாள். உவளை யோசிச்சுத்தான் எனக்கு தலையிடியே வந்திருக்குமோ. அவளை யோசிக்கிறதில்லை என்று எங்கோ மூலையில ஒளிச்சுவச்சாலும் அவளைப் பற்றி யோசிக்காமலும் இருக்கிறதில்லை. இவ்வளவு காலம் காத்திருந்தவள் இன்னும் கொஞ்சக் காலம் பொறுத்திருக்கலாம். இப்ப நிரந்தர வீசா வேற கிடைச்சிட்டு. உவன் முரளிதான் எதாவது சொல்லிக் குழப்பியிருப்பானோ... என்னை வேறு பானுவோட இணைச்சுக் கதைச்சு.. சிச்சீ..."

வைத்தியர் சீலனை யோசிக்கவேண்டாம் என்று சொல்லி யிருந்தார். ஆனால் சீலனோ வைத்தியரை சந்தித்து திரும்பும் வழியிலேயே யோசிக்க ஆரம்பித்திருந்தான்.

"நேற்றோ முந்தநாளோ கனடாவில இருந்து ஒரு போன் வந்திருந்து. திருப்பி எடுக்க காசு இருக்கேல. காசு போட்டுட்டு எடுக் கோணும் எண்டு யோசிச்சானான். மறந்துபோனன். அதுக்கும் கலாவுக்கு ஏதும் சம்மந்தம் இருக்குமோ... சீ.. என்னை உப்பிடி கேவலமா யோசிசவளைப்பற்றி நானெதுக்கு யோசிக்கவேணும்... உவள்தான் தலையிடிக்கு காரணமா இருக்கும்" சீலன் ஏதேதோ வெல்லாம் யோசித்தான். வீட்டுக்கு வந்து விவேக் அங்கிளிடம் வைத்தியரைச் சந்தித்தது பற்றியும் நடந்தவற்றையும் கூறினான்.

"ஓம் சீலன்! தலையில ஸ்கான் பண்ணுறது நல்லதில்லை

எண்டும் ஆக்கள் சொல்லுறவையள். உந்த யோசினைகளை குறைத்துப் பார்த்தால் தெரியும் தலையிடி குறையுதோ எண்டு."

"அங்கிள் உந்த ஸ்கானில வேற வேற வகையள் இருக்கு. எம்ஆர்ஐ ஸ்கான் பிரச்சினை குடுக்குறதில்லை. சீ.ரீ ஸ்கான் கொஞ்சம் அதிகமான கதிரியக்கத்தை தலைக்குள்ள செலுத்தும். அதுவும் கனதரம் தலையைக் கொண்டே குடுத்தாத்தான் பிரச்சினை" தான் படித்தவற்றில் தெரிந்ததைக் கூறினான்.

"சரிதான் சீலன். பேசாம தலையைக் கொண்டே குடுக்காம இருக்கிறது நல்லம். விசாவும் கிடைச்சுட்டுத்தானே. கொஞ்சம் யோசனைகளைக் குறைத்து தலையிடியையும் குறைத்துப் பார்க் கலாம் தானே."

"ஓம் அங்கிள். வேலை, படிப்பு, இவங்கட டொச் மொழிப் படிப்பு எண்டு வாழ்க்கை கொஞ்சம் பிசியாகப் போறதால இனிக் கொஞ்சம் ஓகேயாக இருக்கும் எண்டு நினைக்கிறன். என்ன இரவில படுக்கேக்கதான் யோசனைகள் வாறத தடுக்கேலாமல் இருக்கு."

"எல்லாம் சரிவரும். ஊரில அம்மா தங்கச்சியை நினைத்து இங்க இனி எப்படி எதிர்காலம் இருக்கவேணும் எண்டதையும் நினைத்து இயங்கினால் எல்லாம் சரியாகிவிடும்." விவேக் அங்கிள் வழமையைப் போலவே உற்சாகம் கொடுத்தார்.

விவேக் அங்கிள் சென்றதும் போனை எடுத்தான் சீலன். கனடாவிலிருந்து வந்த தொலைபேசி இலக்கத்தைப் பார்த்தான். நேற்று வந்திருக்கிறது. எதுக்கும் எடுத்துப்பார்ப்போம் என்று முயன் றான். சிறிது நேர காத்திருப்புக்குப் பிறகு எதிர்முனையில் ஒரு பெண் குரல்.

"ஹலோ யாரிது?" தமிழ்தான். கேட்ட மாத்திரத்திலேயே புரிந்துகொண்டான் இது பத்மகலாவல்ல என்று. "நான் சீலன். ஜேஉமனில இருந்து கதைக்கிறன். இந்த நம்பரிலயிருந்து நேற்று ஒரு கோல் வந்திருந்தது. அதுதான் இப்ப எடுத்துப் பார்க்கிறேன்."

"ஓ... அது நீங்களா. என்ரை பிரண்ட் கலா நேற்று என்ரை போனை வாங்கி உங்களுக்கு கோல் பண்ணினவள். எனக்குத் தெரியாது ஏனெண்டு. இன்னும் கொஞ்ச நேரத்தில வருவாள். ஏதும் சொல்லிவிடவேணுமோ? அவளின்ட நம்பர் இருக்கு தாறதோ?"

"ஒண்டும் சொல்லுறேக்கு இல்லை. நம்பர் என்னட்ட இருக் கெண்டு நினைக்கிறன்" ஒருவித படபடப்புடன் சொல்லி துண்டித்து

விட்டான். படபடப்பு உடலெல்லாம் பரவியிருந்தது. கையில் அது தெரிந்தது.

என்னத்துக்கு வேற ஆற்றையோ போனிலயிருந்து எனக்கு கோல் பண்ணினவள்... அதுவும் கனகாலத்துக்கு பிறகு நேற்று... படபடப்பில் என்னத்தை யோசிப்பதென்றே தெரியவில்லை சீலனுக்கு. இதுவேற இன்னொரு தலையிடி என்று யோசித்துக் கொண்டான்.

அப்படியே கதிரையில் இருந்தவனுக்கு அரைமணி நேரம் கடந்தது தெரியவில்லை. போன் கிணுகிணுத்தது. திடுக்கிட்டுக் கொண்டு போனைப் பார்த்தான். அதே கனடா நம்பர். ஒரு வித பதைபதைப்புடன் காதில் வைத்து ஹலோ என்றான்.

"சீலன் நான் கலா கதைக்கிறன்."

"..."

"என்ன சீலன் சத்தத்தைக் காணேல?"

"..."

"சீலன். நான் கடைசியாகக் கதைத்ததுக்குப் பிறகு உங்களுடன் தொடர்புகொள்ளவேண்டும் என்று பலதரம் முயன்றேன். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போதுதான் கிடைத்திருக்கிறது. நான் கடைசியாக் கதைக்கேக்க கோபம் மாதிரி நிறையக் கதைச் சிருந்தன். என்ன கதைச்சன் எண்டு ஞாபகம் இல்லை. ஏனெண்டால் நான் அப்ப உண்மையாகக் கதைக்கேல. உங்களோட பானு எண்டு யாரையோ இணைச்செல்லாம் கதைச்சனான் எண்டு நினைக்கிறன். அதெல்லாம் கட்டாயத்துக்குத்தான் கதைச்சனான். இங்க அக்காமாவ தாங்கள் தான் என்னை எடுத்துவிட்டதெண்டு கொஞ்சம் அதிகமாக என்னில ஆதிக்கம் செலுத்தினம். நான் முரளியைத்தான் கட்ட வேணும் எண்டமாதிரி நிக்கினம். உங்கட விடயம் தெரிஞ்சுபோச்சு.

அக்காக்களுக்கு விருப்பம் இல்லை. முரளிதான் நீங்கள் பானு எண்டு யாரோடயோ தொடர்பாம் எண்டு அக்காக்கு சொன்னவர். இங்க அது பெரிய பிரச்சினை. எனக்கு ஒண்டிலயும் கவனம் செலுத்தேலாமல் இருந்தது. அதுதான் அண்டைக்கு அக்காவும் பக்கத்தில நிண்டவா. உங்கட கோல்தான் வருது எண்டு அவவுக்கும் தெரியும். அதாலதான் அப்பிடிக் கதைச்சனான். எனக்கும் கொஞ்சம் ரைம் வேண்டும் போல இருந்துது. உங்களுக்கும் நிறையப் பிரச்சினை கள். சுவிஸில சீலனா இருந்து டென்மார்க்கில மாரிமுத்து ஆகி இப்ப

ஜேர்மனில...சீலனா மாரிமுத்துவா தெரியாது. உங்களுக்கும் ரைம் கொஞ்சம் தேவைப்படுது எண்டு யோசிச்சன். இவ்வளவு காலம் காதலிச்சனாங்கள். நான் கதைக்கேக்க அது உண்மையில்ல எண்டு கண்டுபிடிச்சிருப்பீங்களோ தெரியாது. திருப்பி என்னைத் தொடர்பு கொள்ள நீங்கள் முயலேல எண்டதில கோபமா இருக்கிறீங்கள் போலத்தான் கிடக்கு." பொலபொலவென்று உதிர்ந்து தள்ளினாள் கலா.

சீலனுக்கு தூக்கிவாரிப் போட்டது. சொல்வதற்கு ஏதுமே இல்லாத வெறுமையொன்று அவனை ஆட்கொண்டிருந்தது.

"என்ன சீலன். ஏதுமே கதைக்கமாட்டன் எண்டு நிக்கிறியள்."

"கலா. எனக்கு என்ன சொல்லுறது எண்டு தெரியேல. கொஞ்ச நேரம் கழிச்சு போன் பண்ணுறன்."

"ஓகே சீலன். ஏதோ கதைச்சிட்டியள். சந்தோசமா இருக்கு. இந்த நம்பருக்கே போன் பண்ணுங்கோ. எனக்கு பண்ணவேண்டாம். இவளுக்கு பக்கத்தில நான் இருந்தாக் கதைக்கிறன். இல்லாட்டி நாளைக்கு இதே நேரம் கதைக்கிறன்."

"ஓகே..."

போனை வைத்த சீலனை ஒரு வெறுமை சூழ்ந்திருந்தது. மனதின் எங்கோ ஒரு மூலையில் சந்தோசப்புள்ளியொன்று தோன்றி யிருந்தது. இயற்கையும் இயல்பு வாழ்வும்கூட விழுந்துபோகும் தருணங்களிலெல்லாம் எழுந்துகொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியே செல்கின்றன. சீலனுக்கு தலையிடி இல்லாமல் போவதற் கான காரணமும் வந்திருக்கிறது என்று போகப் போகத் தெரியும்.

***

இரவுகள் என்பதே விடியலுக்காகத்தான் என்பது போல் வீழ்ச்சிகள் எல்லாமே அதிகமாய் உன்னி எழுந்து கொள்ள ஏற்பட்ட வாய்ப்புக்கள் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான் சீலன். வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவமும் கற்றுக் கொள்ள வேண்டிய அவசிய பாடங்கள். அடிபடப்பட மனம் உறுதி கொள்ளும். தடங்கல் கள் வரவர அதைத் தாண்டி வெளிவரும் வேகம் வரும். தடங்கல் தாண்டி நிமிர வழி தேடும் மனம். அந்தத் தேடலில் ஓய்வற்ற உன்மத்தம் இருக்கும். எதிர்ப்படும் இடரை படிகளாக்கி அழுத்தி ஏறும் திடம் வரும். அவன் தாத்தா அப்பா கற்றுத்தந்த பால பாட வாடத்தைகள் இப்போது அவனுக்கு நினைவு வந்தன. மனம்

திடப்பட ஆரம்பித்தது.

விழுந்து கிடக்கையில் எழுந்து நில் என்று சொல்ல ஒரு உண்மையான குரல். கை கொடுக்க ஒரு நம்பிக்கையான கரம் போதும். எந்த வீழ்ச்சியிலும் இருந்து ஒரு மனிதன் எழுந்து விடுவான். ஆனால் அந்த உண்மைக் குரலும் நம்பிக்கையும் கொடுக்க ஏனோ பலர் தாயாராக இருப்பதில்லை. பெற்றோர் செய்தது பிள்ளைக்கு என்பது போல் சீலனின் பெற்றோர் செய்த நல்வினையோ என்னவோ அவன் விழுந்த போது பற்றி எழ பல கரங்கள் பல இடங்களில் பல விதங்களில் நீண்டிருந்தன.

பகல் முழுவதும் தோட்ட வேலை, மாலை நேர டொச் பாடசாலை என வேகமாக ஓய்வின்றிக் கழிந்த அவனது நாட்களில் எண்ணிப்பார்க்க ஓய்வற்று நேரத்தை இழந்து கொண்டு பணத்தை யூரோவாக எண்ணி எண்ணிச் சேர்க்க முடிந்தது. அறிவை மொழியாக மீண்டும் கற்றுக் கொள்ள முடிந்தது.

தெரியாத புதிய நாடு ஒன்றில் மொழி பிடிபடலும் பொருளா தாரம் சீர் பெற்றிருப்பதும் தன்னபிக்கை தரும் விடயங்கள். மனம் சோர்வுறாது தொடர்ந்து நடக்கத் தூண்டும் ஊக்கிகள். அவை அவனை ஊக்க ஆரம்பித்தன. மனம் மெல்ல மெல்ல இறுக்கம் தளர்ந்து இளக, நம்பிக்கை வானில் சிறகு விரித்தது மனப் பறவை.

அதற்கு ஏற்றாற்போல் வீட்டில் இருந்து வரும் கடிதங்கள் தொலைபேசி அழைப்புக்கள் என்பன பாசத்தையும் அக்கறையையும் இடைக்கிடை அவனது கடமைகளையும் சுமந்து வர, அவனது வாழ்க்கை ஒரு சரியான கட்டுக்குள் நிதானப்பட ஆரம்பித்தது.

பத்மகலாவிடம் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் காதல் சுமந்து வந்து கொண்டே இருந்தாலும் அவளுடன் அவனும் ஆவலுடன் பேசிக்கொண்டே இருந்தாலும் மனதுக்குள் எப்போதும் ஒரு அபாயச்சங்கு ஒலித்துக் கொண்டே இருந்ததில்அவனிடம் அவதானம் இருந்தது.

உறவோ, நட்போ இடையில் ஒரு கீறலும் பிரிவும் ஏற்பட்டு பின் இணைந்து கொள்கையில் முன்பிருந்த அதே நெருக்கம் முயன் றாலும் முடிவதில்லை. காயப்பட்ட மனம் தன்னைக்காப்பாற்றிக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறது. பத்மகலாவின் மனதினுள் அப்படி ஒரு உணர்வு இருந்ததா என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் அவனுக்குள் அந்த அவதானம் இருந்ததை அவனே

உணர்ந்திருந்தான்.

அவளோடு பேசிக்கொண்டிருந்தாலும் மனம் அவளோடான எதிர்காலக் கனவுகளில் திளைக்க மறுத்தது. அந்த வித்தியாசம் ஒரு நெருக்கமற்ற உணர்வாய் அவளை உறுத்த அடிக்கடி வாக்குவாதப் பட்டுக் கொண்டாள். அப்போதும் அவனால் தன்னை மாற்றிக் கொள்ள விருப்பமில்லாது போயிற்று.

மனம் எப்போதும் உழைப்பு உயர்வு என்று ஓலமிட ஆரம்பித்தது. உழைப்பே உத்வேகமாகையில் பருவத்துக்கே உரிய காதல் கனவுகளின் ஆக்கிரமிப்புக் குறைந்து நிஜ வாழ்வில் சிறக்க முயன்று கொண்டிருந்தான். உள்ளங்கையில் உள்ள பொருளே எந்நேரத்திலும் தவறி விழத் தயாராக இருப்பது போல் கனவுகண்டு கைக்கெட்டிய மருத்துவப் படிப்பே எதிர்பாராமல் காவு போகையில் அருகே இல்லாத இன்னொரு உள்ளத்தை நம்பி அதையே எண்ணி அது கிடைக்கும் என்ற காத்திருப்பில் நிஜத்தில் உள்ள கடமைகளைத் தொலைக்க அவன் தயாராக இல்லை.

அவன் பட்ட அடிகளும் இடையில் பத்மகலாவுடன் ஏற் பட்ட பிளவும் அவனை நிறையவே வாழ்க்கையின் யதார்த்தத்துக்குப் பதப்படுத்தியிருந்தது. விரும்பிய காதலி கிடைத்தால் வாழ்க்கை இனிக்கலாம். அதற்காக அதுவே கதி என்று கிடந்து கிடைக்காமல் போனால் மூலையில் சுருள அவன் தயாராக இல்லை. அவனை நம்பி அவன் மீது பாசமானவர்கள் காத்திருக்கிறார்கள். அவர்களின் எதிர் கால அத்திவாரம் அவனிடம் இருக்கிறது. அதை செய்து முடிக்க வேண்டும். பிறந்ததின் அர்த்தத்தை எழுந்து நின்று நிரூபிக்க வேண்டும்.

ஓரளவு டொச் மொழி பிடிபட அவுஸ்பில்டுங் செய்ய விரும்பினான். மருத்துவப் படிப்பே கதி என்று அதை இழந்த வலியில் கிட க்காமல் வாழ்க்கையில் மேலும் நடக்க இன்னொரு பாதையை தேடவு செய்தான். அதே நிலைப்பாடு தான் பத்மகலா பற்றியும் அவனின் மனதில் உருவாகியிருந்தது. ஒருகாலத்தில் நினைத்தவள் கிடைத்தால் சந்தோசம். கிடைக்காவிட்டால் அதிலேயே துவண்டு விடாத மனப்பாங்குக்கு மனம் பக்குவப் பட்டிருந்தது.

ஜெர்மனி உலகின் சிறந்த கார்களைத் தயாரிக்கும் பணக்கார நிறுவனங்களின் பணக்காரநாடு. முடிந்த வரை தன் மக்களை பூரண பொருளாதார தனிமனித சுதந்திர திருப்தியுடன் வாழவைக்க

முற்படும் நாடு. அவன் இருந்தது காடு நிறுவனங்கள் பல உள்ள பணக்கார மாநிலம். அந்த நிறுவனங்களின் சம்பள விகிதமும் அந்த மாநிலங்களுக்கு ஏற்ப அதிகமாகவே இருக்கும் என்பது உணர்ந்து கார் தயாரிப்புப் பொருட்களின் மெக்கானிக் வேலையையே தனது படிப்பாகத் தெரிவு செய்து படிக்க ஆரம்பித்தான்.

தொழிலில் சிறக்கச் சிறக்க பணமும் நேரமும் இருந்தால் மேற்கொண்டு படிக்கலாம் என்பது அவனுக்குப் பிடித்த நடைமுறை வசதி. ஒருவேளை தான் அதிலேயே மேற்கொண்டு பெரிய தரத்துக்கு உயரும் வாய்ப்புக்கள் வரலாம் என்ற நம்பிக்கையோடு தொடர ஆரம்பித்தான்.

இப்போது எல்லாம் சீட்டு போன்ற போலி நடவடிக்கைகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. தன் மனத்தைக் கட்டுப்படுத்தித் தானே சேர்க்க முடியும் போது இப்படியான தொந்தரவுகள் கேவலங் கள் தேவையில்லை என்பது உணர்ந்திருந்ததால், சிறுகச் சேமித்த பணம் ரொக்கமாகியத்தில் தங்கையின் திருமணம் சிரமமில்லாமல் நடந்து முடிந்தது.

தன் கடமைகளை நிறைவேற்றத் தொடங்கியுள்ளேன். தன்னால் முடிகிறது. எந்த வீழ்ச்சியின் பின்னும் எழுந்து விடலாம் என்ற நம்பிக்கை விதைகள் அவனுள் கிளைவிரிக்க வாழ்க்கை பசுமை வீதியில் பயணிக்கத் தொடங்கியது. ஒருவனின் மன அமைதியை முதலில் அவனது பொருளாதார நிலைமை நிர்ணயிக்கிறது. சீரான வருமான சூழல் அடுத்த வேலைக்கான அல்லது அடுத்த நாளுக்கான, அடுத்த மாதத்துக்கான பயத்திலிருந்து அவனை மீட்டு எடுக்கிறது. எம் சொந்த நாட்டில் வாழ்ந்ததை விட வெளிநாடுகளில் அந்த நிலை மிக அதிக அழுத்தத்தைத் தரும் ஒரு விடயம்.

ஊரில் கொட்டிலோ, குடிலோ அனேகமாக சொந்தமாக காணித்துண்டு இருக்கும். காற்றும் தண்ணியும் இலவசமாகக் கிடைக்கும். கழிவு தண்ணிக்கும் மழைத்தண்ணி ஓடுவதுக்கும் கூட காசு கட்டும் அவலம் இல்லை. மின்சாரம் இல்லை என்றால் விளக்கோடு வாழலாம். குளிர் இல்லை. கணப்பு வசதி தேவை இல்லை. இங்கு வீட்டு வாடகையில் இருந்து காசு. குடிக்கும் நீரில் இருந்து கழிவாகும் சிறுநீர்வரை பணத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகவே உழைப்பும் ஊதியமும் அவசியம்.

இந்த நாடுகளுக்கு வந்து வேலை அனுமதி கிடைக்கும் வரை

யான காலப்பகுதிகளின் செலவுகளை அரசாங்கள் எந்தக் குறையும் வைக்காமல் பொறுப்பெடுத்துக் கவனிக்கும். வேலை அனுமதி கடைத்த பின் ஒவ்வொரு சலுகையாக நிறுத்தித் தன் கால் ஊன்றும் நிலைக்குக் கொண்டு வரும். குழந்தைகள், குழந்தை உள்ள தனிமையில் இருக்கும் பெண்கள், நோயாளிகள் தவிர்ந்தவர்களுக்கான செலவுப் பொறுப்பை அரசு ஏற்பதில்லை. ஏற்க வேண்டிய கட்டாயம் துளி கூட இல்லை.

எமது நாட்டில் அரசு எந்தப் பாதுகாப்பும் சலுகைகளும் தராத ஊழலில் வளர்ந்து வாழ்ந்தவர்கள் நாம். இங்கு இத்தனை வசதிகளை அரசு வழங்கும் போது பல ஆண்களுக்கு உடம்பு அசைக்கக் கசந்து போகிறது. நோகாமல் இருக்க, நேரமற்று ஊர் சுற்றி விடுப்பு விண்ணாணம் சேகரிக்க, கால நேரமில்லாமல் தமிழ் படம் போட்டுப் பார்க்க, பார்ட்டிகளில் அடிபட, ஏதாவது ஒரு சங்கம் உருவாக்கி சண்டை வளர்க்க என்று அதிக நேரம் தேவைப்படுவதால் உழைக்க நேரமில்லாமல் சமூக உதவிக்காக இல்லாத நோயெல்லாம் சொல்லி முடிந்தவரை அரசாங்கப் பிச்சையில் கவுரவமாக வாழ நினைக் கிறார்கள்.

ஆனால் சீலன் நிஜமாகவே கவுரவமாக கால் ஊன்றி வாழ நினைத்தான். அந்த முயற்சி வெற்றியாகி பொருளாதாரம் சீரடைந்த போது மனதில் தெளிவு ஏற்பட்டிருந்தது. மேற்கொண்டு நகர வேண்டிய பாதை தெளிவாகி இருந்தது. விழுந்து, உடைந்து, எழுந்து, நிமிர்ந்ததில் விழாத திடம் வந்திருந்தது. வாழ்க்கையை கனவுகளற்று வாழ்க்கையாகப் பார்க்கும் தெளிவு வந்திருக்க, அதன் வழியான நகர்வில் வாழ்க்கை சிரமம் அற்று நகர ஆரம்பித்தது.

வேலை நேரம் தவிர்ந்த மாலை நேரக் கல்வி மெல்ல மெல்ல தொழில் வகையிலும் உயர்த்த ஆரம்பிக்க, அவனது குடி, புகை, வீண் வம்பு போன்ற தீய பழக்கங்கள் அற்ற நடவடிக்கை புலம்பெயர் மண்ணில் ஆரம்பகாலங்களில் குடியேறிய பலகுடும்பங்களின் வளர்ந்த பெண்பிள்ளைகளில் சிலரையும் கல்யாண வயதில் பெண் பிள்ளைகளை வைத்திருந்த பெற்றோர்கள் பலரையும் அவன்பால் திரும்பிப் பார்க்கவைக்க... ஊரில் வீடு தேடி கனத்த சீதனத்துடன் கல்யாணம் பேசிவர, அம்மா அடுத்தவளுக்கான வரதட்சனையை இவனது சீதனக் காசில் எதிர்பார்க்க...

எதுவும் தெரியாமல் அவன் வேலைக்கும் மாலைநேரக்

கல்விக் கூடத்துக்குமாய் ஓடி நேரத்தைத் துரத்த, எதுகும் தெரியாத தூரத்தில் இருந்து பத்மகலா நம்பிக்கைக் கனவுகள் வளர்த்து காதலுடன் தொலைபேசிக் கொண்டிருந்தாள்.

துன்பங்களை மீறி மனம் துள்ளிக் குதித்துக் கொள்ளும் போது சிறகடித்துப் பறப்பது போன்ற உணர்வு அளவுக்கு மீறிய சந்தோசங் கள் அழ வைத்து விடுமோ என உணர்வுகளை அடக்கிக் கொண்டான் சீலன்.சந்தித்த ஒவ்வொரு நல்ல உள்ளங்களும் புலம் பெயவுந்த நாட்டில் பட்ட அவலங்கள் அனைத்தையும் உடைத்து போராடி வெற்றியோடு வாழ்க்கையை தொடர்ந்தவர்கள்

ஒரளவு சிறப்பாக வாழ்கிறார்களே என நினைத்து தன்னைத் தானே ஆற்றுப்படுத்திக் கொண்டான். பல கஸ்ஷ்டங்களை சுமக்கும் சீலனுடைய வாழ்க்கை ஆமை போல் நகர்ந்தது. விடியல்கள் எப்போது என மனம் சலித்துக் கொள்ளும் வேளைகளில் எல்லா வற்றுக்கும் எங்கள் பிரச்சனையும் இடப்பெயர்வுமே எனப் பல முறை எண்ணியுதுண்டு... இப்பொழுதெல்லாம் அம்மாவின் தொலை பேசி அடிக்கடி வருவதால் ஏதோ ஒரு ஆனந்தம்.

இன்று சனிக்கிழமை விடுமுறை நாள். மனதிலுள்ள பல விடயங்களை மீட்டிப் பார்க்கும் நேரம் என நினைத்துக்கொண்டு புரண்டு புரண்டு எழும்ப விருப்பின்றி படுக்கையிலே இருந்தான். அழகான காலையும் இதமான மெல்லிய குளிரும்

பறவைகளின் ஒலியும் உற்சாகத்தை கொடுத்து சோம்பலை விரட்டிக் கொண்டிருந்தது. அந்த நொடிப் பொழுதில் தொலை பேசி அழைப்பு?!.

ஆயிரம் பட்டாம் பூச்சிகள் அவனது மன வானில்!! பத்ம கலாவாக இருக்குமோ என்பது தான் உள்மனதின் எண்ணம்... ஆனாலும் ??? அம்மாவின் குரல் மறு முனையில்!! முதற் கட்டமாக நலம் விசாரிப்பதோடு தொடங்கி பின்னர் ஊர்ப் புதினங்கள். சீலனுக்கு இவற்றை எல்லாம் கேட்கும் போது ஊரிலே நிற்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

அந்த இடங்களும் காட்சிகளும் அவற்றோடு சம்மந்தப் படுத்தப் பட்ட உறவுகளும் கண்முன்னே காட்சிப் படுத்தின..."தம்பி சீலன் உன்னோடை ஒரு விசயம் பேச வேணும்" என இழுத்தாள். "எதுவாக இருந்தாலும் சொல்லுங்கோ அம்மா" என பதற்றப் பட்டான் சீலன்.

சீலன் வீட்டுக் குலதெய்வமான பக்கத்து அம்மன் கோயிலில் வருடாவருடம் திருவிழா கோலாகலமாகத் தான் நடைபெறுவதுண்டு. இப்போதெல்லாம் மிக குறைவு சனங்களின் இடப்பெயர்வு பொருளாதாரப் பிரச்சனை என வாழ்க்கையோடு தொடர்பு பட்ட விழாக்களும் சந்தேசஷங்களும் குறைந்து போய் விட்டதென்றே கூறலாம்!

அம்மா கூறப் போகின்ற விடயம் திருவிழாவோடு மட்டுமல்ல சீலனோடும் சம்பந்தப்பட்டது.

சீலனின் ஒன்று விட்ட மாமனார் (பொன்னம்பலத்தார்) கொழும்பிலே வசிப்பவர். வருடா வருடம் நடைபெறும் திருவிழாவிற்கு குடும்பத்தோடு வந்துவிடுவார்கள்..

இம்முறையும் வருகின்றார் பெரிய ஒரு விசயத்தையும் சுமந்து கொண்டு சீலனுடன் பேசுவதற்காக. அரை மணி நேரத்துக்கு மேல் தாயார் தொலைபேசியில் உரையாடினார் எல்லாமே பொன்னம்பல மாமாவின் மகள் பற்றியே!.

சாம்பவி அம்மனுடைய பெயர். பெண் தெய்வத்தின் பெயவ. அழகான பெயர். ஒரு வங்கியிலேள் கணக்காளர் பதவி. சாதுவானவள், அதிகமாக அலட்டிக் கொள்ளாதவ. அத்தோடு நல்ல சீதனம் வீடு வளவு நகைகள் என்று சொத்துக்களோடு வரும் சீதேவி. நல்ல வடிவும் கூட. எல்லா வழியிலும் சீலனுக்கு பொருத்தமானவளே என பெரிய மனக் கோட்டையை கட்டிக்கொண்டிருந்தாள் சீலனின் தாயார்.

இந்த விசயம் பற்றி பேசவே இந்த திருவிழாவிற்கு வருகின்றார். திருமண புராணம் வாசிக்கப்பட்டது போல் உணர்ந்தான் சீலன்.

“அம்மா இப்ப எதற்கு கலியாணம். கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளுங்கோ” என அதட்டலோடு முடித்தான். என்னைக் கேளாமல் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது எனவும் எச்சரித்தான்.

ஒருமுறை உள் மூச்சை இழுத்து மனக் குழப்பங்களையும் சேர்த்து வெளிவிட்டான். என்னுடைய படிப்பு கனவுகள் குடும்பச் சுமை எல்லாவற்றையும் நினைக்கையிலே இந்த கலியாணம் இப்ப தேவையில்லை என தோன்றுகின்றது. அம்மாவின் சுகத்தைக்கூட கேட்க மறந்து விட்டேன். பிரச்சனை பூதாகரமாகும் போது இயல்புகள் தொலைந்து விடும் என நினைத்து வருந்திக்கொண்டு அம்மாவை திட்டிவிட்டேனோ “ச்சே” என தன்னைத் தானே வெறுத்துக்

கொண்டான்.

நான் பேசினாலும் அம்மா ஒரு போதும் என்னை வெறுப்பதில்லை. தம்பி தம்பி என என்னைச் சுற்றியே நினைவுகள். வேறு எந்த உலகத்தையும் புரியாத என் தாய். தன் குழந்தைகளே உலகம் என வாழ்ந்தவள் என தாய் மீதான பாசம் பொங்கி வழிந்தது.

கண்முன்னே பத்மகலா நினைவுகளோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு சோகம் நெஞ்சைப் பற்றிப் பிடித்து எரிவது போல் உணர்ந்தான். படிக்கும் காலங்களில் பக்கத்துணை யாக இருந்த நல்ல நட்பாய் இருந்த பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்த பத்மகலா ஒரு நாள் குத்திக்கிழித்த வார்த்தை அம்புகள் மாறி மாறி விம்பங்களாக தோன்றின.

இதயம் துன்பத்தால் அமுக்கப்படும் போது உள்மூச்சை இழுத்து மனதை ஆறுதல் படுத்துவது வழக்கமாகவே கொண்டான் சீலன். வாழ்க்கையில் துன்பங்கள் வரும் போது வாடித்தைகளும் தாறு மாறாய் வருவது இயல்பு தான். பத்மகலாவும் எப்படியான துன்பத்தை அனுபவித்தாளோ இதை சீலன் புரியாதவன் அல்ல. இருந்தாலும் இது காதல் மனசு சம்மந்தப்பட்ட விடயம் இருவரைப்பற்றிய எதிர் காலத்தை இந்தப் பேச்சு எவ்வளவு பாதிக்கும் என ஏன் கலாவுக்கு புரிதல் இல்லாமல் போனது?, என மனவருத்தத்தோடு கோப்ப் பட்டான. இருந்தும் அடி மனதில் இருக்கும். இதைத் தான் காதல் என சொல்வார்களோ?.

கண்ணீர் முட்டி காத்திருந்தது. இதயத்து வலிகளை சுமந்து கொண்டு மனம் முயன்று முயன்று அடக்க முற்பட்டது. இதைப்பற்றி எதையும் சிந்திக்க விருப்பின்றி தேனீர் போட தயாராகினான்.

கதையில் கூட கற்பனை செய்து கொள்ள முடியாத அத்தனை விசித்திரமான சம்பவங்களும் எனக்கு நேர்ந்துள்ளதே. இப்படி யெல்லாம் நடந்திருக்கும் என கனவிலும் நினைத்ததில்லையே!. என் கதையை எழுதிவிடலாம் போல தோன்றுகிறது என நினைத்தான். கிட்டத்தட்ட தட்ட ஏழு எட்டு வருடங்களுக்கு முன் பாடசாலை களுக்கு இடையிலான சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடம் கிடைத்து. அது ஒரு உண்மைச்சம்பவம் தான்.

சீலனின் தனிமையில் அவனோடும் பத்மகலாவோடும் தொடர்புடைய பல பழைய நினைவுகள் வந்து போயின.

நேரம் 11 மணி....இளம் சூரியன் பொற்கரம் பரப்பி

தன்னொளி பரப்பிக் கொண்டிருந்தான். சீலனின் நெஞ்சம் மெல்ல இளம் தொடங்கியது. நினைவுகள் முழுவதும் பத்மகலாவைப் பற்றியே!! ஒரு முறை பேசினால் ஒரு முடிவுக்கான பாதை திறபடும் என தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த முனைந்தான்.

மறு முனையில் கலா...

கலா எப்படி இருக்கிறீங்க என தொடங்க முதலே வார்த்தைகள் சிக்கிக்கொண்டது. எத்தனையோ விடயங்களை பேச வேண்டும். மனதில் உள்ள அத்தனையையும் கொட்டித் தீடீக்க வேண்டும் என எண்ணிக் கொண்டே வந்தவன் முடியாமல்... தவித்தான். கறுப்புத் திரை ஒன்று கண் முன்னே விழுந்தது போல் உணர்ந்தான். இருந்தும் தன்னை சுதாகரித்துக் கொண்டு பத்ம கலாவோடு உரையாடினான்.

தாயாரின் கல்யாணப் பேச்சை போட்டுடைத்தான். மறு முனையில் பத்மகலா மயக்கம் போடாத குறையாக வார்த்தைகள் தடுமாற கண்ணில் கண்ணீர் சொரிவதை வார்த்தைகள் மூலம் புரிந்தான்.

இருவருடைய கண்ணீடீ ஒரு பெருந் துன்பத்தை விலக்கியது. பத்மகலா மனம் விட்டுப் பேசினாள்.

"என் மனதில் கணவராக வாழ்ந்து கொண்டிருக்கிறீடீகள் எப்படி எப்படி இதை என் மனம் ஏற்றுக் கொள்ளும்" என விம்மி விம்மி அழுதாள்.

பத்மகலாவிற்கும் வீட்டார் பாரிய அழுத்தத்தை கொடுத்துக் கொண்டே இருந்தனர் அவளுடைய திருமணத்திற்காக... இப்பொழுது சிலனும் பத்மகலாவும் ஒரே புள்ளிக்குள் வருகின்றார். காதல் ஏற்படுத்திய வலி..இது. இழந்துவிட்ட கல்வி... திருமணத்திற் கான பெற்றோரின் அழுத்தங்கள்...

ஒரே வலியை கொண்டிருக்கும் இருவரும் இணைவதில் எவ்வளவு சிக்கல்!! வாழ்க்கை ஒரு போர்க்களம் என மாறியது ...

சீலனுக்கு பத்மகலா மீது அளவு கடந்த பரிதாபமும் இரக்கமும் ஏற்பட்டது. எந்தப் பெண்ணும் தான் விரும்பியவரை யாரவது மணம் முடிப்பதை தாங்க மாட்டாள் என்பதை சீலன் உணர்ந்து கொண்டான். சீலன் கிடைக்காது போனால் உயிர் வாழ மாட்டேன் எனக்கூறியது சீலனை மிகவும் பாதித்தது.

சகோதரியுடன் கூடப் பிறந்தவன், தாயை உயிராக மதிப்ப

வன், இரக்க குணம் கொண்டவன், பத்மகலாவின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இல்லை எனினும் அவள் அள்ளி வீசிய வார்த்தைகள் இடையிடையே வந்து வெறுப்பையும் ஏற்படுத்த தவறியதில்லை. இப்படியான சோகங்களும் பிரிவுகளும் தான் உறவுகளை பலப்படுத்தும் எனவும் உணர்ந்து கொண்டான்.

பாசமும் சோகமும் உடலையும் மனதையும் வாட்டியது !மயிர்க்கணுக்கள் கூச்செறிந்தது!! இந்த சோக உணர்விலும் சுகம் இருந்தது. வாழ்க்கை என்பது ஒரு அழகான பரிசு. ஒவ்வொருவருக்கும் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்யும் உரிமை இருக்கிறது. எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தில் என்னுடைய வாழ்க்கையை தெரிவு செய்ய நான் தானே முன் வர வேண்டும் என தெளிவோடு துணிவு கொண்டான்.

வானம் வெளிப்பாக இருந்தது. வெளியே சென்று ஏதாவது மரக்கறிகள் வேண்டி சமைக்க வேண்டும் என நினைத்து ஆயத்த மாகினான். அப்பொழுது வீட்டை தட்டும் சத்தம் கேட்டது. யாராக இருக்கும் என யோசித்தபடி கதவை திறக்க முன் சென்றான். அங்கே நன்கு பழக்கப்பட்ட முகம் தான். சீலனோடு மாலைக் கல்விக்கு செல்லும் சக தோழன் நிறையவே வயது வித்தியாசம் கொண்டவர் பெயர் சத்தியநாதன்.

மிகவும் நல்ல பண்புகளை கொண்ட மனிதர் சீலனிடம் நிறையவே மரியாதை கொண்டிருந்தார். சீலனும் அப்படியே. அவர் வந்த காரணம் தனது மகள் குமுதாவின் 21வது பிறந்தநாளிற்கு அழைப்பதற்கு. சீலன் நாளுக்கு ஒரு தடவையாவது குமுதாவை வழியில் பார்ப்பதுண்டு. மெல்லிய புன்னகை கண்களில் காதலும் ஏக்கமும் நிரம்பி வழிகின்ற சிறு பார்வையில் நாணம் கலந்திருக்கும். சீலனுக்கு அந்தப் பார்வை பிடித்துப் போய்விடும்.

வாழ்க்கை வெறுக்கின்ற போதெல்லாம் இந்தச் சின்னச் சின்ன விசயங்கள் உயிர்ப்பைக் கொடுக்கும். சில வினாடிகள் அந்த நினைவு களின் சென்று மீண்டு அவரை வழியனுப்பி விட்டான். பிறந்த நாளுக்கு வருவதாகவும் உறுதி கொடுத்தான். சீலனுடைய நற்குணங் கள், அறிவு, பெரியவர்களை மதிக்கும் பண்பு என்பவை மிகவும் சத்திய நாதனை கவர்ந்தவை. இந்த நோக்கம் கருதியோ என்னவோ தனது மகளை சீலனுக்கு கட்டிக் கொடுக்க வேண்டும் என பெரு விருப்பு.

எப்படிச் சீலனை கேட்பது என திண்டாட்டம். பிறந்த நாள்

அழைப்பும் சீலனின் வருகையும் குடும்பத்தில் பிணைப்பை ஏற்படுத்தும் எனவும் தனது உறவினர்களும் சீலனை பழக வாய்ப்பு இருக்கும் எனவும் பல திட்டங்களை வைத்திருந்தார்.

குமுதா மருத்துவ மனையிலே தாதியாக பணி புரிகின்றாள். தொழிலுக்கு ஏற்றது போல பணிவடக்கமும் துணிச்சலும் உள்ளவள். இவளும் சீலனுக்கு பொருத்தமானவளே. சில வேளைகளில் டொச் பாடத்தில் ஏதாவது சந்தேகங்களையும் தெளிவு படுத்தியிருக்கிறாள்.

சத்தியநாதன் மனதோடு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். தனது மகளுக்கு சீலன் மணமகனாக வரவேண்டும் எனவும் அவளுடைய வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் எனவும் சீலன் போல் ஒரு பொருத்தமான மாப்பிள்ளையை தவறவிட்டு என் மனது தவிப்பதிலும் பார்க்க வெட்கத்தை விட்டு கேட்கவேண்டும் என உள்ளூர நினைத்துக் கொண்டார்.

சீலன் தனது காதலை பலப்படுத்திக் கொள்ள அக்கம் பக்கமெல்லாம் அவனுக்கு பல வரன்கள். அம்மாவின் கனவு அவள் பார்த்து வைத்த சாம்பவி என்ற அழகான உறவுப் பெண் பெரிய சீதனத்தோடு. தன் மனதிலே உயிரோடு கலந்து இடம் பிடித்த பத்ம கலா சத்தியநாதனின் மகள் குமுதா.

திரும்பத் திரும்ப அதையே யோசித்துக் கொண்டிருந்தான். எத்தனை நாடுகளுக்கு தாவி விட்டேன். எத்தனை மனிதஉகளை சந்தித்து விட்டேன் இது விதியா?. இதற்கு மூலத்தை காண்பது எப்படி? அவை எல்லாம் தானாகவே வருகிறதா அல்லது நானாகத் தேடிக் கொண்டேனா?

காதலித்தது... படிப்புக் குழம்பியது... வெளிநாடு வந்தது... புதிய மனிதர்களை சந்தித்து புதுப் புது உறவுகளை தேடியது?... எல்லா வற்றையும் விட்டு விட்டு கண்களை இறுக மூடிக் கொண்டான்.

சீலன் இப்பொழுதெல்லாம் நல்ல சிந்தனையை உருவாக்கி திடமாக மனதை வைத்துக் கொள்ளப் பழகிவிட்டான். முன் பெல்லாம் சிறு பிள்ளை போல் அடிக்கடி கண்கலங்கி அழுவதற்கான காரணங்களாக பாசங்களை விட்டுப் பிரிந்த வலி. கல்வியை தொடர முடியாத அவலம். காதலியை பிரிந்த துன்பம். இவை எல்லா வற்றுக்கும் கண்ணீரை மருந்தாக்கி தன்னைத்தானே ஆற்றுப் படுத்திக் கொண்டான். இருந்தும் வருகின்ற துன்பங்களை எப்படி களைவது என யோசித்து அவதானமாகவே பல முடிவுகளை எடுப்பான்.

எடுக்கின்ற முடிவுகள் எல்லாம் திருப்தியாக முடிவதும் இல்லை இருந்தும் ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டான்.

வார விடுமுறை பல அலைச்சல்களோடு போய் விட்டது. சீலன் தெரிவு செய்த மெக்கானிக் படிப்பு நன்றாகவே போய்க் கொண்டிருந்தது. அது சம்மந்தப்பட்ட மேலதிக கற்கைகளுக்கான வாய்ப்பும் கிடைத்து. எல்லாமே அவனுடைய முயற்சி தொழிலை நேசிக்கும் தன்மையும் நுணுக்கமான அறிவும் துணை நின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் தனிநபர் வருமானம் உயர்ந்ததாகவே இருக்கும் வாழ்க்கைத் தரமும் உயர்வானதாகவே இருக்கும் இவை இயல்பு நிலை பொருளாதார சூழல் என்றே கூறலாம்.

எங்களுடைய நாட்டில் படித்தது மட்டுமே...எங்களுடைய நாடு அபிவிருத்தியடைய எத்தனை காலங்களோ என மனதுக்குள் வேதனைப்பட்டதோடு தன்னிறைவு காணும் நிலையை உணஉந்தும் சமூகத்துக்கு பாரமில்லாமல் உழைத்து வாழும் தகுதியை பெற்று விட்டதையும் அத்தோடு இந்த நாட்டு சமூகச் சூழலோடு இசை வடைந்து வருவதையும் எண்ணி மகிழ்ச்சியடைந்தான்.

பருவத்தின் உணர்ச்சிகள் சஞ்சலப்படுத்தினாலும் கடந்து வந்த பாதைகள் கற்றுதந்த பாடங்கள் திடமான முடிவை எடுக்க சக்தி யளித்தது. ஒரு வாரம் மின்னல் போல் கண்ணிலே வந்து மறைந்தது.

நாளை விடிந்தால் சனிக்கிழமை. பொன்னம்பல மாமா கல்யாண விடயமாக என்னோடு பேச வரும் வேளை என்ன பதிலை கூறுவது? அம்மாவின் கனவு சந்தோசம் எல்லாமே என் பதிலில் அடங்கியிருக்கிறது.

“கடவுளே ஒரு பதில் வேண்டும்”

தாய் சொல்லை தட்டாத தனையனா?

பத்மகலாவின் மனம் நிறைந்த காதலனா?... மனம் குழம்பிக் கொண்டிருந்தான்.

எத்தனை இடத்தில் வீழ்ந்து வீழ்ந்து எழுந்து விட்டேன். இந்தக் காதலுக்கும் கல்யாணப் பேச்சுக்கும் முற்றுப் புள்ளி வைக்க என்னால் முடிய வில்லையே. கடவுளே...என நினைத்துக் கொண்டு அயர்ந்து தூங்கி விட்டான்.

பொன் மஞ்சள் பூசிக் குளித்த இளம் காலை பறவைகளின் இசையோடு விடிகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மாவின் தொலை பேசி அழைப்பு வரப்போகிறது. பொன்னம்பல மாமா

வராமல் இருக்க வேண்டும் என மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தான். பத்மகலாவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாமல் கதைப்பாள். அத்தோடு குமுதாவின் பிறந்த நாள் மாலை 4 மணிக்கு போக வேண்டும். அங்கும் எதிர்கால மருமகனாக வரப் போகும் என்ற ஆசை உணர்வுகளை நிறைத்தபடி வரவேற்க காத்திருப்பு.

இன்று எனது காதலை சொல்லியே தீர வேண்டும். இல்லை யேல் என்னுடைய எதிடகாலம் சஞ்சலமாகி விடும். அத்தோடு இன்றைய நாள் எனது வாழ்க்கை சம்மந்தப்பட்ட முடிவை எடுக்கும் நாள். இன்றைய சனிப்பலன் எப்படியோ? சீலன் சஞ்சலப்பட்டுக் கொண்டு இருக்கும் போது தொலை பேசி அழைப்பு மணி அடித்தது. அம்மாவாக இருக்கலாம். பத்மகலாவாக இருக்கலாம். அல்லது வேறு புதுப் பிரச்சனையாக கூட இருக்கலாம்? சீலன் பதற்றத்தோடு தொலை பேசியை கையில் எடுத்தான்.

"கலோ"

"கலோ நான் பத்மநாதன் மாமா கொழும்பிலையிருந்து கதைக்கிறன்."

"மாமா நான் சீலன்தான் ...எப்படியிருக்கிறியள்?"

"சுகமாக இருக்கிறன் என்று சொல்ல முடியாது."

"ஏன் மாமா என்ன பிரச்சினை...சோர்வாகக் கதைக்கிறியள்"

"வயதும் போய்க் கொண்டிருக்குது... அதோட நீரிழிவு நோயும் வந்திட்டுது"

"யாருக்குத்தான் வருத்தம் இல்லை. இப்பு எல்லாருக்கும் ஒரு வருத்தம் இருக்கத்தான் செய்யுது. மருந்தைக் கவனமாக எடுங்கள்"

"சீலன்..."

"சொல்லுங்கோ..."

"அம்மா ஏதாவது சொன்னவாவா"

"ம்..."

"அம்மாவிற்கு சாம்பவியை நல்லாய்ப் பிடிச்சிருக்கு"

"......"

"சீலன் நான் என்ன சொல்ல வருகிறன் என்பது உங்களுக்கு விளங்குத்தானே"

"ஓம்..."

"என்ன முடிவெடுத்திருக்கிறியள்"

*சாம்பவியை கல்யாணம் செய்யச் சொல்லி அம்மா தொலை பேசியில் சொல்லியிருந்தார். பத்மகலாவும் தானும் ஒருவரை யொருவர் காதலிப்பதும், கனடாவிலிருக்கும் அவள் ஜேர்மனிக்கு வெகுவிரைவில் வரவிருப்பதையும் பத்மநாதன் மாமாவுக்கு எப்படிச் சொல்வது என்று தடுமாறினான்.*

*துணிவுடன் முடிவுகளைச் சொல்ல வேண்டும் என்று மனம் தீர்மானித்தாலும் அதற்குரிய சந்தர்ப்பம் வரும் போது மனம் தடு மாறத்தான் செய்கிறது. சில விநாடிகள் சீலன் மௌனமாக இருந்தான். எப்படி ஆரம்பிப்பது எனத் தயங்கினான்.*

*"சீலன் ஏன் மௌனமாக இருக்கிறியள் எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்"*

*"மாமா நான் சொல்லுறன் என்று கோவிக்காதை யுங்கோ... உங்கள் விருப்பத்தை என்னால் நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறன்"*

*"....."*

*"நான் யாழ் பல்கலைக்கழகத்தில் படித்த போது பத்மகலா என்ற பெண்ணும் நானும் ஒருவரையொருவர் விரும்பத் தொடங் கினோம். அவள் இப்ப கனடாவிலிருக்கிறாள். நாங்களிருவரும் கல்யாணம் செய்யப் போகிறம்...அதுதான்..."*

*"...."*

*சில விநாடிகள் பத்மநாதன் எதுவும் பேசவில்லை. அவை சீலனிடமிருந்து இப்படி ஒரு பதில் வரும் என எதிர்பார்க்க வில்லையோ தெரியாது அதுதான் காரணமாகவும் இருக்கலாம்.*

*"மாமா"*

*அவரிடமிருந்து பெருமூச்சொன்று வெளிவந்தை தொலை பேசி வழியாக சீலனால் கேட்க முடிந்தது.*

*"மாமா ஏன் மௌனமாக இருக்கிறியள் எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். என்னுடைய நிலமையை மூடிமறைக்காமல் சொன்னதால் கோபமா"*

*"இல்லை இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. கோபப் படவும் இல்லை. நீங்கள் எடுத்த முடிவு சரியானதுதான். விரும்பிய வளோடு சேர்ந்து வாழ்வதே வாழ்க்கை"*

*"என்னுடைய நிலையைப் புரிந்து கொண்டமைக்கு நன்றி மாமா"*

“பரவாயில்லை. அது சரி அம்மாவிற்கு தெரியுமா”

“யாழ்ப்பாணத்திலை இருந்த போது பத்மகலா எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறா. அம்மாவுக்கு சாடை மாடையாகத் தெரியும்”

“சரி நான் ரெலிபோனை வைக்கிறன். சாம்பவிக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உங்களோடு கதைத்ததை அம்மாவிற்குச் சொல்லுறன்”

என்ற சொல்லியபடி பத்மாநாதன் தொடர்பைத் துண்டிக் கிறார். ஒரு பாரத்தை இறக்கி வைத்தது போல் சீலன் உணர்ந்தேன். ஆனால் அம்மாவிடமிருந்து என்ன மாதிரியான தொலைபேசி வரப்போகிறதோ என அதையும் யோசித்தான்.

நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. இன்றைக்கு அரைநாள் வேலை. வேலை முடிந்து வந்தவுடன் சத்தியநாதன் மகளின் பிறந்த நாளுக்கு போக வேண்டும் என்று தீர்மானித்தபடி வேலைக்கு கிளம்பினான் சீலன்.

சத்தியநாதன் தனது மகளுக்கு மண்டபம் எடுத்து பிறந்தநாள் விழா செய்து கொண்டிருந்தார். மண்டபத்தின் வாசலில் சீலனைக் கண்டதும் சத்தியநாதனும் மனைவியும் அவனை வரவேற்று கேக் வைத்திருந்த மேசைக்கு முன்னால் இருந்த நாற்காலி வரிசையில் கொண்டு உட்கார வைக்கிறார்கள்.

சத்தியநாதனின் மகளின் இருபத்தியோராவது பிறந்து நாள் இது. பல்கலைக்கழகத்தில் படித்து முடித்த அவள் இப்பொழுது ஒரு நிறுவனத்தின் அதிகாரி நிலைப் பணியில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

மண்டபத்திலிருந்த ஒவ்வொருவரிடமும் சென்று உரையாடி நன்றி சொன்ன அவள் முன் வரிசையிலிருந்த சீலனிடம் வந்த போது முகமெங்கும் நாணப் பூக்கள் பூக்கின்றன. ஒருவிதப் படபடப்போடு சீலனுக்குக் கை கொடுக்கிறாள். அந்த நேரம் பார்த்து சத்தியநாதனின் நண்பர் கனகலிங்கம் சீலனுக்கு அருகில் வந்து “இவர் ஜேர்மனிக்கு புதியவர் வந்து கிட்டடத்தட்ட ஆறுமாதங்களாகின்றன. பிஎம்டபுள்யூ கார் கொம்பனியில் பயிற்சி பெறுகிறார்” என அவளுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

அவள் புன்னகையுடன் அதைக் கேட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு அகலுகிறாள். இரண்டு மீற்றர் போனவள் திரும்பி சீலனைப் பார்க்கிறாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த சீலனும் தன்னை

அவள் திரும்பிப் பார்ப்பதைக் கவனிக்கிறான். மெலிந்த தேகம் அழகான முகம். தலைமயிரை அழகாக சுருட்டி விட்டிருந்தாள். சிவப்பும் வெள்ளையும் கலந்து சாதாரண சேலையைக் கட்டியிருந்தாள்.

கேக் வெட்டி முடிய அவளோடு நின்று எல்லோரும் படம் எடுக்கிறார்கள். சீலனும் சத்தியநாதன் அவர் மனைவி அவரின் மகளுடன் நின்று படம் எடுக்கிறான். பிறந்தநாள் விழா விருந்து முடிய அவளிடமும் சத்தியாதன் அவரின் மனைவியிடமும் விடைபெறுகிறான் சீலன்.

“சீலன் கொஞ்சம் நில்லுங்கள். நான் காரிலை கொண்டு போய் விடுகிறன்” என்று சொல்லியபடி கனகலிங்கம் அவனிடம் வருகிறார்.

தான் பஸ்ஸில் போவதாகச் சீலன் சொல்லியும் அவர் விட்பாடில்லை. தவிர்க்க முடியாமல் சீலன் அவருடன் காரில் போவதற்கு ஒப்புக் கொள்ளுகிறான். காரில் ஏறி உட்கார்ந்ததும் கனகலிங்கம் காரை ஸ்டார்ட் செய்யாமலேயே தொண்டையை செருமியபடி “சீலன் உங்களிட்டை ஒரு விசயம் கதைக்க வேணும்” என்கிறார்.

என்ன என்பது போல் கனகலிங்கத்தை சீலன் பார்க்கிறான். கனகலிங்கம் தயங்கியபடி “சீலன் இன்றைக்கு பேர்த்டேய் நடந்த பிள்ளைதான் சத்தியநாதனின் மூத்த மகள். அவளுக்கு கல்யாணத்தை செய்து வைக்க வேண்டும் என்று அவரும் மனைவியும் என்னிடம் சொல்லிவிட்டு உங்களைப் பற்றியும் கேட்டார்...

“..................”

“நேரடியாகக் கேட்பதற்கு குறை நினைக்க வேண்டாம். உங்களுடைய அப்பா அம்மா சகோதரங்கள் இங்கையிருந்திருந்தால் அவையிடம் கேட்டிருக்கலாம்... தன்ரை குடும்பத்திற்கு உங்களை மருமகனாக எடுக்க அவை விரும்புகினம்... அதுதான் உங்களிடம் கேட்கச் சொன்னவை” எனத் தயங்கித் தயங்கி கனகலிங்கம் கேட்க, என்ன சொல்வதென்றே தெரியாமல் தயங்கிய சீலன் ஒருவாறு தன்னை நிலைப்படுத்திக் கொண்டு காலையில் பத்மநாதன் மாமாவுக்குச் சொன்ன அதே பதிலைச் சொல்லுகிறான். பத்மகலா இங்கு வரப்போவதையும் சொல்கிறான். இறுதியாக கோபிக்காதையங்கோ என சொல்லி முடிக்கிறான்.

இப்படி நேர்மையாகச் சொன்னதற்காக சீலனை பாராட்டிய கனகலிங்கம் காரை ஸ்டார்ட் செய்து சீலனை அவனின் அறையில் விடுவதற்காக போய்க் கொண்டிருக்கிறார். போகும் போது பிஎம்

டபுள்யு நிறுவனத்தில் தொழில் பயிற்சி கிடைத்தது அதிர்ஸ்டம் கவனமாகப் பயிற்சி எடுங்கள், படியுங்கள் பெரிய ஆளாக வரமுடியும் என ஆலோசனை கூறுகிறார்.

சீலனின் வீடு வரவே அவனை இறக்கிவிட்டுச் செல்லுகிறாஉ. கதவைத் திறந்து சீலன் உள்ளே போக ரெலிபோனும் அடிக்கிறது. கலாவாகத்தான் இருக்கும் என நினைத்தபடியே ரெலிபோனை எடுக்கிறான். மறுமுனையில் பத்மகலா.

"கலோ"

"பேர்த்டேய் முடிஞ்சு வந்திட்டியளா"

சீலன் திகைத்துப் போய்விட்டான். பத்மகலா கலகலவெனச் சிரித்தாள்.

"நான் பேர்த்டேய்க்குப் போனது உங்களுக்கு எப்படித் தெரியும்"

"உங்கடை நடவடிக்கைகளை கவனிக்க உங்கை ஒரு சிஐடியை வைத்திருக்கிறன்" மீண்டும் சிரிக்கிறாள் பத்மகலா.

"கலா பகிடிவிடாமல் சொல்லுங்கள் யார் சொன்னதென்று" சீலன் கேட்க. மட்டக்களப்பில் தங்கள் வீட்டுக்கு பக்கத்திலிருந்த பெண் ஒரு குடும்பமாக இப்பொழுது ஜேர்மனியில் நீங்களிருக்கும் நகரத்தில்தான் இருக்கிறார்கள். அவர்களும் நீங்கள் போன பேர்த் டேக்கு வந்தவை. அந்தப் பெண்தான் ரெலிபோன் செய்து சொன்னவள்.

"என்னைப் பற்றி என்னென்று அவவுக்கு தெரியும்"

"ஏதோ ஒரு விதத்தில் அறிந்திருக்கிறாள். வேறு என்ன புதினம்"

"ஒன்றுமில்லை"

பத்மநாதன் மாமா கேட்டதையும் கனகலிங்கம் கேட்டதை யும் சொல்லி ஏன் வில்லங்கத்தை விலைக்கு வாங்குவான் என அவன் மௌனமாக இருக்கிறான்.

பத்மகலா "நான் வாற வெள்ளியைவிட்டு அடுத்த வெள்ளி ஜேர்மனி பிராங்பேர்ட் எயர்போட்டுக்கு காலை பத்தரை மணிக்கு வாறன் பிராங்பேர்டிற்கு வாங்கோ" என அவள் திடுதிப்பென்று அவள் சொல்லியதும் நம்ப முடியாமல் சீலன் திகைத்தாலும் உள்ளுக்குள் ஒரே மகிழ்ச்சி.

"சரி வாறன்"

"நான் ரெலிபோனை வைக்கிறன்" என்று சொல்லியவாறு பத்மகலா தொடர்பைத் துண்டிக்கிறாள்.

சீலனோ மீண்டும் தானும் பத்மகலாவும் ஒன்று சேரப் போகிறோம் என்ற சந்தோசத்தில் படுக்கையில் படுத்திருந்தும் நித்திரை வராமல் புரண்டு புரண்டு படுத்தபடி இருக்கிறான்.

உடம்பு அடித்துப் போட்டால் போல் இருந்தது.

இன்றைக்கு வேலைக்குப் போகவேண்டாம் ஆறுதலாக எழும்பி, ஆறுதலாகக் கோப்பி குடித்து, ஆறுதலாகச் சாப்பிட்டு, ஆறு தலாக சுடு தண்ணீரில் ஆசை தீரக் குளித்து, வெளிநாட்டுக்கு வந்த நாளில் இருந்து இந்த ஆறுதல் என்ற வார்த்தையே மறந்து விட்டது போல் இருந்தது. சீலன் எழும்பி வேலைக்கு வரமுடிய வில்லை என போன் பண்ணிட்டு மறுபடியும் கட்டிலில் வந்து விழுந்தான்.

குமரன் யாழ்ப்பாணம் போவதாக சொல்லி இருந்தான்.

அம்மாவுக்கு ஒரு நல்ல சீலை, தங்கச்சிக்கு ஒரு நல்ல வடிவான காஞ்சிபுரம் இவ்வளவும் இண்டைக்கு கடைக்குப் போய் வாங்க வேண்டும்.

சீலன் மனதிற்குள்ளயே பட்டியல் போட்டுக்கொண்டான். நேரம் பதினொன்றை நெருங்கியது. சிட்டுக்குருவி பதினொரு முறை தலையை காட்டிக் காட்டிவிட்டு கூண்டுக்குள் தன்னை இழுத்துக் கொண்டது.

சீலன் கட்டிலை விட்டு எழுந்தான். எல்லாவற்றையுமே ஆறுத லாகச் செய்து விட்டு வீட்டை விட்டு இரண்டு மணி போல் கிளம் பினான். இந்திய இலங்கை கடைகளில் கூட்டம் அலை மோதியது.

ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி தனக்கு பிடித்தமானவற்றை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான். தனக்கு எதிராக வந்த பெண்ணைக் கண்டு திகைத்து விட்டான். இது...? இது... சுபத்திரா அக்கா...அவாவோ? நோர்வேக்கு கல்யாணம் கட்டிக் கொண்டு போனவா எப்படி இங்கை?

அவன் யோசிக்கும் முன்பு வந்த பெண்மணி சடுதியாகத் திரும்பித் தான் வந்த பாதையில் நடக்கத் தொடங்கினாள். சீலன் விட வில்லை, "சுபத்திரா அக்கா, சுபத்திரா அக்கா" எனக் கூப்பிட்டுக் கொண்டு விரைவாக முன்னால் சென்று அவளை மறித்தான். அதற்கு மேலும் அவனிடமிருந்து தப்ப முடியாத நிலையில் சுபத்திரா நின்றாள்.

"தம்பி சீலன் எப்ப இங்கை வந்தனீர்."

"தம்பி எண்டு சொல்லுறீங்கள். பிறகு ஏன் என்னைத் தெரியாத மாதிரி ஓட்டம் பிடித்தனீங்கள".

அவள் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல வென உதிர்ந்தது .

"வாரும் சீலன் ஒரு கோப்பிக் கடையில் இருந்து கதைப் போம்." இருவரும் அருகே உள்ள ஒரு கோப்பிக் கடைக்கு போய் கோப்பியை ஓடர் பண்ணி விட்டு அமர்ந்தார்கள்.

"சொல்லுங்கோ அக்கா நோர்வேக்குப் போனனீங்கள். எப்ப இங்கை வந்தனீங்கள்? "

"ஊரில இருக்கேக்கிள்ளை எவ்வளவு வடிவாக இருந்தனீங் கள். இப்ப கடுமையாகப் பழுதாப் போனீங்கள்"

சுபத்திராவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

"சீலன் என்னுடைய அப்பா வெளிநாட்டு மாப்பிள்ளை வேணுமெண்டு சீதனம் டொனேசன் என அள்ளிக் குடுத்து நோர்வே மாப்பிளையை எடுத்தார். அவருடன் நோடீவேக்கு வந்து இறங்கிய அடுத்த நாளே ஓர் வெள்ளைக் காரி வீட்டுக்கு வந்தாள். எனக்கு முன்னேயே அவரைக் கட்டிப்பிடித்து கொஞ்சினாள். இவரும் நான் வெளியாலபோட்டு வாரன் எனச் சொல்லிப்போட்டு அவளுடன் காரில் ஏறிப் போய் விட்டார்."

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அன்று நேரம் கழித்து வந்தவரிடம் யார் அவள் எனக் கேட்டேன. அவள் என்னுடைய பெண்சாதியாகப் போறாள். நாங்கள் இருவரும் ஒன்றாகக் குடும்பம் நடத்துகிறோம்" என்றார்.

"என்னுடைய அம்மா தங்கச்சி மாரை கரை சேர்க்க வேணும் என்று அழுது கொண்டு கூறியதால் தான் யாழ்ப்பாணம் வந்து உன்னைக் கல்யாணம் கட்டிக் காசை அம்மாவிடம் குடுத்தனான்" என்றாடீ. நான் விறைத்துப் போய்விட்டேன்.

"என்னை கைவிட்டு விடாதையுஙகோ, முறையாக என்னை நீங்கள் கல்யாணம் கட்டிக் கொண்டு வந்தனீங்கள் என்று அவளுக்கு விளங்கப்படுத்துங்கோ" என்றன்.

என்னுடைய அழுகை அவரை ஒன்றும் செய்யவில்லை. என்னைத் தனியே விட்டு விட்டு ஒவ்வொரு நாளும் வேலையால்

வந்தவுடன் அவளுடன் வெளிக்கிட்டு விடுவார். ஒரு நாள் இரவு முழுவதும் அழுது சண்டை பிடித்தேன்.

இரண்டு நாட்களின் பின்னர் வா உன்னை வேறு இடத்துக்குக் கூட்டிப்போய் அங்கே நாங்கள் சந்தோசமாக இருப்போம். வெள்ளைக் காரிக்கு எங்கட புது விலாசத்தை குடுக்க மாட்டன் என்றார்.

அடுத்த நாள் புகையிரத்தில் ஏறிப் புறப்பட்டம். அது ஓர் நீண்ட பயணமாக இருந்தது. நான்கு ஸ்ரேசன் கடந்து இருக்கும். ரொய்லட்டுக்கு போட்டு வாறன் என்று சொல்லிப் போனவர் திரும்ப வரவேயில்லை. வருவார் வருவார் எனத் திரும்பி பார்த்தபடியே இருந்தன். அவர் வரவில்லை கடைசி ஸ்ரேசனும் வந்து விட்டது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. படபடப்பும் பயமும் ஏற்பட்டது. இறங்கி ஸ்ரேசனில் இருந்த கதிரையில் இருந்து அழுது கொண்டிருந்தேன்.

நான் அழுது கொண்டிருப்பதைப் பார்த்த ஒரு வெள்ளைக் காரி என்னருகில் வந்து என் தலையை அனுதாபமாகத் தடவி ஏதேதோ கேட்டாள். எனக்கு அவளுடைய மொழி புரியவில்லை எனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் உரையாடினேன்.

அவள் என்னைத் தன்னோடு அழைத்துச் சென்றாள். ஒரு வாரம் சைகைப் பாசையிலேயே எங்கள் உரையாடல் தொடர்ந்தது. அடுத்த கிழமை அவளைப் போலவே இன்னொரு பெண்மணி வீட்டிற்கு வந்தாள்.

என்னை அழைத்து வந்தாள். புதிய பெண்மணியுடன் என்னைப் போகச் சொன்னாள். ஏன் என சைகையில் கேட்டேன். புதிய பெண் மணி ஜொப் ஜொப் என்றாள். வேலை செய்யப் போகிறேன் என்ற நம்பிக்கையில் அவளுடன் புறப்பட்டேன். என்னைப் போலவே புதிய பெண்மணிக்கு கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்திருந்தது.

அவளுடைய பெயர் மார்க்கிரட். அழகாக இருந்தாள். ஆனால் மார்க்கிர்ட்டின் வீட்டிற்கு வந்த பிறகுதான் நான் பிழையான இடத் திற்கு வந்து விட்டேன் என்று புரிந்தது. அது ஓர் விபச்சார இல்லம்.

கொஞ்சம் பெண்களை வைத்து வியாபாரம் நடாத்திக் கொண்டிருந்தார்கள். மார்க்கிரட் வெளியே மசாச் செய்யும் இடம் என பெயருக்கு பலகை ஒன்று மாட்டப்பட்டிருந்தது. நான் எவ்வளவோ அழுது ஆர்ப்பாட்டம் பண்ணியும் அவள் கேட்க

வில்லை.

சம்மதிக்காவிட்டால் என்னை வெளியே துரத்திப் போடுவன் எனப் பயப்படுத்தினாள் .சீலன் தற்கொலை செய்பவர்கள் கோழை என்கிறார்கள். இல்லை உண்மையிலே. அவர்கள் தைரியசாலிகள் என்னால் தற்கொலை செய்யக் கூட முடியவில்லை. உயிரற்ற உடலாக அவளது கட்டளைக்குப் பணிந்தேன் இரண்டு மாதம் சென்றிருக்கும் அந்த வீட்டிற்கு எங்கள் ஊர்க்காரர் ஒருவர் வந்தார். அவர் பெயர் மணியம்.

அவருடைய காலில் விழுந்து கதறிக் கதறி அழுதேன் என்னை இந்த நகரத்திலிருந்து கூட்டிக் கொண்டு போங்களே எனக் கெஞ்சினேன். வந்தவர் நல்லவர். முப்பத்து எட்டு வயதாகியும் தன்னுடைய திருமணத்தைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்காத அம்மா தன்னை பணம் தரும் மெசினாக எண்ணுவதைச் சொல்லி கவலைப்பட்டார். அப்படி ஒரு விரத்தியான நேரத்திலேயே தன்னுடைய சினேகிதன் இங்கு அழைத்து வந்ததாகக் கூறினார்.

அன்று இரவு முழுவதும் என்னுடைய கவலையை அவரும் அவரது கவலையை நானும் கேட்டு பதில் கழிந்தது. அடுத்த நாள் தொட்டு என்னைத் தேடி வருவதாக மணியம் அந்த விடுதிக்கு வந்து வந்து போனார்.

ஒரு நாள் மார்க்கிரட்டை மசாஜ் என்ற லைசன்சை வைத்துக் கொண்டு தவறான் தொழில் நடத்துவதாக பொலிசாரிடம் கூறப் போவதாக மிரட்டி என்னை அந்த நகரத்திலிருந்து இருந்து மீட்டுக் கொண்டு வந்தார்.

பொலிஸ் ஸ்ரேசனுக்கு என்னை அழைத்துச் சென்று என்னுடைய நிலபரத்தை எடுத்துச் சொன்னார். இங்குள்ள அரசாங்க அலுவலகங்கள் உதவும் மகளீர் மன்றங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்றார். ஒரு வாரத்தின் பின்னர் பொலிசார் என்னுடைய கணவட சபேசன் அந்த விலாசத்தில் இல்லையென்று கூறி தாம் இன்னமும் தேடுவதாகச் சொன்னார்கள்.

என்னைக் கை கழுவி விட்ட உடனேயே இருவரும் இடம் மாறிப் போயிருக்க வேண்டும் என நினைக்கின்றேன். அவளது கண்ணீரை ஓர் சகோதர வாஞ்சையுடன் எட்டித் துடைத்தான் சீலன்.

“அழாதேங்கோ அக்கா. உங்கட அப்பாவும் வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற ஆசையில செய்யேல்லை. நாட்டு நிலவரத்தால

உங்களைப் போல வடிவான பிள்ளைகளை வைச்சிருக்கப் பயந்தும் இருக்கலாம்".

"அதுக்காக ஒருவரையும் தெரியாத நோர்வே நாட்டுக்குப் புரோக்கரிண்ட பேச்சை நம்பி கல்யாணம் செய்து அனுப்பினதே தன்னுடைய மகளுக்கு என்ன நடக்கும் என்றே தெரியாத அப்பா. என்னை ஊரிலேயே கட்டிக் குடுத்திருந்தால் என்னுடைய நன்மை தீமைக்கு அழவாவது வந்திருப்பார். தான் வெளிநாட்டுக்கு அனுப்பிய மகள் ஓர் விபச்சாரியாக நகரத்தில் உழைத்திருக்கின்றாள் என அறிந்தாள் அவர் உயிரோடு இருப்பாரா".

"அக்கா நீங்கள் போய் நாலாவது மாசமே உங்களைக் காணவில்லை என்று சபேசன் அறிவித்து விட்டார். செத்த வீடு கொண்டாடி விட்டு இருக்கினம். அதுதான் உங்களை இங்கை கண்டு திகைத்துப் போனன், அப்ப இப்ப சீவியத்திற்கு என்ன செய்யிறீங்கள்".

என்னை ஒரு பிளாஸ்டிக் செய்கிற பெக்றரி ஒன்றில சேர்ந்து விட்டிருக்கிறார். கொஞ்சம் சம்பளம் தான் சீவியம். டிக்கட் காசைச் சேர்த்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு போற நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய பாஸ்போட் கூட சபேசனிடம் தான்.

மணியந்தான் எனக்கு பாஸ் போட் எடுக்கவும் ஓடித் திரிகிறார். எனக்கு இவ்வளவு உதவி செய்த மணியத்திற்கு நான் என்னைக் காணிக்கை ஆக்கியுள்ளேன். தாலி கட்டாத மனைவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

மகன் குடும்பப் பொறுப்பானவன். ஒழுக்கமானவன் என்பதுக் காக உரிய வயதில் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்காமல் பல அம்மாக்கள் பிழை விடுகிறார்கள். எப்ப மணியம் கல்யாணம் கட்டிகிறரோ அப்ப நான் கண்ணியமாக விலகி விடுவன் சீலன்.

சீலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "அக்கா நான் மணியம் அண்ணாவை சந்திக்கவேணும்" என்ற சீலனிடம் சுபத்திரா "இந்தாரும் என்னுடைய போன் நம்பர். அடிக்கடி அவர் வரமாட்டார். விடுமுறை நாட்களில் மட்டுமே வருவார்" எனச் சொல்லியபடியே தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தாள்.

அக்கா நானும் உங்களை இலங்கைக்கு அனுப்ப என்னாலான முயற்சிகளைச் செய்கிறேன் என்றான். நெகிழ்ந்து போன அவள் அவனது கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக்கொண்டாள் கைகளின்

நடுக்கத்தில் அவளது வலியை அவன் புரிந்து கொண்டான்.

சீலனின் கையிலிருந்த ஜேர்மன் பத்திரிகையை பார்த்த சுபத்திரா "ஜேர்மன் பேப்பர் வைத்திருக்கிறியள். ஏதாவது முக்கிய மான செய்தியா" எனக் கேட்க, உலக நாடுகளில் நடக்கும் பெண் களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை பற்றிய கருத்தரங்கம் நடக்கவிருக்கு, நான் போகிறன். நீங்களும் வருகிறீர்களா" என சுபத்திராவிடம் கேட்கிறான் "பார்ப்பம்" என அவள் பதில் சொல்லுகிறாள்.

சீலன் அவளிடம் விடைபெற்றுச் செல்லுகிறான்.

## நிறைவுப் பகுதி 1

## எழுதியவர்: திருமதி.தேனம்மை லக்ஸ்மணன், இந்தியா

பெண் என்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப்பீழை இருக்குதடி தங்கமே. என்று பாரதியார் பாடியது சும்மாவா.

பத்மகலாவின் வருகைக்காக சீலன் பிராங்போவட் ஏர்போர்ட்டில் வெளியேறுவோர் கதவிற்கு முன்னால் படபடப் புடன் காத்திருந்தான். விமானத்தை விட்டிறங்கி பாஸ்போட் பரிசோதனை முடிந்து வெளியே வரும் கதவுக்கூடாக ஒவ்வொரு பயணியும் வரும் போதும் கதவு திறப்பதும் வருவது பத்மகலாவா என ஆவலுடன் கண் இமைக்காமல் பாவத்துக் கொண்டிருந்தான்.

சில விநாடி இடைவெளிகளுக்குள் மூடித்திறக்கும் கதவிடுக் குள் ஊடாக பத்மகலாவின் உருவம் தெரிகிறதா என அவனின் கண்கள் தேடின.

இதோ ப்ராங்க்ஃபர்ட் ஏர்ப்போர்ட்டில் பீடு நடைபோட்டு தன்னருகே வரும் பத்மகலாவைப் பார்த்துப் பெருமிதமாக இருந்தது சீலனுக்கு.

சீலன் தனக்காக ஒற்றைச் சிவப்பு ரோஜாவுடன் கண்களில் அவலும் பரசவமும் மின்ன காத்திருப்பதைக் கண்டதும் அவனை நோக்கி வேகமாக நடந்து வர அவனும் அவளை நோக்கி நடந்தான்.

சில விநாடிகள்தான், தாயிடம் சேய் பாய்ந்து சென்று அணைத்துக் கொள்வது போல் இருவரும் ஒருவரை அணைத்துக் கொண்டனர்.

பத்மகலா சீலனின் தோள்மீது சாயந்து அவனை இறுக்கி

அணைத்தவாறு குலுங்கி குலுங்கி அழுது ஆனந்தக் கண்ணீவ சொரிந்தாள்.

அவளின் கண்ணீர் சீலனின் சேர்ட்டையையும் பனியனை யும் தாண்டி அவனின் முதுகைச் சுட்டது. சீலன் அவள் முதுகை ஆதரவாக வருடியவாறு தனது கண்களையும் துடைத்துக் கொண்டான்.

“சீலன் உன்னோடு சேருவேன் என எதிர்பார்க்கவேயில்லை”

குலுங்கி குலுங்கி அழுதாள். அது காதலில் தோய்ந்து வந்த அழுகை.

அவர்கள் இருவரும் பொது இடம் என்றும் கவனிக்காது அணைத்துக் கொண்டு நின்றதை வெள்ளைக்காரர்கள் வியப்புடன் பார்த்தார்கள். ஏனென்றால் தமிழ்க் காதலர்கள் பொது இடங்களில் கட்டிப்பிடித்து அணைப்பது அரிது. அதனால் அவர்கள் வியப்புடன் பார்த்தார்கள். சிலர் அவர்களிருவரையும் பார்த்து புன்னகைத்துக் கொண்டே சென்றார்கள்.

அணைப்பிலிருந்து விடுபட்டனர் இருவரும்.

சீலன் தனது காதலியை அழைத்துச் சென்று வாங்கொன்றில் உட்கார வைத்துவிட்டு “இருங்கோ இங்கே ஒரு கோப்பி குடிச்சுப் போட்டுப் போவோம் என்றான். அதனருகே ஒரு மக்டொனால்ட்ஸ் கடை இருந்தது. இருங்கோ வாரேன் என்று ஸ்டார்பக்ஸ் காஃபியை வாங்கிக் கொண்டு மக்டொனால்ட்ஸில் இரண்டு பர்கர் ஆர்டர் செய்து எடுத்துவந்தான்.

முன்சனுக்கு செல்லும் புகையிரதத்தில் திரும்பி வீட்டிற்கு வரும்போது சுடச் சுட பர்கரும் காஃபியும் சாப்பிட்டபடி வந்தார்கள். அவனது நெடுநாளைக்கு முன்னான கனவு ஞாபகம் வந்தது. குழந்தைத்தனமான கனவு. பத்மகலாவுடன் பர்கரும் ஐஸ்க்ரீமும் சாப்பிடுவதான கனவு. அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அது விரைவுப் புகையிரதம், பெரிதாகப் பயணிகள் இல்லை. பத்மகலா அவனின் தோளில் சாய்வதும் தலை நிமிர்த்தி பர்கரை சாப்பிடுவதும் கோப்பி குடிப்பதும் பிறகு தோளில் சாய்வதுமாக இருந்தாள்.

கனடாவிலிருந்து புறப்படும் போது தலைக்குத் தேய்த்துக் குளித்த சாம்பூவின் வாசனையும் அவளின் உடலிலிருந்த வாசனையும் அவனைக் கிறங்கடித்தது. அவனை அவள் உற்று என்ன என்பது போல் பார்த்த அவள் கண்கள் கலங்கி இருந்தன. பதறிவிட்டான் சீலன்.

முன்பு எப்போதோ கோபித்ததை நினைத்து அழுகிறாளோ. இல்லை அவள் பட்டென்று போட்டுடைத்தாள். அவனுடன் இனி சேர்வோமோ என்ற நிலையிலிருந்து இன்று கண்டடைந்த நிலை வரை அவள் மனக்கண்ணில் ஓடி இருந்தது.

“சீலன்...சீலன் என்று குழந்தை போலத் தேம்பியபடி. இந்தப் பொறாமைதான் எவ்வளவு பெரிய விடயம். பானு அக்காவைப் போய் சந்தேகப்பட்டேனே. மன்னிச்சிருங்கோ” என்றாள்.

“அதெல்லாம் விடு... உன் மனக்குழப்பம் அப்பிடிப் பேச வைத்தது. ஆனால் நீ கொடுத்து வைத்தவள் கலா. நம்மட பெண்கள் இங்கே படும் பாட்டை அறிந்தால் வருந்துவாய். நீ பாக்யசாலி என்பேன்.

“என் அம்மா. என் அம்மாவைப்போல எத்தனை அம்மாக்கள். தங்கட குஞ்சுகளை வெளிநாட்டுக்கு அனுப்புவித்து தப்பிச்சு வாழ்ந்தா போதுமெண்டு தங்கள் சொத்துசுகம் எல்லாத்தையும் வித்து தியாகியாக இருக்கிறார்கள். தன் ரத்தத்தைப் பாலாக் கொடுத்து தன் சேமிப்பையும் வழிச்சுக் கொடுத்து என்னென்ன துயரத்தோட வாழ்ந்து வருகிறார்கள். படிப்பு ஒண்டே தன்னை உயர்த்தும் என்று படிக்க வந்து பணத்தட்டுப்பாடாலும் உடல் நிலையாலும் பாதிப் படிப்போடு கல்யாணம் கட்டிப்போன என் தங்கச்சி, இங்கே தங்கட தாய்நாட்டை விட்டுத் தனியா உபத்ரவம் செய்யும், சந்தேக குணம் கொண்ட புருசனோட சின்னஞ்சிறு பிள்ளைகளோடும் ஊடே ஏக்கத்துல வாழ்ந்து வர்ற பானு அக்கா, குடிப்பழக்கத்தாலயும் மற்ற பழக்கங்களாலயும் புருஷன் அழைக்காம இருந்தாலும் வந்து அவனுக்குப் பணிவிடை செஞ்சு அவனுக்குப் பின்னே அநாதரவா ஆன பிரான்சில் வாழும் கமலா அக்கா, அடுத்தவங்களுக்கு உதவி வர்ற வவா அன்ரி, டேவிட் அங்கிள் மனைவி, தன்னோட வாழ்க்கையை தந்தைக்குப் பயந்து ஒளிச்சு பின்னே ஓடிப்போய்த் திருமணம் செய்த நிரோஜா.. ஹ்ம்ம் பெண்களுக்கு எங்கேயும் அதிகாரம் இல்லை. முடிவெடுக்க முடிவதில்லை.

உணர்ச்சி வசப்பட்ட மனநிலையில் பேசிக்கொண்டிருந்தான் சீலன். மனம் கட்டறுந்த நிலை.. “இன்னும் சிலபேரைப் பத்திச் சொன்னா உன் மனசு துடிக்கும் கலா... என்னைத் தன் சகோதரனாய் வரிச்ச சாந்தி, தன்னோட கணவனைக் காண பூஜைக்கு வந்த புஸ்பம் போல இருந்தா. ஆனா இந்த கண்டம் விட்டுக் கண்டம் மாறும் வித்தையில விசாவுக்கு ஏற்பாடு செய்த ஒரு காடையனால தன்னோட

உடல் மாசடைஞ்சிருச்சின்னு சொல்லி ஏழாவது மாடிலேருந்து உயிர் துறந்த சாந்தி.. அதை விடக் கொடுமை. நல்ல சீர் செனத்தியோட அப்பா அம்மா கட்டி வைச்ச பவித்ரா அக்கா இங்கே இப்போ என்று சொல்லும்போது குலுங்கிக் குலுங்கி அழுதுவிட்டான்.

பதறிப்போன கலா... "சீலன் சீலன்... என்னாச்சு? "என்றாள். அவங்க காரியம் முடிஞ்சு போச்சுன்னு அங்கே அவங்க அப்பா அம்மா எல்லாம் கர்மா பண்ணிட்டாங்க. ஆனா அவங்க இங்கே இங்கே ஒரு சீரழிவைச் சந்திச்சு இப்போ அதிலிருந்து மீள முடியாம இருக்காங்க.. பெண்களை போகப் பொருளா உலகமெங்கும் பயன்படுத்துறாங்க. அதுக்கு ஜெர்மனியும் விதி விலக்கில்ல. ஐரோப்பாவோட மையமா இது திகழுதுன்னு சொல்றாங்க.

திருமணம் செய்து கூட்டி வந்து புருசனால கைவிடப்பட்ட வங்க, கள்ளவிசாவில வந்தவங்க தாங்கள் ஜீவிக்க வேண்டி ஒரு வேலை தேடிப் போகும்போதும் அந்த அலுவலகங்கள்ல பாலியல் பலாத் காரத்துக்கு ஆளாகுறாங்க. யாதும் ஊரே யாவரும் கேளீர்னு இதுல ஈடுபட்டவங்க போதை அடிமையாவும் ஆகிடுறாங்க. அப்படிப் பட்டவங்களுக்கு நாம் ஏதும் உதவி செய்யணும் கலா என்றான்." அவனுடைய நெகிழ்வும் தீவிரமும் அவளிடமும் தொற்றிக் கொண்டது.

இந்தப் பேப்பரைப் பார். இதுல அடுத்த கிழமை பிராங் பேர்ட்டில பெண்களுக்கு நேரும் குடும்ப வன்கொடுமைகள் குறித்தும் பாலியல் பலாத்காரத்தை எதிர்த்தும் பேரணி நடக்க இருக்கு. அந்தப் பேரணியும் கருத்தரங்கும் அனைத்துலகப் பெண்கள் அமைப்பினால் நடத்தப்படவிருக்கின்றது.

உலக நாடுகள் அனைத்திலுமிருந்து அந்ததந்த நாடுகளி லிருக்கம் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளு கிறார்கள். அதன் முடிவுல நடக்கப் போற கருத்தரங்கத்துல மதுரைப் பல்கலைக்கழக பேராசிரியை மங்கையர்க்கரசியாரும், டென்மார்க்கி லிருக்கும் பேராசிரியர் குமாரவேல் அவர்களும் பேசுறாகிறார்கள். ஜேஉ மனிய பெண்கள் அமைப்பு அவர்களை அழைத்திருக்கிறார்கள்.

"அவர்கள் இருவரும் உன்னுடன் தொடர்பு கொண்டார்களா"

"ஓம் நான் அவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவர்கள் வருவதாகச் சொன்னார்கள். அவர்களிருவரும் பிராங்பேர்ட்டில் உள்ள ஒரு விடுதியில் தங்கப் போகிறார்கள். அவர்

களுக்கான செலவை ஜேர்மனிய பெண்கள் அமைப்பு பொறுப் பேற்றுள்ளது”

“அது சரி கலா! நீ இங்கை என்ன படிக்கப் போகிறாய் கனடா விலை மூன்று மாதம் டொக்ரருக்குப் படித்தாயே”

“பெண்ணியம் சம்பந்தப்பட்ட படிப்பையும் ஜேடனலிசமும் படிக்கப் போகிறன்”

“அப்ப டொக்ரர் படிப்பு”

“அதைவிட எனக்கு இதிலைதான் விருப்பம். படிப்புக்கு எல்லையும் இல்லை வயதும் இல்லை. யோசிப்பம்” என்றாள் பத்மகலா.

“அருமையான முடிவு. கனடாவிலை பெண்களுக்கான டொக்ரர் படிப்பை படித்தனி. அதை இங்கை தொடர முடியும். பெண்ணியம் சம்பந்தப்பட்ட படிப்பையும் ஜேர்சனலிசத்தையம் படித்தால் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளதாயும் இருக்கின்றது, இது முடியுமா உன்னால்....” என்று வாய் மூடமுன், “முடியும். சாதித்துக் காட்டிறன்” என்றாள் உறுதியாக.

புகையிரதத்தில் பேசியபடியே வந்த பத்மகலா சீலனின் தோளில் தூங்கிவிட்டாள். முன்சன் புகையிரத நிலையத்தை புகையிரதம் வந்தடைந்தது.

தனது தோளில் தலைசாய்த்துத் தூங்கிக் கொண்டிருந்த பத்மகலாவின் தலையை மெதுவாகத் தூக்கிய சீலன் “கலா நாங்கள் இறங்க வேண்டிய ஸ்ரேசன் வந்துவிட்டது, இறங்குவம்” என அவளை எழுப்புகிறான்.

புகையிரதத்தை விட்டு முதலில் இறங்கிய பத்மகலா, கனடாவிலிருந்து கொண்டுவந்து சூட்கேசை சீலனிடமிருந்து வாங்குகிறாள்.

“கலா இனி வீட்டை போய் சமைக்க ஏலாது. இங்கேயே உருளைக்கிழங்கு பொரியலை வாங்கிக் கொண்டு போய் வீட்டிலை வைத்துச் சாப்பிடுவம்” என்று சொல்லியவாறு பத்மகலாவை அழைத் துக் கொண்டு புகையிரத நிலையத்திற்கு எதிரேயிருந்த உணவு விடுதி யில் உருளைக்கிழங்குப் பொரியலை பார்சல் செய்து வாங்குகிறான்.

பத்மகலா விமானப் பிரயாணம், புகையிரதப் பிரயாணம் என சோர்ந்து போயிருந்தாள். தனது வீட்டுக்கு பஸ்ஸில் அவள் இருக்கும் கூட்டிக் கொண்டு போக முடியாது என புரிந்து கொண்ட சீலன்

ராக்சியில் அவளைக் கூட்டிக் கொண்டு போனான். அவனது வீடு மாடியில் இருந்தது.

ஒரு கூடம் கூடத்தோடு திறந்த சமையலறை,ஒரு படுக்கை யறை மலசலகூடம் இவ்வளவுதான் அவனது வீடு. கூடத்திலிருந்த சோபாவில் இருவரும் அமர்ந்தார்கள். மேலே பார்த்தபடி இருந்த பத்மகலாவின் கண்களிலிருந்து மெல்லக் கண்ணீர் கசிந்தது.

சீலன் அவளை ஆதரவாக அணைத்தபடி "இப்ப எதற்கு அழுகிறாய்...எதை நினைத்து அழுகிறாய்... அழாதை"என்கிறான்

அப்படியே அவன் மடியில் தலை வைத்தவள் குலுங்கி குலுங்கி அழுதாள்.

"முடியேலை சீலன் முடியேலை. அழாமலிருக்க முடி யேலை... சீலன் நான் கனடாவிலிருந்த போது உனக்கும் எனக்கும் இனிச் சரிவராது எனக்குச் சமனாக உன்னால் முடியாது என்று சொன்னேன். அதைக் கேட்ட நீ எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாய் என்பதை உணர்ந்தேன். அன்றிரவு நித்திரை இல்லாமல் அழுதேன். அக்காவிற்கும் அத்தானுக்கும் நான் இங்கு வருவதில் விருப்பம் இல்லை. ஆனால் பிடிவாதமாக இருந்தேன். அவர்களுடன் தினம் தினம் வாக்குவாதப்படுவதால் ஏதோ கோபத்தில் அப்படிச் சொன் னேன். நீ எவ்வளவு நல்லவன். எதையும் மனதில் வைத்திருக்காமல் இருக்கிறாய். என்னை மன்னித்துவிடு சீலன்" என அவனிடம் மன்னிப்புக் கேட்டாள்.

சீலன் அவளை ஒரு குழந்தையை மடியில் படுக்க வைத்து தலையை வருடிக் கொடுப்பது போல் அவளின் தலையை வருடிக் கொடுத்தபடியே "கலா அழுகையை நிறுத்து. நான் ஒன்றுமே நினைக் கேலை அழாதை" என்றபடி அவளின் கண்ணீரைத் துடைத்து விடுகிறான்.

கலா ஜேர்மனிக்கு வரப் போகிறாள் என்று அவள் சொன்ன வுடன் சீலன் வீட்டுக்கு லாண்டலைன் தொலைபேசி இணைப்பை எற்படுத்தியிருந்தான். தாய்க்கும் சுவிஸிலிருந்த தவம், டேவிட் அங்கிள், பானுவுக்கும் டென்மார்க்கில் ஆனந்தருக்கும் பேராசிரியவ குமாரவேலுவுக்கும் மதுரைப் பேராசிரியர் மங்கையற்கரசிக்கும் தனது தொலைபேசி இலக்கங்களைக் கொடுத்திருந்தான்.

நேற்று மங்கையற்கரசியும் குமாரவேலுவும் அடுத்த கிழமை பிராங்பேர்ட்டில் நடக்கவிருக்கும் சர்வதேசப் பெண்கள் பேரணி

யிலும் கரத்தரங்கிலும் கலந்து கொள்ள வருவதாக அறிவித்து விட்டார்கள்.

முகம் கழுவிவிட்டு வருகிறேன் என பத்மகலா எழவும் தொலைபேசி மணி அடித்தது. பத்மகலா தொலைபேசியை எடுத்து "கலோ" என குரல் கொடுக்க, மறுமுனையில் இரண்டு விநாடிகள் சத்தம் வரவில்லை. மறுபடியும் "கலோ" என்கிறாள் கலா.

மறுமுனையில் "கலோ நான் பானு பேசுகிறன் சுவிஸிலிருந்து. இது சீலனின் வீடுதானே... நீங்கள்...

"நான் பத்மகலா" அவள் சொல்லி முடிக்குமுன்,

"பத்மகலாவா" உற்சாகத்திலும் மகிழ்ச்சியிலும் பானுவின் குரல் தொலைபேசிக்கூடாக அதிர்கிறது. தொடர்ந்து பானு "எப்ப வந்தனீங்கள்" என்கிறாள். "இன்றைக்குத்தான் வீட்டுக்கு வந்து கொஞ்ச நேரந்தான் ஆகுது" என பத்மகலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே சீலன் எழுந்து தொலைபேசியிலிருந்த ஒலி பெருக்கியை அமத்த மறுமுனையில் பானு "எனக்கு சரியான சந்தோசம் பத்மகலா. நீங்கள்" சீலனுடன் வந்து சேர்ந்தது, சீலனுடன் பேசமுடியுமா" என அவள் கேட்க, சொல்லுங்கள் பானு அக்கா நான் கேட்டுக் கொண்டிருக்கிறன்" எனச் சீலன் சொல்கிறான்.

"சீலன்! வருகிற சனிக்கிழமை பிராங்பேர்ட்டிலை நடக்கிற சுடவதேச பெண்கள் பேரணியில் கலந்து கொள்ள நானும் சுவிஸ் பெண்கள் ஐந்து பேரும் வருகிறம். பிராங்பேர்ட்டில் விடுதியில் தங்குவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறார்கள், உங்கள் இருவரையும் சந்திக்க வேண்டும் என்று விருப்பம்...".

"நானும் கலாவும் அந்தப் பேரணியில் கலந்துகொள்ள வருகிறோம். உங்களை அங்கு சந்திக்க முடியும்."

"அப்படியா சந்தோசம். நான் வேலை செய்கிற இடத்திலை யிருந்துதான் ரெலிபோன் எடுத்தனான், சரி சந்திப்பம் ரெலிபோனை வைக்கிறன்". மறுமுனையில் பானு தொலைபேசியை துண்டிக்கிறாள்.

உருளைக்கிழங்குப் பொரியலை இருவரும் சாப்பிட்டு தேநீரும் போட்டுக் குடிக்கின்றனர். சீலன் சோபாவில் காலை நீட்டி படுக்க ஆயத்தமாக அவனின் தலைமாடடில் உட்கார்ந்த கலா அவனின் தலையை தனது மடியில் வைக்கிறாள்.

சீலன் மெதுவாகக் கண்ணயர்கிறான். என்னதான் அக்கா வுடனும் அத்தானுடனும் வாக்குவாதப்பட்டு தான் விரும்பிய

*காதலைத் தேடி ஜேர்மனிக்கு வந்துவிட்டாலும், என்னதான் இருந்தாலும் அவள் என் அக்கா என எண்ணிய பத்மகலா தொலைபேசியை எடுத்து எண்களை அமத்தி காதில் வைக்கிறாள்.*

*சில விநாடிகளில் தொடர்பு கிடைக்க "அக்கா நான் வந்து சேர்ந்துவிட்டன் சரி வைக்கிறன்" எனச் சொல்லி தொடர்பைத் துண்டிக்கிறாள்.*

*அவள் தொலைபேசியை வைக்க, தொலைபேசி மணி அடிக்க எடுத்து காதில் வைத்து கலோ சொல்ல முன்பு "சீலா ராசா! நான் அம்மா பேசுகிறன்" சீலனின் தாயின் குரல் வர பத்மகலா தடுமாறுகிறாள். சில விநாடிகள் எதுவும் பேசாமல் இருக்கிறாள்.*

*சீலனின் குரலைக் கேட்காத தாயார் "சீலா நான் பேசுவது கேட்கவில்லையா சீலா" எனப் பரிதவிப்புடன் கேட்க" கலோ" என்று பத்மகலா குரல் கொடுக்க, ஒரு பெண்ணில் குரல் வர தாய் பலவாறாக யோசித்து "சீலன் இல்லையா நீங்கள்...?"*

*"நான் பத்...ம...கலா"*

*"ஓ"...*

*"சீலனிடம் கொடுக்கவா"*

*"இல்லை உங்களோடைதான் கதைக்க வேண்டும்" என சீலனின் தாய் சொன்னதும் பத்மகலா என்ன ஏதுவோ என பயப்படுகிறாள்.*

*"பிள்ளை பயப்படாதை. நீங்கள் கனடாவிலையிருந்து வரப் போவதாகச் சீலன் சொல்லியிருந்தான்"*

*பத்மகலாவிற்கு வியப்பும் பயமும் வந்து கொண்டிருந்து. இதற்கிடையில் சீலன் கண்முழித்து எழுந்து யார் என சைகையால் கேட்கிறான். உங்கள் அம்மா என சத்தம் வராமல் சொல்கிறாள்.*

*"சீலனிடம் கொடுக்கவா" என பத்மகலா மீண்டும் கேட்க "வேண்டாம் உங்களுக்கு கொஞ்சம் புத்திமதி சொல்லுறன், கவனமாக கேள் பிள்ளை"*

*"சொல்லுங்கள்"*

*"நீங்கள் இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகிறியள் எண்டு நீங்கள் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு வந்த போதே கண்டுபிடித்துவிட்டன்"*

*"...................."*

*"அது ஒண்டும் பிரச்சினை இல்லை, இப்ப நீதான் கழுத்திலை தாலி ஏறும் வரை கவனமாக இருக்க வேண்டும், இல்லாட்டி பதிவுத்*

திருமணம் முடியும் வரையுமாவது கவனமா இருக்க வேண்டும், நான் என்ன சொல்லுகிறன் எதற்காகச் சொல்லுகிறன் என்பது புரியுது தானே”

“ம்”

“பிள்ளை தாலி பவுணிலைதான் கட்ட வேண்டும் என்றில்லை, மஞ்சள் கொடியிலை ஒரு மஞ்சளை கட்டி அதை தாலியாக கட்டினாலே போதும். அதுவரை...”

“புரியுது”

“சீலன் கட்டுப்பாடுடையவன்தான். ஆனால் சூழ்நிலைதான் எல்லாத்துக்கும் காரணம், நீங்கள் பெண் கவனமாக இருக்க வேண்டும். என்ரை பிள்ளை என்பதற்காக முழுசாக நம்ப முடியாது”

“நீங்கள் பயப்படாதையுங்கோ பிழை ஒன்றும் நடக்காது என்னை நீங்கள் நீங்கள் என்று கூப்பிடாதையுங்கோ, நீ என்றே கூப்பிடுங்கோ” என பத்மகலா சொல்ல, “என்னை மாமி என்று சொல்லிப் பேசலாந்தானே” என்கிறாள் சீலனின் தாய்.

“சரி மாமி”

“சீலனிடம் ரலிபோனை குடு பிள்ளை”

பத்மகலா தொலைபேசியை சீலனிடம் கொடுக்கிறாள். பத்மகலாவிற்கு சொன்னதையே அவனுக்கும் தாய் சொல்கிறாள்.

“சரி அம்மா, நீங்கள் சொன்ன மாதிரியே நடக்கிறம்” என சீலன் பதில் சொல்கிறான்.

இரவு எட்டு மணியாகியது. நாளைக்கும் எங்கேயாவது கடையிலை சாப்பிடுவோமா என சீலன் கேட்க, இலலை சமைத்துச் சாப்பிடுவம் என பதமகலா சொல்கிறாள்.

இரவுச் சாப்பாடாக பாணை ஜாமுடன் சாப்பிட்டவுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சின் நடுவில் புங்குடு தீவில் வித்தியாவிற்கு நடந்த கொடுமை பற்றி பத்மகலா கடுங் கோபத்தடனும் குமுறலுடனும் கதைக்கிறாள். நான் பெண்ணியம் பற்றியும் ஜேர்சனலிஸம் பற்றியும் படிக்க வேண்டும் என்ற ஒரு பிடி வாதம் வந்ததற்கு எங்கள் நாட்டில் நடைபெறும் பெண்களுக் கெதிரான பாலியல் வன்முறையும் ஒரு காரணம் என்கிறாள்.

பத்மகலாவைப் பெருமையுடன் பார்க்கிறான் சீலன். நித்திரை இருவரையும் ஆட்கொள்ள “கலா போய் அறைக்குள் படு” என்கிறான் சீலன். அவள் எழுந்து போகிறாள். சீலன் சோபாவில் படுக்க வசதியாக படுக்கையறையிலிருந்த தலையணையை பத்மகலா கொண்டு வந்து

கொடுக்கிறாள்.

மஞ்சள் கயிற்றிலாவது தாலி அல்லது பதிவுத்திருமணம் என்ற காவலரண் இருவரையும் தடுத்து வைக்கிறது. எல்லாவற்றையும்விட சீலனின் தாய் தங்களில் வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும் என இருவரும் நினைக்கின்றனர்.

அடுத்த நாள் முன்சனில் உள்ள தமிழ்க் கடைக்குப் போன சீலனும் பத்மகலாவும் பொருட்களுடன் மஞ்சள் கயிறொன்றை வாங்குகின்றனர். கடைக்காரரர் சிரித்துக் கொண்டே மஞ்சல் கயிறை கொடுக்கும் போது வெற்றிலையில் வைத்துக் கொடுக்கிறார்.

வீட்டுக்கு வந்த சீலனும் பதமகலாவும் விவேக் அங்கிளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருகிற வெள்ளிக்கிழமை வீட்டுக்கு வர முடியுமா எனக் கேட்டு உங்கள் முன்னியில் பத்ம கலாவிற்கு தாலி கட்ட இருப்பதைச் சொல்கிறார்கள்.

அவர்களும் மகிழ்ச்சியுடன் சம்மதிக்கிறார்கள். தாலி கட்டுவதுடன் பதிவுத்திருமணம் மிக முக்கியம் என விவேக் அங்கிள் புத்தி சொல்ல, அதற்கான விண்ணப்பத்தை கொடுக்கவிருப்பதாக சீலன் பதில் சொல்கிறான்.

தீவிரமான சிந்தனை ரேகைகள் ஓடுகின்றன. கலாவின் மனதி லும். இப்போது அவளும் சீலனும் தனித்தனி இல்லை. இணைந்த கைகள் இணைந்து செயல்பட்டால் எதிலும் வெற்றி நிச்சயம்.

சீலன் பிஎம் டபுள்யு கார் தயாரிக்கும் நிறுவனத்தில் பயிற்சிப் படிப்பு படிக்கிறான். பத்மலாவும் படிக்கப் போகிறாள்.

ஆனால் தம்மைப்போல இங்கே பாடுபட்டு ஓடிவந்த தம் மக்களுக்காக இதுவரை என்ன செய்தோம்? இனி என்னென்ன செய்யலாம் என்ற எண்ணங்கள் இருவரின் மனதிலும் எழும்பத் தொடங்கின. மென்மேலும் செய்யவேண்டியவை பற்றி இருவரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

விழுதல் யார் வாழ்க்கையிலும் நிகழலாம். ஆனால் அதன் பின் எப்படி எழுந்தார்கள் என்பதே சரித்திரம் ஆகிறது. தோல்விக்குப் பின் வரும் வெற்றியைச் சரித்திரம் குறித்துக்கொள்கிறது. இங்கே அகதிகளாய் வந்த ஒவ்வொரு பெண்ணுக்காகவும் ஏன் இம்மண்ணில் பிறந்த பெண்களுக்காவும் குரல் கொடுப்பது தமது தர்மம் என்பதை உணர்ந்தார்கள். தாங்கள் பணிபுரியும் இடங்களிலும் மற்ற நிறுவனங் களிலும் விமன்ஸ் செக்சுவல் ஹரேஸ்மெண்ட் ஆரம்பிக்க எண்ணம்

கொண்டார்கள்.

மறுநாள் மாலை ப்ராங்க்பர்ட் நகரத் தெருக்களில் பல்வேறு பண்பாட்டைச் சார்ந்த பெண்களின் பேரணி. அதில் முதல் வரிசையில் சுபத்ரா, பானு, பத்மகலாவும் அவளுடன் சீலனும் பேராசிரியர்கள் மங்கையர்க்கரசியும் குமாரவேல் சாரும் நடந்து வந்தார்கள். பத்ம கலாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு தாலியாக தொங்க கம்பீரமாக அவள் நடப்பதைப் பெருமிதமாக பார்க்கிறாள் பானு. கையில் பிடித்திருந்த பதாகைகள் அவர்களது கொள்கைகளை அழுத்தம் திருத்தமாக அறிவித்தன.

“ஆக்கும் சக்தி பெண். அழிவுச் சக்தி ஆக்காதீர். ”

“போதைப் பொருளல்ல பெண், போகப் பொருளல்ல பெண். சக மனுசி பெண்.”

“சிகரங்களைத் தொட கடந்தவைகளை மற.
விழுதல் இயற்கையென்றால்
எழுதலும் இயற்கையே”

தர்மசீலனையும் பத்மகலாவையும் பெருமிதமாய்ப் பார்த்த படி நடந்து கொண்டிருந்தார்கள் மங்கையர்க்கரசியாரும், குமாரவேல் சாரும். அவர்கள் பின்னே பிரளயத்தைக் கொண்டுவந்து பூமியைச் சுத்தம் செய்யும் ஆழிப்பேரலை போல பெண்கள் வெள்ளம் தொடர்ந்து சென்று கொண்டிருந்து.

பேரணி முடிவில் மாபெரும் மண்டபத்தில் கருத்தரங்கிற்கு ஏற்பாடாகியிருந்தது. பேச்சாளராக மேடையில் பல்வேறு நாடுகளிலு மிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆண்களும் பெண்களும் உட்கார்ந் திருந்தார்கள்.

பல நாட்டுப் பெண்களுடன் ஆங்காங்கே அந்த மண்டபத்தில் ஆண்களும் கேட்போராக உட்கார்ந்திருக்கிறார்கள். பானு, சீலன்லு சுபத்திரா, பத்மகலாவும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பெண்களுக்கெதிரான கொடுமைகள் பன்முக நிலையில் நடைபெறுகின்றன என பேச்சாளர்கள் ஒருவர் மாறி ஒருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இந்தக் கொடுமைகள் இடம்பெறுகின்றன என்பதை அந்தந்த நாட்டிலிருந்து வந்த பெண்கள் கோபத்துடனும் குமுறலுடனும் சொல்கிறார்கள்.

மேடையில் இருந்த நான்கு ஆண்களில் டென்மார்க்கில் இருந்து வந்த பேராசிரியர் குமாரவேலுவும் ஒருவர்.

அவர் பேச எழுந்ததும் ஒரு வேண்டுகோளை ஏற்பாட்டாளர் களிடம் முன் வைக்கிறார். இலங்கையை தாயகமாக கொண்ட பெண்ணியம் படிக்கப் போகிற பத்மகலா என்பவர் இங்கே கேட்போ ராக இருக்கிறார். அவரைப் பேச அழைக்கலாமா, அவரின் ஆங்கிலப் பேச்சை அவரின் காதல் கணவனே ஜேர்மன் மொழியில் மொழி பெயர்ப் பார் என அனுமதி கேட்க பத்மகலாவிற்கு அனுமதி கிடைக்கிறது.

பத்மகலாவும் சீலனும் மேடையை நோக்கி எழுந்து போகிறார் கள். பத்மகலாவும் சீலனும் "எழுகையே" என்பது போல கம்பீரமாக நடந்து போவதை எல்லாரும் கைதட்டி வரவேற்கிறார்கள்.

ஒலிவாங்கி முன்னால் நின்ற பெண்களுக்கெதிராக உலக நாடுகள் எங்கும் இடம்பெறும் பாலியல் வன்முறை நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறிய அவள், அண்மை நாட்களில் இலங்கையில் புங்குடுதீவு என்ற இடத்தில் ஒரு மாணவி மீது மேற்கொண்ட குழுப்பாலியல் வன்முறையை விபரித்து இவற்றுக்கு காரணியாக போதைப்பொருள் விற்பனையும் இருப்பதால் போதைப் பொருளுக் கெதிராகவும் பெண்கள் போராட வேண்டும் என சரளமாக ஆங்கிலத்தில் பேச அதைச் சரளமாக சீலன் மொழிபெயர்த்தான்.

நாடு நாடாக அலைந்து படாத கஸ்டங்களை அவமானங் களை தாங்கி இன்று ஜேர்மனியின் முகம் ஆகிய நகரொன்றின் முக்கிய நிகழ்வொன்றில் மொழி வல்லோனாக அந்த மொழி அறிவுக்கூட துறைசார் கல்வி எதனையும் கற்று சாதிக்க முடியும். விழுந்தாலும் எழுந்து நிமர முடியும் என்பதை சீலனும் எத்தனை தடை வந்தாலும் இலட்சியத்தையும் இலக்கையும் காதலையும் அடைவதற்கு விடா முயற்சியே காரணம்; என தெளிவுபட உறுதிபட காதல் ஜோடி இருவரும் உதாரணமாக அந்த மேடையில் நின்றனர்.

## நிறைவுப்பகுதி (2)

**எழுதியவர்: திரு. சசிகரன் பசுபதி(புனைபெயர்: பசுந்திராசசி) இலண்டன்**

கனடாவில் இருந்து ஜேஉ மனிக்கு வந்த கலாவை ( பத்மகலா) சீலன் காரில் பிராங்பேர்ட் விமானநிலையம் சென்று ஏற்றி வந்து கொண்டிருந்தான்.

முரளியும் கலாவின் அக்கா மல்லிகாவும் இணைந்து ஏதாவது

சதி செய்து தனது திருமணத்தை நிறுத்தி விடுவார்களோ என்ற பயம் இன்னும் அவனை விட்டு போகவில்லை.

நேரம் இரவு 7 மணியாகிக்கொண்டிருந்தது. மழை தூறிக்கொண்டிருந்தது. ஏனோ கலாவுக்கு முகம் சரி இல்லை. அவள் பேச்சு பசுமை இன்றி வெறும் சம்பிரதாயச் சொற்களாக இருந்தது.

ஒருவேளை தான் பிராங்பேர்ட்டுக்கு வர தாமதமாகியதுதான் காரணமோ என எண்ணினான். ஆனாலும் அவள் முகம் செம்ஜம்பு பழம் போல சிவந்திருந்தது.

அவள் சீலனை எதிர்பார்த்து விமான நிலையத்தில் ஒவ்வொரு இடமாக இருந்து இருந்து எழும்பி அலுத்து விட்டாள். "இதோ வந்துகொண்டிருக்கிறேன், இந்தா இன்னும் அரை மணித்தியாலத்தில் வந்துவிடுவேன்" என்ற சீலனை ஒரு மணித்தியாலம் ஆகியும் காண வில்லை என எண்ணிக் கொண்டிருக்கையில்தான் முரளி போன் பண்ணினான். "என்ன கலா இப்ப எங்க நிக்கிறீங்கள்" என்றவனிடம் , நான் சீலனை பார்த்துக்கொண்டு எயாப்போட்டில் நிற்கிறேன்" எனக் கூற முரளி ஐந்து நிமிடத்தில் வந்து அருகில் உள்ள உணவகத்திற்கு அழைத்து சென்றுவிட்டான்.

பின் தான் தங்கி இருந்த நண்பனின் வீட்டுக்கு கூட்டிச் சென்றான். அந்த விலாசத்திற்கு சீலனை வருமாறு கலா மூலமாக கேட்டுக்கொண்டான். முரளி சீலன் இருவரும் பேசுவதில்லை. எல்லாம் கலாவை யார் திருமணம் செய்வது என்ற போட்டியால் வந்த சர்ச்சை.

கார் விரைவுப் பாதையில் ஓடிக்கொண்டிருந்தது. ஓரிரு வாகனங்கள் அவ்வப்போது பின்னால் இருந்து வந்து கடந்து போனது. இன்னும் மழை விட வில்லை. மெதுவாக தூறிக்கொண்டு இருந்தது.

வண்டி தண்ணீரில் மிதப்பதுபோல ஆனால் வேகமாக சென்றுகொண்டிருந்தது. ஜேர்மனிய வெள்ளைக்கார நண்பர் ஜோசப் காரை லாவகமாக அதேவேளை நிதானமாக ஓட்டிக் கொண்டிருந்தார்.

கலாவுக்கு பயண அலுப்பு சீற்றில் சாந்தபடி தூங்கிவிட்டாள். காரினுள் இருந்த இருட்டு எல்லோரையும் போர்த்தியிருந்தது. அந்தப் பயணச்சூழல் நல்ல இதமான கதகதப்பான அனுபவமாக இருந்த போதும் அவை ஒன்றிலும் சீலனின் புலன் லயிக்கவில்லை.

அவனின் மனம் கடந்து வந்த பாதையையும், சந்தித்தவர் களையும், சம்பவங்களையும் மாறி மாறி சுற்றி வந்துகொண்டிருந்தது.

முதல் முதல் வெளிநாடு வந்தபோது இருந்த மனநிலை இப்போது துண்டற மாறி இருந்தது. யாழ் பல்கலைக்கழகத்தில் படையினரால் கைது செய்யப்பட்டபோது கருக்கொண்ட இந்த வெளிநாட்டுப்பயண எண்ணம் முதற்கட்டத்திலேயே எதுவும் பிடிக்காமல் பைத்தியம் மட்டும் பிடிக்கும் நிலையில் இருந்தது.

அன்று சுவிசில் அந்த வெள்ளைக்காரார் இறங்கசொன்ன இடத்தில் கால் வைத்து ஆரம்பித்த ஐரோப்பிய வாழ்க்கைப்பயணம், உயிரை உறையவைக்கும் பல தருணங்களை தனித்தே கடந்து நாளை முதல் சுமுகமாக இன்னொருவரின் துணையுடன் வேறொரு இன்பப் பாதையில் பயணிக்க இருக்கிறது .

எனக்கும் கலாவுக்கும் நாளை திருமணம் என நினைக்கையில் மனம் விரிந்து உடல் பூரித்தது. கிழக்கிலங்கை பெண்ணுடனான வாழ்வை இந்த மேற்கத்தேய திசையில் கட்டி முடிக்க உதவியவர்களை நன்றியோடு எண்ணிப்பார்த்தான்.

சுவிஸ் கோப்பிக்கடையில் கண்ட முதல் ஐரோப்பிய வாழ் தமிழ் மகன், முதல் முதல் தனது தமிழை பிறமொழியாக்கிய மொழிபெயர்ப்பாளர் இராஜேஸ்வரன், கூட குடியிருந்த தவத்தார், முதல் முதல் அம்மாவிடம் பேசிய சுவிஸ் கட்டணத் தொலைபேசி, அருகிலே கண்ட முத்தமிடும் பூங்கா காதலர்கள், முத்தம் என்றதும் தான் ஏன் நானும் ஒருமுறை கலாவை கொஞ்சினால் என்ன ..? பின் சீற்றில்தானே இருக்கிறாள். களவின்பத்தை ஒருமுறை கண்டுவிட்டால் என்ன...? நாளை கட்ட போறவள் தானே. சீச்சீ... தொடுகையற்ற தமிழ்க்காதல்; உணர்வுகளால் மீண்டும், மீண்டும் உயிர்ப்புடன் துளிர்க்கும்" என ஞாபகம் வரவே இன்னும் ஒரு நாள் தானே - நாளை பார்க்கலாம் - என அவ் எண்ணத்தை விட்டுவிட்டான். ஆனாலும் கலா - இப்போதும் சீலனே கணவன் - என்ற நினைப்பில் வாழ்பவள் என நினைக்கும் போது எங்கோ ஏதோ செய்தது. கூடவே அவளை இறுதியாக ஊரில் கண்டது நினைவில் வந்தது.

சுதந்திரதினத்திற்குக் கறுப்புக்கொடி கட்டியமை, முரளி காட்டிக்கொடுத்தது. "மருத்துவர் பத்மகலாவாகத்தான் பார்க்க வேண்டும்" என்று விட்டு காதலி கலாவிடம் இருந்து விடைபெற்றது, "முடிந்தவரை உழைத்துக்கொண்டு ஊருக்கு திரும்பு" என்று பேசிய அவுஸ்ரேலிய குணரட்ணம் வரை நினைத்தான், பழையவையே தன்னை இங்கே கொண்டுவந்த பாலங்கள். அந்த ஏணிப்பாலங்களை

எண்ணுகையில் நன்றியுணவு பெருக மனம் அமைதி அடைந்தது.

மக்டொனால் வேலை எடுத்து தந்த டானியல் அண்ணன், கூட வேலை செய்த நண்பன் மகேந்தி, அவன் சொன்ன - போடர் கடக்கும்போது - கூட பயணித்த செல்வம் என்பவன் பனியாற்றில் புதைந்து செத்த கதை, புருசோத்தை குளிர் கொன்ற - அவலக்கதை, விமானத்தையே வாடகைக்கமர்த்தி உறவுகளை இக்கரையில் சேர்த்த ஏஜென்சிகளின் சாகசக்கதை, உயிர்வாழ படகேறிய உறவுகளின் உயிர் பறித்து உடல் கரைத்த அவுஸ்ரேலிய கடல்கதை, பேரவலத்தின் பிறிதொரு சொல்லான முள்ளிவாய்க்கால் என வரிசையாய் எண்ணத் திரையில் வர மனம் நடுங்கியது.

தான் இங்கு வர உதவிய முகம், பெயர், ஊர் தெரியாதவர் கட்கும் உதடுகளுக்குள்ளே நன்றி நினைத்தான். சக சிங்களவர்கள் கூட அதிலிருந்தார்கள். என்னே ஒரு அவலப் பெரும் பயணம்.

தமிழா... !

சுதந்திரம் அவ்வளவு சுலபமானதல்ல.

பட்டதை சொல்லி, கட்டி அழுவதை விட்டு முட்டி மோது...

விழ விழ எழு ...,

விதை விழாது முளை ஏது ...,?

விழுதலே எழுதலின் முதற்படி அல்லவா ?

விழுதல் என்பது - அதுவே

என மனத்திரையில் ஒரு பெரு வெடிப்பு தோன்றி மறைய உடல் சிலிர்த்தது.

வலியாகவும், ஏமாற்றமாகவும் தமிழராய் இங்குள்ள எல்லோர் குரலின் அடியிலும் சொல்லாத சொற்களாக படிந்திருப்பது சோகமே...

சொற்கள் என்றதும் அதன் முதல் சொந்தக்காரவு அம்மா நினைவுக்கு வந்தார். அம்மாவை கொழும்புக்கு மாற்றி பின் யாழுக்கே அழைத்ததையும் ,அதற்காக கடனாக தன்னை நம்பி முதல் முதல் மூன்று லட்சத்தை தந்துதவிய பானுவும் வந்துபோனாள்.

யாழ் பல்கலைக்கழகத்தில் துளிர்த்த நட்பை மறக்காமல் இங்கும் வந்து பார்த்து சென்ற தொப்புள் கொடி உறவு பேராசிரியை மங்கயற்கரசியும் மனதில் நின்றார்.

கண்ணால் இப்புற தேச உலகை காணமுன்; செய்தித்தாள் மூலம் படித்து அறியும் வகை செய்த அம்மையா பிரக்கராசி கந்தவடி

வேலரைதான் விட்டுவிட முடியுமா? டென்மார்க்கில் மாரிமுத்து வடிவில் இருந்த சீலனை கண்டுகொண்ட மொழிபெயர்ப்பாளன் சாந்தனின் உதவி, காந்தன் அண்ணா மூலம் கிடைத்த புடவைக்கடை வேலை, அதன் தங்க மனசுக்கார முதலாளி ஆனந்தர், வழிப்பறியில் எல்லாவற்றையும் இழந்து இன்னுமொருமுறை விழுந்து நொந்த போது - என்னைப்பற்றிக்கொண்டு எழுந்து வாடா சீலா...! என நான் காருக்குள் நித்திரையில் இருக்கும் போதே மன்றொரு போடரை கடந்து வந்த விவேக் அண்ணனை , எல்லாம் இழந்த யோசனையால் வந்த தலையிடியை... எதை மறக்கமுடியும்.

நல்லவர் மட்டுமா பாதையில் வந்தார். தங்கையின் திருமணத் திற்காக சேர்த்த உழைப்பை சீட்டு என்ற பெயரில் சுறுட்டிக்கொண்ட சிவம், இன்னொருவன் மனைவி பானுவோட சுத்துறியாம் என்ற கலாவின் சுடு சொல், பின், அருகில் அக்கா மல்லிகா நின்றதால்தான் அப்படி கேட்டேன் என நீரூற்றி அணைக்கப்பட்டமை, இவற்றின் பின்னுள்ள சூத்திரதாரி முரளி, மன்னித்தாலும் இவற்றை மறக்க முடியுமா... ?

சங்கம் வளர்த்து சண்டை பிடிக்கும் கூட்டமும் அவன் எண்ண திரையில் வந்து போனது.

துன்ப சங்கட நிலை ஓரளவுக்கு முடிவுக்கு வர சந்தோச சங்கம் பிறந்தது. விசாவுடன் வேலை வந்ததும் மாமா பத்மநாதன் மகள் சாம்பவியை சீலனுக்கு மனைவியாக்க விரும்பினார். சத்தியநாதன் அண்ணனின் மகள் குமுதாவை கட்டிவைக்க லண்டோவ் நகர் நல்லுள்ளங்கள் முயன்றன. பல வரன் தேடி வந்ததை நினைக்க,தேடி வந்து கட்டி கைவிட்ட சுபத்திரா மனதில் நிழலாடினாள்.

வெளிநாட்டு மாப்பிள்ளை, திருமணம் என்ற பந்தத்தில் சுக்குநூறாகி விட்ட சுபத்திராவை விபச்சாரத்தில் தள்ளிவிட்டதை எண்ணும்போது மனம் புண்ணாகியது.

இன்றும் வெளியில் சொல்ல முடியாது உள்ளே புளுங்கி தினமும் நசிந்து பிள்ளைக்காகவும், குடும்ப பேருக்காகவும் வாழ்வை தாங்கி பயணிக்கும் பெண்ணினத்தை எண்ணுகையில் ஏக்கமே மிஞ்சியது. .

ஆஸ்திரியாவில் கணவனிடம் போக வந்த சாந்தி ஏஜென்சி யால் கசக்கி மணக்கப்பட்டதையும் பின் அவனையே குத்தி கொன்று விட்டு ஏழாம் மாடியில் இருந்து “என்னை மன்னித்துவிடுங்கோ

அண்ணா" என ஆறுதல் சொன்ன சீலனிடம் கூறியபடி குதித்து இறந்தவளை நினைக்க ஒரு பெரு மூச்சு வந்துபோனது.

கார் வண்டியோ இது எதையும் காதில் வாங்காதது போல லண்டோவ் நகரை நோக்கி நெடுஞ்சாலை ஏ 65 ( அவுட்டபான் - யு 65) இல் ஓடிக்கொண்டு இருந்தது.

மழை இப்போது விட்டிருந்தது. வயிறு தானும் அவனுடன் பயணிப்பதாக கிள்ளி காட்டியது. மனம் உணவை நாடவில்லை யாயினும் வயிறு பசிக்கவே செய்தது.

முதல் முதல் ராமலிங்கத்தாருடன் தவம் வீட்டில் சப்பிட்ட ஊர் சாப்பாடு நினைவை நிரப்பியது. கூடவே ஊரில் இருந்து பேசி வந்த மாப்பிள்ளை முரளி, காலை கட்டிய தாலியோடு ஆபிரிக்க காதலனுடன் ஒடிய நிரோஜா, மைத்துனன் குணாவின் குடி மரணம், தொடர்ந்து கிடைத்த சுவிஸ் அகதி அனுமதி, கனடாவில் இருந்து "உங்கள் பத்மகலா" என முதல் முதலாய் அழைத்த காதலி கலாவின் குரல், முரளி கலாவை அடைய காதல்வாழ்வில் குறுக்கிட்டு முடியாமல் போக - இருவரையும் பிரிக்க முயன்றது, எனக் கடந்து வந்த நெடிய பாதையை ஒரு மின்னல் ஒளியில் கருமுகிலை காண்பது போல கண்டு மீண்டான் சீலன். வண்டி ஒரு பெரு வளைவில் திரும்பி ஓடிக்கொண்டு இருந்தது.

கனடாவில் இருந்து வந்ததில் இருந்து கலா இன்னும் சரியாக பேசவே இல்லை. முரளியோடு அவள் நின்றதை அவளே சொல்ல கேட்டதில் இருந்து சீலனின் மனம் ரணமாக வெந்துகொண்டிருப்பது என்னவோ உண்மைதான்.

ஆனால் பலத்த மழை காரணமாக ஒரு விபத்து நடந்து செடுஞ் சாலை மூடி விட்டிருந்தார்கள். வேறு மாற்று வழி ஊடாக போய் அழைக்க தாமதமாகிவிட்டது. அதற்குள் முரளி வந்து விட்டான். அவனுக்கு நம்பர் கொடுத்தது கலாவின் அக்கா மல்லிகாவாகத்தான் இருக்கும் என எண்ணினான். மல்லிகா ஒன்றும் கனடாவில் இருந்து இந்த காரியத்தை செய்யவில்லை.

கலா - சீலன் திருமணத்தை முன்னிட்டு நான்கு நாட்களுக்கு முன்னரே லண்டோவ் வந்து இப்போது விவேக் அண்ணனின் வீட்டின் பின்னால் பிரத்தியேகமாக போடப்பட்ட குசினிப்பந்தலில் பலகாரம் சுடும் சுற்றத்துப் பெண்களுடன் இருந்தே இதை செய்திருந்தார்.

தான் தாமதித்ததை எண்ணியே கலா மனம் நோகுறாள் என பேசாமல் வந்தான் சீலன். அவளோ தான் முரளியிடம் பேசியது இவனை புண்படுத்தி இருக்கும். அதுதான் பேசாமல் வருகிறான் என நினைத்தாள்.

நீண்ட கால இடைவெளிக்கு பின் ஒருவரை ஒருவடீ கண்ட காதலர்கள் என்றோ அல்லது நாளையே திருமணமாகி தம்பதியராகப் போகும் இருவர் என்றோ இல்லாமல் எந்த வித ஆரவாரங்களும் இன்றி இருந்தார்கள்.

உண்மையான பாசமுள்ளவடீகள் மத்தியில் இப்படி அடிக்கடி பிரச்சனை நடக்கும். பின் எந்த சமரசமும் இன்றி மறு கணம் கட்டிப் புரளுவார்கள் என்பது போல இருந்து இவர்கள் இருவரினதும் நடவடிக்கை.

கலாவுக்கு கனடா - ஜேர்மனி நீண்ட விமான பயணம். பின் காத்திருப்பு, கார் பயணம் என தொடர் பயணத்தால் வயிறு குமட்டி கொண்டு வந்தது. மென்மை அதிகமான பெண்மை அவள். அவள் அதை மறைத்தாலும் ஓங்காளிப்பு குமட்டலை காட்டிக்கொடுத்தது.

இதனை அவதானித்த சீலன் முதல் வரும் தேனீர் அருந்தும் இளைப்பாறிடத்தில் காரை நிறுத்துமாறு ஜோசேப்பிடம் கேட்டுக் கொண்டான்.

இடைத்தரிப்பிடம் வந்ததும் அவளுக்குக் கழுவுமிடம் (பாத்றூம்) இருக்கும் இடத்தை காட்டி விட்டான். அழைத்து வந்த அவனின் முன்னாள் முதலாளியும் நண்பருமான காரோட்டி ஜோசப், மூவருக்கும் தேனீர் வாங்கி வந்தார். கலா " தனக்கு வேண்டாம் வயிறு சரியில்லை. இப்போதுதான் முரளியுடன் குடித்தேன்" என்று விட்டாள்.

கலாவுக்கு லீவு தாமதமாகவே கிடைத்திருந்தது. ஆனால் ஒருமாத லீவு. திருமணத்தின் பின் என்ன செய்வதென்பது இருவரும் கூடி பேசிதான் முடிவு பண்ணவேண்டும்.

நாளைய திருமணத்தில் மணப்பெண்ணாக மணவறையில் இருப்பதை தவிர தான் எந்த உதவியும் செய்ய முடியாமையை எண்ணி உள்ளூர வருந்தவே செய்தாள் கலா. மணப்பெண் முக அலங்கார வேலைகள் ஆரம்பித்தால் வேறு எந்த வேலையும் செய்யவும் முடியாது.

மீண்டும் இடைத்தரிப்பிடத்தை நீங்கி வண்டியை ஓட்ட

ஆயத்தமானார் ஜோசப். சீலன் இம்முறை கலாவுடன் பின் சீற்றில் இருந்தான். கலாவோ சற்று நேரத்திலெல்லாம் சீற்றில் சோஉந்து சாய்ந்து தூங்கிவிட்டாள்.

பெண்வீட்டாருக்கு என டேவிட் அங்கிள் விவேக் அண்ணன் மூலமாக ஒழுங்கு செய்த சஹானி வீட்டிற்கு வரும் வரை கலா தூக்கத்திலேயே இருந்தாள். லண்டோவ் பகுதி வீடுகளும் யாழ்ப்பாணத்தை போல் தனித்தனியே வெட்டி வீதியாக இருந்தன. மணமகன் வீடும் மணமகள் வீடும் ஒரே ஒழுங்கையில் ஐந்து வீடு தள்ளி தள்ளியே இருந்தது.

***

எங்கிருந்து தான் கொண்டு வந்தார்களோ மணப்பந்தலில் செவ்விளநீர் கட்டிய கதலிக்குலையுடன் வாழைகள் இரண்டு அழகாக கட்டப்பட்டிருந்தது. ஒழுங்கையோர வாசல் மேசையில் கம்பளம் விரித்து நெல்லு பரப்பி வைத்த கும்பமும், இரவு தூறலில் நனைந்த மெல்லிய ஈர நிலமும் வீதியோர பச்சைப்புல்லும் ஒருகணம் ஊரை நினைவூட்டியது.

ஏனோ ஊரை நினைக்கும் போதெல்லாம் மகிழ்ச்சியும் பின் சிறு மனவருத்தமும் வந்தே போகிறது. எமதூராய் இருந்தாலும் அது எமக்கில்லை. எம் பிள்ளைகளுக்கானதும் இல்லை. இனி அது எமது கனவுக்கு மட்டுமே சொந்தமானது என்ற மனவருத்தம் அது.

மண்டபம் எடுத்து குறித்த மணிநேரந்துக்குள் முண்டி விழுங்கி விட்டு, பின் அவரவஉ வண்டியில் கிண்டி கிழம்பி காணாமல் போகும். ஒரு நீண்ட திருமணமாக இல்லாமல் இப்படி வீட்டில் நடாத்த முடிவெடுத்தவரை கட்டி அணைத்தொரு முத்தமிடத் தோன்றியது.

மணப்பந்தல் சோடனை பூக்கள் காற்றிலாடி மின்னின. நீளப் பந்தலை நீலநிறக் கதிரைகள் இரண்டாகப் பிரித்திருந்தன. திருமணத்திற்கே கட்டிய வீடு போல் விவேக் அண்ணனின் வீடு கம்பீரமாக நின்றது. கண்ணாடியில் பட்டு தெறித்த ஒளி போல் காலை வெய்யில் மஞ்சளும் சூடும் குறைவாக இருந்தது.

சூரியகாந்தி பூவில் பறக்கும் வண்ணத்திப்பூச்சிகள் போல புத்தாடை அணிந்த இளவயதினர் குறுக்கும் நெடுக்குமாக ஒருவரை ஒருவர் கலைத்துக்கொண்டு காலை ஒளிக்குள் ஓடிவந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் பின்னே குட்டிப் பூனையளவு நாய்

ஒன்றும் ஓடித்திரிந்தது. வாசனை படர்ந்த பட்டு சேலைகளுடன் கலியாணவீட்டிற்கு வந்து கொண்டிருந்த பெண்கள் அச்சுற்றத்தை ரம்மியமாக்கினார்கள்.

அது எப்படியோ தெரியவில்லை பட்டு சேலையில் பருமனான பெண்களும் பனங்கிழங்கு போலவே இருந்துவிடுகிறார்கள். பட்டு வேட்டியில் பட்டு தெறித்த சிறு கீற்றொளி ஆங்காங்கே தூர மின்னல் போல கண்ணை கூசியது “அடடா.... என்னே ஒரு இதமான தமிழ் பண்பாட்டுச் சூழல்” என ஜேர்மனியர்கள் கூடி நின்று ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

வாழ்த்த வந்தவரடகளால் மணப்பந்தல் நிறைந்திருந்தத , மாதுளம்பூ நிறத்தில் இருந்த மணவறையில் ஓமசாலை முன் இருந்த இரு அந்தணர்களுக்கு அருகில் சீலன் மாப்பிள்ளை கோலத்தில் எடுப்புடன் வீற்றிருந்தான். அவனின் பார்வை பந்தலோரம் சுற்றி வந்தது. அவனை தோள் கொடுத்து தாங்கிய பல நல் உள்ளங்கள் நெடுமையில் கடந்து வந்திருந்தார்கள்.

குமாரவேல் பேராசிரியர் மனைவியுடன் முன் வரிசையில் இருந்தார். மக்டொனால்ட் மகேந்தியும் பானுவின் கணவரும் புடவைக்கடை முதலாளி ஆனந்தரும் வெற்றிலை போட்டபடி ஏதோ பந்தலை காட்டி பேசிக்கொண்டிருந்தார்கள். சுபத்திரா தலையில் கனகாம்பர பூச்சரத்துடன் ஓரமாக இருந்து சீலனை பார்த்து மெல்ல நகைத்தாள்.

அக்கால தமிழ் மரபு ஒன்று எல்லாவற்றையும் கவிதையாக பாடி விடுவது. அது காலம் கடந்தும் பாடலாக வாழ்ந்து கொண்டிருக்கும். அவ்வாறு நெடுந்தீவில் ஒரு திருமண பந்தலில் வீற்றிருந்தவர்களை பாடிய பாடல் ஒன்று சீலனுக்கு நினைவில் வந்தது. பழைய காலத்தில் பெயரிலும் பட்ட பெயரே அதிகம் பயன்படுத்தப்படும். நெடுந்தீவு தேசத்தில் ஒரு துடிப்பான பெண்ணின் திருமணத்தில்

“ஆரார் கொலுவிருந்தார் ஆனசிங்கி பந்தலிலே...
வீணானவாயர் வெறுவாயர் அங்கிருந்தார்
வேறார் கொலுவிருந்தார் ஆனசிங்கி பந்தலிலே...
உப்பு சிரட்டையோடு உவல்பேத்தை அங்கிருந்தார்.
ஆரார் கொலுவிருந்தார் ஆனசிங்கி பந்தலிலே...
கூடம் இறுக்கவென்று கும்பகுடம் அங்கிருந்தார்.

சீட்டு சிவத்தின் வீட்டில் இருந்த நண்பன் சிறிராமச்சந்திரன்

அனுமான் என செல்லமாக அழைக்கப்பட்டானே அவன் கூட மூலையில் இருந்து சீலனை பார்த்து சிரித்தான். சிவத்தைபற்றி அவனிடம் கேட்க வேண்டும் என நினைத்தான் சீலன். தனது 20 ஆயிரம் பிராங் பணத்தை என்ன செய்தான்? உள்ளேயா வெளியேயா?, இறுதி வரை அவன் எனக்கு கடனாளியாவேதான் இருக்க போகிறானா... என சிந்தனை ஓடியது.

மறுபுறம் பொம்பிள பகுதி வீட்டில் பத்மகாலவுக்கு மணமகள் அலங்காரம் நடந்துகொண்டு இருக்கவேண்டும். ஆனால் அது இன்னமும் ஆரம்பிக்கவும் இல்லை.

குமுதா அவள்தான் சத்தியநாதன் அண்ணனின் மகள். அதாவது சீலனுக்கு கனகலிங்கம் மூலம் சம்மந்தம் பேசப்பட்டவள் மிக அழகான புளியம்பூ வண்ண சேலையில் கடற்கன்னி போல வலம் வந்தாள். பார்க்க பொறாமையாக இருந்தது. அவளின் தந்தையின் முகத்தில் தான் ஒரு சோகம் படர்ந்திருந்தது. டேவிட் அங்கிள் காலில் சில்லு பூட்டி இருக்கிறாரா என கூட்டத்தின் ஊடே கூர்ந்து தேடும்படி அங்குமிங்கும் ஓட்டிக்கொண்டிருந்தார். அவரே இந் நிகழ்வின் அச்சாணி. மனைவி மெற்றில்டா அக்கா பெண்வீட்டை இயக்கிக் கொண்டிருந்தார். மகள் சாலினியும் பல்கலைக்கழக விடுமுறை என்பதால் வந்திருந்தாள்.

பானு பலகாரப்பகுதியை பொறுப்பெடுத்திருந்தாள். விவேக் அண்ணனின் மனைவி வவா அக்கா கலியாண சமையலை கவனித்தார். சுவிஸ் தவம் அண்ணர் மேளம், ஐயர், மணவறை, போன்ற வெளி அலுவல்களை கட்டி மேய்த்தார். ஒலி, ஒளி, வீடியோ, போட்டோ விவேக் அண்ணனின் ஏற்பாடு.

எவற்றிலும் பொறுப்பின்றி எல்லாவற்றிலும் மூக்கு நுழைத்து குறை பிடித்துக்கொண்டு இருந்தார் கலாவின் அக்கா மல்லிகா. அவருக்கு இந்த திருமணத்தில் பூரண சம்மதம் இல்லை. ஒரு பொழுது போக்கு சம்மதமே. டொக்ரருக்கு படித்துக்கொண்டு இருக்கும் முரளியை கட்டிக்கொடுப்பதே அவரின் எண்ணமாக இருந்து. அது சாத்தியமாகாமல் போகவே ஏனோ தானோ என இங்கு வந்திருக் கிறார்.

எல்லா துறையையும் ஒன்றிணைத்து நெறிப்படுத்தும் டேவிட் அங்கிளுக்கு உதவியாக அவரின் மகள் சாலினி முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்தாள். ஆனால் அவளின் நடை பாடப்பதற்கு ஒரு

அழகிய வண்ண மெல்லிய திரை சீலை அசைவது போலவே இருந்தது. அவள் பேச்சில் வல்லின எழுத்தே இல்லாமல் இருப்பது போல இருந்தது. டொச்சு மொழி நாவில் நனைந்து வந்த தமிழை கேட்க அழகாகதான் இருந்தது. அவள் இங்கு பிறந்த பெண்.

***

பெண்வீட்டில் மணப்பெண் கலாவுக்கு வயிறு இன்னும் சரி வர இல்லை. நேற்றில் இருந்து 7 , 8 தடவைக்கு மேல் வயிற்றாலை போய் விட்டது .

பனிநிலவு மல்லிகை மொட்டு போல இருந்தவள் மத்தியான கீரைப்பிடி போல வாடி இருந்தாள். ஏனோ நேற்றில் இருந்து அவளுக்கு சாப்பிடதெல்லாம் உடனே சத்தி வந்தது.

அடிக்கடி பாத்ரூம் போய்வந்ததால் முக, சிகை, நக அலங்காரம் எதுவும் செய்ய முடியாமல் இருந்தது. " என்ன நடந்தது இவளுக்கு…? இப்ப என்ன செய்வது ..? மத்தியானம் 11 மணிக்கு தாலி கட்டு விடிய ஏழு மணிக்கே இப்படி சீலைத்துணி மாதிரி கிடக்கிறாள்" என வவா அக்கா கலாவின் அக்கா மல்லிகாவை கேட்டபடியே இருந்தார். "இன்னும் கொஞ்சம் பாப்பம் சரி வந்திடும்" என்பதையே திரும்ப திரும்ப கூறிக்கொண்டிருந்தார் கலாவின் கட்டிலருகில் இருந்த மல்லிகா. இந்த இருவரை தவிர கதை இன்னும் வெளியில் கசியவில்லை. என்ன சாப்பிட்டாய் கலா என கேட்டதற்கு "விமானத்தில் சான்ட்விச் சாபிட்டேன். பின் முரளியுடன் ரீ குடித்தேன்" என்றாள் கலா.

கதை வவா அக்காவின் கணவர் விவேக் அண்ணன் ஊடாக சீலனுக்கு வந்தது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த திருமணத் தில் கலாவின் அக்கா மல்லிகாவிற்கு இன்னும் விருப்பமில்லை. அவர் தான் நாடகமாடுகிறாரா? முரளி நேற்று ஏதேனும் சொல்லி கலாவின் மனதை மாற்றி விட்டானா..? மனதை மாற்றினால் வயிறு ஏன் குளறுபடி செய்ய வேண்டும், கலாவுக்கும் இத்திருமணத்தில் விருப்பமில்லையா…? இத்தனை தடைகளை தாண்டி வந்தும் இந்த நேரத்திலா இப்படி நடக்க வேண்டும்.

மேலும் ஒரு சிறு ஆனால் பாரதூரமான சொல்லக் கூசும் செய்தி இம்முறை மெற்றில்டா அக்காவின் கணவட டேவிட் அங்கிள் ஊடாக சீலனை வந்தடைந்தது. பொதுவாக இரகசிய அந்தரங்கங்கள் பரவுவது எவ்வாறோ அவ்வாறுதான் இந்த செய்தியும் வந்தது .

கலாவின் உடுப்பில் இரத்தமும் இருந்ததாம். சீலன் என்ன என ஏங்கி முகம் கலவரமடைந்தாலும் மறுகணம் விடையும் அறிந்து "இது எல்லாம் ஒரு பிரச்சனையா? மாதா மாதம் வருவதுதானே" என்றான். வைத்தியம் படிக்க சென்ற அவனுக்கு இது தெரியாதா என்ன.

"ஆனாலும் இதனையும் பார்த்துத்தானே திருமணத்திற்கு நாள் குறிக்கவேண்டும் என்பது கூட ஏன் பெண்வீட்டாருக்கு தெரியாமல் போனது" என விவேக் அண்ணன் கேட்டார்.

"இதை எல்லம் சொல்லவா முடியும்" என டேவிட் அங்கிள் வாதாடினார்.

"சாமத்தியப்பட்ட பிள்ளையே அதை வெளிய சொல்ல வெக்கப்பட்டு இருக்கும் போது கண்டுபிடித்து பறை அடித்து ஊருக்கே சொல்லுவினம். இப்படி சொல்ல வேண்டிய சந்தடப்பத்தில் சொன்னா மட்டும் வெக்கக்கேடா... ?" என்று ஒரு போடு போட்டாரு விவேக் அண்ணன். அவருக்கு தன் வீட்டில் நடக்கும் ஒரு நல்ல காரியம் கெட்டுப் போகக்கூடாது என்ற பரிதவிப்பு. சீலனுக்கு எதிராக இயற்கையும் காய் நகர்த்தியது .

இது எதுவும் தெரியாத சபை கலகலவென இருந்தது. பாட்டுப் பெட்டி பாட்டு வேற பாடி மகிழ்த்திக்கொண்டிருந்தது. இனியும் கலாவுடன் நேருக்கு நேர் பேசாது பிரச்சினையை தீர்க்க முடியாது என மணவறையை விட்டு எழுந்தான் சீலன் .

"தம்பி பொண்ணு வந்து தாலி கட்டி முடியும் வரை மாப்பிளை மணவறையை விட்டு எழும்பக்கூடாது" என்றார் உருத்திராச்ச மாலை போட்டு குடும்பி வைத்த சுவிஸ் ஐயர்.

அங்கிருந்தவாறே ஒருவரை தேடினான். பந்தலில் இருந்த நண்பன் அனுமான் "என்ன" என கண்ணால் கேட்டான். தூது போக உகந்தவன் அனுமானே என தன் சீதையிடம் அவனை அனுப்ப கண்ணை காட்டி அழைத்தான். அவன் எழுந்து எல்லோர் முன்னும் வர வெட்கப்பட்டு பின் சட்டை பொத்தானை துணைக்கு பிடித்துக் கொண்டு ஒருவாறு வந்து சீலனின் முகத்தருகே குனிந்து என்ன என்றான்.

"வலப்பக்க அறை மேசையில் என் போன் சாச் போட்டபடி கிடக்கு. எடுத்து வா மச்சான்" என்றான். போன் கைக்கு வந்ததும் சமையலில் நின்ற வவா அக்காவுக்கு போன் பண்ணி "போனை கலாவிடம் கொடுங்கள் பேசவேண்டும்" என்றான் .

*பாயாசக்கறண்டியுடன் நின்ற வவா அக்கா, போனை அருகில் நின்ற மல்லிகாவிடம் கொடுத்து கலாவிடம் கொடுக்க சொன்னார். கலாவின் போன் ஏனோ பதிலின்றி றிங் பண்ணிக்கொண்டே இருந்தது. அருகில் மாப்பிள்ளை தோழன், முன்னால் சபையோர் என எல்லோரும் அவனையே பார்த்திருந்ததால் வெளிப்படையாக பேச முடியவில்லை. குறுந்தகவல் அனுப்பினான். செய்தி சென்று பதில் வந்துகொண்டிருந்தது.*

*"உடனுக்குடன் இந்த தகவல்களை அழித்துவிடும் கலா. இன்னொருவரின் போன். உமது போனுக்கும் அடித்தேன் ஏன் பதில் இல்லை. என்ன நடக்குது அங்க? அக்கா மல்லிகாவுக்கு இந்த கலியாணத்தில விருப்பமில்லை என எனக்கு முதலே தெரியும்.*

*"அவா இன்னும் மனம் திருந்த இல்லையா…? ஏதோ ஏதோ எல்லாம் கதை வருகுது. உமக்கு என்னை கட்ட விருப்பமா…? இல்லையா…? விருப்பம் இல்லாட்டி நேர சொல்ல வேண்டியது தானே. அதை விட்டிட்டு நேற்று என்னோட கதைக்காம உம் எண்டு கொண்டு வந்தீர். இண்டைக்கு என்னடா எண்டால் வயித்தாலை, சத்தி, ரத்தம் என்கிறீர்"*

*"இதுக்கெல்லாம் என்ன அர்த்தம். ஒரு சாறியை சுத்திக் கொண்டு பக்கத்தில வந்திருக்க ஏலாத அளவுக்கு வருத்தமா…? கலியாணம் நிண்டு போனால் நாளைக்கு கனடா போயிடுவீர். நான் இங்க இருக்கிறவன், வந்திருக்கிறது முழுக்க என் நண்பர்கள். உமக்கென்ன நட்டம். முரளிக்கு நான் அழைப்பு கொடுக்கவே இல்லை. மல்லிகா அக்கா காட் கொடுத்து அவன் வந்து உங்க பலகார சட்டிக்கு முன்னால காவல் இருக்கிறானாமே. எனக்கொண்டும் விளங்கேல்ல. தாலி கட்டும் மட்டும் சமாளியும் எவ்வளவு பிரச்னையை கடந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறம் எண்டு கொஞ்சம் யோசியும்."*

*இது சீலனின் தகவல். சற்று காரமாகவே கேட்டு விட்டான். கோவம் வராதா பின்ன.*

*"பேசவே முடியாம இருக்கிறவளை பிடிச்சு ரைப் பண்ண சொல்லுறீர்… வருத்தம் எண்டு ஆரும் ஆசைப்பட்டு வேணுமெண்டு சொல்லுதுகளே… அதுவும் இந்த நேரத்தில் சொல்லுவினமோ…"*

*"நடக்கிறதுதான் நடக்கும். தாலி கட்டி மனைவியாக முன்னமே இப்படி உறுக்கிறீர். எங்கட சொந்தக்காரன் எண்டு முரளி*

ஒரே ஒரு ஆள் கலியாணத்திற்கு வந்ததே உமக்கு பொறுக்கவில்லை. நான் உம்மை பற்றி பெருசா நினைச்சேன். இவ்வளவு தானா நீர். ஏன் கதைக்க மாட்டீர்". "உமக்குதான் குமுதா..., சாம்பவி... பானு இன்னும் ஆர் ஆரோ... வருசையில் இருக்கிகேக்க கதைப்பீர் தானே..."

இது கலாவின் தகவல் அல்ல. அவளுக்கு தெரியாமல் அக்கா மல்லிகா அனுப்பிய செய்தி.

சீலனுக்கு வாசிக்க வாசிக்க கைநடுங்கியது. வாக்கியங்கள் எண்ணைச் சட்டியில் பிளிந்த முறுக்கு போல பொரிந்து கொண்டிருந்தது. செஞ்சு உலங்குவானவூர்தி காத்தாடி சத்தம் போல படபடத்தது. என்னாச்சு கலாவுக்கு. இப்படி வேண்டா வெறுப்பாக எழுதியிருக்கிறாள். போனில் காதலொழுகப் பேசினாளே...

முடிவெடுத்தான். "இண்டைக்கு தாலி கட்டுறது கட்டுறது தான், யாருக்கு என்பதே கேள்வி. ஆனால் அதற்கு முன் இந்த கண்ணாமூச்சி விளையாட்டுக்கு யார் காரணம் என கண்டு பிடிக்க வேண்டும்.

இந்த கதை மெல்ல சத்தியநாதன் அண்ணனுக்கு எட்டவே மகள் குமுதாவை கூப்பிட்டு சாறியை மாத்தி பட்டு சேலை கட்டிக் கொண்டு வா என அனுப்பினார். அவள் அப்பாக்கு மூளை கழண்டுட்டுதா... என மனதில் கறுவிக்கொண்டு ஏன் என்று புரியாமலே சாறி மாற்றச் சென்றாள்.

மனம் கேட்கவில்லை. வவா அக்காவை அனுப்பி கலாவிடம் பேசினான். "என்னண்டு தெரியேல்ல சாப்பிட்டது உடனயே சத்தி வருகுது. வயிற்றை உளைஞ்சுகொண்டு வயிற்றாலை போகுது ரண்டு நாள் ஆகுது சாப்பிட்டு. கடைசியா கனடாவில் கொஞ்சம் புட்டு சாப்பிட்டது - எண்டு சொல்லுறாள் அவளால போன் கதைக்கவும் பலம் இல்லை." என்றார் வவா அக்கா.

மணவறையில் இருந்த சீலனின் மனம். தோற்றுவிட கூடாது என போராடியது. இது அவனுக்கு இயற்கை கொடுத்த வரம். சிவம் பணத்தை சூறையாடியபின்னும், குத்துவேண்டியவரை காப்பாற்ற முயன்று கொலைப்பழி விழுந்தபோதும், பெயரை மாற்றி மாரிமுத்து என ஆனபோது இருந்த உறுதி இப்போதும் கை கொடுத்தது.

கொழும்பு பத்மநாதன் மாமாவின் மகள் சாம்பவியை கட்டவேண்டும் என ஒரு மனம் சொன்னது. அம்மாவின் விருப்பமும் அதுவே. இரண்டாவது முறையாவது அம்மா வெற்றி அடையட்டும்

என எண்ண முற்பட்டான். மொத்தத்தில் அவன் குழம்பி இருந்தான்.

வந்தவர்களுக்கு என்ன பதில் சொல்லி அனுப்புவது. இந்த வாழ்வை சமைத்து தந்த நல்லுங்களை ஏமாற்றுவதா...? குமுதாவைவே கட்டிவிடலாமா... ? தெரியாமலே தயாராக வந்திருக்கிறாள். கலாவை ஏமாற்றிவிட்டோமா...?. இல்லை கலா என்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாளா....?. என் முன்னாலே நாடகமாடி நம்ப வைக்கிறாளா...?. இனியும் இந்த வருத்தம் வருமா...? இருக்கக்கூட முடியாத பொண்ணுக்கு தாலி கட்ட அம்மா இங்கிருந்தால் சம்மதிப் பாரா...? கட்டிய பின் வருத்தம் வந்தால் பார்ப்பதில்லையா....? யாருக்கு இந்த கேள்விகளுக்கு பதில் தெரியும். பதில் கேட்டு முன்னால் இருக்கும் சபை ஆரவாரிக்க முன் அவன் பதில் தேட வேண்டும்"

ஒருவேளை உண்மையிலேயே அவளுக்கு என்னை பிடிக்காமலிருக்கலாம் "முன்னர் கல்லூரி இளைஞன், இன்றோ கடின உழைப்பாளி, அவளின் கண்ணுக்கு உடல் கறுத்து மெலிந்து இருப்பதாக தெரியலாம். உள்ளதை உள்ளவாறு ஏற்க ஏன் மறுக்கிறாய் மனமே..."

இதற்காக உயிரை விட்டுவதா... இல்லை பித்து பிடித்து வீதியில் திரியப்போகிறாயா...? இவ்வளவு தேசம் தாண்டி வந்தது இதற்காகவா....?. கிட்டாதாயின் வெட்டென மற...

தாலி கட்டியபிறகும் ஆபிரிக்க காரனோட ஓடி போனாளே நிரோஜா. அதை விட மோசமான ஒன்றையா நான் செய்ய போகிறேன். திருமணத்தை தானே நிறுத்தப்போகிறேன். எதையும் தாங்கும் சக்தி கொள் மனமே. உன்னை விரும்பியவள் இப்போது உன்னை காதலிக்க வில்லை . விரும்பாவிடில் மறந்து விடு மனமே....

மற்றவரை கொண்டு வாருங்கள் அவளும் பின்னின்றால் விரும்பி முன்வரும் யாரையாவது மனைவியாக்கி வாழ்ந்து காட்டு கிறேன்.

எனக்கு என் நண்பர்கள் இன்று என் திருணமத்தை கண்டு போக வேண்டும் அவ்வளவுதான். எந்த பெண்ணுடனும் நான் வாழத் தயாடூ. என்னோடு யார் வாழத் தயார்...?

எல்லா பெண்ணும் நல்ல பெண்தான். சில கல்லுமன ஆண்களால் கறுப்பு, வெள்ளை, உயரம், கட்டை, மெல்லிசு குண்டு என வெளிப்பார்வையை கொண்டு தவிர்க்கப்பட்ட பெண்களே நல்ல

கணவனை அடைந்து நிறைவாக வாழ்பவடீகள். எல்லாவற்றுக்கும் மனமே காரணம். முடிவெடுக்க தயாரானான் சீலன். எவ்வளவு காசை செலவழித்து இந்த திருமண ஏற்பாடு செய்திருக்கிறோம். வெறுமனே கனடாவில் இருந்து முதல் நாள் வந்த அவையளுக்கு என்ன தெரியப் போகிறது.

மணவறையில் மயங்கி விழுந்தான் மணமகன். முறை மச்சானுக்கு மலை சூடினாள் மணப்பெண். குடியில் மணவறைக்கு வந்தவனை முடிக்க மறுத்த பெண்ணால் நின்றுபோனது திருமணம். கேள்விப்பட்டதில்லையா அவற்றுள் இதுவும் ஒன்று என எண்ணினான்.

தான் ஒருத்தி கழுத்தில் தாலி கட்ட முன் முரளி கலா திருமணத்தை தானே இதே மேடையிலேயே நடாத்தி வைக்க தயாரானான். அதுவே கலாவின் விருப்பம் என்றால், இதுவே மல்லிகாவுக்கு மன மகிழ்ச்சியை தரும் என்றால், காதலை முறித்து கலாவை அடைவதே முரளிக்கு இன்பம் தரும் என்றால், இங்கேயே இப்போதே கலாவின் கழுத்தில் முரளி எனது தாலியையே கட்ட நான் பூத்தூவி வாழ்த்திவிடத் தயார்.

ஒன்றல்ல இரண்டு திருமணங்களை கண்டு போகட்டும் என் சபையோர். திடம் பூண்டான். விழுதல் எல்லாம் எழுவதற்கே. எழுவது உறுதியானால் விழுவதெல்லாம் தற்காலிகமானதே.

நேரம் ஆக ஆக நிலைமை மோசமானது. எவ்வாறு சிந்தித்த போதிலும் பந்தலுக்கு முரளி வந்த போது சீலனுக்கு அவன் மேல் இருந்த சந்தேகமும் கோவமும் வலுக்கவே செய்தது. முரளி தான் ரீயில் எதையோ நேற்று கலந்திருக்கிறான். இது தெரியாத மல்லிகா உண்மையான உடல் வருத்தம் என நம்பிக்கொண்டிருக்கிறார்.

ஆனாலும் இதை வைத்து திருமணம் குழம்பினால் தன் விருப்பம்போல் முரளிக்கே கலாவை கட்டி வைக்கலாம் என நினைக்கிறார். இதை கலாவுக்கு சொன்னால் அவள் நம்ப மாட்டாள் அக்கா பாசம், முரளிமேல் அவ்வளவு நல்ல அபிப்பிராயம் என சிந்தித்த போது டேவிட் அங்கிள் வந்தார்.

இந்த ஐரோப்பிய வாழ்வின் கடவுள் போன்ற மனிதன் அவர். உறுதியோடு அருகில் வந்து .

“சீலன் இது நான் அவசரத்தில எடுத்த முடிவில்லை. நான், என் மனைவி, மகள் சாலினி மூவரும் பேசி எடுத்த முடிவு. கலாவின் அக்கா

ஏதோ மனதில் வைத்துக்கொண்டு பிடிபடாம பேசுறா.... கலாவுக்கு அது தெரியேல்ல. கலாவை மறக்கிறதுதான் உனக்கு நல்லது. நான் சொல்லுறதை வடிவா கேட்டு யோசித்து பதில் சொல்லு சீலன். தாலி கட்டும் நேரத்திற்கு இன்னும் ஒரு மணித்தியாலம் தான் இருக்கு".

"நானும் மெற்றில்டாவும் முறைப்படி உன்னை எங்கள் மகள் சாலினிக்கு யாழ்ப்பாணத்திற்கு போன் பண்ணி உன் அம்மாவிடமே கட்டி தர விருப்பமா எண்டு கேட்டு அம்மாவும் ஓம் எண்டு சொல்லி விட்டார். இப்பதான் பேசினனாங்கள். இனி உன் விருப்பம். யோசித்து முடிவு சொல்லு" என கேட்டு விட்டு யாரையோ வரவேற்று பன்னீர் தெளிக்க போய்விட்டார். அவர் செய்த உதவியை மறக்க முடியாது. மகள் சாலினி அருமையான பிள்ளை அம்மாவை வேறு கேட்டுவிட்டார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது தான் அந்த செய்தி வந்தது .

கலா மயங்கிவிட்டாள். அம்புலன்சுக்கு அடித்து கொண்டு போய் வாட்டில் மறித்து விட்டார்கள். மயக்கம் தெளிந்தால் தான் முடிவு தெரியும் என்றார் விவேக் அண்ணன். சீலனால் அந்த செய்தியை கேட்டபின்னும் மணவறையில் இருக்க முடியவில்லை.

"கலா..., கலா..." என்று கத்தி விழித்து விட்டான். என்ன ஆச்சரியம் கலாவின் மடியில் அவன் படுத்திருந்தான். அவன் கட்டிய தாலி அவள் மார்பில் ஆடியது. எல்லாம் கனவு..., கண்ட கனவை ஒன்று விடாமல் கலாவுக்கு சொன்னான்.

"ஆனாலும் உன் கனவு ரொம்ப மோசம், அலுப்பாய் இருக்கிறாய் என கொஞ்சம் தூங்க விட்டால் இப்படியா கனவு காண்பாய். சீரோடு சிறப்பாக நடந்த திருமணத்தை இப்படி நாதாரித்தனமா அல்லவா கண்டிருக்கிறாய்" என்றாள் தன் தலை சோடனையை கழற்றியபடி பத்மகலா.

"சக்கரைப்புக்கையில் புதைத்து வைத்த வாழைப்பழம்போல் நல்ல இனிப்பான கதகதப்பாய் மடி இருந்தால் நித்திரை வராதா என்ன" என்றான் சீலன் அவளை அண்ணாந்து பார்த்து.

"முதலிரவை கனவு காண்பவர்கள் மத்தியில் முதலிரவில் கனவுகண்ட ஒரே ஆள் நீதானடா.... சீலா.... கனவில் கடைசியில யாருக்குத்தான் தாலி கட்டினாய்" என்றாள் கலையாத கூறைபட்டின் கரையை பார்த்தபடி.

"அதுதான் இடையில் முழிச்சிட்டனே. மீதியையும் காண

இன்னொருக்கா தூங்கவா...?" என்றான். அவள் பின்னலில் இருந்த குஞ்சத்தை அவிட்டபடி அவனின் காதை ஊண்டித் திருகினாள். அவளின் கன்னத்தில் பட்டுத் தெறித்த மின் விளக்கு ஒளியில் வெட்கமும் கலந்திருந்தது.

## நிறைவுப்பகுதி (3)

## எழுதியவர்: திருமதி. நிவேதா உதயராயன் அவர்கள், இலண்டன்.

அன்றைய பொழுதின் விடியல் சீலனுக்கு மிக மகிழ்வாக இருந்தது. தன் வாழ்வில் இத்தனை காலம் பட்ட துன்பத்துக்கு முதல் முறையாக சஞ்சலங்கள் எதுவுமற்று, கவலைகளே இன்றி மகிழ்வு கொண்டு மனம் துள்ளிக் குதிப்பது இன்றுதான். அவனுக்கே அம்மகிழ்வைத் தாங்க முடியாது மனது கனத்தது.

துன்பங்கள் வருவது கூட நல்லதுதான். அப்பொழுதுதான் நாம் இழந்தவைகளும் பெறுமதி மிக்கவைகளும் எம் கண்ணுக்குத் தெரிகின்றன. இறைவன் தெரிந்தேதான் இரண்டையும் மனித வாழ்வில் வைத்துள்ளான் என்று எண்ணியவனுக்கு சிரிப்பு வந்தது. எத்தனை இலகுவாகிவிட்டது மனம். வாற வெள்ளிக்கிழமை கலா வந்தால் எப்படி எப்படிச் செய்யவேண்டும், என்ன முதலில் கதைக்க வேண்டும் என்று மனதுள் பட்டியல் இட்டுக்கொண்டான். அவளுக்கு என்ன வாங்கலாம் என்று யோசித்தவன் உடனேயே அந்த எண்ணத்தைக் கைவிட்டான். பத்மகலா வந்த பிறகு அவளைக் கடைக்குக் கூட்டிக்கொண்டு போய் வாங்கிக் கொடுப்பதுதான் நல்லது என முடிவெடுத்தவன், பாடல் ஒன்றை மகிழ்வாக விசிலடித்தபடி எழுந்து குளியலறைக்குச் சென்றான்.

வெள்ளிக்கிழமை பிராங்பேடிற்குப் போறதுக்கு கார் வேணும். ஆரிட்டைக் கேட்கலாம்? என யோசித்தவனுக்கு சத்திய நாதன் தான் உடனே நினைவில் வந்தார். அவர் வேண்டாம். அவர் மகளை மறுத்துவிட்டு அவரிடமே உதவி கேட்பது ஏதோபோல் இருக்க, எதுக்கும் வேலை செய்யும் இடத்தில் மாக்கிடம் கேட்டுப் பாடப்போம். அவன் ஏதும் ஐடியா சொல்வான் என எண்ணி மனதை அமைதிப்படுத்தியபடி வேலைக்குச் செல்ல ஆயத்தமானான் சீலன்.

மதியம் உணவு வேளையின் போது எயர்ப்போட் விடயம் பற்றி மாக்கிடம் கதைத்தபோது அவனொரு யோசனை சொன்னான்.

“எயாப்போட் போகும்போது நீ இங்கிருந்து ரெயினில் போய்விடு. உன் நண்பி வந்தபின் அங்கேயே ஒரு டாக்ஸி பிடித்து அழைத்து வா. ஒரு 150 யூரோ வரும்” என. ஆனால் அது நல்ல யோசனையாகச் சீலனுக்குப் படவில்லை. அவன் பணத்தில் குளிப்பவன் அல்லவே இத்தனை பணம் செலவழிக்க. பத்மகலா என்ன இரண்டு மூன்று சூட்கேசா கொண்டுவரப் போகிறாள். ஒன்றுதானே. அவளையும் ரெயினிலேயே கூட்டி வந்துவிடலாம் என மனதில் நினைத்தாலும் மாக்கிடம் சொல்லவில்லை. கலா ஏதும் நினைப்பாளோ என்று ஒரு நிமிடம் எண்ணியவன், இயல்பாக இருப்பதே எல்லாதுக்கும் நல்லது. இருக்கிறதை விட்டு பறக்கிறதுக்கு ஆசை கொள்வதுதான் தவறு என எண்ணியபடி தன் வேலையில் மூழ்கிப்போனான்.

இரண்டாவது வெள்ளி விடிந்தபோது மனதில் எதுவோ பிசைவதாக உணர்ந்தவுடன் ஏன் இப்படி இருக்கிறது. இன்று கலாவைப் பார்க்கும் சந்தோசத்தில் இருக்கிறேன். அம்மா தங்கச்சிக்கு ஏதும் வருத்தமோ என் எண்ணியவன் உடனேயே அவர்களுக்குத் தொலைபேசி எடுத்தான். தாயின் குரலைக் கேட்டவுடன் தான் மனம் நின்மதியானது. தங்கச்சி சுகமோ என்று அவன் கேட்காமலேயே தாய் அவள் டியூசனுக்குப் போட்டாள் என்று கூற, சீலனின் மனம் அமைதி கொண்டது.

கடவுளே பத்மகலா எந்தத் தடையும் இல்லாமல் வந்து சேர்ந்திடவேணும் என்று மனம் வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிப் பிரார்த்திக்க, கட்டாயம் அவள் தன்னிடம் வருவாள் என்று மனம் சொல்ல, சில நேரம் தன்னை அறியாமலே ஏற்பட்ட மன அழுத்தத்தில் தான் நெஞ்சு பிசைந்ததாக்கும் எனத் தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டான். காலையில் எழுந்தவுடனேயே ஏழு மணிக்கு எல்லாம் காலை உணவை உண்பவனுக்கு இன்று பசியே எடுக்கவில்லை.

இதுவரை போடாமல் வைத்திருந்த ஒரு சேர்ட்டை எடுத்துப் போட்டுக்கொண்டான். நல்ல காலம் இப்ப சமர். அல்லது என்ன தான் அழகா ஆடை அணிந்தாலும் மேலே யக்கற்றைப் போட எல்லாம் உள்ளே மறைத்துவிடும் என எண்ணியவனாக ரெயின் டிக்கற் தனதும் கலாவினதும் சரியாக இருக்கிறதா எனச் சரிபார்த்து பேர்சுக்குள் வைத்து காற்சட்டைப் பையினுள் வைத்துவிட்டு கதவைப் பூட்டிய படி இறங்கினான்.

நடக்கும்போது ஏனோ அந்தரமாக இருந்தது. என்ன இது? ஒருநாள் கூட இப்படி இருக்கவில்லையே என்னும் எண்ணம் மீண்டும் வர, எனக்குப் பதட்டம் அதிகமாகிவிட்டது எனத் தனக்குச் சமாதானம் சொன்னவன் பத்து நிமிடத்தில் பஸ்தரிப்பிடம் வந்து சேர்ந்தான். தரிப்பிடம் வந்தவன், பஸ்சுக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு ஓரிடத்தில் நிற்காமல் இருக்காமல் அங்கும் இங்கும் நடக்கவாரம்பித்தான். எத்தனை தரம் என்று நடப்பது என எண்ணியபடி ஒரு பக்கமாகப் போய் நின்றவனில் கண்ணில் விளம்பரத்துக்கும் அப்பால் அவனது உருவம் தெரிந்தது.

"ம்..." நல்ல சிமாட் ஆகத்தான் இருக்கிறன் என பெருமிதம் ஏற்பட்ட அடுத்த நிமிடமே ஆயாசமும் ஏற்பட கீழே குனிந்து பார்த்தான். சப்பாத்தைப் போட மறந்து வீட்டில் போடும் செருப் புடன் வந்துவிட்டிருப்பது தெரிய, அய்யோ இப்ப திரும்பிப் போகவேணுமே. இன்னும் மூன்று நிமிடத்தில் பஸ்ஸைப் பிடிக்க முடியாது. வந்துவிட்டுத் திரும்பிப் போவது சரியில்லையே என நினைத்தவன், இப்படியே போக முடியுமா? நல்ல காலம் இப்பவாவது கண்டேனே. இதுவே எயர்ப்போடில் அல்லது ரெயினுக்கை ஏறின பிறகு கண்டால் என்ன செய்யிறது என்று மனதைச் சமாதானப்படுத்தியபடி மீண்டும் வீட்டுக்கு விரைந்து நடந்தான்.

***

கிறங்கிப் போய் அவன் தோழில் சாய்ந்தபடி பத்மகலா விட்ட நிம்மதிப் பெருமூச்சு இப்பகூட அவன் காதில் கேட்கிறது. கண்களில் கண்ணீர் வழிந்தோட அதைத் துடைக்க மறந்து வெளியே பார்த்தபடி நிற்கிறான் சீலன். அதுதான் எங்கள் விதியென முன்பே எழுதப் பட்டிருக்கு. அதை மாற்ற முடியாதுதான். வாழ்வு பூராவும் இந்தக் குற்ற உணர்வே என்னை சிறிது சிறிதாகக் கொல்லப்போகிறது. என்னால் இன்னொருத்தியுடன் வாழவும் முடியப்போவதில்லை. ஆனாலும் நான் அதற்காக மனமொடிந்து வீழ்ந்து போய் விட மாட்டேன்.

எத்தனை அழிவின் பின்னும் எம் மக்கள் போராடிக் கொண்டே இருக்கிறார்களே மீண்டும் எழுந்து நிற்க. நானும் அப்படித்தான் எத்தனை முறை வீந்தாலும் எழுவேன். என் உயிெ உள்ளவரை. காதல் வாழ்வின் ஒரு பகுதியே அன்றி காதல் இன்றி வாழ்வு முடிந்துவிடுவதில்லை. என்னை இறைவன் இப்படி நிற்க

வைத்துள்ளான் என்றால் ஏதோ என்னால் என் சமூகத்துக்கு ஆகவேண்டியது இன்னும் இருக்கிறது. காரண காரியமின்றி எதுவுமே உலகில் எதுவும் நடப்பதில்லை. என் எழுகையை யாரும் தடுக்கவே முடியாது என எண்ணியபடி தூரத்தில் தெரியும் காட்சிகளைப் பார்க்கத் தொடங்கினான் சீலன்.

இன்றுடன் மூன்று மாதங்கள் ஆகின்றன. எத்தனை தடவை நான் கீழே விழுந்தாலும் தடுமாறித் தடுமாறி எழுகிறேனே. அப்படி இருந்தும் கடவுள் என்னைச் சோதிக்கிறானே. இந்தப் பிறப்பில் என் மனமறிந்து நான் யாருக்கும் எந்தப் பாவமும் செய்யவில்லையே என சீலன் எத்தனையாவது தடவைகள் எண்ணியிருப்பான் என்று அவனுக்கே தெரியவில்லை. அத்தனைக்கு அவன் மனதில் விரக்தி ஏற்பட்டிருந்தது. எத்தனை ஆசைகள் கோட்டைகள் எல்லாம் கட்டி அவன் பத்மகலாவின் வருகைக்காகக் காத்திருந்தான். கடவுளும் பாராபட்சம் பாக்கிற ஆள்தானோ? அல்லது எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கவேண்டும். உள்ளுக்குள் கடவுள் மேல் கோபம் வந்தாலும் அடுத்த நிமிடமே கடவுளே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேணும் என மனதினுள் மன்றாடியவனுக்கு கண்கள் நிரம்பி கண்ணீர் எட்டிப் பார்த்தது.

எத்தனை போராட்டத்தின் பின் பத்மகலாவைத் தன்னுடன் வைத்திருக்கிறேன். தடாலடியாக வந்திறங்கிய மல்லிகா உடனேயே தங்கையை கனடாவுக்குக் கூட்டிக்கொண்டு போக ஒற்றைக் காலில் நின்றதுவும் இவன் அவளின் காலில் விழாத குறையாகக் கெஞ்சி மன்றாடியும் கூட அவள் இறங்கி வரவில்லை. சத்தியநாதன் அண்ணை தான் கடைசியில் மல்லிகாவுக்கு சீலனைப் பற்றிச் சொன்னார். தன் மகள் உட்பட எத்தனை திருமணம் அவனுக்கு வந்தது என்றும் கலாவைத் தவிர யாரையும் கட்டச் சீலன் மறுத்து விட்டதையும் சொன்னபின் தான் மல்லிகா ஒருவாறு இறங்கி வந்தாள். அத்துடன் கலாவின் நிலை இன்றும் மாறலாம் அல்லது மாதங்களோ வருடங்களோ கூட எடுக்கலாம் என்பதும் இந்த நேரத்தில் கலாவை கூட்டிக்கொண்டு செல்வது நல்லதும் அல்ல என வைத்தியர்கள் கூறியதும் மல்லிகா ஒருவாறு இறங்கிவந்து கலாவை இங்கேயே விட்டுவிட்டுப் போகச் சம்மதித்தாள்.

சீலனின் மனம் அப்பப்ப கிடந்தது அல்லாடும். ஆனாலும் அவன் மனதைத் தளரவிடவில்லை. தனக்கும் பத்மகலாவுக்கும்

கட்டாயம் ஒருநாள் திருமணம் நடக்கும். ஆனால் எப்போது என்பது தான் தெரியவில்லை. முன்பெல்லாம் கடவுள் மேல் நம்பிக்கை யற்றிருந்தவன் அவன். பத்மகலா தன்னுடன் கதைத்தால் கம் அம்மனுக்கு அபிசேகம் செய்வதாகவும், பழனிக்கு வந்து மொட்டை போடுவதாகவும் கூட வேண்டியுள்ளான். என்ன செய்வது மற்றைய துன்பங்களைத் தாங்கிக் கொண்ட எனக்கு இதைத் தாங்க முடிய வில்லையே என எண்ணியபடி வைத்தியசாளைக்குச் சென்று பத்மகலாவின் கட்டிலின் முன் கதிரையை எடுத்துப் போட்டு அவள் கைகளை தன் கைகளில் எடுத்து வைத்துக்கொண்டான்.

***

சப்பாத்தை மாற்றிவிட்டு மீண்டும் பஸ் தரிப்பிடம் வந்த சீலன், எதுக்கும் விமானம் வெள்ளன வந்தாலும் என எண்ணிக் கொண்டே இரண்டு மணி நேரத்துக்கு முன்னர் விமான நிலையம் சென்று காத்திருக்க ஆரம்பித்தான்.

நூற்றி இருபது நிமிடங்கள் நூறாகி ஐம்பதாகி முப்பதாக பிரயாணிகள் வெளியே வரும் பாதைக்கு அருகே சென்று கம்பிகளில் கையை வைத்தபடி வெளியே வருவோரைப் பார்க்கத் தொடங் கினான். அவனுக்கே தெரிந்ததுதான் நாட்டுக்குள் புதிதாக வரும் அவள் எப்படியும் வெளியே வர ஒரு மணி நேரமாவது செல்லும். ஆனாலும் காத்திருப்பதிலும் ஒரு சுகம் இருக்கவே செய்கிறதுதான். இந்த ஐந்து ஆண்டுகளில் எப்படி இருப்பாள். அப்படியே தானோ என பலதும் நினைக்க முகம் சந்தோசத்தில் பூரித்தது. அவனறியாமலே சிரிப்பு எட்டிப் பார்க்க தனக்குள்ளேயே கூச்சப்பட்டவனாக அருகில் இருந்த கதிரையில் அமர்ந்து விழியை வழிமேல் வைத்துக் காத்திருந்தான்.

அதோ அவள்தான். அவன் முகம் அவளைக் கண்டதும் எப்படி மகிழ்வு கொண்டதோ அப்படியே அவள் முகமும் பிரகாசிக்க தூரத்திலேயே இவனைக் கண்ட மகிழ்வில் சிரித்தபடியே வந்து சீலன் என்று வாஞ்சையுடன் அவன் கைகளைப் பற்றினாள். பத்மகலா இவ்வளவு அழகியா? வெளிநாட்டுக் காற்று அவளை நன்கு பளபளப் பாக்கி என்ன அழகாக இருக்கிறாள் என மனதில் நினைத்தாலும் வெளியே சொல்லவில்லை. அவளைக் அணைக்க வேண்டும் என்று எழுந்த ஆவலைக் கட்டுப்படுத்தியபடி “பிரயாணம் எல்லாம் எப்பிடி” என்றன்.

"சீலன் நீங்கள் இப்ப எவ்வளவு வடிவாவிட்டியள். முகமும் நல்ல குளிர்மையா வந்திட்டுது" என்று பத்மகலா கூற, "நீரும் தான்" என்று மட்டும் கூறிவிட்டு நிறுத்திக்கொண்டான். அவளைக் கண்டவுடன் அணைத்து முத்தமிடுவது பற்றி தான் எப்படியெல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தும் அவள் வந்தவுடன் ஏன் தன்னால் அப்படிச் செய்யமுடியாமல் போனது என்று மனதுள்ளே எண்ணிய வன், அதுதான் தமிழ் பண்பாடு எனப் பெருமையாக உணர்ந்தான். வீட்டுக்குத் தானே வருகிறாள். அவளுக்கும் ஆசை இருக்கும் தானே. ஆசைதீர அணைப்போம் என எண்ணிக்கொண்டு அவளது சூட்கேசை இழுத்தபடி வாயிலை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனின் பற்றிய கையை அவள் விடவில்லை.

வாசலை அண்மித்தபோது எதிரே கனகலிங்கம். சத்தியநாதன் வீட்டு பிறந்த தினத்தில் சந்தித்தவர். சீலனை சத்தியநாதனின் மகளுக் காக திருமணத்துக்குக் கேட்டவர் என அவனுக்கு ஞாபகம் வந்தது.

இவனும் அவரைப் பார்த்து "வணக்கம் அண்ணை" என்றான். அவரும் வணக்கம் சொல்லிவிட்டு "என்ன தம்பி இந்தப்பக்கம்" என்றவரின் பார்வை பத்மகலாவின் மேல் விழுந்தது.

"இவதான் கலா. நான் கலியாணம் செய்யப் போறவ". "நீங்கள் எங்கே இந்தப் பக்கம்"

"எனது நண்பன் சிறிலங்கா போறான். அவனை விட வந்தனான். நீங்கள் ஆற்றேன் காரிலையோ... "என அவர் இழுக்க, "இல்லை அண்ணை ரெயினில தான் போகப்போறம்" என்று சீலன் கூற, "என்னோட வாங்கோ. நான் தனியாத்தான் போகப்போறன்" என்று கூறியபடி அவர் கார் தரிப்பிடம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

முதலில் மறுப்போமா என எண்ணிய சீலன், சரி காரில் என்றால் கொஞ்சம் வேகமாகப் போகலாம். தானாகக் கேட்டவரை ஏன் மறுப்பான் என எண்ணிக்கொண்டு கலாவுடன் அவர் பின்னே நடந்தான். கார் டிக்கியைத் திறந்து கலாவின் சூட்கேசை வாங்கி வைத்தவர், "சீலன் நீங்களும் அவவுடன் பின்னுக்கு இருங்கோ" என்று சொல்ல நன்றியுடன் அவரைப் பார்த்துவிட்டுக் கலாவுடன் ஏறி நெருங்கி அமர்ந்தான். தனக்கும் கலாவுக்கும் சீற் பெல்டை மறக்காமல் போட்டுக் கொண்டான். கனகலிங்கத்துக்குத் தெரியாதா இளசுகள் மனம் எப்படி என்று. அவரும் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

கார் விரைவுப் பாதையில் செல்லவாரம்பிக்க மழையும் சோவென ஆரம்பித்தது. புதிய இடத்தை வடிவாப் பார்ப்போம் என எண்ணிய கலாவுக்கு மழையின் வேகத்தில் கண்ணாடியின் பின் எதுவுமே தெரியாது தலையும் சுற்ற ஆரம்பிக்க, “தலை சுத்துது சீலன்” என்றாள்.

“மெதுவா என்ர தோளிலை சாய்ந்து கொள்ளும். வாரும்” என்று உரிமையோடு அவளைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டான் சீலன். அவனுக்கு மட்டுமல்ல அவளுக்கும் அவனின் அணைப்பு நெகிழ்வைத் தந்தது. அனாலும் இன்னொருவரும் இருக்கிறாரு என்னும் எண்ணம் இருவரையும் கட்டியும் போட, கண்களை மூடியபடி அவனின் தொடுகையில் கிளர்வு கொண்டு லயித்துப் போய் கிடந்தாள் கலா. அவனுக்கும் அவள் உணர்வு புரிந்திருக்க வேண்டும். அவள் உச்சியில் அவசரமாக ஒரு முத்தம் பதித்துவிட்டு சூழ்நிலையை மாற்ற கனகலிங்கத்தாருடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினான். தோளில் வசதியாக சாய்ந்து கொள்வதற்கு சீற் பெல்ட் இடைஞ்சலாக இருக்க ஒருமாதிரி கைகளால் துலாவி அதை விடுவித்தபின் தான் அவளுக்கு நின்மதியாக இருந்தது.

***

கண் மூடிக் கருத்தழிந்து எந்தவித உணர்வுகளின் பிரதிபலிப்பும் இன்றி வைத்தியசாலையில் படுத்தபடுக்கையாகக் கிடக்கும் பத்ம கலாவை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டு இருந்தான் சீலன்.

அவளது அழகிய முகம் கருமை படர்ந்து கண்கள் குழிவிழுந்து உயிருடன் இருக்கிறாள் என்பதற்குச் சாட்சியாக சுவாசம் மட்டுமே யாக... கடந்த மூன்று மாதங்களாக இதே நிலைதான். அவளின் தலையை ஆதரவாக வருடிக் கொடுத்தான். அவன் கண்களில் நிரம்பிய கண்ணீர் அணை உடைந்தது போல் தழும்பி அவள் நெற்றியில் உதிர, அவள் வழி அசைந்தது மூடிய இமைகளுக்குள். அவசரமாக நெற்றியில் விழுந்த கண்ணீரைத் துடைத்தான். குமுறி வரும் தனது அழுகையை தன்னிதழை உள்ளிழுத்து அடக்கினான்.

சீலனும் ஒவ்வொரு நாளும் வேலை முடிய ஆவலுடன் வந்து அவளைப் பார்ப்பதும் அவளுடன் பழைய கதைகள் சொல்லி தானே தனக்குள் சிரித்தபடி அழுவதுமாக. ஆனால் நம்பிக்கையை மட்டும் அவன் கைவிடவே இல்லை.

கனகலிங்கம் நன்றாகக் கார் ஓட்டக் கூடியவர். கன காலம் கார் வைத்திருக்கிறார். மழைக்குள்ளும் லாவகமாக அவர் கார் ஓட்டுவதை

சீலன் பார்த்துக்கொண்டு இருந்தான். பிராங்க்பேர்ட்டிலிருந்து காகன் செல்ல இரண்டு மணிநேரம் செல்லும். யேர்மனியின் மற்றைய விரைவுப் பாதைகள் எல்லாம் நேரானவை இந்தப் பாதை மட்டும் தான் சீலன் ஒரே வளைவு எனச் சொல்லியபடி கனகலிங்கம் வீதியைப் பார்க்க, ஐயோ அண்ணை உந்த லொறி சிக்னல் போடாமல் எடுக்கிறான் என்று சீலன் கத்தியது மட்டும் தான் சீலனுக்கு நினைவில் இருந்தது.

கார் லொறியுடன் மோதி உருண்டு கேடர் ஒன்றுடன் அடிபட்டுத்தான் நின்றது. அதிக வாகனங்கள் இல்லாததால் இவர்கள் உயிர் தப்பியதாக பொலிஸ் கூறியதைக் கேட்டதும் சீலன் கடவுளுக்கு நன்றி சொன்னான்.

கனகலிங்கமும் சீலனும் சிறு காயங்களுடன் தப்ப, பெல்ட் போடாமல் இருந்ததனால் பத்மகலா அதிக பாதிப்புக்குள்ளாகி கோமா நிலைக்குப் போய்விட, இப்போதும் அனைத்தையும் மனக் கண்ணில் பார்த்தபடி பத்மகலாவுக்கு முன்னால் அமர்ந்திருக்கிறான் சீலன்.

நிட்சயாய் கலா எனக்காக எழுந்து வருவாள். அவளுக்காக நான் காத்திருப்பன் என எண்ணியபடி வீட்டுக்குச் செல்ல எழுந்தவனின் கைகளுள் கலாவின் கை அசைந்தது...

## நிறைவுப் பகுதி (4)

### எழுதியவர்: திரு.நோர்வே நக்கீரா( திலீபன் திருச்செல்வம் ) நோர்வே

ஜேர்மனியின் சர்வதேச பிராங்பேட் விமான நிலையத்தில் விமானங்கள் மேலெழுவதும் தரையிறங்குவதுமாக பறந்து கொண்டிருக்கிறன. விமானங்கள் பறப்பதை விட மக்கள் அதிவேகமாக அங்குமிங்குமாக ஓடுபாதையின்றி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சர்வதேசவிமான நிலையம் என்பதால் உலகமே அங்கு திரண்டிருந்தது. மக்கள் காலில் சிறகு கட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

தன் தேவதையை, இலங்கையில் விட்டுவிட்டு வந்த தேவதையை மீண்டும் ஜேர்மனியில் காணத் துடித்துக் கொண்டிருந்தான் சீலன்.

தாயை, தாய்நாட்டை, தங்கையை, தன் இதயராணி பத்மகலாவை விட்டு கடைசியாக அவன் இலங்கையில் விமானம் ஏறும் போது கண்டகாட்சிகள் மீண்டும் மீண்டும் மனத்திரையில்

காணொளிகளாகக் கோலம் போட்டுக்கொண்டிருந்தன.

தன்னையே தொலைத்து விடுவாள் தாய். இனியெப்போ காண்போம் என்பதுபோல் தங்கை. வரம்புடைத்து கண்ணீர் முத்துக் கள் மாலையாக அசையா அணங்காக வைத்த கண்வாங்காது காதலில் கசிந்து கொண்டிருந்த பத்மகலாவின் முகம் காட்சிப்படிமமாக அவன் கண்களில் தீட்சண்யமாகத் துலங்குகிறது.

சீலன் அழைத்துவந்து நண்பன் ஓடிவந்தான்.

“சீலா! விமானம் சொன்ன நேரத்துக்கு தரையிறங்கிவிட்டது. உன் பத்மகலா வந்துவிட்டாள். தேவதை வனத்தில் சீ...சீ வானத்தில் இருந்து பூமிக்கு வந்துவிட்டது”

துள்ளியது இதயம். அதை அள்ளியது ஆசை. எப்படி அவளை எதிர்கொள்வது? எப்படி அவள் இருப்பாள்? மாறியிருப்பாளோ? முழங்கால் முட்டி தட்டி நிற்கும் நீளமான கத்தையான கூந்தலைத் தாங்காது தள்ளாடும் துடியிடை துடிக்கும் அழகைக்காணத் தவித்தான், துடித்தான்.

அடந்த கார் மேகக் கூந்தலினுள் சந்திரவதனம் காதல் கணையெறிந்து கொல்லும் காட்சிகளை இதயம் தேடுகிறது. இக்காட்சிகள் அவன் நெஞ்சில் ஓடிக்கொண்டிருந்ததால் நண்பன் சொன்னது எதுவுமே அவனுக்குக் கேட்க வில்லை.

“டேய் நான் சொன்னதேதும் கேட்டதாடா. என்ன கற்பனையோ... நிஜமாகவே அவள் வந்திட்டாளடா” திடுக்கிட்டவன் தன்னைச் சுதாரகரித்துக் கொண்டு “எங்கேயடா வந்திட்டாளா? எங்கே... எங்கே”

“அங்கே பார் கொம்பியூட்டர் என்ன சொல்லுது என்று பார்”

கடிகாரத்தையும், கணினியையும் மாறிமாறிப்பார்த்தவன் இப்போது தான் பூமிக்கு வந்தான். ஆம் பத்மகலா லாண்ட் பண்ணி விட்டாள். நான்தான் இன்னும் லாண்ட் பண்ணவில்லை.

“எப்படியும் 15நிமிடத்துக்கு மேலாவது செல்லும். எயாப் போட்டுக்குள்ளேயே பெரிய தேசம். சுத்திவந்து பொதிகளை கிளியர் பண்ணிவர குறைந்தது 15 நிமிடமாவது செல்லுமெல்லோ?”

“ம் ம்... அந்த அளவுக்கு எனக்குப் பொறுமையில்லை மச்சி”

“என்னடா வந்தவுடனை வன்புணர்வாயோ...?”

“நீ காதலித்துப் பிரிந்திருந்துபார். அதன் வேதனையும் வலியும் தெரியும்”.

“ஆமாம் எங்களுக்குக் காதல் தெரியாது.... நாங்கள் காதலிச்சுக் களட்டி விட்டுவிட்டு வந்தவங்கள். உன்னைமாதிரி இல்லை”

“அதோ பாரடா. அங்கே பாரடா என் பத்மகாலா”.

தூரத்தில் கண்ணாடிகள் ஊடாக அவள் வருவதைக் கண்டு விட்டான் சீலன். காற்றில் அலைந்த அந்த நீளக்கூந்தல் அவளை அடையாளம் காட்டியது. கனடா உணவு தடிக்குச்சியாக இருந்தவளை மெருகேற்றியிருந்தது. சினிமாத் தாரகைகள் போல் சீலனின் தேவதை கண்ணாடிகளூடாக கண்விழித்தாள்.

உதயம் இதயத்தில் எழுந்து நின்று ஆடத்தொடங்கியது. இதயம் தொண்டை வரை துள்ளியது.

“மச்சி அவசரப்படாதை. நீ கண்ணாடியை உடைத்துக் கொண்டு போக ஏலாது. எல்லாம் கிளியர் பண்ணிவர ரைம் எடுக்கும். ரிலாக்ஸ் மச்சி ரிலாக்ஸ்”

நண்பன் சீலனின் ஆர்வத்துக்கு அணைபோட்டு விடுகிறான். ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்கமாட்டான் என்பது இதைத் தானோ? மீண்டும் காதலியின் நினைவில் மூழ்கத் தொடங்கி விட்டான்.

கணங்கள் ஒவ்வொன்றும் கற்பனைகளாக விரிய நாடி, நாளங்கள் புடைப்பேறிச் சிலிர்க்க எப்படி... எப்படி அவளை எதிர்கொள்வது என்ற எண்ணம் மனதை ஆளத்தொடங்கியது. மீள முடியாமல் தவித்தான். வெட்கமும் அவனை சிலவேளைகளில் வெருட்டிக் கொண்டிருந்தது.

நிமிடங்கள் 30 தாண்டியும் அவளைக் காணவில்லை. பயங்கர வாதத்தடை பொலிஸ் பிரிவினர் அவளை அவளின் பொதிகளுடன் அழைத்துச் சொல்வதைத் தூரத்தே கண்டுவிடுகிறான். என்ன நடக்கிறது என்று ஒன்றுமே புரியவில்லை. தகவல் நிலையத்துக்கு ஓடினான். அங்கே போதிய தகவல்கள் கிடைக்கவில்லை.

அவள் என்ன பயங்கரவாதியா? யாராவது பொய்த் தகவல் கொடுத்தார்களா? அவளின் பொதிகளில் ஏதாவது துப்பாக்கி, போதைவஸ்துப் போன்றன கண்டெடுக்கப்பட்டதா? உலகம் ஒருகணம் சுற்றிச் சிதறியது. தன் தலைவிதியை நொந்து கொண்டான்.

“மச்சி யோசிக்காதை. எல்லாம் நல்லபடியாகவே முடியும்” நண்பன் சீலனைத் தேற்றிக் கொண்டான்.

“என் வாழ்க்கையில் எல்லாமே கைக்கெட்டியது வாய்க்

கெட்டா நிலைதான்".

ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாக தொலைபேசியை எடுத்து பத்மகலாவின் தோழிக்கு தொடர்பு கொண்டான். அவளும் தயங்கித் தயங்கியே "கலோ..." என்றாள்.

"நான் சீலன் கதைக்கிறன். பத்மகாலாவை பயங்கரவாத்தடைப் பிரிவு பொலிஸ் அழைத்துப் போகிறது. ஏதாவது ஏறுக்குமாறாக கொண்டு வந்தாளா? அல்லது அவளின் பொதிக்குள் சட்ட விரோதிகள் எதையாவது வைத்து விட்டார்களா? பொலிஸ் எதற்கு அவளை..."கொட்டித்தள்ளினான்

"சீலன் இங்கே பெரிய அல்லோல கல்லோலம் நடக்குது. பத்மகலா ஜேர்மனிக்கு வந்தது அவளின் உறவினர் எவருக்கும் தெரியாது. அவள் கனடாவில் இருந்து முழுமையாகவே லீவ் பண்ணி விட்டாள். டிக்கெட் போட்டது, பயணமானது எதுவுமே என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அனைவரும் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடக்குமோ தெரியவில்லை. இனி அவள் கனடாவுக்குத் திரும்பும் நோக்கம் இல்லை. செத்தாலும் கெட்டாலும் உங்களுடன் வாழ்வது என முடிவெடுக்துக் கொண்டு வந்துவிட்டாள்"

"என்ன சொல்லுறீங்கள். கலா இங்கேயே தங்கப்போகிறாளா? அவள் படித்துமுடித்த டாக்டர் படிப்பு.. தொழில்? இதற்கான தயார்படுத்தல் ஒன்றையும் நான் செய்யவில்லையே. என் இறுதிப் பரீட்சை முடிந்துவிட்டது. ஒரேயடியாக வந்து கனடாவில் செற்றிள் ஆகிறது என்று அல்லவோ நான் யோசித்துக் கொண்டிருக்கிறன். இவள் அதற்குள் எதுக்கோ முந்தின எதுவோ ஆக....? இதைப்பற்றி பேந்து யோசிக்காலாம். எதற்காக அவளைப் பொலிஸ் கொண்டு போகிறது என்று தெரியவில்லை. ஏதாவது ஐடியா இருக்கா பிளீஸ்?"

"சிலவேளை அவளின் உறவினர்கள் எதாவது தகவல் கொடுத்திருப்பார்களோ"

"இருக்கலாம்...ஆம் இருக்காலாம்...ஒகே நான் உங்களுடன் பின்னர் கதைக்கிறேன்" பேசிக்கொண்டிருக்கவோ யோசிக்கவோ நேரமின்றி தொலைபேசித் தொடர்பை வெட்டினான்.

பத்மாகலாவுக்கு மீண்டும் தொலைத்தொடஉபு கொண்டான். தொலைபேசி மூடியே கிடந்தது. செய்வதறியாது துடித்தான். அவள் வந்த விமானநிறுவத்திடம் ஓடிச்சென்றான்.

நாய்குட்டிபோல் அவன் நண்பனும் தொடஉந்தான். எள்ளுக்காய்கிறது... எண்ணெய்க்காக, ஆனால் எலிப்புழுக்கை எதற்காக...நண்பனாகச் சேர்ந்த குற்றத்துக்காக.

விமானநிலையத் தகவல்படி பத்மகாலா வந்து இறங்கி பொதிகளையும் பெற்றுக்கொண்டாள். பொதிகளைப் பெற்ற பின்னரும் சந்தேகப்பட்டதால் பொலிஸ் அவர்களை அழைத்துச் சென்று விசாரிக்கும் நடைமுறையும் அங்கு உண்டு என்பதை அறிந்து கொண்டான். மீண்டும் கலாவுக்குத் தொலைபேச எடுத்தான் தொலைபேசி திறந்திருந்தது.

“கலோ சீலனா”

“ஆமாம் என்ன நடந்தது. எதற்காக பொலிஸ் அழைத்துப் போனது. நீ என்ன பண்ணினாய். நான் தனியனா; என்னாலை ஒன்றும் செய்ய முடியவில்லையடி. என்ன நடக்கிறது என்று சொல்லு”

“ஒன்றுக்கும் யோசிக்காதைங்கோ. இன்னும் ஐந்து நிமிடத்திலை வெளியிலை வருவன். என்னை ஒண்டும் பண்ண இயலாது. வீ ஆ றிவ்யூயி. பட் நொட் கிறிமினல். (நாங்கள் அகதிகள் தான். சட்ட விரோதிகள் அல்ல). பயப்படாதைங்கோ நான் வைக்கிறன்”

ஏன் அதைமட்டும் ஆங்கிலத்தில் சொன்னாள் என்பது புரியாத புதிராகவே இருந்தது. ஓ... பொலிசார் விளங்கிக் கொள்ளட்டும் என்பதற்காகவோ???

அதிர்ந்து போனான் இது கலாவா? இரண்டு சொல்லுக் கதைக்கவே நாலு நிமிடம் எடுக்கும். அந்தக் கலாவா இவள்? பெண்களே புதிர்தான் என்றபடி தலையைச் சொறிந்து கொள்கிறான். கனடா இவளை எப்படி எல்லாம் மாற்றிவிட்டது.

“இன்னும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவாளாம்” நண்பனிடம் கூறியபடி வெளியேறும் வாசலுக்கு வருகிறான். அவளுடைய பெட்டி படுக்கையுடன் கூடிய பொதிகளை பொலிஸ்காரரர்களும் சேர்ந்து இழுந்து வந்தார்கள். சீலனைக் கண்டதும் அந்த தோகை மயில் சிரித்தபடி சுரிதார் சிறகில் பறக்கத் தொடங்கியது.

இருவரும் ஒருவரை ஒருவர் கட்டி அணைக்க ஓடினார்கள். ஆனால் நாலு மீற்றர் இடைவெளியில் ஏதோ எண்ணிக் கொண்டவர்கள் ஓட்டத்தை நிறுத்தி ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் நின்றனர்.

ஆம் ஐரோப்பிய வாழ்வுக்குப் பழக்கப்பட்ட காதலர்கள் கட்டிப்பிடிப்பதும் முத்தம் கொடுப்பதும் இங்கே இயற்கையானது.

இருந்தாலும் எம் தமிழ்க் கலாச்சாரம் இதயத்தில் வேரூன்றியதால் இதயக் கதவுகள் ஒருதடவை தட்டப்பட்டிருக்க வேண்டும். நாணம் நிலத்தில் கோலம்போட்டது. பாவையின் பார்வை அந்த லாசர்கண் காதலை கக்கியது. எதிர்கொள்ள முடியாதவன் தலைகுனிந்தான். மீண்டும் சுதாரித்துக் கொண்டு,

"கலா என்னை கலங்கப்பண்ணி விட்டாயடி..." என்று ஆணின் பாணியில் கதையை எடுத்தான். அதற்கிடையில் அவளின் பொதியை இழுத்து வந்த பொலிசாரும் அருகில் வந்துவிட்டனர்.

"எல்லாவற்றையும் விபரமாக கதைக்கலாம். முதலில் வீட்டை போவம்."

"எங்கே கனடாவுக்கா?"

"உங்களுக்கு இப்பவும் அந்த லொள்ளு போகேல்லை"

அருகே வந்த பொலிசாரிடம் பத்மகலா, "இவர்தான் எனது காதலன். நாங்கள் இங்கே திருமணம் செய்யப்போகிறோம்" என ஆங்கிலத்தில் சீலனை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

இவ்வளவு நட்புடன் பொலிசார் நடப்பதைப் பார்த்தால் இலங்கையில் ஆச்சரியமாகவே இருக்கும். பொலிசைக் கண்டாலே வயிறு கலக்கும் காலத்தில் வெளிக்கிட்டவர்கள் இவர்கள்.

"ஸ்பிறேசன்சி டொச்" (நீ டொச் கதைப்பாயா)" எனப் பொலிசார் சீலனைப் பார்த்துக் கேட்டார்கள்.

"யா (ஆம்)"

பொலிஸ் டொச் மொழியில் பத்மகலாவின் பிரச்சனையை சீலனுக்கு விளங்கப் படுத்தினார்கள். தமக்கு கனடாவில் இருந்து வந்த தொலைத்தொடர்பால் நாம் பத்மகலாவை விசாரணைக்கு உட்படுத்தினோம்.

இவள் ஒரு பயங்கரவாதி என்றும் போதை வஸ்துக்களுடன் யேர்மனிக்குள் நுழைகிறாள் என்றும் அனாமதேயச் செய்திகள் கிடைத்தன.

மேலும் இவள் நாடுகடத்தப்படுகிறாள் என்றும், உளவாளி என்றும் செய்திகள் கிடைத்தன. விசாரணையில் இவை அனைத்தும் சதி என்பது தெரியவருகிறது. உங்கள் திருமணவாழ்வு நலமாக அமைய வாழ்த்துக்கள் என்று பொதிகளை சீலனிடம் ஒப்படைத்து விட்டு கைகளைக் காட்டிவிட்டுச் சென்றனர் பொலிசார்.

திருப்பிப்பார்த்தால் நண்பனைக் காணவில்லை. இனி இவன்

பாவியைத் தடவ வேணுமா? என்றபடி திருப்பிப்பார்த்தால் பதுங்கிப் பதுங்கி கள்வனைப்போல் சீலனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"கலா... ஓ அவனுக்கு விசா இல்லை. கள்ளமாக வேலை செய்து கொண்டு இருக்கிறான். மனைவி பிள்ளைகளுக்கு விசா இருக்கு. இவனுக்கு இல்லை. சொல்கிற பொய்யை ஒழுங்காகச் சொல்லாததால் வந்த வினை"

நண்பனை அறிமுகம் செய்து வைத்துவிட்டு பொதிளை எடுத்துக் கொண்டு வந்த வானில் ஏற்றிப் புறப்பட்டனர்.

பத்மகலா அதிகம் பேசவே இல்லை. சீலனைப் பார்த்தபடி அவன் வாகனம் செலுத்தும் அழகை இரசித்த வண்ணம் இருந்தாள். இடைக்கிடை எட்டி அவன் தோள்களில் மறந்து போய் கையைப் போட்டவள் நண்பனைப் பார்த்துவிட்டு கையை எடுத்துக் கொள்வாள்.

சிவபூசைக்குள் கரடி மாதிரியாக பாவம் நண்பன். அவனும் தன் மனைவியிடம் கள்ளக்காதலன் போலவே போய் வருகிறான். அகதி விண்ணப்பத்தில் சொல்லுற பொய்களையும் சரியாகச் சொல்லாவிட்டால் மனைவி கள்ளக்காதலிதான்.

சீலனின் வீடு வந்துவிட்டது பொதிகள் இறக்கப்பட்டு வீட்டுக்குள் அனுப்பப்பட்டுவிட்டன. தபால்பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்து வந்தவன் கலாவை மறந்தவனாக ஒரு முக்கிய கடிதத்தை உடைத்தான். கலாவுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. என்னை விட முக்கியமான கடிதமா? என எண்ணிக் கொண்டாள்

"கலா ரீ குடிக்கிறாயா சாப்பிடுகிறாயா?"

"ஒண்டும் வேண்டாம்"

"நீ இன்னும் மாறவே இல்லை. என்ன பிளைட்டில் (விமானத்தில்) ஏதாவது சாப்பிட்டாயோ"

"ஓம்...முதலிலை உந்தக்கடிதத்தில் என்ன இருக்கு என்று சொல்லுங்கோ" சீலனின் அவசரம் அவளின் ஆர்வத்தைத் தூண்டியது.

"இது எனக்கு வந்து கடிதம். உனக்க எதற்கு"

"இன்றில் இருந்து உனக்கு எனக்கு எண்டு ஒன்றும் கிடையாது. எல்லாம் எமதே"

இவளிட்டைக் கேட்டால் ஒன்றும் நடக்காது மச்சி. மூன்று ரீ போடு. பிட்சா ஓடர் பண்ணியிருக்கிறன். அதுவும் வந்துவிடும்"

நண்பன் தேனீர்போட சீலன் கடிதத்தை உடைத்து வாசிக்கத்

தொடங்கினான். கடித்தை தூக்கி எறிந்து விட்டு மகிழ்ச்சியில் கத்திக் கொண்டு கலாவை எட்டிக் கட்டிப்பிடிக்கப் பாய்ந்தான். அவள் விலத்திக் கொண்டாள்.

“இது எல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு...”

மௌனித்து நின்ற சீலனின் தலையை எட்டித் தடவி விட்டபடி

“உங்களின் மகிழ்ச்சியைக் கெடுத்துவிட்டேன். சொல்லுங்கள்! அது என்ன செய்தி”

நாம தொட்டால் குற்றம் அவங்கள் தொட்டாக் குற்றமில்லையாக்கும் என்று மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

“சொல்லுங்கள் சீலன். அதில் அப்படி என்ன செய்தி இருந்தது”

“நீ வந்த பலனடி நான் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். வருகிற வெள்ளி பட்டமளிப்பு விழா. நீயும் என்னுடன் வரப்போகிறாய்” என்றபடி அவளின் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

மகிழ்ச்சிக் களிப்பில் அவள் தானாகவே சீலனைத் தாவி அணைத்துக் கொண்டாள். நண்பன் மூன்று ரீயுடன் வெட்கப்பட்டபடி அவர்கள் அருகின் நின்றதைக் கண்டதும் சீலன் “இதெல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு “ என்றான்.

“ஓ அப்படியா” சீலனின் காதில் காற்றாக சொன்னாள்.

ரீ குடித்துக் கொண்டிருக்கும் போது பிட்சாவும் வந்தது. மூவரும் ரீயையும் குடித்து பிட்சாவையும் சாப்பிட்ட பின் நண்பன் விடைபெற்றுக் கொண்டான்.

சீலன் வீட்டைச் சுற்றிக்காட்டினான். படுக்கை அறைக்கு வந்ததும்.

“இதுதான் எமது படுக்கை அறை” என்றான்

“எமதா? உமதா... எனதா?... எல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு தான்”

“உனது எனது என்று எதுவும் இல்லை. எல்லாமே எமது என்றாயே. உடனை மாற்றுகிறாயே விரட்டுகிறாயேடி”

“அதுவேறை. இது வேறை. முடியாததுக்கெல்லாம் முடிச்சுப் போடக்கூடாது”

சிரித்தபடி சீலன்.

“நீ மேலை நான் கீழே”

கலாவும் சிரித்தபடி“ எல்லாம் இங்கே தலை கீழாக்கும்”

என்றாள்.

"இல்லையடி கண்ணே. நீ மேலை படுக்கிறாய். நான் நிலத்தில் கீழே படுக்கிறேன் என்றேன்"

"அதைத்தான் மேலை கீழை என்றீர்களோ? பாவம் பால் குடிக்காத பூனை" என்றாள் கலா

"பெண்களின் வாயில் அம்பிட்டால் சப்பித் துப்பி விடுவார்கள்" என்றவன் பூராயம் விசாரிக்கத் தொடங்கினான். அன்று அவர்களுக்கு சிவராத்திரி. அடுத்தநாள் சனிக்கிழமை என்பதால் பதட்டப்பட வேண்டியதில்லை.

***

நாட்கள் உருண்டது பட்டமளிப்பு விழாவுக்கு போவதற்கு முன்னர் கலாவும் சீலனும் எதைப்பற்றியோ கடுமையாகக் விவாதித் துக் கொண்டிருந்தனர். வாழ்க்கையின் முக்கியமான விடயங்கள் கதைக்கப்படுகின்றன என்பது மட்டும் புரியக்கூடியதாக இருக்கிறது. இறுதியில் அவள் இணங்குவது போல் தோன்றுகிறது. அவசர அவசரமாக வெளிக்கிட்டு மண்டபத்தை வந்தடைந்தனர்.

ஜேர்மன்மக்களால் நிறைந்திருந்த மண்டபம் விழாக்கோலம் பூண்டிருந்தது. சீலனின் பட்டமளிப்பு விழாவைப் பார்ப்பதற்காக வந்த நண்பர்கள், நண்பர்களின் குடும்பத்தினர் அனைவருக்குமாக இரண்டு வரிசைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

கலாவை தமிழர்கள் அனைவருக்கும் அறிமுகப்படுத்தினான் சீலன். சீலனுடன் பல்கலைக் கழகத்தில் படித்த பெண்கள் ஆண்கள் அனைவரும் சீலனை வாழ்த்தினார்கள். அவர்களுக்கும் தன் காதலி எதிர்கால மனைவி என்று அவளை அறிமுகப்படுத்தினான்.

ஜேடமனியப் பெண்கள் அவளையும் கன்னத்தில் கன்னம் வைத்து கொஞ்சிய பின் கலாவின் அழகை வர்ணித்தார்கள். அவனிள் நீள் கூந்தலை தொட்டு தடவிப்பார்த்து இரசித்தார்கள். சீலன் நீ கொடுத்து வைத்தவன் என்று நேராவும் சொல்லிக் கொண்டார்கள்.

பெண்கள் கன்னத்தில் கன்னம் வைத்து கட்டியணைப்பது வாழ்த்துவது இங்கு வழமையான விடயம். அப்படி ஜேர்மனியப் பெண்கள் சீலனைக் கொஞ்சுவது பத்மகலாவின் உணர்வுகளை உரசத்தான் செய்தது.

கனடா நாட்டில் இருந்து வந்தாலும் தன் காதலன் முழுமை யாகத் தனக்கே என்ற உடமை உணர்வு பொறாமையாக வெளிப்படத்

தொடங்கிறது.

சீலன் அதைக் கவனித்தும் கவனிக்காதது போல் தனது காதலியை தெரிந்த அனைவருக்கும் அறிமுகப்படுத்தினான். கலாவுக்கு அது பெருமையாக இருந்தாலும் யாராவது பெண்கள் சீலனை உற்றோ, குறுகுறு என்றோ பார்க்கிறார்களா? என்பதையும் கவனித்தாள். இது பெண்களுக்கு உரிய இயற்கையான குணம் இவளை மட்டும் விட்டுவிடுமா என்ன?

இவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட பிரபல்யங்கள் இருக்கையில் அமர்ந்த வண்ணம் தனது பொறாமை மூட்டைகளை கொட்டத் தொடங்குகிறாள்.

“அந்த வெள்ளைகாரப் பெட்டையள் எல்லாம் பாய்ந்து பாய்ந்து இறுகக்கட்டிப்பிடித்துக் கொஞ்சுதுகள் இவரும் சிரிச்சுக் கொண்டு கட்டிப்பிடிப்பாராக்கும்“ பொருமிக் கொள்கிறாள்.

“கலா இது மேற்குலகம் நாங்கள் கும்பிடுவது போல் இங்கே கக் பண்ணுவார்கள் கனடாவில் இருந்து வந்த உனக்கு இது கூடத் தெரியவில்லையா”

“அதுக்கு நான் ஒருத்தி காதலி பக்கத்திலை இருக்கிறன் எண்டு நீங்களாவது...”

“அடி... நீ என்னடி சிறீலங்காவில் இருந்து வந்த பெண்கள் மாதிரி இருக்கிறாய்”

“என்ன மாதிரியானாலும் நான் சிறீலங்கா தமிழ்பெண் தான். இதை எந்தக்காலமும் மாத்த முடியாது. மாறவும் மாட்டன். இதுக் கெல்லாம் ஒரு முடிவு வரத்தானே போகுது” இரைந்து கொள்கிறாள்.

விழா ஆரம்பமாகிறது. ஆட்டம் பாட்டும் கொண்டாட்ட மாக மணிகள் ஓடத்தொடங்கியன. பட்டமளிக்கும் வேளை ஆரம்ப மானது சீலனும் அழைக்கப்பட்டான். கறுப்புகோட்டு சூட்டுடன் அத்தனை பத்து ஜேர்மனிய மாணவர்களுடன் சீலன் சிரித்த முகத்துடன் நின்ற காட்சி பத்மகலாவை பெருமிதப்படுத்தியது.

வெள்ளை டாக்டர் உடையுடன் கழுத்தில் ரெதஸ்கோப்புடன் இருவதும் அன்று தம்மைப்பற்றிக் கண்ட கனவுகளை எண்ணிப் பார்க்கிறாள். சீலன் டாக்டராக வரக்கூடாது என்பதற்காக எத்தனை திட்டங்களைப் போட்டு என்னவனை இவ்வளவு நாடுகள் துரத்தி டாக்டர் எண்ணத்தை மறக்கடித்து இன்று இஞ்சினியராக்கி இருக்கிறது விதி. இதன் பின்னாலும் இறைவன் சூட்சுமம் என்னவோ?

பட்டமளிப்பு விழாக்களில் சில நிறுவனங்கள் தாமாகவே முன்வந்த திறமையாகச் சித்தியடைந்தவர்களை தெரிவு செய்து வேலை கொடுத்து உறுதிப்பத்திரமும் வழங்குவார்கள்.

சீலன் பகுதி நேரமாக வேலைசெய்யும் பி எம் டபிள்யூ கார் கொம்பனியும் வந்திருந்தது. பட்டமளிப்பு முடிந்தவுடன் அவர்கள் முன்வந்து தாம் யார் யாரை தெரிவு செய்திருக்கிறோம் என்பதை அறிவிப்பார்கள். பி எம் டபிள்யூ கொம்பனி சீலனைத் தெரிவு செய்திருந்தது.

சீலன் உரையாற்றும் நேரம் வந்தது. பத்மகலா பரபரப்பா னாள். இனம் புரியாத தவிப்பு, ஏக்கம், எதிர்பார்ப்பு என உணர்வுகளின் போராட்டம். அப்படி என்ன பேசப்போகிறான். இவள் எதற்காக இப்படி அரக்கப்பறக்கிறாள். சீலன் தனது உரையை நிதானமாக ஜேர்மன் மொழியில் தொடங்குகிறான்.

நான் ஈழத்தில் இருந்து வந்த ஏதிலி....அகதி. என் தாய் மண்ணில் என்னால் என்மக்களுடன் வாழமுடியாத துர்ப்பாக்கிய சாலி. குண்டுகளுக்கும், தோட்டாக்களுக்கும் பயந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போக்கிடம் அற்று இறுதியில் நான் வந்தடைந்தது என்னைக் இருகரம் நீட்டி அழைத்த என் சின்னத்தாய் ஜேர்மனியிடந்தான்.

என் சின்னத்தாய் முதலாம், இரண்டாம் உலகப்போஉகளில் எப்படியெல்லாம் காயப்பட்டாள் என்பதை அவள் உணஉந்திருந்த தால் என் துயரையும் அவள் புரிந்துகொண்டாள். என் சின்னத் தாயான ஜேர்மன் நாட்டுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் நான் என் உயிருள்ளவரை நன்றியுணஉவுடன் இருக்கக் கடமைப்பட்டவன்.

கரகோசம் வானைப் பிளந்தது. கண்களில் கண்ணீஉ ததும்பியது. பலர் எழுந்து நின்றே கைதட்டினார்கள். சீலன் தொடர்ந்தான்... என்னை இவ்வளவு காலமும் மெக்கானிக்காக வேலை செய்யவும், பின் என்னை நிரந்த பொறியியலாளனாக ஏற்ற பி எம் டபிள்யூ கொம்பனிக்கு என் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் என்னால் உங்கள் கொம்பனியில் தொடர்ந்து வேலை செய்யமுடியாத நிலையில் உள்ளேன் என்பதை மிகக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சபை ஒருகணம் அமைதியானது.

வேலை எடுப்பதே எட்டாப்பழமாக உள்ளபோது கிடைத்த

பெரிய வேலையையே உதறித் தள்ளுகிறானே இந்த மடைப்பயல் என்று எண்ணினார்களோ என்னவோ? இவன் என்ன பைத்தியமா? என்று வினாவுவது போல் ஆச்சரியத்துடன் காத்திருந்தனர்.

கொம்பனி முதலாளியின் முகத்தில் ஈ கூட ஆடவில்லை. ஆச்சரியமும் வேதனையும் எதிர்பார்ப்பும் நிறைந்த முகத்துடன் அமர்ந்திருந்தார், சீலன் தொடர்ந்தான்...

என் உடல், பொருள், ஆவி அனைத்தும் என் தாய்க்குச் சொந்த மானது. என்தாய் நாட்டுக்குச் சொந்தமானது. கற்றகல்வி, பெற்ற செல்வம், என் வியர்வை, இரத்தம் அனைத்தும் என்மண்ணைச் சேர வேண்டியது. நாம் குழந்தையாக இருந்தபோது தொட்டு நக்கியது எம் மண்ணைத்தான்.

இது இன்றும் என்னுடலில் உதிரமாக உள்ளத்தில் உணர்வுடன் உறைந்து கிடக்கிறது. இந்த ஜேர்மன் நாடு எனக்குக் கற்றுத் தந்தவற்றை நினைவுபடுத்துகிறேன்.

முதலாவது உலகயுத்தத்தில் ஜேர்மன் மீது அதியுயர் போர்க் குற்றவரி விதிக்கப்பட்டு வறுமையில் அல்லாடியபோது இவர்கள் நாட்டை விட்டு ஓடியிருந்தால் இன்று ஜேர்மன் என்ற ஒரு வல்லரசை உலகம் கண்டிருக்காது. நாம் ஜேருமனியர்கள் என்று பெருமைப்பட ஒருபிடி மண் இருந்திருக்காது. கிட்லர் என்ற ஒரு தனிமனிதனால் இரண்டாவது உலகயுத்தம் முடிந்தபின்னரும் இந்நாடு வெறுக்கப் பட்டது. இதையே நான் எனது நாட்டுடன் இணைத்துப் பார்க் கிறேன். தவறுகள் செய்யா மனிதர்களும் இல்லை சமூகங்களும் இல்லை. மீள எழுவோம்... மீண்டு வருவோம்.

என் மண், மரங்கள், நிலவு, சூரியன், ஆடு மாடு கோழி எவையுமே போருக்குப்பயந்து நாட்டை விட்டு ஓடவில்லை. மரங்கள் கூட என் மண்ணைப் பற்றிக்கொண்டு இன்றும் நிற்கிறன. ஒரு சின்னச்செடிக்கு மண்மேல் உள்ள பற்று எமக்கு இல்லை என்றால் எப்படி?.

ஏன் மண் என்று பெருமைப்படும் நான் போருக்குப் பயந்து கோழையாக என்மக்களைப் பிரிந்து, ஏதிலியாக எத்தனை ஐரோப்பிய மண்ணில் பிச்சை எடுத்தேன். என்று என் மண்ணை விட்டு நீங்கி னோமோ அன்றிலிருந்து நாம் அன்னியர்தான். எம்மண்ணுக்கும் அந்நியர்கள். உலக மக்களுக்கும் அன்னியர்கள். இன்று நாம் உணர்வுகளால், உள்ளத்தால், கலாசாரத்தால் எம்பிள்ளைகளிடம்

இருந்தும் அன்னியப்பட்டே நிற்கிறோம்.

நான் இந்தப் பெருமேடையில் பி எம் டபியூ கொம்பனியிடம் அன்பாக வேண்டிக் கொள்வது இதுதான். எமது நாடு விவசாயநாடு. உலகத்துக்கே உணவளிக்கும் வளம்கொண்ட நாடு. அங்கே அது கண்ணி வெடிகள் விதைக்கப்பட்டு, கந்தக்காற்றால் நிரப்பப்பட்டும் கிடக்கிறது.

என் தாய் நிலம் அன்னியன் காலடியில் இறுதி மூச்சுக்காகச் சேடம் இழுத்துக் கொண்டிருக்கிறது. அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. எமக்கு உங்கள் கொம்பனி போன்ற பெரிய கொம்பனிகளின் உதவி தேவை. எனது திட்டப்படி மலிவான விலையில் உழவு இயந்திரங்களையும், முச்சக்கரவண்டிகளையும் அங்கேயே தயாரித்து மலிந்த விலையில் விற்பனை செய்வதுடன், மேலதிகமான தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யவும் விரும்புகிறேன்.

உங்கள் உதவியுடன், உங்கள் பெயரில், தொழிற்சாலைகளை நான் உருவாக்க விரும்புகிறேன். அதற்கான அனுமதியையும் உதவியையும் தந்துதவ ஆவன செய்வீர்களா? கொம்பனி முதலாளி தனிய எழுந்து நின்று அவனை ஆமதிப்பதுபோல தன் கைகளை உயர்த்தி தட்டினார்.

அவரைத் தொடர்ந்து அனைவரும் எழுத்து நின்று கைகளைத் தட்டினார்கள். சீலன் பத்மகாலாவை அடிக்கடி பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தான். அவள் கண்கலங்கி பூரித்துப்போய் இருந்தாள். கைக்குட்டை கண்ணீர் குட்டையானது.

“நான் எனது நெடுநாள் காதலியும் என் எதிர்கால மனைவியு மான டாக்டர் பத்மகலாவை மேடைக்கு அழைக்கிறேன்” என்றபடி தமிழில் அவளை வருமாறு அழைத்தான். அவளும் தன்னை அழகாக அலங்கரித்து சொர்க்கத்துத் தேவதைபோல் மேடைநோக்கிப் பறந்து கொண்டிருந்தாள். மேடையில் நிற்கும் போது சோடிப் பொருத்தும் பிரமாதமாகவே இருந்தது.

எம்மிருவருடைய கனவும், கற்பனையும் டாக்டராகி எம்மக்களைப் காத்து, உதவவேண்டும் என்றே எண்ணினோம். விதி என்னை விரட்டி விரட்டி பொறியிலாளன் ஆக்கியது. இந்த மேடை யில் என் சின்னம்மா நிலத்தில் என் ஜேர்மனியச் சகோதரங்களின் முன்னிலையில் எனது காதலியான என் பத்மகலாவை என் மனைவியா வரிந்து நாம் மோதிரத்தை மாற்றிக் கொள்கிறோம்.

அவர்கள் மோதிரத்தை மாற்றும்போது சபை எழுந்து நின்ற வாழ்த்தியது. சிலர் யேர்மனிய தேசியகீதத்தை பாடுவது கேட்கிறது.

ஆம் ஒருதேசிய உணர்வு இன்னொரு தேசியத்தைத் தட்டி எழுப்புகிறது. பத்மகலா தாவிப் பாய்ந்து கட்டியணைத்து அவன் கன்னங்களின் முத்தமாரி பொழிந்தாள். ஆம்...அந்தத் தமிழ் தந்த நாணம் எங்கே போனது? முத்தங்களை ஏற்றுக்கொண்டவன் மெதுவாக அவள் காதுகளில் “இதுகள் எல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு” என்றான்.

அவள் அவன் காதில் கடித்து “ஜேர்மன் பெட்டைகள் கட்டிப் பிடித்துக் கொஞ்சினால் மட்டும் ஏற்றுக் கொள்வீர்களோ” என்று காதுள் கிசுகிசுத்தாள். சீலன் தற்போது தன் துணைவியின் கரங்களைப் பற்றியபடி மீண்டும் பேச ஆரம்பித்தான். திரைகடலோயும் திரவியம் தேடு என்றார்கள் நாம் திரவியம் மட்டுமல்ல கல்விச் சொல்வத்தையும் பெற்று அறிவு வளங்களை எம்நாட்டுக்குக் கொண்டு செல்கிறோம்.

நான் வெறும் டாக்டராக படித்து முடித்திருந்தால் மற்றைய டாக்டர்கள் போல் யாரோ ஒருவருக்குக் கீழ் வேலை செய்பவனாக இருப்பேன். ஆனால் நான் என்மக்களுக்கு வேலை வாய்பையும், வாழ்வாதாரத்தையும், சுயதொழிலையும் கொடுக்க விரும்புகிறேன். சுயதொழிலுக்கு ஊக்குவிக்க விளைகிறேன். என்மக்களை தன் காலில் தன்னிறைவுடன் நிற்கும் மனிதர்களாக்க விரும்புகிறேன். இந்தப் பலத்தையும் மனவுறுதியையும் தந்தது நான் அடிபட்டு மிதிபட்டு எழுந்த இந்த அகதி வாழ்க்கைதான்.

நாம் ஏதிலிகள் அல்ல. உலகிற்கே முதன் முதலில் நாகரீ கத்தைக் கற்றுத்தந்தவர்கள். மானத்தை மறைக்க பருத்தி பயிரிட்டு நூல் நூற்று ஆடை பின்னியவர்கள். முதன் முதலில் மரவுரி களைந்தவர்களும் தமிழர்களே என்பதை இங்கே அடக்கத்துடன் சொல்வதில் பெருமை கொள்கிறேன். எனது என்மனைவியின் அறிவும் எம்மக்களுக்கே பயன்படும். அங்கே மருத்துவ நிலையங்களை நிறுவி எம்மக்களுக்கு இலவசமாக அல்லது மிகக் குறைந்த செலவில் வைத்தியம் செய்ய விரும்புகிறோம்.

அன்று முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் நாடு நாடாக, ஊர் ஊராக, குருதியும் கண்ணீருமாக தெருத் தெருவாகக் கத்தினோம் எங்களைக் காப்பாற்றுங்கள், எம்மக்களை மீட்டுத்தாருங்கள் என்று.

எமது குரல்கள் எந்த ஐரோப்பிய, அமெரிக்க ஏன்...? உலக

நாடுகளின் செவிப்பறைகளைத் தட்டவே இல்லை. நாம் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது வல்லவர்களாக, எமது மூதாதையரின் மரபணுக்களை உயிர்ப்பித்து திறமைசாலிகளாக, கல்வி கேள்விகளில் வல்லவர்களாக, பொருளாதார நிறைவுள்ளவர்களாக நாம் நிமிரும் போது எங்கள் சிணுங்கல்கள் கூட உலகின் செவிப்பறைகளில் வெடித்துச் சிதறும்.

நான் வல்லவர்களாக நிமிரும் வரை எனது எமது போராட்டம் தொடரும். இதுவும் ஒரு தன்நிறைவுப் போரே. எமது குரல்கள் நாளை ஓங்கி ஒலிக்கும். எமக்கு என் சின்னம்மா தேசத்தின், என் ஜேர்மனியச் சகோதரர்களின் உதவியும், ஆசியும், வாழ்த்துக்களுடனும் நாம் நிமிர்வோம்.

எதிர்வரும் புதன்கிழமை நான் என் சின்னம்மா மண்ணில் என்காதலியைப் பதிவுத் திருமணம் செய்தபின், வரும் வெள்ளியன்று காலை 10மணிக்கு நாடு திருப்புகிறோம். எமது திருமணம் எம் தாய் மண்ணில், என் தாய் முன்பாக நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொண்டு என்னுரையை முடிக்கிறேன்.

அன்றைய விழாவின் கதாநாயகனாக சீலனே இருந்தான். அன்று சீலனைப்பற்றி பேச்சுக்களே அதிகமாக இருந்தது. தமிழர்கள் பலர் ஏன் தம்பி இப்படி ஒரு முடிவை எடுத்தீர்கள்? என்றும் விசனப்பட்டுக் கொண்டனர்.

***

வெள்ளிக்கிழமை சீலன் பத்மகலா இருவதும் நாட்டுக்குப் பயணமாகிறார்கள். அவர்களை அனுப்ப சீலனின் நண்பர்கள், பாடசாலை மாணவர்கள், பேராசிரியர்கள் கூடிவிட்டார்கள். பிஎம்டபிளயூ நிறுவனத்து முதலாளி சீலனை அழைத்து “நான் எனது பெரிய தலைமையகத்துடன் கதைத்து உனக்குத் தேவையான பொருள்கள் பணம், அனைத்து உதவிகளையும் எமது கொம்பனியூடாகச் செய்துள்ளேன். நீ எத்தனை நிறுவனத்தையும் அங்கே நிறுவி நடத்தும் பொறுப்பையும் உன்னிடம் ஒப்படைக்கிறோம். நான் முதலிடும் பணமானது மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கும் உதவி நிதியாகக் கருதுகிறோம்.

அவற்றை நாம் திருப்பி எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீ எமது நிறுவனத்தின் நிரந்தர தலைமைப் பொறியலாளன் என்பதை எழுத்து மூலமாக உறுதி செய்யவேண்டும்.”

*சீலனும் தலையசைத்துக் கொண்டான். பத்திரங்கள் கைச்சாத்திடப்பட்டு கைமாறிக்கொண்டன. பறப்புக்கான நேரம் சரியாக இருந்தது. அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு பத்மகலாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு ஒருவருக்கு ஒருவர் துணையாக விமானத்தை நோக்கி நடக்கிறார்கள்.*

*கருவுற்ற நட்பின் கண்கள் கலங்கி நின்றன. விமானத்தினுள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னர் ஜேர்மன் மண்ணை தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்கிறான். அவனது மனம் "எனக்கு அடைக்கலம் தந்து போற்றிக் காத்தவளே உன்னை நான் என்று நேசிக்கிறேன்." என்றது*

*பரந்து விரிந்து நிற்கும் அந்த பிரமாண்டமான பிராங்பேட் விமான நிலையம் வெறிச்சோடிக்கிடந்தது போல் இருந்தது.*

*என்னை இவ்வளவுகாலமும் வைத்துக் காத்து கல்விமானாக்கிய என் தாயே நான் மீண்டும் உன்னை மடியை மிதிப்பேனா? தெரியாது. நான் எங்கு வாழ்ந்தாலும் நானும் உன்பிள்ளைதான்" என்று மனம் துடித்துக் கொள்கிறது.*

*விமானத்தில் காலடி எழுத்து வைக்கும் போது கூட அந்த ஜேர்மன் மண்ணையும் விமான நிலையத்தையும் திரும்பத் திரும்பப் பார்க்கிறான். நன்றி கண்களால் உப்பு உவர்ப்புடன் வழிந்து கொண்டிருந்தது. எம் நாட்டுச் சிட்டுக்கள் இரண்டு சோடியாக அலுமீனியப் பறவையின் வயிற்றினுள் புகுந்து பதுங்கிக் கொண்டன.*

*புலம்பெயர் தமிழர்களின் மனங்களில் ஓடி, உதைத்து எழுந்தது விமானம் அண்டவெளியில், நாம் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில், எம் கண்ணுக்கெட்டா தூரத்தில், பறக்கத் தொடங்கி விட்டனர். புலத்துத் தமிழர்களாகிய நாம் நிலத்தில் நின்றபடி அகதிகள், அன்னியர்கள், வந்தேறிகள், நிலமற்றவர்கள், ஏதிலியாக வந்தவர்கள் என்ற அடையாளப் பெயருடன் அவர்களை அண்ணாந்தே பார்க்கிறோம்.*

*எங்கள் கண்ணுக்கெட்டாத் தூரம் வரை, எங்கள் கண்களில் இருந்து வானத்தில் விமானம் மறைந்து கொள்கிறது. தம் ஆத்மாவில் இருந்து ஒருபகுதி பிரிந்துபோன உணர்வுகளுடன், தூக்கிய கைகளை இறக்காது, வைத்த கண் வாங்காது சீலனும் பத்மகலாவும் பறந்த பாதையிலே வழியனுப்ப வந்த நண்பர்களுடன் நாங்களும்...!*

திரு கல்லாறு சதீஷ் - சுவிற்சலாந்து

இலங்கையில் கோட்டைக்கல்லாறு எனும் கிராமத்தில் பிறந்து, சுவிற்சர்லாந்துக் குடிமகனாக வாழும் “முனைவர் நாகேஸ்வரன் அருள்ராசா” அவர்கள் “பனிப்பாறை களும் சுடுகின்றன”, “சொர்க்கங்களும் தண்டிக்கின்றன” எனும் இரண்டு நூல்களைத் தமிழுக்குத் தந்து தமிழ்பேசும் உலகில் “கல்லாறு சதீஷ்” என அறியப்பட்டுள்ளார்.

திரு ஏலையா க. முருகதாசன் - யேர்மனி

இவர் கவிஞர், நாடகக் கலைஞர், எழுத்தாளர், கட்டுரையாளர், ஏலையா சஞ்சிகை ஆசிரியர். எழுதிய தொடர்கள்:நெடுஞ்சுவர், எமக்கென்றொரு விதி, போராட்டம், சதுரங் களும் நேர்க்கொடுகளும், தூரிகை, நிர்மாணம், நினைவுகள், பல சிறுகதைகள், கட்டுரைகள், நாடக எழுத்து, நடிப்பு, தயாரிப்பு. ஊரில் நாடகங்கள்: நல்ல தீர்ப்பு, நீங்காத நினைவு, சிதைந்த வாழ்வு, நீரோட்டம். சிறந்த நடிகர்: (நீங்காத நினைவு 1970)

திருமதி நிவேதா உதயராயன் - பிரித்தானியா

ஈழத்தின் இணுவில் கிராமத்தில் பிறந்து 85 இல் யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து மீண்டும் பிரித்தானியாவுக்கு இடம்பெயர்ந்து வாழ்கிறார். 2012 இல் யாழ் இணையத்தில் எழுத ஆரம்பித்தார். இவரின் நூல்கள்: ”வரலாற்றைத் தொலைத்த தமிழர்”,“நிறம்மாறும் உறவுகள்”, “நினைவுகளின் அலைதல்”, “உணர்வுகள் கொன்றுவிடு.”

திரு.நா.தெய்வேந்திரம் (வண்ணை தெய்வம்) - பிரான்ஸ்

பல்துறையாளர், எழுத்தாளர், நாடக நடிகர், குறும்படக் கலைஞர், வானொலிக் கலைஞர், தொலைக்காட்சிக் கலைஞர். எழுதிய நூல்கள்: விடிவை நோக்கி, கலைப்பாதையில் இவர், கதாநாயகன், கலைத்துறையில் இரு மலர்கள்,கொந்தல் மாங்காய், பொல்லாத மனிதர்கள், வானலையில் எங்கள் கவிதைகள், யாழ்ப்பாணத்து மண் வாசனை, தாயக தரிசனம்.

திரு.திருச்செல்வம் திலீபன் - நோர்வே நக்கீரா

ஈழநாடு, வீரகேசரி, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், கவிதை,எழுத்து, பாடல்,நெறியாள்கை, நடிப்பு, அறிவிப்பாளர், நடிகன், நிகழ்ச்சித்தயாரிப்பாளர். கவிதைத் தொகுப்புகள் கவிமலர்கள், துப்பாக்கியில் துளிர்விடும் தேசம், நள்ளிரவுச் சூரியன், கவிமணிகள்.

திரு கே.எஸ்.சுதாகர் - அவுஸ்திரேலியா

1983 இல் இருந்து சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் போன்ற துறைகளில் எழுதி வருகின்றார். சிறுகதைத்தொகுப்புகள் “எங்கே போகின்றோம்” ,”சென்றிடுவீர் எட்டுத் திக்கும்”. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஞானம் சஞ்சிகை, நோர்வே தமிழ்ச சங்கம், ஈழம் தமிழ்ச்சங்கம்,பூபாள ராகங்கள்,மரத்தடி இணையம், தென்றல், தாய்த் தமிழ்ப்பள்ளி உட்பட இருபதிற்கும் மேற்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார்.

திரு.இ. க.கிருட்ணமூர்த்தி யேர்மனி

யேர்மனியில் 15 சிறு நகைச்சுவை சமூக நாடகங்கள் எழுதி இயக்கியது அத்துடன் சிறந்த மேடைப் பேச்சாளரும் ஆவார். யேர்மனியில் எழுத்தாளர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட "நமது இலக்கு" பத்திரிகையின் முதன்மை ஆசிரியராகவும், பண்ணாகம் இணையத்தளம் பிரதம ஆசிரியராகவும், யேர்மனியில் தமிழ்பாடசாலையில் ஆசிரியராகவும் செயற்படுகிறார்.

திரு. குரு அரவிந்தன் - கனடா

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மகாராஜா நிறுவனத்தின் முன்னாள் நிதிக்கட்டுப்பாட்டாளர். வெளிவந்த நூல்கள்: இதுதான் பாசம் என்பதா?, என் காதலி ஒரு கண்ணகி, நின்னையே நிழல் என்று! நாவல்கள்: ஒலிப்புத்தகங்கள்: (மூன்று ஒலிப் புத்தங்கள் - குறும்தட்டு),மேடையேறிய நாடகம்: அன்னைக்கொருவடிவம், மனசுக்குள் மனசு. இவரது பல கதைகள் பிறமொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கே எஸ் துரை - டென்மார்க்

கடந்த 45 வருடங்களாக எழுதி வருகிறார். 109 மேடை நாடகங்கள் எழுதி இயக்கியது. இவருடைய நூறாவது நாடகத்தில் நடித்தவர்கள் எண்ணிக்கை 100.11 நூல்கள் வெளியாகியுள்ளன. நாவல்கள் 3 சிறுகதைத் தொகுப்பு 1, கவிதை 1, மற்றையவை கட்டுரை நூல்கள். அலைகள் இணையத்தின் ஆசிரியர், ஐ.பி.சி டென்மார்க் செய்தியாளர். பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர், சமுதாயவியல் உதவியாளர்.

திரு. லெட்சுமணன் முருகபூ பதி - அவுஸ்திரேலியா

நீர்கொழும்பில் 1951 ஆம் ஆண்டு பிறந்த முருகபூபதி 1970 களில் இலக்கியப்பிரவேசம் செய்தவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவரின் நூல்கள்: கதைத் தொகுதி "சுமையின் பங்காளிகள்" நூலுக்கு இலங்கையில் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. இதுவரையில் 20 நூல்களை எழுதியிருக்கிறார். இவரது கதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியாகியிருக்கின்றன. 2002 இல் இவரது முதலாவது நாவல் "பறவைகள்" நூலுக்கு தேசிய சாகித்திய விருதைப்பெற்றார்.

திரு. விக்கி நவரட்ணம் - சுவிற்சலாந்து

யாழ் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வாழ்ந்து வருவது சுவிற்சலாந்து. கொழும்பில் தனியார் தறையிலும் பின்னர் யாழ் மாநரகசபையிலும் பதவி வகித்தவர். 2002ம் ஆண்டு சுவிஸ் பேர்ண் மாநிலத்தில் ஏ. பி. சி. வானொலி நடாத்திய "தேன் மதுர மாலை" கலை விழாவில் இவருடைய முதல் வெளியீடான "ஆகாய கங்கை" என்ற கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. 1994ம் ஆண்டு சுவிஸ் தமிழர் கலாச்சார ஒன்றியம் நடாத்திய சிறு கதைப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்றார்.

திரு. பசுபதி சசிகரன் - பிரித்தானியா

புனைபெயர் பசுந்தரா சசி. இவர் தமிழ் இலக்கிய இளங்கலைப் பட்டதாரி. நெடுந்தீவை சேர்ந்த இவர் தற்போது பிரித்தானிய நாட்டில் வசிக்கிறார். “கட்டடக்காடு” என்னும் சமூக நாவலுடன் இலக்கிய துறையில் பிரவேசித்தார். இவரது 15 க்கு மேற்பட்ட சிறுகதைகள் தாயகத்திலும் புலத்திலும் பிரசுரமாகியுள்ளது. கட்டடக்காடு - நாவல் 2014 இன் வடமா காண சிறந்த நாவல் விருது பெற்றது. பாவுதளிர் தூவுவானம் - சிறுகதைக் கொத்து 2015 ஆம் ஆண்டின் சிறுகதைக்கான அகில இலங்கை சாகித்திய அக்கடமி விருதை பெற்றது.

சிறீரஞ்சனி விஜேந்திரா - கனடா

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஶ்ரீரஞ்சனி விஜேந்திரா தற்போது கனடாவில் வாழ்கிறார். வெளியிட்ட நூல்கள்: தமிழ் படிப்போம், பகுதி 1 & பகுதி 2, நான் நிழலானால், தமிழ் ஓர் அறிமுகம், தமிழ் - ஆரம்பநிலை, தமிழ் - மேம்பட்டநிலை, சிறுவர் கதைகள், உதிர்த லில்லை இனி, பின் தொடரும் குரல் சிந்துவின் தைப் பொங்கல் (Sinthu's Thai Pongal) இவரது முதலாவது சிறுகதை “மனக்கோலம்” ஏப்ரல் 1984 ல் ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமானது..

திரு. நயினை விஜயன் - யேர்மனி

தமிழருவி நயினை விஜயன் அவர்கள் 1979 முதல் எமது தாய்மொழிக்காகவும், கலைவளர்ச்சிக்காகவும் இன்றுவரை அயராது உழைத்துக்கொண்டிருப்பவர். 20 ஆண்டுகளாக எசன் நகரில் தமிழ்தூது தனிநாயகம் அடிகள் நுண்கலைகல்லூரியை நடாத்தி வருபவர். 150 க்கும் அதிகமான மாணவ மாணவிகள் கலைகளைப் பயின்று வருகிறார்கள். எமது பாரம்பரியக் கலைகளை 3 தலைமுறைக் குழந்தைகளுக்கு பதியமிட்டுள்ளார்.

திரு. பன்னிருகரம் ஜெயக்கொடி (பொலிகை ஜெயா) - சுவிற்சலாந்து

சுவிற்சலாந்தில் வாழ்ந்துவரும் இவர் ஒரு இலக்கியவாதி, கட்டுரையாளர். அதன் பின்பே சிறுகதை, கவி வடிப்பவர். அவரது கட்டுரைகள் இலங்கை வீரகேசரி, ஜீவநதி, புதிய பூமி, இந்தியா இனிய நந்தவனம்,கனடா உதயன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. சிறு கதைகள் சில சுவிஸ் தமிழ் ஏடு, வீரகேசரி, ஜீவநதி ஆகியவற்றில் பிரசுரமாகியுள்ளன.

திருமதி. தேனம்மை லக்ஸமணன் - இந்தியா

காரைக்குடி தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் வசிப்பது கைதராபாத், இந்தியாவில். இளங் கலை வேதியல் பட்டதாரி,முதுநிலை அரசியல் அறிவியல் பட்டதாரி. கடந்த பத்தாண்டு களாக ஆண்டாள், கோதை, தேனு, தேனுகண்ணன் ஆகிய பெயர்களிலும் எழுதி வருகிறார். அச்சுப் பதிப்பில் பத்து நூல்களும், அமேஸானில் 24 மின்னூல்களும் வெளியாகி உள்ளன. சிறார்களுக்கான இதிகாச புராணக் கதைகள் நூற்றிநாற்பது வரை எழுதியுள்ளார். சிறந்த வலைப்பதிவாளராக 25 விருதுகளுக்கு மேல் பெற்றுள்ளார்.

திரு. இளைய அப்துல்லாஹ் (அனெஸ்) - பிரித்தானியா

இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர். இவரின் தொகுப்புகள் "துப்பாக்கிகளின் காலம்", "பிணம் செய்யும் தேசம்", "பிணம் செய்யும் தேசம்" கவிதை நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது."அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்" கடவுளின் நிலம், "லண்டன் உங்களை வரவேற்ப தில்லை" கட்டுரை, "நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்" ஆகிய தொகுப்புக்கள், கட்டுரைகள் காலச்சுவட்டில் வெளியாகியுள்ளன.

திரு. கனகசபாபதி சக்திதாசன் - டென்மார்க்

இணுவையூர் சக்திதாசன் என்னும் பெயரில் எழுதும் இவர் கடந்த 25 ஆண்டுகளாக டென்மார்க்கில் வாழ்ந்துவருகிறார். யாழ் தாவடியில் பிறந்த இவர் இணுவிலை வசிப்பிடமாக கொண்டவர். கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். நெஞ்ச நெருடல், காற்றை கானமாக்கிய புல்லாங்குழல், ஒர் அகதியின் கைரேகை ஆகிய இவரது 3 கவிதைத்தொகுதிகள் புத்தகமாக வெளிவந்திருக்கின்றன.

திரு. மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - அவுஸ்திரேலியா

தமிழ்நாடு தாராபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இலங்கை ஒலி பரப்புக்கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகவும் நாடகத்தயாரிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். 10க்கு மேற்பட்ட நூல்களையும்,100 ஓரங்க நாடகங்களையும்,10க்கு மேற்பட்ட வில்லுப்பாட்டுக்களையும், 20க்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களையும் எழுதியுள்ளதோடு "முதற்படி" என்னும் குறுந்திரைப்படத்துக்கு கதை வசனம் எழுதி நடித்துள்ளார்.

திரு. சகாதேவன் நித்தியானந்தன்

ஆரம்பக் கல்வி பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம். உயர்கல்வி யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரி. அரசபணி – பதவி நிலை உத்தியோகத்தர். சொந்தப்பெயரிலும், நாரதன், அங்குசன், சனீஸ்வரன் என்ற புனை பெயர்களிலும் எழுதியுள்ளார். இணையத்தில் கவிதைகள்,கதை ,பண்ணாகம்.கொம், அக்கினிக்குஞ்சு.கொம், பதிவு.கொம், சங்கதி– தமிழ் மிறர்– இனிஒரு – சரிதம் – தமிழ்வின் – காலச்சுவடு– தமிழ் சி.என். என் – அருவி போன்றவற்றிலும் வெளியாகியிருக்கின்றன.

திரு. மதுவதனன் மௌனசாமி - டென்மார்க்

இவர் இலங்கையில் பிறந்து தற்போது டென்மார்க்கில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். தமிழ் மொழியில் நிறைந்த பற்றுடன் கவிதைகள், கட்டுரைகள், பத்திகள் என்று வலையுலகத்தில் எழுதிக்கொண்டிருபவர். ஒரு புத்தகமாக என் எழுத்துகள் வருவது முதலில் "விழுதல் என்பது எழுகையே" என்ற நாவலில் தான்.

திரு. மகேந்திரன் குலராஜா - பிரான்ஸ்

இவர் இலங்கை யாழ்மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்ணாகம் கிராமத்தில் பிறந்தார். யாழ்பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி யாலயத்தில் பயின்ற இவர் 11வது வயதிலிருந்து கவிதை எழுத ஆரம்பித்தவர். இவர் 2011ஆம் ஆண்டு தனது முதல் நூலான "வைரம்" கவிதைதொகுப்பை தனது பாடசாலையில் நடந்த முத்தமிழ் விழாவில் மிகச்சிறப்பாக வெளியிட்டார்.

திரு காசி.வி.நாகலிங்கம் - யேர்மனி

யாழ் பொன்னாலையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1979ம் ஆண்டிலிருந்து யேர்மனியில் வாழ்ந்துவருகிறார். 1988 இல் யேர்மனியில் வண்ணத்துப்பூச்சி என்னும் சஞ்சிகையை 2000ம் ஆண்டுவரை வெளியிட்டார். அந்த காலத்தில் 10 நாவல்களை எழுதி வெளியிட்டார். கடலில் ஒரு படகு, சிறகொடிந்த பறவை மீண்டும், சிறகடித்தபோது, விடியலில் மலர்ந்த பூக்கள், 2000,வி ழிகளை நனைத்திடும் கனவுகள், வீட்டுக்குள் வந்த வெள்ளம், சொந்தமும் சோதனையும், ஒட்டாத உறவுகள், மனங்கலங்கிய மன்னன், வாழ நினைத்தால் வாழலாம், புதிய திருப்பம், அவன் காட்டிய வழி.

மாலினி மாலா யேர்மனி

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வசிப்பது யேர்மனியில். இலக்கியத் துறையில் அறிமுகமாகி இருந்த பெயர் அரியாலையூர் மாலினி சுப்பிரமணியம். ஐரோப்பிய மற்றும் இலங்கை இணைந்த சிறுகதைப் போட்டிகளில் இருமுறை தங்கப்பதக்கம் வென்றவர். இரண்டாவது நாவல் "அர்த்தமுள்ள மௌனங்கள்".

திருமதி. சுபாஜினி ஸ்ரீரஞ்சன் - டென்மார்க்

இவர் தமிழையும் கலையையும் அழகுபடுத்துவதில் மிகுந்த ஆர்வமும் அழகுணர்ச்சி யும் கொண்டவர். உயர்தர வகுப்பு படிக்கின்ற பொழுதே கவிதைகள் சிறுகதைகள் நாடகங்களை எழுதியவர். பல கவிதைகள் இலங்கை வானொலி, யாழ்சேவைக்கு அத்தோடு இசையும் கதையும், இப்போது பல இணைய வானொலிகள் மற்றும் முக நூலிலும் எழுதுகின்றவர். மற்றும் டென்மார்க் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகவும் இருக்கிறார். இதுவரை 300 ற்கும் மேற்பட்ட கவிதைகள் பல தளங்களில் எழுதி உள்ளார்.

திருமதி. அருண் விஜயராணி - அவுஸ்திரேலியா

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1989 முதல் மெல் பேர்ணில் வசித்தவர். தற்போது இறைவனடி சேர்ந்து விட்டார். 1972 ஆம் ஆண்டில் "அவன் வரும்வரை" என்ற தனது முதலாவது சிறுகதையை எழுதினார். கொழும்பில் வாழ்ந்த காலப்பகுதியில் இலங்கை வானொலியில் இவரது "விசாலாட்சிப்பாட்டி பேசு கின்றாள்" என்ற நகைச்சுவைத்தொடர் 25 வாரங்கள் ஒலிபரப்பாகியது.. அவுஸ்தி ரேலியா தமிழர் ஒன்றியத்தின் அவுஸ்திரேலிய முரசு இலக்கிய சிற்றிதழின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.



ISBN 955524963-6